எனது போராட்டம்

முதல் பாகம்

சிலம்புச் செல்வர்

டாக்டர். ம.பொ.சிவஞானம்

எனது போராட்டம்

சிலம்புச் செல்வர்

டாக்டர் **ம.பொ.சிவஞானம்**

அன்னை சிவகாமி பதிப்பகம்

18, சி.பி. ராமசாமி தெரு, ஆழ்வார்பேட்டை,
சென்னை - 18. தொலைபேசி: 2499 3644

நூல் விவர அட்டவணை

நூலின் பெயர்	:	**எனது போராட்டம்**
நூலாசிரியர்	:	சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம்
மொழி	:	தமிழ்
வெளியிடுவோர்	:	அன்னை சிவகாமி பதிப்பகம் ஆழ்வார்பேட்டை சென்னை - 18.
விலை	:	ரூ.160.00
நூல் உரிமை	:	பதிப்பகத்தாருக்கு
பதிப்பு ஆண்டு	:	முதற் பதிப்பு 26 மே 1974 இரண்டாம் பதிப்பு டிசம்பர் 2003
நூல் அளவு	:	1 x 8 டெம்மி
பக்கங்கள்	:	432
எழுத்து	:	11 புள்ளிகள்
தாள்	:	16.6 கி.கி. வெள்ளைத்தாள்
பைண்டிங்	:	கெட்டி அட்டை
ஒளி அச்சுக்கோர்வை	:	ஓவியம், சென்னை-20.
அச்சிட்டோர்	:	இலட்சுமி பிரிண்ட்ஸ், சென்னை-21

காணிக்கை

என்னை ஆளாக்கிவிட்ட
அண்ணல் காந்தியடிகளுக்கு
இந்நூலைக்
காணிக்கை யாக்குகிறேன்.

— ம.பொ.சிவஞானம்

ம.பொ.சி.யுடனுள்ள நட்பு இழை முறியாது நீடிக்கிறது! குடியரசுத் தலைவரின் பெருமிதம்!

26.5.74 ஞாயிறன்று சென்னை கலைவாணர் அரங்கில் குடியரசுத் தலைவர் வி.வி.கிரி அவர்கள், தலைவர் ம.பொ.சி. அவர்கள் எழுதிய ''எனது போராட்டம்'' என்ற நூலை வெளியிட்டுப் பேசியதாவது:

மதிப்பிற்குரிய என் நண்பர் ம.பொ.சிவஞானம் அவர்களின் சுயசரிதை நூலை வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ம.பொ.சி. அவர்களை நாற்பதாண்டுக் காலம் நெருக்கமாக இருந்து அறிந்திருந்தவன் என்பதை ஒரு நல்வாய்ப்பாகக் கருதுவதோடு, என் பேரில் அவர் கொண்டுள்ள அன்புக்குக் கடமைப் பட்டவனாகவும் இருக்கிறேன். விடுதலை இயக்கத் தோழர்களாக இருந்த நாங்கள் பல ஆண்டுகள் சிறையில் சேர்ந்தே இருந்தோம்.

ஒரு முறை அவர் சிறையிலிருந்து மருத்துவமனைக்கு மாற்றப்பட அவர் சார்பில் நான் தலையிட்டது என் நினைவில் பசுமையாக இருக்கிறது.

நாடு அந்நிய ஏகாதிபத்திய நுகத்தடியிலிருந்து விடுதலை பெற வேண்டுமென்பதில் - தாழ்வுற்ற நிலையில் உள்ள மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்பதில் - அவர் கொண்ட ஆர்வத்தை நான் பெரிதும் மதித்துப் போற்றி வந்திருக்கிறேன்.

விடுதலைப் போராட்டத்தில் உதித்த எங்கள் நட்பும் நேசமும் என்றென்றும் வாழும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. எத்தனையோ திருப்பங்கள், மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும் எங்களிருவரிடையே நட்பு இழை முறியாது இருந்து வந்துள்ளது.

இன்று இந்நிகழ்ச்சிக்கு வந்திருந்து எனது பழைய தோழரைப் பாராட்ட வாய்ப்பு பெற்றமைக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

நாட்டு மக்களது பொருளாதார வாழ்வில் விடிவு ஏற்பட அரசியல் விடுதலை வேண்டும் என்பதற்காக நாங்கள் போராடினோம். நாடு சுதந்திரமடைந்த நாள் முதலாய் - கடந்த 27 ஆண்டுகளாக - நாட்டுக்குப் பொருளாதாரச் சுதந்திரமேற்படவும் பாடுபட்டு வருகிறோம்.

தமிழ் மொழிக்கு ம.பொ.சி. ஆற்றியுள்ள தொண்டு பற்றி நான் குறிப்பிடவில்லையென்றால், என் கடமையை மறந்தவனாவேன். எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கக் கூடிய அவர், தாம் சிறைப்படுத்தப்பட்டுக் கட்டாய ஓய்விலிருக்க நேர்ந்த நாட்களையெல்லாம் தமிழை, தமிழ் இலக்கியத்தைக் கற்றுணரப் பயன்படுத்தினார். அவரது கடின உழைப்பும், திடச்சித்தமும் அவரை ஒரு சிறந்த எழுத்தாளராக, சொற்பொழிவாளராக ஆக்கிவிட்டன. தமிழ் இலக்கியத்துக்குக் குறிப்பிடத்தக்கதொரு தொண்டு செய்துள்ளார். எனது தமிழறிவு சொற்பமே. எனினும், தமிழ் மொழியானது உலக மொழிகளில் தொன்மையானதாகவும் அதே நேரத்தில் புது உலகக் கருத்துகளை ஏற்று எடுத்தியம்ப வல்லதாயும் ஒருசேர அமையப்பெற்ற தனிச் சிறப்பிற்குரிய செம்மொழி என்பதனை நான் உணர்ந்தேயிருக்கிறேன். வள்ளுவர், கம்பர், இளங்கோ என்ற உன்னதப் பெரும் புலவரெல்லாம் அதன் இலக்கியச் சோலையில் உலவிய மேதை களாவர். தமிழ் மொழி இலக்கியத்தின் ஆழத்துக்கும், விரிவுக்கும் ஈடாக ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று பறைசாற்றிடும் அதன் பாரம்பரியச் சிறப்பையே கூறமுடியும்.

இந்தத் தமிழ் உணர்வைப் பிரதிபலிப்பதாக ம.பொ.சி.யின் சுயசரிதை விளங்குமென்றும், இளைஞர்களின் உள்ளத்தைத் தொடும் என்றும் நம்புகிறேன். தமிழ் நாட்டினுடைய, இந்தியாவினுடைய சேவையில் அவர் மேலும் பல்லாண்டு தொடர வாழ்த்துகிறேன்.

உண்மையான தேசபக்தர்;
உறுதியான காந்தியவாதி!

சிலம்புச் செல்வர் ம.பொ.சி.க்கு
தமிழக ஆளுநர் புகழ் மாலை!

26.5.74 ஞாயிறன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் எழுதிய ''எனது போராட்டம்'' என்ற நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை வகித்து ஆளுநர் கே.கே.ஷா அவர்கள் பேசியது:

நமது மரியாதைக்குரிய ராஷ்டிரபதியினுடைய முன்னிலையில் நடக்கின்ற இந்த அருமையான நிகழ்ச்சியில் பங்கு கொள்வதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

இந்த நிகழ்ச்சி ராஷ்டிரபதி அவர்கள் தம்முடைய நண்பர்களை எவ்வளவு மதிக்கிறார் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. எவ்வளவு கருத்து வேற்றுமைகள் இருந்தாலும் அவர்களுக்கிடையே ஆரம்பத்தில் ஏற்பட்ட நட்பு, அவை எல்லாவற்றையும் தாண்டி, மலர்ந்து வளர்ந்து வந்திருக்கிறதென்பதையே இது காட்டுகிறது. திரு. ம.பொ.சி. அவர்களுக்கும், நமது குடியரசுத் தலைவர் அவர் களுக்கும் இடையே இருக்கின்ற கனிந்த நட்பானது 1933-லிருந்து அவர்கள் இருவரும் பாட்டாளி வர்க்கத்திற்காக உழைத்த நாட்களி லிருந்து ஆரம்பித்ததாகும்.

ம.பொ.சி. அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை வெளியிடு வதன் மூலம் நம்முடைய ராஷ்டிரபதி அவர்கள் பல கடுமையான சோதனைகளைக் கடந்து நீடித்து வருகிற பழைய நட்பைப் பெருமைப் படுத்துகின்றார்.

ம.பொ.சி. அவர்கள் தம்முடைய சொந்த வாழ்க்கை வரலாற்றை எழுதியதன் மூலம் வருங்காலத் தலைமுறையினருக்குப் பெரியதொரு சேவையைச் செய்திருக்கிறார். நம்முடைய தலைவர்களில் பலர்

முக்கியமாக சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட பெரியவர்கள் தங்களுடைய வாழ்க்கை வரலாற்றை வருங்கால சந்ததியினருக்குப் பயன்படும் வகையில் எழுதி வைக்காமலேயே மறைந்துவிட்டனர்.

ம.பொ.சி. அவர்கள் பணக்கார குடும்பத்தில் பிறந்தவர் அல்ல. தன் கையே ஊன்றி, தானே உழைத்து, தானே படித்து முன்னுக்கு வந்தவர். அதிர்ஷ்டம் காரணமாக முன்னுக்கு வந்தவரும் அல்ல. அவர் 1906-இல் பிறந்தார். அந்த ஆண்டில்தான் தென்னாப்பிரிக்கா வில் காந்திஜி சத்தியாக்கிரகம் ஆரம்பித்தார். ம.பொ.சி. அவர்கள் நம்மில் பலரைப் போல் காந்தியத்திலே ஆழமான பற்றுடையவர். தம்முடைய இளமைக் காலந்தொட்டே அவர் காந்தியத் தத்துவத்திலே மனதைப் பறிகொடுத்தவர். காந்திஜி இறந்தபோது நெஞ்சம் நெகிழ்ந்து ம.பொ.சி. அவர்கள் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

''எழுத்தறிவற்ற ஏழைத் தொழிலாளியின் மகனாகப் பிறந்து, எழுத்தெண்ணிக் கோக்கும் எளிய அச்சுத் தொழிலாளியாக வளர்ந்த என்னை அரசியல்வாதியாக மாற்றிய பெருமை காந்தியடிகளுக்கே உரிமை.''

(பாகம்: 2, பக்கம்: 159)

''அடிகளைத் தலைவராக ஏற்று அவரது காந்தியத் தத்துவத் தில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்து இந்திய விடுதலைப் போரில் நான் ஈடுபட்டில்லையானால், நான் யார்? எனக்கென ஒரு சரித்திரமேது? மக்கள் மத்தியில் எனக்கேது இடம்?''

இவர் இன்றும் உண்மையான தேச பக்தராகவும் உறுதியான காந்தியவாதியாகவும் இருந்து வருகிறார். இவருடைய தேசப்பற்றும் நாட்டின்பால் இவர் கொண்டுள்ள பக்தியும் தனிப்பட்ட அரசியல்வாதி களின் எல்லைகளை மீறி வளர்ந்து வந்திருக்கின்றன. ம.பொ.சி. அவர்கள் கடுமையான வறுமையிலேயே வளர்ந்தார். 3வது வகுப்புக் குமேல் அவர் பள்ளி செல்ல முடியவில்லை. வாழ்வதற்கே கஷ்டப் படும்படியான நிலையிலே இருந்தார். இவருடைய இளம் வயதி லேயே இவருடைய தகப்பனாரால் 10 ரூபாய் முன் பணத்திற்காக ஒரு முதலாளியிடம் ஒப்படைக்கப்பட்டார். இவருடைய தகப்பனார் பெரிய குடிகாரர் என்பதாலேயே இவருடைய குடும்பம் சீரழிந்தது. இதுபற்றி ம.பொ.சி. கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்:

''நான் அன்றும் இன்றும் பரிபூரண மதுவிலக்கில் மிகுந்த ஆர்வங்காட்டி வருவதற்கு என் தந்தையாரும் முக்கிய காரண மாவார். அவர் தான் குடிபோதையில் இருக்கும் போதெல்லாம் என்

அன்னையாரை அடித்துத் துன்புறுத்தியதை நான் கண்டிருக்கிறேன். அப்போதெல்லாம் நான் வாய்விட்டு அலறி அழுதிருக்கிறேன்.''

(பக்கம் 69)

இதன் காரணமாக மதுவிலக்கிலே பரிபூரண நம்பிக்கை கொண்டவராகவும், கள்ளுக் கடைகள் முன் மறியல் செய்கிறவராகவும் இவர் உருப்பெற்றார். இதன் காரணமாக இவருடைய குலத்தினுடைய விரோதத்தையும் சம்பாதித்துக் கொண்டார். இவருடைய கண்ணீரைத் துடைக்க யாரும் முன் வராதபோது, மற்றவர் கண்ணீரைத் துடைக்க தான் தியாகம் செய்யத் தொடங்கினார்.

இவ்வாறு வறுமைச் சூழலில் அவதியுற்ற நிலையில் தன்னுடைய 17வது வயதில் செயல்வீரராக நாட்டு விடுதலைப் போராட்ட வீரர்கள் அனுபவித்த, அனுபவிக்க வேண்டியிருந்த சோதனைகளைப் பற்றிய பல தகவல்களை இவருடைய வரலாறு நமக்குத் தருகிறது. இது போன்ற தியாகங்கள் மூலமாகத்தான் நாடு சுதந்திரம் பெற்றிருக்கிறது. இதனால்தான் ஜனநாயகத்திலுள்ள குறைபாடுகள் சில சமயம் மேலோங்கியெழுந்தாலும் நாம் எப்படியோ சமாளித்து வருகிறோம். நம்முடைய தலைமை எவ்வளவு பலவீனமானதாக இருந்தாலும் கடந்த காலத்தில் செய்த தியாகங்கள் நம்மைக் காப்பாற்றி வருகின்றன. இவை பெரியதோர் பூந்தோட்டமாக நிச்சயமாக மலரும்.

நம்மிலே பலர் அந்த நேரத்திலே சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களுக்கு, இவருடைய வாழ்க்கை வரலாறு காட்டுகிற செய்திகள் மூலமாக அன்றைய தினம் இருந்த ஏழைத் தியாகிகளுக்கு நாம் எவ்வளவு நன்றிக் கடன் பட்டிருக்கிறோம் என்பதை அறிய முடிகிறது. ம.பொ.சி. அவர்கள் முக்கியமான ஒரு விடுதலைப் போராட்ட வீரராகக் கருதப்பட்டு, அதன் காரணமாகக் கைது செய்யப் பட்டு, அமராவதிச் சிறையிலும், வேலூர் சிறையிலும் விசாரணை யின்றி வைக்கப்பட்டார். அமராவதியில் ம.பொ.சி. அவர்கள் இருந்த போது இவருடைய உடல்நிலை மோசமாகியது. அப்போது இவர் தான் மிகவும் நேசித்த தன்னுடைய பத்து மாத மகனுக்கு எழுதிய உருக்கமான கவிதை, இவருடைய குடும்பத்தினருக்கு எழுதிய கடிதத் தில் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால், அந்தக் கடிதம் தணிக்கையாள ரால் அழிக்கப்பட்டது. இதன் மூலமாக அன்றிருந்த அன்னிய ஆட்சி எவ்வளவு இரக்கமற்றது என்பதையும், பெரிய விடுதலை வீரர்கள் எத்தனை சோதனைகளைத் தாங்கினார்கள் என்பதையும் நாம் அறிய முடிகிறது.

நூலாசிரியர் என்ற முறையிலும், மேடைப் பேச்சாளர் என்ற வகையிலும் ம.பொ.சி. அவர்களுடைய பெருமையும், தலைமையும் இவருடைய ஆழ்ந்த புலமையும், தமிழ் இலக்கிய நுண்ணறிவும் தமிழ் கூறும் நல்லுலகிற்கு நன்றாகத் தெரியும். முறையான பள்ளிப் படிப்பு பெறாத ஒரு ஏழை மகன் இவ்வளவு உயர்ந்த அறிவாளியாகவும், தமிழில் அறிவு மிக்க புலவராகவும், பெரிய அளவில் மக்களை ஈர்க்கும் பேச்சாளராகவும் எப்படி ஆக முடிந்தது? முன்னேற்றத்திற்கு ஏழ்மை தடையாக இருக்க முடியாது என்பதை இது இளைஞர் சமுதாயத்தினருக்கு எடுத்துக்காட்டவில்லையா? தம்முடைய இளமைப் பருவத்தில் வ.உ.சி., சத்தியமூர்த்தி போன்ற புகழ்வாய்ந்த தலைவர்களிடத்திலே ம.பொ.சி. தன்னுடைய மனதைப் பறிகொடுத் தார். ம.பொ.சி.யினுடைய வெற்றியின் ரகசியமே இவர் சிறையைப் பல்கலைக் கழகமாக ஆக்கிக் கொண்டார் என்பதுதான். இவர் சிலப்பதிகாரத்தில் பெரும் புலமை மிக்கவர் என்பது எனக்குத் தெரியும். அதிலே ஆழ்ந்த புலமையுடையவர் என்பதும், அதற்காக மாநாடுகள் கூட்டி அதனைப் பரவச் செய்தவர் என்பதும் நாம் அறிந்தவையே. இவருடைய இரண்டாவது மனைவிக்குப் பிறந்த இரண்டு குழந்தைகளுக்கும் (இவருடைய முதல் மனைவி திருமண மான சில காலத்துக்குள்ளே மரணமடைந்தார்) 'கண்ணகி' என்றும் 'மாதவி' என்றும் பெயர் சூட்டினார். இந்தப் பெயர்களுக்கு எழுந்த எதிர்ப்புபற்றி இவர் கவலைப்படவில்லை.

வடலூர் இராமலிங்க சுவாமிகள்பற்றி இவர் எழுதிய மிகச் சிறந்த நூல் தேசிய ஒருமைப்பாட்டை வற்புறுத்துகின்ற இலக்கியமாகத் திகழ் கிறது. இதற்காக அவர் சாகித்திய அகடமியின் விருதைப் பெற்றது சாலப்பொருத்தமுடையதாகும்.

ம.பொ.சி. அவர்கள் தமிழ்நாட்டினுடைய பொது வாழ்வில் பெரியதொரு பங்கைப் பெற்றிருக்கிறார். நமது தலைவர்கள் சிலரிடம் இவர் கருத்து வேற்றுமை கொண்டிருந்தபோதிலும், அவர்களிடத்தில் தனக்கிருக்கும் மரியாதையை என்றைய தினமும் இவர் குறைத்துக் கொண்டதில்லை. இவரோடு ஒத்துப் பேசாதவர் கூட இவருடைய சிந்தனைத் திறனையும், சீலத்தையும் புறக்கணித்ததில்லை. தமிழின்பால் இவர் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றும் மொழிவாரி மாநிலங்களுக்கான அதிகாரங்களைப் பரவலாக்க இவர் பாடுபடு வதும் தேச ஒற்றுமைக்காகவே என்பதில் சந்தேகமில்லை.

அரசியல் கருத்து வேற்றுமைகளுக்கிடையே சென்னை மாநக ராட்சியின் ஆல்டர்மேனாகவும், தமிழ்நாடு சட்ட மேலவை உறுப்பின

ராகவும் அன்றே இவர் தேர்ந்தெடுக்கப்பட்டது அன்றையத் தலைவர் கள் ம.பொ.சி.யிடம் மரியாதையும் பற்றும் கொண்டிருந்தனர் என்ப தனை எடுத்துக்காட்டுகிறதெனலாம்.

இவர் எந்தப் பதவியையும் நாடியதில்லை; பதவிகள்தாம் இவரைத் தேடிவந்தன. 1967-இல் நாட்டில் பொதுத் தேர்தல் நடந்த சமயத்தில் இவர் சட்டப்பேரவை உறுப்பினராக எல்லாக் கட்சி களாலும் ஒப்புக் கொள்ளப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இன்றையத் தினம் தமிழகச் சட்ட மேலவைத் துணைத் தலைவர் என்ற பெரியதொரு நிலையை இவர் அடைந்திருக்கிறார். இவர் சென்னை மாநகராட்சியில் இருந்தபோது, செய்த சேவைகள் எல்லாத் தரப்பினராலும் புகழப்படுகின்றன.

சென்னை மாநகராட்சியின் கொடியை மாற்றியது இவர்தான். ஒருகாலத்தில் தமிழுக்காகவும், தமிழ் நாட்டிற்காகவும் இவர் வாதாடிய போது இவரைத் 'தமிழ் வெறியர்' என்று சிலர் நினைத்த னர். ஆனால், மாநகராட்சிப் பள்ளிக் கூடங்களில் தமிழ் தவிர மற்ற மொழிகள் பயில்வதற்கும் இவர் ஏற்பாடுகளைச் செய்தபோது, தேசிய ஒருமைப்பாட்டில் இவருக்குள்ள நம்பிக்கையையும், இவருடைய நடுநிலைத் தன்மையையும் எல்லோரும் புரிந்து கொண்டார்கள். இவர் காந்திஜியினுடைய ஆதாரக் கல்வித் திட்டத்திற்கு முழு ஆதரவு தந்தார். தமிழ்நாட்டில் நூலக இயக்கத்தின் வளர்ச்சிக்கு இவர்தான் மிகப் பெரிய அளவிலே நன்மைகளைச் செய்திருக்கிறார்.

நம்முடைய இளைய ஜனநாயகம் அதனுடைய பலவீனங்களை யெல்லாம் மீறவும், நம்முடைய பொது வாழ்வில் உண்மையான வளர்ச்சி ஏற்படவும் ம.பொ.சி.யின் நூல் உதவி புரியும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. நம்முடைய ராஷ்டிரபதி, ம.பொ.சி. போன்ற தலைவர்கள் சில முக்கியமான அடிப்படைக் கொள்கைகளுக் காக வாழ்ந்து வருகிறார்கள். இவைதாம் நம்முடைய நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாத்து வருகின்றன. இவைதாம் வருங்காலச் சந்ததியினராலும் போற்றி வளர்க்கப்பட வேண்டியவையாகும்.

நம்முடைய மதிப்புமிக்க குடியரசுத் தலைவருடைய திருக்கரங் களாலே வெளியிடப்பட்ட ம.பொ.சி.யினுடைய அழகான வாழ்க்கை வரலாறு பெருமை மிக்கது. வருங்காலம் இவருடைய உதாரணத்தைப் பின்பற்றி உய்யும் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

வணக்கம்.

மாண்புமிகு க.ராசாராம் சிறப்புரை

26.5.74 ஞாயிறன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் எழுதிய ''எனது போராட்டம்'' என்ற நூல் வெளியீட்டு விழாவில் மாண்புமிகு க.ராசாராம் அவர்கள் தனது சிறப்புரையில் பேசியது:

இன்றைக்குச் சென்னையிலே நாம் உரிமையோடு கூடியிருப்ப தற்கே காரணமானவர் சிலம்புச் செல்வர் ஐயா ம.பொ.சி. அவர்கள் தான். அவர் பிடிவாதமான குணமுடையவர். பிடிப்பதற்கே உடம்பில் லாதபடி மெலிந்தவர். ஆகவே, அந்த உடலில் பிடிவாத குணம் இருப்பதற்கு நியாயமே இல்லை. ஆனால், அப்படிப்பட்டவர் சென்னை தமிழனுக்குத்தான் சேரவேண்டும் என்ற விவகாரத்தில் பிடிவாதம் காட்டினார். அவர் கொஞ்சம் ஒரு ரேகை மாறியிருந்தால், இந்தக் கலைவாணர் அரங்கமும் இருக்காது. தமிழ்நாட்டினுடைய தலைநகரமாகச் சென்னையும் இருந்திருக்காது. இப்படிப்பட்ட ஒரு விழாவும் சென்னையில் நடந்திருக்காது.

சிலம்புச் செல்வருடைய இயக்கமான தமிழரசுக் கழகம் இல்லாமல் இருந்திருக்குமானால், திருத்தணி கோயில்கூட நம்மிடம் இருந்திருக்காது. அதற்காக வடக்கெல்லைப் போராட்டம் நடத்தித் திருத்தணியை மீட்டுத் தந்த செந்தமிழ்த் தலைவருக்குத்தான் இன்றைக் குப் பொன்னாடை போர்த்தி கவுரவித்துக் கொண்டிருக்கிறோம்.

குமரி மாவட்டம் இன்றைக்கு நம்மிடத்திலே இருக்கிறது. அது தாய்த் தமிழகத்திலே சேர வேண்டுமென்று அரும்பாடுபட்டார். அதற்காகப் போராட்டம் நடத்தி, அதன் மூலமாக கன்னியாகுமரி மாவட்டத்தைத் தாய்த் தமிழகத்தோடு சேர்த்த பெருமை தமிழ் நாட்டிலே ஒரு தமிழனுக்கு உண்டென்று சொன்னால், அது ஐயா ம.பொ.சி. அவர்களுக்கு நிச்சயம் உண்டு என்று தெரிவித் துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எல்லாத் துறையிலும் தமிழருக்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்தவர் என்று சொன்னால், அது மிகையாகாது. குடும்பத்திற் காக எப்போதாவது - எதையாவது செய்து நாலு காசு சேர்த்திருக்கி றாரா என்று இந்த நூலிலே துருவித் துருவிப் பார்த்தேன். அவரைத் தியாகத்தினுடைய சிகரமாக, தியாகத்தின் நேர் வாரிசாக நேர்மையாள ராக இந்த வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது என்பதனை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடும்பத்தை மறந்து நாட்டிற்கென்று அவர் வாழ்ந்த வரலாறுதான் இந்த 'எனது போராட்டம்' என்பதாகும். உள்ளபடியே அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் படித்துப் பார்க்கின்ற நேரத்தில் அவர் கடந்து வந்த காட்டாறுகள் எத்தனை என்பது நமக்குத் தெரிகிறது. ஒரு சாதாரண ஏழைக் குடிமகன் தனது உழைப்பாலேயே தனது அறிவாலேயே தனது ஆற்றலாலேயே தான் தொடர்ந்து கற்ற கல்வி யாலேயே நாட்டிலே நல்ல சிந்தனைகளை உருவாக்க முடியும் என்பதற்கு ஒரு தலைவர் உதாரணமாக இருக்கிறாரென்று சொன் னால், அவர் ஐயா சிலம்புச் செல்வர் தான் என்பதை எடுத்துக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்னுரை

எனது வாழ்க்கை வரலாற்றை நானே எழுதி நூலாக்க வேண்டுமென்று, என்பால் பேரன்பு கொண்டுள்ள நண்பர்களும், தமிழரசுக் கழகத் தோழர்களும் நீண்ட நெடுங்காலமாக என்னை வற்புறுத்தி வந்தனர். என் சரித்திரத்தை எழுதி, வருங்காலத் தலைமுறையினரின் பார்வையில் வைக்கவேண்டுமென்ற விருப்பம் என் மனத்துள்ளும் இருந்து வந்தது.

ஒரு தொழிலாளியின் மகனாகப் பிறந்து, தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடங்கி அரசியலில் முன்னேற்றமடைந்த ஆபிரகாம் லிங்கன், பெஞ்சமின் பிராங்க்ளின் ஆகியோருடைய வாழ்க்கை வரலாறுகளை என் இளமைப் பருவத்தில் நான் படித்த போதுதான் அரசியல் துறையில் ஈடுபட்டு முன்னேற வேண்டுமென்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது. அந்த ஆர்வமே இன்றுள்ள நிலைக்கு என்னைக் கொண்டு வந்தது.

வறுமை நிறைந்த குடும்பத்திலே பிறந்த ஒருவன், வாலிபப் பருவத்திலே கடுமையாக உழைக்கும் தொழிலாளியாக வாழ்ந்து, அரசியல் துறையிலும் ஈடுபட்டு முன்னேறுவதென்றால், அது ஒன்றும் முடியாத காரியமல்லவென்பதனை என் மூலமாகவும் தொழிலாளி வர்க்கம் அறிந்து கொள்ள வேண்டுமென்பது என் பேரவா.

என் வரலாற்றை எழுத வேண்டுமென்று நான் கருதியதற்கு மற்றொரு முக்கிய காரணமும் உண்டு. அது, என் வாழ்க்கையானது ஒரு தனிநபருடைய சரித்திரமாக மட்டுமல்லாமல், உருவாகிக் கொண்டுவரும் புதிய தமிழகத்தின் வரலாறாகவும் இருந்து வருவதாகும். ஆம்; என்னை முதல்வனாகக் கொண்டுதான் புதிய தமிழகம் அமைக்கும் பணி 1946-இல் பாரதப் பெருநாடு சுதந்திரத்தை அணுகிக் கொண்டிருந்த நேரத்தில் — தொடங்கியதென்று நான் உறுதியாகக் கூற முடியும்.

பாரதம் முழுவதிலும் நடைபெற்ற விடுதலைப் போரில் தொடர்ந்து 20 ஆண்டுக் காலம் ஈடுபட்டு, 6 முறை சிறை புகுந்து அல்லல் பல அடைந்தேனென்றாலும், அதெல்லாம் என்னுடைய

சரிதத்தின் முன்னுரையாகத்தான் இருக்க முடியும். இதனாற்றான் எனது வரலாற்றைப் புதிய தமிழகத்தின் வரலாறாகக் கருதி அதனை எழுதும் முயற்சியை நான் மேற்கொண்டேன். நான் எழுதாவிடில், புதிய தமிழகம் உருவான சுவைமிக்க வரலாறு, உலகினரின் பார்வையிலிருந்தே மறைந்து போய்விடவும் கூடும்!

இப்படி, என் சுயசரிதத்தை எழுதுவதற்கான காரணங்கள் பல இருப்பினும், அதில் ஈடுபடுவதற்கு நான் பெரிதும் தயங்கினேன். அதை நினைக்கும் போதெல்லாம் அச்சங்கூட ஏற்பட்டதுண்டு. ஏனெனில், என்னுடைய வாழ்க்கையிலே இன்பகரமான நிகழ்ச்சிகள் மிக மிகக் குறைவானவை. துன்பகரமான நிகழ்ச்சிகளே மிகுதியானவை. அவற்றைத் திரும்பவும் நினைவுக்குக் கொண்டு வந்து, அந்தத் துன்ப நிகழ்ச்சிகளோடு உணர்வுபூர்வமாகக் கலந்து, அவற்றை அப்படியே வாசகர்களுக்குக் காட்சிப்படுத்த நான் முயற்சித்தால், இன்றைய வாழ்க்கையிலும் மனஅமைதி ஏற்படாமல் போய் விடுமோ என்ற ஐயமும் எனக்கு இருந்து வந்தது. அதனாற்றான், எனது வரலாற்றை எழுதி வெளியிடுவதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தேன்.

எனது பொது வாழ்க்கை — என் அதிர்ஷ்டவசமாக — முடிந்துபோன கதையாகி விடவில்லை. முடியாத தொடர்கதையாகவே நீண்டு வருகிறது. ஆகவே, என் கதையைத் தொடங்கினால் அதை எங்கே முடிப்பது என்ற பிரச்சினை வேறு! இருந்தாலும், முடிவைக் காலத்தின் கையில் விட்டுவிட்டு, என் சுயசரிதத்தை எழுதி வெளியிடுவதற்கான துணிவைப் பெற்றேன்.

இந்த நூலுக்கு என்ன தலைப்பு கொடுப்பது என்பது பற்றி நீண்ட காலமாகச் சிந்தித்து வந்தேன். என்னைச் சூழ்ந்துள்ள தமிழரசுக் கழக முன்னணித் தோழர்களிடமும் ஆலோசனை நடத்தினேன். பலர் பல பெயர்களைச் சொன்னார்கள். என் மனத்திலும் எத்தனையோ பெயர்கள் தோன்றின.

''சத்திய வாழ்க்கை'' என்ற தலைப்புத் தரலாம் என்றுகூட எண்ணினேன். ஆம்; என்னைப் பொறுத்தவரையில் சத்திய வாழ்க்கை நடத்தவே நான் முயன்று வந்திருக்கிறேன். முடிந்த வரையில் அப்படியே வாழ்ந்தும் வந்திருக்கிறேன். ஆயினும், ''சத்திய சோதனை'' என்னும் பெயரிலே காந்தியடிகள் தம்முடைய வாழ்க்கை வரலாற்றை வழங்கியிருக்கிறார். ஆதலால், கிட்டத்தட்ட அந்தப் பெயரையே பயன்படுத்த எனக்குத் துணிவு ஏற்படவில்லை.

என் கடந்தகால வாழ்க்கை, போராட்ட மயமாகவே இருந்திருப்பதால் எனது விருப்பத்துக்கு மாறாக, போராட்டச் சூழ்நிலை

யிலேயே இந்தச் சமுதாயம் என்னை வைத்துவிட்டதால், ''எனது போராட்டம்'' என்னும் தலைப்பையே நான் தேர்ந்தெடுக்கலானேன்.

அரை நூற்றாண்டுக் காலம் நான் பொது வாழ்க்கை நடத்தி வந்திருக்கிறேன். இவ்வளவு நீண்ட காலப் பொது வாழ்க்கையிலே பல்வேறு சந்தர்ப்பங்களில், பல வகையிலே எனக்கு உதவி புரிந்து, என்னோடு ஒத்துழைத்து, என்னுடைய சாதனைகளிலே பங்கு கொண்டு வந்துள்ள நண்பர்கள் பலராவர். அவர்களுக்கெல்லாம் என்னுடைய சுயசரிதத்திலே இடந்தந்து, அவர்களோடு எனக்குள்ள தொடர்பை நிரந்தரப்படுத்த விரும்பியும் இந்நூலை எழுதி வெளியிடுகின்றேன்.

நான் அரை நூற்றாண்டுக் காலம் — சமயம் — சமூகம் — இலக்கியம் ஆகிய பல்வேறு துறைகளில் ஈடுபட்டு வந்துள்ளேன். இருப்பினும் இன்னமும் ஓர் எளிய தொண்டனாகவே நான் வாழ்ந்து வருகின்றேன். ஆம்; லட்சியப் பாதையிலே அங்குலம் அங்குலமாகத் தான் — அதற்கும் போராடிப் போராடித்தான் நான் முன்னேற வேண்டியிருக்கிறது. ஆயினும், என் மனத்துள் வளர்ந்து வரும் நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும், தெய்வப் பற்றும் மனநிறைவோடு பொது வாழ்க்கை நடத்தும் பேற்றினை எனக்குத் தந்து வருகின்றன.

இந்த நூலை இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு வி.வி.கிரி அவர்கள்தான் வெளியிட வேண்டுமென்று நான் விரும்பினேன். வடபுலத்திலுள்ள அமராவதிச் சிறையிலே (ஆகஸ்டுக் கிளர்ச்சியின் போது) ஓராண்டுக் காலம் அடைபட்டு அங்கு நான் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த நேரத்திலே, என்னைச் சிறைக்கு வெளியிலுள்ள மருத்துவமனையில் சேர்த்து, என் உயிரைக் காப்பதற்கு, சிறையில் என்னோடிருந்த தலைவர்களில் பலர் பெருமுயற்சி செய்தனர். அவர்களிலே முக்கியமானவர் டாக்டர் வி.வி. கிரி. அவர் என் அழைப்பை ஏற்று, இந்த நூலை வெளியிட இசைந்தது, யான் செய்த பேறு என்றே கருதுகின்றேன்.

கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் யான் எழுதிய நூல்களில் பெரும்பாலானவற்றை இன்ப நிலையத்தாரே வெளியிட்டுள்ளனர். இந்த நூலையும் சிறப்பாக வெளியிட முன்வந்தனர். அதற்காக இன்ப நிலைய உரிமையாளர் திரு.சோம. சுவாமிநாதன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ம.பொ.சிவஞானம்

இரண்டாம் பதிப்பின் பதிப்புரை

சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம் அவர்களின் திருமகனார் ம.பொ.சி. திருநாவுக்கரசு அவர்களின் மகன்களான தி.திருஞானம் மற்றும் தி.ஞானசிவம் ஆகிய நாங்கள் எங்கள் தாத்தா அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூலான **''எனது போராட்டம்''** என்னும் இந்நூலை மறுபதிப்பாக வெளியிடுவதை நாங்கள் பெற்ற பெரும் பேறாகக் கருதுகிறோம். ஏனெனில் எங்கள் தந்தை திருநாவுக்கரசு அவர்கள் இருந்திருந்தால் இந்தப் பணியை அவர் செய்திருக்கக் கூடும். ஆனால், இளமையிலேயே இறைவனடி சேர்ந்து விட்டதால் அவர் விட்ட பணியை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

இந்த நூலை வெளியிட நாங்கள் முயன்றபோது பதிப்பகம் ஒன்றை நாங்கள் தொடங்க வேண்டியதாயிற்று. அந்தப் பதிப்பகத்துக்கு **''அன்னை சிவகாமி பதிப்பகம்''** என்று பெயரிட்டோம். எங்கள் தாத்தாவின் அன்னைதான் சிவகாமி. என் தாத்தாவுக்குச் சிறு வயதில் பண்பாட்டோடு சேர்ந்த பயன்மிகு கல்வியறிவை ஊட்டி, எங்கள் தாத்தா உன்னத நிலைக்கு உயர உறுதுணையாக விளங்கியவர். வறுமை வாட்டிய போதெல்லாம் மனம் தளராது தமிழை ஊட்டி வளர்த்ததனால்தான் எங்கள் தாத்தா இலக்கிய அறிவு பெற்று ஆன்றோர் - சான்றோர் பெருமக்களின் வரிசையில் முதலிடம் பெற்றுத் திகழ்ந்தார். இத்தகைய பெருநிலைக்கு முதற் காரணமாக விளங்கிய எங்கள் தாத்தாவின் தாயார் சிவகாமி அவர்களின் திருப்பெயரை வைத்தது மிகவும் பொருத்தம் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை.

இந்நூலை இன்ப நிலையம் பதிப்பகத்தார் 1974-இல் முதலில் வெளியிட்டனர். எங்கள் தாத்தா ம.பொ.சி. அவர்களின் சிறைத் தோழரும் அப்போதைய குடியரசுத் தலைவராக இருந்த

திரு.வி.வி.கிரி அவர்களால் வெளியிடப்பட்டது. ''எனது போராட்டம்' ஒரு தனிமனிதரின் வரலாறாக மட்டுமல்லாமல், தமிழகத்தின் - தமிழினத்தின் - தமிழ் மொழியின் அரை நூற்றாண்டு கால வரலாறாகவும் இருப்பதனை வாசகர்கள் உணர்ந்திருப்பார்கள்'' என்று எங்கள் அருமை தாத்தா நூலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவ்வகையில் அரிய வரலாற்று ஆவணமாகவும் இந்நூல் விளங்குகின்றது. இளைய தலைமுறைக்குப் புதிய தமிழகம் அமைந்த வரலாற்றுச் சம்பவங்கள் இந்நூலில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. சொந்த வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் போராடிப் போராடி வெற்றி பெற்று முன்னுக்கு வந்தவர் எங்கள் தாத்தா. கார்ல் மார்க்சிடம், ''உங்களுக்கு மிகவும் பிடித்தது எது'' என்று கேட்கப்பட்டபொழுது ''போராட்டம்'' என்றார். இவ்வுண்மையின் விளக்கத்தை ''எனது போராட்டம்'' நூலில் தெளிவாக அறியலாம். இந்நூலைப் படிக்கும் இளைய தலைமுறையினர் ஆக்கமும் ஊக்கமும் பெறுவர் என்பதில் எங்களுக்கு எள்ளளவும் ஐயமில்லை.

இந்நூலை ஒளிஅச்சுக் கோர்வை செய்த ஓவியம் நிறுவனத்தாருக்கும் அச்சிட்ட இலட்சுமி பிரிண்ட்ஸ் நிறுவனத்தாருக்கும் இப் பதிப்பகத்தைத் தொடங்கவும் இந்நூல் வெளியீடு தொடர்பாக ஆலோசனைகள் வழங்கிய திரு. 'பூங்கொடி' வே.சுப்பையா அவர்களுக்கும், இந்நூலின் மறுபதிப்பைப் பிழையில்லாமல் வெளியிட உதவிய எங்கள் பெரியப்பா திரு. பா.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும், எங்கள் சகோதரி தி.பரமேஸ்வரி அவர்களுக்கும், அனைத்துக்கும் மேலாக மேற்பார்வை பார்த்துக் கொடுத்த எங்கள் தாத்தா அவர்களின் அருமை நண்பராக விளங்கிய பெ.சு.மணி ஐயா அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அனைத்து வகையிலும் இந்நூலை அழகுற வெளியிட உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டுள்ளோம்.

அன்னை சிவகாமி பதிப்பகம் **ம.பொ.சி.தி. திருஞானம்**
சென்னை - 18 **ம.பொ.சி.தி. ஞானசிவம்**

பொருளடக்கம்

முன்னுரை ... 4
பதிப்புரை ... 7

முதற் பாகம்

எனது குடும்பம் ... 9
பள்ளிப் படிப்பு முடிந்த பரிதாபம் ... 22
காங்கிரசில் சேர்ந்தேன்! ... 36
திருமணமாகியும் சன்னியாசி! ... 43
கள்ளுக்கடை மறியல் ... 56
சட்டமறுப்புப் போர் ... 73
அரிசனப் பணி ... 93
தொழிற்சங்கத் தொடர்பு ... 100
செவிச்செல்வம் பெற்றேன் ... 115
குலத்தொண்டு! ... 126
மறுமணம் ... 146
காங்கிரஸ் பாசறையிலே... ... 153
திரு. காமராசர் தலைவரானார்! ... 198
துன்பமயமான காலம் ... 205
ராஜாஜியுடன் கருத்துப் போர் ... 238
ஆகஸ்டுப் புரட்சி ... 246
அமராவதிச் சிறைச்சாலை ... 264
தமிழ்ப் புலவனாக முயற்சி ... 295
வேலூர் சிறை வாழ்க்கை ... 321
சிறைக்கு வெளியே அல்லல் ... 334
ராஜாஜி காங்கிரஸ் பிரவேசம் ... 357
திருப்பரங்குன்றம் பாசறை ... 374
பழிவாங்கும் படலம் ... 397
ஆந்திரருக்கு வெற்றி ... 420

எனது குடும்பம்

பிறந்த ஆண்டின் பெருமை

1906-ஆம் ஆண்டு இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றிலே மிகவும் சிறப்புடையதாகும். அந்த ஆண்டிலே புதுமையான தத்துவங்களும், புரட்சிகரமான போர்முறைகளும் தேசியத் தலைவர்களால் வெளியிடப் பெற்றன.

அந்த ஆண்டில்தான் **சத்தியாக்கிரகம்** என்ற அறப்போர் முறையைத் தென்னாப்பிரிக்காவிலே **காந்தியடிகள்** தொடங்கி வைத்தார்.

அதே ஆண்டில்தான் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மகாசபையின் தலைமை உரையிலே **சுயராஜ்யம்** எனும் புனித மான மந்திரத்தை மும்முறை கோஷித்தார் முதுபெரும் தலைவர் **தாதாபாய் நௌரோஜி.**

சுதேசி விரதம் — விதேசி பகிஷ்காரம் என்ற உன்னதத் தத்துவங்களையும், செயல் முறையையும் காங்கிரஸ் மகாசபை ஏற்றுக் கொண்டதும் 1906-ஆம் ஆண்டில்தான்.

வந்தே மாதரம் என்னும் மூலமந்திரம் குமரி மதல் இமயம் வரை அங்கு இங்கு எணாதபடி எங்கெங்கும் ஒலிக்கத் தொடங் கியதும் அந்த ஆண்டில்தான்.

தமிழ்நாட்டைத் தனித்து நோக்கினாலும் வரலாற்றுச் சிறப்புக்குரிய புரட்சிகள் பல இங்கு நிகழ்ந்தன 1906-ஆம் ஆண்டிலே!

எட்டயபுரம் **சி. சுப்பிரமணிய பாரதியார்** தேசியக் கவியாகத் தன்னை நாட்டுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டது 1906-ஆம் ஆண்டில்தான்.

அதே ஆண்டில்தான் **வீரர் வ.உ.சிதம்பரனார்** பிரிட்டிஷ் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்குப் போட்டியாக 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'யைத் துவக்கினார்.

இப்படி, புதுமையான தத்துவங்களும், புரட்சிகரமான போர் முறைகளும் அறிமுகமான 1906-ஆம் ஆண்டிலே சூன் திங்கள் 26-ஆம் நாளிலே நான் பிறந்தேன்.

மேலே நான் எடுத்துக்காட்டிய சரித்திர நிகழ்ச்சிகளுக்கும், அவை நிகழ்ந்த ஆண்டிலே பிறந்த எனக்கும் நெருங்கிய தொடர்புண்டு. **'சுயராஜ்யம்'** என்பதனை வாழ்க்கை இலட்சிய மாகக் கொண்டு, சுதேசி விரதம் பூண்டு, விதேசிப் பொருள் பகிஷ்கார இயக்கத்தோடு இணைந்து, 'வந்தே மாதரம்' என்று கோஷித்துச் சிறைபுகுந்து, கப்பலோட்டிய தமிழனின் வாழ்க்கை வரலாற்றை எழுதி எனக்கென ஒரு வரலாற்றைப் படைத்துக் கொள்ளும் பெருமையை நான் பெற்றிருக்கிறேன். அதனாற்றான் நான் பிறந்த 1906-ஆம் ஆண்டின் தேசிய நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறினேன்.

''எத்தனை சென்மங்கள் வந்து பிறந்தாலும் இந்திய மண் ணிடை வேண்டுவனே'' என்று பாடினார் ஒரு கவிஞர். அத்தகு புண்ணியத் திருநாடான பாரதப் பெருநாட்டிலே, வாழையடி வாழையெனப் பல்லாயிரம் ஆண்டுகளாக மகாகவிகள் பலர் வழிவழித் தோன்றி வந்துள்ள செந்தமிழ் நாட்டிலே, தருமமிகு சென்னையிலே பிறக்கும் பேற்றினை எனக்குத் தந்த இறைவ னுக்கு நன்றி உணர்வோடு அஞ்சலி செலுத்துகிறேன். உலகில் உள்ள எந்த ஒரு நாட்டையும் இழிவுடையதாக நான் எண்ண வில்லை என்றாலும், எனது தாய் நாட்டின் சிறப்புகளை, தமிழ்நாட்டின் அருமை பெருமைகளை எண்ணி எண்ணி இன்புற எனக்கு உரிமையுண்டுதானே!

சென்னையிலே ஆயிரம் விளக்கு எனப்படும் வட்டத்திலே, சால்வன் குப்பம் என்னும் பகுதியிலே நான் பிறந்தேன். சால்வன் குப்பமானது இப்போது 'சாணான் குப்பம்' என்று வழங்கப்படு கிறது. நான் பிறந்த வட்டத்திற்கு 'ஆயிரம் விளக்கு' எனப் பெயரிருப்பினும், என்னைப் பெற்றெடுத்த குடும்பம் வறுமை

எனும் இருள் சூழ்ந்ததுதான். என்ன செய்வது? அது பிறப்பி லேயே நான் பெற்று வந்த 'வரம்!'

பெற்றோரின் பெருமை

என் தந்தையார் பெயர் **பொன்னுசாமி.** அன்னையின் பெயர் **சிவகாமி.** எனக்குப் புத்தி தெரிந்த நாள்தொட்டு — தெய்வம் ஒன்று உண்டு என்ற உணர்வு தோன்றிய காலம் தொட்டு, முழுமுதற் கடவுளாகிய தில்லை அம்பலவாணரையும், சிவகாமி அம்மையாரையுமே சிவ - சக்தியாகக் கொண்டு வழிபட்டு வருகின்றேன். அந்தத் தில்லைப்பதி அப்பனுக்குப் 'பொன்னு சாமி' என்றும் பெயருண்டு. ஆம்; பொன்னம்பலத்துள் உறைப வரல்லவா! அம்மைக்குச் சிவகாமி என்று பெயர். நான் வழிபடும் அப்பனுடையவும் அம்மையுடையவும் பெயர் க்ளையே என்னைப் பெற்று வளர்த்த அம்மையும் அப்பனும் தற்செயலாகக் கொண்டிருந்ததனை எண்ணும்போதெல்லாம் என் மனம் இன்புறுவதுண்டு.

என்னுடைய அன்னையைப் பெற்ற பாட்டியார் **திருமதி மங்கைத்தாய்** அம்மாள் பதினாறு குழந்தைகளைப் பெற்றவர். ஆம்; பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்தவர். என்னு டைய அன்னையார், பத்துக் குழந்தைகளைப் பெற்றார். அவற் றுள் நான் மூன்றாவதாகப் பிறந்தவன். யான் பிறப்பதற்கு முன் பிறந்த இருவரும் பெண்களாதலால், என் பெற்றோருக்கு நான் தான் தலைமகன். என் அன்னையார் பதின்மரைப் பெற்றார் என்றாலும், மூவரைத்தான் தன் வாரிசுகளாகப் பெற்றார். மற்ற எழுவரையும் குழந்தைப் பருவத்திலேயே இழந்துவிட்டார். வறுமை நிறைந்த குடும்பத்தின் தலைவி வயிறாரப் பெற்றாலும் வளர்ப்பது கடினமென்பதற்கு இதுவே சான்று. என் குடும்பத்தில் எனக்கேற்பட்ட இந்த அனுபவமும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் அவசியத்தை எனக்கு உணர்த்துகின்றது.

எல்லோரையும்போல என்னுடைய பெற்றோரும் நாள் நட்சத்திரம் பார்த்துத்தான் எனக்குப் பெயர் வைத்தனராம். **திரு. சரபைய செட்டி** என்னும் தேவாங்கர் வகுப்பைச் சார்ந்த முதியவரொருவர், **ஞானப்பிரகாசம்** என்று எனக்குப் பெயர்

சூட்டினார்! அந்தப் பெரியார், செந்நிற மேனியும் வெண்ணிறத் தாடியும் கொண்டு, திருக்குறள் தந்த வள்ளுவர் இப்படித்தான் இருந்திருப்பாரோ என்று எண்ணுமளவுக்குக் கம்பீரமான தோற்றமுடையவராக இருந்தார். எனக்கு அறிவு விளங்கிய காலத்திலே நான் அவரைப் பார்த்திருக்கிறேன். ஒரு குடிசையிலே, ஒரே ஒரு கைத்தறியை வைத்துக் கொண்டு, தாமே முயன்று நெசவு செய்து, அதில் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு தன்னந்தனியாக எண்பத்தைந்து ஆண்டுவரை அவர் வாழ்ந்திருந்தார். அந்தப் பெரியவரிடம் எனக்கு பெருமதிப்பு உண்டு. அவர் சோதிடத்தில் நிபுணர். ''இவன், தனது முதுமைப் பருவத்தில் சிவஞானியாவான். அதனால் 'ஞானம்' என்னும் சொல் முதலில் வரும்படியாகப் பெயரிடுகிறேன்'' என்று கூறி ஞானப்பிரகாசம் என்று எனக்குப் பெயரிட்டாராம்! இதனை எத்தனையோ முறை என் அன்னையார் என்னிடமும் சுற்றத்தாரிடமும் சொல்லியிருக்கிறார். ஆனால், அந்தச் சோதிடர் என்னைச் 'சிவஞானி' என்றே அழைத்து வந்தார். என் பெற்றோரும் பிறரும் என் பெயரை 'ஞானம்' என்று சுருக்கியே அழைத்து வந்தார்கள். பிற்காலத்தில், நாம நட்சத்திரப்படி வைத்த பெயர் மறைந்து, நான் வள்ளுவராகவே நினைத்த சோதிடர் தம்முடைய வாயால் அடிக்கடி அழைத்த 'சிவஞானி' என்னும் பெயரே சிறிது திருத்தத்துடன் **சிவஞானம்** என்று நிலைபெறுவதாயிற்று.

தாய் பாடிய தாலாட்டு

குழவிப் பருவத்திலே, என் அன்னையார் என்னை அழகிய தொட்டிலிலிட்டுத் தாலாட்டி வளர்க்கவில்லை. தனக்கிருந்த ஒரே மாற்றுப் புடைவையை ஏணையாகக் கட்டி, அதிலே என்னைக் கிடத்தித் தாலாட்டி வளர்த்தார். எனக்குப் புத்தி தெரிந்த பின்னர், தாம் பெற்ற பல குழந்தைகளை என் அன்னையார் வளர்த்த விதத்தைக் கண்டு, என் பிள்ளைப் பருவத்தில் என்னை அவர் வளர்த்த விதத்தை அனுமானித்து இதைச் சொல்கின்றேன். ஆம்; என் குடும்பத்தின் பொருளாதாரம் நான் பிறந்த நாள் தொட்டு, எனக்கு முப்பத்தைந்து வயது ஆகும் வரை ஒரே சீராகத்தான் இருந்தது.

என் தாய், எனக்கு வாய் வழியே பாலூட்டி என் உடலை வளர்த்தது போல, செவி வழியே பாட்டூட்டி என் உள்ளத்தையும் வளர்த்தார். உடலையும் உள்ளத்தையும் ஒரு சேர வளர்ப்பது தானே பிள்ளை வளர்க்கும் முறை.

என் அன்னையார் ''ஏன் பிறந்தாய் மகனே?'' என்று வினா எழுப்பி எனக்குத் தாலாட்டுப் பாடியிருக்க மாட்டார். என்ன தான் வறுமையிருப்பினும், ஒரு தாய் தனக்கு மகன் பிறந்ததற்கு வருந்திப் பாடும் வழக்கமில்லை. மாறாக, கற்பனையாக வேனும் தன் மகனைப் பெருமைப்படுத்தித்தான் பாடுவாள். இதனை,

''பூவில் அயனும், இந்தப்
புவிமீது வள்ளுவர்தம்
பாவின் நயமுணரப்
பாலகனாய் வந்தானோ?''

''கம்பன் கவியின்
களியமுதம் உண்டிட,மால்
அம்புவியில் வந்திங்கு
அவதாரம் செய்தானோ?''

''தேவாரப் பாகும்
திருவாசகத் தேனும்
நாவார உண்ண எம்மான்
நன்மகவாய் வந்தானோ?''

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடியுள்ள தாலாட்டுப் பாட்டாலும் அறிகிறோம். கவிமணி கண்ட தாய், தனக்குப் பிறந்த மகனை, பிரமதேவனாகவும், திருமாலாகவும், சிவபெருமானாகவும் கற்பனை செய்து கொண்டு பாடி மகிழ்கின்றாள். இதுதானே தாயுள்ளம்! என் தாயும் இந்த உணர்வுக்கு விலக்கல்ல. ஆனால், அவர் தேசபக்தியூட்டும் தாலாட்டுப் பாடல்களைப் பாடி என்னை வளர்த்திருக்க மாட்டார். அந்தக் காலத்தில் தேசபக்தியூட்டும் தாலாட்டுப் பாடல்கள் இருக்கவில்லையல்லவா! தேசபக்தி ஊட்டப் பாட்டியற்றிய பெரும்பாவலரான

பாரதியார் நான் பிறந்த ஆண்டில்தானே பாட்டெழுதத் தொடங்கினார். அவர் தேசியக் கவிதைகளை எழுதிக் குவிப்பதற்கு முன்பு தமிழிலே தேசபக்தியூட்டும் பாடல் ஏது?

எனக்குப் பின் பிறந்த குழந்தைகளிலே சிலவற்றிற்கு என் தாய் பாடிய தாலாட்டுப் பாடல்களை நான் கேட்டிருக்கிறேன்.

"ஆளப் பிறந்தவனோ — நீ
அரசாள வந்தவனோ?"

"அத்தை அடித்தாளோ
அலறிப்பூச் செண்டாலே!
மாமி அடித்தாளோ
மல்லிகைப்பூச் செண்டாலே!
அடித்தாரைச் சொல்லியழு
ஆக்கினைகள் செய்திடுவேன்"

என்று என் தாய் பாடிக் கேட்டிருக்கிறேன்.

இன்றும் தாலாட்டுப் பாடல் கேட்பதிலே எனக்குத் தனி மகிழ்ச்சியுண்டு. எனக்கென்ன, முருகப் பெருமானின் அவதாரமென்று வள்ளற் பெருமான் போற்றும் ஞானசம்பந்தருக்கே இந்தப் பைத்தியம் இருந்தது. திருவீழிமிழலை என்னும் ஊரிலே, இல்லந்தோறும் தமிழ்த் தாயர்கள், தங்கள் சேய்களுக்குத் தாலாட்டுப் பாடுவது கண்டு ஞானசம்பந்தர் வியப்புடன் பாடியிருக்கிறார்.

"பண்ணமரும் மென்மொழியார்
பாலகரைப் பாராட்டும் ஓசைகேட்டு
விண்ணவரும் வியப்பெய்தி
விமானத்தோ டும்மிழியும் மிழலைதாமே!"

என்பது ஞானசம்பந்தரின் தேவாரப் பாடல். 'வானவெளியில் சென்ற விண்ணுலகத் தேவர்கள் திருவீழிமிழலையில் இல்லந்தோறும் தாலாட்டுப் பாடும் ஓசைகேட்டு மயங்கி, விமானத்தை விட்டு அங்கு இறங்கி விட்டார்கள்' என்பது பாடலின் பொருள்.

தேசியக்கவி பாரதியார், தேசபக்தியூட்டும் பள்ளி எழுச்சி பாடியுள்ளார். ஆனால், தேசிய உணர்வையூட்டும் தாலாட்டுப் பாடல் பாடினாரில்லை உறங்கிக் கிடந்த சமுதாயத்திற்கு விழிப் பூட்ட வந்த கவிஞராதலால், குழந்தைத் தலைமுறையை உறங்க வைக்கும் பாடலைப் பாடுவதற்கு அவர் விரும்பவில்லை போலும்!

சான்றார் சரித்திரம்

எனக்குச் சாதிப் பாகுபாட்டிலே நம்பிக்கை கிடையாது. ஆயினும், இன்றைய சமுதாய நியதிப்படி நானும் ஒரு சாதியைச் சேர்ந்தவன்தானே! அந்தச் சாதிக்கு **சான்றார்** என்று பெயர். இது 'சாணார்' எனவும் மருவி வழங்குகிறது. 'சான்றார்' என்போர் 'கிராமணி' — 'நாடார்' என்ற இருவேறு பிரிவினராக நாளடை வில் பிரிந்து விட்டனர்.

தமிழகத்தின் மீது விசயநகரப் பேரரசு ஆதிக்கம் பெறுவ தற்கு முன்பு, 'கிராமணி' — 'நாடார்' எனப்படுவோர் 'மறவர்' (அரசர்) குலத்தவராகவே இருந்து வந்தனர். விசயநகரப் பேரரசு ஆந்திரப் படை வீரர்களோடு வந்து தமிழகத்தில் ஆதிக்கம் பெற்றபோது, உள்நாட்டிலிருந்த மறவர்களை அது ஒடுக்க முயன்றது. அம்மறவர்களிலே பலர், பாண்டிய நாட்டின் உட்பிரதேசங்களிலேயும், பாண்டி நாட்டுக்கு வெளியே கிராமங் களிலேயும் குடிபுகுந்தனர். நாட்டுப்புறத்திலே குடிபுகுந்தவர்கள் 'நாடார்' எனவும், கிராமங்களிலே குடிபுகுந்தவர்கள் 'கிராமணி' எனவும் பெயர் பெற்றனர் என்று சொல்லப்படுகிறது.

'நாடார்' என்பதற்கு நாட்டுக்குரியவர் என்றும், 'கிராமணி' என்பதற்கு 'கிராம மணியம்' என்றும் பொருள் கூறப்படுகிறது. இதுபற்றி திரு. விசயதுரைசாமி கிராமணி என்பவர் மிகுந்த ஆராய்ச்சி செய்துள்ளார். 'சான்றார்' என்னும் சொல்லாராய்ச்சி, 'கிராமணி என்னுஞ் சொல்லாராய்ச்சி' 'நாடார் என்னுஞ் சொல் லாராய்ச்சி' என்ற நூல்களை எழுதியுள்ளார். இன்று அந்த ஆராய்ச்சிகளால் பயனில்லை என்றாலும், பண்டைத் தமிழர் களின் வாழ்க்கை முறையை அறிந்து கொள்ளவேனும் பயன்படு மல்லவா!

'கிராமணி' என்போர் சென்னை நகரிலும், இந்நகரை அடுத்துள்ள செங்கற்பட்டு மாவட்டப் பிரதேசங்களிலுமே வாழ்கின்றனர். புதுவை ராஜ்யத்திலேயும் ஏராளமானவர்கள் வாழ்கின்றனர். சுருங்கச் சொன்னால், சான்றார் சாதியினர் தொண்டை நாட்டில்தான் வாழ்கின்றனர். ''தொண்டை நன்னாடு சான்றோருடைத்து'' என்ற தனிப்பாடல் வரியும் நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

கிராமணிகளும் நாடார்களும் ஒரே சாதியின் இரு கிளையினரென்றாலும், காலப்போக்கில் இவர்களிடையே குடும்பக் கலப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லாமற் போய்விட்டது. அண்மைக் காலமாகத்தான் அத்தகைய கலப்பு மெல்ல மெல்ல ஏற்பட்டு வருகிறது.

என் தந்தையார் கள்ளிறக்கும் தொழிலாளி. அது, அந்நாளில் குலத் தொழிலாகக் கருதப்பட்டது. அதிலே அவர் நாள்தோறும் பன்னிரண்டணாக் கூலி பெற்று வந்தார். அந்நாளைய விலைவாசிப்படி ஒரு குடும்பத்தை நடத்துவதற்குப் போதுமான வருவாய்தான் என்றாலும், தந்தையாரிடமிருந்த குடிப்பழக்கம் அவருக்குக் கிடைத்து வந்த வருவாய் முழுவதும் குடும்பத்திற்குப் பயன்படாமல் செய்து வந்தது.

என் தந்தை சிலம்புச் செல்வர்

தந்தையாரிடம் குடிப்பழக்கம் இருப்பினும் நல்ல குணங்களுடையவர். அவர் பொய் சொல்லி நான் கேட்டதில்லை. கள்ளங்கபடமற்ற உள்ளமுடையவர். என்னிடம் ஏதேனும் நல்ல குணம் இருக்குமானால், அதனை என் தந்தையிடமிருந்து எனக்குக் கிடைத்த பிதிரார்ஜிதச் சொத்தாகவே நான் கருத வேண்டும். பாரதியார் தமக்கு வாய்த்த சேவகனை வருணிக்குமிடத்து,

''கட்டுறுதி உள்ளஉடல்,
கண்ணிலே நல்லகுணம்
ஒட்டுறவே நன்றா
உரைத்திடுஞ் சொல்''

என்று பாடுகிறார். இதனைப் படிக்கும்போதெல்லாம் என் தந்தையாரின் நினைப்பு எனக்கு வருவதுண்டு. ஆம்; பாரதியாரின் வருணனை அவருக்கு அப்படியே பொருந்தும். என் தந்தையாருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அது அவருடைய குற்றமன்று, அன்னிய அரசு தொழிலாளி வர்க்கத்துக்குக் கொடுத்துவிட்ட சாபம்! ஆனால், அந்தச் சாபத்துக்கும் விமோசனம் கண்டார் என் அன்னையார். தம் கணவருக்கு அவ்வம்மையார் எழுதப் படிக்கப் பயிற்சி கொடுத்தார். அதனால் பத்திரிகை படிக்குமளவுக்கு என் தந்தையாருக்குத் தமிழிலே ஞானம் ஏற்பட்டது.

எழுத்தறிவில்லாதவராக இருந்த காலத்திலும் வீரக் கலையிலே நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார். சிலம்பக் கலையிலே அவருக்கு நல்ல பயிற்சியுண்டு. ஆம், என் தந்தை சிலம்பச் செல்வர்! சிலம்பக் கலையிலே எனக்கும் விருப்பமிருந்தது. அதிலே திறமான பயிற்சி பெறவும் பலமுறை முயன்று பார்த்தேன். பெற முடியவில்லை. சிலம்பு பயில முடிந்ததுபோல சிலம்பம் பயில என்னால் முடியவில்லை. சிலம்பப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றிருந்தேனானால், சிலம்பு பயிலும் விருப்பமே ஏற்பட்டிருக்காதோ என்னவோ!

அன்னை சிவகாமி அம்மையார் பெரிய குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய தந்தை **மெ. இரத்தின கிராமணியார்** செங்கற்பட்டு மாவட்டத்தில் மீஞ்சூருக்கு அடுத்தாற் போலுள்ள மெதவாயல் கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். தென்னந் தோட்டத்தில் மேற்பார்வையாளராக வேலை பார்த்து அதில் கிடைத்த சுமாரான வருவாயைக் கொண்டு குடும்பங்கள் நடத்தினார். ஆம், 'குடும்பங்கள்' என்று நான் கூறுவதில் பொருளுண்டு. அவருக்கு மூன்று மனைவியர். அதனால் மூவேறு குடும்பங்களைச் சுமந்து வாழ்க்கை நடத்தினார். இப்போதுள்ளது போன்று மறுதாரத் தடைச் சட்டம் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு இல்லையல்லவா! ''இருதாரம் ஒருநாளும் தேட வேண்டாம்!'' என்னும் 'உலக நீதி' உபதேசம் அவருக்கும் தெரிந்திருக்கும். ஆனால், அதனைக் கடவுளர்களே கடைப்பிடிக்கவில்லையே!

சிவபெருமானுக்குச் சடையிலொருத்தி; இடையிலொருத்தி! அவர் மகன் முருகப் பெருமானும் அப்பனைப் போலத்தான்! மானிடர் மட்டும் ஒரு மனைவியோடு வாழாததை நாம் எப்படிக் குறை கூற முடியும்! கடவுளுக்கு மனைவியர்களைக் கற்பித்தவர்கள் ஏகபத்தினி விரதர்களாக மனிதர்கள் வாழ்வதற்கு உதவி புரியவில்லை. கிராமணி சாதியினரிலே ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியருடன் வாழ்க்கை நடத்துவோர் மலிந்திருந்தனர் அந்த நாளிலே! என் தந்தையும் தம்பியும் கூட இதற்கு விலக்கல்லர்! என் குடும்பத்திலேயே நான்தான் ஏகபத்தினி விரதன்.

கலியுகக் குசேலர்

என் அன்னையார், தம் தந்தையாரின் இரண்டாவது மனைவிக்குப் பிறந்தவர். என் பாட்டனார் தம் மூன்று மனைவியரிடம் 23 குழந்தைகளைப் பெற்று வளர்த்தார். இன்னும் நான்கு குழந்தைகள் பிறந்திருந்தால் புராண நாயகனான குசேலப் பெருமானோடு சம அந்தஸ்தைப் பெற்றிருப்பார்!

என் பாட்டனார் தம் மகன்களில் மூவருக்கு உயர் கல்வி தந்தார். முதல் மனைவியின் மகன் எம்.ஆர். கங்காதரம் பிள்ளையை எஃப்.ஏ. வரை படிக்க வைத்தார். இரண்டாவது மனைவியின் பிள்ளைகளும் என் அன்னையாரின் உடன் பிறந்தாருமான எம்.ஆர்.சண்முகம் பிள்ளையை பி.ஏ. வரையும் எம்.ஆர். சிவகாளத்திப் பிள்ளையை 'மெட்ரிக்' வரையும் படிக்க வைத்தார். என் மாமன்மார், தங்கள் பெயருக்குப் பின்னே 'பிள்ளை' என்றே பொறித்துக் கொண்டனர். 'கிராமணி' என்னும் சாதிப் பெயர் இழிவானதென்று கருதி, 'பிள்ளை'க்குள்ளே மறைந்து கொண்டனர். அந்நாளில் பிற்பட்ட சாதிகளில் பிறந்து உயர்தரக் கல்வி கற்றவர்கள் தங்கள் சாதியை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ள வெட்கப்பட்டு 'பிள்ளை' என்று போட்டுக் கொள்வது வழக்கம். உயர்தரக் கல்வி கற்றவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவன் என்பதற்காக என்னையும் 'பிள்ளை' யாக்கி வைத்தனர் என் பெற்றோர். நான் அரசியல்வாதியாக வளர்ந்த பின்னர், நானே விரும்பிக் 'கிராமணி'யானேன்!

பின்னர் அதையும் விட்டு வெறும் சிவஞானமானேன். நாளடை வில் அதுவும் குறுகி, ம.பொ.சி.யாகியிருக்கிறேன். என் பெய ரில் இதற்கும் மேல் மாறுதல் ஏற்படாதென்று நம்புகிறேன்.

என் பாட்டனார் தம்முடைய பெண்களுக்கும், தமிழிலே பிழையற எழுதவும் படிக்கவும் பயிற்சியளித்தார். என் அன்னை யார் பெண்களிலே மூத்தவராதலால், தம் பெற்றோரில்லத்தில் அவருக்கு மிகுந்த செல்வாக்கிருந்தது. பருவமடைந்த பின்னர் அவரது பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டு, ஐரோப்பியப் பெருமாட்டி ஒருவரைக் கொண்டு ஓரளவு ஆங்கிலத்திலும், 'எம்ப்ராய்டரி' வேலையிலும் பயிற்சி அளித்தார்.

என் மாமன் பட்டதாரி

நான் பிறந்தநாள் தொட்டு எனக்கு என் அன்னையாரின் குடும்பத்தோடுதான் அதிகத் தொடர்பிருந்தது. என் தந்தையா ருக்கு எனக்குப் புத்தி தெரிந்த பருவத்திலே ஒரு தமக்கையும் ஒரு தம்பியும் இருந்தனர். ஆனால், அவர்கள் தனித்திருந்தன ராதலால், அவர்களோடு என் குடும்பத்துக்கு நெருங்கிய தொடர்பிருக்கவில்லை. என் தந்தையும், சிறிய தந்தையும் ஒற்றுமையாக இருக்கவில்லை.

என் தாய் மாமன்மார்களிலே எம்.ஆர். சண்முகம் பிள்ளை, பி.ஏ. அவர்களைப் பற்றிச் சில தகவல்களைத் தர விரும்புகின் றேன். இந்தத் தகவல்களுக்கும் என் வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. எம்.ஆர். சண்முகம் பிள்ளை கிராமணி சமூகத்தி லேயே முதல் பட்டதாரி! இதனை என் அன்னையார் அடிக்கடி சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்வார். அவரும் ஆங்கிலத் தைப் பயிற்று மொழியாகக் கொண்டு படித்துத்தான் பட்டதாரி யானார். அவர் காலத்திலே, தமிழைப் பயிற்று மொழியாகக் கொள்வது பற்றிச் சிந்திப்பதற்கும் சந்தர்ப்பம் இருந்திருக்காதல் லவா!

அவருக்குப் பெண் கொடுக்க கிராமணி சமூகத்தினரில் பெரும் பணக்காரர்கள் போட்டியிட்டனராம். சமூகத்திலேயே முதல் பட்டதாரியல்லவா! மீர்சாகிப்பேட்டை சம்பந்த கிராமணி

என்ற பெரிய பணக்காரர் பெண் கொடுத்தார். மற்றிரு மாமன் மார்களான திரு.எம்.ஆர். கங்காதரம் பிள்ளை, திரு. எம்.ஆர். சிவகாளத்திப் பிள்ளை ஆகிய இருவரும் சென்னை கிருஷ்ணாம் பேட்டைவாசியும் பெரும் பணக்காரருமான திரு.பு.மு. குருசாமி கிராமணியாரின் சகோதரிகளை மணந்தனர்.

திரு.எம்.ஆர். சண்முகம் பிள்ளை, தாம் மணந்த மனைவி யோடு நெடுங்காலம் மனைவாழ்க்கை நடத்தவில்லை. ஒன்றி ரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் மனைவியைத் துறந்து வெள்ளை வேட்டித் துறவியாக நீண்ட காலம் வாழ்ந்து, சுமார் அறுபது வயதளவில் காலமானார். அவர் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரோடு நட்பு கொண்டிருந்தார். என் மாமனுக்கு நண்பர் என்ற காரணத்தாலும் நான் வ.உ.சி.யிடம் பக்தி கொண்டேன். வ.உ.சி.யைப் போலவே, என் தாய்மாமனும் தமிழில் நிறைந்த புலமை பெற்றிருந்தார். அந்நாளில், ஆங்கிலத் தின் மூலம் படித்துப் பி.ஏ. பட்டம் பெற்ற ஒருவர் தமிழிலும் நிறைந்த புலமை பெறுவது அரிதாக இருந்திருக்குமல்லவா!

வ.உ.சி.யுடன் நட்பு

என் மாமன் தம் மனைவியைத் துறந்த பின்னர் சென்னை பெரம்பூரிலே பல ஆண்டுகள் வாழ்ந்திருந்தார். வ.உ.சி.யும் சிறை மீண்ட பின்னர்ப் பெரம்பூரில் தங்கி வாழ்ந்தார். இந்த நேரத்தில்தான் வ.உ.சி.க்கும் என் தாய்மாமனுக்கும் நட்பு ஏற்பட்டிருக்க வேண்டும். வ.உ.சி. அவர்கள் தம்முடைய நூல் களில் சிலவற்றை என் மாமனுக்கு அன்பளிப்பாகத் தமது வாழ்த்துரையோடு கூடிய கையொப்பத்துடன் வழங்கியிருந் தார். அந்த நூல்களை நான் பொன்போல் போற்றிப் பாதுகாத்து வைத்திருந்தேன். ஆனால், ஆகஸ்டுக் கிளர்ச்சியின் போது என் வீட்டைச் சோதனையிட்டுப் போலீசார் எடுத்துக் கொண்டு போன நூல்களில் அவையும் இருந்தன. பின்னர் அந்த நூல்கள் எனக்குத் திருப்பித் தரப்படவில்லை. வ.உ.சி.க்கும் எம் தாய் மாமனுக்கும் இருந்த நட்பின் சின்னங்களாக விளங்கிய அந்த நூல்களை இழந்ததனை நினைக்கும்போதெல்லாம் எனக்கு வருத்தமேற்படுவதுண்டு.

எம்.ஆர். சண்முகம் பிள்ளை யோக சாதனங்களைப் பயின்று வைத்திருந்தார். அவர் ஹடயோகத்திலிருந்தபோது, அவருடைய உடலிலிருந்து கால்வேறு கைவேறாகப் பிரிந்திருக் கக் கண்டு, என் பாட்டனார் ஓவென்று அலறி அழுதுவிட்டா ராம். பின்னர்தான் தம் மகன் செய்த ஹடயோகத்தின் விளைவு அது என்பதனை அறிந்து கொண்டாராம். இறப்பதற்கு முன்னர் சரியாக இன்ன நேரத்தில் தாம் உயிர்விடப் போவதாக முன் கூட்டியே தம் தமையனாருக்கு அவர் எழுதியிருந்தார். இதனை என் அன்னையார் அடிக்கடி பெருமையோடு சொல்வதுண்டு.

இராமலிங்க சுவாமிகளிடம் என் மாமன் பெருமதிப்பு வைத்திருந்தார். தமது மறைவுக்குப் பின் தம்முடைய உடம்பைக் கொளுத்திவிடாமல் புதைத்துவிட வேண்டுமென்று கூறியிருந் தார். ஆம்; வள்ளற் பெருமானுடைய முக்கிய உபதேசங்களிலே பிணத்தைக் கொளுத்தக் கூடாதென்பதும் ஒன்றாகும். ஆனால், பழமையில் மூழ்கிக் கிடந்த அவர் குடும்பத்தார், அவரது உடலைக் கொளுத்திவிட்டார்கள். பிணத்தைப் புதைக்க மறுப்ப வர்களை வெறுப்பவராகி, ''பிணம் புதைக்கச் சம்மதியீர்; பணம் புதைக்கச் சம்மதிக்கும் பேயரே நீர்'' என்று சினந்து கூறுகிறார் வள்ளற்பெருமான். உண்மைதானே!

பள்ளிப் படிப்பு முடிந்த பரிதாபம்

எனக்கு ஐந்து வயது முடிந்த பின்னர் என் பெற்றோர் என்னைப் பள்ளிக்கு அனுப்பி வைத்தார்கள். ஆங்கிலத்தின் மூலம் கல்வி பயிலும் 'கான்வென்ட்' பள்ளிக்கு அல்ல. ஒரு தமிழ் மகனை அனுப்ப வேண்டிய தமிழ் பயிலும் பள்ளிக்குத் தான் என்னை அனுப்பி வைத்தார்கள். புரசைவாக்கம் தாணாத் தெருவிலுள்ள கிறித்துவ மிஷனரிப் பள்ளியில் சேர்த்தனர். அந்தப் பள்ளியில் முதல் வகுப்பில் தேறினேன். இந்துவாகப் பிறந்த நான் முதன் முதலாகக் கல்வி பயின்றது கிறித்துவப் பள்ளியில்தான். பின்னர் அதே தாணாத் தெருவிலுள்ள சென்னை மாநகராட்சிப் பள்ளியிலே சேர்க்கப்பட்டு இரண்டாவது வகுப்பில் படித்துத் தேறினேன். என் குடும்பத்தார் குடியிருந்த வீடு நான் படித்த பள்ளியிருக்கும் தெருவில் வடகோடியில் இருந்தது. சொந்த வீடு இல்லாமையால், என் குடும்பத்தார் அடிக்கடி வீடு மாறி வந்தனர். வீடு மாறியபோதெல்லாம் பேட்டை மாறுதலும் ஏற்படுவதுண்டு. ''படைத்தவனுக்கு ஒரு வீடு, படைக்காதவனுக்கு நாடெல்லாம் வீடு'' என்றொரு பழமொழியுண்டு. இது என் குடும்பத்துக்குப் பொருந்துவதாக இருந்தது!

1953-ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சிக் கல்விக் குழுவின் தலைவனாக இருந்தபோது, நான் படித்த சென்னை மாநகராட்சி — தாணாத் தெருவிலுள்ள — பள்ளியைப் பார்வையிடச் சென்றேன். பெரிய பதவிக்கு வந்துவிட்டவர்கள், அந்தப் பதவியிலிருந்து கொண்டு பிள்ளைப் பருவத்தில் தாங்கள் படித்த பள்ளிக்குச் செல்ல நேர்ந்தால், அதனைப் பெருமையோடு பேசுவதுண்டு. நான் அப்படிப்பட்ட பெரிய பதவி எதிலும் இல்லையென்றாலும், கல்விக் குழுவின் தலைவனாக இருந்து கொண்டு நான் படித்த பள்ளியைப் பார்வையிடச் சென்றபோது என் மனத்திலும் பெருமிதம் ஏற்படத்தான் செய்தது.

இரண்டாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது, பள்ளியில் மற்றப் பிள்ளைகளோடு விளையாடிக் கொண்டிருந்த நேரத்தில் குழாயிலே என் தலை மோதி நெற்றியிலே பெரிய இரத்தக் காயம் ஏற்பட்டது. அதுகூட, என் அரசியல் வாழ்க்கைக்குப் பயன்பட்டது. நான் சிறைசென்ற ஒவ்வொரு சமயத்திலும் என்னை அடையாளம் கண்டுகொள்ள என் நெற்றியிலிருந்த — பள்ளியிலே ஏற்பட்ட காயத்தால் விளைந்த — வடுவைத்தான் குறித்துக் கொண்டனர் சிறை அதிகாரிகள்.

தந்தையால் கல்வி போம்!

புரசை தாணாத் தெருப் பள்ளியிலே மூன்றாம் வகுப்புக்கு மாறிய ஆரம்பத்திலேயே என் பள்ளிப் படிப்பு முடிந்து விட்டது. இது என் வாழ்க்கையில் ஏற்பட்ட விபத்தாகும்.

மூன்றாவது வகுப்பில் நுழைந்த ஏழாம் நாளிலே, பகல் நேரத்தில் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டுத் திரும்பவும் பள்ளிக்குப் போனேன். காலையிலேயே வகுப்பில் நான் பாடப் புத்தகங்களோடு வராததற்காக ஆசிரியர் என்னைக் கண்டித்தார். பிற்பகலில் வகுப்புக்கு வரும்போதேனும் புத்தகங்களைக் கட்டாயம் கொண்டுவர வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார். இதனை என் பெற்றோரிடம் நான் சொல்லியும், அவர்கள் வெறுங்கையுடனேயே என்னைப் பள்ளிக்கு அனுப்பினார்கள். என்னைக் கண்ட ஆசிரியர் கடுங்கோபங்கொண்டு என்னைப் பள்ளியிலிருந்து விரட்டிவிட்டார். இது எனக்குப் பெருத்த அவமானமாக இருந்ததால் விம்மிவிம்மி அழுதவண்ணம் வீட்டுக்கு வந்தேன். அந்த நேரத்தில் என் தந்தை உறங்கிக் கொண்டிருந்தார். என் வருகையால் விழிப்புற்ற அவர், என் அழுகையால் சினமுற்றார். யான் அழுவதற்கான காரணத்தை அறிந்ததும், என்னைக் கையோடு அழைத்துக் கொண்டு நான் படித்த வகுப்பறைக்குள் நுழைந்தார். என்னை நல்ல வெயில் நேரத்தில வீட்டிற்கு விரட்டியதற்காக ஆசிரியரை என் தந்தையார் வாயார வைதார்! துருவாச முனியின் தோற்றத்தில் காட்சியளித்த என் தந்தையின் நிலையைக் கண்டு ஆசிரியர் நடுநடுங்கிப் போனார். உண்மையில் ஆசிரியரின் நிலைக்கு நான் பரிதாபப்பட்டேன்.

என்ன இருந்தாலும் தந்தையார் இவ்வளவு கோபப்பட்டிருக்கக் கூடாது என்றுதான் நான் கருதினேன். ''தந்தையோடு கல்வி போம்'' என்று பழமொழியுண்டு. அதனைச் சிறிது திருத்தி, ''தந்தையால் கல்வி போம்'' என்று சொன்னால் அது என் விஷயத்தில் மிகவும் பொருத்தமாக இருக்கும். என்பால் வைத்த அன்பால் என் தந்தையார் எனக்குச் செய்த 'நலன்' இது.

மூன்றாவது வகுப்பில் அந்த நாளில் தேவைப்பட்டவை ஆங்கிலம் — தமிழ் மொழிப் பாடப் புத்தகங்கள்தாம். இவற்றைக் கூட வாங்கிக் கொடுக்க என் குடும்பத்தின் வறுமை இடந்தராத கொடுமை என் வாழ்க்கையில் மகத்தான திருப்பத்தை ஏற்படுத்திவிட்டது.

திண்ணைப் பள்ளியிலே...

பள்ளி ஆசிரியரிடம் சினங்கொண்டு என் தந்தையார், தன்மானங் காரணமாக, திரும்பவும் அதே பள்ளிக்கு என்னை அனுப்பவில்லை. இப்போது ஒரே பேட்டையில் ஆரம்பப் பள்ளிகள் பல உள்ளன. அப்போது இப்படி இல்லை. நான் வேறு பள்ளிக்குப் போக வேண்டுமானால் வீட்டிலிருந்து நெடுந்தூரம் நடந்து செல்ல வேண்டும். இதனால் எனது பள்ளிப் படிப்பே அத்துடன் முடிந்துவிட்டது. இதற்கு இன்னொரு காரணம், தாணாத் தெருப் பள்ளியிலிருந்து வெளியேறிய ஒன்றிரு மாதங்களுக்குள் என் குடும்பத்தார் திருவள்ளூருக்கு அடுத்தாற் போலுள்ள ஈக்காடு கிராமத்தில் குடியேறியதாகும்.

அந்தக் கிராமத்திலிருந்த ஒரு திண்ணைப் பள்ளிக் கூடத்தில் படித்தாக நினைவிருக்கிறது. அதுவும் சில வார அளவில் தான். அதன்பின் என் அன்னையாரே எனக்குக் கல்வி கற்பித்தார். சரியாகச் சொன்னால், என் அளவில் இல்லமே பள்ளியாக இருந்தது. என் அன்னையே ஆசிரியராக அமைந்தார். 'மணிமேகலை'க் காப்பியத்திலே அட்சய பாத்திரத்தைக் கையிலேந்திய மணிமேகலையாள், உத்தமக் கற்பினளான ஆதிரை என்பவளிடம் முதலில் அன்னப் பிச்சை பெற்றாள். அந்த ஆதிரை இட்ட பிச்சைச் சோற்றை வறுமையுற்ற மக்களுக்கெல்லாம்

மணிமேகலையாள் எடுத்தெடுத்து வழங்கினாள். வழங்க வழங்க ஆதிரையிட்ட பிச்சைச் சோறு வளர்ந்து கொண்டேயிருந் ததாம். அதுபோன்று எனக்கு அன்னை தந்த கல்விப் பிச்சை அற்பம்தான் என்றாலும், உத்தமி தந்ததாதலால் அது என் உள்ளத்தில் வளர்ந்து கொண்டேயிருக்கிறது.

இல்லமே பள்ளி; அன்னையே ஆசிரியை!

மூன்றாம் வகுப்பில் நுழைந்த ஏழாம் நாளிலேயே எனது பள்ளிப் படிப்பு முடிந்ததற்கும் மொழித் துறையில் யான் கொண்டுள்ள கொள்கைக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதனை இன்று உணர்கின்றேன். ஆம்; அந்நாளிலும் மூன்றாம் வகுப்பி லேதான் ஆங்கில மொழிக் கல்வி தொடங்கியது. அதனால் இன்று ஆங்கில ஆதிக்கத்தின் எதிரியாக்கப்பட்டு விட்ட எனது பள்ளிப் படிப்பு மூன்றாவது வகுப்பின் தொடக்கத்திலேயே முடிந்துவிட்டது போலும்! இதன் பின்னர், ஆங்கில எழுத்தும் சொல்லும் என் அன்னையிடமே பயின்றேன்.

என் தம்பி திரு. பரசுராமன் என்னோடு சேர்ந்துதான் பள்ளிப் படிப்பை விட்டார். என்னைப் போலவே அன்னை யிடம் கல்வி பயின்றார். ஆனால், யான் பெற்ற கல்வி வளர்ந்த வண்ணம் இருக்கிறது. அவருக்கு அந்த வாய்ப்பு இல்லை. காரணம் தம்பியர்கள் வாணிபத்தில் இளமையிலேயே ஈடுபட்டு விட்டதுதான். நான் அரசியலில் புகுந்ததால், அன்னையிடம் பெற்ற கல்வி வளர்வதற்கான சூழ்நிலை எனக்கு அமைந்தது.

பகலிலே தொழில் செய்பவர்கள் மாலை நேரத்திலே கல்வி கற்க இந்நாளில் வாய்ப்பிருக்கிறது. நானும் மாலை நேரத்தில் தான் கல்வி கற்றேன். அன்னையார், வீட்டு வேலைகளை முடித்துக் கொண்ட பின்னர் என்னையும் என் தம்பியையும் அருகில் அழைத்துக் கல்வி கற்பிப்பார்.

என் பெற்றோர் என்னை அடித்து வளர்த்ததில்லை. பிற்கா லத்தில் சட்ட விரோதமான ஊர்வலத்தில் நான் கலந்து கொண்ட போது, போலீசாரின் தடியடிக்குள்ளாகி உடம்பிலே படுகாயங்

களைப் பெற்றேன். அந்தக் காயங்களுக்கு என் அன்னை ஒத்தடங் கொடுத்தபோது, ''என் பிள்ளையை நான் அடித்து வளர்த்ததில்லை. எவனோ அடித்துப் படுகாயப்படுத்தி விட்டா னே'' என்று சொல்லி, வேதனைப்பட்டு விம்மி விம்மி அழுதார். அந்தக் காட்சி என் கண்முன்னே இன்று நினைத்தாலும் அப்படியே தோன்றுகிறது. அவரது விம்முதல் என் செவிகளுக் குக் கேட்கின்றது. அன்னையின் பாசத்துக்கு இணை இன் னொன்று உண்டோ!

பக்திப் பாடல்களைப் பயின்றேன்!

இரவில் உணவுண்டு முடிந்த பின்னர் என் அன்னையார் தேவாரம், திருவாசகம், திருவருட்பா ஆகிய பாடல்களைப் பாடி எனக்கு அறிவூட்டுவார். ''முத்திநெறி அறியாத மூர்க்க ரொடு முயல்வேனை'' என்று தொடங்கும் திருவாசகப் பாடலை மிகவும் உருக்கத்தோடு அவர் பாடிக் கேட்டு, அந்தப் பிள்ளைப் பருவத்திலேயே என் மனம் உருகும். திருவருட்பாப் பாடல் களைத்தான் அதிகமாகப் பாடுவார். இசையிலே பெரும் பயிற்சி பெற்றவர் அல்லர். ஆயினும் என் அன்னையாருக்கு நல்ல சாரீரம் இருந்தது.

என் வாழ்க்கையில் நாத்திகப் பாதையிலே நான் நடை போடுவதற்கு எத்தனையோ சந்தர்ப்ப நிர்ப்பந்தங்கள் எனக்கு ஏற்பட்டன. இப்போதும் அத்தகைய தடுமாற்றங்கள் பல நேரங் களில் எனக்கு ஏற்படுவது உண்டு. ஆம்; மதத்தின் பேராலும், கடவுளின் பேராலும் எளியாருக்கு வலியார் இழைக்கும் கொடு மைகளைக் கண்டு குமுறும் போதெல்லாம் எனக்கு நாத்திக உணர்வு ஏற்படுவதுண்டு. ''மதமும் கடவுளும் மறைந்துவிட் டால், ஆதிக்கக் கொடுமைகளிலிருந்து மக்கள் விடுபடுவார்க ளல்லவா?'' - என்ற சபலம் என் மனத்தில் எழுவதுண்டு. ஆனால், என் பிள்ளைப் பருவத்தில் அன்னையிடம் யான் பயின்ற அருட்பாடல்கள் என்னை இன்னமும் ஆத்திகச் சோலை யிலே நிறுத்தி வைத்திருக்கின்றன.

அடகு வைக்கப்பட்டேன்!

என்னுடைய வாழ்க்கையிலே எனக்கேற்பட்ட பெரிய விபத்து ஒன்று உண்டென்றால், கல்வி பயில வேண்டிய பருவத்தில் பாட்டாளியாக மாறிய கொடுமையாகும். எனக்குப் பத்து வயது தொடங்குவதற்கு முன்பே என் பெற்றோர் என்னை வேலைக்கு அனுப்பி விட்டனர். வேலையில் கிடைத்த சம்பளம் மாதம் இரண்டு ரூபாய்தான்! ஆனால் என் பெற்றோர் அதற்காக என்னை வேலைக்கனுப்பவில்லை. பத்து ரூபாய் முன்பணம் கிடைக்கிறது என்பதற்காகத்தான் என்னை வேலைக்கு விரட்டினார்கள். சரியாகச் சொன்னால் பத்து ரூபாய்க்கு என்னை அடகு வைத்தார்கள். பின்னர் அந்த ரூபாயைத் திருப்பிக் கொடுத்து என்னை மீட்டுக் கொண்டார்கள். ஆனால், அதற்குள் இரண்டாண்டுக் காலம் என்னை அடகு பெற்ற எசமானனுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தேன். அந்தக் காலத்தில் எசமானன் என்னை அடித்துக் கொடுமைப்படுத்தியதுண்டு. இப்படி, இலட்சாதி லட்சம் ஏழைப் பிள்ளைகள் இந்நாளிலும் பள்ளியில் படிக்க வேண்டிய பருவத்தில் கடுமையான உழைப்பில் தள்ளப்பட்டுள்ளார்கள். அந்தப் பிள்ளைகளைப் பார்க்கும் போதெல்லாம் என் கண்கள் கலங்குவதுண்டு.

சோஷலிச நாடான ருஷ்யாவிலே இந்தக் கொடுமை இல்லை. ஏன், முதலாளித்துவ நாடான பிரான்சிலும், பிரிட்டனிலும் கூடப் பள்ளியில் படிக்க வேண்டிய பருவத்திலே பிள்ளைகளைத் தொழிலுக்கு அனுப்பும் கொடுமை இருக்கவில்லை. நாடு விடுதலை பெற்றுக் கால் நூற்றாண்டாகியும் இன்னமும் கட்டாயக் கல்வி முழு அளவில் நம் நாட்டில் நடைமுறைக்கு வரவில்லை. குறைந்த அளவு ஐந்தாவது வகுப்புவரையேனும் பிள்ளைகளை விடுதியில் வைத்துக் கல்வி கொடுப்பதைக் கட்டாயமாக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் பழைய கொடுமைகளிலிருந்து மீண்ட புதிய சமுதாயத்தைப் படைக்க முடியும்.

நான் அச்சு கோக்கும் தொழிலிலே ஈடுபடுவதற்கு முன்பு எத்தனையோ தொழிலைத் தொட்டுத் தொட்டு விட்டுவிட்டேன். நானாக அல்ல; என் பெற்றோர் விருப்பப்படி! வீடு கட்டுமிடத்

தில் சிற்றாளாகக் கூடச் சில நாட்கள் வேலை செய்திருக்கிறேன். சில மாதங்கள் உருது பேசும் முஸ்லிம்கள் வீடுகளில் பீடி சுற்றும் தொழிலாளியாகவும் பணி புரிந்திருக்கிறேன். ஆனால், ஆண்டுக் கணக்கில் நான் ஈடுபட்டிருந்தது நெசவுத் தொழிலில் தான். சுமார் எட்டாண்டுக் காலம் இந்தத் தொழிலில் ஈடுபடுத்தப் பட்டிருந்தேன். எனக்குப் புத்தி தெரிந்த பின்னர் என் தந்தையார் கள்ளிறக்கும் தொழிலில் ஈடுபட்டிருப்பதை எண்ணி எண்ணி நான் வருந்தியிருக்கிறேன். அந்தத் தொழில் நாகரிகமில்லாதது - பாவத்தை வளர்க்கக் கூடியது என்ற உணர்வு இளமையி லேயே எனக்கு ஏற்பட்டிருந்தது. அத்துடன் இயற்கையிலேயே நல்லவரான என் தந்தையார், கள் தொழிலில் ஈடுபட்டிருப்ப தால்தான் குடிப்பழக்கமும் அடிதடிச் சண்டைகளில் ஈடுபடுவ தில் ஆர்வமும் உடையவராய் இருக்கிறார் என்பதனை நான் உணர்ந்தேன். அதனால் அந்தத் தொழிலிலிருந்தே அவரை மீட்டுவிட வேண்டும் என்று எண்ணினேன். என் அன்னையா ரும் என்னைப் போன்றே கருதினார்.

எனக்குப் பதினாறு வயது ஆனபோது, என் வீட்டிலேயே சொந்தத்தில் கைத்தறி ஒன்று அமைத்து, கைத்தறி ஜவுளி முதலாளிகளிடம் நூல் வாங்கி, நெசவு செய்யத் தொடங்கினேன். அதன் பின், என் தந்தையாரும் தன் தொழிலில் இருந்து கொண்டே நெசவுத் தொழிலை என்னிடம் பயின்றார். பின்னர், அவருக்காகவும் ஒரு தறி அமைத்து, நாங்கள் இருவருமே நெசவுத் தொழில் புரிந்து வந்தோம். என் தந்தை செய்து வந்த கள் தொழிலிலிருந்து அவரை மீட்டதிலே எனக்குப் பெரு மகிழ்ச்சி. நெசவுத் தொழிலைத் தந்தைக்குபதேசித்த மைந்தன் என்ற 'பெருமை' எனக்குண்டு. என் அன்னையார் என்னால் குடும்பமே தலை எடுத்துவிட்டதாக அப்போது மகிழ்ந்தார். சொந்தத்தில் இரண்டு தறிகள் அமைத்து நெசவு செய்தபோது என் குடும்பம் ஓரளவு மகிழ்ச்சியுடன் இருந்ததாகத்தான் எனக்கு நினைப்பு. அப்பொழுதும் ஒரு குடும்பத்தின் தேவை களை முற்றிலும் நிறைவேற்றிவிடக் கூடிய வகையில் நெசவுத் தொழிலில் வருவாய் கிடைக்கவில்லை.

என் குடும்பம் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த பொன்னேரிக்கருகிலுள்ள ஆரணி கிராமத்திலிருந்தபோது தான் என் தந்தைக்கு நெசவுத் தொழிலைக் கற்றுத் தரும் அரும்பெரும் பேற்றினைப் பெற்றேன். ஆரணி கிராமமானது தேவாங்கர் எனப்படும் சாதியினர் ஒரு கணிசமான தொகையில் வாழக்கூடியதாகும். அவர்கள் அவ்வளவு பேரும் நெசவாளிகள். அதனாற்றான், திருவள்ளூருக்கருகிலுள்ள ஈக்காடு கிராமத்தைவிட்டு, ஆரணிக்குக் குடியேறியபோது, அந்த ஊரின் சூழ்நிலைக்கேற்ப இரண்டாவது முறையாக நான் நெசவுத் தொழிலில் ஈடுபட்டேன். வீட்டிலேயே சொந்தத்தில் தறி அமைத்ததும் ஆரணியில் தான். அந்த இளம் பருவத்திலே கிராம வாழ்க்கை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

என்னுடைய வீடு ஆற்றங்கரையை அடுத்திருந்தது. ஆற்றிலே வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்போது, அதைக் கண்டு பேரானந்தம் அடைவேன். இன்றுங்கூட நீர் நிறைந்த நதியைக் கண்டால் எனது நெஞ்சு மகிழும். மேகந் தவழும் உயர்ந்த மலைகளைக் காணும்போதும் நான் என்னை மறந்து அனுபவிப்பேன். கோயில் வழிபாட்டில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. என்றாலும், மலை — ஆறு — பூரணச் சந்திரன் பொலியும் வானம் — சாரல் மிகுந்து மலை அருவி பொழியும் திருக்குற்றாலம் ஆகிய இயற்கைக் காட்சிகளைக் காணும்போதெல்லாம் என் மனத்துள் தெய்வபக்தி எழும். இயற்கை வடிவில்தான் ஆண்டவன் அருளை அதிகமாகக் காண முடியும் என்பது என் நம்பிக்கை.

ஆரணி கிராமத்திலே என் குடும்பம் இருந்தபோது நான், தம்பி பரசுராமன், தங்கை பாலம்மாள் ஆகிய மூவரும் அடிக்கடி ஆற்று மணலிலே விளையாடுவோம். ஊர்ப் பிள்ளைகளிலே சிலரும் எங்களோடு சேர்ந்து விளையாடுவார்கள். அந்தக் காட்சிகளை இப்போது நினைத்தாலும் இதயத்திலே இன்பம் பொங்குகின்றது.

எனது குடும்பம் ஆரணியிலிருந்தபோதுதான் பசி பட்டினி இல்லாமல் வாழ்ந்ததாக நினைக்கிறேன். சொந்தத்திலும் ஒரு

குடிசை வீடு அமைத்துக் கொண்டு வாழ்ந்தோம். நல்ல வசதி யான — அழகான வீடு. என் குடும்பம் தன் சொந்த முயற்சியால் தனக்கெனத் தேடிக் கொண்ட சொத்து இந்தக் குடிசை வீடுதான். இந்த வீட்டைக் கட்டுவதற்கு முன்னும் பின்னும் இது வரையிலும் என் தந்தையினுடைய உழைப்பாலோ, என்னுடைய சொந்த உழைப்பாலோ என் குடும்பம் தேடிக் கொண்ட சொத்து ஒன்றுமில்லை. அதனால், ஆரணியிலே சுற்றிலும் உயரமான — கனமான மண் சுவர் அமைத்து இரண்டு அறைகளோடு கூடிய ஓலை வேய்ந்த கூரை வீடு அமைத்துக் கொண்டதை இன்று நினைத்தாலும் எனக்குப் பெருமிதமேற்படுகின்றது.

ஆரணியிலும் என் குடும்பம் நெடுங்காலமாக நிலைத்திருக் கவில்லை. துரதிருஷ்டவசமாக, என் தந்தையாருக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டு, இரண்டு மாதகாலம் அந்நோய் நீடித்து அவர் மரணப் படுக்கையில் வீழ்ந்து விட்டார். சென்னை செல்ல வேண்டும், உற்றார் உறவினர் மத்தியிலே சாகவேண்டும் என்ற எண்ணம் என் தந்தைக்கு ஏற்பட்டது. ஆரணியிலே என் சாதியார் என்று சொல்லக் கூடியவர் யாருமில்லை. தந்தையார் வற்புறுத்தலின் பேரில் என் அன்னையார் தம் மூன்று மக்களையும் கணவரையும் அழைத்துக்கொண்டு திரும்பவும் சென்னையில் குடியேறினார்.

சிலம்பம் பயின்றேன்

என் குடும்பத்துக்குச் சொந்த ஊர் மயிலாப்பூர். ம.பொ.சி. என்ற மூன்றெழுத்துக்களின் பொருள் 'மயிலாப்பூர் பொன்னுசாமி சிவஞானம்' என்பதாகும். ஆரணியை விட்ட என் பெற்றோர், தங்கள் பூர்வ பதியான மயிலையில் குடியேறினர். ஆம்; மயிலைக் குயப்பேட்டையிலே! அங்கும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தேவாங்க சமூகத்தினர் வாழும் பகுதியில் என் குடும்பம் குடியேறியதால், திரும்பவும் நானும் என் தந்தையும் எங்களுக்கெனச் சொந்தத்தில் இரண்டு தறிகளை அமைத்துக் கொண்டு, நெசவுத் தொழிலில் ஈடுபட்டோம். அதனால், இந்த முறை அந்தத் தொழிலைக் கொண்டு என் குடும்பம் வளமாக வாழ்ந்ததென்று சொல்வதற்கில்லை. ஆனால், சில மாதங்களுக்

குப் பின் திரும்பவும் என் தந்தையார் தம் பழைய தொழிலுக்கே போய்விட்டார். நானும் நெசவுத் தொழிலைவிட்டு அச்சுக் கோக்கும் தொழிலாளியானேன்.

மயிலைக் குயப்பேட்டையில் வாழ்ந்த காலத்திலே நான் சிலம்பக் கலை பயில முயன்றேன். என் சாதியாரிலே இளைஞர் கள் இத்தகைய பயிற்சி பெறுவதிலே அதிக ஆர்வம் காட்டினர். அவர்களுடைய பழக்கத்தாலும், என் தந்தையும் சிலம்பம் பயின்றவராதலாலும், நானும் அவ்வீரக்கலையைப் பயில விரும்பினேன். சிலம்பம் பயின்றவருடைய பழக்க வழக்கங்கள் எப்படியிருப்பினும் அது ஒரு சிறந்த கலை என்றே நான் இன்றும் கருதுகிறேன். கல்வி பயிலாதவர்களே இந்தக் கலை யைப் பயில்கிறார்கள். அதனால் அவர்களிலே பலர் அடிக்கடி தெருச் சண்டையில் ஈடுபடுகிறார்கள். அதைக்கண்டு படித்தவர் கள் சிலம்பக் கலைப் பயிற்சியையே வெறுக்கிறார்கள். உயர்தரக் கல்வி கற்றவர்களும் சிலம்பம் பயின்றால் அந்தக் கலை பெருமை பெற்றுவிடும்.

'சிலம்பம்' என்னும்போது குத்துச் சண்டை, குஸ்தி, கொம்பு விளையாட்டு ஆகியவற்றையே குறிப்பிடுகின்றேன். ஒரு கலையாகக் கருதிச் சிலம்பம் பயில்வதால் பயில்வோருக்கு ஒரு சிறுமையும் நேராது. திடநெஞ்சம் ஏற்படும். கோழைத்தனம் அகலும். ஆனால், அந்தக் காலத்திலே, சிலம்பம் பயின்றோரில் பலர், பந்தயச் சண்டைகளில் ஈடுபட்டனர். அவர்களுக் கெனவே 'கோதா'க்கள் இருந்தன. 'மெட்ரிக்' வரை படித்த என் தாய்மாமன் சிவகாளத்திப் பிள்ளையும், அவருடைய மைத்து னர்களும் இப்போது நான் வாழும் கிருஷ்ணாம்பேட்டையிலே ஒரு 'கோதா' நடத்தி வந்தனர். குத்துச்சண்டை, குஸ்தி முதலிய பந்தயச் சண்டைகள் நடைபெறும் இடம் 'கோதா' எனப்படும். சிலம்பக் கலையில் ஆர்வமுடையவர்கள் பணம் கொடுத்து டிக்கட் வாங்கி இந்தப் பந்தயச் சண்டைகளைப் பார்ப்பார்கள். இத்தகைய சண்டையிலீடுபடுபவர்கள் 'பயில்வான்கள்', 'வஸ்தாதுகள்' என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்கள்.

கிருஷ்ணாம்பேட்டையில் என் தாய்மாமனும் அவருடைய மைத்துனர்களும் நடத்திய கோதாவுக்கு ''பு.மு.குருசாமி கிராமணி கோதா'' என்று பெயர். பு.மு. குருசாமி கிராமணியார் என் மனைவியின் தாய் மாமன் ஆவார். என் வீட்டுக்குச் சற்று தள்ளி எதிரிலே தேசியப் பெண்கள் பள்ளி இருக்கும் இடத்திலே தான் அந்தக் கோதா இருந்தது. அங்கு மட்டுமன்றி, சென்னை பீப்பிள்ஸ் பார்க்கிலேயும் குத்துச் சண்டை, குஸ்தி ஆகிய பந்தயச் சண்டைகள் நிகழ்வதுண்டு. அங்கேயும் என் தாய்மா மன் குத்தகை எடுத்து நடத்துவார். குஸ்திப் பந்தயத்திற்கு வடபுலத்திலிருந்தும் பயில்வான்கள் தருவிக்கப்படுவார்கள்.

இப்போது, அரசியல் எழுச்சி காரணமாகச் சென்னை நகரில் பேட்டைக்குப் பேட்டை மன்றங்கள் இருத்தல்போல, அந்நாளில் சிலம்பக் கூடங்கள் நடத்தப்பெற்றன. தனித்தனிப் பெயரால் அரசியல் கட்சிகள் இருப்பதுபோல, சிலம்பப் பரம்பரைகள் இருந்தன. சார்பட்டா பரம்பரை, இடியப்ப நாய கர் பரம்பரை, சுண்ணாம்புக்குளம் முனியப்ப கிராமணி பரம் பரை என்பன போன்ற பெயர்களால் பல 'பரம்பரைகள்' இருந்தன. ஞாயிறுதோறும் மாலை நேரத்திலே குத்துச்சண்டை, குஸ்திச் சண்டை நடைபெறும் கோதாக்களுக்கு, அவற்றைக் காண்பதற்காக மக்கள் சாரை சாரையாகச் செல்வார்கள்.

வீமனுடன் குத்துச் சண்டை!

இளமையிலே, எப்படியாகினும் பயில்வானாகவோ, வஸ்தாதாகவோ ஆகிவிட வேண்டுமென்ற விருப்பம் எனக்கு இருந்தது. என் தந்தையாரோ, என் குடும்பத்தில் யாருமோ தூண்டாமல் இயற்கையாகவே எனக்கு இந்த விருப்பம் ஏற்பட் டது. சிறிதளவே சிலம்ப வித்தை பயின்ற நிலையிலே, பந்தயச் சண்டையிலும் பங்குகொள்ள ஆசைப்பட்டேன். அப்போதும் எனது உடல் வலிமைபெற்றதாக இருக்கவில்லை. என்றாலும், மனம் வலிமையுடையதாக இருந்தது. என் தோழர்களெல்லாம் என்னை ஊக்கி உற்சாகப்படுத்தியதன் விளைவாக இராயப்பேட் டையில் முன்னர் ட்ராம்வே கம்பெனி இருந்த இடத்தின் எதிரில் நடந்து வந்த இராமமூர்த்தி சாண்டோவின் சர்க்கசிலே குத்துச்

சண்டை செய்தேன். என்னோடு சண்டையிட்டவர் பெயர் வீமன். பெயருக்கேற்ப அவருக்கு உடம்பு இருந்தது. முதல் முறை செய்த சண்டையில் தோற்றேன். ஆனால், இரண்டு மாதங்களுக்குப் பின் மீண்டும் அவருடனேயே குத்துச்சண்டை செய்து வெற்றி பெற்றேன். ஆம்; ஒருமுறை தோல்வி; மறுமுறையில் வெற்றி.

நான் வஸ்தாது ஆக விரும்பிய காலத்திலே எனக்கு அரசியலில் ஆர்வம் இல்லை. காரணம் அதற்கான சூழ்நிலை அப்போது நாட்டில் இல்லாததுதான். அரசியலில் ஈடுபட்ட பின்னர், சிலம்பக் கலையில் தேர்ந்த வஸ்தாதாக வேண்டுமென்ற ஆசை மறைந்து, ''அகிம்சா வீரன்'' ஆகவேண்டுமென்ற ஆசை பிறந்தது. இன்றளவும் சிலம்பக் கலையிடம் எனக்கு மதிப்பிருப்பினும் குத்துச் சண்டை போன்ற வன்முறைப் பந்தயங்களில் மனிதர்கள் ஈடுபடுவது எனக்குப் பிடிக்கவில்லை. அதனை அநாகரிகமாகவும் கருதுகின்றேன். ''பிள்ளைப் புத்தி'' என்பார்களே, அது போன்றதுதான் இளமையிலே வஸ்தாதாகி விட வேண்டுமென்று எனக்கிருந்த விருப்பம். நல்ல வேளையாக, தமிழ்நாட்டிலே அந்தப் பந்தயச் சண்டைகள் இப்போது அடியோடு மறைந்துவிட்டன. அவற்றிற்குப் பதிலாக 'அரசியல் மேடைச் சண்டைகள்' ஏற்பட்டுவிட்டன அல்லவா!

ஒருவன் ஈடுபட்டுள்ள தொழிலைப் பொறுத்ததாகவும் இருக்கிறது அவனுடைய அறிவு வளர்ச்சி. நெசவுத் தொழிலிலே கல்வி அறிவுடையவர்கள் ஈடுபடுவதில்லை யாதலால், அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் அறிவு வளர்ச்சி பெறுவதற்கான சூழ்நிலை இருக்கவில்லை. குறள் தந்த திருவள்ளுவர், இழை எடுத்து நூல் நெருடிய ஏழை நெசவாளியாக இருந்தார் என்ற கதையினை நம்புவது கஷ்டமாகத்தான் இருக்கிறது.

அச்சுத் தொழிலாளி

அச்சு கோக்கும் தொழில் நெசவுத் தொழிலிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். ஓரளவு கல்வி கற்றவர்களே அச்சு கோக்கும் தொழிலில் ஈடுபட முடியுமாதலால்,சுயமுயற்சியிருந்

தால், அச்சுத் தொழிலாளி நல்ல முறையில் அறிவுத் துறையில் முன்னேற முடியும். இதனை எனது சொந்த அனுபவமும் எனக்கு உணர்த்துகின்றது.

முதன் முதலாக மவுண்ட் ரோடிலிருந்த ஒரு சிறிய அச்சகத் தில்தான் நான் அச்சு கோக்கும் தொழிலைப் பயின்றேன். அதன்பின் இரண்டொரு பெரிய அச்சகங்களில் மாதம் 5 ரூபாய் சம்பளத்திற்குப் பணிபுரிந்தேன். ‘இந்து’ பத்திரிகாலயத்தில் இரண்டு மாத காலம் பேப்பர் மடிக்கும் பையனாக இருந்திருக் கிறேன்.

புரசைவாக்கம் கங்காதீசுவரர் கோயில் எதிரிலே ‘சர்மா சகோதரர்கள்’ என்பவர்கள் ‘விநோதினி’ என்னும் மாதப் பத்திரிகை ஒன்றையும், அதற்கெனத் தனியாக ஒரு அச்சகத்தை யும், புகைப்படம் எடுக்கும் நிறுவனம் ஒன்றையும் நடத்தி வந்தனர். அங்குதான் இரண்டாண்டுக் காலம் தொடர்ந்து அச்சுத் தொழிலாளியாக இருந்தேன்.

‘விநோதினி’ மாத இதழுக்குப் பிரபல தேசபக்தர் திரு. டி.என். நடராசப் பிள்ளை என்பவர் ஆசிரியராக இருந்தார். இவர், தமிழில் உணர்ச்சியூட்டும் நடையில் எழுதவும், மேடை யிலே ஆவேசமாகப் பேசவும், அருமையாகப் பாடவும் ஆற்றல் பெற்றிருந்தார். என் இளமைப் பருவத்திலே நான் முதன் முதலில் சந்தித்த பிரபல தேசபக்தர்களிலே இவரும் ஒருவர்.

எனக்குப் புத்தி தெரிந்த பருவத்திலே என் அன்னையா ருடன் பிறந்த சகோதரிகள் மூவர் இருந்தனர். அவர்கள் மரகதம் மாள், ராசம்மாள், இராசமாணிக்கம்மாள் ஆவர். இளையவரான திருமதி இராசமாணிக்கம்மாள் அவர்கள் சூளை குயப்பேட்டை யில் குடியிருந்தார். இவருடைய கணவர் பக்கிங்காம் — கர்னாடிக் ஆலைத் தொழிலாளி! இவர்கள் வீட்டிலிருந்து கொண்டு தான் ‘விநோதினி’ மாதப் பத்திரிகை அலுவலகத்தில் தொழில் புரிந்து வந்தேன். வறுமை காரணமாகத்தான் என் பெற்றோர் என்னுடைய சிற்றன்னையாரின் வீட்டிலே என்னை விட்டு வைத்தனர்.

பிறந்தகம் விட்டு பிறரகங்களில் வளர்ந்தேன்!

என் அன்னையார் என்னிடம் வைத்திருந்த அன்பு ஈடு இணையற்றது. என்னை வீட்டில் வைத்திருந்தால், நான் அடிக்கடி பட்டினி கிடக்க நேருமென்ற காரணத்தால் அதனைத் தவிர்க்க எண்ணி, என் அன்னை தம்முடைய சகோதரிகள் வீட்டில் மாறி மாறி விட்டு வைப்பார்.

திருமதி மரகதம்மாள் என்ற சிற்றன்னையார், பெரம்பூரில் வாழ்ந்தார். இவர் கணவர் திரு. மாசிலாமணி கிராமணியார், பெரம்பூர் ரயில்வே தொழிற்சாலையில் வேலை செய்து வந்தார். பெரம்பூர் சிற்றன்னையின் வீட்டில்தான் நான் அடிக்கடி விடப் படுவது வழக்கம். மயிலாப்பூரிலுள்ள திருமதி இராசம்மாள் என்ற சிற்றன்னையின் இல்லத்திலும் இருந்திருக்கிறேன். இவரு டைய கணவர் திரு. முனுசாமி கிராமணி. கள்ளிறக்கும் தொழி லாளி! ஆம்; கண்ணனைப் போல, ஒருத்தி மகனாகப் பிறந்து ஒருத்தி மகனாக வளர்ந்த 'பெருமை' எனக்கு உண்டு.

என் சிற்றன்னைமார் என்னிடம் அன்பு காட்டி எனக்கு வயிறார உணவு தந்து, என் உடலை வளர்த்தார்களென்றாலும் கல்வி தந்து என் அறிவை வளர்ப்பதிலே ஆர்வங்காட்ட வில்லை. என் தம்பி சிறு பருவத்திலிருந்தே கள் வாணிபத்தில் ஈடுபட்டிருந்ததால், அவர் மட்டும் வீட்டில் பெற்றோருடனேயே இருந்து வந்தார். நான்தான் நாடோடி — இல்லை, வீடோடி!

'விநோதினி' சிறந்த தேசிய இதழாக வெளிவந்து கொண் டிருந்தது. அதனால், எனக்கும் தேசபக்தி ஏற்பட்டு நானும் தேசியவாதியாக மாறினேன்.

காங்கிரசில் சேர்ந்தேன்!

நான் 1923-ஆம் ஆண்டிலேயே அரசியலில் ஈடுபட்டு விட்டேன் என்று சொல்ல வேண்டும். அந்த ஆண்டில் நடை பெற்ற இந்திய சட்டசபை, பழைய சென்னை ராஜ்ய சட்டமன்றத் தேர்தலிலே அழைப்பாரின்றியே நான் பங்கு கொண்டேன். வேட்பாளனாக அல்ல; வேட்பாளர்களுக்கு ஆதரவாகக் கோஷ மிடுவோனாக! அப்போது எனக்கு வயது பதினேழு. இங்கிருந் துதான் எனது அரசியல் வாழ்க்கை ஆரம்பமாகின்றது. நான் அப்போது காங்கிரசில் முறையாக அங்கத்தினன் ஆகவில்லை. ஆயினும், என்னொத்த இளைஞர்களோடு கூடிக்கொண்டு, விளம்பரப் போர்டுகளைக் கையிலேந்தி காங்கிரஸ் வேட்பாளர் களுக்கு ஓட்டளிக்குமாறு குரல் கொடுத்த வண்ணம் தெருத் தெருவாக அலைந்திருக்கிறேன். அப்பொழுது காங்கிரஸ் கட்சி நேரடியாகத் தேர்தலில் ஈடுபடவில்லை. காங்கிரசின் அனுமதி யோடு, அதன் பார்லிமெண்டரி அமைப்பாக விளங்கிய சுயராஜ் யக் கட்சிதான் தேர்தலில் ஈடுபட்டது. இருந்தாலும், காங்கிரசே ஈடுபட்டதாகத்தான் அந்த இளம் பருவத்திலே நான் நினைத் தேன். நான் என்ன நாட்டு மக்களும் அப்படித்தான் நினைத்தார் கள். என்னுடைய அரசியல் வாழ்க்கையே தேர்தல் பிரச்சாரத்தி லிருந்துதான் ஆரம்பமானது. அதுவும் காங்கிரசுக்காகத்தான்!

''காலில் நகம் முளைத்த நாள் முதலாக அடிமைக்காரனையே'' என்றார் நந்தனார். தெய்வத்தைத் தொழுவதற்கும் தனக்கு உரிமை தரமறுத்த அந்தண ஆண்டையிடந்தான் இப்படிக் கூறினார் நந்தனார். அவரைப்போல, இளமையிலேயே நான் காங்கிரசுக்கு அடிமையாகிவிட்டேன், நானே என் விருப்பத்தின் பேரில்! அந்த நாள்தொட்டு — அதாவது, 1923-ஆம் ஆண்டு தொடங்கி, நான் காங்கிரசிலிருந்து வெளியேறிய 1959-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து முப்பத்திரண்டாண்டுக் காலம் காங்கிர சின் வளர்ச்சிக்காக என் உள்ளங்காலில் வெள்ளெலும்பாட ஓடி ஓடி உழைத்தேன்.

1927-இல்தான் நான் முறையாகக் காங்கிரசில் சேர்ந்தேன். ஆண்டுச் சந்தா செலுத்தி, அங்கத்தினர் சேர்க்கும் தாளில் கையொப்பமிட்டு நான் காங்கிரசில் சேர்ந்ததாக எனக்கு நினைவில்லை. அப்போதெல்லாம் அப்படி முறையாகக் காங்கிரஸ் பணி நடைபெறவுமில்லை.

தொண்டர் படையிலே!

சென்னை எழும்பூரிலுள்ள மிகப் பெரிய திடலிலே, டாக்டர் எம்.ஏ. அன்சாரி அவர்கள் தலைமையிலே 37ஆவது காங்கிரஸ் மகாபை நடைபெற்றது. நான் ''விநோதினி'' பத்திரிகாலயத்தில் அச்சு கோப்போனாக இருந்தது இந்தச் சந்தர்ப்பத்தில்தான். 'விநோதினி' ஆசிரியரும், அதன் நிர்வாகிகளும் தீவிர தேச பக்தர்கள் ஆதலால், அவர்கள் சென்னை காங்கிரஸ் மகா சபையை நடத்தும் பணியிலே ஈடுபட்டிருந்தனர். அவர்களுடைய தூண்டுதல் காரணமாக, காங்கிரஸ் மகாசபைத் தொண்டர் படையிலே சேர்ந்தேன்.

அப்போது காங்கிரசில் சேருவதென்பது எளிதாகத்தான் இருந்தது. ஆங்கிலப் பேரரசின் அடக்குமுறை அந்தக் காலத்திலே என்னைப் போன்ற ஒரு எளிய தொண்டனைத் துன்புறுத்தும் அளவுக்கு இருக்கவில்லை. அதனால், திருவிழாக் கூட்டத்தில் கலந்து கொள்ளுகிற, உணர்ச்சியோடுதான் 1923-இல் தேர்தல் பிரச்சாரத்திலும், 1927-இல் காங்கிரஸ் மகாசபைத் தொண்டர் படையிலும் கலந்து கொண்டேன். நான் தொண்டர் படையில் கலந்து கொண்டதற்கு மற்றொரு காரணமும் உண்டு. தொண்டர்களிலே ஒருவனாக இருந்தால் மகாசபைக்கு வரும் காந்தியடிகள் போன்ற பெருந்தலைவர்களை அருகிலிருந்து பார்க்கலாம் என்ற ஆசை.

காங்கிரஸ் தொண்டர் படைக்குப் பிரபல நடன ஆசிரியரும், சிறைசென்ற தேசபக்தருமான திரு. ஈ.கிருஷ்ணய்யர் தளபதியாகவும், டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் துணைத் தளபதியாகவும் இருந்தார்கள் என்று நினைக்கிறேன்.

'விநோதினி' அலுவலகத்தார், நான் தொண்டர் படையில் சேர்ந்திருந்தது காரணமாக, மகாசபை நடந்த நாட்களிலே சம்பளத்தோடு கூடிய விடுமுறை கொடுத்திருந்தார்கள். அதனால், இரவு பகலாகக் கண் விழித்து காங்கிரஸ் மகாபையின் வெற்றிக்காகப் பணிபுரிந்தேன். வயிறாரச் சோறும் கிடைத்தது! கண்ணாரக் காட்சியும் கண்டேன்! ஆனால், செவியாரப் பெருந் தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டேன் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில், பேச்சுகளெல்லாம் பரங்கி மொழியிலே! அதனால், காதிருந்தும் செவிடனானேன். அன்றே ஆங்கில ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கான வித்து என் உள்ளத்தில் விழுந்தது.

மூன்றாம் வகுப்பில் நுழைந்த ஒரு வாரத்திலேயே பள்ளிப் படிப்பு முடிவடைந்து விட்டதால், என் வாழ்க்கையிலே, நான் பள்ளித் தோழர்களைப் பெறாதவனானேன். நெசவுத் தொழிலிலும், அச்சு கோக்கும் தொழிலிலும் ஈடுபட்டிருந்தபோது நல்ல தோழர்கள் சிலரைப் பெற்றேனாயினும் அந்தத் தொழில்களை விட்டு அரசியலில் தீவிரமாக ஈடுபட்ட பின்னர், அந்தத் தோழர்களுடைய தொடர்பு அறுபட்டுவிட்டது. எனது வளர்ச்சி காரணமாகவும், அவர்களுக்கும் எனக்கும் நடுவே இடைவெளி அதிகப்பட்டு, பரஸ்பரம் தொடர்பு ஏற்பட வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இதனால், இளமைப் பருவத்திலே பழகிய தோழர்கள் என யாருமே இன்று எனக்கு இல்லாமற் போய்விட்டனர்.

பெற்றோருக்கடங்கிய பிள்ளை!

இயற்கையிலேயே எனக்கு நாண உணர்ச்சி அதிகமாக உண்டு. அதனால், பிறரோடு நெருங்கிப் பழகும் சுபாவம் என்னிடம் மிகமிகக் குறைவு. பெண்களோடு — அவர்கள் நெருங்கிய உறவினராயிருப்பினும் — நான் அதிகம் பேசிப் பழகமாட்டேன். இந்த நாண உணர்ச்சியும் என்னுடைய வாழ்க்கையிலே ஒழுக்கத்தை வளர்த்துக் கொள்ள எனக்குப் பெரிதும் உதவி புரிந்திருக்கிறது.

இளமையிலே ஊர் பிள்ளைகளோடு அதிகமாக நெருங்கிப் பழக என் பெற்றோர் என்னை அனுமதிக்கவில்லை. இரவில் அதிக நேரம் வீட்டிற்கு வெளியே இருக்க என்னை விடமாட்டார் கள். நாடகத்திற்கோ, திரைப்படங்களுக்கோ, என் இளமைப் பருவத்தில் நான் அதிகமாகச் சென்றதில்லை. என் பெற்றோராக அழைத்துச் சென்றாலொழிய, நானாக நாடகத்திற்கோ, திரைப் படத்திற்கோ செல்வதற்கான சூழ்நிலையே எனக்கு இருக்க வில்லை. ஆம்; என் பெற்றோர் என்னை அவ்வளவு கண்டிப் பாக வளர்த்தனர்.

தந்தையார் எழுத்தறிவுகூட இல்லாதவராயினும், குடிப் பழக்கம் உடையவராயினும், தன் பிள்ளைகளை ஒழுக்கமாக வளர்ப்பதிலே அவர் மிகுந்த அக்கறை காட்டினார்.

இராமமூர்த்தி சாண்டோ சர்க்கஸில் நான் குத்துச்சண்டை செய்ததாக முன்னரே கூறினேனல்லவா! அதுகூட, என் பெற் றோருக்குத் தெரியாமல், என் உறவுமுறை நண்பர்கள் சிலரு டைய தூண்டுதலால் நிகழ்ந்ததுதான். சர்க்கஸிலே எனது குத்துச் சண்டையை விளம்பரப்படுத்தியிருந்தார்கள். அப்போதுதான் ‘சிவஞானம்’ என்னும் பெயர் முதன் முதலாக அச்சுப் பிரசுரத் தில் ஏறியது. என் பெற்றோரும் உறவினரும் நண்பர்களும் ‘ஞானம்’ என்றே என்னை அழைப்பது வழக்கமாதலால் ‘‘சிவ ஞானம்’’ என்னும் பெயருக்குள்ளே மறைந்து கொண்டு, என் பெற்றோர் அறியாமல் நான் குத்துச் சண்டையிலீடுபடுவது சாத்தியமானது.

பாட்டும் கூத்தும் பயின்றேன்!

இளமையிலே இசையில் பயிற்சிபெற வேண்டுமென்ற விருப்பம் எனக்கிருந்தது. பக்திப் பாடல்களைப் பண்ணோடு பாடி, கடவுளை வழிபடுவதற்காகவே நான் இசை பயில விரும்பினேன். இசையில் நல்ல தேர்ச்சி பெற்ற ஒருவர் எனக்கு நண்பராக இருந்தார். புல்லாங்குழல் வாசிப்பதிலும் அவர் திறமை பெற்றிருந்தார். அவர் என்னிடம் ஊதியம் எதையும் எதிர்பாராமல் எனக்கு இசை பயிற்றுவிக்க முன் வந்தார்.

ஜண்டை வரிசை வரை பயிற்சி முன்னேறியது. 'வாதாபி கணபதிம் பஜே' என்னும் பிள்ளையார் துதிப் பாடலும் ஆரம்ப மானது. அத்துடன் எனது இசைப் பயிற்சி முற்றுப் பெற்றுவிட் டது. காரணம் வறுமைதான்!

நானும் என்னுடைய உறவு முறை இளைஞர் சிலரும் சேர்ந்து, நாடகம் பயில்வதற்கான குழு ஒன்றை அமைத்து, பயிற்சியைத் தொடங்கினோம். அந்த நாடகக் குழுவுக்கு நாங் கள் வைத்த பெயர் நினைவில்லை. ஏதோ ஒரு பெயர் வைத் தோம். ''நல்லதங்காள்'' நாடகத்தைப் பயின்றோம். அதிலே எனக்குத் தரப்பட்ட பாத்திரம் நல்ல தங்கையின் மூத்த மகன் ஞானசேகரன். நாடகப் பயிற்சி முடிந்து, நாங்கள் குடியிருந்த மயிலைக் குயப்பேட்டையிலே அதனை நடத்துவதற்கான ஏற்பாடுகளிலும் ஈடுபட்டோம். அப்போதெல்லாம் எங்களைப் போன்று கலை ஆர்வத்தால் நாடகம் பயில்வோர், பயிற்சி முடிந்ததும் தெருவிலே நாடகத்தை நடத்துவதுதான் வழக்கம். ஏதோ ஒரு காரணத்தால் — அது எனக்கு இப்போது நினை வில்லை — எங்கள் நாடக அரங்கேற்றம் தடைப்பட்டுவிட்டது.

ஒன்றிரண்டு ஆண்டுகள் கழித்து அதே நாடகக் குழுவின் பெயரால் திரும்பவும் 'கோவலன்' நாடகத்தைப் பயிலத் தொடங்கினோம். பயிற்சி முடிந்து, முச்சந்தியிலே அரங்கேற்ற மும் ஆனது. நான் கண்ணகியாக நடித்தேன். அப்போதெல்லாம் கோவலன் நாடகத்திலே 'முன் கண்ணகி' என்றும் 'பின் கண்ணகி' என்றும் இருவேறு கண்ணகியர் தோன்றுவார்கள்.

கண்ணகி சின்னஞ்சிறு சிறுமியாக இருக்கும்போதே கோவலன் அவள் கையில் மாங்கனியைக் கொடுத்து கழுத்தில் தாலி கட்டிவிடுவான். ஆம்; குழந்தைத் திருமணம்! கண்ணகி பருவமடைந்த பின்னர் ஒரு நாள் திடீரென்று தன் கழுத்தில் மாங்கல்யமிருப்பதைக் கண்டுவிட்டு, என் கணவன் எங்கே? என்று தோழியைக் கேட்பாள். அப்படிக் கேட்குமிடத்தில்தான் பின் கண்ணகி தோன்றுவாள். என் பருவத்திற்கேற்ற பாத்திரம் கோவலன் நாடகத்திலே முன் கண்ணகிதான்!

தீ விபத்து!

மயிலைக் குயப்பேட்டையிலே என் குடும்பம் குடிசைப் பிரதேசத்தில் குடியிருந்தது. என் வாழ்க்கையில் தொடர்ந்து 15 ஆண்டுக் காலம் நான் எனது குடும்பத்துடன் குடிசைப் பிரதேசத்தில் வாழ்ந்திருக்கிறேன். அப்பொழுது மயிலைக் குயப்பேட்டையில் ஒன்றிரு தெருக்கள் தவிர உட்பிரதேசம் முழுவதும் குடிசைமயமாக இருந்தது. ஒருநாள் பகல் உணவருந்திய பின்னர், நானும், பெரிய தம்பி பரசுராமன், சிறிய தம்பி சுப்பிரமணியன், தங்கை பாலம்மாள் ஆகியோரும் தூங்கிக் கொண்டிருந்தோம். இயற்கையிலேயே பெரிய கண்களும், பயங்கரமான மீசையும் கொண்டு விளங்கிய என் தந்தையார், தூங்கிக் கொண்டிருந்த என்னை வேகமாய்த் தட்டி எழுப்பினார். நான் கண் விழித்ததுமே, 'ஐயோ மகனே' என்று அலறி, என்னை ஐந்து வயது தம்பியை எடுத்துக் கொள்ளச் சொல்லி அவர் ஏழு வயது தங்கையைத் தன் தோளில் தூக்கிக் கொண்டு எனது வலது கையைப் பிடித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினார். என் பெரிய தம்பி எங்களைப் பின்பற்றி அழுத வண்ணம் ஓடி வந்தான்.

இந்தப் பரபரப்புக்குக் காரணம் நாங்கள் குடியிருந்த வீடு தீப்பற்றிக் கொண்டதுதான். மூன்றாவது தெருவிலே ஒரு வீட்டில் நடுப்பகல் 2 மணிக்குத் திடீரென்று தீப்பிடித்து விட்டது. என் தந்தையும் தாயும் தெருவிலே நின்று அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். எரிந்து கொண்டிருந்த வீட்டின் அருகிலிருந்த தென்னை மரத்தையும் தீ தீண்டிவிட, அதிலிருந்த பாளை வெடித்து என் குடும்பம் குடியிருந்த கூரை மீது வந்து விழ, அந்தக் கூரையும் தீப்பிடித்துக் கொண்டது. இந்தக் கோரத்தைத் தெருவிலிருந்த என் பெற்றோர் சிறிது தாமதித்தே காண முடிந்தது. ஒற்றையடிப் பாதையில் முட்டுச் சந்தின் கடைசியில் எங்கள் குடிசையிருந்ததால், எரிந்து கொண்டிருந்த தீயின் நடுவே நாங்கள் வீட்டிலிருந்து வெளியேற வேண்டி ஏற்பட்டது. இன்னும் ஒரு நிமிடம் என் பெற்றோர் தீப்பிடித்ததைத் தெரிந்து கொள்ளாதிருந்தால், நானும் என் தங்கையும் தம்பியரும் கொடுமைமிக்க வறுமை வாழ்விலிருந்து அன்றே விடுதலை பெற்று, என் பெற்றோரின் வாழ்க்கைச் சுமையைக்

குறைத்திருப்போம். புதிய தமிழகம் படைக்கும் புனிதப் பணியிலே, தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழுக்கே முதலிடம் தேடித்தரும் தருமப் பணியிலே ஈடுபடுத்தும் விருப்பத்தால் இறைவன் அன்று என்னைக் காப்பாற்றிவிட்டான். அந்த அருளாளனுக்கு எனது அஞ்சலி உரித்தாகுக!

இந்தத் தீ விபத்து நிகழ்ந்த பத்து நாட்களுக்குப் பின் மற்றொரு பயங்கர விபத்து என் குடும்பத்திற்கு ஏற்பட்டது. எங்கள் வீடு தீவிபத்துக்காளானபோது ஐந்து வயதுடைய என் தம்பி சுப்பிரமணியன், திடீரென்று உறக்கத்திலிருந்து விழித்து ஊராரெல்லாம் 'ஐயோ' என்று அலறி அழுது அப்படியும் இப்படியுமாக ஓடி அலைவதைக் கண்டு பயந்துவிட்டான். அன்றிரவே அவனுக்குக் காய்ச்சல் கண்டு, பின்னர் பெரியம்மை போட்டது. பத்தாவது நாள் நாங்கள் தங்கியிருந்த எனது சிற்றன்னையார் வீட்டில் மரணமடைந்தான்.

இந்தக் கோரச் சம்பவங்களால் என் தந்தையார் பித்துப் பிடித்தவராகி, அந்த நிலையை மறக்க, சதா குடிபோதை மயமானார். அதன்பின் நடந்த வேதனை நிகழ்ச்சிகளை நான் விவரிக்க விரும்பவில்லை. மூன்று மாத காலம் கொம்பை இழந்த கொடி போன்று என் அன்னையாரும், நானும் கதிகலங்கியிருந்தோம். பின்னர் தந்தையார் ஒருவிதமாக மனம்தேறி நல்வழிப்பட்டார்.

குயப்பேட்டை தீ விபத்துக்குப் பின்னர் எங்கு ஒரு குடிசைப் பிரதேசம் பற்றி எரிந்தாலும், அதனால் வீடிழந்த மக்கள் வேதனைப்படுவதைக் கண்டு, என் பழைய அனுபவம் எனது நினைவுக்கு வருவது உண்டு. தீ விபத்துக் கொடுமை என்னைத் திரும்பவும் தீண்டாத அளவுக்கு என் குடும்பம் முன்னேறிவிட்டது. ஆனால், நம் நாட்டில் இன்னமும் இலட்சாதி லட்சம் குடும்பங்கள் குடிசைப் பகுதியில்தானே இருக்கின்றன. அவர்களெல்லாம் எரியாத வீடுகள் பெறும் நாள் எந்நாளோ! அதற்கான முயற்சியைச் சென்னை நகரில் தி.மு.க. அரசு மேற்கொண்டிருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

திருமணமாகியும் சன்னியாசி!

நாங்கள் குடியிருந்த வீடு தீப்பற்றிக் கொண்டதும் என் அளவில் நன்மையாகவே முடிந்தது. தீ விபத்துக்குப் பின் பல மாதங்கள் என் குடும்பம் பலவித கொடுமைகளுக்குள்ளான தென்றாலும், அதன்பின் என் வாழ்வில் நல்ல திருப்பங்கள் ஏற்பட்டன. அடுத்தடுத்து நல்ல நிகழ்ச்சிகளே நடைபெற்றன. திரும்பவும் நான் நெசவுத் தொழிலில் ஈடுபட்டேன். இம்முறை நல்ல வருவாய் வந்தது. என் தந்தையாரும் தன் குடும்பத்திற்கு ஏற்பட்ட இன்னல்களால் மனந்திருந்தி, தனக்குக் கிடைக்கும் வருவாயைத் தம் மனைவியிடம் ஒழுங்காகக் கொடுக்கலானார். கல்வீட்டில் குடிபுகுந்து ஒன்றரையாண்டுக் காலம் ஓரளவு மன நிறைவோடு வாழ்ந்தோம். இந்த நிலையிலே எனக்குத் திருமணம் நடத்தி வைக்க என் அன்னையார் விரும்பினார். தன் மூத்த அண்ணன் திரு.எம்.ஆர். கங்காதரம் பிள்ளை (எப்.ஏ.) அவர்களுடைய மகள் **திலோத்தமை** என்ற பெண்ணை எனக்கு மணம் செய்து வைத்தார்.

எம்.ஆர். கங்காதரம் பிள்ளை, பெரும் பணக்காரர் வீட்டு மாப்பிள்ளையானார். என்றாலும், மாமியார் வீட்டுக்கு அடிமைப்பட்டிருக்க விரும்பாததால், தம்முடைய மனைவி மக்களுடன் தனது வருவாயைக் கொண்டே தனி வாழ்க்கை நடத்தினார். அவருடைய வாழ்க்கை சுமாராகத்தான் இருந்தது. எனது திருமணமும் 'ஓகோ' என்றில்லாமல், எளிய முறையில் நடந்து முடிந்தது.

என் மனைவி பூப்படைந்த சில மாதங்களுக்குள்ளேயே எங்களுக்குத் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்து ஆறு மாதம் கழித்து சாந்தி முகூர்த்தம் நடைபெற்று, நாங்கள் கணவ னும் மனைவியுமாக வாழ்க்கை நடத்தத் தொடங்கினோம். அவள் என் வீட்டுக்கு வாழ வந்து.... காமர் மனைவி எனக் கைகலந்து நாங்கள் வாழத் தொடங்கிய ஐந்தாம் நாள்

எதிர்பாராத விதமாக இருதய நோயால் அவளது வாழ்க்கை முடிந்துவிட்டது. எனது வாழ்க்கையிலே இது ஒரு பயங்கரமான விபத்து.

அன்னை பாடிய ஒப்பாரி!

என் அன்னையார் ஒப்பாரி பாடுவதிலே ஒப்புயர்வற்று விளங்கினார். பாடல்களைச் சொந்தமாகப் புனைந்து பாடும் திறமை பெற்றிருந்தார். எங்கள் சாதிப் பெண்களிலே பலர் அவரிடம் ஒப்பாரிப் பாடல்கள் பயின்றார்கள். இழவு இல்லங்க ளிலே அவர் பாடி அழத் தொடங்கிவிட்டால், அங்குள்ள மற்ற பெண்கள் எல்லாம் தாங்கள் அழுவதை நிறுத்தி என் அன்னை யாரின் பாடல்களைக் கூர்ந்து கேட்டு அனுபவிப்பார்கள்.

ஒப்பாரியில் திறமை பெற்ற என் அன்னையார் திடீரெனத் தன் மருகி மறைந்தபோது தன் புலமைத் திறமை முழுவதையும் வெளிப்படுத்திப் புலம்பி அழுதார். அவர் பாடிய பாடல்களிலே எனக்கு நினைவிலுள்ள சில வரிகளை இங்கு எடுத்துக்காட்டு கிறேன்.

பூவை மடியில் வைத்து — உனக்குப்
புண்ணியனைத் தேடி வைத்தேன்!
பூவை உதறிவிட்டாய்
புண்ணியனைக் கையை விட்டாய்!

மஞ்சள் மடியில் வைத்து — உனக்கு
மன்னவனைத் தேடி வைத்தேன் - நீ
மஞ்சள் உதறி விட்டாய்
மன்னவனைக் கையைவிட்டாய்!

கூறைசால் கொண்டுவந்த — அந்தக்
குயவனும் கண்குருடா?
சேலை நெசவுசெய்த — அந்தச்
சேணியனும் கண்குருடா?

பஞ்சாங்கம் பார்த்துச் சொன்ன — அந்தப்
பார்ப்பானும் கண்குருடா?

பந்தக்கால் நட்ட இடம் — அங்கே
பள்ளம் மறையலையே!

முகூர்த்தக்கால் நட்ட இடம் — அங்கே
மேடு உயரலையே!

என்றெல்லாம் என் அன்னையார் பாடிய குரல் இன்னமும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. குயப்பேட்டையில் நாங்கள் குடியிருந்த வீடு பற்றி எரிந்த இரண்டாண்டுகளுக்குள் இந்த விபத்து ஏற்பட்டது. முதல் விபத்தில் மனையை இழந்தேன். அடுத்த விபத்தில் தம்பியை இழந்தேன். மூன்றாவது விபத்தில் மனைவியை இழந்தேன். அடுத்தடுத்து வந்த இந்த விபத்துக்களால் மனமுடைந்தவனாகி, திரும்பவும் திருமணம் செய்து கொள்வதில்லை என்ற விரதத்தை மேற்கொண்டேன்.

திருமணத்திற்குப் பின்னர் நாங்கள் மயிலைக் குயப்பேட்டையிலிருந்து பழைய வண்ணாரப்பேட்டையில் குடியேறினோம். இங்கிருந்தபோதுதான் மனைவியை இழந்தேன். திருமணச் செலவுகளுக்காகக் கடன்பட்டேன். இதனால், திருமணமாகியும் புது மாப்பிள்ளைக்குரிய மகிழ்ச்சி என் மனத்துள் ஏற்படவில்லை. மாறாக, சதா கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்.

வேலை இல்லாத நிலையில் ஒருவர் கலியாணஞ் செய்து கொள்வது அல்லது செய்து வைப்பது பெருந்தவறு என்றே கருதுகின்றேன். 'உத்யோகம் புருஷ லட்சணம்' என்றொரு பழமொழி உண்டு. இதனை, பொன்போல் போற்ற வேண்டும். செல்வந்தர் வீட்டுப் பிள்ளையானாலும், வருவாய்க்குரிய தொழில் இல்லாத நிலையில் அவருக்குத் திருமணம் செய்து வைத்தல் கூடாது! முழுக்க முழுக்கக் கடன்பட்டுத் திருமணம் செய்து கொள்வதும் பெரும் பிழையாகும். என் விஷயத்தில் இந்த இரண்டு தவறுமே நடந்துவிட்டன. ஆம்; வருவாய்க்குரிய வேலையில்லாத நிலையில் பெரும் வட்டிக்குக் கடன் வாங்கிக் கலியாணம் செய்து வைத்தனர் பெற்றோர். ஏற்கனவே நான் பரம தரித்திரன்! இவற்றால், கலியாணமாகியும் பட்டினிதான்!

ஒரு கண் இழந்தேன்!

மனைவி இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு என் இடது கண்ணிலுள்ள கருப்பு விழியில் பூ விழுந்து, பார்வை போய்விட்டது. வலது கண்ணால் மட்டுந்தான் பார்க்க முடிந்தது. எழும்பூர் கண் நோய் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தேன். கண் டாக்டர் வலது கண்ணும் பாதிக்கப்படலாம் என்று பயமுறுத்தி விட்டார்! அப்புறம் கவலைக்குக் கேட்கவா வேண்டும்?

கலியாணமாகி ஆறு மாதத்திற்குள் எனது வாழ்க்கை இவ்வளவு மோசமாகி விடுமென்று கலியாணத்திற்கு முன் நான் கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை. இரு கண்களும் பார்வை இழந்துவிட்டால், நம் எதிர்காலம் என்னாவது? என்று எண்ணி எண்ணி ஏங்கினேன்.

இந்த ஏக்கத்துடன் ஒருநாள் கவலையோடு நான் எழும்பூர் கண் நோய் மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றுக் கொண்டு வீடு திரும்பியபோதுதான் என் மனைவி மாண்டிருக்கக் கண்டேன். ஆம்; காலை 7 மணிக்கு எனக்கு நீராகாரம் தந்து, தன் கையிலிருந்த இரண்டணாவை வழிச் செலவுக்காக என்னிடம் கொடுத்து, என்னை வழியனுப்பி வைத்தவள் மூன்று மணி நேரம் கழித்து காலை 10 மணிக்குள் நான் வீடு திரும்பியபோது பிணமாகக் கிடந்தாள். அவளது பிணத்தைப் பார்த்தபோது என் மனம் அடைந்த வேதனையை வருணிக்க நான் கற்றுள்ள தமிழ் போதாது!

என் மனைவி மாண்ட நாளன்று — நான்காவது நாளாக — கண் நோய்க்குச் சிகிச்சை பெற்றேன். மனைவியை இழந்ததால் ஏற்பட்ட மன அதிர்ச்சியால் அதற்குமேல் நான் தொடர்ந்து சிகிச்சை பெறவில்லை. நான் பெற்ற சிகிச்சை கண்ணில் விழுந்த பூ மறைவதற்குப் போதுமானதல்ல. அப்படியிருந்தும், மனைவி மறைந்து ஒரு வாரத்திற்குள் கண் குணமாகி, எப்போதும்போல் பார்வையைப் பெற்றேன். அதனை இன்று நினைத்தாலும் எனக்கு வியப்பாக இருக்கிறது. வலது கண்ணை மூடிக் கொண்டால், இடது கண்ணால் எதையும் பார்க்க முடியாத அளவு

சுமார் இரண்டு வார காலம் ஒற்றைக் கண்ணனாக இருந்தேன். இந்த நிலையிலிருந்து என்னை மீட்டது யான் பெற்ற அரைகுறை யான சிகிச்சையா? வேறு ஏதேனும் ஒரு சக்தியா? என்று ஆராய்ந்தனர் என் பெற்றோரும், உற்றார் உறவினரும். என் மனைவிக்கும் எனக்கும் ராசிப் பொருத்தமில்லாமல் திருமணம் நடந்ததாகவும், அவள் மாண்டதனால் தான் என் கண்ணில் விழுந்த பூ மாயமாக மறைந்துவிட்டதென்றும், அவள் வாழ்ந்தி ருந்தால் நான் இரண்டு கண்களையுமே இழக்க நேர்ந்திருக்கு மென்றும், அவளுடைய மரணத்துக்கும் இந்த ராசிப் பொருத்த மற்ற நிலையே காரணமென்றும் என் குடும்பத்தார் கருதினர். இதனை ஒரு மூடநம்பிக்கையாகவே நான் எண்ணுகின்றேன். என்றாலும் என் கண்ணில் விழுந்த பூ திடீரென்று மறைந்தது என்னால் புரிந்துகொள்ள முடியாத புதிர்தான்!

என் மனைவியை இழந்த பின்னர் விடுதலைப் போரில் நான் தீவிரமாக ஈடுபட்டேன். இதற்கு ஒத்திகை போன்று 1928-இல் நாடு முழுவதிலும் நடைபெற்ற சைமன் பகிஷ்காரத் தில் ஈடுபட்டேன்.

சைமன் கமிஷன் பகிஷ்காரம்

இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்குவதுபற்றி ஆராய்வதற் கென்று பிரிட்டிஷ் பேரரசு லார்ட் சைமன் என்பவர் தலைமை யில் கமிஷன் ஒன்றை அமைத்து, அதனை இந்தியாவுக்கு அனுப்பியது. அந்தக் கமிஷனில் இந்தியர் ஒருவர்கூட இடம் பெறாததால், அது இந்தியாவில் வந்திறங்கும் நாளை பகிஷ்கார தினமாகக் கொண்டாடுவதென்று காங்கிரஸ் மகாசபை முடிவெடுத்தது.

1928 பிப்ரவரி 3-ஆம் நாள் சைமன் கமிஷன் பம்பாய்த் துறைமுகத்தில் கப்பலிலிருந்து இறங்கியது. அன்று நாடு முழுவ திலும், கடை அடைப்பும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் கண்டனப் பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன. காங்கிரஸ் மகாசபையின் முன்னணித் தலைவர்களில் ஒருவரும், ''பாஞ்சாலச் சிங்கம்'' எனச் சிறப்புப் பெயர் பெற்றவருமான

லாலா லஜபதி ராய், லாகூரிலே சட்டவிரோதமான ஊர்வலத்திற் குத் தலைமை தாங்கிச் சென்றபோது, சாண்டர்ஸ் என்ற ஒரு போலீஸ் அதிகாரியால் கடுமையாகத் தாக்கப்பட்டார். அத னால், படுகாயமுற்று, சில நாட்களுக்குப் பிறகு அவர் காலமா னார்.

சைமன் கமிஷன் பகிஷ்கார நாளிலே சென்னை நகரிலும் ஆர்ப்பாட்டங்களும் அமளிகளும் நிகழ்ந்தன. இங்குமங்குமாக கல்லெறி சம்பவங்கள் நிகழ்ந்ததால் போலீஸ் துப்பாக்கிச் சூடும் நடைபெற்றது. ஒரு இளைஞர் பலியானார்.

வெள்ளையர் கடைமீது கல்லெறிந்தேன்!

அந்த நாளிலே நானும் என்னுடைய அச்சகத் தொழில் சகாக்களாக இருந்த வேறு சிலரும் புரசைவாக்கத்திலே ஆர்ப் பாட்டக்காரர்களுடன் சேர்ந்து கொண்டோம். ராக்ஸி திரைப் படத் தியேட்டர் அருகில் 'பல்டானா' என்னும் பெயரில் ரொட்டிக் கடை ஒன்று இருந்தது. இப்போது அதன் பெயர் மாறிவிட்டது. ஆங்கிலேயர் ஒருவரால் அது நடத்தப்பட்டதால், அருத்தாலை ஒட்டி அந்தக்கடை மூடப்படவில்லை. ஆவேசங் கொண்ட இளைஞர் கூட்டமொன்று அந்தக் கடைமீது சரமாரியா கக் கற்களை வீசி, அதனை மூடும்படி வற்புறுத்தியது. அந்தக் கூட்டத்திலே நானும் கலந்திருந்தேனாதலால், கடை மீது கல்லெ றியும் 'கடமை'யைச் செய்தேன். அப்போது 'அகிம்சை' பற்றி எனக்கு அதிகமாக எதுவும் தெரியாது. எனது செயலிலுள்ள வெறித்தனம் இளம் பருவம் காரணமாக எனக்கு அப்போது விளங்கவில்லை.

இந்த நிகழ்ச்சி காரணமாக என்னையும் வேறு சிலரையும் கைது செய்து வேப்பேரி காவல் நிலையத்தில் அடைத்தனர் போலீசார். எனது அரசியல் போராட்டம் இதிலிருந்துதான் ஆரம்பமாகிறது. ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைக் கொடுமைக்கு- நான் இரையான முதல் நாள் அது. அன்று நள்ளிரவிலே நான் விடுவிக்கப்பட்டேன்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, சென்னை நகரிலே காங்கிரசின் பெயரால் நடைபெறும் ஊர்வலங்களிலேயும், பொதுக் கூட்டங்

களிலேயும், கலந்து கொள்வதைக் கடமையாகக் கொண்டிருந் தேன். அந்தக் காலத்தில் நாவலர் சத்தியமூர்த்தி அய்யருடைய தமிழ்ச் சொற்பொழிவு என்னை மிகவும் கவர்ந்தது. அவரைப் போன்று நாவன்மை மிக்க பேச்சாளன் ஆகிவிட வேண்டுமென்ற விருப்பம் எனக்கு ஏற்பட்டது. அந்தக் காலத்திலே பொதுக்கூட் டங்களில் ஒலிபெருக்கி பயன்படுத்தப் பெறவில்லை. கூட்டத் திலே மக்கள் அதிக அளவில் திரண்டுவிட்டால், இரண்டு மூன்று கூட்டங்களாகப் பிரித்து விடப்படும். எப்போதோ ஒரு சமயத் தில்தான் இப்படி நிகழ்ந்தது.

1929 ஜனவரித் திங்களிலே ஜவகர்லால் நேரு தலைமை யில் லாகூரில் கூடிய காங்கிரஸ் மகாசபையிலே, ''பூரண சுதந்திரம்'' கோரப்பட்டது. அதனை வழங்குவதற்குப் பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஓராண்டுக்கால அவகாசம் தரப்பட்டது. அந்த அவகாசத்திற்குள் பிரிட்டிஷ் அரசு சுதந்திரம் தரத் தவறிவிட்டதால், காந்தியடிகள் ''உப்பு சத்தியாக்கிரகம்'' என் னும் பெயரிலே 1930-இல் பொதுஜனப் போராட்டம் தொடங்கி னார்.

இன்று குஜராத் மாநிலத்தின் தலைநகராக விளங்கும் ஆமதாபாத் நகரிலுள்ள சபர்மதி ஆசிரமத்திலிருந்து ''தண்டி'' என்னும் கடற்கரைப் பிரதேசத்திற்கு, தம்மால் தேர்ந்தெடுக்கப் பட்ட சத்தியாக்கிரகிகள் சிலருடன் யாத்திரை புறப்பட்டார் காந்தியடிகள். அவரைப் பின்பற்றித் தென் பாரதத்திலே அப் போது 'தென்னாட்டுக் காந்தி' என்று அழைக்கப்பெற்ற தலைவர் ராஜாஜி அவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகிகள் சிலருடன் உப்பளப் பிரதேசமாகிய வேதாரண்யத்திற்கு யாத்திரை சென்றார்.

சென்னை நகரிலே, ஆந்திரப் பெருந்தலைவரும், 'ஆந்திர கேசரி' என்ற சிறப்புப் பெயர் பெற்றவருமான திரு.டி. பிரகாசம் அவர்கள், கடற்கரையிலே உப்புக் காய்ச்சி சத்தியாக்கிரகத்தைத் தொடங்கினார். நாட்டின் பல ஊர்களிலே 144 தடை உத்தரவு மீறப்பட்டது.

தமிழர் செய்த தவறு

சென்னையில் தமிழ்நாடு காங்கிரசைச் சார்ந்த நாவலர் சத்தியமூர்த்தி போன்ற பெருந்தலைவர்கள் பலர் இருந்தும், நகர மக்கள் மத்தியிலே உப்பு சத்தியாக்கிரகப் போர் நடத்த அவர்களில் எவரும் முன்வரவில்லை. தமிழ்த் தலைவர்களின் இந்தத் தவறைப் பயன்படுத்திக் கொண்டு, ஆந்திரப் பெருந்தலைவர் திரு.டி. பிரகாசம், சென்னை நகரில் உப்பு சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட்டார். சென்னையிலுள்ள தமிழ்த் தொண்டர்கள், தங்கள் தேசபக்தி காரணமாக ஆந்திரத் தலைவரைப் பின்பற்றி உப்புப் போரில் ஈடுபட்டனர். அன்று தமிழ்நாடு காங்கிரஸ் இழைத்த இந்தப் பெருந்தவறு காரணமாகத்தான் ஆந்திர மாகாண காங்கிரஸ் சென்னையிலே முகாம் போட்டது. சென்னை ஜில்லா ஆந்திர காங்கிரஸ் கமிட்டி என்ற பெயரில் மாவட்டக் கிளை ஒன்றையும் அமைத்து, நாளடைவில் ''மதறாஸ் மனதே'' என்னும் கிளர்ச்சியையும் தொடங்கியது. இவ்வளவையும் ஆரம்ப காலத்தில் ராஜாஜி போன்ற தலைவர்கள் ஆட்சேபிக்காமல் அசட்டை செய்தனர்.

சென்னை நகரில் உப்பு காய்ச்சிய தொண்டர்களைப் போலீசார் பிரம்பால் அடித்துக் கலைத்தனர். எனக்கும் சில அடிகள் கிடைத்தன. ஆனால், நான் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய அளவில் இரத்தக் காயம் ஏற்படவில்லை; தழும்புகள்தான் ஏற்பட்டன.

உப்புச் சத்தியாக்கிரகம் ஆரம்பமான சில மாதங்களுக்குப் பின்னர், அது ''சாத்விகச் சட்டமறுப்பு'' என்னும் பெயரைப் பெற்றது. அன்னியத் துணிக்கடை மறியல், கள்ளுக்கடை மறியல், சட்ட விரோதமான ஊர்வலம் ஆகியவை போராட்ட நடவடிக்கைகளாக இருந்தன.

ஆந்திரர் நடத்திய தமிழ் நாளேடு!

சென்னை நகரிலே தொடர்ந்தாற்போல் போராட்டம் நடைபெறவில்லை என்றாலும், விட்டுவிட்டு நடைபெற்றது. சென்னை பூக்கடைப் போலீஸ் ஸ்டேஷன் அருகில் சீன பஜாரி

லுள்ள அன்னியத் துணிகள் விற்கும் சூனஸ் சேட் கடை முன்பும், அதற்குச் சற்றுத் தொலைவிலுள்ள செல்லாராம் கடை முன்பும் காங்கிரஸ் தொண்டர்கள் மறியல் நடத்துவார்கள். அவர்களில் பெரும்பாலோர் ஆந்திரம், கன்னடம் ஆகிய மாநிலங்களி லிருந்து தருவிக்கப்பட்ட தொண்டர்களாகவே இருப்பர். தமிழ் இனத்தைச் சேர்ந்த தொண்டர்கள் மிகவும் அரிதாகவே கலந்து கொண்டனர். விடுதலைப் போரின் விளைவாக சென்னை நக ரிலே ஆந்திரத் தேசபக்தர்களின் செல்வாக்கு மிகுவதற்கு இது வும் ஒரு காரணமாக அமைந்தது. தமிழர்களால் நடத்தப்படும் 'இந்து', 'சுதேசமித்திரன்', 'தமிழ்நாடு' ஆகிய நாளிதழ்கள் ஆந்திரத் தேச பக்தர்களுக்கு மிகுதியாக விளம்பரம் தந்தன. தேசபக்தி காரணமாக மட்டுமல்ல; 'தமிழர்' என்னும் இன உணர்ச்சியற்ற காரணத்தாலும்!

மற்றும், 'சுயராஜ்யா' என்னும் பெயரில் ஆந்திரரான திரு.டி. பிரகாசம் தமிழிலே நாளிதழொன்றை நடத்தினார். வியப்பென்னவென்றால், ஆந்திரத் தலைவர் நடத்திய அந்தப் பத்திரிகைக்கு ஆரம்பத்தில் பொருள் கொடுத்து உதவியது ராஜாஜியின் செல்வாக்கிலிருந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தான். ஆம்; அது கொடுத்த பத்தாயிரம் ரூபாயைக் கொண்டு தான் 'சுயராஜ்யா'வைத் தொடங்கினார் திரு. டி.பிரகாசம். அன்று தமிழ்நாடு காங்கிரஸ்காரர்களுக்குத் தமிழில் ஒரு நாளித ழைத் தாங்களே நடத்துவதற்குத் துணிவிருக்கவில்லை.

'சுயராஜ்யா' என்ற பெயரில் தமிழ் நாளிதழேயன்றி, ஆங்கில நாளிதழ் ஒன்றையும் நடத்தினார் திரு. பிரகாசம். இந்த இரு நாளிதழ்களாலும் தமிழ் மக்களிடையே மகத்தான செல் வாக்குப் பெற்றார்.

'அமிர்தாஞ்சனம்' என்னும் தலைவலி மருந்தின் உரிமை யாளரான 'தேசோத்தாரக' கே.நாகேசுவரராவ் பந்துலு அவர் கள், தெலுங்கு மொழியில் 'ஆந்திர பத்திரிகா' என்னும் நாளிதழ் ஒன்றைச் சென்னை நகரிலே நடத்தினார். இதன் வாயிலாகவும் தமிழ்நாட்டிலுள்ள ஆந்திரர் — தெலுங்கர் ஆகியோரிடையே ஆந்திர காங்கிரஸ் கமிட்டிக்கும், ஆந்திரத் தலைவர்களுக்கும்

செல்வாக்கு ஏற்பட்டது. இதை எல்லாம் இங்கு எடுத்துக்காட்டுவது இன்னொரு கட்டத்தில் நான் கூறவிருக்கும் ''மதறாஸ் மனதே'' கிளர்ச்சியை வாசகர் புரிந்துகொள்வதற்காகத்தான்.

தடியடி

உப்புச் சத்தியாக்கிரகம் சட்டமறுப்பாக மாறிய பின்னர், சென்னை சூனஸ் சேட் கடைமுன் நடந்த மறியலில் நானும் கலந்து கொண்டேன். பிரபல பத்திரிகாசிரியர் காசா சுப்பாராவ், ஓ.பி.இராமசாமி ஆகிய ஆந்திரப் பிரமுகர்கள் தலைமையிலே மறியல் நடந்த நாளில்தான் நானும் கலந்துகொண்டேன். அந்த நாள் என்னால் மறக்க இயலாததாகும்.

மறியல் செய்யும் தொண்டர்களைப் போலீசார் தடியாலடிப்பது வழக்கமாக இருந்தது. ஆனால், அன்று அடித்து நொறுக்கினாற்போல், அதற்கு முன்பு நிகழ்ந்ததில்லை. மறியலுக்குத் தலைமை தாங்கிய ஆந்திரப் பிரமுகர்கள் தடியடிக்குப் பின்னர் அலங்கோல நிலையில் இரத்தம் பெருக்கெடுத்தோட வீதியில் விழுந்து கிடந்தனர். அன்றைய மறியலிலே நானும், வேறு இரு தமிழ்த் தொண்டர்களும் கலந்து கொண்டோம். ஆந்திரப் பிரமுகர்கள் மறியல் செய்வதற்குச் சில நிமிடங்களுக்கு முன்பு, நாங்கள் மறியலில் ஈடுபட்டோம். எங்களையும் அடித்து வீழ்த்தினர் போலீசார்.

பின்னாளில் சென்னை மாநில மேலவைத் தலைவர் பதவி வகித்த டாக்டர் யு.ராமராவ், சீன பஜாரிலுள்ள ஜோன்ஸ் தெருவிலே, மறியலில் அடிபடும் தேசபக்தர்களுக்குச் சிகிச்சை தருவதற்கென்று ''காங்கிரஸ் மருத்துவமனை'' ஒன்றை அரசின் அனுமதியோடு நடத்தினார். எனது தோள் பட்டையிலும், இடது தொடையிலும் பலமான இரத்த காயம். ஆயினும், காங்கிரஸ் மருத்துவமனையில் முதல் உதவிபெற்ற பின்னர் நான் பழைய வண்ணாரப்பேட்டையிலிருந்த எனது வீட்டிற்குச் சென்றுவிட்டேன். மற்றவர்கள் பலமான காயமடைந்தனராதலால், காங்கிரஸ் மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெற்றார்கள்.

தோளிலும் தொடையிலும் பலமான கட்டுகளுடன் வீடு திரும்பிய என்னைப் பார்த்து என் பெற்றோர் விம்மி அழுதனர். இயற்கையிலேயே இராவணேசுவரனுக்குரிய தோற்றத்தையும், துணிவையும் பெற்றிருந்த என் தந்தையார், என்னைக் கண்டதும் ஆத்திரமடைந்தார். போலீசாரிடம் நான் அடிபடுவதை அவர் கண்ணால் கண்டிருந்தால் தன் உயிரைத் துச்சமென மதித்து பிள்ளைப் பாசத்தால் போலீசாரைத் துன்புறுத்தவும் அவர் துணிந்திருப்பார். அவருடைய நெஞ்சுரம் வருணனைக்கு அப்பாற்பட்டதாகும். இந்தச் சம்பவத்தின் போதுதான் முதன் முதலாக அடியின் சுவையை நான் அனுபவித்தேன். ஆம்; நான் பெற்றோரால் அடித்து வளர்க்கப்படாத பிள்ளையல்லவா!

இந்த மறியல் நிகழ்ச்சியை ஒட்டி காங்கிரஸ் மருத்துவ மனையில் ஏற்பட்ட முதல் சந்திப்பின் விளைவாக, காசா சுப்பாராவ் அவர்களும் நானும் நண்பர்களானோம். அவர் என்னைவிட வயதில் மூத்தவர் என்றாலும், தம் வாழ்நாள் வரை என்பால் பேரன்பு காட்டி வந்தார். போர்க்களத்தில் ஏற்பட்ட தோழமையல்லவா!

சட்டமறுப்பின் ஒரு கட்டத்திலே அப்பொழுது இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த லார்டு இர்வின் என்பார் காந்தியடிகளிடம் சமரசம் பேசி உடன்படிக்கை செய்தார். அதன்படி சட்ட மறுப்புப் போராட்டம் காங்கிரஸ் மகாசபையால் நிறுத்தி வைக்கப்பட்டது. இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டுக்குத் தனது பிரதிநிதியை அனுப்பி வைக்கவும் காங்கிரஸ் இசைந்தது.

வர்க்கப் போர்!

என் முதல் மனைவி இறந்த 3 மாத காலத்திற்குள் டாக்டர் பி.வரதராசுலு நாயுடு நடத்திய ''தமிழ்நாடு'' நாளிதழ் அச்சகத்தில் அச்சு கோக்கும் தொழிலாளியாக அமர்ந்தேன்.

'தமிழ்நாடு' நாளிதழோடு இதற்கு முன்பே எனக்குத் தொடர்பு ஏற்பட்டதுண்டு. அது மிகவும் சுவையான நிகழ்ச்சி.

'விநோதினி' மாத இதழ் அச்சகத்திலே நான் வேலை பார்த்து வந்தபோது அச்சக உரிமையாளர்களான சர்மா சகோத ரர்கள், என்னையும் இன்னும் சில அச்சு கோக்கும் தொழிலாளர் களையும் ''தமிழ்நாடு'' அச்சகத்திற்கு ஒரு நாள் அனுப்பி வைத்தனர். ஏதோ ஒரு அவசர வேலை காரணமாக அதிக ஆட்கள் தேவைப்படுவதாகவும், அதற்காக நாங்கள் அனுப்பப் படுவதாகவும் எங்களுக்குச் சொல்லப்பட்டது. நாங்களும் அதனை உண்மை என்றே நம்பி, பிராட்வே சாலையில், லோன்ஸ்குயர் பூங்காவுக்குச் சற்றுத் தொலைவில் தாம்சன் கம்பெனிக்கு அருகில் இருந்த 'தமிழ்நாடு' அச்சகத்தை அடைந் தோம். மோட்டாரில் வைத்தே எங்களை அனுப்பினார்கள். அந்த நாளில் அச்சுத் தொழிலாளர்களுக்கு மோட்டார் சவாரி கிடைப்பதென்றால் — அதுவும் முதலாளியின் காரிலேயே சவாரி செய்வதென்றால், அது அவர்களுக்கு இன்பம் தருவதா கவே இருக்கும். எங்களுக்கும் இன்பமாகவே இருந்தது. ஆனால், ''தமிழ்நாடு'' அலுவலகத்தை அடைந்ததும் நாங்கள் ஒரு அபாயத்தில் சிக்கிக் கொண்டோம். அங்குத் தொழிலாளர் கள் அவ்வளவு பேரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். அலுவலகத்துக்கு வெளியே கூடி முதலாளிக்கு எதிராகக் கோஷ மிட்டு ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தனர். இந்த நிலை யில், நாங்கள் அங்கு போய்க் காரில் இறங்கியதும் எங்களைப் பார்த்து வேலை நிறுத்தத் தொழிலாளர்கள் ஆவேசங் கொண்ட னர். ''கருங்காலிகள் ஒழிக'' என்று கோஷமிட்டனர். அவர்கள் எங்கள் காரை நெருங்க முயன்று கொண்டிருக்கையில் என்னு டன் வந்த தொழிலாளர்கள் 'தமிழ்நாடு' அலுவலகத்துக்கு உள்ளே ஓடிவிட்டனர். நான் தப்பி ஓட விரும்பாதவனாகி, வன்செயலில் ஈடுபடும் நோக்கத்துடன் என்னை நெருங்கிய தொழிலாளர்களை அணுகி விவரம் அறிய முயன்றேன். எனது போக்கு அவர்கள் சினத்தைத் தணித்தது. தாங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகவும், நாங்கள் கருங்காலித்தனத் திற்கு அழைத்து வரப்பட்டிருப்பதாகவும் என்னிடம் கூறினர். வேலை நிறுத்தத்தை முறியடிக்கும் முதலாளியின் முயற்சிக்கு வெற்றி தர நான் விரும்பவில்லை. ஆயினும், அலுவலகத்திற்கு உள்ளே போய் எனது கருத்தைக் கூறித் திரும்பிவிடுவதாக வேலை நிறுத்தத் தொழிலாளர்களிடம் கூறினேன். அவர்களும் உள்ளே செல்ல என்னை அனுமதித்தனர்.

'தமிழ்நாடு'வில் வேலை

உள்ளே சென்றதும் டாக்டர் பி.வரதராசுலு நாயுவிடம் நான் அழைத்துச் செல்லப்பட்டேன். அவர் முன்கோபி. நான் வேலை செய்ய விரும்பாததை அறிந்ததும், ''உனக்குத் துணிவிருந்தால் வேலை செய். நீ கோழையாய் இருந்தால் போய்விடு'' என்று கடுஞ்சொல் புகன்றார். ஏற்கனவே அவரது போக்கில் வெறுப் புற்றிருந்த நான் மேலும் வெறுப்படைந்தவனாகி, ''எனக்குத் துணிவிருக்கிறது; அதற்குப் பஞ்சமில்லை. ஆனால், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளத் தோழர்களுக்குத் துரோ கம் செய்ய நான் விரும்பவில்லை'' என்று கொஞ்சம் கோபமா கவே கூறிவிட்டு வெளியே வந்துவிட்டேன். என்னுடன் அனுப் பப்பட்ட தொழிலாளர்களும் என்னோடு திரும்பி விட்டனர். வெளியில் இருந்த தொழிலாளர்கள் என்னைத் தங்கள் தோள்க ளில் தூக்கிக் கொண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். இங்கு தான் வர்க்கப் போராட்டத்தோடு முதன் முதலாக எனக்குத் தொடர்பேற்பட்டது.

டாக்டர் பி. வரதராசுலு நாயுடு அப்போது அகில இந்தியப் புகழ்பெற்ற தேசியத் தலைவர்களில் ஒருவராக இருந்தார். அவரது விருப்பத்திற்கு எதிராக நான் நடந்து கொண்டேன். என்றாலும், அவரை அன்று முதன் முதலாக நேரில் சந்தித்து உரையாடியதிலே எனக்குப் பெருமகிழ்ச்சி ஏற்பட்டது. அவர் முதலாளியாகவும், நான் தொழிலாளியாகவும் இருந்தாலும், அவர் தேசத் தலைவர்களில் ஒருவர். நான் தேசத் தொண்டர் களில் ஒருவன். இந்தத் தலைவர் — தொண்டர் உறவு அன்றும் எங்களிடையே இருந்தது. நான் முதன் முதலில் சந்தித்து உரையாடிய பெருந்தலைவர் இவர்தான்!

இந்த அனுபவம் ஏற்பட்ட சில ஆண்டுகளுக்குப் பின்னர் 'தமிழ்நாடு' அச்சகத்தில் கம்பாசிடர் வேலையில் அமர்ந்தேன். 'தமிழ்நாடு'வின் தொடர்பு எனது வாழ்க்கையில் எனக்கு நன்மை பயக்கத்தக்க பல நல்ல மாறுதல்கள் ஏற்படக் காரண மாக அமைந்தது என்பதனை மிகுந்த நன்றியறிதலோடு நினை வில் வைத்திருக்கிறேன்.

கள்ளுக் கடை மறியல்

காந்தி — இர்வின் ஒப்பந்தம் நடைமுறையிலிருந்த மாதங்களில் விடுதலைப் போர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்தக் காலம் முழுவதிலும் காங்கிரஸ்காரர்களை ஆக்க வேலை களில் ஈடுபடச் செய்தார் காந்தியடிகள். ஒப்பந்தத்திலே மது விற்பனை செய்யும் கடைகள் முன்னே மறியல் செய்வதற்கு உரிமை தரப்பட்டிருந்தது. கள்ளு, சாராயம், விஸ்கி, ஒயின், கஞ்சா, அபின் முதலிய போதைப் பொருள்கள் விற்பனை செய்யுமிடங்களிலே மறியல் நடத்தப்பட்டது — குறிப்பாக, கள்ளுக் கடைகள் முன்புதான் மறியல் மும்முரமாயிருந்தது.

கள்ளுக்கடை மறியல் எனக்கு ஒரு பயங்கர சோதனையாக அமைந்தது. ஆம்; மற்ற காங்கிரஸ்காரர்களுக்கு இல்லாத ஒரு சங்கடம் எனக்கிருந்தது. காரணம், கள் இறக்கும் தொழிலிலும், கள் விற்கும் வாணிபத்திலும் ஈடுபட்டிருந்த கிராமணி சாதியைச் சார்ந்தவனாக நான் இருந்ததுதான்.

நான் காங்கிரசில் புகுந்த ஆரம்ப ஆண்டுகளிலேயே தேச பக்த வெறி பிடித்தவனாகி விட்டேன். தொழிலாளியானதால், உண்மை உணர்ச்சியோடு காங்கிரஸ் பணிகளிலே இரண்டறக் கலந்து விட்டேன். காங்கிரசை விரோதிப்பவர்களை எனது சொந்த விரோதிகளாகக் கருதுமளவுக்கு எனக்கு காங்கிரஸ் வெறி பிடித்திருந்தது. காந்தியடிகளை யாரேனும் குறை கூறிவிட் டால், அதைக் கேட்டு என் மனம் பதட்டமுறும். நான் 1954-இல் காங்கிரசிலிருந்து வெளியேறும்வரை அந்தக் கட்சிக்கு விசுவாச முள்ள ஊழியனாக இருந்தேன். என் மனமறிந்து நான் காங்கிர சுக்கோ, தனிப்பட்ட எந்த காங்கிரஸ்காரருக்கோ வஞ்சனை புரிந்ததில்லை. வஞ்சனை புரிய நினைத்ததுகூட இல்லை.

இப்படிப்பட்ட வெறிபிடித்த காங்கிரஸ்காரனாக இருந்த நான் சாதி நலன் காரணமாகக் கள்ளுக்கடை மறியலில் ஈடுபடா

மல் ஒதுங்கி விடுவது சாத்தியமாக இல்லை. என் தந்தையார் கள்ளிறக்கும் தொழில் புரிந்தும், என் தம்பி கள்ளுக்கடையில் தொழில் புரிந்தும் வருவாய் தேடி வந்தனர். நான் 'தமிழ்நாடு' நாளிதழ் அச்சகத்தில் தொழில் புரிந்தேன். என் தந்தையும், தம்பியும் மதுத் தொழிலோடு தொடர்பு கொண்டிருக்கும் நிலையிலே நான் மதுக்கடை மறியலில் ஈடுபடுவது கேலிக்குரியது என்று கருதினேன். ஆனால், தந்தையையும் தம்பியையும் அவர்கள் ஈடுபட்டுள்ள தொழிலிலிருந்து வெளியேற்றுவது என்பது நினைத்துக்கூடப் பார்க்க இயலாததாக இருந்தது. என் மாதச் சம்பளமோ ரூபாய் பதினான்கு. தந்தையும் தம்பியும்தான் அதிக வருவாயைப் பெற்றுக் குடும்பம் பட்டினியில்லாமல் வாழ்வதற்கு வழி செய்து வந்தனர். என் பெற்றோர் மீது எனக்குப் புத்தி தெரிந்த காலந்தொட்டு நான் எல்லையற்ற செல்வாக்குப் பெற்றிருந்தேன். நான் சொல்லும் எதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாயிருந்தனர். அதனால் நான் விரும்பினால் என் தந்தையையும் தம்பியையும் மதுத் தொழிலிலிருந்து மீட்டுவிட முடியும். ஆனால், குடும்ப நலனைக் கருதி நான் அப்படிச் செய்ய முதலில் விரும்பவில்லை.

மறியல் குழுச் செயலாளன்

1931-ஆம் ஆண்டிலே, ஏதோ ஒரு நாளில் — தேதி சரியாக நினைவில்லை — சென்னை நகரம் முழுவதிலும் கள்ளுக்கடைகள் முன்னே மறியல் ஆரம்பமானது. சென்னை நகரின் பல பகுதிகளில் மதுவிலக்குக் கமிட்டிகள் அமைக்கப் பட்டு, அவற்றின் பொறுப்பில் மறியல் ஆரம்பமானது. சென்னை மாவட்டம் முழுவதற்கும் ஒரு மதுவிலக்குக் கமிட்டி அமைக்கப்பட்டது. நாவலர் எஸ்.சத்தியமூர்த்தி ஐயரவர்கள் அதன் தலைவராக இருந்தார். வடசென்னை மதுவிலக்குக் கமிட்டியின் தலைவராக சர்தார் பு.ம. ஆதிகேசவலு நாயகர் இருந்தார். நானும் இன்னொரு நண்பரும் செயலாளர்களாகப் பொறுப்பேற்றோம்.

மறியல் ஆரம்பமான நாட்களிலே, அதைப் பார்ப்பதற்குக் கள்ளுக்கடைகள் முன்பு மக்கள் ஏராளமாகக் கூடினார்கள்.

மிகுந்த பரபரப்பான சூழ்நிலை இருந்தது. அமைதியை நிலை நாட்ட ஒவ்வொரு கடையின் முன்பும் போலீசார் நிறுத்தப்பட்ட னர். மறியல் செய்யும் காங்கிரஸ் தொண்டர்களை மக்கள் பாராட்டினர். இதனால், கள் வாணிபம் பெரிதும் பாதிக்கப்பட் டது. தென்னையிலிருந்து இறக்கப்படும் கள், இறக்கப்பட்ட அன்றே விற்றாக வேண்டும். இல்லையேல், காடியாகப் புளித் துக் கெட்டுப் போய்விடும். அதனால், ஒரு நாள் இறக்கிய கள்ளை மறுநாளைக்கு விற்பது சாத்தியமில்லை.

கள்ளுக்கடை மறியல் நடைபெற்ற நாட்களிலே பெரும்பா லான குடிகாரர்கள் மனமாற்றம் அடைந்தனர். கதராடை அணிந்து, தலையில் காந்தி குல்லாய் தரித்து, கள்ளுக்கடை வாயிலில் நிற்கும் தொண்டர்கள், குடிகாரர்கள் கடைக்குள்ளே புக முயலுங்கால், 'குடிக்க வேண்டாம்' என்று கைகுவித்துக் கும்பிட்டு அவர்களை வேண்டிக் கொள்வார்கள். இந்த முறை யில் மறியல் செய்யத்தான் காந்தி — இர்வின் ஒப்பந்தம் அனுமதித்திருந்தது. ஒரு கடை முன்பு ஏககாலத்தில் ஐந்து தொண்டர்களுக்கு மேல் மறியலில் ஈடுபடக் கூடாது. கள்ளுக் கடைசியின் நுழைவாயிலுக்கு ஐந்தடி தூரத்தில் நின்றுதான் மறியல் செய்ய வேண்டும். இப்படி எத்தனையோ நிபந்தனை களுக்கு உட்பட்டுத்தான் மறியல் செய்ய வேண்டியிருந்தது.

நான் வடசென்னை மறியல் கமிட்டியின் செயலாளனாக இருந்து கொண்டு, நேராக மறியலிலும் ஈடுபட்டேன். என் பெற்றோர் என்னைத் தடுக்கவில்லை. மாறாக, பெருமைக்குரிய ஒரு புனிதப் பணியில் நான் ஈடுபடுகிறேனென்ற உண்மையை உணர்ந்து என்னை உற்சாகப்படுத்தினர். ஆயினும், என் சாதி யார் என்னை வெறுத்தனர். தங்கள் விரோதியாகவே கருதினர். என் குடும்பம் குடியிருந்த வீட்டில் கிராமணி சாதியைச் சார்ந்த வேறு சில குடும்பங்களும் குடியிருந்தன. அக்கம் பக்கத்திலும் கள்ளிறக்கும் தொழிலாளர்கள் குடும்பங்கள் நிறைய இருந்தன. ஆம்; என் குடும்பச் சூழ்நிலைக்கு முற்றிலும் விரோதமான ஒரு பணியில் நான் ஈடுபட்டேன்.

பகிஷ்காரத் தொல்லை

மறியல் மும்முரமாக இருந்த ஒரு கட்டத்தில் மதுத் தொழிலையே குலத் தொழிலாகக் கொண்டிருந்த கிராமணி சமூகம் முழுவதுமே அழிந்துவிடக் கூடுமோ என்ற அபாய நிலை ஏற்பட்டது. கள் விற்பனை பெரிதும் பாதிக்கப்பட்டதால், கள்ளுக்கடைக்காரர்கள் பெருத்த நஷ்டம் அடைந்தனர். அது காரணமாகக் கள்ளிறக்கும் தொழிலாளர்களுக்குக் கள் வணிகர் சிலர் சரிவர சம்பளம் கொடுக்காமல், அவர்கள் குடும்பங்களைத் தவிக்கவிட்டனர். என் சாதியினருக்கு மதுத் தொழில் குலத் தொழிலாகி விட்டதால், வேறு போக்கிடமின்றிச் சாதியினர் அனைவருமே கதிகலங்கலாயினர். கள்ளுக்கடை மறியல் அவ்வளவு வெற்றிகரமாக நடந்தது. எனக்கென்னவோ பூரிப்புதான்! ஆனால், என் சாதியினர் என்னை வெறுக்கும் நிலை கண்டு நான் பயந்தேன். எனக்கு எந்த நேரத்தில் யார் தீங்கு செய்யக் கூடுமோ என்ற அச்சமும் இருந்தது. ஒரு கட்டத்தில் என் பெற்றோர் எனது பாதுகாப்பைக் கருதி மறியலிலிருந்தே ஒதுங்கிவிடுமாறு என்னை வற்புறுத்தினர். எனக்கிருந்த தேசபக்த வெறியிலே, என் பெற்றோரின் வேண்டுதலைப் புறக்கணித்தேன்.

தினமும் காலை 5.30 மணிக்குக் கள்ளுக்கடைகள் முன்பு மறியல் ஆரம்பமாகி, இரவு 8.30 மணிக்கு முடியும். நான் அச்சகத்தில் தொழில் புரிந்ததால், மாலை 5 மணிக்குள் எனக்கு வருவாய் தரும் தொழிலை முடித்துக் கொண்டு, அரைமணி நேரத்திற்குள் வருவாய் ஏதுமில்லாத் தொண்டான மறியலில் ஈடுபடுவேன். இப்படி, சுமார் இரண்டு மாதகாலம் தொழிலுக்கும் தொண்டுக்குமாக ஊசலாடிக் கொண்டிருந்தேன். இதனால், எனது உடல் நலன் பாதித்தது. நாளாக ஆக என் சாதியினரின் வெறுப்பு எனக்கு எதிராக வேலை செய்யத் தொடங்கியது. என் குடும்பத்தைப் பகிஷ்காரம் செய்யவும் முற்பட்டனர். என் குடும்பம் குடியிருந்த வீட்டுக்குச் சொந்தக்காரர் என் சாதியைச் சேர்ந்தவர். என்னிடம் மிகுந்த அன்புடையவர். அந்த அன்பு காரணமாக, என்னைப் பின்பற்றித் தேசபக்தராகவும் மாறினார். அவர்கூட நான் கள்ளுக்கடை மறியலில் ஈடுபடுவதை விரும்ப

வில்லை. அதனை, குலத் துரோகமாகக் கருதினார். சூழ்நிலை மோசமாகி, குடியிருந்த வீட்டிலிருந்து என் குடும்பம் வெளியேற்றப்பட்டது. குடிக்கூலிப் பணம் பாக்கியிருந்ததைக் காரணம் காட்டி, என் குடும்பத்தை வெளியேற்றினார் வீட்டுக்குச் சொந்தக்காரர். உண்மைக் காரணம் நான் 'குலத்துரோகி' என்பதுதான்.

பொறாமையாளர் தூற்றினர்

ஒருநாள் குலத்தாரில் சிலர் கூடிக் கொண்டு என் தந்தையை வம்புக்கிழுத்து, அவருடன் கைகலப்பு நடத்தினர். சமூகத்தாரின் தொல்லைகளை நானும் என் குடும்பத்தாரும் ஒருவகையில் தாங்கிக் கொண்டோம். தேச நன்மைக்காக அந்தத் தொல்லைகளை ஏற்றுக் கொள்ளுவது எங்களுக்கு ஒரு வகையில் மனத்துக்குள் மகிழ்ச்சி தருவதாகவே இருந்தது. இதே நேரத்தில், காங்கிரஸ் காரர்களிலேயும் ஒரு சாரார் எனக்குத் தொல்லை கொடுத்தனர். கிராமணி சாதியிலே பிறந்து, அந்தச் சாதியின் தொழிலையே வெறுக்கும் எனது தேசபக்தியைக் கண்டு மக்கள் என்னை மிகுதியாகப் பாராட்டினர். மறியல் நடந்த காலத்திலே மாலை நேரத்தில் வடசென்னையில் அடிக்கடி பொதுக் கூட்டங்கள் நடைபெறும். அந்தக் கூட்டங்களில் பேசும் பெருந்தலைவர்கள் என்னை மிகுதியாகப் பாராட்டுவார்கள். அதனால், பொது மக்களிடையே எனக்கு நல்ல செல்வாக்கு ஏற்பட்டது. அது பொறாத சில காங்கிரஸ்காரர்கள் என் தந்தையும், தம்பியும் மதுத் தொழிலில் ஈடுபட்டிருப்பதனை விளம்பரப்படுத்தி, என்னைக் கேலி செய்யத் தொடங்கினர். நான் பொருளுக்கு ஆசைப்பட்டு ஒருபுறம் மதுத் தொழிலை ஆதரிப்பதாகவும், புகழுக்கு ஆசைப்பட்டு இன்னொருபுறம் மதுவை வெறுப்பவன் போல் பாவனை செய்து மறியலில் ஈடுபடுவதாகவும் என்னைத் தூற்றித் திரிந்தனர். இந்த இருமுனைத் தாக்குதல்களை அந்தச் சின்னஞ் சிறு வயதில் தாங்கிக் கொள்வது எனக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது.

இதைவிடவும் இன்னொரு மோசமான நிலை என்னவென்றால், நான் மதுக்கடை மறியலில் ஈடுபட்டிருந்த காலத்திலே

என் தந்தையார் குடிப்பழக்கத்தை விடாமலிருந்ததுதான். இவற்றையெல்லாம் எடுத்துக்காட்டி என்னை ஏசி, எனக்கு மொட்டைக் கடிதங்கள் எழுதினர், எனது வளர்ச்சி கண்டு பொறாமை கொண்ட காங்கிரஸ்காரர்கள். அந்தக் காலத்தில் என் மனம் அடைந்த வேதனையை விரித்தெழுதி இதனைப் படிப்போரையும் வேதனையில் ஆழ்த்த நான் விரும்பவில்லை.

தந்தையும் தம்பியும் தொழிலை விட்டனர்!

நன்கு யோசித்த பின்பு என் தந்தையும், தம்பியையும் மதுத் தொழிலிலிருந்து மீட்டுவிட முடிவெடுத்தேன். என் அன்னையார் எனது முடிவைப் பூரணமாக வரவேற்றார். எனக்கு வந்த மொட்டைக் கடிதங்களை என் அன்னையாரிடம் காட்டி கண் கலங்கினேன். அதனால் என் புகழுக்குக் களங்கம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக என் அன்னையார் குடும்பத்தையே பட்டினியில் ஆழ்த்தத் துணிந்து தந்தையையும் தம்பியையும் மதுத் தொழிலை விட்டுவிடும்படி செய்தார். குடிப்பழக்கத்திலிருந்து என் தந்தையை மீட்கவும் நான் பெருமுயற்சி செய்தேன். ஆனால், அதிலே நான் வெற்றிபெறவில்லை.

என் தந்தையையும் தம்பியையும் குலத் தொழிலிலிருந்து மீட்டதால் பொறாமையாளர் தூற்றுதலிலிருந்து என்னளவில் நான் தப்பினேனென்றாலும், குடும்ப வாழ்க்கையிலே பயங்கரத் துன்பங்கள் என்னைச் சூழ்ந்து கொண்டன. நான் பெற்று வந்த பதினான்கு ரூபாய் சம்பளத்தைக் கொண்டுதான் குடும்பம் முழுவதும் வாழ வேண்டியிருந்தது. என் தம்பிக்கு ஏற்கனவே நெசவுத் தொழில் தெரியுமாதலால், அவரை அதிலே ஈடுபடுத்தி, குடும்ப வருவாயைப் பெருக்க முயன்றேன். அதிலே கிடைத்தது மிகவும் சொற்ப வருவாய்தான். தம்பியும் நானும் தேடிய வருவாய் குடும்பத் தேவைக்குப் போதுமானதாயிருக்கவில்லை. நான், அன்னையார், தந்தையார், தம்பி, தங்கை, எங்களுடனிருந்த பாட்டியார் ஆகிய அறுவர் வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தது. ஒரு வேளை மட்டுமே — அரை வயிறு மட்டுமே உண்டு வாழ்வதற்குத்தான் எங்கள் வருவாய் போதுமானதாக இருந்தது. வயிறார உண்டு, மாற்றார் கண்ணெதிரே

மானத்தோடு வாழ இறைவன் எங்களுக்கு வாய்ப்பளிக்க வில்லை. அந்த நாட்களிலே பல நேரங்களில் நான் தெய்வத்தை நொந்து கொள்வதுண்டு. என் சுற்றத்தார், என் மனம் நோகும்படி யாக என்னை வசை பாடுவார்கள். சுய சாதியினரால் குலத் துரோகியாக வருணிக்கப்பட்ட நிலையிலே, சுற்றத்தாரோ, குடும்பத்தையே கெடுக்கப் பிறந்தவனாக என் மீது குற்றம் சாட்டினர்.

மாமன் கடைமுன் மறியல்

என் தந்தையையும், தம்பியையும் மதுத் தொழிலைக் கைவிடும்படி செய்தது என் சுற்றத்தாருக்குப் பிடிக்கவில்லை. என்னைப் புத்தி சுவாதீனமற்றவனாக அவர்கள் நினைக்க வில்லை என்றாலும், வாழத் தெரிந்த புத்திசாலியாக அவர்கள் கருதவில்லை. இவ்வளவுக்கும் காரணம் என்னைப் பிடித்திருந்த தேச பக்த வெறிதான். அந்த வெறி வலுவாக இருந்ததால், எனக்கேற்பட்ட துன்பங்களை எல்லாம் தாங்கிக் கொண்டு தொடர்ந்து கள்ளுக்கடை மறியலில் ஈடுபட என்னால் முடிந்தது.

இப்பொழுது நான் குடியிருக்கும் கிருஷ்ணாம்பேட்டையில் தேசியப் பெண் பாடசாலை இருக்குமிடத்திலே என் தாய்மாமன் திரு.எம்.ஆர். சிவகாளத்திப் பிள்ளையவர்கள் தன் மைத்துனர்க ளுடன் சேர்ந்து சொந்தத்தில் கள்ளுக்கடை நடத்தி வந்தார். அவருடைய கள்ளுக்கடை முன்பு, அவர் கண்ணெதிரே மறியல் செய்ய வேண்டுமென்ற விருப்பம் எனக்கேற்பட்டது. நான் வடசென்னையில் வாழ்பவனென்றாலும் கிருஷ்ணாம்பேட்டை கள்ளுக்கடை முன்பு மறியல் செய்வதற்கு காங்கிரஸ் கட்சி எனக்குத் தடை எதுவும் ஏற்படுத்தவில்லை. அதனால், என் தாய் மாமன் கடைமுன் வேறு சில தோழர்களுடன் சேர்ந்து மிகுந்த உற்சாகத்துடன் மறியல் செய்தேன். என் மாமனுக்கு என்மீது அடங்காத ஆத்திரம். அவரை நான் அவமானப்படுத்தி விட்டதாகவே கருதினார். செல்வச் செருக்கு காரணமாகத் தன் சகோதரியான என் அன்னையின் உறவை முன்பே துண்டித்துக் கொண்டாராதலால், அவரது ஆத்திரம் கண்டு நான் அஞ்ச வில்லை.

என் மாமன் கடை முன்பு நான் மறியல் செய்வதை என் அன்னையார் விரும்பவில்லை. ஆம்; சகோதர பாசத்தால்! ஆகவே, அவரது கட்டளைக்கிணங்க, ஒரு நாள் மறியலோடு மாமன் கடையை மறந்தேன். வடசென்னையில் எனது மறியல் பணி தொடர்ந்தது.

வடசென்னையில் நடந்த கள்ளுக்கடை மறியலிலே நான் மறக்க முடியாத முக்கிய நிகழ்ச்சி ஒன்று உண்டு. அந்த நிகழ்ச்சி என்னை வெறுத்த சுய சாதியினரும் விரும்பும்படி செய்தது.

ஒருநாள் இராயபுரம் மாணிக்க கிராமணியார் கடை முன்பு காங்கிரஸ் தொண்டர்கள் மறியல் செய்து கொண்டிருந்தனர். அன்று மறியலில் நான் நேரடியாக ஈடுபடவில்லை. மறியல் குழு நிர்வாகி என்ற முறையில் மேற்பார்வையிடுபவனாக இருந்தேன். மறியல் தொடங்கிச் சிறிது நேரத்திற்குப்பின், மறியல் நடத்தும் கள்ளுக்கடைக்கு சற்றுத் தொலைவிலே ஒரு வீட்டில் கள் விற்பதாகத் தகவல் கிடைத்தது. அப்படிச் செய்வது சட்ட விரோதம். கள் விற்பதற்கு குறிப்பிட்ட ஒரு இடத்திற்குத் தான் அரசு லைசென்ஸ் வழங்குவது வழக்கம். லைசென்ஸ் பெறாத வேறு இடத்தில் கள் விற்கக் கூடாது. மறியல்காரரிட மிருந்து தப்பித்துக் கொள்ள கள்ளுக்கடைக்காரர்கள் சட்டத்தை மீறி வேறு இடத்தில் கள் விற்க போலீசார் உடந்தையாக இருந்தனர். மறியல் தொடங்கிய இரண்டு வார காலத்தில் இந்தச் சட்டமீறல் சென்னை நகரம் முழுவதிலுமே நடைபெற்றதென லாம். ஆனால், வியப்பென்னவென்றால், சட்ட விரோதமாகக் கள் விற்கும் இடத்திலேயும் மறியல் செய்ய போலீசார் காங்கிரஸ் தொண்டர்களை அனுமதிக்காததுதான். என்னால் இந்தக் கொடுமையைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை.

'குலத் துரோகி!'

இராயபுரம் மாணிக்க கிராமணி என்பவர் கடை முன்பு நடந்த மறியலை அவர் சட்ட விரோதமாகக் கள் விற்ற இடத்திற்கு மாற்றினேன். இதனைப் போலீஸ் அதிகாரிகள் ஆட்சேபித்தனர். அதன் விளைவாக, அவர்களுக்கும் மறியல்

கமிட்டி நிர்வாகிகளுக்குமிடையே பூசல் ஏற்பட்டு, அமைதி குலையும் போல் தோன்றியது. அந்த நிலையில், சென்னை மாவட்ட மதுவிலக்குக் குழுவின் தலைவர் நாவலர் சத்திய மூர்த்தி அவர்களுக்குத் தொலைபேசி மூலம் உடனே ஸ்தலத் திற்கு வரும்படி அவசர அழைப்பு விடுத்தேன். ஸ்தலத் தலைவ ராக விளங்கிய திரு.பு.ம. ஆதிகேசவலு நாயகருடன் நாவலர் சத்தியமூர்த்தி தகராறு நடைபெற்ற இடத்திற்கு வந்தார். அவர் சட்ட விரோதமாகக் கள் விற்றதற்குப் பொறுப்பாளியான திரு. மாணிக்க கிராமணியாரை அணுகி, அவரது செயலிலுள்ள தவறை இதமாக எடுத்துக் கூறினார். திரு. கிராமணியார், என்னைச் சுட்டிக்காட்டி, ''தகராறுகளுக்கெல்லாம் இந்தப் பேர்வழிதான் காரணம். இவரை இந்த இடத்திலிருந்து வேறு இடத்துக்கு மாற்றி விடுங்கள்'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். இன்னும் கோபத்தில் என்னவெல்லாமோ பேசி னார். கிராமணி சாதியில் பிறந்தும் வேறு சாதியினருடன் சேர்ந்துகொண்டு குலத் தொழிலை ஒழிக்கத் துணிந்துவிட்டேன் என்றும், திரு. சத்தியமூர்த்தி ஐயரிடம் கூறினார். ஐயரவர்கள் கள்ளுக்கடை கிராமணியார் கூறியதைப் பொறுமையாகக் கேட் டுவிட்டு, அவரிடம் எனக்காகப் பரிந்து பேசினார்.

இதன் பின்னர் திரு. மாணிக்க கிராமணியாருக்குத் தலைவர் சத்தியமூர்த்தி ஐயர் ஒரு ஆலோசனை கூறினார். ஆண்டுதோறும் கள்ளுக்கடைகளை ஏலத்தில் விட்டு அரசு பொருளீட்டுவது வழக்கம். அந்த ஆண்டில் ஏலத் தேதி நெருங் கிக் கொண்டிருந்தது. அதனால், கள்ளுக்கடை நடத்தும் கிராம ணிகளெல்லாம் ஒருங்குகூடி, ''கிஸ்தியைக் குறைத்தாலொழிய கள்ளுக் கடைகளை ஏலத்தில் எடுக்க மாட்டோம்'' என்று சென்னை கலெக்டரிடம் கூறவேண்டுமென்பதே ஐயர் கூறிய யோசனை. இதனால் அரசாங்கத்தின் வருவாயைக் குறைப்பது ஐயருடைய குறிக்கோள். மறியல் நடத்தியது, கள்ளுக் கடைக்கா ரர்களுக்கு கிஸ்தியைக் குறைத்துக் கொடுப்பதற்காக அல்ல வென்றாலும், ஐயரவர்கள், அப்படி ஒரு குறுக்கு யோசனை யைக் கள்ளுக் கடைக்காரர்களுக்குக் கூறினார்.

துரோகி தொண்டனானேன்!

திரு. மாணிக்க கிராமணியாருக்கு ஐயரின் யோசனை பிடித்திருந்தது. தாம் மற்ற கள்ளுக் கடைக்காரர்களையும் கலந்து பேசி அப்படியே செய்வதாக உறுதி கூறினார். நானும் கிராமணி யாரும் நடந்ததை மறந்து பரஸ்பரம் நண்பர்களாக இருக்க வேண்டுமென்றும் ஐயர் எங்களுக்கு ஆலோசனை கூறினார். அப்படியே நானும் கிராமணியாரும் அன்று முதல் நண்பர்களா னோம். நானும் அவரும் ஒருமித்து கள்ளுக் கடைக்காரர்களை அணுகினோம். அந்த ஆண்டில் நடைபெற்ற கள்ளுக் கடை ஏலத்திலே யாரும் கள்ளுக்கடைகள் எடுக்க முன் வரவில்லை. ஏலம் ஒத்திப் போடப்பட்டது. சில நாள் கழித்துத் திரும்பவும் ஏலம் நடந்தது. அன்றும் கடைகளை யாரும் ஏலத்தில் எடுக்க வில்லை. மூன்றாவது முறையாக தேதி நிச்சயிக்கப்பட்டுக் குறைந்த கிஸ்திக்குக் கடைகள் விடப்பட்டன. அதனால் கள்ளுக் கடை மறியலால் நஷ்டமடைந்த கிராமணிகளுக்கும் ஒரு வகை யில் ஈடு கிடைத்தது. இதற்கு நானும் காரணமாக இருந்தேன் என்பதனை அறிந்து, எனது சாதியினரிலே கள்ளுக்கடைக்காரர் கள் என்னைப் பாராட்டினர். 'குலத் துரோகி' குலத் தொண்டனா னேன்!

நாவலர் சத்தியமூர்த்தி அவர்கள் காங்கிரசின் சார்பில் தெரிவித்த ஆலோசனைப்படி கள்ளுக்கடை முதலாளிகளான கிராமணிகள் குறைந்த ஏலத்தில் கடைகளைக் குத்தகை எடுத் தார்கள். என்றாலும், அத்துடன் ஆறுதலடைய அவர்களால் முடியவில்லை. கள்ளுக்கடை மறியல் முற்றிலும் சட்ட விரோத மாக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோரினர். ஆனால், அவர்கள் கோரிக்கையை அரசு ஏற்கவில்லை — ஏற்கவும் அப்போதைய சென்னை மாநில அரசுக்கு அதிகாரமில்லை. காரணம், காந்தி — இர்வின் உடன்படிக்கையின்படி சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, கள்ளுக்கடைக்காரர்களுக்கு முன்பு சாத்விக முறையில் மறியல் செய்ய காங்கிரசுக்கு மத்திய அரசே உரிமையளித்திருந்ததுதான்.

அரசு இவ்விஷயத்தில் நேர்மையாக நடந்து கொள்ள வில்லை. கள்ளுக்கடைகளைக் குத்தகைக்கு விட்டு ஒருபுறம் சட்ட விரோதமாகப் பொருளீட்டியது அரசு. அந்தக் கள்ளுக் கடைகள் முன்பு மறியல் செய்து கடைக்காரர்களை நஷ்டப்படுத் தவும் காங்கிரஸ்காரர்களை அனுமதித்தது. ஆகவே, அரசின் முரண்பட்ட போக்கைக் கள் வணிகர்கள் எதிர்த்தது முற்றிலும் நியாயமே. ஆனால், இந்த நியாய உணர்வு அந்தக் காலத்தில் எனக்கு ஏற்படவில்லை. ஆம்; தேச பக்த வெறிபிடித்த காங்கி ரஸ்காரனாக இருந்தேனாதலால், அரசின் போக்கிலுள்ள முரண் பாடு என் 'மூளை'யில் படவில்லை. கள்ளுக்கடைக்காரர்கள் முயற்சி எடுத்து, 'கிராமணி சாதியினர் கூட்டம்' என்ற பெய ரிலே, தண்டையார்பேட்டை சேணியம்மன் கோவில் முன்பு ஒரு கூட்டத்தைக் கூட்டினர். கிராமணி சாதியில் பிறந்தவன் என்ற காரணத்தால் அந்தக் கூட்டத்திற்கு வருமாறு எனக்கும் அழைப்பு அனுப்பினர். கூட்டத்திலே கள் வணிகர்கள், கள்ளிறக் கும் தொழிலாளர்கள், அத்தொழிலில் சம்பந்தப்பட்ட இதரர்கள் ஆகியோர் ஆயிரக்கணக்கில் கூடினர். அவர்கள் கிராமணி சாதியினரின் வாழ்வே அழிவுக்கு வந்துவிட்டது போலக் கருதி னர். மறியலைத் தடுத்தாலன்றி, தங்களுக்கும் தங்கள் சந்ததியா ருக்கும் வாழ்வில்லை என்றும் உறுதியாக நம்பினர். ஒருவகை யில் அவர்களுடைய இந்த உணர்வு சரியானதே. தலைமுறை தலைமுறையாக ஒரு தொழிலை நடத்தி, அதனைக் குலத் தொழிலாகவே கொண்டுவிட்ட ஒரு கூட்டத்தார் திடீரென அந்தத் தொழிலை அடியோடு விட்டுவிடுவதென்பது எளிதல்ல. அவர்களாக விரும்பி விடுவார்களானால், அது வேறு விஷயம். ஆனால், அரசியல் நிர்ப்பந்தம் காரணமாக, அவர்களிடமிருந்து அந்தத் தொழிலை — வேறு நிவாரணம் ஏதும் தராமலே — முற்றிலும் பறித்து விடுவதென்பது, பரிதாபகரமான விஷயந் தான். திரும்பவும் சொல்கிறேன், அப்போது இந்த உண்மை என் மனத்தில் படவில்லை. கொக்குக்கு ஒரேமதி என்பதுபோல, காங்கிரஸ் கட்டளையை — காந்தியடிகளின் உபதேசத்தை நிறைவேற்றி வைப்பதொன்றையே எனது கடமையாகக் கருதி னேன். அதற்காக என்னையே, என் குடும்பத்தையே, என் குலத்தையே மறந்து செயலாற்றும் உணர்ச்சியுடையவனானேன்.

உயர்தரக் கல்வி பயிலாத தொழிலாளியாக இருந்தேனாதலால், இதைத் தவிர வேறுவிதமாக நான் நடந்து கொண்டிருக்க முடியாதல்லவா!

கன்னிப் பேச்சு

சேணியம்மன் கோவில் திடலில் கள்ளுக்கடை மறியலைத் தடை செய்யக் கோரி நடைபெற்ற கிராமணி சாதியினர் கூட்டத்திற்கு நானும் சென்றேன். அந்தக் காலத்தில் வடசென்னையிலிருந்து என் சாதியாரிலே கதர் அணிந்த காங்கிரஸ்வாதி நான் ஒருவன்தான். அதனால், கள்ளுக்கடை மறியலை எதிர்ப்பதற்காக நடத்தப்பட்ட கூட்டத்திலே அதற்கு எதிராக மறியலை ஆதரிப்பவன் நான் ஒருவனாகத்தான் இருந்தேன். எனது சமூகத்தினர் குறிப்பாக, கள்ளிறக்கும் தொழிலாளர்கள் நெஞ்சுத் துணிவுடையவர்கள். எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள். ஆய்ந்து பாராமல், எதிலும் அவசரப்படக் கூடியவர்கள். அதனால், கிராமணிகள் கூட்டத்தில் தன்னந்தனியனாக நின்ற எனக்கு என்ன நேருமோ என்ற அச்சம் இருந்தது. அந்தக் கூட்டத்திற்குப் போவதை நான் தவிர்த்திருக்கலாம். என் பெற்றோருக்குத் தெரிந்திருந்தால் நிச்சயமாக என்னை அனுமதித்திருக்க மாட்டார்கள். அவர்களிடம் சொல்லாமலே நான் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். கிராமணி — நாடார் சாதியினரிடையே செல்வாக்குமிக்க ஒரே தலைவராக விளங்கிய திரு. த. விசய துரைசாமி கிராமணி என்பவர் அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கள்ளுக்கடைக்காரர்களிலே சிலரும், அவர்களிடம் தொழில் புரிகிற குமாஸ்தாக்கள் சிலரும் கள்ளுக்கடை மறியலைச் சட்ட விரோதமாக்க வேண்டுமென்று மிகுந்த ஆவேசத்துடன் பேசினர். அவர்கள் அப்படிப் பேசும்வரை அந்தக் கூட்டத்தில் நான் பேசுவதாக இல்லை. பயம் காரணமாக பார்வையாளனாக இருந்துவிட்டுத் திரும்புவதென்றே திட்டமிட்டிருந்தேன். ஆனால், கூட்டத்தில் பேசியவர்களிலே சிலர் காங்கிரசையும், காந்தியடிகளையும், மறியல் தொண்டர்களையும் இழிவுபடுத்தியதால் நான் பொறுமை இழந்து உணர்ச்சி வயப்பட்டவனானேன். கூட்டத்தில் பேசுவதற்கு எனக்கும் அனுமதி தருமாறு கூட்டத் தலைவரைக் கேட்டுக் கொண்டேன்.

அவரும் தடை சொல்லாமல் அனுமதி தந்தார். ஒருகால், சாதிப் பற்று காரணமாகக் கள்ளுக்கடை மறியலைத் தடை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நானும் ஆதரிப்பேன் என்று அவர் நினைத்தாரோ என்னவோ!

நான் சுமார் அரை மணி நேரம் பேசினேன். கூட்டம் எதற்காகக் கூட்டப்பட்டதோ, அந்தப் பிரச்சினையிலே நான் புகவில்லை. புகுவது அபாயமென்பதனை நான் நன்றாக உணர்ந் திருந்தேன். அதனால் கள்ளுக்கடை முதலாளிகளான கிராமணி கள், கள்ளிறக்கும் தொழிலாளர்களான கிராமணிகளுக்கு — சுயஜாதியினருக்கு இழைக்கும் கொடுமைகளை வருணித்து, அதற்குப் பரிகாரம் காணவும், அந்தக் கூட்டம் முடிவெடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினேன். குறிப்பாக, அந்த ஆண்டு கள்ளுக் கடைகளைக் குறைந்த குத்தகைக்கு எடுத்ததால் கடைக் காரர்களுக்குக் கிடைத்த இலாபத்திலே கள்ளிறக்கும் தொழிலா ளர்களுக்கும் பங்கு தரவேண்டுமென்று பேசினேன். எனது பேச்சு கள்ளிறக்கும் தொழிலாளர்களுக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்தது. அதற்கு மாறாக, கள்ளுக்கடை குத்தகைக்காரர்களுக்குக் கோபத்தைத் தந்தது. இருந்தாலும், அவர்கள் தங்கள் கோபத்தை வெளிக்குக் காட்ட இயலாமல், என் விஷயத்தில் சகிப்புத் தன்மை காட்டினர். எப்படியோ, பிரச்சினையைத் திசை திருப்பி விட்டேன். கூட்டத்திலிருந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்க ளிலே பலர் தங்கள் கூலி உயர்வு பற்றியும் கூட்டம் முடிவு செய்ய வேண்டுமென்று கோரினர். அதனால் கூட்டத் தலைவர் கள்ளுக்கடை மறியலைத் தடை செய்யக் கோரும் தீர்மானத் தைப் பிரரேபிக்காமலே தந்திரமாகக் கூட்டத்தை முடித்துவிட் டார். இதனை எனது கன்னிப் பேச்சுக்குக் கிடைத்த மகத்தான வெற்றியாக நான் கருதினேன். மாபெரும் கூட்டமொன்றிலே நான் பேசியது இதுதான் முதன் முறை. என் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த கூட்டமும் இதுதான். இதனால், கள் ளுக் கடைக்காரர்கள் ஏற்கனவே என் மீது கொண்டிருந்த கோபம் அதிகமாகிவிட்டது.

குடிகெடுக்கும் குடிப்பழக்கம்

நான் அன்றும் இன்றும் பரிபூரண மதுவிலக்கில் மிகுந்த ஆர்வங்காட்டி வருவதற்கு என் தந்தையாரும் முக்கிய காரண மாவார். அவர், குடிபோதையிலிருக்கும் போதெல்லாம் என் அன்னையாரை அடித்துத் துன்புறுத்தியதை நான் நேரில் கண்டி ருக்கிறேன். பல நேரங்களில் என் அன்னையாருக்கு இரத்த காயங்கூட ஏற்பட்டதுண்டு. அப்போதெல்லாம் நான் வாய் விட்டு அலறி அழுதிருக்கிறேன். என் தந்தை தங்கமானவர் தான். தன் மனைவியாரிடம் மிகுந்த அன்புடையவர்தான். ஆயினும், குடிபோதையால் அறிவிழந்துவிடும் நேரங்களிலே கல்வியறிவும் கற்பு நெறியுமுடைய தன் மனைவியை உதைப் பந்தாக்குவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார். அக்கம் பக்கத் தில் குடியிருப்போரோடும் சுற்றத்தாரோடும் சண்டைக்குப் போவார். குடிபோதையில்லாத நேரங்களில், குழந்தைபோல நடந்து கொள்வார். அவர் மூலமாகத்தான் குடிப்பழக்கத்தின் கொடுமையை நான் அறிந்தேன். என் அன்னையாரைப் போன்ற தாய்மார் பலர் குடிப்பழக்கமுடைய தங்கள் கணவன்மார்களால் கொடுமைப்படுத்தப்படுவதையும் நான் பார்த்திருக்கிறேன். அத னால் இந்தக் கொடுமை மனித சமுதாயத்தை விட்டே ஒழிக்கப் பட வேண்டுமென்று உறுதிகொண்டேன். மது அடியோடு ஒழிந் தால், தாய்க்குலம் விடுதலை பெறும். கணவன் — மனைவியர் வாழ்க்கையிலே இன்பம் மலரும் என்று நம்பினேன். இந்த நம்பிக்கை காரணமாகவும் காங்கிரசும் காந்தியடிகளும் வற்புறுத் திய மதுவிலக்குக் கொள்கையை உறுதியாக ஆதரித்தேன். அதனால், எனது குடும்பத்தின் வருவாய் பாதிக்கப்படுவதையும் நான் பொருட்படுத்தவில்லை. அந்த இழப்பையும் ஏற்றுக் கொள்ளத் துணிந்தேன். சுற்றத்தார் — சுய சாதியார் வாழ்வி ழந்து வருந்துவர் என்பதறிந்தும், அதனை நான் பொருட்படுத்த வில்லை. குடிப்பழக்கமென்னும் கொடுமையிலிருந்து தமிழர் சமுதாயத்தை விடுவிக்க ஒரு சாதி அழிந்தாலும் பாதகமில்லை யென்றுகூடக் கருதினேன். பூரண மதுவிலக்கால் இந்தத் தலைமு றையில் வாழும் கிராமணி சாதியினர் தொழிலிழந்தாலும், பசி — பட்டனியால் துன்புற்றாலும், அடுத்தடுத்து வரும்

தலைமுறையினரேனும் கல்வி கற்றும், நாகரிகமான வேறு தொழில்களில் ஈடுபட்டும் முன்னேற்றமடைவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. அதனால், மதுவிலக்கை ஆதரிப்பதன் மூலம் என் சுயசாதியின் வருங்காலத் தலைமுறைகளுக்கும் நான் நன்மை செய்வதாகக் கருதினேன்.

நாடு விடுதலை பெற்று காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டு, பூரண மதுவிலக்கு நடைமுறைக்கு வரும்போது, கள் வாணிபத்திலீடு பட்டவர்களுக்கு வேறு வாணிபம் தரப்படும்; கள்ளிறக்கும் தொழிலாளர்களுக்கும் வேறு தொழில்கள் தரப்படும்; அவசர நிவாரணங்களும் வழங்கப்படும் — என்றெல்லாம் அந்நாளில் நான் நம்பினேன். இந்த நம்பிக்கை காரணமாகவும் நான் விடுதலைப் போராட்ட காலத்திலே தொடர்ந்து மதுவிலக்கை ஆதரித்து வந்தேன். ஆனால், நாடு விடுதலை பெற்று, காங்கிரஸ் ஆட்சியும் தோன்றி, பூரண மதுவிலக்கு நடைமுறைக்கு வந்தபோது நான் நம்பியது நடக்கவில்லை; இதனால் எனக்கேற்பட்ட ஏமாற்றம் பற்றி உரிய இடத்தில் விரிவாகக் கூறுகின்றேன். விடுதலைப் போராட்ட காலத்தில் நான் மதுவிலக்கை ஆதரித்தபோது, அது சம்பந்தப்பட்ட வாணிபத்திலும் தொழிலிலும் ஈடுபட்டிருந்தவர்களைக் கெடுக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்குக் கொஞ்சம்கூட இருந்ததில்லையென்பதனை மட்டும் இங்கே உறுதியாகக் கூறுகின்றேன்.

சேரி வாழ்க்கை

சேணியம்மன கோயில் கூட்டத்திற்குப் பின்னர் சாதியார் மத்தியிலே என் குடும்பம் குடியிருப்பது இயலாததாகி விட்டது. வேறு சாதியார் மத்தியிலே குடியிருக்கலாமென்றால், என் சாதியைப் பற்றிப் பிற சாதியினர் கொண்டிருந்த இழிவு மனப்பான்மை காரணமாக அவர்கள் மத்தியிலே குடியிருக்க வீடு கிடைப்பதில்லை. இப்படி அல்லல்பட்டதன் விளைவாக, ஒரு சேரியில் பாழடைந்து கிடந்த குடிசை ஒன்றைத் தேடிப் பிடித்து அதிலே என் குடும்பத்தைக் குடியேற்றினேன். அதன் பெயர் தங்கவேல் பிள்ளை சேரி என்பதாகும். உண்மையில் என் பெற்றோர் சேரியில் குடியேறச் சம்மதித்தது என்பால்

அவர்களுக்கிருந்த அன்பின் விளைவாகும். இந்தச் சேரியில் சுமார் இரண்டாண்டுக் காலம் குடியிருந்தோம். அந்தக் காலத் திலே என் உற்றார் உறவினர் யாரும் எங்களை அணுக மறுத்தனர். உண்மையில் தாழ்த்தப்பட்ட சாதியினரைப் போலவே நாங்களும் நடத்தப்பட்டோம். ஆம், எங்கள் நெருங் கிய உறவினராலேயே! ஆனால், நாங்கள் குடியிருந்த சேரியில் வாழும் தாழ்த்தப்பட்டவர்கள் எங்களை மிகுந்த மரியாதை யோடு நடத்தினர்.

தங்கவேல் பிள்ளை சேரியில் இரண்டாண்டுக் காலம் மனநிறைவோடு நானும் என் குடும்பத்தினரும் வாழ்ந்தோமென் றால், சாதிவழி உயர்வு மனப்பான்மை எங்களுக்கு இல்லாதிருந் ததே இதற்குக் காரணமாகும். தங்கவேலுப் பிள்ளை சேரியிலே நாங்கள் குடியேறவும் அங்கு மனநிறைவோடு வாழவும் திரு. விசுவலிங்கம் என்கிற வள்ளுவ சாதி நண்பர் எங்களுக்கு உதவி புரிந்தார். அவர், தமிழிலே அழுத்தமான பற்றும் ஆழமான பயிற்சியும் பெற்றிருந்தார்.

நான் எனது குடும்பத்தினருடன் சேரியில் வாழ்ந்த காலத் திலே, ஒரு அரிசனப் பெண்ணை மணந்து வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற ஆர்வமும் எனக்கு இருந்தது; ஆனால், காதல் கலையில் தேர்ச்சி பெறாத காரணத்தால், அந்த எண்ணம் ஈடேறவில்லை. அந்த நாளில் கலப்பு மணங்கள் பெருகினால், சாதி வேற்றுமைகள் ஒழிந்து விடுமென்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. அது வெறும் மாயை என்பதனைப் பிற்காலத்தில் உணர்ந்தேன். கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் கூட, சாதி உயர்வு தாழ்வு உணர்ச்சிகளிலிருந்து விடுதலை பெற வில்லை. கலப்பு மணத் தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகள் கூட சாதிகளற்ற சமுதாயத்தின் குடிமக்களாக வளர்வதில்லை. தந்தையின் சாதியைச் சார்ந்தே வளர்கின்றன.

ஒரு புரட்சியின் மூலம் சமுதாயத்தில் பொருளாதார சமத்து வமும் எல்லோருக்கும் கல்வியறிவும் ஏற்பட்டு விடுமானால், சாதிக் கொடுமைகள் மறைந்தொழியும் என்றே நான் நம்பு

கிறேன். சோசலிச சமுதாயம் அமைக்கப் படாதவரை சாதி ஒழிப்புப் பிரச்சாரம் விழலுக்கிரைத்த நீராகத்தான் முடியும்.

ஓட்டைக் குடிசையிலே...

சேரியில் நாங்கள் குடியிருந்த குடிசை படுமோசமானது. கூறை பழுதுபட்டுக் கிடந்ததால், மழை நேரத்தில் வீட்டுக்குள் இருக்க முடியாது. வீட்டினுள் தண்ணீர் நிறைந்துவிடும். குடிக் கூலியில்லாமல் கிடைத்த வீடுதானே! ஓலைக் குடிசையிலே — அதிலும் சேரியிலே குடியிருப்போர் படும் இன்னல்களை அந்நாளில் நான் அனுபவத்தில் கண்டேன். மழை பெய்யும் இரவுகளிலே சிவராத்திரி விரதம்தான். எங்களில் யாருமே உறங்க முடியாது. பகல் நேரத்தில் மழை பெய்தால் வேறு யார் வீட்டிலேனும் ஒண்டிக் கொள்வோம். இரவில் பெய்தால் என்ன செய்வது? அந்நாளில் என் தங்கை வயதுக்கு வந்திருந்தது. எனக்குக் கிடைத்த மாத வருவாய் ரூபாய் பதினான்கைக் கொண்டுதான் ஆறு பேர் வாழ்க்கை நடத்த வேண்டியிருந்த தென்பதை மீண்டும் நினைப்பூட்டுகிறேன். இவ்வளவு தொல்லைகளும் எனக்கிருந்த தேசபக்தியின் — காந்தி பக்தியின் விளைவுகளாகும்.

சட்டமறுப்புப் போர்!

காந்தி — இர்வின் ஒப்பந்தக் காலத்திலே நாடு முழுவதிலு மிருந்த காங்கிரஸ்காரர்கள் ஆக்கவழிப்பட்ட வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். அன்னியத் துணிக்கடை மறியல் காந்தி – இர்வின் ஒப்பந்தப்படி அனுமதிக்கப்படவில்லை. கள்ளுக் கடை மறியலும் இரண்டு மாதத்துக்கு மேல் நீடிக்கவில்லை. ஆகவே, தீண்டாமை விலக்கு, கதர் விற்பனை ஆகியவற்றிலே காங்கிரஸ்காரர்களை ஈடுபடுத்தியது காங்கிரஸ் மகாசபை.

பாரத மாதா வழிபாடு

பிரதி ஞாயிறுதோறும் நான் வாழ்ந்த வண்ணாரப்பேட்டை யில் உள்ள தொண்டர்களைக் கூட்டி ஊர்வலம் நடத்தினேன். காந்தியடிகள் உருவப் படமோ, பாரத மாதா எனப்படும் கற்பனைத் தெய்வத்தின் உருவப் படமோ ஊர்வலத்தில் எடுத் துச் செல்லப்படும். அந்த நாளிலே காந்தியடிகளைக் கடவுளா கவே கருதினர் சாதாரண மக்கள். பாரத மாதா என்பதாக உண்மையில் ஒரு தெய்வம் இருப்பதாகவும் அவர்கள் நம்பினர் எனலாம். அப்படியெல்லாம் மக்கள் நம்பும்படி செய்தது காங்கி ரஸ் மகாசபையின் பக்திபூர்வமான பிரச்சாரம். ஏன், நானே அப்படித்தான் நம்பினேன். காந்தியடிகளின், பாரத மாதாவின் படத்தை அலங்கரித்து ஊர்வலமாகக் கொண்டு சென்றால், வீடுதோறும் வாழும் மக்கள் தேங்காய் உடைத்து, கற்பூர ஆரத்தி செய்து வழிபடுவார்கள். அந்நாளைய தேசியம் சமயச் சார்பற்ற தாக அல்லாமல், 'இந்து தேசிய'மாகத்தான் இருந்தது.

ஞாயிற்றுக்கிழமைதோறும் காலை நேரத்திலே, கதர்த் துணி களைத் தோளில் போட்டுக் கொண்டோ, கை வண்டியில் வைத்தோ, வீதிதோறும், வீடுதோறும் சென்று விற்பனை செய் வது வழக்கமாக இருந்தது. காங்கிரசால் நடத்தப்பட்ட ஊர்வ லங்களிலும், கதர் விற்பனையிலும் தவறாமல் கலந்து

கொள்வேன். ''வண்ணை தேசிய சேவா சங்கம்'' என்பதாக ஒன்றை நிறுவி, அதன் செயலாளனாக நான் இருந்தேன். அதன் சார்பில் ஊர்வலம் நடத்துவதற்கும், கதர் விற்பதற்கும் நானே முன்னின்று ஏற்பாடு செய்தேன்.

அன்னியத் துணிக்கடை மறியல் அந்நாளில் நிறுத்தப்பட்டிருந்தும், மக்களிடம் உபயோகத்தில் உள்ள அன்னியத் துணிகளைச் சேகரித்து அவற்றைப் பொதுவிடத்தில் குவித்துத் தீயிட்டுக் கொளுத்துவோம். இதைச் செய்வதிலே எனக்குத் தனி ஆர்வம் இருந்தது.

ராஜாஜியுடன் தொடர்பு

காந்தி — இர்வின் ஒப்பந்தம் நடைமுறையிலிருந்த காலத்திலே காங்கிரஸ் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறும். அந்தக் கூட்டங்களில் பேசுவதற்காக ராஜாஜி, எஸ். சத்தியமூர்த்தி, ஆந்திர கேசரி டி.பிரகாசம், 'ஆந்திரப் பத்திரிகா' ஆசிரியரும் அமிர்தாஞ்சனம் மருந்தின் அதிபருமான திரு.கே. நாகேசுவர ராவ் போன்ற தலைவர்களை அணுகி, அவர்களை வட சென்னைப் பொதுக் கூட்டங்களுக்கு அழைப்பேன். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் தலைவர் ராஜாஜியோடும், நாவலர் சத்தியமூர்த்தியோடும் எனக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. ஆம்; இற்றைக்கு நாற்பதாண்டுகளுக்கு முன்பு!

காங்கிரஸ் பிரச்சாரக் கூட்டங்களை நடத்தினேன் என்றாலும், நான் தனிச் சொற்பொழிவாளனாகி விடவில்லை. கூட்டத்தை நடத்தும் அமைப்பின் செயலாளன் என்ற முறையில் கூட்டத் தொடக்கத்தில் தலைவர் பெயரைப் பிரரேபித்தும், இறுதியில் நன்றி தெரிவித்தும் சில வார்த்தைகள் பேசுவேன். அதற்கே கைகள் நடுங்கும். வார்த்தை குளறும். ஆம்; மக்கள் மத்தியில் — தலைவர்கள் முன்பு பேசுவதற்கு அவ்வளவு பயம். இன்றும், பெரிய கூட்டங்களில் அந்தப் பயம் ஓரளவு இருக்கத்தான் செய்கிறது. அறிவின்மையால் அவையஞ்சுவது வேறு; அடக்கம் காரணமாக அவை அஞ்சுவது வேறு. என்னிடமுள்ள அச்சம் பின் சொன்னதாகும். சென்னை நகரில் பேட்டைகளில்

நடைபெறும் கூட்டங்களிலேதான் நான் பேசுவேன். அக்கூட்டங்களில் நூற்றுக்கணக்கில்தான் மக்கள் கூடுவார்கள். அப்போது நகரத்தின் ஜனத்தொகையும் குறைவுதானே! அத்துடன், சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாதாரண மக்களிடம் அரசியல் விழிப்பு இருக்கவில்லை. படித்த நடுத்தர வர்க்கத்தினர்தான் பொதுக்கூட்டங்களுக்கு வருவார்கள். துண்டுப் பிரசுரத்தின் மூலம்தான் கூட்டத்திற்கு விளம்பரம் செய்யப்படும். அதுவும், ஆயிரத்திற்குள்தான்! சுவரொட்டிகள் போடும் வழக்கம் அப்போது ஏற்படவில்லை.

காந்தி — இர்வின் உடன்படிக்கை நடைமுறையிலிருந்த காலத்திலே இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் ஒரே பிரதிநிதியாக இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ள காந்தியடிகள் லண்டனுக்குச் சென்றார். அந்த மாநாட்டினால் ஒரு பலனும் ஏற்படாமற் போனதால், திரும்பவும் சட்டமறுப்புப் போரைத் தொடங்குவதென்ற முடிவுடன் அடிகள் கப்பலில் இந்தியா திரும்பினார்.

அடக்குமுறை!

அடிகள் இந்தியா வருவதற்கு முன்னரே ஆங்கில அரசு தன் அடக்குமுறைக் கருவிகளைக் கூராக்கிக் கொண்டு வந்தது. போலிக் காரணங்கள் கூறி, எல்லைப்புற காந்தி அப்துல் கபார் கானையும், பண்டித ஜவகர்லால் நேருவையும் கைது செய்து சிறையிலடைத்தது.

தேச மக்கள் அன்னிய அரசின் அடக்குமுறைக் கொடுங்கோன்மை கண்டு ஆத்திரமுற்றிருந்த நிலையிலேதான் கப்பல் மூலம் அடிகள் பம்பாயில் வந்திறங்கினார். அந்த நாள் தேசம் முழுவதிலும் திருநாளாகக் கொண்டாடப்பட்டது. அதிலே நானும் பங்கு கொண்டேன். களங்கமற்ற — தன்னல உள் நோக்கு எதுவுமில்லாத ஒரு தேசத் தொண்டன் எப்படி அடிகளார் தாயகம் திரும்பியதற்கு ஆனந்தப்படுவானோ, அப்படித்தான் நானும் ஆனந்தப்பட்டேன். என்னைப் பெற்று வளர்த்த தந்தையே அயல்நாடு சென்று தாயகம் திரும்பியது போன்ற

உணர்ச்சியை அடைந்து ''காந்திக்கு ஜே'' என்பதாக ஆயிரமாயிரமுறை கோஷித்தேன். மனிதனுக்கு மகிழ்ச்சி அதிகமானாலும், துக்கம் அதிகப்பட்டாலும் அவனால் உணவருந்த முடியாது. அடிகள் பம்பாயில் வந்திறங்கிய நாளன்று, நான் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தேனாதலால் உணவை மறந்தேன்; ஊன் மறந்தேன், உலகை மறந்தேன். இவை அனைத்துமே காந்தியடிகள் வடிவில் எனக்குக் காட்சியளித்தன. அன்று காந்தியடிகள் தான் எனக்குத் தாய், தந்தை, குரு, தெய்வம் — எல்லாம்! அன்றென்ன, இன்றுங்கூடத்தான்! கற்பு நெறியைக் கடைப்பிடிப்பவளுக்குக் கணவன்தான் தெய்வம். அவன் வாழுகின்றபோது மட்டுமல்ல; அவனது வாழ்வு முடிந்த பின்னரும்! அதுபோல, தலைவனைப் பின்பற்றுவதிலே நானும் கற்பு நெறியைக் கடைப்பிடித்து வருகின்றேன்.

எனக்குப் புத்தி தெரிந்து நான் தேர்ந்தெடுத்த முதல் தலைவர் காந்தியடிகள்தான். முடிவான தலைவரும் அவர் ஒருவரே. அவரது வாழ்வு முடிந்த பின்னரும் அவரையே மானசீகமாக நான் போற்றி வழிபட்டு வருகின்றேன். காந்திய நெறிகளை உறுதியாகக் கடைப்பிடிப்பதனால் எனக்கு ஏற்பட்டு வரும் இன்னல்கள் எண்ணில. ஆயினும், எனக்கு இன்னலேற்படும் போதெல்லாம் அண்ணலை நினைந்து ஆறுதலடைகின்றேன்.

காந்தியடிகள் இந்தியாவை அடைந்து ஒரு வாரம் முடிவதற்குள் அவரையும் சிறையிலடைத்தது ஆங்கில அரசு. 28.12.31-இல் அடிகள் இந்தியா வந்து சேர்ந்தார். 4.1.32 அன்று நள்ளிரவில் கைது செய்யப்பட்டார். மறுநாள் பொழுது புலர்ந்ததுமே அடிகள் கைது செய்யப்பட்ட செய்தி சென்னை நகர் முழுவதும் பரவியது. அன்று காலை வழக்கம்போல் வண்ணாரப்பேட்டையிலிருந்து நான் தொழில் புரிந்த 'தமிழ்நாடு' அச்சகமிருந்த பிராட்வே சாலையின் தென்முனைக்கு நடந்து வந்து கொண்டிருந்தபோது அடிகள் கைது செய்யப்பட்ட செய்தியைச் சுவரொட்டி மூலமாக அறிந்தேன். எனது உள்ளம் வேதனை அடைந்தது. வேலையிலே என் மனம் ஓடவில்லை. ''அடிகள் சிறைப்பட்ட பின்னர் நாம் வெளியிலி

ருப்பதா?'' என்ற உணர்வு எழுந்து எனது உள்ளத்தை வாட்டியது. நான் 'தமிழ்நாடு' செய்தி இதழ் அலுவலகத்திலே பணிபுரிந்ததால், காந்தியடிகள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து நாடு முழுவதிலும் பெருந்தலைவர்களும், பல்லாயிரக்கணக்கான தொண்டர்களும் கைது செய்யப்பட்ட செய்திகளை அன்று மாலைக்குள் உடனுக்குடன் அறிந்துகொள்ள முடிந்தது.

காங்கிரஸ் மகாசபை சட்டவிரோதமான அமைப்பென்று அறிவிக்கப்பட்டு விட்டது. சென்னையிலிருந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் அலுவலகம் உட்பட, நாட்டிலிருந்த காங்கிரஸ் அலுவலகங்கள் அனைத்தும் போலீசாரால் கைப்பற்றப்பட்டு விட்டன.

தந்தையின் கண்ணீர்!

மாலை 5 மணிக்குத் தொழில் முடிந்து வீட்டிற்குச் சென்று எண்ணெய் தேய்த்துக் குளிக்க முயன்றேன். என் தந்தையார் எனக்கு எண்ணெய் தேய்த்து விடுவது வழக்கம். அதன்படி அவர் என் தலையில் எண்ணெயைக் கொட்டிவிட்டு, தனது வலது கையை என் தலையில் வைத்தவண்ணம் சிறிது நேரம் அசைவின்றி நின்றார். அந்த நேரத்தில் அவருடைய கண்ணீர்த் துளிகள் என் மீது விழுந்தன. நான் தலையை நிமிர்த்தி அவரைப் பார்த்தேன். அவர் விம்மி அழலானார். அழுகைக்குக் காரணம் கேட்டபோது, அவர் கீழ்வருமாறு கூறினார்:

''காந்தியை ஜெயிலில் போட்டு விட்டார்களாமே! நீயும் ஜெயிலுக்குப் போகப் போகிறாயா? போனால் நாங்கள் எப்படிப் பிழைப்பது? உன்னுடைய மாதச் சம்பளம் ரூபாய் பதினான்கை நம்பித்தானே நம் குடித்தனம் நடக்கிறது. அதுவும் போய்விட்டால் நாங்கள் தெருவில்தானே நிற்க வேண்டும். அப்பா! நீ ஜெயிலுக்குப் போவதில்லை என்று எனக்குச் சத்தியம் செய்து கொடு.''

இப்படி அவர் கேட்பாரென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. என் தந்தையார் சுத்த வீரர். அப்படிப்பட்டவர் குடும்பம் பட்டனியால் வாடுமே என்பதனை நினைத்துக்

'கோழை'யாகி விட்டார். நான் சிறைக்குச் சென்றால் என் பிரிவைச் சகித்துக் கொள்ள இயலாத அளவில் என்பால் அன்புடையவர். ஆனால், அதற்காகக்கூட அவர் அழவில்லை. ஆம்; எனது பிரிவுகூட அவருக்குப் பெரிதாகப் படவில்லை. எனது வருமானத்தை இழந்து குடும்பம் வறுமையில் வாட நேரிடுமே என்பதுதான் அவரது மனத்தை வாட்டியது. நியாயந் தானே! வறுமையே! உனக்குச் சாவு வராதோ!

ஏற்கனவே என் தந்தையையும், தம்பியையும் மதுவிலக்குக் கொள்கையில் எனக்கிருந்த உறுதி காரணமாக வேலையி லிருந்து நிறுத்தி விட்டிருந்த நிலையில் எனக்கு வந்துகொண் டிருந்த சொற்ப வருவாயையும் இழந்து விடுவதை அவரால் எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்.

இந்தச் சமயத்தில் என் அன்னையார் தன் கணவருடன் மனத்தாங்கல் கொண்டு தம் மூத்த தமையனார் வீட்டிற்குச் சென்றிருந்தார். அவர் வீடு திரும்பு முன்னர் நான் சிறை புகுவதென்பது, நினைத்துப் பார்க்க முடியாத பெருந்துன்பமா கவே எனக்குப்பட்டது. ஆகவே, ''அம்மா வீடு திரும்பும்வரை நானாகச் சிறைக்குச் செல்ல மாட்டேன்'' என்று தந்தைக்கு உறுதி மொழி கூறினேன். அவரும் ஓரளவு ஆறுதலடைந்து எனக்கு எண்ணெய் தேய்த்துவிட்டு என்னைக் குளிப்பாட்டினார்.

தந்தையின் கையால் எண்ணெய் தேய்த்துக் கொள்வதிலும், அன்னையின் கையால் சோறு வாங்கி உண்பதிலும் எனக்கு வெகு ஆனந்தம். எனக்குக் காய்ச்சல் கண்ட நாட்களில் என் அன்னை தன் கையால் ரசஞ்சோறு பிசைந்து என் கையில் கொடுப்பார். அதை வாங்கி உண்ணும்போது நோயின் துன் பத்தை மறந்து தாய் கொடுத்த சோற்றின் இன்பத்தை அனுபவிப் பேன். அன்னையின் கையை 'அன்னமூட்டிய மணிக்கை' என்று பாரதி வருணித்துள்ளது பொருத்தம்! காந்தியடிகள் சிறைப்பட்ட நாளன்று என் தந்தையார் தன் கண்ணீரோடு கலந்து எனக்கு எண்ணெய் முழுக்காட்டியதை நான் என்றும் மறக்க முடியாது. ஒரு ஏழைத் தேசபக்தன் அந்நாளில் எத்தகைய துன்பங்களை யெல்லாம் அனுபவிக்க வேண்டியிருந்ததென்பதற்கு என்

சம்பந்தப்பட்ட இந்த நிகழ்ச்சி சிறந்த சான்றாகும். என்னைவிட வும் அதிக துன்பங்கள் அனுபவித்த ஏழைத் தேசபக்தர்கள் ஏராளமானவர்களாவர்.

தடையுத்தரவு!

எண்ணெய் தேய்த்துக் குளித்து முடித்தபோது இரவு 8 மணியிருக்கும். இன்னும் நான் உணவுகூடக் கொள்ளவில்லை. என் வீட்டுத் தெருத் திண்ணையில் உட்கார்ந்து உறவினர் களோடு பேசிக் கொண்டிருந்தேன். ஒரு போலீஸ் வான் வந்து என் வீட்டிற்கெதிரே நின்றது — அவ்வளவுதான். அண்டை அயலிலுள்ளவர்களில் ஏராளமானவர்கள் என் வீட்டின் எதிரே குழுமிவிட்டனர். ஒரே பரபரப்பு! எனக்கு எண்ணெய் தேய்த்த போது என் தந்தை கூறிய அபாயம் நான் தலைமுழுகி முடித்த துமே என்னைச் சந்திக்க வந்துவிட்டது! போலீஸ் வானிலிருந்து இறங்கிய சப்-இன்ஸ்பெக்டர் என்னிடம் ஒரு நோட்டீசை கொடுத்து, அதைப் பெற்றுக் கொண்டதற்காகத் தான் கொண்டு வந்த ஒரு காகிதத்தில் கையொப்பமிடுமாறு போலீஸ் பாணியி லேயே என்னைக் கேட்டார். அந்த நோட்டீசிலுள்ள வாசகத்தை யும் அவரே படித்துக் காட்டினார் எனது நினைவிலுள்ளபடி அதன் சுருக்கம் வருமாறு:

''எம்.பி. சிவஞான கிராமணியாகிய நீர், வண்ணை தேசிய சேவா சங்கத்தின் செயலாளராக இருப்பதோடு, சட்ட விரோதமான அமைப்பாக அரசினரால் அறிவிக்கப் பட்டுள்ள காங்கிரஸ் மகாசபையிலும் அங்கத்தினராக இருக்கிறீர். அதனால், பிரிட்டிஷ் ஆட்சியைக் கவிழ்க்கக் கூடிய சட்ட விரோதமான செயல்களில் மறைமுகமாகவோ, வெளிப்படையாகவோ நீர் ஈடுபடக் கூடுமென்று அரசாங் கம் ஐயுறுகிறது. ஆகவே, இன்று முதல் ஆறு மாத காலத்துக்கு நீர் ஐந்து பேருக்கு அதிகமானவர் கூடியுள்ள இடத்தில் இருப்பதோ, 'காந்திக்கு ஜே', 'வந்தே மாதரம்' என்ற கோஷங்களை எழுப்புவதோ தண்டனைக்குரிய குற்றங்களாகுமென்று அரசு உமக்கு அறிவிப்பதோடு, அடுத்துள்ள ஆறு மாத காலத்திற்கு எக்காரணத்தை

முன்னிட்டும் நீர் சென்னைக்கு வெளியே செல்லக் கூடா தென்றும், அரசு தடை விதிக்கிறது. இந்தத் தடையை மீறினால், தண்டனைக்குள்ளாவீர் என்றும் அரசு உம்மை எச்சரிக்கின்றது.''

கைதியானேன்!

இந்த நோட்டீசானது பிரசித்திபெற்ற 144 செக்ஷன்படி சென்னை போலீஸ் கமிஷனரால் எனக்கெதிராகப் பிறப்பிக்கப் பட்டது. அந்த நாளில் பெரிய தலைவர்களுக்குத்தான் இந்த மாதிரி தடையுத்தரவு பிறப்பிப்பதுண்டு. ஆகவே, அப்போதைய சென்னை மாநில அரசும், சென்னை நகர போலீசும் எனக்குத் தடை விதித்து என்னைப் பெருமைப்படுத்தியது எனக்கே வியப் பைத் தந்தது. சப்-இன்ஸ்பெக்டர் பேசிய அதிகாரத் தோரணை யும், தடை உத்தரவில் காணப்பட்ட அன்னிய அரசின் ஆணவ மான வாசகங்களும் என்னுடைய தன்மானத்தை இழிவுபடுத்து வனவாக இருந்தன. இந்த நிகழ்ச்சியின் போது என் வீட்டுக் கெதிரே குழுமியிருந்த ஏராளமான மக்கள் நான் என்ன செய்யப் போகிறேன் என்பதை மிகவும் ஆர்வத்துடன் கவனித்துக் கொண் டிருந்தனர். இந்த நிலையிலே தன்மானத்துடன் நான் செய்ய வேண்டிய ஒரே காரியம் எதுவோ, என் வீட்டெதிரே குழுமி யிருந்த மக்கள் எதை விரும்பினார்களோ அதைத்தான் நான் செய்தேன். ஆம்; தடை உத்தரவை மீறினேன்! அந்த உத்தர வைப் பெற்றுக் கொண்டதாகக் கையெழுத்துப் போட்டுத் தர மறுத்து, உணர்ச்சி வயப்பட்டவனாகி, 'வந்தே மாதரம்', 'மகாத்மா காந்திக்கு ஜே' என்று உரத்துக் கூவினேன். போலீசார் என்னைக் கைது செய்து தாங்கள் ஏறி வந்த வேனிலேயே என்னை ஏற்றிக் கொண்டு தண்டையார்பேட்டை காவல் நிலை யத்திற்குக் கூட்டிச் சென்றனர். குழுமியிருந்த மக்கள் கைதட்டி ஆரவாரம் செய்து 'சிவஞானம் வாழ்க' என்று வாழ்த்தினார் களா? அந்த நாளில் அப்படியெல்லாம் மக்கள் போலீசாரின் எதிரே ஆர்வத்தை வெளிப்படுத்த இயலாது. அந்த அளவுக்கு ஆர்வப்படும் வழக்கம் தமிழ் மக்களிடம் இருக்கவும் இல்லை. ஆயினும் போலீசாரால் கைது செய்யப்பட்ட என்னிடம் மக்கள் இரக்கம் காட்டினர்; பரபரப்படைந்தனர்; முணுமுணுத்தனர்;

ஆட்சியை உள்ளூர வெறுத்தனர். அதற்குமேல் ஒன்றும் செய்யாமல் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

இந்த நேரத்தில் என் தந்தையாரின் நிலை பரிதாபகரமானதாக இருந்தது. ''அன்னையார் வீடு திரும்பும்வரை நானாக சிறைக்குச் செல்ல மாட்டேன்'' என்று நான் தந்தைக்கு உறுதி கூறியபோது, அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் அரசின் தடை உத்தரவு என் மீது பாயுமென்று நான் கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை. ஏழைத் தொழிலாளியும், எளிய தொண்டனுமாகிய எனக்கு அரசு தடை உத்தரவு தருமென்று நான் எப்படி எதிர்பார்க்க முடியும்? தேசப் பணிகளிலே நான் காட்டிய உறுதியும், எளிதில் உணர்ச்சி வயப்படக்கூடிய எனது போக்கும் போலீஸ் அதிகாரிகளுக்குப் புரிந்திருந்தமையால், அவர்கள் என்னைத் தலைவர்களில் ஒருவனாகக் கருதாவிட்டாலும், வெளியில் விட்டு வைக்கக் கூடாத அபாயகரமான பேர்வழியாகக் கருதி எனக்குத் தடை போட்டனர்.

தந்தைக்குக் கொடுத்த உறுதிமொழியை மீறுகின்றேன் என்பது தெரிந்திருந்தும், தடை உத்தரவுக்கு அடங்கி வாழ்வது அவமானமென்று கருதி, அதனை மீறிக் கைதியானேன். எனது பிஞ்சு உள்ளம் ஏதோ ஒரு பெரிய புரட்சியைச் செய்துவிட்டதாகக் கருதி இறுமாந்தது. அதே நேரத்தில் குடும்பப் பாசமானது எனது பெற்றோரின், தம்பி — தங்கையரின் வருங்காலத்தை நினைந்து வருந்தியது. இப்படி, இறுமாப்புக்கும், வருத்தத்துக்குமிடையே இரவு முழுவதையும் காவல் நிலையத்தில் உள்ள 'லாக்கப்பில்' கழித்தேன்.

நிர்வாணமாக்கினர்!

'லாக்கப்பில்' ஒரு இரவைக் கழிப்பதானது நரகத்திலிருப்பதைப் போலத்தான். காவல் நிலையங்களிலுள்ள 'லாக்கப்'பில் ஒருவன் ஒரு இரவு இருந்துவிட்டால், அவனிடமுள்ள மனிதத்தன்மை முழுவதுமே செத்துப் போய்விடும். 'லாக்கப்' என்பது இருள் சூழ்ந்த இடம்; மூத்திர நாற்றமடிக்கும். நிர்வாணமாகத்தான் அதில் தள்ளுவார்கள். பலபேரை ஏக காலத்தில் திகம்பரர்

களாக 'லாக்கப்'பில் அடைப்பதும் உண்டு. இந்தக் கொடுமையை என் அரசியல் வாழ்வில் பலமுறை நான் அனுபவித்திருக்கிறேன். தனித்தும், வேறு பலரோடு சேர்ந்தும் அனுபவித்திருக்கிறேன்.

நாடு விடுதலை பெற்றால் இந்தக் கொடுமை அகற்றப்படுமென்று அந்நாளில் நான் நம்பினேன். ஆனால், அது நடக்கவில்லை. கைதி குற்றவாளி என்பது உறுதிப்படாத நிலையிலே தான் 'லாக்கப்'பில் அடைக்கப்படுகிறான். சிறைவாசத்திலும் கொடியதான 'லாக்கப்' வாழ்க்கையைக் குற்றம் நிரூபிக்கப்படாத நிலையில் ஒருவன் அனுபவிப்பதானது போலீஸ் நிர்வாகத்தில் உள்ள ஒரு பெரும் குறையாகும். 1970-இல் காவல் துறை ஆய்வுக் குழுவின் அங்கத்தினனாக நான் இருந்தபோது இந்தக் குறை அகற்றப்பட வேண்டுமென்று அக்குழுவில் முறையிட்டுக் கொண்டேன். என் முறையீடு பயன் தரவில்லை.

கைது செய்யப்பட்டவன் தப்பி ஓடிவிடாமல் பார்த்துக் கொள்வதற்காகத்தான் காவல் நிலையத்தில் 'லாக்கப்' அறை இருந்து வருகிறது; அவனைத் தண்டிப்பதற்காக அல்ல. இதை விடவும் கொடுமை என்னவென்றால், கைதி ஒருவன் லாக்கப்பில் இருக்கும் நேரத்திலே, அவனிடம் வாக்குமூலம் வாங்குவதாகச் சொல்லிக் கொண்டு, அவனை அடித்துத் துன்புறுத்துவதாகும். இதனால் துரதிருஷ்டசாலிகள் சிலர் மரணமடைந்து வருவதையும் பார்க்கிறோம். நான் குற்றத்தை ஒப்புக் கொள்ளும் அரசியல் கைதியாக இருந்தும், போலீஸ் லாக்கப்பில் இருந்த சந்தர்ப்பங் களில் பலமுறை அடிபட்டிருக்கிறேன்.

அபாயகரமான ஆளாகக் கருதி என்னைக் கைது செய்த போலீசார், ஒரு இரவும் ஒரு பகலும் காவலில் வைத்திருந்த பின்னர், மறுநாள் மாலை விடுதலை செய்துவிட்டனர். வீடு திரும்பியதும் எப்போதும்போலத் தொழிலுக்குப் போனேன். என் பெற்றோரும் ஆறுதலடைந்தனர். ஆனால், என் மனம் ஆறுதலடையவில்லை. காந்தியடிகள் சிறையிலிருக்கிறார். நாடு முழுவதும் விடுதலைப் போர் நடந்து கொண்டிருக்கிறது. நாள் தோறும் தலைவர்களும், தொண்டர்களும் சிறை சென்ற வண்ண

மிருக்கின்றனர். இந்த நிலையிலே என் மனம் எப்படி அமைதி யுறும்?

கண்ணாம்பூச்சு விளையாட்டு

போலீஸ் காவலிலிருந்து விடுதலை பெற்ற நான்கு மாதங்களுக்குள் — அதாவது, 15.5.32-இல் ஏற்கனவே என்மீது விதிக்கப்பட்டிருந்த 144 தடையுத்தரவை மீறி வண்ணாரப்பேட்டையில் ஒரு ஊர்வலத்திற்குத் தலைமை தாங்கி நடத்திச் சென்றேன். ஒரு தேசபக்த சகோதரியும் வேறு சில தொண்டர்களும் அந்த ஊர்வலத்தில் என்னுடன் கலந்து கொண்டனர். அப்பொழுதெல்லாம் சட்டத்தை மீறியும், சட்டத்திற்குட்பட்டும் நடைபெறும் ஊர்வலங்களிலே நான் பாடிச் செல்வதுண்டு. பாரதியாரின் பாடல்களைத்தான் பாடுவேன். தேசபக்த உணர்ச்சிக்கே முதன்மை தரப்பட்ட காலமாதலால் என் 'சங்கீதக் கொலை'யை யாரும் பொருட்படுத்துவதில்லை. அதனால், நான் துணிவோடு பாடுவேன். ''அச்சமில்லை'' - ''ஜெய பேரிகை கொட்டடா'' என்னும் பாடல்களையே அடிக்கடி பாடுவேன். உணர்ச்சி வயப்பட்டு பாடிய அந்த நாளிலே நண்பர்கள் என்னைப் பாராட்டியிருக்கின்றனர். என் சங்கீத ஞானத்திற்காக அல்ல; உணர்ச்சியின் உச்சியில் நின்று பாடியதற்காக!

ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தி, தலைமை தாங்கிய என்னையும், என்னைப் பின்பற்றிய ஒரு பெண் உட்பட எழுவரையும் கைது செய்து போலீஸ் கமிஷனர் அலுவலகத்துக்குக் கொண்டு சென்றனர். அங்குப் பகல் முழுவதும் உணவு தராமல் பட்டினி போட்டு, நள்ளிரவில் எங்கள் அனைவரையும் விடுதலை செய்தனர்.

என்னைப் பிடிப்பதும் விடுவதுமாக இருந்த போலீசாரின் போக்கு என்னை அவமதிப்பதாகவே எனக்குப்பட்டது. எங்கும் தொண்டர்கள் இப்படித்தான் நடத்தப்பட்டனர். சிறைச்சாலைகள் நிறைந்து போய்விட்டமையால், அரசு, சட்டத்தை மீறும் தொண்டர்களிடம் கண்ணாம்பூச்சு விளையாடியது.

பதினான்கு நாட்களுக்குப் பின்னர் 29.5.32-இல் திரும்ப வும் சட்டத்தை மீறி ஊர்வலத்தை நடத்தி 1932-ஆம் ஆண்டில் மூன்றாவது முறையாகக் கைதியானேன். இந்த முறை அரசு சென்னைச் சிறைச்சாலையில் தொடர்ந்து ஒரு மாத காலம் என்னை விசாரணைக் கைதியாக அடைத்து வைத்தது. ஒரு மாதத்திற்குப் பின் வழக்கு எதுவும் தொடராமல் நிபந்தனை யின்றி என்னையும் என்னுடன் சிறைப்பட்டோரையும் விடுதலை செய்துவிட்டது. இந்த ஒரு மாதச் சிறைவாசம் எனக்கு ஆறுத லைத் தரவில்லை. இப்போதுதான் என் வாழ்நாளில் முதன் முதலாக சிறைவாச அனுபவம் பெற்றேன். சிறை அனுபவங் களைத் தொகுப்பாகப் பிறிதோரிடத்தில் கூறுகிறேன்.

அதிகாரியின் கைவரிசை!

நீண்டகாலச் சிறைவாசந்தான் எனக்கு இருந்த தேசபக்த வெறியைத் தணிக்கும்போல் இருந்தது. ஆகவே, 26.7.32-இல் சென்னை ஏழுகிணறு வட்டத்தில் — அங்குள்ள ஆஞ்சனேயர் கோயில் முன்புள்ள திடலில் சட்டத்தை மீறி நடைபெற்ற சென்னை ஜில்லா அரசியல் மாநாட்டிலே தண்டையார்பேட்டை காங்கிரஸ் கமிட்டியின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு கைதி யானேன். மாநாடு நடந்த திடலிலேயே — என்னைக் கைது செய்தபோதே போலீசார் தங்கள் கைவரிசையை என்னிடம் காட்டினர். காவலர்கள் அல்ல; உயர்தர அதிகாரிகள்! அவர்களி டம் அடிபட்டதால் என் மனத்துள் ஒரு பெருமிதம் ஏற்பட்டது. ஆம்; அப்பாவித்தனந்தான்! கைது செய்த பின்னர் மண்ணடி காவல் நிலையத்தில் என்னை அடைத்து வைத்தனர். அங்கும் அதிகாரிகள் தங்கள் கைவரிசையை இந்த ஏழையிடம் காட்டி னார்கள். தலைவர் அந்தஸ்திலிருந்த ஒருவர் இப்படித் தாக்கப் பட்டிருந்தால் நாட்டு மக்கள் இன்றளவும் நினைவில் வைத்துக் கொள்ளும் அளவுக்கு அந்த நிகழ்ச்சி அப்போதே பத்திரிகைகள் வாயிலாக விளம்பரமாகியிருக்கும். நான் ஒரு சாதாரணத் தொண்டன் ஆனதால் அன்று நான் பட்ட அடி உதைகளை இன்று நானே சொல்லித்தான் நாடு தெரிந்து கொள்ள வேண்டியிருக் கிறது. (நானே சொன்ன பிறகும் என்பால் இரக்கப்படுவோர் எத்தனை பேரோ!

அன்று மட்டுமல்ல; இன்றும் உண்மைத் தொண்டர்களின் தியாகத்துக்குப் பத்திரிகை உலகம் தரும் மதிப்பு இதுதான். ஒருவருடைய தியாகம் மக்கள் மத்தியிலே மதிப்பு பெறுவது அவருடைய உயர்சாதிப் பிறப்பு, செல்வச் சிறப்பு, அன்னிய மொழிக் கல்வி, புகழ்பாடும் கூட்டம் ஆகியவற்றைப் பொறுத்த தாகத்தான் இருக்கிறது.)

இப்படி, பலமுறை சட்டத்தை மீறிக் கைதியாகியும், ஒரு மாத காலம் சிறை வாழ்க்கை நடத்தியும் என் மனம் ஆறுதல் அடையவில்லை. காரணம், நாட்டில் விடுதலைப் போர் நடந்து கொண்டிருந்ததுதான். ஒருமுறை சட்டத்தை மீறினோம், அத்து டன் நமது கடமை தீர்ந்துவிட்டது! 'நானும் சட்டத்தை மீறிக் கைதியானேன்' என்று சொல்லிப் பெருமையடையலாம் என்று எனது நெஞ்சம் எண்ணவில்லை. விடுதலைப் போர் முடியும் வரை களத்திலிருந்து வெளியேறுவது கடமை தவறிய கோழைத் தனம் என்று கருதினேன். அதனால், மீண்டும் 20.9.32-இல் வேறு மூன்று காங்கிரஸ் தோழர்களுடன் நகரில் விதிக்கப்பட் டிருந்த 144 தடையுத்தரவை மீறி ஊர்வலமாகச் சென்றேன். ஆம்; வட சென்னையிலுள்ள வண்ணையம்பதியிலேதான்!

ஒரு ரூபாய் அபராதம்!

வழக்கம்போல ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தி, போலீசார் எங்களைக் கைது செய்தனர். இந்த முறை ஒரு புதிய அனுபவம் — அதாவது, கடந்த முறைகளைப் போலல்லாமல் இந்த முறை என்மீது வழக்குத் தொடரப்பட்டது. போலீசாரிடம் முன் அனு மதி பெறாமல் சட்டத்தை மீறி நடத்தப்பெற்ற ஊர்வலத்தில் தலைமை தாங்கிச் சென்றதாக என் மீது குற்றம் சாட்டப்பட்டது. நான் குற்றத்தை ஒப்புக் கொண்டேன். வழக்கை விசாரித்த சென்னை நான்காவது பிரதம மாகாண மாஜிஸ்திரேட், ஒரு ரூபாய் அபராதம் விதித்து, அதனைக் கட்டத் தவறினால் மூன்று மணி நேரம் கோர்ட் காவலில் இருக்க வேண்டும் என்பதாகத் தீர்ப்பளித்தார். குறைந்த அளவு மாதக் கணக்கிலேனும் சிறைத் தண்டனை கிடைக்கக் கூடுமென்று கற்பனை செய்து கொண் டிருந்த எனக்கு மாஜிஸ்திரேட்டின் தீர்ப்பு வியப்பை அளித்தது.

அபராதம் கட்ட மறுத்து, கோர்ட்டு கலையும் வரை காவலில் இருக்க வேண்டுமென்ற மாற்றுத் தண்டனையை ஏற்றுக் கொண்டேன். கோர்ட்டுக்கு வந்திருந்த உறவினரிலே சிலர் என் சார்பில் அபராதம் கட்ட முன் வந்தனர். அப்படிச் செய்யாமல் அவர்களைத் தடுத்தேன். கோர்ட்டில் நானும் என்னுடன் சேர்ந்து தண்டனை பெற்ற மூன்று தோழர்களும் ஒருபுறமாக உட்கார்த்தி வைக்கப்பட்டோம். அப்போது நான் தலையில் காந்தி குல்லாய் அணிவது வழக்கம். தேசபந்து சி.ஆர்.தாஸ் போர்வைபோலப் பூப்போட்ட கதர் போர்வை ஒன்றை உடம்பிலே போர்த்துவேன். தென்னாட்டிலே சி.ஆர். தாஸ் போர்வைக்கு அந்த நாளில் பெரு மதிப்பிருந்தது. கோர்ட்டிலிருந்த நேரத்தில் கையில் 'தக்ளி' வைத்துக் கொண்டு நூல் நூற்ற வண்ணமிருந்தேன். ''தண்டனை அடைந்த கைதி கோர்ட்டில் நூற்கக் கூடாது'' என்று கூறி, என் கையிலிருந்த தக்ளியைப் பறிக்க போலீசார் மாஜிஸ்திரேட்டின் அனுமதியைக் கோரினர். மாஜிஸ்திரேட் அவர்களைப் பார்த்துக் கேலியாகச் சிரித்துவிட்டு, தொடர்ந்து நூற்பதற்கு என்னை அனுமதித்தார். கோர்ட் கலைவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பே மாஜிஸ்ரேட் எங்களைப் பார்த்து 'நீங்கள் எல்லோரும் வீட்டிற்குப் போகலாம்' என்று கூறி, விடுதலை செய்தார்.

எனக்கென்னவோ வீட்டிற்குப் போவதற்கு வெட்கமாக இருந்தது. மூன்று மணி நேரக் காவல் தண்டனைதானே! அந்த நாளிலே, இதுகூட புகழுக்குரிய தியாக முத்திரையாகக் கருதப் பட்டது என்றாலும் என்மனம் ஆறுதல் பெறவில்லை.

ஆறுமாதக் கடுங்காவல்

இது நிகழ்ந்த பத்து நாட்களுக்குப் பின்னர் — அதாவது, 30.9.32-இல் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் திரும்பவும் போலீசாரால் கைது செய்யப்பட்டேன். 'தமிழா! துள்ளி எழு' என்னும் தலைப்புடைய சட்ட விரோதமான ராஜத் துவேஷப் பிரசுரமொன்றைக் கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே வழங்கியதற்காகவே நான் கைது செய்யப்பட்டேன். அந்த நாளில் அரசாங்கத்தை வெறுக்கும் கருத்துகள் கொண்ட பிரசுரம் எதையும் அச்சடிக்க முடியாது. அச்சடித்துத் தந்தால் அந்த அச்சகத்தின் உரிமையாளர் மீது வழக்குத் தொடரப்படும்.

அதனால், நான் விநியோகித்த பிரசுரத்தை நானும் வேறு சில தோழர்களும் சேர்ந்து கையாலேயே எழுதி நூற்றுக்கணக்கான பிரதிகள் தயாரித்தோம். பிரசுரத்தில் உள்ள வாசகம் முழுவதும் என்னாலேயே எழுதப்பட்டதாகும். அந்தக் காலத்திலேயே என் உள்ளத்தில் தமிழன் என்னும் இன உணர்ச்சி மலர்ந்திருந்தது. அதனால் பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேய ருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழருக்கு அழைப்பு விடுத்திருந்தேன். சுமார் இருநூறு பிரதிகள் வரை எழுதித் தயாரித்து அவற்றைத் தன்னந்தனியாக நான் மட்டுமே கடற்கரை யில் மக்களுக்கு வழங்கினேன். கைதியாவேன் என்று எதிர் பார்த்தே — அதனை மனமார விரும்பியே அந்தச் சட்ட விரோதமான செயலில் நான் ஈடுபட்டேன். எதிர்பார்த்தபடி இரகசியப் போலீசார் என்னைக் கைது செய்தனர்.

எழும்பூர் பிரதம மாகாண மாஜிஸ்திரேட் கோர்ட்டில் என் மீது வழக்குத் தொடரப்பட்டு 3 மாதக் கடுங்காவல் தண்டனை எனக்குத் தரப்பட்டது. அத்துடன் ரூ.300 அபராதம் விதிக்கப் பட்டது. அபராதம் கட்டத் தவறினால் மேலும் 3 மாதக் கடுங்காவல். மொத்தத்தில் 6 மாதக் கடுங்காவல். என்னை 'சி' வகுப்பில் வைக்க மாஜிஸ்திரேட் ஆணையிட்டார். செல்வமும் செல்வாக்குமில்லாத ஏழைத் தொண்டனாகிய எனக்கு 'ஏ' வகுப்பா கிடைக்கும்! 'ஆறு மாதக் கடுங்காவல்' என்று மாஜிஸ் திரேட் கூறியதைக் கேட்டதும் கோர்ட்டில் கூடியிருந்த என் பெற்றோரும் உறவினரும் கண் கலங்கினர். சுமார் ஒன்பது மாத காலம் என்னைப் பிடிப்பதும், விடுவதுமாக என்னோடு கண் ணாம்பூச்சு விளையாடிய அரசு, இப்போது ஆறு மாதச் சிறைத் தண்டனை கொடுத்ததிலே எனக்கு மகிழ்ச்சிதான்.

பட்டினியிலிருந்து விடுதலை

சிறையில் வேளா வேளைக்கு எப்படியோ எனக்குச் சோறு கிடைத்து வந்தது. என்னளவில் தொடர்ந்து ஆறு மாத காலத் திற்கு வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து நான் விடுதலை பெற்று

விட்டேன். 'சி' வகுப்புச் சோறுதான் என்றாலும், அடிக்கடி பட்டினியைச் சந்தித்தவனுக்கு அதுவே அமுதந்தானே! ஆனால், என் குடும்பத்தின் அவலநிலை நினைவுக்கு வந்தபோதெல்லாம் சிறையில் எனக்குத் தரப்பட்ட உணவை மன நிறைவோடு உண்ண முடியாதவனானேன். என் அன்னையார் வாழ்க்கையிலே கடுமையான சோதனை தோன்றும்போது துணிவாக முடிவெடுக்கும் திறனைப் பெற்றிருந்தார். அதனால் சிறையிலிருந்த எனக்குத் தகவல் தராமலே என் தம்பியைக் கள் வாணிபத்தில் ஈடுபடுத்தி அதில் கிடைக்கும் வருவாயைக் கொண்டு தன் குடும்பத்தைக் காத்து வந்தார். என் தம்பிக்குக் கிடைத்த வருவாய் குடும்பத் தேவைக்குப் போதுமானதாக இருந்தது. என் அன்னையின் செயல் கொள்கை ரீதியாக எனக்குப் பிடிக்கவில்லை என்றாலும், அவரது முடிவுக்குக் குறுக்கே நிற்க யான் முயலவில்லை. பிற்காலத்தில் சிறை வாழ்க்கையிலே 'ஏ' வகுப்பிலும், விசேஷ வகுப்பிலும் வைக்கப்பட்டு, அந்த வகுப்புகளுக்கான சுகங்களைத் துய்க்க நான் அனுமதிக்கப்பட்டேன். ஆயினும் 'சி' வகுப்பிலிருந்தபோது எனக்கேற்பட்ட மகிழ்ச்சி உயர் வகுப்புகளிலே இருந்த காலங்களிலே எனக்கு ஏற்படவில்லை. ஏழைத் தொண்டர்களோடு, உயர்தரக் கல்வியற்றவர்களோடு சேர்ந்து சிறை வாழ்க்கை நடத்துவது இன்பமாகவே இருந்தது. காரணம், ஏழைகளோடு ஏழையாக இருக்கும்போது மற்றவர்களைவிட உயர்ந்தவர் என்ற ஆணவம் நமக்கு ஏற்படுவதில்லை. இதனால், சமத்துவமான நிலையில் பரஸ்பரம் இதயங்கலந்து பழக முடிகிறது. ஆகவே, சென்னைச் சிறைச்சாலையில் 'சி' வகுப்புக் கைதியாக ஆறு மாதத் தண்டனையை அனுபவித்தபோது பொழுதை ஆனந்தமாகவே போக்கினேன். நோய்நொடி என்னை அணுகவில்லை.

தனி அறையிலே ஒண்டியாக அடைக்கப்படும் இரவு நேரத்தில்தான் மனம் சிறிது அமைதியற்றிருக்கும். அதுவும் சிறைப்பட்ட ஆரம்ப நாட்களிலேதான். நாள் ஆக ஆக அதற்கும் மனம் பழகிவிடுகிறது. எனக்கு விதிக்கப்பட்டது கடுங்காவல் தண்டனையாதலால், சிறையிலே அதிகாரிகள் தரும் ஏதேனும் ஒரு வேலையை நான் செய்தாக வேண்டும்.

வெறுங்காவல் தண்டனை என்றால் சிறையில் வேலை எதுவும் தரமாட்டார்கள். ஆனால், கைதியே விரும்பினால், சிறை சூப்பிரின்டெண்ட் அனுமதியின் பேரில் வெறுங் காவலைக் கடுங்காவலாக மாற்றிக் கொண்டு ஏதேனும் ஒரு வேலையைப் பெறலாம். சிறையில் வேலை செய்யாமல் சும்மா சோம்பியிருப்பது மனதுக்கு இன்பமாயிராது. அதனால் வேலை செய்வதையே அரசியல் கைதிகள் விரும்புவார்கள். நான் எனக்குப் பழக்கமான அச்சுத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டேன். சென்னைச் சிறைச்சாலையில் அச்சகம் ஒன்றிருக்கிறது. எனக்கு நெசவுத் தொழிலும் தெரியும். சிறையிலே நெசவுத் தொழிலும் இருக்கிறது. ஆனால், அந்தத் தொழிலில் ஈடுபட எனக்கு விருப்பமில்லை; சிறைக்கு வெளியே நான் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த போது கூட அதனை நான் மகிழ்ச்சியோடு செய்யவில்லை. அச்சுகோக்கும் தொழிலிலே மொழியறிவு வளர்வதற்குச் சிறிது வாய்ப்பிருப்பதால், அந்நாளில் அதுவே என் மனதுக்குப் பிடித்த தொழிலாக இருந்தது. அதனால் சிறை வாழ்க்கையிலும் அச்சுத் தொழிலையே நான் மேற்கொண்டேன்.

அரசியல் கைதிகள் துன்பத்தை ஏற்கத் துணிந்தவர்களாகவும், சிறையில் அதிகாரிகளோடு போராடுவதும் விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதி என்ற எண்ணமுடையவர்களாகவும் இருந்தார்கள். ஆதலால், அவர்களிலே மிகப் பெரும்பாலோர் சிறையில் தங்களுக்குத் தரப்படும் தொழிலை ஒழுங்காகச் செய்யவில்லை. அரசுக்கு இழப்பு ஏற்படுமளவுக்கு வேண்டுமென்றே பொருள்களைக் கெடுத்தோ, உடைத்தோ சேதப்படுத்தினார்கள். அதனை நான் வெறுத்தேன். சிறையில் எனக்குத் தரப்பட்ட வேலையை ஒழுங்காகச் செய்து வந்தேன்.

அந்தக் காலத்திலே தமிழ் மொழியில் சொற்ப அளவில் கூட நான் இலக்கியப் பயிற்சி பெற்றிருக்கவில்லை. பிழையில்லாமல் எழுதும் திறமைகூட எனக்கில்லை. தேவாரம், திருவாசகம், அருட்பா ஆகிய பாடல்களில் சிலவற்றை நான் மனனம் செய்து வைத்திருந்தேன் என்றாலும், செய்யுளைச் சந்தி பிரித்துப் படித்துப் பொருளறியும் திறனைப் பெறாதவனாக இருந்தேன். அதனால், சிறையில் வேலை செய்த நேரம்போக

எஞ்சிய நேரத்தில் இலக்கியம் படிக்கும் முயற்சியில் நான் ஈடுபடவில்லை. ஆறுமாதத் தண்டனையை அனுபவித்த பின்னர், நான் விடுதலை செய்யப்பட்டேன்.

தொழிலை இழந்தேன்!

இப்படி, தொடர்ந்து சட்டத்தை மீறுவதையே தொழிலாகக் கொண்டிருந்த நேரத்திலே நான் 'தமிழ்நாடு' தினசரிப் பத்திரிகை அலுவலகத்தில் அச்சுத் தொழிலாளியாக இருந்தேன் என்பதை இங்கு நினைவூட்டுகிறேன். அதன் உரிமையாளர் டாக்டர் பி.வரதராசுலு நாயுடு அகில இந்தியப் புகழ்பெற்ற பெருந்தலைவராக விளங்கினார். தமிழ்நாடு காங்கிரசிலே பிராமணர்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள், பிராமணரல்லாதார் தலை எடுக்க விடாமல் சூழ்ச்சியால் தடுத்து வருகிறார்கள் என்பதாகக் காரணம் கூறி, டாக்டர் நாயுடு அவர்கள் காங்கிரசிலிருந்து வெளியேறிவிட்டார். ஆயினும் விடுதலைப் போருக்கு ஆதரவாகவே 'தமிழ்நாடு' பத்திரிகையை நடத்தி வந்தார். 'தென்னாட்டுத் திலகர்' என்ற ஒரு சிறப்புப் பெயரும் அவருக்கு உண்டு. அதற்கான தகுதி முற்றிலும் அவருக்கிருந்தது. நாவன்மைமிக்க பேச்சாளர். மக்களுடைய உணர்ச்சியைத் தூண்டக்கூடிய வகையில் தமிழிலே எழுதவும் பேசவும் வல்லவர். பலமுறை சிறை சென்று தியாக முத்திரைகளையும் பெற்றிருந்தார்.

இவ்வளவு சிறந்த தேசபக்தியும் தியாக உணர்வுமுடையவரான டாக்டர் நாயுடு, என்னுடைய தேசபக்திக்கும், தியாக உணர்வுக்கும் மதிப்பளிக்க மறுத்துவிட்டார். நான் அடிக்கடி சட்டத்தை மீறிப் போலீசாருடன் போராட்டம் நடத்துவதால், அதிலே தாமும் உள்ளூர எனக்குத் தூண்டுதலாக இருக்கிறார் என்று போலீசார் ஐயுறுவதாகக் கூறி, அந்த ஐயத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்காக என்னை வேலையிலிருந்து வெளியேற்றி விட்டார். என்னுடைய தேசபக்தியையும் தியாக உணர்வையும் தாம் பாராட்டுவதாகவும், ஆனால், அரசாங்க விரோதியாகிய என்னைத் தன் அச்சகத்தில் வேலைக்கு வைத்துக் கொள்வது சாத்தியமில்லை என்றும் அவர் என்னிடம் தெளிவாகக் கூறிவிட்டார்.

தேசபக்த திலகமான டாக்டர் நாயுடு தேசபக்தி கொண்டதற்காக என்னை வேலையிலிருந்து வெளியேற்றியது சென்னை நகர தேசபக்த நண்பர்கள் பலருக்கு வேதனையையும், வியப்பையும் அளித்தது. அவர்களிலே திரு.தி.கு. இலட்சுமணசாமி முதலியார் என்பவர் எனக்காகப் பரிந்து டாக்டர் நாயுடுவுக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தார். அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:

''இக்கடிதம் கொண்டுவரும் நண்பர் சிவஞானம் எனக்கு மிகவும் வேண்டியவர். அவர் இதற்கு முன் தங்களுடைய பத்திரிகாலயத்தில் கம்பாசிடர் வேலை செய்து கொண்டிருந்தார். அவர் தேசத்தின் பேரில் வைத்த அன்பினால் சிறை சென்ற பாவத்திற்குத் தங்களுடைய காரியாலய அதிகாரிகள் வேலையிலிருந்து நீக்கிவிட்டதாக ஏற்படுகிறது.

''தங்களுடைய பத்திரிகையில், தேசத்திற்குத் தொண்டு செய்பவர்கள் கூட இவ்வாறு பாதிக்கப்பட்டால் வேறு யாரைத்தான் போய் நாடுவதென்று தோன்றவில்லை.

''தாங்கள் ஏழையின் பேரில் கிருபை வைத்து இவருக்கு வேலை தந்தால் மிகவும் தருமமாயிருக்கும்.''

திரு.தி.கு. இலட்சுமண முதலியார் சிறந்த தேசபக்தர்; சிறைசென்ற தியாகி. இவரது கடிதத்தால் யான் ஏற்கனவே இழந்து விட்ட வேலையைத் திரும்பவும் பெற்றுவிடுவேன் என்று உறுதியாக நம்பினேன்.

பக்தவத்சலனாரைச் சந்தித்தேன்

முதலியார் தந்த இந்தக் கடிதத்தை நானே நேரில் சென்று டாக்டர் நாயுடுவிடம் கொடுத்தேன். திரும்பவும் வேலையில் என்னை வைத்துக் கொண்டு அணைந்துவிட்ட என் குடும்ப விளக்கை மீண்டும் ஏற்றி வைக்குமாறு அவரை வேண்டிக் கொண்டேன். அரசியலில் ஈடுபடுவதில்லை என்று நான் எழுதிக் கொடுத்தால், அதைப் போலீஸ் கமிஷனருக்கு அனுப்பி வைத்து

விட்டு எனக்கு வேலை தருவதாக டாக்டர் நாயுடு கூறினார். அதற்கு என் மனம் இசையவில்லை. அவர் சொன்னபடி செய்ய மறுத்துவிட்டு, வெறுங்கையுடன் வீடு திரும்பினேன். டாக்டர் நாயுடு மீதும் தவறில்லைதான். ஒரு முதலாளியின் கீழ் வேலை செய்யும் தொழிலாளி, அதே நேரத்தில் அரசியல் கிளர்ச்சியிலே ஈடுபடுவது முதலாளித்துவ சமுதாயத்திலே முறைகேடான செயல்தானே!

''தமிழ்நாடு'' அச்சகத்திலிருந்து நான் வெளியேற்றப்பட்ட பின்னர், வேறு பத்திரிகாலயங்களில் போய் வேலை கேட்டேன் — குறிப்பாக, அப்போது 'தமிழ்நாடு'க்குப் போட்டியாக காங்கிரஸ் பிரமுகர்களால் நடத்தப்பட்ட 'இந்தியா' என்னும் நாளிதழின் அச்சகத்தில் வேலை கேட்டேன். 'தமிழ்நாடு'விலிருந்து வெளியேற்றப்பட்டதை ஒளிக்காமல் சொல்லி வேலை கேட்டேன். ''அரசாங்க விரோதிக்கு எங்கள் அச்சகத்தில் மட்டும் எப்படி வேலை தரமுடியும்? தந்தால், போலீசார் எங்கள் தொழிலகத்துக்குத் தொல்லை தருவார்களே'' என்று கூறி, என்னை விரட்டிவிட்டார்கள். இப்படி என்னிடம் சொன்னவர் திரு. எம். பக்தவத்சலனார் ஆவார். அப்போது அவர்தான் 'இந்தியா' பத்திரிகையின் ஆசிரியர்.

புராணத்தில் வரும் நந்தனின் தெய்வபக்திக்கு மதிப்புத் தர மறுத்தார் அந்தண மிராசுதாரர். 'தமிழ்நாடு' — 'இந்தியா' பத்திரிகைகளின் முதலாளிகளும் பாட்டாளியான எனது தேசபக்திக்கு மதிப்புதர மறுத்தனர். ஆம்; ''அடிமைத் தொழிலாளிக்கு ஏது அரசியல் வாழ்வு?'' என்று சொல்லாமல் சொன்னார்கள் தேசபக்த முதலாளிகள்.

அரிசனப் பணி!

1933-ஆம் ஆண்டில் நாட்டில் சட்டமறுப்புக் கிளர்ச்சி ஓய்ந்து போய்விட்டது. புதிதாக யாரும் சட்டமறுப்பில் ஈடுபடுவதில்லை. முன்பே சட்டமறுப்பில் ஈடுபட்ட பெருந்தலைவர்களில் — தொண்டர்களில் பெரும்பாலோர் சிறையில் அடைக்கப்பட்டுக் கிடந்தனர்.

இந்த நேரத்தில் ஏர்வாடாச் சிறையிலிருந்த காந்தியடிகள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டதன் காரணமாக அவரை அரசு விடுதலை செய்தது. வெளியில் வந்த அடிகள் ஓராண்டுக் காலம் சட்டமறுப்பில் ஈடுபடுவதில்லையென்று உறுதி எடுத்துக் கொண்டு ''அரிஜன யாத்திரை'' மேற்கொண்டார். இதனால் சிறைக்கு வெளியே இருந்த என் போன்ற காங்கிரஸ்வாதிகள் அரிஜன முன்னேற்றப் பணியில் ஈடுபட வாய்ப்பு பெற்றோம். ''அகில இந்திய அரிஜன சேவா சங்கம்'' நிறுவப்பட்டது. அதன் கிளைகளாகச் சென்னை மாவட்ட அரிஜன சேவா சங்கமும், வடசென்னை அரிஜன சேவா சங்கமும் நிறுவப்பட்டன. நான் மாவட்டச் சங்கத்தின் பிரசாரகனாகவும், வடசென்னைச் சங்கத்தின் செயலாளனாகவும் இருந்து பணியாற்றினேன்.

இன்று மார்க்ஸிஸக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முன்னணித் தலைவர்களிலொருவராகவுள்ள திரு.பி. இராமமூர்த்தியும் நானும் சென்னை மாவட்ட அரிசன சேவா சங்கத்தின் சார்பில் முழு நேர ஊழியர்களாக நியமிக்கப்பட்டோம். அவர் ஆறு மாதத்திற்குள் அந்தப் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார். காரணம், அவர் அப்போதே கம்யூனிஸ்டு வழிமுறைகளில் நம்பிக்கை கொண்ட சோஷலிஸ்டாக இருந்ததுதான். நான் ஓராண்டுக் காலம் நீடித்தேன்.

எங்களுடன் வேறு இருவரும் அரிசனப் பிரச்சாரகராக நியமிக்கப்பட்டனர். அவர்கள் திரு. கோபால் சாஸ்திரி,

திரு பட்டாபிராமன் (பிரபல அரிசனத் தலைவர் இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் பேரர்) ஆவர்.

நான் அரிஜனப் பிரச்சாரகனாக இருந்தபோது வடசென்னையிலுள்ள சேரிகளுக்குச் சென்று, தீண்டாத மக்களோடு தொடர்பு கொண்டு, அவர்களுடைய முன்னேற்றத்திற்கான வகையில் பிரச்சாரம் செய்தேன்.

சுயமரியாதை இயக்கம்

சென்னை மாவட்ட அரிஜன சேவா சங்கத்தால் காந்தி ஜெயந்தி, தீபாவளி, பொங்கல் ஆகிய விசேஷ நாட்களில் சேரிகளில் வாழும் அரிஜன ஏழைப் பிள்ளைகளுக்குப் புத்தாடைகள் வழங்கப்படும். பிரச்சாரகன் என்ற முறையில் அந்தப் புத்தாடைகளை நான்தான் சேரிக் குழந்தைகளுக்கு வழங்குவேன். எண்ணெய், சீயக்காய், சோப்பு முதலான பொருள்களும் வழங்குவதுண்டு. கல்வி, சுகாதாரம் ஆகியவற்றின் அவசியத்தை அரிஜன மக்களுக்கு விளக்க, சேரிகளில் சினிமா ஸ்லைடுகள் போட்டுக் காட்டுவதுமுண்டு. இவையன்றி இரவுப் பள்ளிகள் அமைத்து, குழந்தைகளுக்கும் வயதுவந்த தொழிலாளர்களுக்கும் எழுதவும் படிக்கவும் கற்றுத் தருவதுண்டு. அரிஜன மக்கள் தங்கள் நலன் கருதிப் பாடுபடும் என் போன்ற காங்கிரஸ்காரர்களை மிகுந்த மரியாதை காட்டி வரவேற்றார்கள்.

அந்தக் காலத்தில், அரிஜன மக்களில் மிகப் பெரும்பாலோர், தாங்கள் தங்கள் முன் ஜென்மத்தில் செய்த பாவத்தால் தாழ்த்தப்பட்டவர்களாகப் பிறந்தவர்கள் என்று நம்பினார்கள். அதனால், நான் அவர்கள் குழந்தைகளைத் தொட்டு, எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்ட முயலுங்கால், அதற்கு அவர்கள் இணங்க மாட்டார்கள். ''சாமி! நாங்க பறையருங்க. எங்க குழந்தைகளைத் தொடாதீங்க சாமி!'' என்று சொல்லி, என்னிடமிருந்து எண்ணெய், சீயக்காய்த் தூள் வாங்கிக் கொண்டு, தங்கள் குழந்தைகளைத் தாங்களே குளிப்பாட்டுவார்கள்.

நான் அரிஜன சேவா சங்கத்தின் பிரச்சாரகனாக இருந்த காலத்திலே பெரியார் ஈ.வெ.ரா. நடத்தி வந்த சுயமரியாதை இயக்கத்தாரின் தாக்குதலைச் சமாளிக்க வேண்டியவனானேன். அதற்கு முன்பே அந்த இயக்கத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்து வைத்திருந்தேன்.

பெரியார் நடத்திய வார ஏடான ''குடியரசு'' இதழ்களை வாரந்தவறாமல் படித்து வந்தேன். தோழர் சிங்காரவேலு அவர்கள் நடத்திய 'பகுத்தறிவு' என்னும் மாத ஏட்டையும் படிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். இந்த ஏடுகளைப் பணங்கொடுத்து வாங்கிப் படிக்க அப்போது எனக்கு வசதியில்லை. நான் பணி புரிந்து வந்த 'தமிழ்நாடு' நாளிதழ் அலுவலகத்துக்குக் 'குடியரசு', 'பகுத்தறிவு' ஏடுகள் மாற்றுப் பிரதிகளாக வந்து கொண்டிருந்தன. இவற்றை ஆசிரியர் குழாத்தினரில் எவரும் படிப்பதில்லை. அஞ்சலுரைகூடக் கிழிக்கப்படாமல் இவ்வேடுகள் பழைய பத்திரிகைகள் குவித்து வைக்கப்படும் கிடங்குக்கு வந்து சேரும். அங்குப் போய்த் தேடி எடுத்து இவற்றை நான் படிப்பது வழக்கம்.

சுயமரியாதை இயக்கத்தின் பகுத்தறிவுப் பிரச்சாரம் என்னை அந்நாளிலே பெரிதும் கவர்ந்தது. அந்த இயக்கமானது நடைமுறையில் பார்ப்பனத் துவேஷம், தெய்வத் துவேஷம் ஆகியவற்றைக் கொண்டிருந்தமையால், அதனோடு தொடர்பு கொள்ள எனக்கு விருப்பமில்லை. அதைவிடவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஆதரிக்கும் ஜஸ்டிஸ் கட்சியோடு தொடர்புடையதாக சுயமரியாதை இயக்கம் நடத்தப்பட்டு வந்ததால், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் நேரடியாக ஈடுபட்டிருந்த நான் இதனோடு தொடர்பு கொள்வது சாத்தியமில்லாமற் போய் விட்டது.

பெரியார் தனிவழி

சுயமரியாதை இயக்கத்தின் தந்தையான பெரியார் ஈ.வெ.ரா. தேசபக்தியிலும் விடுதலை ஆர்வத்திலும் எனக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர். தியாகத்திலும் கூடத்தான்.

ஆயினும், மூடநம்பிக்கைகளும், புரோகிதர்களின் புரட்டும், சாதிவழிப்பட்ட ஏற்றத் தாழ்வுகளும் முற்றிலும் அகன்றாலன்றி, அன்னியரை வெளியேற்றி அரசியல் விடுதலை பெறுவது சாத்தியமில்லை என்று அவர் நம்பினார். விடுதலை பெற்ற இந்தியாவில் திரும்பவும் உயர் சாதியினரே அரசியலில் ஆதிக்கம் பெற்று விடுவார்கள் என்றும் அவர் அஞ்சினார்.

ஆரிய சமாஜ ஸ்தாபகரான சுவாமி தயானந்த சரஸ்வதி, பிரம்ம சமாஜ ஸ்தாபகரான ராஜா ராம்மோகனர் ஆகிய சீர்திருத்தவாதிகளும் பெரியார் ஈ.வெ.ரா.வைப் போன்றே எண்ணினர். அதனால், அன்னிய ஆட்சியின் கொடுமைகளை எதிர்க்க முற்படாமல், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக உள்நாட்டில் வலியார் எளியாருக்கு இழைத்துவரும் கொடுமைகளை எதிர்ப்பதிலேயே அவர்கள் கருத்து செலுத்தினர். அதற்கெனத் தனித்தனியே இயக்கங்களும் கண்டனர். ஆகவே, பெரியார் ஈ.வெ.ரா.வும் அரசியல் விடுதலையைவிட சமூக விடுதலையே முக்கியமெனக் கருதியதிலே பிழை எதுவுமில்லை. இந்த உண்மை அந்தக் காலத்திலேயே எனக்குப் புரிந்திருந்தது. அதனாற்றான், சுயமரியாதை இயக்கத்திடம் மேலெழுந்த வாரியாகப் பற்று கொண்டவனாகி, 'குடியரசு'ப் பத்திரிகையைத் தொடர்ந்து படித்து வந்தேன். ஆனால், சமுதாயக் கொடுமைகள் விடுதலை இந்தியாவிலே உடனடியாக ஒழிக்கப்பட்டு விடுமென்று தேசியத் தலைவர்கள் கூறி வந்ததனை நான் நம்பினேன். காந்தியடிகள் சமூகக் கொடுமைகளை எதிர்ப்பதில் காட்டி வந்த அக்கறையும் ஆர்வமும் சுதந்திர இந்தியாவில் அந்தக் கொடுமைகள் ஒழிக்கப்படுமென்ற நம்பிக்கையை எனக்கு ஏற்படுத்தின.

இது எப்படியிருப்பினும் சரி, தயானந்தர், ராசா ராம் மோகன் ராய் போன்று ஆக்க வழியில் - அன்னிய அரசின் ஆதரவோடு பெரியார் ஈ.வெ.ரா.வும் சமூக சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்டிருக்கலாம். விடுதலைப் போராட்டத்தின் விரோதியாகச் செயல்பட்டிருக்கத் தேவையில்லை. இதுவே சுயமரியாதை இயக்கம்பற்றி எனது கருத்து.

நான் அரிசன சேவா சங்கத்தின் பிரச்சாரகனாகச் சேரி தோறும் சென்று பணிபுரிந்த போது, அரிசன மக்களிடையே பக்தி நெறியை வளர்க்க வேண்டும் என்ற கருத்துடன் பஜனைக் கும் ஏற்பாடு செய்வேன். என்னுடன் சக பிரச்சாரகராக இருந்த திரு. கோபால் சாஸ்திரி என்ற இளைஞர் தமிழிலே பக்திப் பாடல்களைப் பண்ணோடு கலந்து பாடுவார். அரிசன மக்க ளைக் கூட்டி வைத்து காந்தியடிகளின் போதனைகளை அவர்க ளுக்கு எடுத்துக் கூறுவேன். ஆம்; அரிசன முன்னேற்றப் பணி என்பது இந்துமதப் பிரச்சாரமாகத்தான் இருந்தது. இது சுயமரி யாதைக்காரர்களுக்குப் பிடிக்காதுதானே! அந்நாளில் சென்னை நகரத்துச் சேரிகளிலிருந்த படித்த அரிசன இளைஞர்களிடையே சுயமரியாதை இயக்கத்திற்கு நல்ல செல்வாக்கிருந்தது. அவர்க ளிலே பலர், பெரியார் ஈ.வெ.ரா.வின் வாக்கை வேதவாக்காகக் கருதினர். அதனால், அவர்களில் சிலர் நான் நடத்தும் கூட்டங்க ளிலே புகுந்து கேள்விகள் கேட்பார்கள். அவற்றிற்குப் பதிலளிக் குமாறும் வற்புறுத்துவார்கள். இந்தத் தொல்லைகளால் சுயமரி யாதை இயக்கத்திடம் எனக்கிருந்த நல்லெண்ணம் பாதிக்கப் பட்டதென்றே சொல்ல வேண்டும். ஆயினும், ஓராண்டுக் காலமே அரிசன சேவாசங்கப் பிரச்சாரப் பொறுப்பில் இருந்தே னாதலால், சுயமரியாதை இயக்கத்தினர் தந்த தொல்லைகளி லிருந்து விரைவில் விடுதலை பெற்றுவிட்டேன்.

சான்றோர் தொடர்பு

அரிசனப் பிரச்சாரகனாக இருந்த போதுதான் சென்னை நகரில் உயர்ந்த நிலையில் இருந்த பெருந்தலைவர்களோடு எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. அப்போது உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த திவான்பகதூர் வி.பாஷ்யம் ஐயங்கார், சட்டமன்ற உறுப்பினரும் அரிசனத் தலைவர்களில் ஒருவரு மான ராவ்சாகிப் தருமலிங்கம் பிள்ளை ஆகிய சான்றோர்கள் சென்னை மாவட்ட அரிசன சேவா சங்கத்தின் நிர்வாகத்திலே நேரடியாகப் பங்கு பெற்றனர்.

பின்னாளில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அமைச் சரவையில் சட்டத்துறை அமைச்சராக இருந்த திரு.கே. பாஷ் யம் ஐயங்கார், திரு.பி. ஜகந்நாத தாஸ் (பிற்காலத்தில் ஒரிசா

மாநில உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்தவர்) ஆகியோரும் அரிசனப் பணியிலே முன்னணியில் இருந்தனராதலால் இவர்களுடனும் நெருங்கிப் பழகும் பேற்றினைப் பெற்றேன்.

இராயப்பேட்டையிலுள்ள இந்திய ஊழியர் சங்க (சர்வென்ட்ஸ் ஆஃப் இந்தியா சொசைடி) கட்டிடத்தில் சென்னை மாவட்ட அரிசன சேவா சங்க அலுவலகமிருந்தது. ஊழியர் சங்கத்தின் செயலாளரும் ஆந்திர பிரமுகருமான திரு. வெங்கட சுப்பையா, அரிசன சேவா சங்கத்திற்கும் செயலாளராக இருந்தார். இவருடைய நட்பால் இந்திய ஊழியர் சங்கத்தின் கௌரவமிக்க அங்கத்தினர் பலரோடும் எனக்குத் தொடர்பேற்பட்டது. அவர்களில் மகாகனம் சீனிவாச சாஸ்திரியார் அவர்கள் முக்கியமானவராவார். சாஸ்திரியார் மிகுந்த அன்போடு என்னுடன் பழகுவார். என்னுடைய பேச்சைக் கேட்பதிலே அவர் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

இப்படி, சான்றோர் பலரின் தோழமை பெற்று அரிசன மக்களுக்குத் தொண்டாற்றி வந்தேன். இந்த நிலையில் காந்தியடிகள் அரிசனச் சுற்றுலாவை மேற்கொண்டு 20.12.33-ஆம் நாளிலே சென்னை நகருக்கு வருகை தந்தார்.

காந்தியடிகளைத் தரிசித்தேன்

சென்னை மாவட்ட அரிசன சேவா சங்கத்தின் பிரச்சாரகன், வட சென்னை அரிசன சேவா சங்கத்தின் செயலாளன் என்ற முறையில் வட சென்னையிலே அடிகளாரை வரவேற்றுப் பொதுக் கூட்டம் நடத்துவதிலும், அரிசன நிதிக்குப் பொருள் திரட்டி அவர்களிடம் அளிப்பதிலும் நான் கருத்து செலுத்தினேன்.

வடசென்னை வாசியும் தமிழ்நாடு முழுவதும் அறிந்த காங்கிரஸ் தலைவர்களில் ஒருவருமான சர்தார் பு.ம. ஆதிகேசவலு நாயகர் வடசென்னை அரிஜன சேவா சங்கத்தின் தலைவராக இருந்தார். அரிஜனப் பணியில் மட்டுமின்றி, அரசியல் பணிகளிலும் நானும் அவரும் பல்லாண்டுகள் ஒன்றுபட்டு உழைத்தோம். இணை பிரியாத தோழர்களாகவும் இருந்தோம்.

அவர் தன் உடன்பிறந்த சகோதரனாக, என்னைப் பாவித்து அன்புடன் நடத்தினார். பிற்காலத்தில் சென்னை மாநகராட்சி உறுப்பினர் — துணை மேயர் பதவிகளையும், சென்னை சட்டமன்றம் — டில்லி ராஜ்ய சபை ஆகியவற்றில் அங்கத்தினர் பதவிகளையும் இவர் வகித்தார்.

திரு.என். திருவேங்கட நாயகர், வடசென்னை அரிசன சேவா சங்கத்தின் கூட்டுச் செயலாளராக இருந்து என்னோடு தோழமை கொண்டு பணியாற்றினார்.

நாங்கள் மூவரும் காந்தியடிகளை வரவேற்கும் பணியிலே தீவிரமாகக் கருத்து செலுத்தினோம். 29.12.33 அன்று இராயபுரம் ராபின்சன் பூங்கா திடலிலே அடிகள் பேசுவதற்காகப் பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தோம். என் வாழ்நாளிலேயே காந்தியடிகளாரை நெருங்கவும், அவரோடு உரையாடவும் அவர் அமர்ந்துள்ள மேடையில் அவருடன் சேர்ந்திருக்கவும் அப்போதுதான் முதன் முதலாக வாய்ப்பு கிடைத்தது. காந்தியடிகளைக் கண்கண்ட தெய்வமாகவே கருதினேனாதலால், அவரோடு தொடர்புகொள்ள நேர்ந்ததை நினைத்து நெஞ்சம் பூரித்தது.

வடசென்னையில் அடிகளாருக்கு நடந்த வரவேற்புக் கூட்டத்திலே மக்கள் பல்லாயிரக் கணக்கில் குழுமியிருந்தனர். ஏழைத் தொழிலாளியாகிய நான் அவ்வளவு பெருங்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த பொறுப்பினை ஏற்றதையும், மனித குல மாணிக்கத்தை வரவேற்றுப் பேச நேர்ந்ததையும் இன்று நினைத்தாலும் நெஞ்சம் பெருமிதமடைகின்றது. என்னை விடவும் என் பெற்றோர் அதிகமாகப் பூரிப்படைந்தனர். வரவேற்புக் கூட்டத்திலே அரிஜன நிதிக்கென வடசென்னையில் நாங்கள் திரட்டிய பணத்தை சர்தார் பு.ம. ஆதிகேசவலு நாயகர் காந்தியடிகளிடம் கொடுத்தார். நான் தமிழில் வரவேற்பு மடல் வாசித்தளித்தேன். ஐயன் தன் இரு கைகளையும் நீட்டி இந்த எளிய தொண்டன் கையிலிருந்து வரவேற்பிதழைப் பெற்றுக் கொண்டபோது எனது ஜென்மம் சாபல்யமடைந்ததைப் போன்ற ஒரு உணர்ச்சி எனக்கேற்பட்டது. இந்தக் கூட்டத்தின் மற்ற நிகழ்ச்சிகள் இப்போது சரிவர நினைவில்லை. ஆனால், எல்லாம் சரியாகவே நிகழ்ந்து முடிந்தன.

தொழிற் சங்கத் தொடர்பு

அரிசனத் தொண்டிலும் காங்கிரஸ் பணிகளிலும் மிகுந்த உற்சாகமாக ஈடுபட்டு வந்தேனென்றாலும், இன்னொரு புறத்தில் வாழ்க்கைப் போராட்டம் என்னை வாட்டிக் கொண்டுதான் இருந்தது. அரிசனப் பணியிலே முழுநேர ஊழியனாக இருந்த காலத்திலே மாதம் முப்பது ரூபாய் எனக்கு உதவித் தொகை கிடைத்து வந்தது. அதையும் இழந்தபின் என் குடும்பத்தாரின் வாழ்க்கை பழைய குருடியாகி விட்டது. தம்பியின் வருவாய் குடும்பத்தின் தேவைக்குப் போதுமானதாயில்லை. அதனால் வேலை தேடும் முயற்சியை மேற்கொண்டேன். அச்சகங்களிலேயும், பக்கிங்காம் — கர்னாடிக் மில்களிலேயும் வேலை தேடி அலைந்தேன். வேலை விரும்பி பல அலுவலகங்களின் நுழைவாயிலிலே பல நாட்கள் காத்திருந்த கசப்பான அனுபவம் இன்று நினைவுக்கு வந்தாலும் எனது மனது வேதனையுறும்.

தற்கொலை செய்துகொள்ள முடிவு

ஒருநாள் பயங்கரமான இரவு! இரவிலே ஒன்றும் பயங்கரமில்லை. ஆனால், அந்த இரவிலே நான் ஒரு பயங்கர அனுபவத்தைப் பெற்றேன். அந்த நாள் முழுவதும் என் குடும்பத்தார் படுபட்டினி! சதா பட்டினியோடு போராடி மனம் உடைந்து போய்விட்டது. வாழ்க்கையை முடித்துக் கொள்ள முடிவெடுத்தேன். எனது தந்தையின் போக்கில் எனக்கேற்பட்ட வெறுப்பும் இதற்கு ஒரு காரணமாகும். பட்டினி கிடந்த நிலையும் அன்று என் தந்தையார் என் பக்திக்குரிய அன்னையைக் கடுமையாக அடித்துவிட்டார். மனைவியைக் கணவன் அடிப்பதென்பது நம்நாட்டில் சகஜமாகிவிட்டது. அது கணவனுக்குள்ள உரிமை என்றும் கருதப்படுகிறது. இது எனக்கு என்றுமே பிடித்ததில்லை. இந்த ஒன்றுக்காகவே நம் தாய்க் குலத்தை நாம் வழிபடலாம். அவ்வளவு பொறுமைசாலிகள்! என் தந்தையார் தன் மனைவியை அடிப்பது வழக்கந்தான் என்றாலும் அன்று

என்னவோ என் மனம் அதிர்ச்சி அடைந்துவிட்டது. பட்டினியால் ஏற்பட்ட சலிப்பும் அதனோடு கலந்து கொண்டு விட்டது. அதனால் 'கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி' என்ற சங்க கால மன்னனின் வாரிசாகிவிட முடிவெடுத்தேன்.

வீட்டைவிட்டுப் புறப்பட்ட நான் இராயபுரம் கடற்கரையை அடைந்தேன். நெடுநேரம் கடல் அலைகள் என் காலை நனைக்க அனுமதித்து, திக்பிரமை பிடித்தவன்போல இப்படியும் அப்படியுமாகக் கடலோரத்தில் உலாவிக் கொண்டிருந்தேன். பின்னர் எனது முடிவு மாறிவிட்டது. இதற்கு என்ன பெயர் வைப்பதென்றே எனக்குத் தெரியவில்லை. 'கோழைத்தனம்' எனலாம்; ஆனால் உண்மையில் தற்கொலைதான் கோழைத்தனம்; அதனைத் தவிர்ப்பதல்ல.

கடலோடு கலக்க நினைத்தவன் அந்த முடிவை மாற்றிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டு, சென்னை மூர்மார்க்கெட் எதிரிலுள்ள சலவை இராமசாமிப் பிள்ளை சத்திரத்தை அடைந்தேன். என் மனம் பெரிதும் குழப்பமடைந்திருந்தது. என்ன செய்வதென்றே எனக்குத் தோன்றவில்லை. வீட்டிற்குத் திரும்ப மனம் விரும்பவில்லை. சத்திரத்தில் இரவைக் கழிக்க முடிவெடுத்து, சுகாதாரமற்ற — சன நெருக்கடியான அந்தச் சத்திரத்திலே மூன்று மணி நேரம் படுத்திருந்தேன். உறக்கம் வரவில்லை. இரவு 12 மணிக்கு எழுந்து வண்ணாரப்பேட்டையிலுள்ள என் வீட்டை நோக்கி நடந்தேன். இரவு ஒரு மணியாகியும் என் வீட்டில் அழுகை ஓயவில்லை. ஆம்; நான் என்னவாகிவிட்டேனோ என்ற அச்சத்தால் என் பெற்றோர் அழுது கொண்டிருந்தனர். என்னைக் கண்டபோது என் தந்தையாருக்கு ஒரே ஆனந்தம்! 'வந்தாயா மகனே' என்று திரும்பத் திரும்பக் கூறி, கட்டி அணைத்துக் கொண்டு கண்ணீரால் என் உடம்பை நனைத்தார்.

தடுத்தாட்கொண்ட தாய்

இந்த அனுபவம் ஏற்பட்ட இரண்டொரு வாரங்களுக்குப் பின்னர் மற்றொரு பயங்கரமான முடிவை நான் மேற்

கொண்டேன். மதுவிலக்கில் எனக்கு ஆழ்ந்த பற்றுதல் உண்டென்பதனையும், குடும்பத்தையும் நஷ்டப்படுத்தி, குலத்தாரின் பகையையும் தேடிக்கொண்டு, மதுக்கடைகளை மறியல் செய்தேன் என்பதையும் ஏற்கனவே கூறியுள்ளேன். ஆனால், ‘பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்’ என்னும் பழமொழிக்கிணங்க, எப்படியோ என் மனம் மாறிவிட்டது. கள்ளுக்கடை வணிகர்களிடம் வேலை கேட்கலானேன். ஆம், பல தடவை சிந்தித்துப் பார்த்தும் பட்டினியிலிருந்து என் குடும்பத்தை மீட்க வேறு வழி தெரியாததால் இந்த விபத்துக்கு என்னை ஆளாக்கிக் கொள்ள முடிவெடுத்தேன். இதனை என் பெற்றோரிடம் கூறாமலே சென்னையில் பல கள்ளுக்கடைகளின் சொந்தக்காரார் ஒருவரை அணுகி, குமாஸ்தா வேலை தருமாறு கேட்டேன். எனது நிலைக்கு இரங்கி, தினம் ஒன்றேகால் ரூபாய் கூலிக்கு என்னை வேலையில் அமர்த்திக் கொள்ள அவரும் இசைந்தார். மறுநாளே வேலைக்கு வரும்படி ஆணையிட்டார். அல்லல் நிறைந்த அரசியல் வாழ்வுக்குத் தலை முழுக்குப் போட்டுவிடத் துணிந்தேன். ஆம்; அன்றைய காங்கிரஸ்காரர்கள் பரம வைதிகர்கள். அதனால் கள் வாணிபத் தொழிலில் நான் ஈடுபட்டுவிட்ட பின், அவர்கள் என்னை மரியாதையாக நடத்த மாட்டார்கள் என்று அஞ்சி, நானாகவே அரசியலிலிருந்து ஒதுங்கிவிடத் தீர்மானித்தேன். நான் மது வாணிபத் துறையில் தொழில் புரியத் துணிந்தது, என் பெற்றோரின் துயர் துடைக்கத்தான். ‘‘ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க, சான்றோர் பழிக்கும் வினை’’ என்ற குறட்பா அப்போது எனக்குத் தெரியாது.

எனக்குத் தொழில் கிடைத்துவிட்ட செய்தியை என் அன்னையிடம் தெரிவித்தால், அவர் பெருமகிழ்ச்சிடைவார் என்று நம்பி வீடு சேர்ந்து, எனக்கு வேலை கிடைத்த செய்தியை அன்னையிடம் கூறினேன். ஆனால், நான் நம்பியதற்கு மாறாக, அவர் எனது மனமாற்றத்தை எள்ளி நகையாடினார்.

‘‘இவ்வளவு காலமாக, மதுவிலக்குப் பிரச்சாரம் செய்து வந்தாய்; கள்ளுக்கடைகளை மறியல் செய்து, என் அண்ணனின் வெறுப்புக்கும் ஆளானாய்; குலத்தாரைப் பகைத்துக் கொண்டாய்; தந்தையை வேலையிலிருந்து நீக்கி, குடும்பத்திற்கு வந்து

கொண்டிருந்த வருவாயைக் கெடுத்தாய். இப்போது நீயே மதுத் தொழிலில் ஈடுபடப் போகிறேனென்கிறாயே, இது உனக்குத் தகுமா? ஊர் சிரிக்காதா? நாம் பட்டினியால் சாவதாயினும் சரி; அந்தத் தொழில் உனக்கு வேண்டாம்'' என்று என் அன்னையார் உறுதி தோய்ந்த குரலில் கூறி, என்னைத் தடுத்தாட் கொண்டார். அன்று அவர் என்னைத் தடுக்கவில்லையானால், என் வாழ்க்கை திசை மாறியிருக்கும்.

அன்னையார், ஒரு புதிய செய்தியையும் என்னிடம் கூறினார். அதாவது, ''தமிழ்நாடு'' அச்சகத்திலிருந்து சிலர் வந்தார்கள். அவர்கள் திரும்பவும் உனக்கு வேலை கொடுக்க டாக்டர் பி. வரதராசுலு நாயுடு இணங்கியிருப்பதாகவும், நாளைக்கே நீ சென்று வேலையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் சொல்லிவிட்டுப் போனார்கள் என்று கூறினார். தெய்வமே என்பால் கருணை காட்டி, நான் அரசியல் துறையிலே தொடர்ந்து தொண்டாற்றுவதற்குத் துணை புரிந்ததாக நான் நம்பினேன்.

மது வாணிபத் தொழிலுக்குச் சென்றிருந்தால், மாதம் ரூ.45 வருமானம் கிடைத்திருக்கும். அன்னையின் ஆணைப்படி நான் திரும்பவும் ''தமிழ்நாடு'' அச்சகத்தில் பழைய கம்பாசிடர் வேலைக்குப் போனதால் மாத வருமானம் ரூ.18தான் கிடைத்தது. வருமானம் குறைவுதான் என்றாலும், என் தியாக வரலாறு காப்பாற்றப்பட்டு விட்டதல்லவா! நான் அரசியல் வாழ்விலே முன்னேற வேண்டுமென்பதில் என் அன்னையாருக்கிருந்த ஆர்வம் இந்தத் தியாகத்தைச் செய்வதற்கான துணிவை அவருக்குத் தந்ததெனலாம்.

எப்படியோ குலத் தொழில் என்னும் படுகுழியில் விழாமல் தெய்வம் என்னைக் காப்பாற்றிவிட்டது. புதிய தமிழகம் காணும் புனிதப் பணிக்கென்றே என்னைப் படைத்த இறைவன், வேறு திசையில் திருப்பி விடுவானோ? பாரதியார், ''ஆரமுது உண்ணுதற்கு ஆசை கொண்டார் கள்ளில் அறிவைச் செலுத்துவாரோ?'' என்று பாடினார். அதுபோல, தமிழமுதை நாட்டு மக்களுக்கு வழங்கப் பிறந்த என்னை, கள் வழங்கும் வாணிபத்தில் கடவுள் ஈடுபடுத்துவாரா?

தங்கையின் திருமணம்

எனக்கு பாலம்மாள் என்ற ஒரு தங்கை உண்டென்று ஏற்கனவே கூறியிருக்கிறேன். அந்தத் தங்கையிடம் நான் எல்லையற்ற அன்பு வைத்திருந்தேன். நான் பிறந்து 15 ஆண்டு களுக்குப் பின் என் தங்கை பிறந்ததால், நான்தான் அதனைத் தூக்கி வளர்த்தேன். குழந்தைகளைத் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சுவதிலே, எனக்குத் தனி ஆர்வமுண்டு.

''குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்''

என்றார் வள்ளுவர். ''தம் மக்கள்'' என்பதற்குத் தனிப்பொரு ளுண்டு. ஆயினும், நான், என் தாய் பெற்ற சேய்களை — என் தங்கை, தம்பி பெற்ற செல்வங்களை — நான் பெற்ற மக்களை — என் மக்கள் பெற்ற பேரன், பேத்திகளையேயன்றி, ''தம் மக்கள்'' என்பதிலுள்ள உறவுக்குப் புறம்பான அயலார் குழந்தைகளையும் தூக்கி வளர்த்து, அவற்றின் மழலை கேட்டு மகிழ்ந்திருக்கிறேன் — இன்னமும் மகிழ்கிறேன். இப்படி, என் கைகளிலே தாங்கி, மார்பிலே அணைத்து, மடியிலே தவழ விட்டு, தோளிலே சுமந்து வளர்த்த குழந்தைகள் எத்தனை எத்தனையோ! போராட்டங்கள் நிறைந்த எனது வாழ்க்கையிலே நான் இடைவிடாமல் அனுபவித்து வரும் ஒரே இன்பம் குழந்தை இன்பந்தானே!

என் தங்கைக்குத் தக்க வரன்தேடி 13.7.33-இல் திருமணம் முடித்து வைத்தேன். குடும்பத் தலைவரும் தலைவியுமான என் தாய் தந்தையரிருப்பினும், எனக்கு சுமார் 20 வயதான பின்னர், குடும்பப் பாரம் முழுவதும் என் தலையில் விழுந்துவிட்டது. அதனால், தங்கையின் திருமணத்தை நான்தான் நடத்தி வைத் தேன். ஆம்; கடன்பட்டுத்தான். தங்கையின்பாலிருந்த அன்பு காரணமாகத் திருமணத்தைச் சிறப்பாகவே நடத்தி வைத்தேன். காங்கிரஸ் ஆதரவாளர்களும், தொண்டர்களும் ஏராளமாக வந்திருந்து என் தங்கையின் திருமணத்தைப் பெருமைப்படுத்தி னர். அந்நாளில் காங்கிரஸ்காரர்கள் ஒரே குடும்பத்தினர் போல் வாழ்ந்தனர்.

அச்சுத் தொழிலாளர் சங்கம்

உழைத்துப் பிழைக்கும் தொழிலாளியாக அரசியல் வாழ்வில் புகுந்த நான் நாளடைவில் தொழிற்சங்க இயக்கத்தோடும் நெருங்கித் தொடர்பு கொள்ளலானேன். அந்நாளில் விடுதலைப் போரில் கலந்திருந்த தேசபக்தர்கள் தொழிற்சங்க இயக்கத்திலேயும் முன்னணியிலிருந்தனர். எனக்கிருந்த தேசபக்தி காரணமாகவே நான் தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபடலானேன். தொழிற்சங்க இயக்க மேடையிலேதான் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரை நான் முதன் முதலாகக் கண்டேன். திரு.வி. கல்யாணசுந்தரனார், சென்னைத் தொழிலாளர் சங்கத்தில் எல்லையற்ற செல்வாக்கு பெற்றிருந்தார். அப்போது நான் தமிழ் இலக்கியங்களிலே புலமை பெற்றிருக்கவில்லை. ஆதலால், தொழிலாளர் தலைவர் என்ற நிலையிலேதான் தமிழ்ப் பெரியார் திரு.வி. கலியாண சுந்தரனாரோடு எனக்கு முதன் முதலாகத் தொடர்பு ஏற்பட்டது. அந்நாளில், மிகுந்த உணர்ச்சியோடு அரசியல் மேடைகளில் பேசிவந்தேனென்றாலும், காங்கிரஸ் கூட்டங்களைவிடத் தொழிலாளர் கூட்டங்களிலேதான் எனது உணர்ச்சிகரமான பேச்சுக்கு அதிக மதிப்பு இருந்தது. ஆம்; அந்நாளில் தொழிற்சங்க மேடைகளிலே பேசிய தலைவர்கள் முதலாளித்துவக் கொடுமையை அனுபவத்திலே அறிந்தவர்கள் அல்லர். அவர்களிலே சிலர் மிகுந்த செல்வந்தவர்களாகவும் இருந்தனராதலால், வறுமையால் வாடும் தொழிலாளி வர்க்கத்தின் உணர்ச்சியை அப்படியே பிரதிபலித்துப் பேசும் வாய்ப்பு அவர்களுக்கு இருக்கவில்லை. அதனால், தொழிலாளர் தலைவர்கள் பேசுகின்ற மேடையிலே, தொழிலாளியாகவே இருந்து கொண்டு, தொழிலாளி வர்க்கத்தின் இன்னல்களை வருணித்துப் பேசிய எனக்கு அதிக மதிப்பேற்பட்டது.

திரு.ஏ.எஸ்.கே. ஐயங்கார் தலைமையில் இயங்கிவந்த சென்னை மாவட்ட அச்சுத் தொழிலாளர் சங்கத்தோடு தொடர்பு கொண்டு, அதன் துணைத் தலைவனாக ஒன்றிரண்டு ஆண்டுகள் இருந்து வந்தேன். அப்போது நான் ''தமிழ்நாடு'' அச்சகத்தில் வேலை பார்த்து வந்ததால், அந்த அச்சகத் தொழிலாளர்கள் சார்பிலேதான் சென்னை மாவட்ட அச்சுத் தொழிலாளர் சங்கத்

தில் இடம் பெற்றிருந்தேன். அதுவன்றி, 'தமிழ்நாடு' அச்சகத் தொழிலாளர் சங்கத்திலும் இரண்டாண்டுக் காலம் தலைவனாக இருந்தேன்.

ஜீவாவுடன் தோழமை

அகில இந்திய அச்சுத் தொழிலாளர் சங்கத்தின் மாநாடு ஒன்று 1933-ஆம் ஆண்டு சென்னை செளகார்பேட்டையிலுள்ள குஜராத்தி மண்டல் கட்டிடத்தில் நடைபெற்றது. அந்த மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசும் வாய்ப்பு எனக்குத் தரப்பட்டது. அகில இந்திய மாநாடொன்றில் நான் கலந்து கொண்டு உரையாற்றியது இதுதான் முதன் முறையாகும். மீரத் சதி வழக்குக் கைதிகளாயிருந்து சொல்லொணா இன்னல்களை அனுபவித்து விடுதலை பெற்றிருந்த கம்யூனிஸ்டு தலைவர்களில் இருவர் அந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். அவர்களில் திரு. எஸ்.வி.காட்டே என்பவர் முக்கியமானவராவார். மாநாட்டுத் தலைவரும் மீரத் சதி வழக்கில் சம்பந்தப்பட்டவர்தான். அந்த மாநாட்டின்போதுதான் தோழர் ப.ஜீவானந்தம் அவர்களை முதன் முதலாகச் சந்தித்து அவரோடு தோழமை கொண்டேன். அப்போதுதான் சுயமரியாதை இயக்கத்திலிருந்து விலகி, தேச விடுதலை இயக்கத்தில் கலந்திருந்த திருமதி நீலாவதி ராமசுப்பிரமணியம் அவர்களும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசினார்.

அந்த நாளில், காங்கிரஸ்காரர்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இடையிலிருந்த கொள்கை வேறுபாட்டினை நான் விளங்கிக் கொள்ளவில்லை. கம்யூனிஸ்டுக் கட்சி வெளிப்படையாக அந்தக் காலத்தில் வேலை செய்யாததும் எனது புரியாமைக்கு ஒரு காரணமாகும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து விடுதலைப் போரில் ஈடுபட்டவர்களெல்லாம் காந்தி பக்தர்கள் என்றே நான் கருதினேன். உண்மையில் அந்நாளில் கம்யூனிசத்தில் நம்பிக் கொண்டிருந்த — திரைமறைவில் கம்யூனிஸ்டுகளாகப் பயிற்சி பெற்று வந்த பலர் தங்களுக்குள்ள ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சி காரணமாகக் காங்கிரசிலே இணைந்திருந்தனர். அதனாலும் அவர்களை இனந்தெரிந்து கொள்வது என்போன்ற

சாமான்யர்களுக்கு இயலாததாக இருந்தது. நான் தொழிற்சங்க இயக்கத்தோடு தொடர்பு கொண்டிருந்த காலத்திலும் என் உள்ளத்தில் காந்தியமே குடிகொண்டிருந்தது. அதனால், குஜராத்தி மண்டலில் நடைபெற்ற அச்சுத் தொழிலாளர் மாநாட்டில் நிகழ்த்திய திறப்புரையிலே காந்தியத்தின் சிறப்பியல்புகளை விவரித்துப் பேசினேன். அதற்கு மாநாட்டில் ஒருமித்த வரவேற்பு இருக்குமென்று என் அறியாமையால் நான் நம்பினேன். மாநாட்டின் முற்பகல் நடவடிக்கைகள் முடிந்து, பிற்பகலில் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் நடந்தது. அதில் பேசிய ஒன்றிரண்டு தோழர்களால் எனது பேச்சு திறனாய்வு செய்யப்பட்டது. எனக்குச் சினமூட்டாத வகையில் என் சிந்தனையைக் கிளறிவிட்டு, 'காந்தியம்' எனப்படும் தத்துவத்தால் தொழிலாளி வர்க்கம் முன்னேற முடியாதென்பது எனக்கு உணர்த்தப்பட்டது. இந்தப் போக்கு அப்போது எனக்கு வியப்பைத் தந்தது. எனது நிலையை விளக்கி நான் பேசியபோது, காந்தியத்தில் எனக்குள்ள அழுத்தமான பற்றுதலைத் திரும்பவும் உறுதிப்படுத்தினேன். அந்த விவாதம் தோழமைச் சூழலிலே நடைபெற்றதால் எனது காந்தியக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாத கம்யூனிஸ்டுத் தோழர்கள் மீது எனக்கு அன்பும் மரியாதையும் ஏற்பட்டன. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் கம்யூனிஸ்டுகளுடன் முதன் முதலாக தொழிற்சங்கத்தில் நான் தோழமை கொள்ள நேர்ந்தது.

இந்த மாநாட்டிற்கப்புறம் வட இந்தியத் தோழர் எஸ்.வி. காட்டே அவர்களை அடிக்கடி சந்திக்க வாய்ப்பு ஏற்பட்டு அவருடைய தோழமையைப் பெறலானேன். அவர் மிகப் பெரிய அறிவாளி. சிறந்த தியாகி. கம்யூனிஸ்டு இயக்கத்தைக் கட்டி வளர்ப்பதிலே அவர் காட்டிய அக்கறையும் உழைத்த உழைப்பும் கம்யூனிசத்தை விரும்பாதவர்களும் போற்றத் தக்கவையாகும்.

தோழர் ஜீவானந்தம் தமிழ் நாட்டினராதலால், குசராத்தி மண்டல் மாநாட்டிற்குப் பின்னர் அவரும் நானும் நெருங்கிப் பழகலானோம். என் இதயத்தில் இடம்பெற்ற அரசியல் தலைவர்கள் சிலரிலே தோழர் ஜீவாவும் ஒருவராவார்.

நான் தொழிற்சங்க இயக்கத்தோடு தொடர்பு கொண்ட ஆரம்ப காலத்திலே கம்யூனிஸ்டுத் தோழர்கள் பலர் என்னிடம் மிகவும் நெருங்கி எனக்கு கம்யூனிசத்தின்பால் பற்று ஏற்படும் படி செய்ய முயன்றனர். அந்நாளில் சோவியத் ருஷ்யப் பிரசுரங்கள் இந்தியாவில் சட்ட விரோதமானவையாக்கப் பட்டிருந்தன. என்றாலும், சோவியத் நாட்டிலிருந்து ஏராளமான பிரசுரங்கள் இந்தியாவிற்குள் இரகசியமாக வந்து கொண்டிருந்தன. அவற்றை வைத்துக் கொண்டிருப்பது தண்டனைக்குரிய குற்றமாக இருந்து வந்தது. அதனால், என்னுடன் தொடர்பு கொண்ட கம்யூனிஸ்டுத் தோழர்கள் சோவியத் பிரசுரங்களை எனக்கு ரகசியமாக வழங்கி, அவற்றைப் படிக்குமாறு தூண்டுவார்கள். அவர்களுடைய விருப்பத்தை மறுக்க இயலாமல் அந்தப் பிரசுரங்களை நான் பெற்றுக் கொள்வேன். அவை அனைத்தும் ஆங்கில மொழியில் இருந்தமையால், அவற்றைப் படித்துப் புரிந்துகொள்ள என்னால் இயலாதிருந்தது. ஆங்கில மொழியில் இப்போது எனக்குள்ள அறைகுறை ஞானமும் அப்போது இருக்கவில்லை. ஆயினும், ஆங்கிலம் தெரிந்த நண்பர்களைப் படிக்கச் சொல்லி, அந்தப் பிரசுரங்களிலிருந்த விஷயங்களைத் தெரிந்து கொள்வேன். உண்மையில் என்னிடம் தரப்பட்ட சோவியத் பிரசுரங்கள் அந்த நாட்டு மக்களின் முன்னேற்றத்தைக் காட்டும் படங்களும் செய்திகளும் கொண்டவையாகவன்றி, வர்க்கப் புரட்சியை எனக்குப் போதிக்கும் கருத்துகளைக் கொண்டவையாக இல்லை. ருஷ்ய நாட்டு மக்களின் வளர்ச்சியைக் காட்டும் சாதாரண பிரசுரங்களுக்குக் கூட அப்பொழுது இந்த நாட்டிலே 'தடை' இருந்து வந்தது.

வி.வி.கிரியின் நட்பு

இப்போது இந்தியக் குடியரசின் தலைவராக உள்ள திரு.வி.வி. கிரியவர்களோடு 1933-ஆம் ஆண்டு தொடங்கி 1946-ஆம் ஆண்டு வரை நான் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தேன். தோழர் பி.ஆர்.கே. சர்மா என்ற தொழிற்சங்கத் தலைவர் மூலமாகத்தான் நான் திரு. வி.வி.கிரியவர்களின் நட்பைப் பெற்றேன். பெரம்பூர் ரெயில்வே தொழிலாளர் சங்கத்தின் ஆண்டு விழாக்களிலே அடிக்கடி பேசும் வாய்ப்பினை நான்

பெற்று வந்தேன். எனக்குப் பின்னர் தாம் பேசும்போது முன்னே நான் பேசிய கருத்துகளை ஆதரித்தும் புகழ்ந்தும் என்னைப் பெருமைப்படுத்துவார் திரு.வி.வி. கிரி. திருவொற்றியூர் விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலைத் தொழிலாளர் சங்கக் கூட்டங்களிலும் நாங்கள் அடிக்கடி பேசுவோம். நான் தண்டை யார்பேட்டையில் குடியிருந்தபோது, பி.ஆர்.கே. சர்மாவும், திரு.வி.வி. கிரியும் திருவொற்றியூர் விம்கோ யூனியன் கூட்டத் திற்குச் செல்லுங்கால், வழியில் என் வீட்டிற்கு வந்து என்னை யும் உடன் அழைத்துச் செல்வார்கள். அப்போது ஒன்றிரண்டு சந்தர்ப்பங்களில் திரு.வி.வி. கிரியவர்களை என் வீட்டில் வைத்து நான் உபசரித்ததுண்டு.

இராயபுரம் கணேஷ் அலுமினியம் தொழிலாளர் சங்கத்தில் துணைத் தலைவனாகவும், சென்னைத் துறைமுகத் தொழிலாளர் சங்கத்தில் நிர்வாக உறுப்பினனாகவும் இருந்திருக்கிறேன். சென் னையில் பல்வேறு தொழிற்சாலைகளில் ஏற்பட்ட வேலை நிறுத் தங்களை ஆதரித்து நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் மிகவும் தீவிரமாகப் பேசியிருக்கிறேன். சென்னை பக்கிங்காம் - கர்னா டிக் ஆலைகள், பெரம்பூர் ரெயில்வே தொழிற்சாலை ஆகியவற் றில் வேலை நிறுத்தம் ஏற்பட்ட போதெல்லாம் பலவித இன்னல் களையும் ஏற்கத் துணிந்து தொழிலாளர்களை ஆதரித்துப் பேசி யிருக்கிறேன்.

''தமிழ்நாடு'' நாளிதழின் உரிமையாளர் டாக்டர் பி.வரத ராசுலு நாயுடு அவர்கள் 1935-இல் நடைபெற்ற இந்திய சட்டமன்றத் தேர்தலிலே காங்கிரசை எதிர்த்துச் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டார். அவரைக் காங்கிரஸ் வேட்பா ளராக நிறுத்தி வைப்பதற்கு ராஜாஜி அவர்கள் பெரிதும் முயன் றார். ''தமிழ் நாடு'' அலுவலகத்திற்கு வந்து டாக்டர் நாயுடுவு டன் பேசி அவரைக் காங்கிரசுக்குள் இழுத்துக் கொள்ள ராஜாஜி எடுத்த பெரு முயற்சிகளை நான் அப்போது நேரில் அறிந்து கொள்ள முடிந்தது. ஆனால், 'காங்கிரசில் பிராமண ஆதிக்கம் இருக்கும்வரை நான் திரும்பவும் அந்தக் கட்சியில் சேருவது சாத்தியமில்லை'' என்று டாக்டர் நாயுடு உறுதியாகக் கூறிவிட் டார். அதனால், அவருக்கு எதிராக கோவை — சேலம் — வடாற்காடு தொகுதியில் திரு.தி.சு. அவினாசிலிங்கம்

செட்டியார் நிறுத்தி வைக்கப்பட்டார். தேர்தல் முடிவிலே திரு. தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார் வெற்றி பெற்றார். டாக்டர் நாயுடு ஜாமீன் தொகையை இழந்தார்.

டாக்டர் நாயுடுவின் பிடிவாதம்

டாக்டர் நாயுடு காங்கிரசிலிருந்து வெளியேறிய பின்னரும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளராகவே இருந்து வந்தார். தமது 'தமிழ் நாடு' பத்திரிகையின் வாயிலாக விடுதலைப் போருக்கு ஆதரவு தந்து வந்தார். அதனால், அப்போது வெளிவந்து கொண்டிருந்த தமிழ் நாளிதழ்களிலே 'தமிழ்நாடு'தான் தமிழ் மக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தது. டாக்டர் நாயுடு படிப்போருக்கு உணர்ச்சியூட்டக்கூடிய வகையில் காரசாரமாகத் தமிழ் நாடுவில் தலையங்கம் எழுதுவார். செய்திகளுக்குச் சூடான தலைப்புகள் தருவதிலே சூரராக விளங்கினார்.

அவருடைய எழுத்துக்கு நல்ல மதிப்பிருந்தது. எளிய தமிழில்தான் எழுதுவார். பத்திரிகை முழுவதையும் சாதாரண மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய பழகு தமிழிலேயே நடத்தி வந்தார். வடமொழியும் தமிழும் கலந்த மணிப்பிரவாள நடை அந்நாளில் 'சுதேச மித்திரனு'க்கே ஏகபோகமாக இருந்தது. அந்த நடையைத் 'தமிழ்நாடு' தொடவில்லை. அந்நாளிலும் பத்திரிகை உலகில் அந்தணர்களுக்கு அதிக செல்வாக்கிருந்தது. அந்தச் செல்வாக்கையும் ஊடுருவி, 'தமிழ்நாடு' தமிழ் மக்களுடைய பேராதரவுடன் வெளிவந்து கொண்டிருந்தது. துரதிருஷ்ட வசமாக, டாக்டர் நாயுடு இந்திய சட்டமன்றத் தேர்தலிலே காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வியுற்ற பின்னர், 'தமிழ்நாடு' பத்திரிகை செல்வாக்கிழந்தது. தொழிலாளர்களுக்கு ஒழுங்காகச் சம்பளம் கொடுக்கவும் முடியாத நிலைக்குப் பத்திரிகை பெருநஷ்டத்துடன் நடத்தப்பட்டு வந்தது.

வேலை நிறுத்தம்

டாக்டர் நாயுடு, முதலில் வார இதழாகத் தொடங்கி, பின்னர், நாளிதழாகப் பல ஆண்டுகள் 'தமிழ்நாடு' பத்திரிகையை நடத்தி வந்தார். அகில இந்தியப் பெருந்தலைவர்

களிலே ஒருவராக அவர் மலர்ந்ததற்கு இந்தப் பத்திரிகை பெருந்துணையாக இருந்தது. அரசியல் வாழ்வில் அவரது புகழொளி மங்கத் தொடங்கவே பத்திரிகை விற்பனையும் நாளுக்கு நாள் விழுந்து கொண்டே வந்தது. இந்நிலையில் 'தமிழ்நாடு' அச்சகத்தில் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. குறித்த தேதியில் சம்பளம் கொடுக்கக் கோரி, தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். நானும் இன்னும் இரண்டொரு தொழிலா ளர்களும் முன்னின்று அந்த வேலை நிறுத்தத்தை நடத்தி வைத்தோம். அப்போது 'சிதம்பரம் நகரில்' (ஜார்ஜ் டவுனில்) உள்ள எர்ரபாலு செட்டித் தெருவில் 'தமிழ்நாடு' அலுவலகம் இருந்து வந்தது. அது இருந்த கட்டிடத்திலேயே 'தினமணி' பத்திரிகையும் இருந்து வந்தது. 'தமிழ்நாடு' தொடங்கிய காலந் தொட்டு, அதன் துணையாசிரியராக இருந்து வந்த திரு.டி.எஸ். சொக்கலிங்கம் பிள்ளையவர்கள், டாக்டர் நாயுடுவின் காங்கி ரஸ் விரோதப் போக்கு பிடிக்காமல் வெளியேறிவிட்டார். அதன் பின் 'தினமணி' ஆசிரியராகப் பொறுப்பேற்றார். பழைய நட்பு காரணமாக 'தினமணி' ஆசிரியர் திரு.டி.எஸ். சொக்கலிங்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களுக்கும் டாக்டர் நாயுடுவுக்குமிடையே சமரசம் செய்து வைக்க முயன் றார். மாபெருந் தேசபக்தரான டாக்டர் நாயுடு கொஞ்சம் ஆணவக்காரர். தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று சாதிக்கக் கூடியவர். அதனால், தேதியோடு சம்பளம் கோரித் தொழிலாளர் செய்த வேலை நிறுத்தத்தை மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாக அவர் கருதினார்.

சென்னை மாவட்ட அச்சுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு.ஏ.எஸ்.கே. ஐயங்கார், அன்றாடம் வேலை நிறுத்தக்காரர் களான எங்களோடு இருந்து எங்களை உற்சாகப்படுத்தி வந் தார். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட நாங்கள் தினமும் காலை 8 மணிக்கு வந்து, மாலை 5 மணி வரை 'தமிழ்நாடு' அச்சகத்தின் எதிரே குழுமியிருந்து கோஷங்கள் எழுப்பிவிட்டு, அதன் பின்னர் அமைதியாக வீட்டுக்குச் சென்று விடுவோம். மாலை நேரத்திலே கொத்தவால்சாவடிக்கு அருகிலுள்ள ஸ்ரீராமுலு நாயுடு பூங்காவில் கூட்டம் நடத்தி, டாக்டர் நாயுடுவின்

பிடிவாதத்தைத் தாக்கிப் பேசுவதுமுண்டு. எங்களுடைய வேலை நிறுத்தம் நியாயமானதாக இருந்ததால், அதனைக் குற்றமென்று சொல்ல டாக்டர் நாயுடுவுக்கு வாய்ப்பில்லை. அதனால், வேலை நிறுத்த நாட்களிலே நாங்கள் அவரைத் தரக்குறைவாகப் பேசினோம்; மட்டரகமான கோஷங்களை எழுப்பினோம் என்று சொல்லி எங்களோடு சமரசத்துக்கு வர மறுத்தார். நியாய பலமில்லாத ஒவ்வொரு முதலாளியும் இப்படித்தான் பேசுவது வழக்கம்.

தொழிலுக்கு முற்றுப்புள்ளி!

வேலை நிறுத்தம் நான்கு நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. அந்நாட்களில் ''தமிழ்நாடு'' வெளிவரவில்லை. ஒருநாள் காலை வழக்கம்போல நான் ''தமிழ்நாடு'' அச்சகத்தெதிரே வந்து பார்த்தபோது, என்னுடைய வேலை நிறுத்த சகாக்களிலே ஒருவர் கூட அங்குக் காணப்படவில்லை. பின்னர் விசாரித்ததில் முன்னாள் இரவில் ஏதோ சமரசம் ஏற்பட்டு, என் சகாக்களெல்லாம் வேலைக்குத் திரும்பி விட்டார்கள் என்று அறிந்தேன். எங்களை வழிநடத்தி வந்த திரு.ஏ.எஸ்.கே. ஐயங்காரை அணுகிக் கேட்டபோது, தாம்தான் அந்த சமரச ஏற்பாட்டைச் செய்து வைத்ததாக அவர் கூறினார். ஆனால், வேலை நிறுத்தத்தின் போது டாக்டர் நாயுடுவை நான்தான் கடுமையாக எதிர்த்தேன் என்று காரணங்காட்டி, அதற்காக மன்னிப்பு எழுதிக் கொடுத்தாலொழிய, என்னை வேலைக்கு எடுத்துக் கொள்ள முடியாதென்று டாக்டர் நாயுடு கூறிவிட்டதாக ஏ.எஸ்.கே. மூலம் அறிந்தேன். சக தொழிலாளர் என்னைக் கைவிட்டு விட்டதிலே எனக்கு மிகுந்த ஏமாற்றம்தான். இப்படி நடக்குமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. ஆயினும், என் முதலாளி டாக்டர் நாயுடு விரும்பியதைப்போல மன்னிப்பு எழுதிக் கொடுத்துவிட்டு, திரும்பவும் வேலைக்குப் போக நான் தயாராக இல்லை. அதனை மிகவும் மானக்கேடானதாக நான் கருதினேன். சம்பளப் பாக்கியைக் கேட்டு வேலை நிறுத்தம் செய்ததற்காக நான் ஏன் மன்னிப்புக் கேட்க வேண்டும்? டாக்டர் நாயுடு புகார் கூறியதைப்போல, நான் அவரைப் பற்றி இழிவாகப் பேசவோ, தூஷிக்கவோ இல்லை. அவர் பெயரைச் சொல்லி 'ஒழிக' என்று கோஷித்திருக்கலாம். அது இயற்கைதானே!

திரு.ஏ.எஸ்.கே. ஐயங்கார் ஆலோசனைப்படி சம்பளப் பாக்கியைப் பெற்றுக் கொண்டு வேலையிலிருந்து விலக முடிவெடுத்தேன். 'தமிழ்நாடு' அலுவலகம் சென்று டாக்டர் நாயுடுவைப் பார்த்துச் சம்பளப் பாக்கியைக் கேட்டேன். உடனே கொடுத்துவிட்டார். என்றாலும் என்னைப் பற்றி என் காதுகள் கேட்கக் கொஞ்சம் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தினார். ''இன்னும் சிறிது நேரம் நீ போக்கிரித்தனம் செய்திருந்தால் உன்னைச் சுட்டுக் கொன்றிருப்பேன்'' என்று கூறினார். ''நீங்கள் ஒருவர் என்னை நோக்கிச் சுட்டால், ஒரு நூறுக்கு மேற்பட்ட தொழிலாளர்களாகிய நாங்கள் சும்மாவா இருப்போம்?'' என்று பதிலளித்தேன். சிறிது நேரம் எங்களிடையே கடுமையான வாக்குவாதம் நடைபெற்றது. பின்னர் காவல்காரரைக் கூப்பிட்டு என்னை வெளியே கொண்டுபோய் விடுமாறு ஆணை பிறப்பித்தார். நான் தொழிலாளிக்குரிய வீரத்துடன் காவற்காரரை முறைத்துப் பார்த்தேன். அவர் பயந்து நின்றார். பின்னர் நானாகவே 'தமிழ்நாடு' அலுவலகத்தை விட்டு வெளியேறினேன். இதற்குப்பின் ஊதியத்துக்கு உழைக்கும் தொழிலாளியாகவோ, வேறு வகைச் சிப்பந்தியாகவோ நான் எங்கும் எவரிடமும் தொழில் புரியவில்லை.

முதலாளியின் பாராட்டு

டாக்டர் நாயுடுவிடம் இவ்வளவு கசப்பான அனுபவம் ஏற்பட்டதென்றாலும், எனது மாஜி முதலாளியான அவர் பிற்காலத்தில் என்னிடம் பேரன்பு காட்டினார். அரசியலிலே என் வளர்ச்சி கண்டு மனம் பூரித்தார். வாய்ப்பு நேர்ந்த கூட்டங்களிலே என்னை வாயாரப் புகழ்ந்தார். ''தலைவர் ம.பொ.சி.'' என்னும் நூலுக்கு அவர் தந்த கட்டுரையிலே என்னைப் பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்:

''ம.பொ.சி.'' என்று தமிழ்நாடெங்கும் வழங்கப்படும் திரு.ம.பொ.சிவஞான கிராமணியாரை அறியாதாரில்லை. இந்தத் தமிழ்ப் பெரியாரை நன்கு அறிந்தவர்களில் நானும் ஒருவன். என்னுடைய 'தமிழ்நாடு' காரியாலயத்தில் அச்சுக்கூடத் தொழிலில் திரு. சிவஞானம் பல வருடங்கள் வேலை செய்து வந்தார். பாட்டாளியாக இருந்த அக்காலத்

தில் இவர் நல்ல ஒழுக்கத்துடன் வேலை செய்து வந்ததை மட்டும் அறிந்திருந்தேன். கல்வியில் இவ்வளவு உயர் நிலைக்கு வருவாரென்று நான் எதிர்பார்க்கவில்லை. நான் மட்டுமல்ல; அப்போது அவரை அறிந்திருந்த யாருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

''திரு. சிவஞானம் பேசுவதை முதல் தடவையாக, சென்னையில் சமீபத்தில்தான் கேட்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இவருடைய மேடைத் தமிழையும் கருத்துக்களையும் கேட்டு மகிழ்ச்சி அடைந்தேன். இவர் மிகமிக உயர்ந்த தமிழன் என்பது எனது தெளிவான கருத்தாகும்.

''ம.பொ.சி. எழுதிய சில புத்தகங்களைப் படித்திருக்கின்றேன். பாட்டாளியாக இருந்த இவர் எப்படி இவ்வளவு படிப்பாளியானார் என்பது ஆச்சரியந்தான்.''

(தலைவர் ம.பொ.சி., பக்.43)

செவிச் செல்வம் பெற்றேன்!

இரண்டாம் வகுப்போடு எனது பள்ளிப்படிப்பு முடிந்து போன — இல்லை, முறிந்துபோன 'சோகக் கதை'யை முன்பே கூறியுள்ளேன். பள்ளியிலிருந்து வெளியேறிய பின்னர், என் அன்னையிடம் கல்வி பயின்றேன் என்றாலும், அதுவும் தமிழில் எழுதவும் படிக்கவுந்தான். அதற்குமேல் இலக்கண — இலக்கிய நூல்களை நானாகவே முயன்று பயின்று வருகிறேன். என் படிப்பு இன்னும் முடியவில்லை. முறையாகப் படித்துப் பல்கலைக் கழகப் பட்டம் பெறுவோரில், பட்டம் பெற்றதோடு படிப்பு முடிந்து விட்டதாக நினைப்போரிருக்கலாம். நான் முறையாகப் பயில்வதற்கான பேறு பெறாதவன்தானே!

அன்னையார் இளமையிலே எனக்குப் பயிற்றுவித்த பக்திப் பாக்கள் எனது இலக்கியப் பயிற்சிக்கான பால பாடங்களாக அமைந்தன. தாய் மொழியிலே எழுதவும் படிக்கவும் தெரிந்து கொண்டாலே பக்திப் பாடல்களை மனனம் செய்து ஒருவன் பண்டிதனாக முயலலாம். இது என் அனுபவம். என் அன்னை யார் தமக்கு ஓய்வு கிடைத்தபோதெல்லாம் அண்டை அயலி லுள்ள பெண்களைக் கூட்டி வைத்து, புகழேந்திப் புலவர் பெயரால் உலவிவரும் அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை போன்ற அம்மானைப் பாடல்களைப் பாடுவார். அந்த நேரங்களில் என்னையும் சிறிது நேரம் அந்த நூல்களைப் படிக்க வைப்பார். அதனால், சந்த நயத்தோடும் எதுகை மோனை யோடுமுள்ள அம்மானைப் பாடல்களை அடிக்கடி பாடிப் பாடி பிள்ளைப் பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்து வந்தேன். சித்தர் பாடல்களை நானாகவே விரும்பிப் படித்து மனனம் செய்வேன். இளமையிலே சித்தர்கள் அவ்வளவு பேரு டைய பாடல்களும் எனக்கு மனப்பாடம்!

புராணச் சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாகவும் நான் இலக்கிய அறிவு பெற்று வந்தேன். அந்தச் சொற்பொழி

வின் போது புராணிகர்கள் வெளியிடும் சிறந்த கருத்துகளை ஏடுகளிலே குறித்து வைத்துக் கொள்வேன். புராணிகர் இராசாராம் பிள்ளை என்பவர் அந்நாளில் சிறந்த புராணிகராக விளங்கினார். அவர், வெள்ளிக்கிழமைதோறும் திருவொற்றியூரிலுள்ள ஒரு சத்திரத்தில் புராணச் சொற்பொழிவு நிகழ்த்தி வந்தார். நான் தவறாமல் சென்று அவரது பேச்சைக் கேட்டு, எனது தமிழறிவைப் பெருக்கி வந்தேன்.

ஞானியாரடிகளின் பேச்சு

ஒருவன் அறிவு விளக்கம் பெறுவதற்கு இரண்டு வழிகள் உள. ஒன்று, கல்வி; மற்றொன்று, கேள்வி. யான் முறையாக ஏட்டுக் கல்வி பெற இயலாமற் போனதால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய கேள்வி ஞானத்தைப் பெறுவதிலே அதிக ஆர்வங் காட்டி வந்தேன். புராணிகர் ராசாராம் பிள்ளை அவர்களுடைய பேச்சைக் கேட்க வாரந்தோறும் வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூருக்கு நடந்தே சென்றேன்.

எனது கேள்வி ஞானத்தைப் பெருக்கிய பெருமையிலே திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகளுக்கே அதிகப் பங்குண்டு. கடல்மடை திறந்தாற்போன்று சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவதிலே அவருக்கு இணை அவரேதான். ‘ஒற்றியூரான் அடிமை’ என்னும் சிறப்புப் பெயரோடு விளங்கிய திரு. இராமசாமிப் பிள்ளை என்பவர் தமது பங்களாவில் ஞானியாரடிகளின் தொடர் சொற்பொழிவுக்கு அடிக்கடி ஏற்பாடு செய்வார். பிள்ளையவர்கள், சூளைப் பகுதியிலே வாழ்ந்து வந்தார். அவர் சைவ சமயத்தில் அழுத்தமான பற்றுடையவர். திருவொற்றியூர் தியாகப் பெருமான் கோவிலிலே ஒற்றீசுவரர் கோயில் என்பதாக ஓர் அழகிய கோயிலையும் திரு. பிள்ளை நிர்மாணித்தார். சமஸ்கிருதத்திலும் தமிழிலும் தேர்ந்த புலமையுள்ள ஒருவரைக் கொண்டு, நான்கு வேதங்களில் ஒன்றான சாம வேதத்தைத் தமிழில் மொழி பெயர்க்கச் செய்து வெளியிட்டார். பிற்காலத்தில் அரசியல் துறையில் நான் வளர்ச்சி பெற்றபோது செல்வத்திற் சிறந்த பிள்ளையவர்களும் வறுமைமிக்க வரலாற்றைப் படைத்த நானும் நெருங்கிய நண்பர்களானோம்.

பிள்ளையவர்கள் ஒற்றீசுவரர் பெயரால் சூளையில் நிறுவியுள்ள உயர்நிலைப் பள்ளியை அவருடைய அருமை மகன் திரு. கண்ணப்பா என்பவர் நன்கு நடத்தி வருகிறார்.

கால் கடுக்க நடந்தேன்

திருவொற்றியூர் இராமசாமிப் பிள்ளையவர்களின் இல்லத்திலே ஞானியாரடிகள் சொற்பொழிவு நிகழ்த்திய போதெல்லாம் நான் தவறாமல் சென்று கேட்டு வந்தேன். அப்போது ஜார்ஜ் டவுன் போலீஸ் கோர்ட்டுக்கு அருகில் நான் வேலை செய்து வந்த 'தமிழ்நாடு' அலுவலகம் இருந்து வந்தது. அங்கு மாலை 5 மணிக்கு வேலை முடிந்ததும் பல மைல்கள் நடந்து சூளைக்குச் சென்று ஞானியாரடிகளின் சொற்பொழிவைக் கேட்டு வந்தேன். மாலை 6 மணிக்குத் தொடங்கி இரவு 8 மணிக்கு அடிகளார் தமது சொற்பொழிவை முடிப்பார். அதன் பின்னர் சூளையிலிருந்து வண்ணாரப்பேட்டைக்கு நடந்தே செல்வேன். அடிகளாரின் சொற்பொழிவு தொடர்ந்து ஒரு மாதம் வரை கூட நிகழ்வதுண்டு. தமிழ் பயில வேண்டும் என்ற ஆர்வம் காரணமாக, அதையும் கேள்வியின் மூலம்தான் பெற வேண்டியிருந்த துரதிர்ஷ்டத்தின் விளைவாக, மைல் கணக்கில் நடப்பதற்கு நான் தயங்கவில்லை.

அச்சகத்தில் எழுத்துக் கோப்பது மிகவும் கஷ்டமான வேலை. அதிலும் தினசரிப் பத்திரிகைக்குரிய அச்சகத்திலே அச்சு கோப்பதென்பது மிகமிகக் கஷ்டம். செய்து பார்த்தவர்களுக்கே இதன் உண்மை விளங்கும். இவ்வளவு கஷ்டமான வேலையில் ஈடுபட்டிருந்த நாட்களிலே மாலை நேரத்தில் சிற்றுண்டி அருந்தவும் கையில் காசு கிடைக்காத வறுமை வாழ்க்கையிலே தினமும் பல மைல்கள் நடந்து சென்று இலக்கியச் சொற்பொழிவைக் கேட்பதென்பது எல்லோராலும் முடியக் கூடிய காரியமல்ல. அறியாமையிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பதில் எனக்கிருந்த ஆர்வம்தான் இந்தக் கஷ்டமான முயற்சியில் என்னை ஈடுபடுத்தியது. ஞானியாரடிகளின் பேச்சைக் கேட்டால் படுமூடனும் பரம ஞானியாவதற்கான தகுதியைப் பெறுவான். அவ்வளவு தரமான சொற்பொழிவு.

வெட்டிப் பேச்சு பேசி ஒரு வினாடியைக் கூட அடிகள் வீணடிக்க மாட்டார். பேச்சு முழுவதிலும் பக்தியே மணக்கும். பேச்சிலே பயன்படுத்தும் செய்யுள்களைச் சந்தி பிரித்துக் காட்டிப் பொரு ளுரைப்பார். அதனால், அந்நாளில் அச்சுத் தொழிலாளியாக இருந்த நான்கூட எளிதில் இலக்கிய அறிவு பெற முடிந்தது. ஞானியாரடிகளைப் பலமுறை தனிப்படச் சந்தித்து உரையாடி யிருக்கிறேன். அடிகளாரிடம் கேள்வி ஞானம் பெற்றதோடு நில்லாமல், ஒழுக்கத்தோடு வாழ வேண்டுமென்ற உணர்வையும் பெற்றேன். அவரைப் பார்க்கவும், அவருடன் பழகவும், அவரு டைய பேச்சுக்களைக் கேட்கவும் ஓரளவு வாய்ப்பு பெற்றதனால் எனது வாழ்க்கை செம்மையுற்றதென்று உறுதியாகக் கூறுவேன்.

இலக்கிய வகுப்புகள்

என் இளமைப் பருவத்திலே — அச்சுத் தொழிலாளியாகத் தொழில் புரிந்த காலத்திலே, தமிழ் இலக்கிய வகுப்புகளுக்கும் சென்றிருக்கிறேன். 'கலா நிலையம்' ஆசிரியரும் வழக்கறிஞரு மான திரு.டி.என். சேஷாசலம் ஐயரவர்கள் எஸ்பிளனேட் ஒய்.எம்.சி.ஏ. கட்டிடத்தில் வாரத்திற்கிருமுறை, தமிழ் வகுப்பு நடத்தி வந்தார். அவர் நடத்திய கம்ப ராமாயண, நளவெண்பா வகுப்புகளுக்குச் சென்றிருக்கிறேன். கையில் பாட நூலை வைத் துக் கொண்டு பாடங் கேட்டேனில்லை. அதற்கான அறிவுப் பக்குவம் அப்போது எனக்கு இல்லை. காங்கிரஸ் நண்பர் இராயபுரம் திரு.ஆர்.டி. வேணுகோபால் செட்டியார் என்பவர், ஒய்.எம்.சி.ஏ. வகுப்புக்கு என்னை அழைத்துச் செல்வார். அவருக்கு இலக்கிய நூல்களிலே போதிய பயிற்சி இருந்தது. அவர் மற்றவர்களைப் போல, தம் கையில் பாட நூலை வைத்துக் கொண்டு ஐயரிடம் பாடங் கேட்பார். நான் மட்டும் வெறுங் கையுடன் அமர்ந்து கேட்பேன். வகுப்புக்குத் தொடர்ந்து சென் றேனில்லை. வாய்ப்பு நேர்ந்த நாட்களில்தான் செல்வேன். ஐயர் பாடம் சொல்லிய முறை எனக்குப் பிடித்திருந்தது. அதே ஒய்.எம்.சி.ஏ. கட்டிடத்தில் பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை யும் வகுப்பு நடத்தினார். அவர் ஒன்றன்பின் ஒன்றாகப் பல நூல்களைப் பாடஞ் சொன்னாரென்றாலும், நான் கேட்டது கம்ப ராமாயணந்தான். அதிலும் சில படலங்கள்தான்!

ஐயரும் பிள்ளையும் வகுப்பு நடத்தினார்களென்றால், சொற்பொழிவு பாணியில்தான். அதனால், புராணச் சொற்பொழி வுகளைக் கேட்கும் முறையிலே தமிழ் வகுப்புச் சொற்பொழிவு களையும் கேட்டு இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டேன். ஆனால், இந்த வகுப்புகளில் சிலப்பதிகாரச் சொற்பொழிவு நடத்தப்படவுமில்லை; நான் கேட்கவுமில்லை.

தண்டையார்பேட்டை வித்துவான் மாசிலாமணி கிராமணி யார் அவர்களிடந்தான் தமிழ் இலக்கிய நூல்களை முறையாகப் பாடங் கேட்க முயன்றேன். அந்த முயற்சியும் முற்றுப்பெறாமல் ஆரம்பக் கட்டத்திலேயே முறிந்து போய்விட்டது. ஆயினும், சோணசைல மாலை, திருக்கருவை வெண்பா அந்தாதி, நால்வர் நான்மணிமாலை ஆகிய சிற்றிலக்கியங்களை மட்டும் அவரிடம் முறையாகப் பயின்றேன்.

புத்தகப் பித்தன்!

எனக்கு உலகியல் அறிவு தோன்றிய நாள்தொட்டு — கல்வி கற்க வேண்டிய பருவத்திலே என் பெற்றோர் என்னைத் தொழிலாளியாக மாற்றிவிட்ட கொடுமையை நினைந்து நினைந்து வருந்தியிருக்கிறேன். அதனால், இயன்றவரை என் தாய்மொழியிலேனும் நல்ல புலமை பெற்றுவிட வேண்டும் என்று விரும்பி, அதற்காக இடைவிடாது முயன்று வந்திருக் கிறேன். சுருங்கச் சொன்னால், எனது அறியாமையுடன் நான் கடும் போர் நடத்தி வந்திருக்கிறேன். கல்வி — கேள்வி ஆகிய இரண்டு வகையாலும், மொழி ஞானமும் விஷய ஞானமும் பெற அரும்பாடுபட்டு வந்திருக்கிறேன். தொழிலாளி வாழ்க்கை யிலே எனக்குக் கிடைத்த அற்ப ஓய்வு நேரத்தை அறிவை வளர்த்துக் கொள்வதிலேயே செலவழித்திருக்கிறேன். வேறுவித மான பிள்ளை விளையாட்டு எதிலும் நான் ஈடுபட்டதே இல்லை. இறையருளும் எனக்கு உதவிபுரிந்து வந்திருக்கிறது என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நூல் வாங்குவதற்குப் போதிய பணமில்லாத குறையைப் போக்கிக் கொள்ள மூர்மார்க்கெட்டிலும், நடைபாதைகளிலும் பழைய புத்தகங்கள் விற்கும் கடைகளுக்குச் சென்று, எனக்கு

விருப்பமான புத்தகங்களை மிக மிகக் குறைந்த விலைக்கு வாங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். உணவுக்காக வைத்திருக்கும் பணத்திலே புத்தகங்களை வாங்கிவிட்டு, பல வேளைகளில் பட்டினி கிடந்திருக்கிறேன். புத்தகங்களைச் சேக ரிப்பதிலே நான் பேராசை பிடித்தவன். அந்த ஆர்வத்தைப் பொருள் சேர்ப்பதிலே நான் காட்டியிருந்தால், இதற்குள் பெரும் பணக்காரனாகியிருப்பேன். ஆனால், தெய்வ சக்தி என்னை வேறு திசையிலே நடத்திச் செல்கிறது.

குறைந்த விலைக்குச் சிறந்த நூல் ஒன்று கிடைத்து விட் டால், பேரானந்தம் அடைவேன். என் வாழ்நாளிலே நானாக முயன்று சேர்த்து வைத்துள்ள சொத்துக்கள் என்னிடமுள்ள பல்லாயிரக் கணக்கான நூல்களைத் தவிர வேறில்லை என்று உறுதியாகக் கூறுவேன். அப்போதைய நிலையில் என்னால் படிக்க இயலாத விஞ்ஞான — மெஞ்ஞான நூல்களைக் கூட, பின்னொரு காலத்தில் படிக்க முடியும் — படிப்பதற்கான அறிவுப் பக்குவத்தை இறையருளால் பெற்று விடுவேன் என்ற நம்பிக்கையில் வாங்கி விடுவேன். அந்த நம்பிக்கை பெருமளவு நிறைவேறியு மிருக்கிறது. இறைவன் எனக்கு அளவிறந்த தன்னம்பிக்கையைத் தந்திருக்கிறான். ''நம்மால் இயலுமா?'' என்ற மலைப்பு எனக்கு எதிலும் எந்தக் காலத்திலும் ஏற்பட் டதே இல்லை. தன்னம்பிக்கையோடு மேற்கொண்ட முயற்சி எதிலும் நான் தோல்வியடைந்ததும் இல்லை. கல்வி அறிவைப் பெறுவதிலே நான் அங்குலம் அங்குலமாக முன்னேறி வந்திருக் கிறேன். ''கண்டதைக் கற்கப் பண்டிதனாவான்'' என்பது பழ மொழி. அதுபோல, இளமையில் என் கையில் கிடைத்தவற்றை எல்லாம் படித்தேன். வீதிச் சுவர்களில் ஒட்டப்பட்ட விளம்பரப் போஸ்டர்களை ஒன்று விடாமல் படிப்பேன். ஆம்; அலுப்புச் சலிப்பின்றிக் கண்ணில் பட்டவற்றை எல்லாம் — கையில் கிடைத்தவற்றை எல்லாம் படிப்பேன். மொழி அறிவு வளர்ந்து நூல்களைப் படிக்கத் திறமை பெற்றபோது, உயர்நிலைப் பள்ளி களுக்குத் துணைப் பாடங்களாக வைக்கப்படும் தேச வரலாறு, சான்றோர் வரலாறு, ஞானியர் போதனைகள், பூகோளம் ஆகிய வற்றைப் படித்து விஷயஞானம் பெறலானேன்.

அந்த நாளிலே தமிழிலே நல்ல நூல்கள் வெளிவராத குறை இருந்தது. தேசியத் தலைவர்களின் சரித்திர நூல்கள்கூட அதிகம் வெளிவரவில்லை. அற்ப சொற்பப் பக்கங்களிலே சின்னஞ்சிறு பிரசுரங்கள் மட்டும் அடிக்கடி வெளிவந்து கொண்டிருந்தன. அவற்றைப் படித்து ஆறுதல் அடைவேன். ஆனால் என் அறிவுப் பசிக்கு அவை போதுமானவையாக இருக்கவில்லை.

வழிகாட்டி!

சரித்திர நூல்களைப் படிப்பதிலே எனக்குத் தனி ஆர்வம் உண்டு — குறிப்பாக, தேசியத் தலைவர்கள் — உலகத் தலைவர்கள் — சான்றோர்கள் ஆகியோரின் சரித்திர நூல்கள் கிடைத்துவிட்டால் உணவைக் கூட விரும்பாமல் ஆர்வத்துடன் படிப்பேன். என்னைக் கவர்ந்த சான்றோருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழவும் வளரவும் முயற்சி செய்வேன்.

உலகப் பெருந்தலைவர்களில் இளமையிலே என்னைப் பெரிதும் கவர்ந்தவர் அமெரிக்காவின் புகழ்மிக்க ஜனாதிபதிகளில் ஒருவரான ஆபிரகாம் லிங்கனாவார். அவருடைய சாதனைகள் மிக்க சரித்திரத்தை சுருக்கமாகக் கூறும் சிறிய நூலைத்தான் எனது இருபதாவது வயதில் நான் படித்தேன். ஆயினும், அதுவே என் மனத்துள் தன்னம்பிக்கையை வளர்த்தது. விறகு வெட்டியின் மகனாகப் பிறந்த லிங்கன், தானாக முயன்று உயர்தரக் கல்வி கற்று, ஜனாதிபதிப் பதவியை எட்டிப் பிடித்த சாதனையைப் படித்தபோது, அச்சுத் தொழிலாளியாகிய நானும் முயன்றால், கல்வி கற்று முன்னேற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது.

அமெரிக்காவிலே எங்கும் எதிலும் நாட்டு மொழியே செல்வாக்கு செலுத்துவதால், தன் தாய் மொழியின் வாயிலாகவே தான் விரும்பியபடி எல்லாம் முன்னேற ஆபிரகாம் லிங்கனால் முடிந்தது. தமிழகத்திலே, தமிழர் வாழ்விலே அன்னிய மொழியான ஆங்கிலமே ஆதிக்கம் செலுத்துகின்றது. ஆகவே, ஆபிரகாம் லிங்கனுக்கிருந்த நல்ல சூழ்நிலை எனக்கு இல்லை என்பது அப்போது என் அறிவில் படவில்லை.

பட்டிருந்தால் சோர்வடைந்திருப்பேன். முன்னேற வேண்டுமென்ற ஆசையே பிறந்திருக்காது. ஆகவே, சூழ்நிலையைப் புரிந்து கொள்ளாமல் ஆபிரகாம் லிங்கனைப் போன்று முன்னேறிவிட ஆசைப்பட்டேன்.

அமெரிக்காவிலே சாதிக் கொடுமைகள் இல்லை. ஆகவே, லிங்கனால் முயன்று முன்னேற முடிந்தது. தமிழகத்திலே, சாதிக் கொடுமைகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. நானோ பிற்பட்ட சாதியிலே — சமுதாயத்தின் சாபக்கேடாகி விட்ட கள்ளிறக்கும் தொழிலாளர் குடியிலே பிறந்தவன். இந்நிலையில் நானாவது ஆபிரகாம் லிங்கனைப்போல முயன்று முன்னேறுவதாவது? — என்ற ஐய வினா அந்நாளில் என் நெஞ்சைத் தொடவில்லை. ஆபிரகாம் லிங்கனை முன்மாதிரியாகக் கொண்டு முன்னேற என் மனத்துள் வளர்ந்த ஆசை வீண் போகவில்லை. என் தாய் மொழியிலேனும் ஓரளவு புலமை பெறவும், அரசியலிலே முன்னணியில் நிற்கவும் வாய்ப்பு பெற்றுவிட்டேனல்லவா!

ஜெர்மன் சர்வாதிகாரியாகத் திகழ்ந்த அடால்ப் ஹிட்லர், இத்தாலியின் சர்வாதிகாரியாகத் திகழ்ந்த பெனிடோ முசோலினி ஆகியோருடைய வரலாறுகளைப் படித்தபோதும் என்னுள் தன்னம்பிக்கை வளர்ந்தது. கையுழைத்துப் பிழைத்த அவர்கள் உழைப்பால் உலகப் பெருந்தலைவர்களாக வளர முடிந்தது என் மனத்தைக் கவர்ந்தது. ஆயினும், அவர்களுடைய நாஜிச பாசிசக் கொள்கைகள் அப்போதே காந்தியவாதிகளால் வெறுக்கப்பட்டமையால் அந்தச் சர்வாதிகாரிகளை என் வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாக நான் கொள்ளவில்லை.

என்னைக் கவர்ந்த நூல்கள்

இவர்கள் எல்லோரையும்விட, காந்தியடிகளின் வாழ்க்கை வரலாறே என் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்தது. அவரது சுயசரிதமான 'சத்திய சோதனை'யை முதன் முதலாக 1932-இல் படித்தேன். அதன்பின் திரும்பத் திரும்பப் பலமுறை படித்தேன். சத்தியம் — சாத்வீகம் — சமயம் — சன்மார்க்கம் ஆகியவற்றிலே என்னைப் பற்று கொள்ளச் செய்த ஒரு நூல் உண்டென்றால், அது அடிகளாரின் சத்திய சோதனைதான்.

வள்ளுவர் தந்த திருக்குறளுக்கு அடுத்தபடியாக நான் மதிக்கும் நூல் சத்திய சோதனையாகும்.

வாழ்க்கையில் கடுமையான சோதனைகள் தோன்றி மனம் குழப்பமடையும் போதெல்லாம் சத்திய சோதனையையாவது, திருக்குறளையாவது படித்து நான் தெளிவு பெறுவதுண்டு.

உலகப் பெரு ஞானியர்களிலே எனக்கு முதன் முதலாக அறிமுகமானவர்கள் சாக்ரடீசும், மார்க்க அரேலியருமாவர். தமிழின் மூலம் அவர்களை எனக்கு அறிமுகப்படுத்தியவர் ராஜாஜியாவார். அவர் தமிழில் எழுதியுள்ள சோக்ரதர், மார்க்க அரேலியர் ஆத்ம சிந்தனை என்ற நூல்கள் எனது ஆன்மாவுக்கு ஒளியூட்டின எனலாம். இந்த நூல்களின் மூலமாகத்தான் ராஜாஜியை நான் முதன் முதலாக நேசித்தேன்.

தமிழ்ப் பெரியார் திரு.வி. கலியாணசுந்தரனாரின் நூல்கள் பலவற்றையும் என் இளமைப் பருவத்திலே நான் படித்திருக்கின் றேன். இவற்றுள் என்னைக் கவர்ந்தது 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற நூலாகும். இயற்கையாகவே சைவ சமய குரவர்களிலே திருநாவுக்கரசரிடம் எனக்கு அதிகப் பற்றுண்டு. காரணம், அவரது தொண்டு மனப்பான்மைதான். அப்பரின் அருமை பெருமைகளை விளக்கும் — அப்பரை காந்தியடிக ளோடு ஒப்பிட்டுப் புகழும் திரு.வி.க.வின் நூலைப் படித்ததன் விளைவாக, நான் மற்றொரு அப்பூதியானேன். பிற்காலத்தில் என் மகனுக்குத் திருநாவுக்கரசு என்று பெயர் வைத்து மகிழ்ந் தேன். அப்பரின் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற பொன்மொழியை நான் மந்திர மொழியாகவே கருதி வருகிறேன்.

உலக நாடுகளின் வரலாறுகளைப் படிப்பதிலேயும் நான் மிகுந்த ஆர்வங்காட்டினேன். ஆனால், என் துரதிருஷ்டவசமாக அந்த வரலாறுகளை விரிவாகக் கூறும் நூல்கள் அந்நாளில் தமிழில் வெளிவரவில்லை. உயர்நிலைப் பள்ளிகளில் முதல் மூன்று வகுப்புகளில் பாடங்களாக வைப்பதற்கென எழுதப் பட்ட இந்திய தேச சரித்திர நூல்களை மட்டும் படித்து, என் தாயகத்தைப் பற்றி ஓரளவு அறிந்து கொண்டேன். ஆனால், அவை, தேச சரித்திரம் என்ற பெயரால், முன் எப்போதோ

தோன்றி அழிந்த சாம்ராஜ்யங்களின் — சக்ரவர்த்திகளின் பெருமைகளையும், கொடுமைகளையும் கூறுவனவாகவே இருந்தன. அவற்றைப் படித்தபின் தேவையானவற்றைத் தெரிந்து கொண்டு விட்டோம் என்னும் மனநிறைவு ஏற்படவில்லை. இத்தகைய சரித்திரங்களைப் பள்ளிகளில் பாடமாக வைப்பதை அடியோடு கைவிட்டால் அதனை நான் மகிழ்ச்சியோடு வரவேற்பேன்.

தாய் மொழியில் புலமை பெறுவதற்கு நான் முயன்றது போல, ஆங்கில மொழியில் ஞானம் பெறுவதற்கும் முயன்றேன். ஆனால், ஆங்கிலம் எனக்கு அன்னிய மொழியாதலாலும், தமிழைப்போல் ஒழுங்கான இலக்கண வரம்புகள் உள்ள மொழியாக இல்லாமல் இலக்கணக் குறைபாடுகள் நிறைந்த மொழியாதலாலும், நடுத்தர வயதிலே ஆசிரியரின்றியே நானாக முயன்று அம்மொழியில் ஞானம் பெறுவது எனக்கு எளிதாக இல்லை. ஆயினும், பலமுறை முயன்று முன்னேறினேன். 'ஆங்கில ஆசான்' புத்தகம் ஓரளவு துணை புரிந்தது. நான் பொது வாழ்க்கையிலீடுபட்டிருப்பதால், ஆங்கில மொழியறிவு வளர்ந்து கொண்டுதான் வருகின்றது. ஆங்கிலத்தில் செய்தித் தாள்களைப் படிக்கவும், ஆங்கிலத்தில் பேசினால் புரிந்து கொள்ளவும், எனக்கு வரும் ஆங்கிலக் கடிதங்களைப் படித்துப் பொருளுணரவும் என்னால் முடிகின்றது. அந்த அன்னிய மொழியில் இந்த அளவுக்கு நான் ஞானம் பெற்றிருப்பதே எனது விடா முயற்சியின் விளைவுதான். தமிழர் வாழ்விலே ஆங்கில மொழி அநியாயமாகப் பெற்றுவிட்ட ஆதிக்கத்தினை நான் வெறுக்கிறேன். இந்த ஆதிக்கத்தை அகற்றி, தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழுக்கே முதலிடம் தேடவும் போராடி வருகிறேன். ஆயினும், ஆங்கில மொழியின் தேவையை நான் அலட்சியப்படுத்தியதில்லை. அம்மொழிக்கு அளவுக்கு மீறி முக்கியத்துவம் கொடுப்பதையே நான் எதிர்க்கிறேன். தமிழ் மொழி மூலமாகவே ஒருவன் முதல்தரமான உலகியல் ஞானம் பெற முடியுமென்பது எனது நம்பிக்கை.

முறையாகப் படித்து உயர்தரக் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்துவிட்ட ஒவ்வொரு தொழிலாளியும் ஆர்வத்துடன் முயன்றால், தன் தாய் மொழியிலேனும் போதிய புலமை பெற்று விட

முடியும். தாய் மொழியின் மூலமே உலகியலறிவை வளர்த்துக் கொண்டு, தொழிலாளியின் தரத்திலிருந்து மேலேறி உயர் பதவிகளை அடைய முடியும். இது என் நம்பிக்கை மட்டுமல்ல; அனுபவமுமாகும். இந்தத் தன்னம்பிக்கையைத் தொழிலாளி வர்க்கத்திற்கு வழங்குவதற்காக நான் முயன்று வருகிறேன்.

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் முதல்தரமான ஒரு நூலகம் அமைந்துவிடுமானால், தொழிலாளர்களில் ஆர்வ முள்ள சிலரேனும் அறிவு வளர்ச்சி பெற்று முன்னேற முடியும். இத்தகைய நல்ல சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க தொழிற் சாலை நிர்வாகிகளும் அரசினரும் முன் வரவேண்டும். அமெரிக் காவில் விறகு வெட்டியின் மகனான ஆபிரகாம் லிங்கன் ஜனாதி பதியாக வர முடியுமானால், தமிழ்நாட்டுத் தொழிலாளர்களி டையே மட்டும் ஆபிரகாம் லிங்கன்கள் தோன்ற முடியாதா? முடியும், தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெறும்போது! ஒரு தொழிலாளியின் முன்னேற்றத்திற்குத் துணைபுரியும் முதல் சாதனம் அவரது தாய் மொழிதான்.

என்னுடைய முன்னாள் முதலாளியான டாக்டர் பி.வரத ராசுலு நாயுடு, ''பாட்டாளியான ம.பொ.சி. எப்படி இவ்வளவு படிப்பாளியானார் என்பது வியப்புதான்'' என்று எழுதியதனை முன்பே எடுத்துக்காட்டினேன். அவரைப் போலவே எனக்கும் அடிக்கடி வியப்பேற்படுவது உண்டு.

ஏழைக்குடியில் பிறந்து, எளிய தொண்டராகி, பின் அகில இந்திய அரசியல் தலைவர்களாக மலர்ந்த சிலர், அதிகாரத்தைப் பெருக்கிக் கொள்வதிலேதான் கவனஞ் செலுத்தினார்கள். நானோ, அறிவைப் பெருக்கிக் கொள்வதிலே அக்கறை காட்டி வருகிறேன். அதிகாரத்தை எவ்வளவுதான் வளர்த்துப் பெருந் தலைவரானாலும், அது ஒரு நாளைக்குப் போய்விடும். ஆனால், அறிவை வளர்த்துக் கொண்டு தொண்டனாகவே வாழ்ந்தாலும், அந்த அறிவு இம்மையில் நம்மை விட்டுப் போவதில்லை. மறுமைக்கும் தொடருமென்பது நம்பிக்கை.

குலத் தொண்டு

இளமை தொட்டே எனக்குச் சுயசாதியிடத்தில் பற்று தலோ, பிறசாதி எதனிடமும் பகையோ இருந்ததில்லை. ஆயினும், உயர்சாதி ஆணவத்தை நான் எப்போதுமே வெறுத்து வந்திருக்கிறேன். அதனால், தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட சாதிகளைச் சார்ந்த மக்களிடத்தில் ஆழ்ந்த அனுதாபம் காட்டி வந்திருக்கிறேன். அவர்களுடைய முன்னேற்றத்தில் மிகுந்த ஆர்வங் காட்டி உழைத்து வந்திருக்கிறேன். 1933-34-ஆம் ஆண்டுகளில் நான் அரிசன முன்னேற்றப் பணியில் ஈடுபட்டிருந்தேனென்றால், அதற்குக் காரணம், ஒடுக்கப்பட்ட சாதிகளிடம் இயற்கையிலே எனக்குள்ள அனுதாபந்தான்!

இந்த வகையில் க்ஷவரத் தொழிலாளர், சலவைத் தொழிலாளர் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டிருக்கிறேன். அப்படியே மிக மிகப் பிற்பட்டுள்ள கிராமணி சாதியினர் முன்னேற்றத்திற்காகவும் 1934 முதல் 1937 வரை தொடர்ந்து நான்காண்டுக் காலம் பணிபுரிந்தேன். இந்தக் கால கட்டத்தில் காங்கிரஸ் ஊழியனாகவும், 'தமிழ்நாடு' பத்திரிகாலயத் தொழிலாளியாகவும் இருந்தேனென்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அந்நாளில் தண்டையார்பேட்டை திரு.த. விசயதுரைசாமி கிராமணி என்பவர் கிராமணி, நாடார் எனப்படும் சான்றோர் சாதிப் பிரிவினரின் நலன் கருதி உழைத்து வந்தார். ''க்ஷத்திரிய மித்திரன்'' என்ற மாத இதழை வெளியிட்டு, தென் மாவட்டங்களிலுள்ள நாடார் வகுப்பினரிடையே எல்லையற்ற செல்வாக்கைப் பெற்றிருந்தார். நாடார்களும் கிராமணிகளும் சூத்திரர்களல்லர்; நால் வருணத்தவரில் இரண்டாவதான க்ஷத்திரிய வருணத்தவரே என்று வாதித்து வந்தார். இதனை மெய்ப்பிக்க ''ஆரிய - க்ஷத்திரிய குலவிளக்கம்'', ''க்ஷத்திரியன்'', ''சான்றார் காசு'', ''ஈழ ராசன் சரித்திரம்'' ஆகிய ஆராய்ச்சி

நூல்களை எழுதி வெளியிட்டார். இது இக்காலத்திற்குத் தேவை யற்ற ஆராய்ச்சிதான் என்றாலும், உயர்வு மனப்பான்மை யுடைய வேறு சில சாதியினர் சான்றோர் (கிராமணி, நாடார்) சாதியினரை இழிவுபடுத்திப் பத்திரிகைகளும் நூல்களும் வெளி யிட்டமையால், திரு.த. விசயதுரைசாமி கிராமணியாரின் சாதி வழி ஆராய்ச்சிக்கு நல்ல ஆதரவிருந்தது. சான்றோர் வகுப்பின ரிடையே பிறப்பு வழிப்பட்ட சாதியுணர்வு அந்நாளிலும் என் உள்ளத்தைத் தொடவில்லை. ஆயினும், பிற்பட்டவர்கள் என்ற காரணத்தால், கிராமணி சாதியினரின் முன்னேற்றத்திற்குப் பாடு படலானேன். கிராமணி சாதியினர்க்கென ''கிராமணி குல மகாஜன சங்கம்'' என்ற பெயரில் 1934-இல் சென்னை நகர அளவில் ஒரு சங்கம் நிறுவினேன், திரு.த. விசயதுரைசாமி கிராமணியின் ஒத்துழைப்போடு! அந்தச் சங்கத்திற்கு அவர் தலைவராகவும், நான் செயலாளனாகவும் இருந்தோம். கள்ளி றக்கும் தொழிலாளர் முன்னேற்றத்திற்காகவே கிராமணி குலச் சங்கத்தை நான் அதிக அளவில் பயன்படுத்தினேன். இதனை, என்னளவில் சாதித் தொண்டாக அல்லாமல், சமூகத் தொண்டா கவே கருதினேன்.

தண்டையார்பேட்டையிலுள்ள கிராமணி சாதியாருக்குச் சொந்தமான வரதராசப் பெருமாள் கோயிலில், கள்ளிறக்கும் தொழிலாளர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்காக இரவுப் பள்ளி யொன்றைத் தொடங்கினேன். ஆரம்பத்தில் ஓராண்டுக் காலம் நானே அந்தப் பள்ளியின் ஆசிரியனாக இருந்து கள்ளிறக்கும் தொழிலாளர் சிலருக்கு எத்தகைய பிரதிபலனையும் எதிர்பாரா மல் இலவசமாகக் கல்வி கற்பித்தேன்.

ஜார்ஜ்டவுன் போலீஸ் கோர்ட்டுக்கு அருகிலிருந்த 'தமிழ் நாடு' அச்சகத்தில் தினமும் மாலை 5 மணிக்கு வேலை முடிந்ததும் நேரே தண்டையார்பேட்டைக்கு நடந்து சென்று, அதன் பின், மாலை 6 மணி முதல் 8 மணி வரை தொழிலாளர் களுக்குக் கல்வி கற்பிப்பேன். இது மிகவும் கஷ்டமான பணி தான். எழுதப் படிக்கத் தெரியாத ஏழைத் தொழிலாளர்களுக்குக் கல்வி தருவதை ஒரு புண்ணியப் பணியாக நான் கருதியதால்,

அதனைச் செய்வதிலுள்ள சிரமங்கள் எனக்குப் பெரிதாகப்பட வில்லை. மனநிறைவுடன் அந்தப் பணியைச் செய்தேன். அதனை இன்று நினைத்தாலும் என் மனம் பெருமிதமடைகின் றது.

ஆரம்பத்தில் 6 தொழிலாளர்களுடன் தொடங்கிய பள்ளி, ஓராண்டுக்குள் நாற்பது பேரைக் கொண்டதாக வளர்ந்தது. அதன்பின், சங்கத்தின் சார்பில் சம்பளத்திற்கு ஆசிரியரை அமர்த்திப் பள்ளியை நடத்தினேன்.

கிராமணி குல மகாஜன சங்கத்திலிருந்த செல்வந்தர் சிலர், கள் தொழிலாளர் நலனுக்குச் சங்கத்தை அதிக அளவில் நான் பயன்படுத்துவதனை விரும்பாததால், 'கள்ளிறக்கும் தொழிலா ளர் சங்கம்' என்ற பெயரில் வேறோர் சங்கத்தையும் நிறுவி, அதற்கும் நானே செயலாளனாக இருந்தேன். என் மதிப்பிற் குரிய திரு.த.சே. உமாபதி கிராமணி, எம்.ஏ., பி.டி. அவர்கள் (ஜார்ஜ் டவுன் அப்துல் அக்கீம் இந்து முஸ்லிம் உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர்) இந்தச் சங்கத்தின் தலைவராக இருந்தார். கள் தொழிலாளர் கல்வி நலனில் மட்டுமல்லாமல், அவர்கள் ஈடுபட்டிருந்த தொழிலில் கூலியை உயர்த்திக் கொடுக் கவும் பாடுபட்டேன். இந்த இரு வேறு சங்கங்களையும் நடத்துவ திலே வித்வான் மாசிலாமணி கிராமணி அவர்களும் திரு. தரணிசிங்கு கிராமணி என்ற கள் வணிகரும் எனக்குத் துணையாக இருந்தார்கள். எனக்குச் சுயசாதிப்பற்று இருந்ததோ இல்லையோ, ஏழை எளியவர்களிடம் கொண்ட இரக்கத்தால், பிறர் கண்களில் நானும் சுயசாதிப் பற்றுடையவனாகக் காட்சிய ளித்தேன். இதற்காக, வட சென்னைக் காங்கிரஸ்காரர்களிலே சிலர் என்னை வெறுத்தனர். எப்பாடு பட்டேனும் என் சாதியி னரை, கள் தொழிலிலிருந்தும் கள் வாணிபத்திலிருந்தும் மீட்டு விட வேண்டும் என்ற தேசபக்த உணர்ச்சியுடன்தான் நான் கிராமணி சாதியினர் முன்னேற்றத்தில் அக்கறை காட்டினேனாத லால், இதனைப் புரிந்து கொள்ளாத தேசபக்தர்களின் எதிர்ப்பு கண்டு நான் கலங்கவில்லை.

குலத்தொண்டு குற்றமா?

ஒருவர் குறிப்பிட்ட ஒரு சாதியிலே பிறப்பது அவருடைய விருப்பத்தால் நிகழ்வதன்று. எதேச்சையாக நிகழக்கூடிய ஒன்று. ஆகவே, முற்பட்ட சாதியா ராகவோ, பிற்பட்ட சாதியா ராகவோ இருக்க நேருவது அவருடைய அதிர்ஷ்டத்தையோ, துரதிருஷ்டத்தையோ பொறுத்ததாக இருக்கலாம். மிக மிகப் பிற்பட்ட ஒரு சாதியிலே, சமுதாயத்திற்கு நன்மை பயக்காத தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு குடும்பத்திலே பிறந்ததற்காக நான் வெட்கப்படவில்லை. மாறாக, எனது வளர்ச்சியின் காரண மாக, சமுதாயத்திற்கு நான் புரிந்துவரும் தொண்டின் விளை வாக, நானே முயன்று பெற்றுவரும் தமிழ்ப் புலமையின் மூலமாக என்னைப் பெற்றெடுத்த சாதிக்கு ஓரளவேனும் நான் பெருமை தேடித் தர முடிந்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன். என்னுடைய வளர்ச்சி, எனக்கோ, என் குடும்பத்திற்கோ மட்டு மல்லாமல், என்னைப் பெற்றெடுத்த சாதிக்கும் பெருமை தருவ தாக இருக்க வேண்டுமென்றே நான் விழைகின்றேன். தாழ்த்தப் பட்ட அல்லது பிற்பட்ட அல்லது மிக மிகப் பிற்பட்ட சாதிக ளிலே பிறந்த ஒவ்வொருவருமே என்னைப் போன்று எண்ணு வார்களானால் — அதாவது, தங்களை வளர்த்துக் கொண்டு, அதன் மூலம் தங்களுடைய சாதிக்கும் பெருமை தேட முயல் வார்களானால், நாளடைவில் சாதி வழிப்பட்ட ஏற்றத் தாழ்வுகள் இல்லாமலே தொலையும்.

ஒருவர் தாழ்ந்து கிடக்கும் தனது சாதியினரின் முன்னேற்றத் தில் அக்கறை செலுத்துவதோ, அதற்காக ஸ்தாபன ரீதியில் திட்டமிட்டு முயற்சி எடுப்பதோ பிழையல்ல. அதனை, சாதித் தொண்டாக மட்டுமல்லாமல், தமிழ் இனத்திற்குச் செய்யும் தொண்டாகவும் அவர் கருதினால், தடிப்பேறிய சுய சாதிப் பற்றோ, தமிழினத்தின் ஒற்றுமைக்குத் தீங்கிழைக்கும் பிற சாதிப் பகைமையோ தோன்றுவதற்கு நியாயமே இல்லை. சுய சாதிப் பற்று தவறன்று; பிற சாதிப் பகைமைதான் தவறானது. 'தமிழன்' என்ற இன உணர்ச்சி இதயத்தில் நிறைந்திருக்குமானால், சுய சாதிப் பற்று காரணமாக, பிற சாதிப் பகைமை மனத்துள் எழாது. இன உணர்ச்சியின்றிச் சுய சாதிப் பற்றையே முதலும் முடிவு

மான உணர்ச்சியாக ஒருவர் கொள்வ: ானால், அவரது உள்ளத்துள் நாளடைவில் பிறசாதிப் பகைமையும் புகத்தான் செய்யும். ஆம்; இந்த இடத்தில்தான் சுய சாதிப் பற்றுதல் பிற சாதிப் பகைமையாகத் திரிந்து விடுகிறது. வளர்ச்சியடையாத சாதியினர் வளர்ச்சி அடைந்துள்ள சாதியினர் மீது கொள்ளும் பொறாமையும் சாதிப் பகைமைக்கு அடிப்படையாகிறது. சந்தர்ப்பவசத்தால் கிடைத்த வாய்ப்புகளையும், வசதிகளையும் பயன்படுத்திக் கொண்டு முன்னேறிவிட்ட சாதியினர் பின்னடைந்துவிட்ட சாதியினரின் முன்னேற்றத்திற்குக் கை கொடுப்பதனைத் தங்கள் கடமையாகக் கருத வேண்டும். பின்னடைந்துள்ள சாதிகள் பலவாகையால், அந்தச் சாதிகளும் ஒன்றுக்கொன்று உதவிக் கொள்ள முயலவேண்டும். இப்படிச் செய்தாலன்றிச் சாதிக் கொடுமைகளிலிருந்து தமிழ் இனத்தார் மீள்வதென்பது சாத்தியமில்லை.

பிற்பட்டோர் நலனில் அக்கறை

என்னைப் பொறுத்தவரை சுயசாதித் தொண்டில் நான் ஈடுபட்டிருந்த காலம் நான்கே ஆண்டுகள்தான். அந்த நானாண்டுகளிலே சாதி வெறிக்கு நான் இரையானதில்லை. பிற சாதிப் பகைமை எனது நெஞ்சைத் தொட்டதில்லை. பின்னடைந்துள்ள சகோதர சாதியினரின் முன்னேற்றத்திற்குத் தொண்டு புரிவதிலும் நான் கருத்து செலுத்தியிருக்கிறேன். குறிப்பாக, க்ஷவரத் தொழிலாளர், சலவைத் தொழிலாளர், தோட்டித் தொழிலாளர் ஆகிய தொழில்வழிச் சாதியினரின் சங்கங்கள் எனக்கு அழைப்பு விடுத்தபோதெல்லாம் அந்த அழைப்பை ஏற்று அவர்களுடைய கூட்டங்களிலும், மாநாடுகளிலும் கலந்து கொண்டு அவர்களுடைய முன்னேற்றங்களுக்கு வழிவகைகள் கூறியிருக்கிறேன். அதே உணர்ச்சியுடன் தான் கிராமணி சாதியினருக்காகவும் நான் சங்கம் அமைத்துப் பாடுபட்டேன்.

சென்னை மாநகராட்சியிலும், தமிழகச் சட்ட மேலவையிலும், சட்டப் பேரவையிலும் நான் அங்கம் வகித்தபோதுகூட, தாழ்த்தப்பட்ட — பிற்பட்ட — மிகமிகப் பிற்பட்ட சாதிகளின் நலன்களுக்காகப் பேசியிருக்கிறேன். மொத்தத்தில் தமிழினத்

தின் பால் எனக்குள்ள அழுத்தமான பற்றானது, சுய சாதியின ருக்காகவேயன்றிப் பிற சாதியினர் நலனுக்காகவும் பாடுபட என்னைத் தூண்டுகின்றது. நான் சுய சாதி வெறியுடன் வேலை செய்யாத காரணத்தால், என் சொந்தச் சாதியினருக்கு நான் எவ்வளவுதான் நன்மைகள் செய்திருப்பினும், அவர்களால் போற்றி, புகழப்படும் பேற்றினையும், பெருமையினையும் நான் அடையவில்லை. அதற்காக நான் வருந்தவில்லை.

சுய சாதியினரின் தவறான உணர்ச்சி

1934 முதல் 1937 வரை உள்ள கால கட்டத்திற்குப் பின்னால் சுயசாதிப் பணியில் ஸ்தாபன ரீதியில் ஈடுபடுவதி லிருந்து நான் ஒதுங்கிக் கொண்டு விட்டேன். அதற்கான காரணங்கள் பல. முக்கிய காரணம், அரசியல் துறையிலே நான் தீவிரமாக ஈடுபட்டு விட்டதுதான். ஆயினும், கிராமணி சாதி யினரின் கல்வி நலன்களையோ, உத்தியோக நலன்களையோ கவனிக்க நான் தவறியதில்லை. என்னிடம் உதவி கோரி வரும் சுய சாதியினருக்கு இயன்றவரை நான் உதவி செய்து வருகி றேன். கிராமணி சாதியாரிலே என்ஜினியர்களாகவும், டாக்டர் களாகவும், உயர்தர உத்தியோகஸ்தர்களாகவும் சிலர் இருந்து கொண்டிருக்கின்றனர். அவர்களிலே பலர் அந்த நிலையை அடைவதற்கு நான் உதவி புரிந்திருக்கிறேன்.

பரிபூரண மதுவிலக்கை நான் மனநிறைவோடு ஆதரிப்பதற் குக் காரணங்கள் பல. அவற்றுள் ஒன்று, கிராமணி சாதியினர் கள்ளிறக்கும் — கள் விற்கும் தொழிலைக் கைவிட்டு, நாகரிக மான வேறு தொழில்களில் ஈடுபட்டு, கல்வித் துறையிலும் பிற துறைகளிலும் முன்னேற வேண்டுமென்று நான் கருதுவதாகும். ஆனால், எனக்குள்ள இந்த நல்லெண்ணத்தைக் கிராமணி சாதியார் உணரும்படி செய்ய என்னால் இயலவில்லை. அதற் கான முயற்சிகளில் ஸ்தாபன ரீதியில் ஈடுபட எனக்கு வாய்ப்பு மில்லை. அதனால், மதுவிலக்கால் வேலையிழந்தவர்கள் — வாணிபம் இழந்தவர்கள் தங்களுக்கு நேர்ந்த கேடுகளுக்கு என்னையே காரணமாக்கி, என்னை வெறுக்கின்ற தவறான உணர்ச்சியைப் பெற்றுவிட்டனர். நாட்டின் நன்மைக்காக

இத்தகைய பழிகளைச் சுமந்து கொள்ள வேண்டியவனாகி விட்டேன்.

''கிராமணி குலம்'' பத்திரிகை

நான் கிராமணி குல மகாஜன சங்கத்தைத் தொடங்குவதற்கு முன்னர் அந்தச் சாதியினரின் கல்வி — உத்தியோக நலன்களில் அக்கறை செலுத்த அவர்களுக்கென ஒரு சங்கம் இருக்க வில்லை. அப்படியே, கள்ளிறக்கும் தொழிலாளர்களுக்காகவும் முதன் முதலாகச் சங்கம் கண்டவன் நான்தான். இந்த இரு சங்கங்களையும் நடத்துவதிலே எனக்கேற்பட்ட இன்னல்கள் — எதிர்ப்புகள் கொஞ்சமல்ல. அவற்றை எல்லாம் சமாளித்து மிகுந்த பொறுமை காட்டினேன்.

'கிராமணி குலம்' என்ற மாதம் இரு முறை ஏடொன்றையும் சுமார் ஓராண்டுக் காலம் நடத்தினேன். திரு.த.சே. உமாபதி, எம்.ஏ., பி.டி. அவர்கள் என்னுடைய வேண்டுதலின் காரண மாக அதன் கௌரவ ஆசிரியராக இருந்தார். நான் பதிப்பாசிரிய னாக இருந்தேன். இலாபமில்லாமல் நஷ்டமும் கஷ்டமு மடைந்து அந்தப் பத்திரிகையை நடத்த வேண்டியிருந்தது. ஓராண்டுக் காலத்திற்குப் பின்னர் அதனை நிறுத்தியபோது ஏதோ ஒரு துன்பத்திலிருந்து விடுதலை பெற்ற உணர்ச்சியை நான் அடைந்தேன்.

தமிழாசிரியர் வித்வான் மாசிலாமணி கிராமணி அவர்கள், 'கிராமணி குலம்' இதழை வெளியிடுவதிலே பெருந்துணையாக இருந்தார். அவரும் ஆசிரியரும் அதிகமாக எழுதி வந்தார்கள். அப்போது நான் எழுத்தாளனல்லன். ஆயினும், ஒவ்வொரு இதழிலும் நான் எழுதிக் கொண்டுதான் இருந்தேன். நான் எழுத்தாளனானது 'கிராமணி குலம்' பத்திரிகையின் வாயிலாகத் தான்.

தமிழ்த் தாய் நூலகம்

கள்ளிறக்கும் தொழிலாளர்கள் அறிவு வளர்ச்சி பெறும் பொருட்டு, அவர்களிலே மிகச் சிலராக இருந்த எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்காகத் தண்டையார்பேட்டையில் 'தமிழ்த்தாய்

நூல் நிலையம்' என்ற பெயரில் நூலகம் ஒன்றை நடத்தினேன். ஏராளமான தமிழ் நூல்களைச் சேகரித்து, அந்த நூலகத்தைப் பலப்படுத்தினேன். திரு.த.சி. கங்காதர கிராமணியார் என்பவர் கைம்மாறு கருதாமல் தந்த இடத்தில்தான் நூல் நிலையத்தை அமைத்தேன். பின்னால் தமிழகம் முழுவதற்கும் நலன் பயக்கும் நூலக இயக்கத்தில் இறையருள் என்னை ஈடுபடுத்தப் போகிறது என்பதை அறியாமலே — அதற்கு முன்னோடியாக — தமிழ்த் தாய் நூலகத்தை நடத்தினேன். ஆம்; தமிழ்நாடு அச்சகத் தொழிலாளியாக இருந்து கொண்டே — அங்கே மெய்வருந்த உழைத்துக் கொண்டே கிராமணி குல மகாசன சங்கம், கள் தொழிலாளர் சங்கம், தமிழ்த் தாய் நூல் நிலையம், 'கிராமணி குலம்' பத்திரிகை ஆகியவற்றை நான் நடத்தி வந்தேன். இந்த நிறுவனங்களிடமிருந்து எத்தகைய ஊதியத்தையோ, உதவி யையோ நான் எதிர்பார்த்ததில்லை. இயற்கையாக எனக்குக் கிடைத்ததுமில்லை. கிராமணி குல மகாசன சங்கம் நடத்திய தால், கள்ளுக்கடை வணிகர்களாக இருந்து வந்த பெரும் பணக்காரர்கள் சிலருடன் எனக்குத் தொடர்பேற்பட்டது. அவர் களில் திரு.வ.சே. சேஷாசல கிராமணியார், திரு.சி. தரணிசிங்கு கிராமணியார் போன்ற செல்வந்தர் சிலரின் நல்லெண்ணத்திற் கும் நட்புக்கும் நான் பாத்திரனானேன். அவர்களிடமிருந்தும் என் சொந்த வாழ்க்கைக்காக எந்த உதவியையும், சலுகையை யும் பெற நான் நினைத்தது இல்லை. பணக்காரர்களின் நட்பைப் பெற்று குலத் தொண்டில் ஈடுபட்டிருந்த காலத்திலும் நானும் என் குடும்பத்தினரும் பசி, பட்டினியிலிருந்து விடுதலை பெறா தவர்களாகவே இருந்தோம். பொது வாழ்க்கை வேறு, சொந்த வாழ்க்கை வேறு என்ற பண்பாட்டுடன் வாழ அப்பொழுதே நான் பழகிக் கொண்டேன். அந்த நல்ல பழக்கம் இன்றுவரை என்னை விட்டு நீங்கவே இல்லை.

கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கத்தின் மூலம் குலத் தொண் டில் ஈடுபட்டிருந்த காலத்திலேதான் அப்போது ஜஸ்டிஸ் கட்சி யின் பிரச்சார பீரங்கியாகத் திகழ்ந்த திரு.சி.என். அண்ணா துரை அவர்களுடன் நட்பு கொள்ளும் நல்ல வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அப்போது அவர் ''திராவிடன்'' நாளிதழின் துணை ஆசிரியராக இருந்தார். சென்னையிலுள்ள கள்ளுக் கடைகள்

அனைத்தையும் திரு. இதாலியா என்ற வட இந்திய வணிகர் ஒருவர் மொத்தக் குத்தகைக்கு எடுக்க முன்வந்தார். சென்னை மாநில அரசும் அதற்கு இசைவதாக இருந்தது. அது நிகழ்ந்திருந் தால் கிராமணி சாதியினர் கள்ளிறக்கும் தொழிலையும், கள் வாணிபத்தையும் அடியோடு இழந்து வேலையில்லாக் கொடுமையால் வீழ்ந்து போக நேர்ந்திருக்கும். கிராமணி சாதியி னர் மதுத் தொழிலிலிருந்து விடுபடுவதை நான் விரும்பினேன். என்றாலும், அந்தச் சாதியினரையே அழித்துவிடக் கூடிய விபத்தாக அது முடிந்துவிடக் கூடாதல்லவா! அதனால், இதாலி யாவின் முயற்சியை முறியடிக்க முனைந்தேன். அரசியல் கட்சி களின் உதவியைப் பெறாமல் அதைச் சாதிக்க இயலாதென்றறிந் தேன். மதுவிலக்கை விரும்பும் காங்கிரஸ் கட்சியின் உதவி கிடைக்காதென்பதையும் அறிந்திருந்தேன்.

சென்னை மேலவைத் தலைவராகவும், பம்பாய் கவர்னராக வும் பிற்காலத்தில் பதவி வகித்த டாக்டர் செரியன் அவர்களின் மைத்துனர் திரு. ஆல்பர்ட் ஜேசுதாசன் என்பவர் சென்னை துறைமுகத் தொழிலாளர் சங்கத் தலைவராக இருந்தார். அவர் ஜஸ்டிஸ் கட்சிக்காரர். நான் வெறி பிடித்த காங்கிரஸ்காரன். இப்படி இரு வேறு துருவங்களாக இருந்த நாங்கள் இணைபிரி யாத நண்பர்களாக இருந்தோம். ஆல்பர்ட் ஜேசுதாசனின் துணை கொண்டு இதாலியாவின் முயற்சியை முறியடிக்க நண் பர் அண்ணாதுரையின் உதவியை நாடினேன். அண்ணாவும் ஜேசுதாசனும் நெருங்கிய நண்பர்கள். அப்போதுதான் அரசியல் அடிவானத்தில் தோன்றிக் கொண்டிருக்கும் உதயசூரியனாக அண்ணா வளர்ந்து கொண்டிருந்தார். அவரை அப்போதுதான் முதன் முதலாக ஆல்பர்ட் ஜேசுதாசனுடன் சென்று 'திராவிடன்' அலுவலகத்தில் சந்தித்தேன். இது நிகழ்ந்தது 1936-ஆம் ஆண்டின் முற்பகுதியிலாகும்.

முதல் வெற்றி

அண்ணாவைச் சந்தித்ததன் விளைவாக, சென்னை உயர் நீதிமன்றத்தின் அருகிலுள்ள கடற்கரையிலே இதாலியா என்ற வட இந்தியருக்கு சென்னைக் கள்ளுக்கடைகளை ஏகபோக குத்தகைக்கு விடும் செயலைக் கண்டித்து ஒரு மாபெரும்

கூட்டத்தை நடத்தினேன். அந்தக் கூட்டத்திலே அன்பர் ஆல் பர்ட் ஜேசுதாசனும் அண்ணாவும் பேசினார்கள். கள்ளிறக்கும் தொழிலாளர்களும், கள் வாணிபத்தில் ஈடுபட்டுள்ள சிப்பந்தி களும் பல்லாயிரக்கணக்கில் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண் டனர். அதில் நானும் பேசினேன் என்று சொல்லத் தேவை யில்லை யல்லவா!

பின்னர் ஆல்பர்ட் ஜேசுதாசன், திரு.த.சே. உமாபதி, திரு. பாசுதேவ், எம்.எல்.சி. ஆகியோரை அழைத்துக் கொண்டு அப்போது கோடை வாசத்திற்காக உதகையில் தங்கியிருந்த சென்னை மாநில அரசின் கலால் இலாகா செயலாளரைக் கண்டு இதாலியாவுக்குக் குத்தகை விடும் முயற்சியைக் கைவிடுமாறு கள் தொழிலாளர் சார்பில் அவரிடம் விண்ணப்பம் கொடுத் தேன். சில வாரங்களுக்குப் பின்னர் அவரிடமிருந்து ஏமாற்றகர மான பதில் கிடைத்தது. ஆனால், முயற்சியை அத்துடன் நான் விட்டுவிடவில்லை. நகரில் பல இடங்களில் கூட்டங்கள் நடத்தி, அரசைப் பயமுறுத்தும் வகையில் கிளர்ச்சி செய்தேன். அதன் பின் இதாலியாவுக்கு மொத்தக் குத்தகை விடும் முயற்சியை அரசு கைவிட்டது. இது, அரசுக்கு எதிரான ஒரு கிளர்ச்சியிலே ஈடுபட்டு நான் அடைந்த முதல் வெற்றியாகும்.

சான்றோர் தொடர்பு

கிராமணி சாதியாரின் நலனுக்காக உழைத்தபோது அந்தச் சாதியைச் சார்ந்த சான்றோர் பலரோடு மிகமிக எளியவனாகிய எனக்கு நல்லவிதமான தொடர்பு ஏற்பட்டது — குறிப்பாக திருவான்மியூர் பாம்பன் சுவாமிகளுடைய தலை மாணாக்கரான திருவொற்றியூர் பாலசுந்தர சுவாமிகளோடு எனக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவர் ஆங்கிலமும் அருந்தமிழும் கற்ற வர். ஐரோப்பிய நாடுகளில் சுற்றுலாச் செய்து திரும்பியவர். திருவொற்றியூர் அப்பர் சுவாமி மடத்தின் ஆதினகர்த்தராக இருந்தார். அவர் யோக முறைகளில் சிறந்த பயிற்சி பெற்றிருந் தார். அவரை அடிக்கடி சந்தித்து உரையாடியதன் விளைவாக, ஆன்மிகத் துறையில் சிறிதளவு அனுபவம் பெறலானேன்.

புலவர் உலகில் பெரும் புகழ்பெற்றிருந்தவரான பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்களைக் கிராமணி சங்கச் செயலாளர் என்ற முறையில்தான் முதன் முதலாக அணுகினேன். பின்னர்தான் மொழிப் பற்று காரணமாக அவரோடு தொடர்பு வலுத்தது. பின்னாளில் அரசியல் ரீதியிலும் அத்தொடர்பு வளர்ந்தது. என் வற்புறுத்தல் காரணமாக தெ.பொ.மீ. அவர்கள் கிராமணி குல சங்கத்தில் ஓராண்டுக் காலம் தலைவராக இருந்தார்.

திருவொற்றியூர் திரு.டி. சண்முகம் பிள்ளை, பெரியார் ஈ.வெ.ரா.வின் சீடர்; அப்பட்டமான சுயமரியாதைக்காரர். பச்சை நாத்திகர் என்றும் சொல்லலாம். இவர் சைதாப்பேட்டை தாலுகா போர்டு, செங்கற்பட்டு ஜில்லா போர்டு, திருவொற்றியூர் ஊராட்சி மன்றம் ஆகியவற்றின் தலைவராக இருந்திருக்கிறார். 1952-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலே சுயேச்சையாளராக வெற்றி பெற்று, அப்போதைய பெரிய சென்னை மாநிலச் சட்டமன்றத்திலும் அங்கத்தினரானார். கிராமணி சாதியாரிலே முதன் முதலாகச் சட்டமன்றத்துள் பிரவேசித்தவர் இவர்தான். இவருக்குப் பின்னர்தான் நான் சென்றேன். இவரோடு சாதி ரீதியில்தான் எனக்குத் தொடர்பேற்பட்டது. கிராமணி குல சங்கத்தின் பொருளாளராக இருந்து குலத் தொண்டில் எனக்குத் துணை புரிந்தார். அரசியலில், நாங்கள் இருவரும் இருவேறு கட்சிகளைச் சார்ந்தவர்களாதலால், இவர் தேர்தலுக்கு நின்ற ஒவ்வொரு நேரத்திலும் இவருக்கு எதிராக — காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவாக நான் பிரச்சாரம் செய்ததுண்டு. ஆயினும், குடும்ப ரீதியான உறவு காரணமாக நாங்கள் நண்பர்களாகவே இருந்தோம்.

கள்ளிறக்குவோரிலும் கவிஞர்கள்!

கிராமணி சாதியிலே தமிழ்ப் புலவர்கள் எண்ணற்றோர் வாழையடி வாழையெனத் தோன்றியிருக்கின்றனர். அவர் எல்லாம் பிற்பட்ட சாதியில் பிறந்த காரணத்தால் விளம்பரம் இல்லாமல் வாழ்ந்து மறைந்தனர். சிறந்த நாடகாசிரியர்களும் இருந்தனர். ஏகை சிவசண்முகம் பிள்ளை என்பவர் நாடக

உலகில் புகழ்பெற்ற ''கண்டி ராஜா'', ''சம்பூர்ண ராமாயணம்'' ஆகிய நாடகங்களை எழுதிச் சிறப்பு பெற்றார். இவரை நான் சந்தித்ததில்லை என்றாலும், இவரைப் பற்றி என் இளம் பருவத்திலேயே நான் நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். இவருடைய சம்பூர்ண ராமாயண நாடகத்தை இன்று என் இணை பிரியாத தோழர்களாகவுள்ள டி.கே.எஸ். சகோதரர்கள் நடத்தியிருக்கின்றனர்.

மற்றோர் நாடகாசிரியர் — டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் தமையனார் — தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலராவார். இவர், பதிபக்தி, பஞ்சாப் மெயில், கதரின் வெற்றி, தேசியக் கொடி ஆகிய நாடகங்களை நடத்தி நாட்டில் தேசபக்தியை வளர்த்தார். இந்தத் துறையிலே இவர் ஈடு இணையற்று விளங்கினார். இவருடன் நான் அதிகம் நெருங்கிப் பழகியதில்லை என்றாலும், தெ.பொ.மீ. அவர்களைப் பார்ப்பதற்காக அவரது இல்லம் சென்ற நாட்களில் பாவலரையும் சந்தித்திருக்கிறேன். அப்போது அவர் கடுமையாக நோயுற்றுப் படுக்கையிலிருந்தார். பாவலருடைய நாடகங்களைப் பார்த்துத் தேச பக்தியை வளர்த்துக் கொண்டவர்களிலே நானும் ஒருவன். பாவலரவர்கள் சிறுவர் சிறுமியர் அடங்கிய நாடகக் குழு ஒன்றை இலண்டனுக்கு அழைத்துச் சென்று அங்கு நடந்த வெம்பிளிக் கண்காட்சியிலே தமது நாடகங்களை நடத்தினார். நாடகக் கலைக்கும் நாட்டின் விடுதலைக்கும் இவர் ஆற்றிய தொண்டுகளைக் கலையுலகும் அரசியல் உலகும் மறந்தே போய்விட்டன.

கள்ளிறக்கும் தொழிலாளர்களிலிருந்து கவிஞர் சிலரும் தோன்றினார்கள் என்றால், பலருக்கு வியப்பேற்படக் கூடும். வானுயர வளர்ந்திருக்கும் தென்னை மரத்தின் உச்சியை நோக்கி ஏறிக் கொண்டிருக்கும் போதே உள்ளத்தில் கவிதை பிறந்து விட்டால், மரம் ஏறுவதை நிறுத்தி, ஏடும் எழுத்தாணியும் கொண்டு கவிதை எழுதுவார்களாம்! அப்படிப்பட்ட கவிஞர்களிலே கந்தசாமிக் கவிராயர், காமியப்ப கவிராயர் ஆகியோர் முக்கியமானவர்களாவர். இவர்கள் எழுதிய பக்திக் கீர்த்தனைகளையும், சிருங்காரக் கீர்த்தனைகளையும் நான் படித்திருக்

கிறேன். ஆம்; கையெழுத்துப் பிரதிகளாக இருந்த நிலையிலே! அருமையான கீர்த்தனைகள்! தமிழிலே இசைப்பாடல்கள் இல்லையென்ற குறையகற்றும் கீர்த்தனைகள்! துரதிருஷ்டவசமாக அவை இன்னமும் நூல் வடிவம் பெற்றதாகத் தெரியவில்லை. பிற்பட்ட சாதியில் தோன்றிய கவிஞர்கள் புனையும் கவிதைகளும் பிற்பட்டுவிடும் போலும்! தமிழன் தலையெழுத்தை என்னென்பது!

சாதி முகாமிலிருந்து விடுதலை!

கிராமணி சாதியினருக்கு என்னால் இயன்ற தொண்டுகளை என் இளம் பருவத்திலிருந்தே செய்து வந்திருக்கின்றேன் என்றாலும், மாணிக்கவாசகர் குறிப்பிட்டது போன்று 'சாதி குலம் பிறப்பென்னும் சுழிபட்டுத் தடுமாறும்' அவலநிலை என் வாழ்நாளில் என்றுமே எனக்கு ஏற்பட்டதில்லை. அது பிறக்கும் பொழுதே இறைவன் எனக்குத் தந்துவிட்ட வரம்! எனது சாதியினருக்காகத் தொண்டாற்றிய காலத்திலே தனிப்பட்ட முறையில் எனக்கும் சில நன்மைகள் விளைந்தன.

மேலே எடுத்துக்காட்டிய சான்றோர் சிலருடைய நல்லெண்ணமும் நட்பும் கிடைத்தன. இவை நான் பெற்ற முதல் நன்மையாகும். அடுத்தபடியாக, நான் பேச்சாளனானதும், எழுத்தாளனானதும் சாதிக்காகப் பாடுபட்ட காலத்தில்தான்!

எவ்வளவுதான் பிற்பட்ட சாதியாக இருப்பினும் சரி; ஒரு சாதியிலே இங்கொருவர் அங்கொருவர் உயர்தரக் கல்வி கற்றோ, உயர்தர உத்தியோகம் பெற்றோ, செல்வமும் செல்வாக்கும் பெற்றோ முன்னேறி விடுவதனால், அந்தச் சாதி முழுவதுமே முன்னேறி விட்டதாகி விடாது. பிற்பட்ட அல்லது மிக மிகப் பிற்பட்ட சாதிகள் ஒருசேர முன்னேற வேண்டுமானால், ஒரு பொருளாதாரப் புரட்சியின் மூலம்தான் அது சாத்தியமாகும். இந்த உண்மையைச் சாதி ரீதியில் பணியாற்றிப் பெற்ற அனுபவத்தால்தான் அறிந்து கொண்டேன். அப்படி அறிந்ததன் விளைவாகவும், சாதி முகாமிலிருந்து நான் விடுதலை பெற்றேன்.

போட்டிச் சங்கம்

சாதி முகாமிலிருந்து நான் விடுதலை பெறுவதற்கு மற்றொரு காரணமும் இருந்தது. அதனையும் இங்கு நான் கூறியாக வேண்டும். கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கம் ஒன்றை நிறுவி, எத்தனையோ இன்னல்களுக்கிடையே அதனை நான் நடத்தி வந்தபோது, அதற்குப் போட்டியாக, தொழிற்சங்க இயக்கத்தைச் சார்ந்த சிலர் மற்றொரு சங்கத்தைத் தோற்றுவித்த னர். அவர்களிலே முக்கியமானவர்கள் என்னுடைய மதிப்புக் குரிய தோழர்களான ஜீவானந்தமும், பி.இராமமூர்த்தியுமாவர். போட்டிச் சங்கம் தோன்றிய சில வாரங்களிலேயே அதன் தூண்டுதலால் கள்ளிறக்கும் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. இந்த வேலை நிறுத்தத்தை நான் விரும்பவில்லை. கள்ளிறக்கும் தொழிலாளர்களும், கள் வணிகர்களும் ஒரே சாதியினராதலால், அவர்களுக்குள்ளே வர்க்க ரீதியில் நடை பெறும் போராட்டமானது பிற்பட்டுக் கிடக்கும் கிராமணி சாதி யினரின் முன்னேற்றத்தைத் தடை செய்து விடுமென்று நான் கருதினேன். ஆயினும், வேலை நிறுத்தத்திற்கான நியாயத்தை நான் உணர்ந்திருந்தேன். சமரசத் தூதுவனாக வேலை செய்து, கள் தொழிலாளர்களின் கூலியை உயர்த்திக் கொடுப்பதிலே கொஞ்சம் விட்டுக் கொடுக்குமாறு கள்ளுக்கடை வணிகர்களை வேண்டினேன். அவர்களிடம் எனக்குள்ள செல்வாக்கை உப யோகப்படுத்தி ஆலோசனை கூறினேன். அந்த வகையில் எனது ‘கிராமணி குலம்’ பத்திரிகையில் நான் எழுதியவற்றை இன்றும் காணலாம். ஆனால், எனது சமரச முயற்சி வெற்றி பெறு முன்னர் போலீசார் அடக்குமுறையில் இறங்கிவிட்டனர். தோழர் ப.ஜீவானந்தம், தோழர் பி.இராமமூர்த்தி ஆகியோருக்கு 144 தடை உத்திரவு வழங்கப்பட்டது. தனிப்பட்ட முறையிலும் எனக்கு நெருங்கிய நண்பர்களாக இருந்த இவர்கள் காங்கிரஸ் பணியிலேயும் எனக்குச் சகாக்களாக விளங்கினர். அப்போது காங்கிரசின் உள்கட்சியாக விளங்கிய காங்கிரஸ் சோசலிஸ்டுக் கட்சியிலே இவர்கள் கலந்திருந்தனர்.

கள்ளுக்கடை முதலாளிகளின் பக்கம் சார்ந்து — சாதிப் பற்று காரணமாக — கள் தொழிலாளர்களுக்கு விரோதமாக வேலை செய்வதோ, என் மதிப்புக்குரிய அரசியல் தோழர்கள்

மீது அரசு மேற்கொண்டுள்ள அடக்குமுறை நடவடிக்கைகளை ஆதரிப்பதோ என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாதவை யாக இருந்தன. அதனால், தொழிற்சங்க ரீதியில் சோஷலிஸ்டுக ளால் தொடங்கப்பட்ட கள் தொழிலாளர் சங்கம் நீடிக்கவும், நிலைக்கவும் வழிவிட விரும்பி, சாதி ரீதியில் நான் நடத்தி வந்த கள் தொழிலாளர் சங்கத்தைக் கலைத்துவிட்டேன். வியப் பென்னவென்றால், என்னால் நடத்தப்பட்ட சங்கம் கலைக்கப் பட்ட சில மாதங்களிலேயே தொழிற்சங்க இயக்கத் தலைவர்க ளால் நடத்தப்பட்ட சங்கமும் கலைந்து போய்விட்டதாகும்.

இதனாலும், 1934-இல் குலத் தொண்டில் புகுந்த நான், 1937 இறுதியிலே அந்தத் துறையிலிருந்து வெளியேறினேன். அதன்பின் எத்தனையோ முறை, எத்தனையோ நண்பர்கள் என்னை நிர்ப்பந்தித்தும் சுயசாதி ஸ்தாபனத்தோடு தொடர்பு கொள்ள விரும்பாதவனானேன். ஆயினும், தனிப்பட்ட முறை யில் பிற்பட்ட சாதியினர் என்ற காரணத்துக்காக கிராமணி சாதியினர் முன்னேற்றத்திற்கு என்னால் ஆனதைச் செய்ய நான் தவறியதே இல்லை.

கிராமணி சங்கத்தில் பிளவு

நான் எந்தத் துறையில் புகுந்தாலும் அது நான் புகுந்த மறு கணத்திலேயே போர்க்களமாவது இயற்கையாகி விடுகிறது. இதற்கு, எதிலும் நான் காட்டும் உறுதியும், தீவிரமும் காரணங்க ளாகும். கிராமணி குல மகாசன சங்கத்தைப் பயன்படுத்தி, என் சுய சாதியினரைக் காங்கிரஸ்காரர்களாக மாற்றி விட முயன் றேன். கிராமணி சாதியிலே அனைவருமே — விரல் விட்டு எண்ணி விடக் கூடிய சிலரைத் தவிர — கள்ளிறக்கும் தொழிலா ளர்களாகவும் வணிகர்களாகவும் இருந்த காரணத்தால், அவர் கள் அநேகமாக காங்கிரசை விரும்பாதவர்களாகவே இருந்த னர். காங்கிரஸ் மகாசபையின் மதுவிலக்குக் கொள்கை காரண மாகவே அவர்கள் இத்தகைய மனப்பான்மை கொண்டிருந்தனர்.

1936-இல் சென்னை மாநகராட்சித் தேர்தல் வந்தபோது, கிராமணி சமூகத்தினர் நிறைந்திருந்த முதல் வட்டத்திலே — தண்டையார்பேட்டையிலே நான் மிகத் தீவிரமாக காங்கிரஸ்

வேட்பாளருக்கு ஆதரவாக வேலை செய்தேன். தேர்தல் கூட்டங்களிலும் கலந்து கொண்டு பேசினேன். இராயபுரம் திரு.பி.ஆர். கஜபதி நாயுடு என்ற உத்தமமான காங்கிரஸ்காரர் தண்டையார் பேட்டையில் காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்தி வைக்கப்பட்டார். அவரும் அவருடைய இளவல் திரு.பி.ஆர். சீராமுலு நாயுடுவும் என்னுடைய ஆப்த நண்பர்களாவர்.

நாயுடுவுக்கு ஆதரவாக நடந்த பிரச்சாரக் கூட்டமொன்றிலே அப்போது நான் பேசியது 'கிராமணி குலம்' (1.10.36) இதழில் வெளியாகியுள்ளபடி வருமாறு:

''இது தேர்தல் காலம்; இக்காலத்தில் எத்தனையோ புதிய மனிதர்கள் புற்றீசல்போலப் புறப்படுவார்கள். உங்களுக்கு வேண்டியதை எல்லாம் சாதித்துக் கொடுப்பதாகவும் வாக்குறுதி அளிப்பார்கள். சிலர் ''உங்கள் டிவிஷனில் விளக்குப் போடுகிறேன்; எனக்கு ஓட்டுப் போடுங்கள்'' என்பார்கள். இதற்கு நீங்கள் ஏமாந்து போகாமல் சுயராஜ்ய விளக்கு இமாசல உச்சியிலிருந்து பிரகாசிக்கச் செய்யும் காங்கிரசுக்கு ஓட்டளியுங்கள்.

''மற்றும் சிலர், 'ரஸ்தா'ப் போடுகிறேன், எனக்கு ஓட்டுப் போடுங்கள்'' என்பார்கள். ஆனால், சுயராஜ்ய தாகத்தைத் தீர்த்துக் கொள்ள சுதந்திர தடாகத்திற்குச் செல்லும் ரஸ்தாவில் அடக்குமுறை முள் நிறைந்திருக்கிறது. இம்முட்களைப் போக்கி, ரஸ்தாவைச் சீர்படுத்தி, சுதந்திர தடாகத்திற்கு வழிகாட்டும் காங்கிரசுக்கே ஓட்டளியுங்கள்; சுதந்திர விளக்குப் போடும் சாமர்த்தியம், சுதந்திர ரஸ்தாவைச் செப்பனிடும் தைரியம் வாய்ந்த காங்கிரசுக்கே ஓட்டளிக்க வேண்டுமென முதல் டிவிஷன் வாக்காளர்களாகிய உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

''கிராமணி ஓட்டர்கள் எல்லாம் கள்ளுக்கடை வியாபாரிகள்; எனவே, அவர்கள் காங்கிரசை ஒருகாலும் ஆதரிக்க மாட்டார்கள் என்றும், அதிலும் முதல் டிவிஷனிலுள்ள கிராமணி ஓட்டர்கள், காங்கிரசுக்கு எதிராகவே ஓட்டளிப்பார்கள் என்றும், எதிர்க்கட்சிக்காரர்களில் சிலர்

கூறுகின்றனர். இது சுத்தப் பொய். இம்மாதிரி கூறுபவர்கள் 'கிராமணிகள் எல்லாம் தேசத் துரோகிகள்' என்று மறைமுக மாகக் குற்றம் சாட்டுவதாகவே எண்ணுகிறேன்.

''கிராமணிகள் காங்கிரசுக்கு ஓட்டளிப்பதன் மூலம் தங்கள் தேசபக்தியைக் காட்டிக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.''

இப்படிப் பேசியதோடு அமையாமல், கிராமணி குல சங்கத்தின் ஆதரவோடு நடைபெற்று வந்த ''கிராமணி குலம்' மாதம் இருமுறை இதழிலும் காங்கிரசுக்கே வாக்களிக்குமாறு கிராமணி குல மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துத் தலையங் கம் எழுதினேன். இதன் விளைவாக, சங்கத்தில் சிறிது பிளவு ஏற்பட்டது. திருவொற்றியூர் திரு.டி. சண்முகம் பிள்ளை ஜஸ் டிஸ் கட்சியைச் சேர்ந்தவராதலால், எனது தீவிரமான காங்கிரஸ் போக்கை அவர் வெறுத்தார். சங்கம் கட்சிக்கு அப்பாற்பட்ட முறையில் இயங்க வேண்டுமென்று சங்கச் செயற்குழுக் கூட்டத் தில் வாதாடினார். எனக்கு அது பிடிக்கவில்லை. அந்நாளில், விடுதலைக் கிளர்ச்சியிலிருந்து ஒதுங்கி, கட்சிச் சார்பற்ற முறை யில் சாதிச் சங்கத்தை இயக்கவும், அதற்கெனவே என்னை அர்ப்பணித்துக் கொள்ளவும் நான் விரும்பவில்லை. அதனா லும், சங்கப் பணிகளில் ஈடுபடாமல் ஒதுங்கிக் கொண்டேன். ஆம்; ''குலத் தொண்டா தேசத் தொண்டா'' என்ற வினா எழுந்தது. நான் குலத்தொண்டைத் துறந்து தேசத் தொண்டி லேயே தொடர்ந்தும் தீவிரமாகவும் ஈடுபட முடிவெடுத்து, கிராமணி சங்கத்திலிருந்து ஒதுங்கிக் கொண்டேன். சங்கத்தில் இயங்கும் சக்தி நான் ஒருவன்தான். ஆதலால் எனது விலகல் காரணமாக சங்கம் செயலற்றுப் போய்விட்டது. எனது நிலை சரியோ, தவறோ, அந்த நாளில் நான் வேறுவிதமாக நடந்து கொள்ள இயலாதவனாக இருந்தேன்.

தேசிய நாடார் சங்கம்

1938-ஆம் ஆண்டில் சுயசாதியினரான நாடார் பிரிவின ரோடும் எனக்குத் தொடர்பேற்பட்டது. நாடார் மகாசன சங்கம், நாடார் சமூகத்தினரின் முன்னேற்றத்திற்கு அற்புதமாகத்

தொண்டு புரிந்து வந்தது. வேறு சாதிச் சங்கம் எதையும் அதற்கு இணை சொல்ல முடியாது. அன்று மட்டுமல்ல; இன்றுங்கூடத் தான்.

அந்தக் காலத்தில் தமிழகத்தின் தெற்கு மாவட்டங்களிலே நாடார் சமூகத்தினர் தாழ்த்தப்பட்டவர்களைப் போல நடத்தப் பட்டனர். கோயில்களில் நுழைந்து இறைவழிபாடு நடத்தவும் அவர்களுக்கு உரிமையிருக்கவில்லை. இன்னும் பல சமூகக் கொடுமைகளுக்கும் அவர்கள் ஆளாயினர். இந்தக் கொடுமை களிலிருந்து விடுதலை பெறும் பொருட்டு நாடார் சமூகத்தின ரிலே பலர் கிறித்துவ மதத்துக்கு மாறினர். செல்வந்தர்களா னோர், அந்நாளில் தேச விடுதலைப் போருக்கு எதிராக இயங் கிய நீதிக்கட்சியிலே கலந்தனர். இளைஞர்களானோர், நாத்திகப் போக்கில் செயல்பட்டு வந்த சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்த னர். தேச விடுதலைப் போருக்கு ஆதரவாக இருந்த நாடார்க ளும் உண்டு. அவர்களிலே தலைசிறந்தவராக விளங்கினார் விருதுநகர் திரு.கு. காமராசர்.

கோயில் நுழைவு

1938-இல் நுழைவு உரிமை பெறாமலிருந்த மதுரை மீனாட் சியம்மன் கோயில் அனைத்துச் சாதியினருக்குத் திறந்து விடப் பட்டது. இதனை, அப்போதைய சென்னை மாநிலத்தில் ராஜாஜி யின் தலைமையிலிருந்த காங்கிரஸ் அமைச்சரவைதான் செய் தது. இதனால் நாடார்களுக்கும் கோயில் நுழைவு உரிமை கிடைத்தது. இதனை மகிழ்ச்சியுடன் வரவேற்று காங்கிரஸ் அரசுக்கு நன்றி தெரிவிக்க நாடார் மகாசன சங்கம் தவறிவிட் டது. இதனால், வெறுப்புற்ற தேசியவாதிகளான நாடார்கள் மகாசன சங்கத்திலிருந்து வெளியேறி, ''தேசீய நாடார் சங்கம்'' என்பதாக ஒன்றை அமைத்து, அதற்கு என் ஆதரவைக் கோரி னர். அப்போதைய சட்டமன்றத்தில் காங்கிரஸ் உறுப்பினராக இருந்த தூத்துக்குடி திரு.ஏ. துரைசாமி நாடார், மதுரை திரு.ப.ரா. முத்துசாமி நாடார் ஆகிய இருவருடைய வேண்டுத லுக்கிணங்க நான் தேசீய நாடார் சங்கத்தின் ஆதரவாளனா னேன். இந்தச் சங்கத்தின் மாநிலம் தழுவிய முதல் மாநாடு

1938-இல் மதுரை எட்வர்ட் ஹாலில் நடைபெற்றது. அதிலே நான் காங்கிரஸ் கொடியை உயர்த்தி வைத்துப் பேசினேன். பிரபல தேசபக்தர் மதுரை ஏ.வைத்தியநாதய்யர் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். திரு. எஸ்.டி. ஆதித்தன் அவர்கள் தலைமை வகித்தார். மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்த மாநாடு நாடார் சமூகத்தில் பிளவு ஏற்படுத்தி விட்டது என்ற ஒரு குறையைத் தவிர மற்றெல்லா வகையிலும் நாடார் சமூகத்தினருக்குப் பயன்படும் வகையில் சிறப்பாக நடைபெற்றது.

தேசிய நாடார் மாநாடு

நாடார் சமூகத்தினரின் தேசிய எழுச்சிக்கு இம் மாநாடு எடுத்துக்காட்டாக விளங்கியது. அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் செயலாளராக இருந்த திரு.கு. காமராசர் மாநாட்டு நிர்வாகிகள் அழைத்திருந்தும் அதில் கலந்து கொள்ள மறுத்துவிட்டார். வியப்பென்னவென்றால், மாநாடு நடைபெற்ற நாளன்று அவர் மதுரையிலிருந்தும் மாநாடு நடந்த பக்கம்கூட அவர் தலைகாட்டாததாகும். சாதியின் பெயரால் இயக்கம் நடத்துவதனை அவர் விரும்பாதவராக இருந்தார். சாதீய உணர்ச்சியற்ற சுத்தத் தேசியவாதியாக விளங்கினார். ஆம்; அந்தக் காலத்தில்!

நான்காண்டுகள் கழித்துத் தேசிய நாடார் சங்கத்தின் மாநிலந் தழுவிய இரண்டாவது மாநாடும் மதுரையிலேயே நடந்தது. அந்த மாநாட்டில் ராஜாஜியும், டி.டி. கிருஷ்ணமாச்சாரியாரும் கலந்து கொண்டனர். முதல் மாநாட்டின்போது, காங்கிரஸ் மகாசபையின் பெருந்தலைவர்களில் ஒருவராகவும், முஸ்லிம் லீகின் பாகிஸ்தான் கோரிக்கையின் எதிரியாகவும், அப்போதைய சென்னை மாநிலத்தின் முதல்வராகவும் விளங்கிய ராஜாஜி, இரண்டாவது மாநாட்டின்போது அந்தத் தகுதிகள் அனைத்தையும் இழந்தவராகி விட்டார். காங்கிரசை விட்டு வெளியேறி, பாகிஸ்தானை ஆதரித்துத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வந்தார். காங்கிரஸ்காரர்களின் பகைவராக இருந்த நிலையில் தேசிய நாடார் மகாசன சங்க மாநாட்டில் கலந்து கொள்ள அவர் மதுரை வந்தார். இதனால், மாநாட்டிற்கு

வந்திருந்த இளைஞர்களிலே ஒருசாரார் மாநாட்டில் ராஜாஜி பங்கு கொள்வதனைக் கட்டுப்பாடாக எதிர்த்தனர். அவர்களைச் சமாதானப்படுத்த இரவு முழுவதும் விஷயாலோசனைக் கமிட்டி நடைபெற்றது. சமாதானப்படுத்தும் பணியிலே நான்தான் தீவிர மாக ஈடுபட்டேன். பாகிஸ்தான் பிரிவினைபற்றி மாநாட்டில் ராஜாஜி பேசமாட்டார் என்ற உறுதிமொழி கொடுத்து இளைஞர் களை நான் சமாதானப்படுத்தினேன். அவரும் நான் எதிர்பார்த் தது போலத்தான் நடந்து கொண்டார். இதற்குச் சில ஆண்டுக ளுக்குப் பின்னர், அதாவது பழைய நாடார் மகாசன சங்கத்தின் தேசிய எதிர்ப்பு வேகம் குறைந்த பின்னர், இரண்டு மகாசன சங்கங்களும் ஒன்று கலந்தன.

இரு சங்கங்களும் இணைந்த பின்னரும் நாடார் மகாசன சங்க வருடாந்திர மாநாட்டிற்குப் பலமுறை அழைக்கப்பட்டே னென்றாலும், அழைப்பை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. காரணம், சாதி ரீதியான பணிகளில் ஆர்வமில்லாமைதான். ஆனால், 1960-இல் சிவகாசியில் நடைபெற்ற நாடார் மகாசன சங்க மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினேன். அப்போது சிவகாசி நகரமன்றத் தலைவராக இருந்த திரு. இரத்தின நாடாரும், அவரது தமையனார் திரு. நடராச நாடாரும் தங்கள் அன்புப் பாசத்தால் என்னைக் கட்டுப்படுத்தி அழைத்துச் சென்றனர். முன்னுஞ் சொன்னேன்; இன்னொரு முறையுஞ் சொல்லுகிறேன். தேச முன்னேற்றத்திற்கு ஒத்த வகை யில் சாதீய இயக்கங்கள் — சாதிகளிடையே பகையை வளர்க்கா மல் நடைபெறுமாயின், அதில் தவறில்லையென்றே இன்னமும் நான் கருதுகிறேன். தாழ்த்தப்பட்ட — பிற்பட்ட — மிகப் பிற்பட்ட சாதிகள் தங்கள் முயற்சியால் முன்னேறுவதில் தவ றில்லை. ஆனால், சாதிப் பணிக்கும் தேசப் பணிக்குமிடையில் முரண்பாடு தோன்றுமாயின், உண்மையான தேசபக்தன் சாதிப் பணியிலிருந்து ஒதுங்கத் தயங்கக் கூடாது.

மறு மணம்

1928-இல் எனக்குத் திருமணமாகி, மணமகள் என்னோடு கூடி வாழத் தொடங்கிய ஐந்தாம் நாளிலேயே இயற்கையெய்திய சோகக் கதையை முன்பே கூறினேன். மனைவி இறந்த ஆண்டிலேயே என் பெற்றோர் எனக்கு இரண்டாவது திருமணம் செய்துவிட துடித்தனர். அதற்கு அவர்கள் சொன்ன ஒரே காரணம், அப்படிச் செய்யாவிடில், நான் கெட்டுவிடுவேன் என்பதுதான். என் பெற்றோரின் இந்தக் கருத்து என்னைக் கவரவில்லை. திருமணமான ஆறே திங்களுக்குள் — கணவன் மனைவியாக நாங்கள் வாழத் தொடங்கிய ஐந்தே நாட்களுக்குள் நான் மனைவியைப் பறிகொடுத்ததால், என் மனம் அதிர்ச்சியடைந்ததென்றாலும், அதனால் நான் காமுகனாகி விடவில்லை. மாறாக, மன அதிர்ச்சி காரணமாக இல்வாழ்க்கையையே வெறுத்து, பிரம்மச்சாரியாகவே இருந்து, தேசத் தொண்டில் இரண்டறக் கலந்து விடுவதென்ற முடிவுக்கு வந்தேன். அதன்படி, தொடர்ந்து ஒன்பதாண்டுக் காலம் நான் 'பிரம்மச்சரியம்' காத்து வந்தேன். 'பிரம்மச்சரியம்' என்பதன் முழுப் பொருளையும் உணர்ந்துதான் அந்தப் புனிதமான வார்த்தையை இங்குப் பயன்படுத்துகிறேன்.

பிரம்மச்சரியம்!

காந்தியடிகள், தாம் இயற்றியுள்ள 'சத்திய சோதனை'யில் பிரம்மச்சரியத்தின் மேன்மையை என்போன்ற எளியவனும் விளங்கிக் கொள்ளும் வகையில் — கடைப்பிடிக்கவும் ஆர்வங் கொள்ளும் முறையில் விளக்கமாக எழுதியுள்ளார். ஏதேனும் ஒன்றில் உள்ளம் இரண்டறக் கலந்து விடுமானால், பிறிதொன்றை நினையாத நிலையில் மனிதன் வாழ இயலும். தெய்வ பக்தர்களும் இப்படித்தான் கடவுளிடம் பற்று செலுத்தி பிரம்மச்சரியங் காத்திருக்கிறார்கள். தேசபக்தனுக்கும் அது சாத்தியமே என்பதனை நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேன்.

தேசம் விடுதலை பெறுகிறவரை திருமணம் செய்து கொள்ளாமல் பிரம்மச்சரியங்காக்க விரதம் எடுத்த தேசபக்தர்களுமுண்டு. அவர்களில் பரலி சு. நெல்லையப்பர் ஒருவராவார். அவர் 80 வயது வரையும் கட்டை பிரம்மச்சாரியாகவே காலங்கழித்தார். இன்னுஞ்சிலர், தேசப் பணிக்கென்றே தங்களை அர்ப்பணித்துக் கொண்டு திருமணத்தை வெறுத்து வரலாயினர். அவர்களை 'பிரம்மச்சாரிகள்' என்று சொல்வதற்கில்லை. நான் வாழ்நாள் முழுவதுமே பிரம்மச்சாரியாக இருந்துவிட நினைத்தேனில்லை. முதல் மனைவியைத் திடீரென்று பறிகொடுத்ததாலேற்பட்ட மன அதிர்ச்சியாலும், விடுதலைப் போரில் காட்டிவந்த வேகத்தாலும் மறுமணத்தைப் பற்றிச் சிந்திக்க இயலாதவனானேன் — அவ்வளவுதான்! ஆனால், என் பெற்றோர் ஐயுற்றது போன்று நான் கெட்டுவிடவில்லை. பிரம்மச்சரியத்தை ஒழுங்காகவே கடைப் பிடித்தேன்.

கொலை செய்ய முயற்சி!

1935-இல் நாடு முழுவதிலும் நடைபெற்ற டில்லி அசெம்பிளித் தேர்தலிலும், 1936-இல் சென்னை நகரில் மட்டுமே நடைபெற்ற மாநகராட்சித் தேர்தலிலும் நான் காங்கிரஸ் வேட்பாளர்களின் வெற்றிக்காக வடசென்னையில் முழு மூச்சுடன் பாடு பட்டேன். அதனால் காங்கிரசின் பகைவர்களான ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களில் சிலர் என்னைப் பகைத்தனர். சென்னை மாநகராட்சித் தேர்தல் முடிவு தெரிவிக்கப்பட்ட மறுநாள் விடியற்காலை 5 மணிக்கு — நான் வீட்டினுள் தூங்கிக் கொண்டிருந்த நேரத்தில் — பலர் கைகளில் தடிகளுடன் என் வீட்டின் முன் கூடி, வெளியே வருமாறு எனக்கு அறைகூவல் விட்டனர். 'தடியர்'களைக் கண்டு சமாதானங்கூற முயன்ற என் தந்தையைப் பார்த்து, 'உன் மகனை வெளியில் கொண்டு வா' என்று கூச்சலிட்டனர். என் தந்தையார், என்னை வெளியே அழைத்து வருவதாகச் சொல்லிவிட்டு உள்ளே வந்து, உறங்கிக் கொண்டிருந்த என்னை எழுப்பி, வீட்டின் பின்புற வழியாக வெளியேற்றி விட்டார். பின்னர் அவரே 'தடியர்'களை ஒருவிதமாகச் சமாளித்து விரட்டி விட்டார்! இது நிகழ்ந்தபோது என் குடும்பம் வடசென்னையில் கொருக்குப்பேட்டையில் குடியிருந்தது.

இந்த நிகழ்ச்சிக்குப் பின், கிராமணி சாதியினர் மிகுதியாக வாழுகின்ற தண்டையார்ப்பேட்டைக்கு என் குடும்பத்தைக் குடி யேற்றினேன். ஆம்; தற்காப்புக்காக! ஆனால், பகைவர்கள் அங்கும் என்னை விடவில்லை.

ஒருநாள் நள்ளிரவில், தண்டையார்பேட்டையில் நான் குடியிருந்த வீதிக்கு அடுத்த வீதியிலுள்ள தமிழாசிரியர் வித்வான் மாசிலாமணி கிராமணி அவர்கள் வீட்டுத் திண்ணை யில் அமர்ந்துகொண்டு, அவருடன் இரவு 12 மணி வரை சமய இலக்கியம் பற்றி உரையாடிக் கொண்டிருந்தேன். நாங்களிருவ ரும் தினமும் நள்ளிரவு வரை இப்படிப் பேசிக் கொண்டிருப்பது வழக்கம். அன்று நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது சந்தேகிக் கத்தக்க வகையில் வீதியில் இப்படியும் அப்படியுமாக இருவர் உலாவிக் கொண்டிருந்தனர். தமிழாசிரியர் இவர்களைக் கவனித்து விட்டார்.

பேச்சு முடிந்து நான் வீடு செல்லப் புறப்பட்டு 20 அடிதூரம் சென்று, என் வீட்டிற்கும் தமிழாசிரியர் வீட்டிற்கும் இடையி லிருந்த இருள் சூழ்ந்த திடலுக்குள் நான் நுழைநபோது சந்தே காஸ்பதமான நபர்களில் ஒருவர், 'கொண்டல்' என்று யார் பெயரையோ கூறி, அவரை உஷார்படுத்தினார். அவர்களை ஏற்கனவே சந்தேகித்த தமிழாசிரியர் 'சிவஞானம் நில்' என்று உரத்துக் கூவி, இருள் சூழ்ந்த திடலுக்குள் நான் நுழையாதபடி என்னைத் தடுத்துவிட்டார். பின்னர், அந்தத் திடலில், நன்கு வளர்ந்திருந்த செடியின் மறைவில் கையில் குத்துவாளுடன் ஒருவன் மறைந்திருந்ததைக் கண்டுபிடித்தோம். நாங்கள் அவனை நெருங்கியதும், கையிலிருந்த கொலைக் கருவியை மடியில் வைத்துக் கொண்டு அவன் தப்பிவிட்டான். தமிழாசிரி யர் அதட்டிக் குரல் கொடுத்து இருளிடத்தில் நுழைவதைத் தடுத்திராவிட்டால், அன்றே நான் கொல்லப்பட்டிருக்கக் கூடும். தமிழாசிரியரால் காப்பாற்றப்பட்டேன்.

இப்படி, அடுத்தடுத்து என்னை அடிக்கவும் கொல்லவும் நடந்த முயற்சிகளுக்குப் பின்னர், என் பெற்றோரும் நண்பர் களும் எனக்கு மறுமணம் செய்து வைப்பதிலே உறுதி காட்டினர்.

'கால்கட்டு'

என் அரசியல் பகைவர்கள் என்னை அடிக்கவும் கொல்லவும் அடுத்தடுத்து முயன்ற நிகழ்ச்சிகள் என் பெற்றோரைக் கதிகலங்கச் செய்துவிட்டன. இயற்கையிலேயே அஞ்சா நெஞ்சினரான என் தந்தையார் கூட என் உயிருக்கு எந்த நேரத்தில் எது நேர்ந்துவிடுமோ என்று பயந்தார். அஞ்சுவது அஞ்சாமை பேதைமைதானே!

என்னுடைய நெருங்கிய நண்பர்களும் எனக்கேற்பட்ட அபாயகரமான சூழ்நிலை குறித்துக் கவலைகொண்டனர். இவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து, எனக்குக் கால்கட்டு போட்டுவிட்டால் நான் அரசியலில் தீவிரமாக ஈடுபடமாட்டேன் என்ற முடிவுக்கு வந்தனர். திருமணம் என்பதற்கு, 'கால்கட்டு' என்று வக்கணையாகச் சொல்லும் வழக்கம் உண்டுதானே!

எனக்குப் பெண் பார்க்கும் வேலையில் என் பெற்றோரும் நண்பர்களும் ஈடுபட்டனர். ஆம்; என் சம்மதத்தோடுதான்! நான் மேற்கொண்ட 'பிரம்மச்சரியம்' என்ன ஆயிற்று என்று கேட்கிறீர்களா? அது, ஆன்மிகம் சம்பந்தப்பட்டதல்ல; அரசியல் சம்பந்தப்பட்டதுதான் என்று முன்பே கூறிவிட்டேனே! என் அன்னையார் எனக்குத் திருமணம் செய்து வைத்துவிடுவதென்று முடிவெடுத்து விட்டதால், அதை எதிர்த்து நிற்க எனக்குத் திறனில்லை. என் குடும்பத்தில் அவர் சர்வாதிகாரி!

மற்றும், அப்போதுதான் நாடு முழுவதிலும் மாநிலச் சட்டமன்றங்களுக்குப் பொதுத் தேர்தல்கள் நடந்து முடிந்து ஆறு மாநிலங்களில் காங்கிரஸ் அதிகாரத்திற்கு வரக்கூடிய சூழ்நிலை உருவாகியிருந்தது. அதனால், ''சுதந்திரம் நெருங்கிவிட்டது'' என்ற மாயை தேச பக்தர்களைப் பிடித்திருந்தது. சுதந்திர சூரியன் உதிக்கின்ற நேரம் என்ற மயக்கம் எனக்கும் இருந்ததால் திருமணத்திற்கு இசைந்தேன். விடுதலை பெற்றுக் கொண்டிருந்த இந்தியாவிலே எனக்குத் திருமணம் நடைபெறப் போவதாகக் கற்பனை செய்து கொண்டேன்.

எனக்குப் பெண் கொடுக்கப் பணக்காரர் பலர் போட்டியிட்டனர். அதே நேரத்தில் எனக்குப் பெண் கொடுக்கத் தயங்கியவர்களுமுண்டு. வேறொன்றுமில்லை; நான் அடிக்கடி சிறை சென்றுவிடுவேன் என்ற அச்சந்தான்! ஒன்றிருவர், இரண்டாந்தாரம் என்பதனாலும் எனக்குப் பெண் கொடுக்கத் தயங்கினர். அது இயற்கைதானே!

திருமணமாகிக் கணவனை இழந்தவளை 'விதவை'யென்கிறது — அவள் மறுமணம் செய்து கொள்வதையும் அனுமதிக்க மறுக்கின்றது வைதிக உலகம். ஆனால், ஆணுக்கு வேறு நீதியாம்! அவன் திருமணமாகி மனைவியை இழந்தாலும், அவனை 'விதவன்' என்று சொல்வதில்லை. ஆயினும், பெண்ணைப் பெற்றவர்களிலே பலர் தங்கள் பெண்ணை இரண்டாந்தாரமாகக் கொடுக்கத் தயங்கும் வழக்கம் இன்னும் இருக்கிறது. அதனால், 'விதவன்' ஆகிவிட்ட எனக்குப் பெண் கொடுக்கத் தயங்கியவர்களின் உணர்ச்சியை நான் குறை கூறுவதற்கில்லையல்லவா! இந்த உண்மையை இரண்டு பெண்களுக்குத் தந்தையான பிறகுதான் நான் உணர்ந்தேன்.

மாமன் மகள்

என்னுடைய நண்பர்கள் எனக்குப் பணக்காரர் வீட்டில் பெண் எடுக்க முயன்று கொண்டிருந்தபோது, என் அன்னையார், ''மாஜி பணக்காரர்'' ஒருவருடைய பெண்களை எனக்கும் என் தம்பிக்குமாகப் பேசி முடித்துவிட்டார்! அந்தப் பெண் வீட்டுக்காரர் வேறு யாருமில்லை; என் தாய் மாமன் எம்.ஆர். சிவகாளத்திப் பிள்ளைதான்! ஒரு காலத்தில் எங்கள் சாதியிலேயே பெருஞ்செல்வந்தராக விளங்கிய அவர், திடீரெனத் தன் மனைவி இறந்ததால் — மைத்துனன்மார்களிடம் பூசல் ஏற்பட்டதால், தனிமைப்படுத்தப்பட்டு நடுத்தர வர்க்கத்தவராகி விட்டார்!

என் தாய் மாமன், தான் செல்வச் சிறப்போடு வாழ்ந்த காலத்தில் தன் தங்கையான என் அன்னையிடம் அன்பு செலுத்தத் தவறினார். என் குடும்பத்தை ஒரு தொழிலாளியின் குடும்பம் என்ற பாவத்திற்காக அடியோடு பகிஷ்கரித்தார்.

செல்வச் செருக்கை என் தாய் மாமன் வடிவத்தில்தான் நான் முதன் முதலாகச் சந்தித்து அதன் கொடுமையை உணர்ந் தேன். என்னை சோஷலிஸ்டாக்கிய முதல் நபர் என் தாய்மாமன் தான்! ஆனால், அவர் செல்வத்தையிழந்த பின்னர், என் தாய் அவரிடம் அன்பு காட்டி, தன் வறுமை வாழ்விலும் அவருக்குப் பொருளுதவி செய்து வந்தார். ஆம்; சகோதரப் பாசம்!

தன் தாய் வீட்டுத் தொடர்பு தன்னோடு அற்றுப் போய்வி டக் கூடாது என்பதற்காக, தன் தமையன் பெண்களை எனக்கும் என் தம்பிக்கும் திருமணம் செய்து வைக்க விரும்பினார்.

சங்கடமென்னவென்றால், எந்தப் பெண்களை எனக்கும் என் தம்பிக்கும் திருமணம் செய்து வைக்க என் தாய் மாமன் இசைவு தெரிவித்தாரோ, அவர்கள், அவருடைய காப்பில் இருக்கவில்லை என்பதாகும். அவர்கள், தங்கள் தமையன், தமக்கையின் பாதுகாப்பிலிருந்தனர். என் தாய் மாமன் தன் மூத்த மகன் — மூத்த மகள் விருப்பத்திற்கு மாறாக, அவர்களு டைய காப்பிலிருந்து தன் பெண்களைக் கடத்திக் கொண்டு வந்துதான் எனக்கும் என் தம்பி பரசுராமனுக்கும் திருமணம் செய்து கொடுக்கத் திட்டமிட்டார். ஆம்; மணப்பெண்ணின் தந்தை என்ற உரிமையால் சட்டப்படியே அதனைச் சாதிக்க அவரால் முடிந்தது.

மணப்பெண்ணின் தமையனும் தமக்கையும் செல்வமும் செல்வாக்குமுடைய தங்கள் தாய் மாமன்மாருடைய பலத்தைக் கொண்டு எனது திருமணத்தை எப்படியும் தடுத்து நிறுத்திவிட முயன்றனர். அதனால், எனது திருமணம் — எந்த நேரத்தில் எது நேருமோ என்ற அச்சத்தால் — என்னுடைய நெஞ்சுரமிக்க நண்பர் குழாத்தினரின் பாதுகாப்பில் நடக்க வேண்டியிருந்தது. மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியிலும் துயரத்தையும் சுவை பார்ப்பது தானே எனது வரலாறு!

தேசியத் திருமணம்!

என் மாமன் மகள் திருமதி இராசேசுவரி என்னை மனமார விரும்பித்தான் மணந்தாள். திருமணத்தின்போது எனக்கு வயது 31. அவளுக்கு வயது 17. திருமணம் சிறப்பாகவே நடந்தது.

கிராமணி சங்கத்தின் செயலாளனாகவும், சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளனாகவும் இருந்தேனாதலால், கிராமணி சாதியினரைச் சார்ந்த பணக்காரார்களும், காங்கிரஸ் பிரமுகர்களும் ஏராளமாக என் திருமணத்திற்கு வந்திருந்தனர்.

அந்தக் காலத்து காங்கிரஸ் வட்டாரத்தின் வழக்கப்படி ''வந்தே மாதரம்'' — ''மகாத்மா காந்திக்கு ஜே'' — ''பாரத் மாதாகி ஜே'' என்று என் காங்கிரஸ் தோழர்கள் எழுப்பிய ஜெயகோஷங்களுக்கிடையே என் மனைவியின் கழுத்தில் நான் தாலி கட்டினேன். அந்த நாளில் அதன் பெயர் தேசியத் திருமணம்!

தன் மைத்துனர்களை விட்டுப் பிரிந்ததால் என் மாமனார் ஏழையாகி விட்டாரென்றாலும், என் மனைவி சொத்தோடும் சுகத்தோடும் தன் தமயன் — தமக்கையுடன் இருந்து வந்தாள். அவற்றையெல்லாம் துறக்கவும் துணிந்துதான் அவள் வறுமையில் உழன்று கொண்டிருந்த என்னை மணந்தாள்.

திருமணத்தின்போது என் மனைவிக்கு ஒரு வீடு (இப்போது நாங்கள் குடியிருப்பது) இருந்தது. அவள் பெயரில் சேர்க்கப்பட்டு வட்டிக்கு விடப்பட்டிருந்த ரொக்கப் பணம் ரூ.20 ஆயிரமும், ஓராயிர ரூபாய்க்குப் பித்தளைப் பாத்திரங்களும், ஐயாயிரம் ரூபாய்க்கு நகைகளும் இருந்தன. இவ்வளவையும் தன் தமக்கையிடம் விட்டுவிட்டு, உடுத்திய உடையோடு தன் தந்தை வீட்டுக்கு வந்து, என்னை மணந்தாள்.

திருமணத்தின் போது நானும் என் மனைவியும் வலிவும் வனப்புமுடைய ஜோடிகளாக இருந்தோமாதலால், மணவறையில் நாங்கள் அமர்ந்திருக்கப் பார்த்த பெரியவர்கள் சிலர் ''மணமக்களுக்கு திருஷ்டிப்படும்'' என்று சொன்னது என் அன்னையாரின் காதில் விழுந்துவிட்டது. ''கல்லடி பட்டாலும் படலாம்; கண்ணடி படக்கூடாது'' என்று சொல்லித் திருமணமான அன்றே எங்களுக்கு அவர் திருஷ்டி கழித்தார்.

காங்கிரஸ் பாசறையிலே...

1936 முதல் 1941 வரையுள்ள ஐந்தாண்டுக் காலத்திலே சென்னை நகர காங்கிரஸ் வட்டாரத்திலே என் செல்வாக்கு வேகமாக வளர்ந்தது. 1935 வரை எனது காங்கிரஸ் பணி வடசென்னைக்குட்பட்டதாகவே இருந்தது. 1936-க்குப் பின் சென்னை மாவட்ட முழுவதிலும் செல்வாக்குப் பெற்றேன். 1937-இல் நான் முதன் முதலாகச் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் அங்கத்தினன் ஆனேன். அதே ஆண்டில், அந்தக் கமிட்டியின் துணைச் செயலாளனானேன். அடுத்த ஆண்டி லேயே செயலாளனானேன். அந்தக் காலத்தில் இந்தப் பதவி களுக்கெல்லாம் மக்கள் மத்தியிலே பெரிய மதிப்பிருந்தது.

பொறாமையாளர் போராட்டம்!

1937 மார்ச்சு திங்களில் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி, தன்னில் காலியான ஒரு உறுப்பினர் பதவிக்கு ஒருமன துடன் என்னைத் தேர்ந்தெடுத்தது. ஆம்; நான் காங்கிரசில் பிரவேசித்த 13 ஆண்டுகளுக்குப் பின்னர், வடசென்னை ஊழிய னாக இருந்த நிலையிலிருந்து, சென்னை மாவட்ட ஊழியனாக உயர்ந்தேன். இது என் விருப்பத்தால் நிகழ்ந்ததன்று. தலைவர் எஸ். சத்தியமூர்த்தி, அன்று ''பெத்துநாய்க்கன்பேட்டை இரட் டையர்'' என்று அழைக்கப்பெற்ற திரு.த. செங்கல்வராயன், திரு.பி.கோபாலரத்தினம் ஆகிய மூவருடைய விருப்பத்தின் பேரில்தான் நான் சென்னை மாவட்ட காங்கிரசின் உறுப்பின னாக இசைந்தேன். ஆனால் வடசென்னையிலே ஒரு சாரார் எனது நிலை உயர்ந்தது கண்டு பொறாமை கொண்டனர்.

இராயபுரம் காங்கிரஸ் கமிட்டி எனது தேர்வை எதிர்த்துத் தமிழ்நாடு காங்கிரசுக்கு மனுச் செய்தது. அப்போது த.நா. கா.க. தலைவராக இருந்த திரு.சி.என். முத்துரங்க முதலியார் அந்த எதிர்ப்புக்கு மதிப்பளிக்க மறுத்தார். ஆயினும், எதிர்ப்பாளர்

'போர்க்கோலம்' கொண்டனர். அதனால் இதில் சமரசம் செய்யும் பொறுப்பை ராஜாஜியிடம் விட்டது தமிழ்நாடு காங்கிரஸ். அவர் இராயப்பேட்டை காங்கிரஸ் மண்டபத்தில் (தற்போது சத்தியமூர்த்தி பவனம் உள்ள இடத்தில்) என்னையும் எதிர்ப்பாளரையும் அழைத்துப் பேசினார். சமரசம் இயலாமற் போகவே, சென்னை மாவட்ட காங்கிரஸ் உறுப்பினனாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லத்தக்கதே என்று எழுத்துமூலம் தீர்ப்பளித்தார்.

பிற்காலத்தில், அரசியலிலே எனது அந்தஸ்து உயர்ந்த ஒவ்வொரு நேரத்திலும் நான் பொறாமையாளர்களின் போராட்டத்தைச் சந்திக்க வேண்டியிருந்தது. இருப்பினும், காங்கிரஸ் முகாமிலே நான் முன்னேறிக் கொண்டுதான் இருந்தேன்.

1940-41-ஆம் ஆண்டுகளில் ஏககாலத்தில் தண்டையார் பேட்டை காங்கிரஸ் கமிட்டி, முதல் சர்க்கிள் (வடசென்னை) காங்கிரஸ் கமிட்டி ஆகியவற்றின் தலைவனாகவும், சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் செயலாளனாகவும் பதவிகள் பெற்று வளர்ந்தேன். அந்தக் காலத்தில்தான் ராஜாஜி, எஸ்.சத்தியமூர்த்தி போன்ற பெருந் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அவர்களுடன் பழக வாய்ப்பு பெற்றேன்.

1937-இல் சென்னை மாநிலத்தில் ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் அமைச்சரவை ஏற்பட்டது. அதனால், மாநிலத்தின் தலைநகரிலுள்ள காங்கிரஸ் கமிட்டி என்ற வகையில் என்னைச் செயலாளனாகக் கொண்ட சென்னை ஜில்லா காங்கிரசின் பொறுப்பும் மதிப்பும் அதிகரித்தது. அப்போது ராஜாஜி வழியில் இயங்கிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு அடுத்த நிலையில் நிற்கத்தக்க அந்தஸ்துக்கு எனது உழைப்பாலும் பிரச்சாரத்தினாலும் உரிமை உணர்வாலும் சென்னை ஜில்லா காங்கிரசைக் கொண்டு வந்தேன். திரு.எஸ். சத்தியமூர்த்தி ஐயர், செ.ஜி.கா. கமிட்டியின் தலைவராக இருந்தார். நாங்களிருவரும் தொடர்ந்து பல ஆண்டுகள் தலைவர், செயலாளர் பதவிகளில் நிலைத்திருந்தோம். ஆண்டுதோறும் இந்தப் பதவிகளுக்குத் தேர்தல் வரும். கடுமையான போட்டியும் இருக்கும். அப்போது

காங்கிரஸ் சோசலிஸ்டுகள் கட்சிக்குள் கட்சியாக இயங்கி வந்தனர். அவர்கள் பார்வையிலே எஸ். சத்தியமூர்த்தி ஐயர் பிற்போக்காளராகப் பட்டார். அதனால், ஜில்லாக் காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு ஐயருக்கு எதிராக ஒருவரை நிறுத்தி வைப்பார்கள். ஆயினும், வெற்றி ஐயருக்குத்தான்! செயலாளர் பதவிக்கு ஐயரின் ஆதரவோடு நான் நிற்பேன். காங்கிரஸ் சோசலிஸ்டுகள் எனக்குப் போட்டி போட மாட்டார்கள். என் அதிர்ஷ்டம், அவர்கள் பார்வையிலே நான் முற்போக்காளனாகப் பட்டேன்.

நாஞ்சில் இளங்கோ என்ற இளைஞர், மிகவும் துடிப்புள்ள சோசலிஸ்டாக சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியில் அங்கம் வகித்தார். அவர் பிள்ளைப் பருவத்திலேயே பேச்சாளராகி, வயது வளர வளரத் தமது நாவன்மையையும் வளர்த்து வந்தார்.

வடசென்னை நண்பர்கள்

அந்நாளில், வடசென்னை காங்கிரசிலே எனக்கு நல்ல செல்வாக்கிருந்தது. எந்தக் கமிட்டிக்கு — எந்தப் பதவிக்கு யார் வர வேண்டுமானாலும் என் உதவி தேவைப்பட்ட காலமது. வடசென்னை காங்கிரஸ் பிரமுகர்களான சர்தார் பு.ம. ஆதிகேசவலு நாயகர், இராயபுரம் சகோதரர்களான பி.ஆர். கஜபதி நாயுடு, பி.ஆர். சீராமுலு நாயுடு, திரு.வி.என். குமாரசாமி, திருமதி வி.கே. சீதாலட்சுமி தம்பதிகள், பிரபல நாடக நடிகர் ஆரியகான கே.எஸ். அனந்தநாராயண ஐயர் ஆகியோர் நான் சொல்வதைத் தட்டமாட்டார்கள். காங்கிரஸ் அடித்தளத்து ஊழியர்களிடையேயும் எனக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. இதைக் கண்டு பொறாமைப்பட்டு, எனக்குத் தொல்லை கொடுத்த காங்கிரஸ்காரர்களுமுண்டு. ஆனால், அவர்கள், தாங்களும் முன்னுக்கு வராமல், எனது முன்னேற்றத்தையும் தடுக்க முடியாமல் தவித்தனர். வடசென்னையில் எனக்கிருந்த செல்வாக்கின் காரணமாகத்தான் தென் சென்னையிலிருந்த பெருந்தலைவர்களால் நான் மதிக்கப்பட்டேன்.

அந்த நாளில் வடசென்னை ஜஸ்டிஸ் கட்சியின் கோட்டை யாக விளங்கியது. போதாக்குறைக்குப் பெரியார் ஈ.வெ.ரா.வின் சுயமரியாதை இயக்கமும் வடசென்னையில் நல்ல செல்வாக்கு பெற்றிருந்தது. அதனால் அங்கு காங்கிரசைக் கட்டி வளர்ப்பது அவ்வளவு சுலபமான காரியமாக இருக்கவில்லை. ஜஸ்டிஸ் கட்சியும் சுயமரியாதை இயக்கமும் காங்கிரசுக்கு எதிராக ஒன்று பட்டுப் பணியாற்றின.

வடசென்னையில் செல்வாக்கு மிகுந்த இரண்டொரு சாதிக ளிலே நாடார் சாதியும் ஒன்றாகும். அந்தச் சாதியினர் இப்போது காங்கிரஸ் சார்புடையவர்களாக இருக்கின்றனர். அந்நாளில், அவர்களெல்லாம் ஜஸ்டிஸ் கட்சி ஆதரவாளர்கள்! சுயமரி யாதை இயக்கம் வடசென்னையில் நாடார் சமூக இளைஞர்களி டையேதான் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தது.

அபாயகரமான களம்

ஒரு சமயம் — மாநகராட்சித் தேர்தலின்போது என்று நினைப்பு — ராயபுரம் ஆதம்சாயபு தெருவில் காங்கிரஸ் ஊர்வலம் ஒன்று பயங்கரமான முறையில் அடித்துக் கலைக்கப் பட்டது. பலர் படுகாயமடைந்தனர். அந்தச் சம்பவத்தை யொட்டி ''மெட்றாஸ் மெயில்'' விசேஷ அனுபந்தம் வெளியிட் டது. சென்னை சட்டமன்றத்திலே, கேள்வி நேரத்தில் — ராயபுரம் சம்பவத்தையொட்டி — சரமாரியான கேள்விக் கணை கள் எதிர்க்கட்சியினரால் தொடுக்கப்பட்டன.

இப்படி, காங்கிரஸ்காரர்கள் பயங்கரமான சோதனை களுக்கு உட்பட்டுத்தான் கட்சிக்குத் தொண்டாற்ற வேண்டியிருந் தது வடசென்னையிலே! நான் காங்கிரஸ் கட்சியில் முன்ன ணிக்கு வருவதற்கு முன்பே சர்தார் ஆதிகேசவலு நாயகர் வடசென்னையில் காங்கிரசை வளர்க்க அரும்பாடு பட்டார். 'வடசென்னை' என்றாலே, 'சர்தார் ஆதிகேசவலு நாயகர்' என்றிருந்த காலமும் உண்டு. பொதுவாக வடசென்னையில் வன்னியர் சாதியினரில் பெரும்பாலோர் அந்நாளில் காங்கிர சுக்கு ஆதரவாகவே இருந்தனர் எனலாம்.

1938-இல் கட்டாய இந்தியைக் கொண்டு வந்தது ராஜாஜி அமைச்சரவை. ராஜாஜிதான் அதற்குப் பொறுப்பு! அப்போது கல்வி அமைச்சராக இருந்தவர் டாக்டர் ப.சுப்பராயன். அவர், அந்நாளிலும் ஆங்கில மோகம் பிடித்தவர்தான்! ஆயினும், காங்கிரசில் அப்போது ராஜாஜிக்கிருந்த அபரிமிதமான செல் வாக்கிற்கு எதிராக அவர் எதுவும் செய்ய இயலாதவரானார். பள்ளிப் பிள்ளைகள் மீது இந்தியைக் கட்டாயமாகத் திணித்த ராஜாஜியின் செயலை அப்போது காந்திஜியும் குறை கூறினார். காந்திஜி, எதையும் — அது எவ்வளவுதான் நல்ல காரியமாயி னும் — திணிப்பு முறை மூலம் அமுல் நடத்துவதை விரும்பாத வர். ராஜாஜி இந்தித் திணிப்பும், அதற்கு ஏற்பட்ட எதிர்ப்பைச் சமாளிக்க அவர் கடைப்பிடித்த அடக்குமுறையும் ஏற்கனவே பயங்கரமான சோதனைகளுக்கிடையே பணிபுரிந்து வந்த வட சென்னை காங்கிரஸ்காரர்களை மேலும் சோதனைக்குள்ளாக்கி விட்டன. நான் வடசென்னை என்று குறிப்பிடுவது வடக்கே காலடிப்பேட்டை தொடங்கி, தெற்கே தங்கசாலை வரையுள்ள பகுதியாகும்.

இந்தி எதிர்ப்புக்கு ஈ.வெ.ரா. தலைவர்

சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளன் முதல் சர்க்கிள் (வடசென்னை) காங்கிரஸ் கமிட்டியின் தலை வன் என்ற முறையில் கட்டாய இந்தி எதிர்ப்பைச் சமாளிக்கும் பிரச்சாரப் போருக்குச் சென்னை நகர காங்கிரசாரைத் தயாரிக்க வேண்டிய பொறுப்பு என்மீது சுமந்தது. சென்னை ஜில்லா காங்கிரஸ் தலைவராக இருந்த எஸ். சத்தியமூர்த்தி அவர்கள், இந்தி எதிர்ப்பால் காங்கிரசின் செல்வாக்கு சரியாமல் காப்பதில் அதிக அக்கறை காட்டவில்லை. காரணம், காங்கிரஸ் அமைச்ச ரவையில் அவரைச் சேர்த்துக் கொள்வதாக ராஜாஜி முதலில் உறுதி கூறி, பின்னர் அவரை ஏமாற்றிவிட்டதாகும். அதனால் அவர் ராஜாஜி அமைச்சரவையிடம் நல்லெண்ணமில்லாதவராக இருந்தார்.

மொழிப் பிரச்சினையாக மட்டும் மறைமலையடிகளாலும், நாவலர் சோமசுந்தர பாரதியாராலும் தொடங்கப்பட்ட இந்தி

எதிர்ப்பானது நாளடைவில் அரசியல் ரீதியான காங்கிரஸ் எதிர்ப்பாகவும், வகுப்புவாத ரீதியான பிராமண எதிர்ப்பாகவும் மாறி, பெரியார் ஈ.வெ.ரா.வின் தலைமையைப் பெற்றுவிட்டது. முதலில் சென்னை நகரில் மட்டுமே தொடங்கிய இந்தி எதிர்ப்பு சில வாரங்களுக்குள் காட்டுத் தீபோல் தமிழ்நாடு முழுவதிலும் பரவி, காங்கிரசைப் பயமுறுத்துமளவுக்கு வளர்ந்துவிட்டது.

எனது நிலைமை

கட்டாய இந்திக்கு ஏற்பட்ட கடுமையான எதிர்ப்பைச் சென்னை மாவட்டத்தில் — குறிப்பாக, வடசென்னையில் சமாளிக்க நான் எடுத்துக் கொண்ட முயற்சிகளைக் குறிப்பிடுவ தற்கு முன்பு இந்தி திணிப்புப் பற்றி அன்றிருந்த எனது மனோநிலையைச் சிறிது விளக்கிவிடுவது அவசியமாகும்.

இந்திதான் சுதந்திர இந்தியாவிலே மத்திய அரசின் ஆட்சி மொழியாகவும், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமான இணைப்பு மொழியாகவும் இருந்து வருமென்பது காங்கிரஸ் மகாசபையின் அதிகாரபூர்வமான கொள்கையாகும். இந்தக் கொள்கையை உருவாக்கிய பெருந்தலைவர்களிலே ராஜாஜியும் ஒருவராவார். அவர்தான் அன்று ''தட்சண பாரத இந்திப் பிரச்சார சபை''யின் தலைவர்.

சுதந்திர இந்தியாவில் இந்தி மட்டுமே இந்தியாவின் பொது மொழியாக வேண்டுமானால், இந்தி வழங்காத தென்னிந்தியா வின் மக்கள் முன்கூட்டியே அந்த மொழியைப் பயில வேண்டு மென்று அவர் கருதினார். அதனால், சென்னை மாகாண அரசின் முதல்வராக தான் இருக்க நேர்ந்ததனைப் பயன்படுத்திக் கொண்டு, உயர்நிலைப் பள்ளிகளிலே முதல் மூன்று படிவங்க ளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார்.

ராஜாஜி காங்கிரஸ்காரராதலால், அவருடைய கருத்திலும் செயலிலும் யாரும் குறை காண்பதற்கில்லை. மற்றும், அன்றைய ராஜாஜி, தமிழுக்கு எதிராக ஆங்கில ஆதிக்கத்தை நிலை நிறுத்தவோ, இந்தி மொழி ஆதிக்கத்தை ஏற்படுத்தவோ எண்ணி யவரல்லர். காங்கிரஸ் மகாசபையின் கொள்கையும் அதுவாக

இருக்கவில்லை. சுதந்திர இந்தியாவிலே, தமிழகத்தின் ஆட்சி மொழி தமிழ்தான்; அனைத்துக் கல்லூரிகளிலும் அனைத்துப் பாடங்களுக்கும் பயிற்சி மொழியும் தமிழ்தான்; நீதிமன்றங் களிலே நிர்வாக மொழியும் தமிழ்தான்; தொடர்பு மொழியாக மட்டுந்தான் இந்தி மொழிக்குத் தமிழகத்திலே இடமுண்டு. இதுதான் காங்கிரசின் அன்றைய மொழிக் கொள்கை.

இந்தக் கொள்கைப்படிதான் — அதாவது, தமிழ் மொழி யின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கேடில்லாத வகையில்தான் இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்கியதாக அன்று ராஜாஜி கூறினார். இதனைச் செயலிலும் காட்டவேண்டி, சென்னை மாநிலத்தின் உயர்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் பிரதேச மொழிகளையே பயிற்சி மொழியாக்கினார். ஆம்; தமிழகத்து உயர்நிலைப் பள்ளிகளில் தமிழையும், ஆந்திர — கேரள — கன்னடப் பிரதேசங்களில் அந்த அந்தப் பிரதேச மொழிகளை யும் பயிற்சி மொழிகளாக்கினார். நடைமுறை இவ்வளவு தெளி வாக இருந்தும், இந்தி படிப்பதால் தமிழ் மொழி அழியும் என்ற எண்ணம் தமிழ் மக்களுக்கு எப்படியோ ஏற்பட்டுவிட்டது.

இந்தித் திணிப்பை நியாயப்படுத்த அன்று ராஜாஜி கூறிய கருத்துகள் இந்தி எதிர்ப்பை வலுப்படுத்தி விட்டன. ''இந்தி படித்தால், சமஸ்கிருத மொழியை எளிதில் பயிலலாம்'' என்று ராஜாஜி கூறினார். அதனால் இந்தித் திணிப்பானது சமஸ்கிருத மொழியின் செல்வாக்கைத் தமிழகத்தில் வளர்ப்பதற்கான மறைமுகமான சூழ்ச்சி என்று தமிழ்ப் புலவர்களிலே பலர் கருதினர்.

இந்தி பக்தர்கள் நிலை

இந்தி எதிர்ப்புக்கு எதிர்ப்பு காட்டி — அதாவது, கட்டாய இந்திக்கு ஆதரவு காட்டிப் பிரச்சாரம் செய்த காங்கிரஸ்கார் களிலே பலர் தங்கள் தாய்மொழி இந்தி மொழி அல்லாத வேறொரு மொழி — அதாவது, இலக்கண — இலக்கிய வளமுடைய தமிழ் மொழி என்பதனை மறந்தனர். இந்தியைத் தங்கள் தாய்மொழி போலக் கருதி, ''இந்தி படித்தால் துளசிதாஸ்

இராமாயணத்தில் புலமை பெறலாம்; பக்த மீராவின் பக்திப் பாடல்களைப் பயிலலாம்'' என்றெல்லாம் மேடையேறிப் பேசினர். இந்தி எதிர்ப்பாளர்கள் இந்தி மொழியின்பால் எவ்வளவு அதிகமாகப் பகைமை காட்டினார்களோ, அதைவிடவும் அதிகமாக அந்த மொழியின்பால் பக்தி காட்டினர் தமிழ் மொழிப் பற்றற்ற காங்கிரஸ்காரர்கள்.

'இந்தி ஒழிக' என்று எதிர்ப்பளர்கள் கோஷித்தார்களென்றால், 'இந்தி வாழ்க' என்று ஆதரவாளர்களான காங்கிரஸ்காரர்கள் கோஷித்தனர். இதனால், தமிழ்ப் பற்றுடைய என் போன்ற காங்கிரஸ்காரர்களுடைய நிலைமை தரும சங்கடமாக இருந்தது.

நானும், நாவலர் எஸ். சத்தியமூர்த்தி ஐயரும் இந்தித் திணிப்பு காரணமாகத் தேவையில்லாத ஒரு உள்நாட்டுப் போர் உருவாவதை விரும்பவில்லை. நாங்கள் இருவருமே சுதந்திர இந்தியாவில் ஆங்கில மொழியின் ஆதிக்கம் அடியோடு அகற்றப்பட வேண்டுமென்று விரும்பியவர்கள். காங்கிரஸ்காரர்கள் என்ற வகையில், இந்திதான் இந்தியாவின் பொதுமொழி என்பதனையும் நாங்கள் ஏற்றுக் கொண்டிருந்தோம். ஆயினும், விடுதலைப் போர் முடியாத நிலையிலே, எந்த நேரத்திலும் திரும்பவும் மிகவும் கடுமையான முறையில் விடுதலைப் போரின் மற்றொரு கட்டம் தொடங்கக் கூடும் என்றிருந்த நேரத்திலே, இந்தித் திணிப்பு காரணமாக காங்கிரஸ் கட்சி பலவீனப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. மற்றும், தமிழ் மொழியிலே ஆழ்ந்த புலமையும் அழுத்தமான பற்றுதலுமுடைய அவ்வளவு பேரையும் பகைத்துக் கொண்டு இந்தி மொழியைத் தமிழகத்தில் பரப்புவதிலே எனக்கு ஆர்வமில்லை.

அந்தக் காலத்திலேயே திரு.வி. கலியாணசுந்தரனார், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் போன்றவர்களிடமிருந்து எனக்கு நெருங்கிய தொடர்பிருந்தது. இவர்களிருவரும் ஆங்கில ஆதிக்கத்தை அகற்ற விரும்புபவர்கள். இன்றில்லாவிட்டாலும் என்றேனும் ஒருநாள் இந்திதான் இந்தியாவின் பொது மொழியாக வர முடியுமென்ற கருத்துடையவர்கள். அப்படியிருந்தும், அவர்கள்

கூட, இந்தி திணிப்புக் காரணமாகத் தமிழினத்தாரிடையே கடுமையான பிளவு ஏற்படுவதனை விரும்பாதவர்களாயினர்.

கட்டாய இந்திக்கு எதிர்ப்பு

இந்தச் சூழ்நிலையிலே சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியில் மிகவும் செல்வாக்கு பெற்றிருந்த உறுப்பினர் களான திரு. பி. கோபாலரத்தினம், பரலி. சு. நெல்லையப்பர், மற்றும் சிலருடைய துணையோடு இந்தி மொழியைக் கட்டாயப் பாடமா கத் திணித்ததனால் ஏற்பட்ட விரும்பத்தகாத விளைவுகளை எடுத்துக்காட்டி, அதனை விருப்பப் பாடமாக மாற்றுமாறு முதல்வர் ராஜாஜிக்கு வேண்டுகோள் விடும் தீர்மானமொன்றைச் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியில் நானே முன்மொழிந் தேன். பரலி சு.நெல்லையப்பர் வழிமொழிந்ததாக நினைப்பு. தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மா னத்தை திரு. எஸ் சத்தியமூர்த்தி அய்யரும் ஆதரித்தார் என்ப தனை இங்கு நான் சொல்லியாக வேண்டும். கட்சிக் கட்டுப்பாட் டால் தீர்மானம் பத்திரிகைகளுக்கு அனுப்பப்படவில்லை.

தீர்மானத்தின் நகலைத் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் அவர்களிடம் கொடுத்து, அவரையே முதல்வர் ராஜாஜியிடம் தூது அனுப்பினோம். ராஜாஜி அவர்கள், தீர்மானத்தை உடனடி யாக ஏற்றுக்கொண்டு விடவில்லை என்றாலும், தீர்மானம் நிறைவேற்றியவர்களின் தேசபக்தியை அவர் சந்தேகிக்க வில்லை. கொஞ்சம் தாமதித்து இந்தி மொழி விருப்பப் பாடமாக மாற்றப்பட்டது. ஆம்; முதல்வர் ராஜாஜியேதான் மாற்றினார்.

இந்தி மொழி கட்டாயப் பாடமாக அல்லாமல், விருப்பப் பாடமாக இருக்க வேண்டுமென்று நாங்கள் (காங்கிரசிலே ஒரு சாரார்) விரும்பினோம்; அதனை அரசும் ஏற்க முயற்சித்தோம் என்றாலும், அதே நேரத்தில் இந்தி எதிர்ப்புக்கு எதிர்ப்பு காட்டவும் நாங்கள் தயங்கவில்லை. காங்கிரஸ்காரர்கள் என்ற முறையில் அது எங்கள் கடமையாக இருந்தது. இந்தி எதிர்ப்பா னது தமிழ் மொழியைக் காப்பதற்காக அல்லாமல், தேச விடுத லைக்குப் பாடுபட்டு வந்த ஒரே அமைப்பாகிய காங்கிரஸ்

கட்சியை வீழ்த்துவதற்காகவும், அப்போதுதான் பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்திருந்த ஜஸ்டிஸ் கட்சிக்குப் புத்துயிரளிப்பதற்காகவுமே நடைபெறுகிறது என்று நாங்கள் கருதியதால், அந்த எதிர்ப்பை முறியடிக்க முயன்றோம். சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் பொதுக் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்தினேன். மற்றும், வட்டந்தோறும் அமைந்திருந்த காங்கிரஸ் கமிட்டிகள், தேசிய மன்றங்கள் சார்பிலும் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தத் தூண்டுதலாக இருந்தேன். வடசென்னையைப் பொறுத்தவரையில் நான்தான் காங்கிரசின் பிரதான பிரச்சார பீரங்கியாதலால், இந்தி எதிர்ப்புக்கு எதிர்ப்பு காட்டி நடந்த பிரச்சாரத்திலே நான் பெரும்பங்கு கொண்டேன்.

இந்தி எதிர்ப்புக்கு எதிர்ப்பு காட்டும் அரசியல் பிரச்சாரத்திலே நான் எல்லை கடந்த உற்சாகங்காட்டினேன். சென்னை நகரில் மட்டுமல்லாமல், வெளி மாவட்டங்களிலும் சுற்றுலாச் செய்தேன். அதன் விளைவாக, கடுமையான சீதபேதி நோய்க்கும் இரையானேன். அந்த நோய்க்குச் சிகிச்சை பெறுவதிலே போதிய எச்சரிக்கை காட்டாததால், அதுவே குடற்புண் தோன்றவும் காரணமாகிவிட்டது. இந்தி எதிர்ப்பு தீராத பிரச்சினையாகி விட்டதுபோல், எனது குடற்புண்ணும் தீராத நோயாகி, முப்பதாண்டுகட்கு மேலாக என்னைத் துன்புறுத்தி வருகின்றது.

இந்தி எதிர்ப்புக்கு எதிர்ப்புக் காட்டும் பிரச்சாரத்திலே வடசென்னையில் நான் முன்னணியில் நின்றது அரசியல் ரீதியில்தான்; காங்கிரஸ்காரன் என்ற முறையில்தான்! அப்போது கூட, பெரியார் ஈ.வெ.ரா., சி.என்.அண்ணாதுரை ஆகியோர் உள்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் இந்தி மொழியின் வாழ்வுக்காகச் சிறையில் அடைக்கப்பட்டது எனக்கு வேதனை தருவதாகவே இருந்தது.

வடமொழிக் கோஷங்கள்

தமிழ்நாடு காங்கிரஸ் வட்டாரத்திலே தாய்மொழிப் பற்று அழுத்தமாக இருக்கவில்லை. தமிழன் என்னும் இன உணர்ச்சியுடையோர் மிகச் சிலராகவே இருந்தனர். மற்றவர்கள் பரந்த

தேசிய உணர்ச்சி காரணமாகத் தாய்மொழிப் பற்றையும், தமிழின உணர்ச்சியையும் மறந்தே போயினர். வடக்கே வடமொழியில் அல்லது இந்தியில் அல்லது வங்க மொழியில் ஒரு கோஷம் பிறக்குமானால், அது தமிழ்மொழிவழித் திருத்தப்படாமல், அப்படியே இங்கு ஒலிக்கும். ஆம்; 'போலோ மகாத்மா காந்திக்கு ஜே', 'போலோ பாரத் மாதாகி ஜே', 'ராஷ்டிரிய ஜண்டேகி ஜே' என்றெல்லாம் வடக்கே உற்பத்தியாகும் பிற மொழிக் கோஷங்களைத் தமிழைத் தாய் மொழியாகப் படைத்த தேசபக்தர்களின் வாய்களும் முழங்கும். பாரதியாரின் தேசியப் பாடல்கள் இருந்தும், ''சுஜலாம் சுபலாம் மலயஜ சீதலாம்'' என்னும் வங்க மொழித் தேசியப் பாடல் தமிழகத்துக் கூட்டங்களிலேயும் ஊர்வலங்களிலேயும் பாடப்படும். மக்களுக்கு விடுதலை வெறி பிடித்திருந்த நேரத்தில் இதெல்லாம் தவிர்க்க முடியாத தவறுகளாகும்.

இந்தி எதிர்ப்பானது மொழிப் பிரச்சினைக்கான வரம்பைக் கடந்து அரசியல் வகுப்புவாத ரீதியிலும் நடத்தப்பட்டதால், நாளடைவில் அப்போதைக்குப் பிசுபிசுத்துப் போய்விட்டது என்றாலும், அது ஒரு மதமாக மாறிவிட்டதனை இன்றளவும் கண்டு வருகிறோம்.

சுதந்திர இந்தியாவிலே, தமிழ் வழங்கும் பகுதி தனியரசு மாநிலமான நிலையிலே, தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழ் மொழியே முதலிடம் பெறும் வகையில் ஆங்கில ஆதிக்கம் அகற்றப்பட்டுவிட்ட சூழ்நிலையில் மாநிலங்கள் சுயாட்சி பெற்றுவிட்ட காலத்திலே தேசப் பொது மொழிப் பிரச்சினையைத் தீர்க்க முற்படுவதே முறையாகும். அப்படிக்கின்றி, அன்னிய ஆட்சி அகலாதபோது, விடுதலைப் போர் முடியாத நிலையிலே, தமிழக — ஆந்திர — கேரள — கன்னடப் பிரதேசங்கள் கலந்திருந்த கதம்ப மாநிலத்திலே பொது மொழிப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியைக் கட்டாயப் பாடமாகத் திணிக்க ராஜாஜி முற்பட்டது, அந்தப் பிரச்சினைக்கே கேடு செய்வதாக முடிந்துவிட்டது. இதனை, நானும் அப்போது உணரவில்லை. ஆனால், இப்போது உணர்கிறேன். வியப்பென்னவென்றால், அன்று இந்தியைத் திணித்த ராஜாஜியே,

பிற்காலத்தில் இந்தி எதிர்ப்பாளராக — எதிர்ப்பவர்களின் வக்கீலாக மாறிவிட்டதாகும்.

என்னைப் பொறுத்தவரையில் இந்தி மொழிப் பிரச்சினையில் அன்றும் சரி; இன்றும் சரி; முன்னுக்குப் பின் முரணில்லாத வகையில் ஒரே மாதிரியாகத்தான் செயல்பட்டு வருகிறேன்.

'மாவட்ட சுயாட்சி'ப் போர்!

சென்னை மாவட்டக் காங்கிரசின் செயலாளனாக நான் இருந்தது 1937 முதல் 1946 வரையிலாகும். ஆம்; சுமார் பத்தாண்டுக் காலம் தொடர்ந்து அந்தப் பதவியிலிருந்து வந்திருக்கிறேன். இவ்வளவு நீண்ட காலம் அந்தப் பதவியிலிருந்தவர் எனக்கு முன்னும் பின்னும் வேறு யாருமில்லை. முறையே திரு. எஸ்.சத்தியமூர்த்தி, திரு.பு.ம. ஆதிகேசவலு நாயகர், திரு.கே. வெங்கிடசாமி நாயுடு ஆகியோர் தலைமையின்கீழ் நான் செயலாளனாக இருந்திருக்கிறேன்.

சென்னை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியின் செயலாளனாக நான் இருந்தபோது அந்தக் கமிட்டியின் உரிமைகளைப் பெருக்குவதிலே கவனம் செலுத்தினேன். சென்னை நகரம் முழுவதிலும் காங்கிரஸ் வேலைகள் அனைத்துக்கும் சென்னை மாவட்ட காங்கிரசுக்குத்தான் பொறுப்பு உண்டு. அப்படியிருந்தும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் அலுவலகம் சென்னை நகரிலேயே இருந்து வந்ததால், மாவட்டக் காங்கிரசின் பொறுப்புகள் பலவற்றை மாகாண காங்கிரஸ் கமிட்டியே மேற்கொண்டு வந்தது. ஆம், சென்னை நகரில் நடத்தப்படும் கதர் — சுதேசிப் பொருட்காட்சி, வட இந்தியப் பெருந்தலைவர்கள் வரும்போது அவர்களுக்கு அளிக்கப்படும் வரவேற்பு, ராஜாஜி போன்ற பெருந்தலைவர்கள் பேசும் கடற்கரைக் கூட்டம் ஆகிய பிரதான நிகழ்ச்சி களைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியே மேற்கொண்டு நடத்தி வந்தது. இதனால் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி, ஏனைய ஜில்லா காங்கிரஸ் கமிட்டிகளைப் போல அல்லாமல், இரண்டாந்தர காங்கிரஸ் கமிட்டிபோல இயங்கி வந்தது. இது எனக்குப் பிடிக்கவில்லை. ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு

பிரச்சினையிலும் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் உரிமைக்காக மாகாணக் கமிட்டியுடன் போராடி வந்தேன். ஜில்லா கமிட்டித் தலைவர் உட்பட உறுப்பினர் எல்லோருமே இதில் என்னுடன் ஒத்துழைத்தனர். ஆம்; காங்கிரசிலே ''மாவட்ட சுயாட்சி'' கோரினேன்.

சுதேசிப் பொருட்காட்சி

தலைவர் சத்தியமூர்த்தியும், செயலாளனாகிய நானும் பெருமுயற்சி எடுத்துக் கொண்டதன் விளைவாக, 1939-40ஆம் ஆண்டில் சென்னை நகரில் கதர் — சுதேசிப் பொருட்காட்சி நடத்தும் பொறுப்பு சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியிடம் விடப்பட்டது. அப்போது தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக இருந்த திரு.ஓ.பி. ராமசாமி ரெட்டியார், கடுமையான எதிர்ப்பு காட்டிய பிறகே இதற்கு இசைவு தெரிவித்தார். அப்போது திருவல்லிக்கேணி வட்ட மாநகராட்சி உறுப்பினராக இருந்த வழக்கறிஞர் திரு.டி.ஏ. சீனிவாசன் பொருட்காட்சிக் கமிட்டியின் பொதுச் செயலாளராக இருந்து முழுப் பொறுப்பையும் தாமே நிர்வகித்து வந்தார். தலைவராக எஸ். சத்தியமூர்த்தி ஐயரும், செயலாளனாக நானும் இருந்தோம்.

ஒரு சந்தர்ப்பத்தில் பொருட்காட்சி நடத்தும் பொறுப்பை வேறொரு தனி நபருக்குக் குத்தகை விடுவதுபற்றிப் பொருட்காட்சி கமிட்டி ஆலோசித்தது. ஆனால், காங்கிரஸ் ஊழியர்கள் கடுமையாக எதிர்த்ததன் விளைவாக, முதலில் திட்டமிட்டபடி, தானே பொறுப்பேற்று நடத்தியது. நல்ல இலாபம் வருமென்று எதிர்பார்க்கப்பட்டது. கிடைக்கும் இலாபத் தொகையைக் கொண்டு சென்னை மாவட்ட காங்கிரசுக்கெனத் தனியாக ஒரு கட்டிடம் கட்டவும் நான் கனவுகண்டு கொண்டிருந்தேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாகப் பத்தே நாட்களுக்குள் தீவிபத்து ஏற்பட்டு, பொருட்காட்சியில் ஒரு பொருளும் மிஞ்சாமல் அனைத்தும் சாம்பலாயின. காங்கிரஸ் மண்டபத்துக்குள்ளேயிருந்த வ.உ.சி. படமும், மண்டபத்துக்கு எதிரேயுள்ள திடலில் வானோங்கிப் பறந்து கொண்டிருந்த தேசியக் கொடியும் தப்பிப் பிழைத்தன. மண்டபத்தின் நுழைவாயிலிலிருந்த வ.உ.சி. சிலை

யும் சேதமாகாமல் தப்பியது. இந்த அற்புதத்தைப் பத்திரிகைகள் கட்டங்கட்டிப் பிரசுரித்தன. சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி பொறுப்பேற்று நடத்திய அந்த ஆண்டிலே தீ விபத்து ஏற்பட்ட தால், அதையே காரணங்காட்டி, அடுத்த ஆண்டு தொடங்கி வழக்கம்போல தமிழ்நாடு காங்கிரசே பொருட்காட்சியை நடத்தி வரலானது.

சென்னை நகரம் மாநிலத்தின் தலையிடமாக இருப்பதால், காங்கிரஸ் அரசுக்கு எதிராக நடத்தப்படும் பிரச்சார ஆர்ப்பாட் டங்களைச் சென்னை நகர காங்கிரசே சமாளிக்க வேண்டியிருந் தது. இதனை எடுத்துக்காட்டி, தமிழ்நாடு காங்கிரசும், சட்ட மன்றக் காங்கிரஸ் கட்சியும் சென்னை மாவட்டக் காங்கிரசுக்கு ஆண்டுதோறும் பொருளுதவி செய்ய வேண்டுமென்ற கோரிக் கையை எழுப்பினேன். இதிலும் ஓரளவு வெற்றி பெற்று சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் நிதி வசதியைப் பெருக்கினேன்.

காங்கிரஸ் வட்டாரத்திலே தமிழ் உணர்ச்சியையும், 'தமிழன்' என்னும் இனவுணர்ச்சியையும் பரப்ப விரும்பினேன். அதற்குத் துணைபுரியும் வகையில் தேசிய மகாகவி சுப்பிர மணிய பாரதியாரின் நினைவுநாளை ஆண்டுதோறும் திட்டமிட் டுச் சிறப்புடன் கொண்டாடச் செய்தேன். நான் சென்னை ஜில்லா காங்கிரசின் செயலாளனாக வரும்வரை பாரதியார் நினைவு நாளை சென்னை மகாஜன சபையும், திருவல்லிக்கேணி பாரதி பிரசுராலயமும்தான் கொண்டாடி வந்தன. அந்த அமைப்பு களும், காங்கிரஸ் பாணியில் கட்சி விழாவாகவே கொண்டாடி வந்தன.

1938-ஆம் ஆண்டில் முதன் முதலாக செப்டம்பர் 11 தொடங்கி ஒரு வார காலம் சென்னை நகரம் முழுவதிலும் பல்வேறு பகுதிகளில் பாரதி விழாவைக் கொண்டாடச் செய் தேன். ராஜாஜி, எஸ்.சத்தியமூர்த்தி ஐயர் போன்ற காங்கிரஸ் பெருந்தலைவர்களோடு, திரு.வி. கலியாணசுந்தரனார், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் ஆகிய பெரும் புலவர்களையும் அழைத்து பாரதி விழா மேடையில் பேசச் செய்தேன்.

அந்நாளில், காங்கிரசுக்கு எதிர்க்கட்சியிலிருந்த திரு.வி. சக்கரை செட்டியார், டாக்டர் பி. வரதராசுலு நாயுடு ஆகியவர்களையும் மகாகவி பாரதியாரின் நண்பர்கள் என்ற வகையில் பாரதியார் விழா மேடையில் பேசச் செய்தேன். ஆம்; தமிழ்க் கவிஞனின் திருநாளிலே தமிழினத் தலைவர்கள் எல்லாம் — அவர்கள் எந்தக் கட்சியினராயினும் — ஒன்றுபடச் செய்தேன். இதனால், காங்கிரஸ்காரர்களிலே சிலர் எனது தேசபக்தியைக் கூடச் சந்தேகித்தனர்.

கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் 1936 நவம்பர் 18-இல் காலமானார். செயற்கரிய செய்த அப்பெருந்தலைவர் மறைந்தபோது தமிழகப் பத்திரிகைகளிலே ஒன்றுகூட அனுதாபத் தலையங்கம் எழுதவில்லை. தமிழ்நாடு காங்கிரசின் பேரால் ராஜ்யத்தின் தலைநகரிலே ஒரு அனுதாபக் கூட்டம்கூட நடத்தப் படவில்லை. இந்த நிலை என் மனதுக்கு வேதனை தந்தது. தமிழன் என்னும் இன உணர்ச்சி இல்லாமற் போயினும், தேசபக்தி காரணமாகவேனும் சிதம்பரனாருக்குத் தக்க முறையில் அஞ்சலி செலுத்த தமிழ்நாடு காங்கிரசார் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏன்? அகில இந்திய காங்கிரசுக்கே இந்தக் கடமையுண்டு. ஆயினும், மாபெரும் தியாகியான வ.உ.சிதம்பரனாருக்கு அந்தப் பேறு கிட்டவில்லை. இதனால் மனவேதனை அடைந்த நான், சிதம்பரனாரின் தியாக வரலாற்றை நூலாக்கவும், அவருடைய உருவச் சிலை ஒன்றைச் சென்னை நகரில் நிறுவவும், ஆண்டுதோறும் அவரது நினைவுநாளைக் கொண்டாடவும் முடிவு செய்தேன். இந்தத் திட்டத்தின் முதல் நடவடிக்கையாகச் சென்னையில் இருந்த தமிழ்நாடு காங்கிரஸ் மாளிகை முன்பு வ.உ.சி.யின் முழு உருவச் சிலையை நிறுத்த முயற்சி எடுத்தேன்.

சென்னை இராயப்பேட்டை காங்கிரஸ் மாளிகைமுன் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.யின் முழு உருவச்சிலை ஒன்றை நிறுவுவதற்கு முயற்சி எடுத்தபோது கடுமையான ஒரு போராட்டத்தை நான் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. இதை நான் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை. எனது பொது வாழ்க்கையில், முதன் முதலாக நான் வகுப்புவாதியாக வருணிக்கப்பட்ட

தும் இந்த நேரத்தில்தான். வ.உ.சி. தம் வாழ்நாளின் கடைசிக் காலத்தில் கடைப்பிடித்த போக்கும் இதற்கு ஒரு காரணமாக அமைந்தது.

காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் வ.உ.சி.க்கு நம்பிக்கை ஏற்படாததால், 1920-இல் அவர் காங்கிரசிலிருந்து விலகிக் கொண்டார். ஆம்; அவர் கருத்து வேற்றுமை கொண் டது காங்கிரஸ் மேலிடத்தோடுதான், தமிழ்நாட்டுக் காங்கிர சிடம் அல்ல. அப்படியிருந்தும் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்க ளிலே முன்னணியிலிருந்த பெருந்தலைவர்களில் சிலர் வ.உ.சி.யை வெறுத்தனர்.

அந்நாளில் தமிழ்நாட்டு அரசியலில் முன்னணியிலிருந்த பிரச்சினை பிராமணர் - பிராமணரல்லாதார் என்ற வகுப்பு வாதப் பூசலாகும். அது, புயற்காற்று வேகத்தில் வளர்ச்சி பெற்று வந்தது. பிராமணரல்லாதாரின் ஒரே அரசியல் அமைப்பெனத் தன்னை வருணித்துக் கொண்ட நீதிக்கட்சியிலே சேர்ந்துக் கொள்ளுமாறு அதன் தலைவர்கள் வ.உ.சி.க்கு அழைப்பு விடுத்தனர். ஆனால், தேசபக்தி மிக்க தியாகசீலரான வ.உ.சிதம் பரனார், பிரிட்டிஷ் ஆட்சியுடன் ஒத்துழைத்துக் கொண்டிருந்த நீதிக்கட்சியில் சேர மறுத்துவிட்டார். விடுதலைப் புரட்சிக்கு எதிராகச் செயல்பட்ட அந்தக் கட்சியைச் சிதம்பரனார் மனமார வெறுத்தார். ஆயினும் நீதிக்கட்சி கோரிய வகுப்புவாரிப் பிரதி நிதித்துவத்தை அவர் ஆதரித்தார். பிரமாணர்களுக்கு அவர்களு டைய ஜனத்தொகையின் விகிதாச்சாரத்திற்கு அதிகமாக அரசாங் கம் உத்தியோகங்களில் இடமளிக்கக் கூடாதென்பது நீதிக்கட்சி யின் கொள்கை. மக்கள் தொகையில் பிராமணரல்லாதாரின் சதவிகிதத்திற்கேற்ப அவர்களுக்கு உத்தியோகங்கள் தர வேண் டுமென்பது அந்தக் கட்சியின் கோரிக்கை. இந்தக் கொள்கைக் கும் கோரிக்கைக்கும் வ.உ.சிதம்பரனார் ஆதரவு காட்டினார். அதற்குக் காரணம், நாட்டின் அரசியலை — குறிப்பாக, விடுத லைப் போராட்ட பாசறையை வகுப்புவாதப் பூசலிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று அவர் கருதியதுதான்.

வ.உ.சி. நிலை

பிராமணர் — பிராமணரல்லாதார் என்ற வகுப்புவாதப் பூசல், விடுதலைப் பாசறையையே பிளவுபடுத்தி விடுமோ என்ற அச்சம் அந்நாளில் வ.உ.சி.யைப் போன்ற பிராமணரல்லாத தேச பக்தர்களுக்கு இருந்தது. அதனால், நீதிக்கட்சி கோரிய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைத் தவிர்க்க முடியாத ஒன்றாகக் கருதி வ.உ.சி. அதனை ஆதரித்தார். இதனாற்றான், அன்று தமிழ்நாடு காங்கிரசில் முன்னணியிலிருந்த பெருந்தலைவர்கள் வ.உ.சி.யை வகுப்புவாதியாகக் கருதும் நிலைமை ஏற்பட்டது. தேசத்துரோகி என்றுகூட வருணித்துப் பிரச்சாரம் செய்தனர். இதனை, வ.உ.சி.யின் வாக்கைக் கொண்டே அறிய முயல்வோம்:

''தேச அரசாட்சியை மீட்பதற்காகத் தேச ஜனங்கள் சாத்வீக எதிர்ப்பைக் கைக்கொண்டு போராடும் காலத்தில் தேசாபிமான மில்லாது புறங்காட்டி ஓடுகின்றீரே'' என்று என்னிடம் கேட்ட ஒரு பாரிஸ்டர் புன்மொழியும், 'ராஜாங்கத்தாரிடம் கைக் கூலி பெற்று தேசத் துரோகம் செய்து கொண்டிருக்கிறான் சிதம்பரம் பிள்ளை' என்று பொருள் படும்படி எழுதிய ஒரு பத்திரிகாசிரியர் புன்மொழியும் இன்னும் என்னால் மறக்க முடியவில்லை. தேசாபிமான ஒளி நாளுக்கு நாள் வளர்வதேயன்றிக் குறைவதும் அழிவதும் இல்லை.

''விளக்குப் புகவிருள்சென்றாங்கு ஒருவன்
தவத்தின்முன் நில்லாதாம் பாவம்''

என்றபடி, தேசாபிமான ஒளிமுன் தேசத் துரோக இருள் நில்லாது. இவ்வுண்மையினை அவர் அறிவாராக.''

(வ.உ.சி.யின் 'எனது அரசியல் பெருஞ்சொல்' என்னும் நூலிலிருந்து)

வ.உ.சிதம்பரனார் காங்கிரசிலிருந்து விலகிய பின்னரும் காந்தியடிகளிடம் மாறாத மதிப்பு வைத்திருந்தார். தமது

'சுயசரிதை'யில் ''உலகெலாம் புகழும் நலனெலாம் அமைந்த காந்திமா முனிவன்'' என்று வருணித்தெழுதி காந்தியடிகளை வழிபடுகின்றார். காங்கிரசுக்கு வெளியேயிருந்த நிலையிலும், வேலூர் அ.குப்புசாமி முதலியார், சென்னை எம்.எஸ். சுப்பிரமணிய அய்யர், சிதம்பரம் என் தண்டபாணிப் பிள்ளை ஆகிய தேசபக்தர்கள் மீது அரசு தொடுத்த அரச நிந்தனை வழக்கில் ஆஜராகி, அந்தத் தேசபக்தர்களுக்கு விடுதலை தேடிக் கொடுத்தார், ஆம்; பிரதிபலனை எதிர்பாராமல்!

இவ்வளவிருந்தும், வ.உ.சிதம்பரனாரின் தேசபக்தியைச் சந்தேகித்தனர் அந்நாளைய காங்கிரஸ்காரர்கள். 1939-ஆம் ஆண்டில் வ.உ.சி. சிலை நிறுவுவதற்கு நான் செயலாளனாக இருந்த சென்னை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவைக் கோரினேன். நான் முன் மொழிந்த வ.உ.சி. சிலை நிறுவ ஆதரவு தரும் தீர்மானம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேற்றப் பட்டு விட்டதென்றாலும், அக்கமிட்டியின் தலைவர் எஸ்.சத்தி மூர்த்தி, காங்கிரஸ் நிதியிலிருந்து பணம் கொடுக்க மறுத்துவிட்டார். அவர் அப்படி மறுத்தது முறையல்லவென்றாலும், அவரோடு போர் நடத்தி, வகுப்புவாதப் பூசலை வளர்த்துவிட நான் விரும்பவில்லை. அதனால் பொது மக்களிடம் பொருளுதவி பெறுவதென்ற முடிவுக்கு வந்தேன்.

சென்னை டிராம்வே தொழிலாளர் சங்கம், என் தலைமையில் இயங்கி வந்த முதல் சர்க்கிள் காங்கிரஸ் கமிட்டி, இராயபுரம் கணேஷ் அலுமினியம் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றிடமிருந்தும், இன்னும் பல நிறுவனங்களிடமிருந்தும் பொருளுதவி பெற்றேன். சென்னை ஆமில்டன் வாராவதி அருகிலுள்ள விறகு தொட்டிக் கடைக்காரர்களிடமும் பொருள் திரட்டினேன். என்ன திரட்டினாலும், வ.உ.சி.யின் முழு உருவச் சிலை செய்வதற்குத் தேவைப்படும் அளவுக்குப் பொருள் கிடைக்கவில்லை. அதனால் முக உருவச் சிலை மட்டும் நிறுத்துவதென்ற முடிவுக்கு வந்தேன். சென்னை பக்கிங்காம் - கர்னாடிக் ஆலைத் தொழிலாளர் தலைவரும் காங்கிரஸ்காரருமான பெரம்பூர் திரு.எஸ். பக்கிரிசாமிப் பிள்ளை, குறைந்த விலைக்கு வ.உ.சி. யின் முக உருவச் சிலையைத் தயாரித்துத் தர முன்வந்தார்.

சிலையைக் காங்கிரஸ் மாளிகையின் முன்புள்ள கொடி மரத்துக்கு அருகே வைக்க வேண்டுமென்பது என் விருப்பம். ஆனால், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அதற்கு அனுமதி தரவில்லை. சிலை வைப்பதற்கு வேறு இடத்தையேனும் தேர்ந்தெடுத்துக் கூறுமாறு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாருக்கு எழுதினேன். அதற்குப் பதிலே கிடைக்கவில்லை. சிலைத் திறப்பு விழாவுக்குத் தேதியை நிச்சயித்து விட்டேன். காங்கிரஸ் மகாசபையின் மாபெரும் தலைவர்களில் ஒருவராகக் கருதப்பட்ட சேலம் திரு. சி. விஜயராகவாச்சாரியாரை நேரில் சந்தித்துச் சிலையைத் திறந்து வைக்க அவரது இசைவைப் பெற்றுவிட்டேன். ஆனால், தமிழ் நாடு காங்கிரசின் அனுமதி கிடைக்காததால், குறித்த தேதியில் சிலைத் திறப்பு விழா நடத்துவது சாத்தியமில்லை என்ற நிலை ஏற்பட்டது. இதனால் தமிழ்நாடு காங்கிரஸ் மீது சினங் கொண்ட வனாகி, அதன் அனுமதிக்காகக் காத்திராமல், சிலைத் திறப்பு விழாவை நடத்தத் துணிந்தேன்.

ஐயரின் ஆத்திரம்

திரு. எஸ்.சத்தியமூர்த்தி அய்யரவர்கள், சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தாராதலால், விழா வுக்கு அவரே தலைமை வகிக்க வேண்டுமென்று நான் விரும்பி, நண்பர் த.செங்கல்வராயன் அவர்களுடன் சென்று நேரில் அவருக்கு அழைப்பு விடுத்தேன். அப்போது அவர் என்மீது காட்டிய ஆத்திரத்தையோ, என் மீது பொழிந்த பழிச் சொற்க ளையோ நான் இங்கு விளக்க விரும்பவில்லை. என்னை ஜஸ்டிஸ் கட்சிக்காரனாகவே முடிவு செய்துகொண்டு, வகுப்பு வாத உணர்ச்சி காரணமாகத்தான் நான் ஜஸ்டிஸ் கட்சிக்காரரான வ.உ.சி.க்குக் காங்கிரஸ் மாளிகை முன்பு சிலை வைக்க முயல் கிறேன் என்று பழி சுமத்தினார். நல்லவேளையாக நண்பர் த.செங்கல்வராயன் அய்யரைச் சமாதானப்படுத்தினார். என் னைப் பற்றி அவர் கொண்ட தவறான கருத்தைப் போக்க முயன்றார். அதன்பின், வ.உ.சி. சிலைத் திறப்பு விழாவிற்குத் தலைமை தாங்க அய்யர் இணங்கினார். ''சிலையைத் திறந்து வைக்க சேலத்திலிருந்து திரு. விஜயராகவாச்சாரிதான் வர

வேண்டுமா?'' என்று கேட்டார். நான், அந்தப் பெரியவரை நேரில் சென்று அழைத்து அவரும் இணங்கிவிட்டதால், அதிலே மாறுதல் கோர வேண்டாமென்று அய்யரை வேண்டிக் கொண் டேன். எனது வேண்டுகோள் பலிக்காமற் போனதால் சிலையைத் திறக்க திருச்சி திரு. டி.எஸ்.எஸ். இராசனை அழைப்பதென்று முடிவானது.

பொம்மைக் கலியாணம்

21.12.39 அன்று இராயப்பேட்டை காங்கிரஸ் மாளிகை யில் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரின் சிலைத் திறப்பு விழா பொம்மைக் கலியாணம் போன்று நடத்தப்பெற் றது. ஒரு மணி நேரத்தில் விழா முடிக்கப்பட்டுவிட்டது. தமிழர் தலைவர்களெல்லாம் கட்சி வேறுபாடின்றி அந்த விழாவில் கலந்து கொள்ள வேண்டுமென்று நான் விரும்பினேன். தமிழ்ப் பெரியார் திரு.வி. கலியாணசுந்தரனார், அப்போது இந்து மகாசபையின் அகில இந்தியப் பொதுச் செயலாளராக இருந்த டாக்டர் பி.வரதராசுலு நாயுடு, கம்யூனிஸ்டான தோழர் எம். சிங்காரவேலு செட்டியார், தொழிற்சங்கத் தலைவர் திரு.வி. சக்கரைச் செட்டியார் ஆகிய முதுபெருந் தலைவர் நால்வரையும் நேரில் சந்தித்து விழாவில் கலந்துகொள்ள அழைப்பு விடுத் தேன். என் அழைப்புக்கிணங்கி, அவர்களும் விழாவில் கலந்து கொண்டனர். ஆனால், விழாத் தலைவர் அந்தப் பெருந் தலைவர்களுக்கு வ.உ.சி.யை வாயார வாழ்த்திப் பேச வாய்ப்ப ளிக்கவில்லை. இது எனக்கு மிகுந்த மன வேதனையைத் தந்ததென்றாலும், அன்றையச் சூழ்நிலையில் அதைச் சகித்துக் கொள்வதைத் தவிர எதிர்த்துப் போராட வழியில்லாமலிருந்தது. சேலம் சி.விசயராகவாச்சாரியார், வ.உ.சி.யின் சிறப்பியல்பு களைப் பாராட்டியும், விழாவை வாழ்த்தியும் செய்தி அனுப்பி யிருந்தார்.

நாமக்கல் கவிஞர், யோகி சுத்தானந்த பாரதியார் ஆகியோர் இந்த சிலைத் திறப்பு விழாவுக்கென்றே அனுப்பியி ருந்த கவிதைகளை என் அருமை நண்பர் ஆரியகான கே.எஸ். அனந்தநாராயண அய்யர் மிகுந்த உணர்ச்சியோடு பாடினார்.

பத்திரிகைகள் எல்லாம் விழா நிகழ்ச்சியைச் சிறப்பாகப் பிரசுரித்திருந்தன. 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை துணைத் தலையங்கம் எழுதி வ.உ.சி.க்கு அஞ்சலி செலுத்தியது.

வ.உ.சி. சிலை திறந்த மறுநாள் இராயப்பேட்டை காங்கிரஸ் திடலிலே கதர் சுதேசிப் பொருட்காட்சி ஆரம்பமானது. நான் ஏற்கனவே கூறியதுபோன்று அந்தப் பொருட்காட்சியில் தீ விபத்து ஏற்பட்டு, பொருட்காட்சிச் சாலையிலிருந்த பொருள்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாகிவிட்டன. தீ விபத்திலே தப்பிய பொருள்களில் வ.உ.சி. சிலையும் ஒன்றாகும். துரதிருஷ்டமென்னவென்றால், தீயாலும் தீண்டப்படாத வ.உ.சி. சிலையை அந்தத் தீ விபத்துக்குப் பின்னர் யாரோ ஒரு தீயவன் சேதப்படுத்தி விட்டான். அதனால் சிலையைப் பழுது பார்க்க அது இருந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டியதாயிற்று.

எங்கெங்கும் வ.உ.சி.!

வ.உ.சி.யின் சிலையை நிறுவ நான் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு ஏற்பட்ட எதிர்ப்பை மிகவும் சுருக்கமாகத்தான் கூறியிருக்கிறேன். ஆனால், என் ஆற்றலையும் மீறிய ஒரு கடுமையான போராட்டத்தை நான் சாமாளிக்க வேண்டி இருந்தது. அதனால், முழு உருவச் சிலை எடுப்பதென்ற முயற்சி முக உருவச் சிலையாக மாறியது. சிலைத் திறப்பு விழாவை நான் நினைத்தபடி பெரிய அளவில் நடத்த முடியாமற் போய் விட்டது. சிலையைத் திறந்த பின்னரும் என் மனத்திற்கு அதிர்ச்சி ஏற்படுத்தும் வகையில், அது சேதப்படுத்தப்பட்டது. ஆனால், இன்று நாடெங்கும் வ.உ.சி.க்கு எண்ணற்ற நினைவுச் சின்னங்கள் எழுப்பப்ப்பட்டிருக்கக் காண்கிறோம். எண்ணற்ற பூங்காக்களுக்கும், வீதிகளுக்கும், குடியிருப்புகளுக்கும், பெரிய கட்டிடங்களுக்கும் வ.உ.சி.யின் பெயர் வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். தூத்துக்குடித் துறைமுகத்திலும், பாளையங்கோட்டையிலும், சென்னைத் துறைமுக வாயிலிலும், வ.உ.சி.யின் முழு உருவச் சிலைகள் கம்பீரமாகக் காட்சியளிக்கக் காண்கிறோம். இதற்கெல்லாம் காரணம் 1939-இல் சென்னை

காங்கிரஸ் மாளிகை முன்பு வ.உ.சி.யின் முக உருவச் சிலையை நிறுத்திய பின்னர் அவரது புகழ் பரப்ப நான் எடுத்துக்கொண்ட பெரு முயற்சியாகும்.

1939-ஆம் ஆண்டு நவம்பர் 18-இல் முதல் சர்க்கிள் காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் ராயபுரம் பிரைட்டன் டாக்கீஸில் முதன் முதலாக வ.உ.சி.யின் நினைவு நாளைக் கொண்டாட ஏற்பாடு செய்தேன். அவ்விழாவில் ராஜாஜி, திரு.வி. கலியாண சுந்தரனார் ஆகியோர் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர். காங்கிரசிலிருந்து வெளியேறிய பின்னர் வ.உ.சி. கடைப்பிடித்த அரசியல் காரணமாக ராஜாஜிக்கும் அவரிடம் வெறுப்புதான் என்றாலும், சிறிது சகிப்புத்தன்மை காட்டி, எனது அழைப்பை ஏற்றுக் கொண்டார். ஆனால், வ.உ.சி. விழாவில் தனது போக்கி லேதான் அவர் பேசினார்.

ராஜாஜி சூட்டிய புகழ்மாலை

அதே ராஜாஜி பிற்காலத்தில் தூத்துக்குடியில் வ.உ.சி.யின் பெயரால் ஒரு கல்லூரி அமையத் துணை புரிந்தார். அத்துட னன்றி, 1908-ஆம் ஆண்டில் வ.உ.சி. இரண்டு ஆயுள் தண் டனை பெற்றதன் விளைவாக மறைந்துபோன கப்பல் கம்பெனி திரும்பவும் புத்துயிர் பெறவும் உதவி புரிந்தார். அந்தக் கம்பெ னியின் முயற்சியால் உருவான 'வி.ஓ.சிதம்பரம்' என்ற பெயர் கொண்ட கப்பலை 9.2.49-இல் தூத்துக்குடிக் கடலிலே மிதக்க விட்டார், ஆம்; இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரல் என்ற பெருமைக்குரிய நிலையில் இருந்துகொண்டு! அப்போது அவர் மிகுந்த உணர்ச்சியுடன் வ.உ.சி.க்கு அஞ்சலி செலுத்தி நிகழ்த்திய சொற்பொழிவை இங்குப் பார்ப்போம்:

''தமிழ் மக்களுக்கு அலைகடல் தாண்டுதல் புதிதன்று. நம் நாட்டு மக்கள் இந்தத் தொழிலில் மேனாட்டு மக்களுக்கு எவ்விதத்திலும் குறைந்தவர்கள் அல்லர். கடலில் மற்ற நாட்டின ருக்குள்ள உறவும் உரிமையும் நமக்கும் உண்டு.

''நமது அன்பிற்குரிய சிதம்பரனாரின் கனவுகள் நம்மு டைய காலத்தில் நிறைவேறுமென்பதில் ஐயமில்லை.

''சிதம்பரம் பிள்ளையிடம் கொஞ்சம் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது. சில நாள் சேலத்தில் என் குடிசையிலும் தங்கியிருந்தார். இன்று நாம் தொடங்கும் இச்செயலுக்கு அந்த ஆத்மாவின் ஆசியைப் பெறுவோமாக.

''இந்தக் கப்பலுக்கு அவருடைய திருநாமம் தந்து ஓட்டப் போகிறோம். சிதம்பரம் பிள்ளை, ஆனந்தக் கண்ணீர் ததும்பத் தம் பெரிய கண்களை அகல விரித்து, இந்த விழாவையும் என்னையும் பார்த்துக் கொண்டிருப்பது போலவே எனக்குத் தோன்றுகிறது. இன்றைய நிகழ்ச்சி அவருக்குக் கொஞ்சம் வேடிக்கையாகவுமிருக்கும்.

''காரல் மில்ஸ், பிரிட்டிஷ் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி இவற்றின் ஒத்துழைப்புடனும், இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடனும் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இந்தக் கப்பல் போக்குவரத்தை இன்று நான் ஆரம்பித்து வைக்கிறேன்.

''ஹார்வி கம்பெனியாரும், காரல் மில்ஸ் பஞ்சாலையைச் சார்ந்தவர்களும், பி.ஐ.எஸ்.என். கம்பெனியை நடத்தியவர்களும் அந்த நாளில் சிதம்பரம் பிள்ளையை ஒரு பயங்கரமான எதிரியாகக் கருதினார்கள். ஆண்ட்ரூ ஹார்வியும், சாப்மனும் ராஜத் துவேஷக் குற்றம் சாட்டினார்கள். பின்ஹே துரையைக் கொண்டு விசாரணை நடத்தி இரண்டு ஆயுள் தண்டனை விதிக்கச் செய்தார்கள். இந்தத் தீர்ப்பைக் கண்டு இந்தியா முழுவதும் வருத்தமும் வியப்பும் மனக்கசப்பும் பரவின. ஆத்திரம் பொங்கியது. உயர்நீதிமன்றத்தார், ஆயுள் தண்டனையை ஏதோ நியாயம் கண்டு ஆறு வருடச் சிறைத் தண்டனையாகக் குறைத்தார்கள். அநீதிக்குச் சிறிது பரிகாரம் ஏற்பட்டது.

''இந்தத் தூத்துக்குடி மக்களை 'வந்தே மாதரம்' சொல்லச் செய்தாரென்பது சிதம்பரம் பிள்ளை பேரில் குற்றம். சுப்பிரமணிய சிவா பேசிய கூட்டங்களுக்குச் சென்று, 'இந்தியா விடுதலை பெறவேண்டும்' என்று சிவம் கூறியதைச் சிதம்பரம் பிள்ளையும் ஒப்புகொண்டாரென்பது இன்னொரு குற்றம். இந்தக் குற்றங்களுக்காகத்தான் சிதம்பரம்பிள்ளை தண்டனை அடைந்தார்.

''இது நாற்பதாண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. சிதம்பரம் பிள்ளையைத் தண்டித்த பினஹேயை ஹைக்கோர்ட் நீதிபதியாக உயர்த்த வேண்டுமென்று ஒரு யோசனை ஏற்பட்டது. அதை அங்கீகரிக்க அப்போது இந்தியா மந்திரியாக இருந்த லார்டு மார்லி மறுத்துவிட்டார். மார்லி, தம்முடைய ஞாபகங்கள் என்ற நூலில் இது விஷயமக எழுதியிருப்பதைப் படித்தால் சுவையாக இருக்கும்.

''நாற்பதாண்டுகளில் காலச் சக்கரம் ஒரு பெரிய சுற்றுச் சுற்றிவிட்டது. சிதம்பரம் பிள்ளை எதற்காகச் சிறை சென்று இன்னல் பட்டாரோ அது நிறைவேறிவிட்டது. நம் நாடு முழு விடுதலையைப் பெற்றுவிட்டது. ஹார்வி கூட்டத்தைச் சேர்ந்த ஒருவரின் வீட்டில் இன்று நான் விருந்தாளியாகத் தங்கியிருக் கிறேன். பி.ஐ.எஸ்.என். கம்பெனியார் தங்களுடைய கப்பலை நிறுத்திக் கொண்டு, சிதம்பரம் பிள்ளையின் பெயர் பூண்ட இந்தக் கப்பல் செல்வதற்கு இடமளித்திருக்கிறார்கள்.

''தூத்துக்குடிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு இப்போது பரிகாரம் கிடைத்துவிட்டது. கப்பலுக்குச் சிதம்பரம் பிள்ளைய வர்களின் பெயரை வைத்து மிதக்கவிடுகிறேன். மாவீரரான சிதம்பரம் பிள்ளையின் திருநாமத்தை இந்தக் கப்பலுக்குச் சூட்டும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்தக் கப்பல் இந்தியக் கொடியைப் பறக்கவிட்டுக் கொண்டு கடலில் செல்லும்.

''இந்தியக் கப்பல் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சிதான் முதன் முதலில் இந்தத் தூத்துக்குடியில்தான் ஆரம் பித்தது. அதற்குச் சிதம்பரம் பிள்ளையின் பலிதானமே ஆரம்ப வேள்வியாக 1908-ஆம் ஆண்டில் அமைந்தது. அதை எண்ணித் தமிழர்கள் பெருமிதம் கொள்ளலாம்.''

ம.பொ.சி. இல்லாமலா வ.உ.சி.க்கு விழா!

ராஜாஜியின் இந்தப் பேச்சு வ.உ.சி. விஷயத்தில் காங்கி ரஸ் வட்டாரத்தின் முன்னணித் தலைவர்களிடையில் ஏற்பட்ட மகத்தான மனமாற்றத்தைக் குறிப்பதாகும். இந்த மனமாற்றத்

தின் விளைவுகளே இன்று தமிழ்நாடெங்கும் எண்ணற்ற இடங்களில் அமைந்துள்ள வ.உ.சி.யின் நினைவுச் சின்னங்கள். இந்த நிலை ஏற்படுவதற்கு நான் எத்தனையோ ஆண்டுகள் முழு மூச்சுடன் பாடுபட்டேன். என் சொந்தப் புகழை வளர்த்துக் கொள்ளும் நினைவின்றியே வ.உ.சி.யின் புகழ் வளர்க்கப் பாடுபட்டேன். அவரது புகழ் வளர்ந்தால், தமிழினத்தின் புகழ் எட்டுத் திக்கிலும் மணக்குமென்று நான் எண்ணினேன். வியப்பென்னவென்றால், வ.உ.சி.யின் புகழ் பரப்ப இப்படி எல்லாம் பாடுபட்ட எனக்கு தூத்துக்குடியில் நடந்த 'வி.ஓ.சிதம்பரம்' கப்பலை மிதக்கவிடும் விழாவுக்கு அழைப்பு வராததாகும். அந்த விழாவில் கலந்து கொண்டு சென்னை திரும்பிய கவர்னர் ஜெனரல் ராஜாஜி, கிண்டி ராஜபவனத்துக்கு என்னை அழைத்து, ''தூத்துக்குடி விழாவுக்கு நீங்கள் ஏன் வரவில்லை?'' என்று கேட்டார். அத்துடன் ''நீங்கள் இல்லாமலா சிதம்பரம் பிள்ளைக்கு விழா?'' என்றும் சொன்னார். என்பால் தமக்குள்ள அன்பை வெளிப்படுத்தும் வகையில், ''தூத்துக்குடி விழா அரங்கில் என் கண்கள் எட்டுத் திசையும் சுழன்று உங்களைத் தேடின'' என்றும் மனமுருகக் கூறினார். ''எனக்கு அழைப்பு வரவில்லை'' என்றேன். அவர் மனம் நொந்தவராகி, தமது முகத்தைச் சுளித்துக் கொண்டு, ''நம்முடைய ஜனங்களே இப்படித்தான். யாரை மதிக்க வேண்டுமோ அவரை மறந்துவிடுவார்கள்'' என்றார். ''என்னுடனேயே (கவர்னர் ஜெனரலுக்குரிய ஸ்பெஷல் ரயிலிலேயே) நீங்கள் வந்திருக்கலாமே?'' என்றும் கூறினார். தூத்துக்குடி விழாவில் நான் கலந்துகொள்ள விழாக் குழுவினர் வாய்ப்பளிக்காததில் எனக்கு மிகவும் வருத்தந்தான். ஆனால், ராஜாஜியின் அனுதாப வார்த்தைகள் என் மனதுக்கு ஆறுதலளித்தன.

வ.உ.சி. கல்லூரி

சென்னை காங்கிரஸ் மாளிகையிலே 21.12.39-இல் வ.உ.சி.யின் சிலையை நிறுவியதற்கும், 9.2.49-இல் கவர்னர் ஜெனரல் ராஜாஜி தூத்துக்குடி கடலில் வி.ஓ.சிதம்பரம் கப்பலை மிதக்க விட்டதற்கும் இடையிலுள்ள பத்தாண்டுக் காலத்தில் வ.உ.சி. புகழ் பரப்ப அரும்பாடுபட்டேன். அந்தக் காலக்

கட்டத்திலே நான் பேசிய கூட்டந்தோறும் வ.உ.சி.யின் வீர வரலாற்றைக் கூறுவதனைக் கடமையாகக் கொண்டிருந்தேன். வடாற்காடு செய்யாறில் ராஜாஜியின் தலைமையில் நடந்த ஒரு காங்கிரஸ் மாநாட்டிலே நான் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து பிறந்ததுதான் தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி. ஆம்; அந்த மாநாட்டிலே வ.உ.சி. பற்றி நான் நிகழ்த்திய சொற்பொழிவுக் குப் பின் அங்குத் திரட்டப்பட்ட நிதியை ஆரம்பமாகக் கொண்டு தான் தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி நிதிக்குழு அமைந்தது.

'கப்பலோட்டிய தமிழன்' என்ற பெயரில் வ.உ.சி.யின் வீர வரலாற்றை நூலாக்கி மக்கள் மத்தியிலே பரப்பியதோடு, பள்ளி யிலே படிக்கும் மாணவர்களுக்கும் அதனைப் பாடமாக வைக் கச் செய்தேன். 'தமிழ்ப் பண்ணை'யைக் கொண்டு வ.உ.சி.யின் திருவுருவப் படத்தை ஆயிரக்கணக்கில் வெளியிடச் செய்தேன்.

நான் காங்கிரஸ் பிரச்சாரத்திற்குச் சென்ற ஊர்தோறும் வ.உ.சி.யின் பெயரால் மன்றங்கள் அமைக்குமாறு இளைஞர் களைத் தூண்டினேன். அதனால், நாடெங்கும் வ.உ.சி. மன்றங் கள் அமைந்தன.

தேர்தல் களத்திலே...

இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை, நாட்டின் விடுதலைக் குப் போராடிய காலத்திலே வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் இந்திய அசெம்பிளி, மாநிலச் சட்டமன்றங்கள், ஜில்லா போர்டு கள், தாலுகா போர்டுகள், மாநகராட்சிகள், நகர மன்றங்கள் ஆகியவற்றிற்கான தேர்தல்களிலேயும் கலந்து கொண்டது. தேர்தல் களத்தையும் விடுதலைப் போராட்டத்திற்கு வலுத்தே டும் பாசறையாகவே பயன்படுத்தியது. அதனால் காங்கிரஸ் ஊழியன் என்ற முறையில் நானும் தேர்தல் களத்திலே நின்றும் நாட்டுக்குப் பணியாற்றினேன். 1935 முதல் 1939 வரையுள்ள ஐந்தாண்டுக் காலத்திலே தமிழ்நாடு முழுவதும் சுற்றுலாச் செய்து தேர்தல் பணியிலே பங்கு கொண்டேன். வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதிலோ, தேர்தல் நிதி திரட்டுவதிலோ, பிரச்சார யந்திரத்தை இயக்குவதிலோ பங்கு கொள்ளும் அளவுக்கு

அந்நாளில் நான் முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. ஆயினும், மேடையேறிப் பிரச்சாரம் செய்வதற்கான பேச்சாற்றலைப் பெற்றிருந்தேன். அந்தத் துறையில் முன்னணியிலிருந்த பேச்சாளர்களில் இரண்டாவது வரிசையிலேனும் நான் இருந்தேன் என்று சொல்லலாம்.

நான் முதன் முதலாகத் தேர்தல் மேடையிலே பேசத் தொடங்கியது 1935-இல் நடைபெற்ற டெல்லி அசெம்பிளித் தேர்தலின் போதுதான். அந்தத் தேர்தலிலே, சென்னை நகரத் தொகுதியின் காங்கிரஸ் வேட்பாளராகத் திரு. எஸ். சத்திய மூர்த்தி ஐயரவர்கள் நிறுத்தி வைக்கப்பட்டார். அவரை எதிர்த்து ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் சர்.ஏ.ராமசாமி முதலியார் போட்டியிட்டார். போட்டி கடுமையாகத்தான் இருந்தது. இருவருமே ஆங்கிலத்தில் பெரும் நாவலர்களாதலால், உயர்தரக் கல்வி கற்ற வாக்காளரைத் தங்கள் நாவன்மையால் அவர்கள் கவர்ந்தனர். அன்று சொத்து வரி, வருமான வரி செலுத்துபவர்களுக்கே வாக்குரிமையிருந்தது. இன்றிருப்பதுபோல இருபத்தொரு வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை இருக்கவில்லை. அன்னியருக்கு நாம் அடிமைப்பட்டிருந்த காலமல்லவா!

இந்தத் தேர்தலிலே, வடசென்னைப் பகுதி முழுவதிலும் தேர்தல் கூட்டங்களில் பேசவும், வீடு வீடாகச் சென்று வாக்காளர்களைச் சந்தித்து காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவு கோரவும் வாய்ப்புப் பெற்றேன். அப்போது, சர்தார் பு.ம. ஆதிகேசவலு நாயகருக்கு இணை பிரியாத் தோழனாக இருந்து வந்தேனாதலால், தேர்தல் பிரச்சாரத்திலே அவருடன் தோளோடு தோள் நின்று தொண்டாற்றினேன். வாக்காளர்களைச் சந்திக்க நாவலர் சத்தியமூர்த்தி ஐயர் வடசென்னையில் வீடு வீடாகச் சென்ற போதெல்லாம் நானும் அவருடன் செல்லும் பேற்றினைப் பெற்றேன். சென்னையிலுள்ள கிராமணி சமூகத்தாரிலே ஒரு கணிசமான தொகையினர் வாக்குரிமை பெற்றிருந்தனர். அவர்கள் வாக்குகளைச் சேகரித்துத் தரும் பொறுப்பினையும் என்னிடம் ஒப்படைத்திருந்தது சென்னை மாவட்டத் தேர்தல் பணிக் குழு. அப்போது நான் கிராமணி குல மகாஜன சங்கத்தின் செயலாளனாக இருந்தேனாதலால், என்னிடம் ஒப்படைக்கப்

பட்ட பணியை ஓரளவு வெற்றிகரமாகச் செய்து முடிக்க என்னால் முடிந்தது.

இந்தத் தேர்தலின் போதுதான் நான் சென்னை மாவட்ட முழுவதிலுமுள்ள மக்களிடையே ஓரளவு செல்வாக்குப் பெறலானேன். இந்தச் செல்வாக்கு பிற்காலத்தில் வளர்பிறை போல் வளர்ந்ததெனலாம். டில்லி அசெம்பிளித் தேர்தலிலே அதிகமான வாக்குகள் பெற்று காங்கிரஸ் வேட்பாளரான நாவலர் எஸ்.சத்தியமூர்த்தி ஐயரவர்கள் வெற்றி வாகை சூடினார். கள்ளங்கபடமற்ற தேசபக்தனாக இருந்தேனாதலால், ஐயரின் வெற்றிச் செய்தியைக் கேட்டபோது, நானே வெற்றி பெற்றது போன்ற மகிழ்ச்சியை அடைந்தேன். இந்த வெற்றிக்குப் பின் சுமார் மூன்று மாத காலம் பொதுவாக சென்னையில், சிறப்பாக வடசென்னையில் வட்டந்தோறும், வட்டத்தில் உள்ள பகுதி தோறும் வெற்றி விழா ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் நடத்தப்பட்டு, வெற்றி வீரர் ஐயரவர்கள் சிறப்புச் செய்யப்பட்டார். இவ்வெற்றி விழாவுக்காகவும் நான் இரவு பகலாக உழைத்தேன். ஆம்; 'தமிழ்நாடு' அச்சுக்கூடத் தொழிலாளியாக இருந்த நிலையிலேதான்!

கொடிய இருமல் நோய்

இந்தத் தேர்தலுக்குப் பின் அடுத்த ஆண்டிலேயே சென்னை மாநகராட்சிக்குத் தேர்தல் நடந்தது. அதிலேயும் வடசென்னை வட்டங்களில் இரவு பகலாக உழைத்து காங்கிரசு வெற்றி தேடுவதற்காகப் பணிபுரிந்தேன். சென்னை நகரம் முழுவதிலும் பெரும்பாலான வட்டங்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றது.

சென்னை மாநகராட்சித் தேர்தல் நடந்த மறு ஆண்டிலேயே அப்போதைய சென்னை மாநிலச் சட்டசபைக்குத் தேர்தல் நடந்தது. அதிலே, திரு.பு.ம. ஆதிகேசவலு நாயகர் வடசென்னையில் காங்கிரஸ் சார்பில் நிறுத்தி வைக்கப்பட்டார். அதனால், தேர்தல் பணியிலே பெரும் பங்கு கொள்வதற்கான வாய்ப்பு என்மீது சுமந்தது. வடசென்னையில் ஜஸ்டிஸ் கட்சியின் தூணாக விளங்கிய திரு.சி. பார்த்தசாரதி நாயகர் என்பவர், தமது

கட்சியின் சார்பில் போட்டியிட்டார். ஏற்கனவே நான் கூறியது போல், அந்நாளில் வடசென்னையில் தேர்தல் பணியில் ஈடுபடுவதென்றால் — அதிலும், தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் ஜஸ்டிஸ் கட்சியினரைத் தாக்கிப் பேசுவதென்றால், பலவித இன்னல்களை எதிர்பார்க்க வேண்டியிருந்தது. காங்கிரசின் பகைவர்களை என்னுடைய பகைவர்களாகக் கருதிப் பணி புரிந்தேனாதலால், எதிரிகளின் விஷக்கண் பார்வை என்மீது தான் விழுந்தது. ஆகவே, இந்தச் சட்டமன்றத் தேர்தலின்போதும் பலவிதமான இன்னல்களுக்கு ஆளானேன். வடசென்னையில் காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி பெறுவதென்பது அந்நாளில் அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. தேர்தல் முடிந்த அன்று மாலை, அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த ராஜாஜி அவர்கள், 'வடசென்னைத் தொகுதி தவிர, நகரிலுள்ள மற்ற தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றி பெறுவது உறுதி' என அறிக்கை விட்டார். ஆனால், சொற்ப வாக்கு வித்தியாசத்தில் வடசென்னையிலும் காங்கிரஸ் வெற்றி பெற்றுவிட்டது. இந்தத் தேர்தலிலே, கடுமையாக உழைத்ததன் விளைவாக, இருமல் நோய் ஏற்பட்டு சில மாத காலம் படுக்கையில் கிடந்தேன். இறைவனருளால் எப்படியோ அந்தக் கொடிய நோயிலிருந்து மீண்டு விட்டேன்.

என் மூலம் நடந்த புரட்சி

1937 சூலைத் திங்களிலே சென்னை மாநிலத்தில் ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் அமைச்சரவை ஏற்பட்டது. இதற்குள் நான் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியாகி விட்டேன். ஆம்; 1935-ஆம் ஆண்டில் டில்லி சட்டசபைத் தேர்தலிலும், அதனை அடுத்து சென்னை மாநகராட்சித் தேர்தலிலும், அதற்குப்பின் சென்னை மாநிலச் சட்டமன்றத் தேர்தலிலும் நான் ஈடுபட்டு, கடுமையாக உழைத்ததன் விளைவாகச் சென்னை மாநகரம் முழுவதிலுமுள்ள காங்கிரஸ்காரர்கள் மனங்களிலே மதிப்புமிக்க இடத்தைப் பெற முடிந்தது. அதற்குள், சென்னை மாவட்டக் காங்கிரஸ் செயலாளர் பதவியை அடைந்தேன். உயர் கல்வியும் உயர்சாதிச் சிறப்பும், குடும்பச் செல்வாக்கும் இல்லாத என்போன்ற ஒரு தொழிலாளி அந்நாளில்

சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராவது சாத்தியமில்லை. ஆனால், அந்நாளைய காங்கிரசில் உழைப்புக் கும், உண்மை உணர்ச்சிக்கும் மதிப்பளிப்போர் நிறைந்திருந்த னர். ஆதலால், வடசென்னையில் எங்கோ ஒரு மூலையில் கிடந்த நான் நாவலர் சத்தியமூர்த்தி ஐயரின் தலைமையின்கீழ் சென்னை மாவட்டக் காங்கிரசின் செயலாளனாகப் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற முடிந்தது. அதையும் தேர்தலில் போட்டி யிட்டுப் பெருவாரியான வாக்குகள் மூலம்தான் அடைந்தேன். இந்தியாவில் மூன்றாவது சிறப்புமிக்க நகரான சென்னை நகரக் காங்கிரசுக்கு அச்சுத் தொழிலாளர் ஒருவர் செயலாளராக வரும் புரட்சி என் மூலமாகத்தான் நிகழ்ந்தது.

1938-ஆம் ஆண்டிலே, தமிழ்நாடு முழுவதிலும் ஜில்லா போர்டுகளுக்குத் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலிலும், செங்கற்பட்டு, சேலம், கோவை, வடாற்காடு ஆகிய மாவட்டங் களிலே சுற்றுலாச் செய்து காங்கிரசுக்காகப் பிரச்சாரம் செய் தேன். நான் சென்னை நகருக்கு வெளியே ஏதேனும் ஒரு மாவட்டத்தில் முதன் முதலாகத் தேர்தல் பிரச்சாரத்துக்காகச் சுற்றுலாச் செய்தேனென்றால், அது சேலம் மாவட்டத்தில் தான். அடுத்து, கோவை மாவட்டத்திலும் அதிக அளவில் சுற்றுலாச் செய்தேன். அந்தக் காலத்தில் மாவட்டந்தோறும் பெரிய பெரிய நிலப்பிரபுக்கள் ஜஸ்டிஸ் கட்சியைச் சார்ந்திருந்து காங்கிரசை எதிர்த்துப் போராடினர். காங்கிரஸ் சார்பில் இருந்த நிலப் பிரபுக்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அப்போது தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த திரு.டி.எஸ். அவினாசிலிங் கம் அவர்கள் என்னைக் கேட்டுக் கொண்டதன் பேரில்தான் நான் கோவை, சேலம் மாவட்டங்களில் சுற்றுலாச் செய்வதற்குச் சென்றேன்.

'கொலைகாரர்' தொகுதியிலே...

ஜில்லா போர்டு தேர்தலுக்காகச் சுற்றுலாச் சென்றபோது கோவை மாவட்டத்தில்தான் பல பயங்கர சோதனைகளைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. சங்கரண்டாம்பாளையம் தொகுதி யிலே காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட ஒரு நிலக்கிழார்

தோற்றத்திலே இராமலிங்கசுவாமி போன்று ஒரே வெள்ளாடை யைக் கீழும் மேலுமாகச் சுற்றிக் கொண்டு, நெற்றிநிறைய விபூதி அணிந்து காட்சியளிப்பார். ஆனால், எத்தனையோ கொலை களோடு அவரைச் சம்பந்தப்படுத்தி மக்கள் பேசுவதுண்டு. இறுதியில் அவரும் பழனி மலையில் கோயில் உள்பிரகாரத்தில் கொலை செய்யப்பட்டே மாண்டார்.

இந்தப் 'பெரிய மனிதரு'க்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய நான் போனபோது, எனக்கு என்னவெல்லாமோ ஏற்பட்டு விடுமென்று காங்கிரஸ்காரர்களே என்னைப் பயமுறுத்தினர். அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் செயலாளராக இருந்த கோவை பெருந்தலைவர் திரு.சி.பி. சுப்பையா அவர்கள், எனது தேர்தல் சுற்றுலாத் திட்டத்திலே சங்கரண்டாம்பாளையம் தொகுதியும் சேர்க்கப்பட்டிருந்ததை அறிந்ததும், மிகுந்த கவலையை வெளிப்படுத்தினார். எப்போதுமே நகைச்சுவையாகப் பேசும் அவர், ''சங்கரண்டாம்பாளையம் தொகுதிக்கா போகிறீர்கள்? கடவுள் உங்களைக் காப்பாற்றட்டும்'' என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

நான் எந்த வேட்பாளரை ஆதரித்துப் பேச சங்கரண்டாம் பாளையம் தொகுதிக்குப் போனேனோ. அந்த வேட்பாளர் கூட என்னுடன் துணைக்கு வரவில்லை. அலங்கியம் என்ற ஊருக் குச் சென்றபோது வழியில் அமராவதி ஆற்றைக் கடக்க வேண்டி யிருந்தது. அப்போது நேரம் இரவு 8 மணி இருக்கும். பதினைந்து வயதுடைய சிறிய பையன் ஒருவன் துணைக்காக என்னுடன் அனுப்பப்பட்டான். குதிரை வண்டியின் மூலம் இருள் சூழ்ந்த சாலையில் பயணம் செய்து, பின்னர் அமராவதி ஆற்றங்கரைக்கு இப்பால் குதிரை வண்டியை நிறுத்திவிட்டு, மார்பளவு நீர் நிறைந்திருந்த ஆற்றை நடந்தே கடந்து அக்கரையை அடைந்தேன். அங்குக் கூட்டத்தில் பேசி முடிந்த தும், காங்கிரஸ்காரர்களிலே சிலர், ''இரவு இங்கேயே தங்கி விடுங்கள். வழியில் எவனேனும் தலையை வெட்டி எடுத்துவி டப் போகிறான்'' என்று சொன்னார்கள். வேறு ஒருவர், ''இந்த ஊர்க்காரரை நம்பி, இங்கே இரவு தங்காதீர்கள். இந்த ஊரை விட்டுப் போய்விடுங்கள்'' என்று என் காதண்டை இரகசியமாக ஓதினார். எனக்கும் உயிரின் மீது ஆசை உண்டாதலால், நானும்

பயந்து போனேன். ஊரிலிருந்தாலும் ஆபத்து; ஊரை விட்டுப் போனாலும் ஆபத்து என்றால், வேறு என்ன செய்வது? எப்படியோ ஓர் அளவு துணிவு பெற்று என்னுடன் வந்த சிறுவனின் துணைகொண்டு அலங்கியத்திலிருந்து திரும்பவும் ஆற்றைக் கடந்து, கரையில் நிறுத்தி வைத்திருந்த குதிரை வண்டியிலேறி தாராபுரம் அடைந்தேன்.

வயலில் விழுந்தேன்!

அடுத்த நாள் வேறு ஒரு கிராமத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அதுவும் சங்கரண்டாம்பாளையம் தொகுதியைச் சேர்ந்ததுதான். அன்று நான் தன்னந்தனியாகத்தான் தாராபுரத்திலிருந்து அனுப்பப்பட்டேன். நான் சென்ற வண்டிக்காரர்தான் எனக்கு வழிகாட்டி. பிரதான சாலையிலிருந்து கிராமத்திற்குத் திரும்புகின்ற இடத்திலே நான் ஏறிச் சென்ற குதிரை வண்டி வயலிலே கவிழ்ந்துவிட்டது. சக்கரத்தின் ஒரு இலை முறிந்து வண்டியின் மேற்கூரையைத் துளைத்துக் கொண்டு, உள்ளே இருந்த என் தோளைக் கிழித்து இரத்தக் காயத்தை ஏற்படுத்தி விட்டது. வண்டி கவிழ்ந்ததால் அதிலிருந்து நான் வெளியே வருவதற்கு வெளியிலுள்ளவர்களின் துணை தேவைப்பட்டது. வண்டி கவிழ்ந்த சில நிமிடங்களுக்குள் கூட்டம் கூடிவிட்டது. வண்டியிலிருந்த என்னை வெளியில் கொண்டுவர உதவி புரிந்த வண்டியோட்டி, என் காதோடு வாயை வைத்து, ''ஐயா, இங்குள்ள ஜனங்களிடம், தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்தேனென்று கூறி விடாதீர்கள்'' என்றார். ஏற்கனவே, வண்டி விழுந்ததால் விபத்துக்காளான நான், இதைக் கேட்டு, பயந்து போனேன். ஆயினும் எப்படியோ சமாளித்து நடந்தே கிராமத்திற்குச் சென்று அங்கு நடந்த கூட்டத்தில் பேசிவிட்டு, இறையருளால் ஊறு ஏதுமின்றி தாராபுரத்திற்கு வந்தேன்.

சங்கரண்டாம்பாளையம் தொகுதியில் நான் பேசிய கிராமக் கூட்டங்களிலே மக்கள் மேடையை நெருங்கி வராமல் தொலைவிலேயே இங்கொருவர் அங்கொருவராகச் சிதறி நின்ற வண்ணம் என் பேச்சைக் கேட்டனர். ஆம்; மேடையைச் சுற்றி நின்று எனது பேச்சைக் கேட்க மக்களுக்கு அவ்வளவு பயம்!

வடாற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரில் நகரமன்றத் தேர்தலுக்குச் சென்றபோதும் முஸ்லிம் லீகைச் சேர்ந்தவர்களால் தொல்லைக்குள்ளானேன்.

இவ்வளவையும் நான் இங்குக் கூறக் காரணம், அந்நாளில் எவ்வளவு துன்பங்களுக்கிடையே தேசத்துக்குத் தொண்டாற்ற வேண்டியிருந்ததென்பதை இந்நாளைய மக்களுக்கு நினைவூட்டத்தான்; தற்பெருமைக்காகவல்ல. என்னைப் போன்று இன்னும் எத்தனையோ தேசபக்தர்கள் எண்ணற்ற இன்னல்களை ஏற்று, காங்கிரசைக் கட்டி வளர்த்தார்கள்.

அந்நாளில் வெளியூர்களுக்கு அழைக்கப்பட்டால், அன்பாக உபசரித்து வசதிகள் செய்து திருப்பி அனுப்பியவர்களும் உண்டு. மாறாக, திரும்புவதற்கு வழிச் செலவுக்குக் கொடுக்காமல் திண்டாடவிட்டவர்களும் உண்டு.

நான் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டேனென்றால், பல வகைப்பட்ட வாக்காளர்கள் மத்தியிலேதான் அந்தத் தொண்டைச் செய்ய வேண்டியிருந்தது. 1935-இல் டில்லி சட்டசபைத் தேர்தலின்போது சொத்து வரி, வருமான வரி செலுத்தும் பணக்கார வாக்காளருடைய ஆதரவைக் கோரிப் பேசினேன். அந்தப் பிரச்சார பாணியே வேறு.

அதன்பின், 1936-இல் சென்னை மாநிலச் சட்டமன்றத்திற்கும், 1938-இல் ஜில்லா போர்டுகளுக்கும் நடந்த தேர்தலின் போது எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமையிருந்ததால் அவர்களுடைய வாக்குகளைத் திரட்டப் பிரசாரம் செய்தேன். அந்தப் பிரச்சாரமே வேறு. நாடு விடுதலை பெற்ற பின்னர் வயது வந்தோரெல்லாம் வாக்குரிமை பெற்றுவிட்டனராதலால் அவர்கள் மத்தியிலே முற்றிலும் புதிய பாணியிலே தேர்தல் பிரச்சாரம் செய்ய வேண்டியவனானேன்.

சுமார் நாற்பதாண்டுக் காலமாகத் தேர்தல் பிரச்சார பேரிகையை யார் யாருக்கெல்லாமோ முழக்கினேன். அதனால் எத்தனையோ முறை கடுமையாக நோய்வாய்ப்பட்டேன். யாரிடமிருந்தும் எத்தகைய கைம்மாறையும் எதிர்பாராமல்தான்

தேர்தல்களத்தில் என் ஆற்றல் முழுவதையும் பயன்படுத்திக் கள்ளங்கபடமற்ற முறையில் உழைத்தேன்; இன்னமும் உழைத்துக் கொண்டே இருக்கிறேன்.

நான் ஏற்கனவே எடுத்துக்காட்டியது போன்று 1935 முதல் 1939 வரையுள்ள ஐந்தாண்டுக் காலத்திலே வடசென்னையில் நான்தான் காங்கிரஸ், காங்கிரஸ்தான் நான் — என்ற நிலையில் செல்வாக்குப் பெற்றவனாகி, என்னை வளர்க்கும் காங்கிரசை வளர்க்க நன்றியுணர்வோடு நான் பாடுபட்டேன்.

சோதனைக் காலம்

1936-இல் சென்னை மாநகராட்சிக்கு நடந்த பொதுத் தேர்தலுக்குப்பின் 1937 இறுதியில் சட்ட ரீதியான காரணத்தால் முதல் வட்டம் உள்பட சென்னை நகரில் பத்து வட்டங்களுக்குத் திரும்பவும் தேர்தல் நடைபெற்றது. அப்போது, ஓராண்டுக்கு முன் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் முதல் வட்டத்தில் போட்டியிட்ட முதல் நெம்பர் காங்கிரஸ் விரோதி ஒருவர் காங்கிரஸ் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். என்னை அடிக்கவும், கொல்லவும் சிலர் முயற்சித்தார்கள் என்று ஏற்கனவே கூறினேனல்லவா, அந்தக் கொலை முயற்சியாளர்களின் தலைவர் தான் காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்டார். இதுபொறாது, முதல் வட்டக் காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகள், உறுப்பினர்கள் அவ்வளவு பேரும் தத்தம் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டு, வட்டக் காங்கிரஸ் கமிட்டியைக் கலைத்துவிட்டதாகத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தகவல் கொடுத்தார்கள். காங்கிரஸ் வேட்பாளரை எதிர்த்து நான் சுயேச்சையாகப் போட்டியிட வேண்டுமென்று வட்டத்தைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்கள் அவ்வளவு பேரும் என்னை வற்புறுத்தினார்கள். இவர்களிலே பிரபல நடிகர் ஆரியகான கே.எஸ். அனந்த நாராயண அய்யர், யோகாசன நிபுணர் வி.என்.குமாரசாமி அய்யர், இவருடைய மனைவியார் திருமதி சீதாலட்சுமி ஆகியோர் முக்கியமானவர்கள். ஆனால், காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட நான் உறுதியாக மறுத்துவிட்டேன். போட்டியிட்டிருந்தால் நிச்சயமாக வெற்றி பெற்றிருப்பேன் என்றாலும், ஒரு கையில் பழியையும் இன்னொரு கையில் பதவியையும் ஏற்க நான் விரும்பவில்லை.

என்னுடைய — என்னை ஏகமனதாக ஆதரித்து நின்ற வட்டக் காங்கிரசினுடைய ஆதரவில்லாமல், காங்கிரஸ் வேட்பாளரான காங்கிரசின் முன்னாளைய விரோதி வெற்றி பெறுவது கொஞ்சங்கூட சாத்தியமில்லை. இதனை அறிந்து காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட வட்டத்திலுள்ள செல்வந்தர் சிலர் என்னுடைய அந்தரங்க ஆதரவைக் கோரினர். உள்ளொன்று வைத்துப் புறத்தே ஒன்றைச் செய்வது எனது சுபாவத்துக்கே விரோதமானதாகும். அதிலும், விடுதலைப் போராட்டத்திற்கு மத்தியிலே எனது தாய்ச் சபைக்குத் துரோகம் செய்வதென்பது என்னால் நினைத்துப் பார்க்கக்கூட முடியாததாக இருந்தது. ஆனால், ஓராண்டுக்கு முன்பு யாருக்கு ஓட்டுப்போட வேண்டாமென்று மேடையேறிப் பேசினேனோ, அதனால், கொலையாகக் கூடிய அபாயத்திற்கும் உள்ளானேனோ, அவரையே ஆதரித்துப் பேசுவதும், வேலை செய்வதும் என்னுடைய தன்மானத்துக்கே இழுக்குத் தேடிக் கொள்வதாக இருந்தன. என்னுடைய சாதியாரும், நான் சார்ந்திருந்த சாதிச் சங்கமும் கூட காங்கிரஸ் முத்திரை போடப்பட்ட முன்னாள் ஜஸ்டிஸ் கட்சிக்காரரை ஆதரித்து நான் வேலை செய்வதை விரும்பவில்லை. இப்படி ஒரு தர்மசங்கடமான சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது. நான் சென்னை மாவட்டக் காங்கிரஸ் செயலாளனாக இருந்த நிலையில்தான் இந்த அவமதிப்பையும், புறக்கணிப்பையும் தமிழ்நாடு காங்கிரஸ் எனக்கு இழைத்தது. மாவட்டக் காங்கிரசிலே எனக்குத் தலைவராக இருந்த சத்தியமூர்த்தி ஐயர்தான் இந்த இடுக்கணை எனக்கு இழைத்தார். அவர் எனது மேடைப் பேச்சிலே மிகுந்த கவர்ச்சியுடையவர் ஆயினும், என்னுடைய எளிய வாழ்க்கை என்னை அவர் இளப்பமாகக் கருத இடந்தந்துவிட்டது.

இறைவன் பிறப்பிலேயே எனக்குத் தந்த சகிப்புத்தன்மையைப் பயன்படுத்திக் காங்கிரஸ் வேட்பாளரை ஆதரிப்பதென்ற முடிவுக்கு வந்தேன். என் சாதியினரையும் சகாக்களையும் எனது முடிவை ஏற்குமாறு செய்தேன். காங்கிரஸ் முத்திரை போட்ட வேட்பாளர் வலுவில் என்னை அணுகி, எனது ஆதரவைக் கோரிய பின்னரே அவரை ஆதரிப்பதென்ற முடிவுக்கு வந்தேன்.

போட்டியில்லாமல் செய்து, அவருக்காக மேடையேறிப் பேசுவதனால் எனக்கேற்படவிருந்த அவமானத்திலிருந்து தப்பி னேன்.

இந்த நிகழ்ச்சி பார்லிமெண்டரி துறையில் நான் சந்தித்த முதல் போராட்டமாகும். முதல் துரோகம் என்றும் சொல்லலாம். ஆனால், கட்சிக் கட்டுப்பாட்டைக் காப்பதிலே நான் காட்டிய உறுதியும் வெற்றிபெற வாய்ப்பிருந்தும் விட்டுக்கொடுத்த பண்பும் வடசென்னை காங்கிரஸ் ஊழியர் மத்தியிலும் பொது மக்கள் மத்தியிலும் என்னுடைய மதிப்பைப் பெருமளவுக்கு உயர்த்திவிட்டனவென்று சொல்லலாம்.

1938-இல் ஜில்லா போர்டு தேர்தலிலே சேலம் மாவட்டத் தில்தான் நான் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டேன். இதனால், பிற்காலத்தில் எனது வளர்ச்சிக்கு இந்த மாவட்டம் பெரிதும் பயன்பட்டு வந்ததெனலாம். ஆம்; எனது வரலாற்றிலிருந்து பிரித்தெடுக்க முடியாதபடி சேலம் மாவட்டத்தோடு எனக்குத் தொடர்பு இருந்து வருகிறது.

நான் அரசியல் பயின்ற ஆரம்பப் பள்ளி 'தமிழ்நாடு' அச்சகமாகும். 'அச்சு கோக்கும் தொழிற்சாலை எப்படி அரசியல் பள்ளியாக மாற்றப்பட்டது' என்று கேட்கிறீர்களா? என்னளவில் அந்தப் புதுமையும் நடந்தது. அதுதானே என் வாழ்க்கையில் உள்ள தனிச்சிறப்பு! 'தமிழ்நாடு' அச்சுக்கூடத்தின் உரிமையாள ரான டாக்டர் பி.வரதராசுலு நாயுடு சேலம் மாவட்டத்தைச் சார்ந்தவர். ராஜாஜியோடு ஏற்பட்ட தொடர்பால் எனக்கு நன் மைகளும் விளைந்தன; தீமைகளும் விளைந்தன. இப்படி, யான் அனுபவித்து வரும் நன்மை — தீமைகளுக்குக் காரணமான ராஜாஜியும் சேலம் மாவட்டத்தவர்தானே!

இந்த இரண்டு பெரியார்கள் மீது எனக்குள் பற்றும் பாசமும் சேலம் மாவட்டச் சுற்றுலாவிலே அதிக நாட்களைச் செலவழிக்க எனக்கு ஊக்கத்தைத் தந்தன. இந்தச் சுற்றுலாவில் அந்த மாவட் டத்தைச் சார்ந்த பேச்சாளர் சிலரும் என்னோடு கலந்து கொண்ட னர். நான்தான் பிரதான பிரச்சார பீரங்கி!

மதுவிலக்கு

நான் முதன் முதலாகச் சேலம் மாவட்டத்தில் சுற்றுலாச் செய்தபோது, அந்த மாவட்டத்தில் முழு அளவு மதுவிலக்கு அமுலில் இருந்தது. தமிழ்நாட்டிலேயே அந்த மாவட்டத்தில் தான் முதன் முதலாக மதுவிலக்கு அமுல் நடத்தப்பட்டது. மதுவிலக்கு அமுலுக்கு வந்து சரியாக ஓராண்டு நிறைவுபெற்றிருந்த நேரத்திலே நான் அந்த மாவட்டத்தில் சுற்றுலாச் செய்தேன். குடிப்பழக்கத்தை அடியோடு வெறுப்பவன் ஆதலால் மதுவிலக்கின் நற்பலன்களை ஆராய்ந்தறிவதிலும் கருத்துச் செலுத்தினேன். உண்மையிலேயே சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கு வெற்றிகரமாக அமுலில் இருந்தது கண்டு மகிழ்ச்சியடைந்தேன். தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்ற கிராமங்களிலே சாதாரண மக்களை அணுகி மதுவிலக்கு பற்றி அவர்கள் கருத்தறிய முயன்றேன். மக்களில் மிகப் பெரும்பாலோர் மதுவிலக்கிற்கு ஆதரவாகவே இருந்தனர். அந்நாளில், காங்கிரஸ்காரர்களுக்குச் சாதாரண மக்களுடைய நெருங்கிய தொடர்பும், மிகுந்த செல்வாக்குமிருந்தன. மதுவிலக்கிலேயும் அவர்களுக்கு நம்பிக்கை இருந்தது. அதனால், சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கு வெற்றிநடை போட்டது.

பிற்காலத்தில் மதுவிலக்குச் சட்டம் வெற்றி நடை போடவில்லையென்பது உண்மைதான். அதற்கு முதற் காரணம், அரசியல் கட்சிகளுக்கே மதுவிலக்கில் அழுத்தமான நம்பிக்கையில்லாததுதான். அரசியல் கட்சிகளிலேயே குடிப்பழக்கமுள்ளவர்களைச் சேர்த்துக் கொள்ள இயலாதபடி மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டிருந்த ஒரே கட்சி அன்று காங்கிரஸ் தான். அந்தக் கட்சியே மதுவிலக்கில் நம்பிக்கை இழந்து மூடிய மதுக்கடைகளைத் திறந்து கொண்டே வந்திருக்கிறதென்றால், மதுவிலக்குச் சட்டம் எங்ஙனம் வெற்றி பெறும்? குடிப்பழக்கத்தின் கொடுமையை — மதுவிலக்கின் நன்மையை விளக்கி மக்கள் மத்தியிலே பிரச்சாரம் செய்யவில்லை. குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரம் போல மதுவிலக்குக்கு ஆதரவாகவும் பிரச்சாரம் நடத்த அரசு திட்டமிட்டிருக்குமானால், மதுவிலக்குச் சட்டம் வெற்றி நடை போட்டிருக்கும். பிரச்சாரமில்லாததால், மதுவிலக்

குச் சட்டம் வெற்றி பெறாததோடு, சாதாரணப் பொதுமக்கள் மதுவிலக்கைக் கொள்கை அளவில்கூட விரும்பாத நிலை உருவாகிவிட்டது. இப்போதுகூட மனமிருந்தால் அரசு பிரச்சாரத்தை வலுப்படுத்தி மதுவிலக்குக்கு வெற்றி தேடலாம்.

சேலம் மாவட்டத்தில் சுற்றுலாச் செய்தபோது தேசியக் கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களுடன் நட்புக் கொள்ளும் பேற்றினைப் பெற்றேன். 1931-இல் நடைபெற்ற உப்புச் சத்தியாகிரகத்தின்போது, ''கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது'' என்ற பாடலின் வாயிலாக முதன் முதலாக நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை எனக்கு அறிமுகமானார். அதன் பின்னர் அவருடன் நேரடியாக எனக்குத் தொடர்பு ஏற்பட்டது, 1938-இல் நான் சேலம் மாவட்டத்தில் சுற்றுலாச் செய்தபோதுதான்.

காலால் இட்ட கட்டளை!

நான் சேலத்திலிருந்தபோது தமிழ் மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் அங்கு நடைபெற்றது. அந்தக் கூட்டத்தையொட்டிய விக்டோரியா மார்க்கட் திடலில் பொதுக் கூட்டமொன்றும் ஏற்பாடாகியிருந்தது. நாவலர் சத்தியமூர்த்தி ஐயர் பேசுவதாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. எதிர்பாராத விதமாக அவர் சேலம் நகருக்கு வருகை தரவில்லை. ஐயரவர்களின் சொற்பொழிவைக் கேட்கவேண்டுமென்ற ஆர்வத்துடன் அக் கூட்டத்தில் கலந்து கொண்ட நான் அதிலே பேசுவதற்கும் வாய்ப்பு பெற்றேன். அவ்வளவு பெருங்கூட்டத்திலே அதற்கு முன்பு நான் பேசியதில்லை. அதனால் ஒருபுறம் பயமிருந்தது; இன்னொரு புறம் பேச வேண்டுமென்ற ஆசையும் இருந்தது. ஆசை பயத்தை வென்றுவிட்டது. அதனால், நன்றாகவே பேசினேன்.

அப்போது தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு உச்சநிலையிலிருந்தது. மதுவிலக்கின் வெற்றி சேலம் மக்களின் மனதைக் கவர்ந்திருந்தது. இரண்டு பிரச்சினைகளைப் பற்றியும் நான் பேசினேன். பத்து நிமிடம் பேசியிருப்பேன்; அதற்குள் மக்க

ளைக் கவர்ந்துவிட்டேன். அதனால் அடிக்கடி மக்கள் கைதட்டினர். என்னை மறந்து உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தேன். கூட்டத் தலைவரும் சிறந்த பேச்சாளர்; உள்ளூர்க்காரருமாவார். ஊருக்குப் புதியவனான நான் திடீரெனச் சேலம் மக்கள் மத்தியிலே பேச்சு மேடையில் செல்வாக்கு பெறுவதனை அவர் விரும்பாமலோ என்னவோ, என் கால் விரல்களைத் தன் கால் விரல்களால் அழுத்தி அழுத்தி, பேச்சை விரைவில் முடிக்குமாறு இரகசியமாகக் கட்டளையிட்டார். நான் இளம் பருவத்தினனாதலால், கொஞ்சம் சினங்கொண்டு ''கூட்டத் தலைவர் என் காலைத் தன் காலால் அழுத்தி, பேச்சை முடிக்குமாறு கட்டளையிடுகிறார். அதனால் முடித்துவிடுகிறேன்...'' என்று கூறி, பேச்சை முடிக்க முயன்றேன். அவ்வளவுதான்; கூட்டத்தினர், ''நீங்கள் பேசுங்கள், பேசுங்கள்'' என்று குரல் கொடுத்தனர். அத்துடன் நில்லாமல், கூட்டத் தலைவரின் பெயரைச் சொல்லி, ''சேட்டை செய்யாதே; கிராமணியாரைப் பேசவிடு'' என்றும் கூறினார்கள். அதன்பின், கூட்டத் தலைவர் என்னை மறந்தார். நானும் என்னை மறந்து அரைமணி நேரம் உணர்ச்சி வயப்பட்டு பேசினேன். சென்னைக்கு வெளியே நான் முதலில் பேசிய பெரிய கூட்டம் இதுதான்.

நாமக்கல் கவிஞர் சந்திப்பு

கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தபோது பொதுமக்களிலே சிலர் என்மீது பூக்களைச் சொரிந்தனர். கூட்டத்தைக் கூட்டிய சேலம் மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகள், ''சத்திய மூர்த்தி ஐயர் வராத குறையைப் போக்கி விட்டீர்கள்'' என்று கூறி, என்னைப் பாராட்டினார்கள். கூட்டம் முடிந்ததும் நகரிலுள்ள ஒரு ஓட்டலுக்குச் சென்று வேறு காங்கிரஸ்காரர் பலருடன் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்தேன். கூட்டத்திலே என் பேச்சைக் கேட்டுக் கவர்ச்சியுற்ற நாமக்கல் கவிஞரவர்கள், என்னைத் தேடி ஓட்டலுக்கு வந்து, என்னைக் கட்டித் தழுவிக் கொண்டு, ''உண்மைத் தமிழனைத் தரிசித்தேன்'' என்று உணர்ச்சி பொங்கிக் கூறினார். எனது எதிர்காலம் சிறந்து விளங்க வேண்டுமென்றும் வாயார வாழ்த்தினார். உணவருந்திய பின் அவருடன் சிறிது நேரம் உரையாடி மகிழ்ந்தேன்.

மறுநாளும் சில மணிநேரம் அவருடனிருந்து தமிழ் மொழியின் எதிர்காலம் பற்றி உரையாடினேன்.

நாமக்கல் கவிஞரின் கவிதைகளைப் படிப்பதிலே அந்நாளில் எனக்குத் தனி ஆர்வமிருந்தது. இந்தியா முழுவதையும் தாய்த் திருநாடாகக் கருதும் தேசியவாதியாகிய நான், 'தமிழன்' என்னும் இன உணர்வு பெற்று, தமிழினத்தின் தனி உரிமைகளை மீட்கத் தனியாக இன்று ஒரு கட்சி நடத்துகிறேனென்றால், அதிலே நாமக்கல் கவிஞருக்கும் பொறுப்புண்டு.

''தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு'' — ''தமிழனென்று சொல்லடா! தலைநிமிர்ந்து நில்லடா!'' என்ற கவிஞர் பாடல்களிலுள்ள வரிகள் இளமைப் பருவத்திலே என் இதயத்தில் பதிந்துவிட்டன. இந்திய தேசியவாதி ஒருவர் மொழிவழி இன உணர்வு கொள்வது குறையோ, குற்றமோ ஆகாதென்பதனை முதன் முதல் மகாகவி பாரதியாரின் கவிதைகளைப் படித்து உணர்ந்தேன். அந்த உணர்வை பாரதியாரின் வாரிசான நாமக்கல் கவிஞரின் கவிதைகள் உறுதிப் படுத்தின.

இன உணர்வானது, உலகத்திலிருந்து தனித்து வாழும் கேட்டிற்குத் தமிழினத்தைக் கொண்டு சென்றுவிடக் கூடாதென்பதனையும் கவிஞர் தம் பாடல்களிலே பலவிடங்களில் உணர்த்தியிருக்கிறார். இதுவும் எனக்கு உடன்பாடுதானே!

சேலம் மாவட்டச் சுற்றுலாவிலே பழம்பெரும் தேசபக்தர் பலருடைய நட்பைப் பெற்றேன். அவர்களிலே, தருமபுரி தீர்த்தகிரி முதலியார் முக்கியமானவராவார். இவரை ''எம்டன் முதலியார்'' என்று நண்பர்கள் அழைப்பார்கள். கவர்ச்சிகரமான தோற்றம் படைத்த பழங்கால மனிதர். வ.உ.சிதம்பரனார், பாரதியார், வ.வே.சு. அய்யர், சுப்பிரமணிய சிவா போன்ற பழம்பெரும் தேச பக்தர்களால் மதிக்கப் பெற்றவர். இன்னும் எத்தனையோ தேச பக்தர்களுடைய நட்பினைப் பெற முடிந்தது. அவர்களிலே பலர் இப்போதில்லை. இப்போது இருப்பவர்களிலேயும் பலர் அரசியலிலிருந்தே ஒதுங்கிவிட்டனர். பழையவர் கழிதலும் புதியவர் புகுதலும் அரசியல் துறையில் இயற்கை தானே!

சேலம் மாவட்டச் சுற்றுலாவை முடித்துக் கொண்டு சென்னை திரும்பியதும், பொதுக் கூட்டங்களில் பேசுவதற்குச் சென்னை நகரில் எனக்குக் கிராக்கி அதிகப்பட்டது. மதுவிலக்கு நடைமுறையிலுள்ள மாவட்டத்தில் சுற்றுலாச் செய்து திரும்பின வனாதலால், மதுத் தொழில் புரியும் குலத்தில் பிறந்தும் மதுவிலக்கில் அழுத்தமான பற்றுடையவனாதலால், மதுவிலக்கு வெற்றி பெற்றுள்ள விதத்தை என் மூலம் மக்களுக்கு அறிவிக்க, சென்னையிலுள்ள காங்கிரஸ்காரர்கள் ஆர்வங்கொண்டனர். நகரின் பல பேட்டைகளிலே, ''கள் ஒழிந்த சேலத்தில் நான் கண்ட காட்சி'' என்னும் பொருள் பற்றிப் பொதுக் கூட்டங்களில் பேசினேன்.

'தினமணி'யால் வந்த வினை?

முதல் கூட்டம் கள் தொழிலாளர்களும், கள் வணிகர்களும் மிகுதியாக வாழ்ந்த புது வண்ணாரப்பேட்டையிலே நடத்தப் பெற்றது. அந்தக் கூட்டம் பற்றிய முன்னறிவிப்புச் செய்தி 'தினமணி'யில் வெளியானதிலே ஒரு பயங்கரமான தவறு ஏற்பட்டுவிட்டது. ''சிவஞான கிராமணி, 'கள் ஒழிந்த சேலத் தில் நான் கண்ட காட்சி' என்ற பொருள் பற்றிப் பேசுவார்'' என்று எழுதிக் கொடுத்தது, ''சிவஞானம் கிராமணிகள் ஒழிந்த சேலத்தில் நான் கண்ட காட்சி என்பது பற்றிப் பேசுவார்'' என்று பிரசுரமாகியிருந்தது. இதிலே உள்ள தவறு, 'கிராமணி'க்கும் 'கள்'ளுக்கும் நடுவே இடம் விடாமல், இரண்டையும் இணைத்து, ''கிராமணிகள் ஒழிந்த...'' என்று பிரசுரித்து விட்ட தாகும். நான் மதுவிலக்கை ஆதரிப்பதே எனது சாதியாருக்குப் பிடிக்கவில்லை. அதனால், 'குலத்துரோகி' என்ற பட்டத்தை எனக்குக் கொடுத்து விட்டனர். இந்த நிலையிலே ''கிராமணிகள் ஒழிந்த சேலத்தில் நான் கண்ட காட்சி''யைப் பற்றிப் பேசுகிறே னென்றால், அவர்களுக்கு ஆத்திரம் வரத்தானே செய்யும்! அதனால், புது வண்ணாரப்பேட்டைப் பொதுக் கூட்டத்தில் நான் பேச எழுந்ததுமே, 'தினமணி'ப் பத்திரிகையில் வெளிவந்திருப் பதை என்னிடம் காட்டி, அதற்குச் சமாதானம் சொல்ல வேண்டு மென்று சிலர் கேட்டார்கள். வேறு சிலர், நான் சமாதானம் சொல்லும்வரை காத்திராமல், கூட்டத்தைக் கலைத்துவிடக்

கருதிக் குழப்பம் செய்தனர். புது வண்ணாரப்பேட்டை கிராமணிகளிலே, எனக்கு உறவினர்களாகவும், நண்பர்களாகவும், என்பால் நல்லெண்ணமுடையவர்களாகவும் இருந்த சிலர், குழப்பவாதிகளிடமிருந்து என்னைக் காப்பாற்ற முயன்றனர். குழப்பம் செய்தவர்களைச் சமாதானப்படுத்துவது கஷ்டமாக இருந்தது. பெரும் சிரமப்பட்டு அவர்களைச் சமாதானப்படுத்தினேன்.

சேலத்தில் கள் இறக்குவோர் கிராமணி சாதியினர்தான் என்று அவர்கள் தவறாக எண்ணிக் கொண்டனர். அதனால், சேலம் மாவட்டத்தில் அமுல் நடத்தப்பட்ட மதுவிலக்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களிடம் சாதி ரீதியில் அனுதாபம் காட்டினர். இதிலுள்ள தவறை எடுத்துச் சொல்லி, சேலம் மாவட்டத்தில் வேலையிழந்த கள்ளிறக்கும் தொழிலாளர்கள் கிராமணி சாதியினர் அல்லர் என்பதனை விளக்க வேண்டிய கஷ்டம் எனக்கு ஏற்பட்டது. 'தினமணி'ப் பத்திரிகாலயத்திலுள்ள அச்சுகோப்பவர் செய்த பிழையால் பிழை திருத்துபவர் காட்டிய எச்சரிக்கையின்மையால் புது வண்ணாரப்பேட்டைப் பொதுக் கூட்டத்தில் நான் படாதபாடு பட்டேன். நல்ல வேளையாக, அடிபடாமல் தப்பினேன். சென்னையிலுள்ள வேறு பேட்டைகளிலே இந்த அனுபவம் எனக்கு ஏற்படவில்லை.

மதுத் தொழிலிலும் வாணிபத்திலும் ஈடுபட்டுள்ளோருக்கு வேறு தொழிலோ, வாணிபமோ, நிவாரண உதவியோ தராமல் மதுவிலக்கை அமுல் நடத்துவதிலுள்ள தவறையும் சேலம் மாவட்டச் சுற்றுலாவின்போது நன்கு உணர்ந்தேன். அதனையும் சென்னை நகரிலுள்ள மக்களுக்கு மட்டுமின்றி, காங்கிரஸ் தலைவர்களுக்கும், ஊழியர்களுக்கும் எடுத்துச் சொல்லி, பிற மாவட்டங்களில் மதுவிலக்கு விஸ்தரிக்கப்படுங்கால் இந்தக் குறை அகற்றப்பட வேண்டியதன் அவசியத்தையும் உணர்த்தினேன்.

கவிஞர் தலைமையில் மாநாடு

நாமக்கல் கவிஞருக்கும் எனக்கும் முதன் முதலாகத் தொடர்பு ஏற்பட்ட காலத்திலே, அவர் சேலம் மாவட்ட எல்லைக்குள்ளேயே சிறைப்பட்டிருந்தார். கவிஞராக — ஓவியராக

— சிறந்த தேச பக்தியாகிய உள்ள அவர், நாடு முழுவதிலும் புகழ்பெற வேண்டுமென்று நான் விரும்பினேன். அதற்காக என்னாலானதைச் செய்வதென்றும் உறுதி கொண்டேன். கவிஞரும் என்னை உறுதியாகப் பிடித்துக் கொண்டார். நான் சென்னை திரும்பியதும் தொடர்ந்து எனக்குக் கடிதங்கள் எழுதி வந்தார். நண்பர்களுக்குக் கடிதங்கள் எழுதுவதிலே நாமக்கல் கவிஞர் மிகவும் திறமை பெற்றவர். தாமே நேரில் பேசுவது போல் சுவைமிக்க தமிழிலே கடிதம் எழுதுவார். அவருடைய கடிதங்கள் என்னைப் பெரிதும் கவர்ந்தன.

கவிஞரின் 'பிரார்த்தனை' என்னும் தலைப்புடைய கவிதைத் தொகுப்பு நூலை ஜில்லா போர்டுகளின் — நகர மன்றங்களின் பள்ளிகளிலே துணைப் பாடமாக வைக்க ஏற்பாடு செய்தேன். சென்னை மாவட்டக் காங்கிரஸ் சார்பில் வ.உ.சி., பாரதியார், காந்தியடிகள் ஆகியோரின் விழாக்களை நான் நடத்தியபோது, அவர்கள் பற்றிக் கவிதைகள் எழுதியனுப்பு மாறு அடிக்கடி நான் கவிஞருக்குக் கடிதம் எழுதுவேன். அவரும் சுணங்காமல் கவிதைகளை அனுப்பி வைப்பார். அவை களை 'தினமணி', 'சுதேசமித்திரன்' ஆகிய நாளேடுகளில் வெளிவர ஏற்பாடு செய்வேன். கவிஞரின் கவிதைத் தொகுப்பு நூலில், வ.உ.சி., பாரதியார், காந்தியடிகள் பற்றியுள்ள கவிதை களில் பெரும்பாலானவை அந்நாளில் எனக்காக அவரால் எழுதப்பட்டவையாகும்.

1941-இல் வடசென்னையிலே முதல் சர்க்கிள் காங்கிரஸ் மாநாட்டிற்கு ஏற்பாடு செய்து, அதிலே கவிஞர் தலைமை தாங்கச் செய்தேன். கவிஞர் கலந்து கொள்ளும் மாநாடு அகில இந்தியச் சிறப்பு பெறவேண்டும் என்பதற்காக ஆசாரிய வினோ பாவை அழைத்து அந்த மாநாட்டைத் தொடங்கி வைக்கும்படி செய்தேன். இந்த மாநாட்டிற்காகத் தமது குடும்பத்துடன் சென்னை நகர் வந்த கவிஞரை, வடசென்னை வாசிகளான திரு.பி.ஆர். கஜபதி நாயுடு, திரு.பி.ஆர். சீராமலு நாயுடு, திரு.வி.என். குமாரசாமி ஐயர், திருமதி வி.கே. சீதாலட்சுமி குமாரசாமி ஆகிய செல்வந்தர்களுக்கு அறிமுகப்படுத்தி, அவரது தமிழ்ப் பணிக்கு உதவி கிடைக்க ஏற்பாடு செய்தேன்.

தமிழகமறிந்த பேச்சாளனானேன்!

தமிழ்நாட்டில் நான் பேசிய மேடைதோறும் நாமக்கல் கவிஞரின் கவிதைகளில் உள்ள சிறந்த கருத்துகளை எடுத்துக் கூறி, அவரது இலக்கியப் பணியைத் தமிழ் மக்கள் உணருமாறு செய்தேன்.

தனி நபர்கள் வளர்ச்சியின் மூலமாகத்தான் தமிழ் இனம் வளர்ச்சி பெற முடியும் என்ற முடிவு என் மனத்துள் ஆழமாகப் பதிந்திருந்தது. அதனால், சிறந்த தமிழ்க் கவிஞரான நாமக்கல் கவிஞரின் புகழைப் பரப்பி, அதன் மூலம் தமிழுக்குத் தொண்டு செய்வதாக நினைத்து மகிழ்ச்சி அடைந்தேன். இந்த முயற்சி களிலே ஒன்றிரு சந்தர்ப்பங்களில் எனக்குக் கஷ்டநஷ்டங்களும் நேர்ந்ததுண்டு. அவற்றை நான் இங்கு விவரிக்க விரும்ப வில்லை.

ஜில்லா போர்டு தேர்தல் பிரச்சாரத்திற்காக வெளிமாவட் டங்களில் சுற்றுலாச் செய்ததால், மாநில மட்டத்திலும் என் செல்வாக்கு வளர்ந்தது. சென்னை நகரிலும், முன்னைவிடவும் எனது செல்வாக்கு கூடுதலானது. வெளியூர்களுக்கு வரும்படி இடைவிடாமல் அழைப்புகள் வந்து கொண்டிருந்தன. திருமண மாகி ஓராண்டுகூட நிறைவு பெறாத நிலையிலே அடிக்கடி வெளியூர் செல்ல நான் துணிந்தாலும் என் பெற்றோர் போட்ட 'கால்கட்டு' என்னை அனுமதிக்கவில்லை. ஆயினும், எப்படியோ சமாளித்துக் கொண்டு அடிக்கடி வெளியூர்களுக்குச் சென்று வந்தேன். பெரிய பெரிய மாநாடுகளிலே பங்கு பெற்று, பெருந்தலைவர்கள் முன்பு பேசி, அவர்களுடைய பாராட்டுத லைப் பெற்றேன். திரு. சத்தியமூர்த்தி ஐயர் பேச்சாளர்களிடம் பொறாமை கொள்ளாத குணமுடையவர். ஒரு நல்ல பேச்சைக் கேட்டுவிட்டால் துள்ளிக் குதித்துப் பூரிப்படைவார். பேசியவர் யாரானாலும் அவரை வெளிப்படையாகப் பாராட்டத் தவற மாட்டார்.

1938 அக்டோபர் 2-ஆம் தேதியன்று இராயப்பேட்டை காங்கிரஸ் மாளிகைத் திடலில் காந்தி விழாக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நான் பேச வேண்டுமென்பது நண்பர் த.செங்கல்வராயன் அவர்களின் விருப்பம். திரு. சத்தியமூர்த்தி ஐயர் இந்தக் கூட்டத்தில் தலைமை வகித்திருந்தார். திரு. செங்கல்வராயன் தனது விருப்பத்தைக் கூட்டத் தலைவருக்குத் தெரிவித்தார். ஐயர் ஆரம்பத்தில் மறுத்தார் என்றாலும், பின்னர் ''பத்து நிமிடத்திற்குள் பேசி முடிக்க வேண்டும்'' என்று கட்டளையிட்டு, என்னை அனுமதித்தார். அதுவரை நான் பேசி அவர் கேட்டதில்லை. ஆம்; பெருங்கூட்டங்களிலே! அன்று நான் பேசியதைக் கேட்டு ஐயரவர்கள் மனம் பூரித்துப் போனார். நான் பேசி முடித்ததும், சில நிமிஷங்கள் என்னைப் பாராட்டிப் பேசினார். அதன் பின்னர் வெளியூர் சுற்றுலாக்களுக்குத் தம்முடன் அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

திரு. காமராசர் தலைவரானார்!

1939-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கமிட்டிகளுக்குத் தேர்தல் நடைபெற்றது. அப்போதைய காங்கிரஸ் விதிமுறைப்படி நான்கணா சந்தா செலுத்திய சாதாரண அங்கத்தினர்களைக் கொண்டு மாவட்டக் காங்கிரஸ் கமிட்டிகளுக்கும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த ஆண்டிலும் தேர்தல் மூலம் சென்னை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டிக்கு வடசென்னைத் தொகுதியிலிருந்து உறுப்பினனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அதிகமான வாக்குகளைப் பெற்று, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பட்டியலில் முதலிடம் பெற்றேன். வடசென்னைத் தேர்தல் அதிகாரியாகத் தமிழ்நாடு காங்கிரசால் நியமிக்கப்பட்ட பிரபல எழுத்தாளர் திரு.வ.ரா. அவர்கள், வடசென்னையில் எனக்கிருந்த செல்வாக்கு கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார். நான் காங்கிரசில் இருந்த நாள்வரை — அதாவது 1954-ஆம் ஆண்டு வரை — நான் போட்டியிட்ட காங்கிரஸ் தேர்தல் ஒவ்வொன்றிலும் பிறர் வியக்கும் வகையில் அதிகப்படியான வாக்குகள் பெற்று, மிகப் பெரிய தலைவர்களின் அந்தரங்கச் சதிகளை முறியடித்து வெற்றியைத் தழுவி வந்தேன் என்பதனை இங்கு நினைவூட்டுகின்றேன்.

இதன் பின்னர் முதல் சர்க்கிள் காங்கிரஸ் கமிட்டியின் தலைவனாகவும், சென்னை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியின் செயலாளனாகவும் நான் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

1939-ஆம் ஆண்டு, பாரதப் பெருநாட்டின் — அதன் ஒரு அங்கமான நம் தமிழ்த் திருநாட்டின் வரலாற்றிலே மகத்தான மாறுதல்களை ஏற்படுத்தியது. என்னுடைய வாழ்க்கையிலேயும் அந்த மாறுதல்கள் எதிரொலித்தன. இந்த ஆண்டிலே செப்டம்பரில் இரண்டாவது உலகப் பெரும்போர் மூண்டது. அந்தப்

போரிலே இந்தியாவும் கலந்து கொள்வதாக பிரிட்டிஷ் ஆட்சி பிரகடனப்படுத்தியது. இந்தியப் பொதுமக்களின் தேசபக்தியை யும், விடுதலை உணர்ச்சியையும் அவமதிப்பதாக இருந்தது, பிரிட்டிஷ் ஆட்சியின் பிரகடனம். அதனால், அந்தப் பிரகட னத்தை எதிர்க்கும் வகையில், இந்தியாவின் ஆறு மாநிலங்களில் இயங்கி வந்த காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவி துறந்தன. அப்போதைய சென்னை மாநிலத்தில் இயங்கி வந்த ராஜாஜி அமைச்சரவையும் பதவி துறந்தது. இதன் விளைவாக, எந்த நேரத்திலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வெளியேற்ற காங்கிர சானது களம்புகக் கூடுமென்ற நிலைமை இருந்தது. காங்கிரஸ் கமிட்டிகள் உஷார்படுத்தப்பட்டன.

இந்நிலையில் 1940 பிப்ரவரி 15-இல் தமிழ்நாடு காங்கி ரஸ் தலைவர் தேர்தல் நடைபெற்றது. திரு. கு.காமராசர், தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக முதன் முதலாகத் தேர்ந் தெடுக்கப்பட்டது இந்தத் தேர்தலில்தான். பொதுவாக, பாரதப் பெருநாட்டில் — குறிப்பாக, தமிழ்த் திருநாட்டில் கடந்த முப்பதாண்டுக் காலத்தில் நிகழ்ந்த நன்மை தீமைகளோடு திரு.கு. காமராசருக்கு நெருங்கிய தொடர்புண்டாதலால், அவர் முதன் முதலாகத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதிலே எனக்கும் தொடர்புண்டு. இந்நாளில் அரசியலில் ஈடு பட்டுள்ள இளம் பருவனத்தினருக்கு அந்நாளில் எனக்கும் திரு.கு. காமராசருக்குமிடையே நிலவிய நல்லுறவும், நாங்கள் பரஸ்பரம் கொண்டிருந்த நல்லெண்ணமும் தெரிந்திருப்பதற் கில்லை. அதனால், நாங்கள் இருவரும் பிறவிப் பகைவர்கள் என்றே காங்கிரஸ் இளைஞர்கள் கருதுகின்றனர்.

1937-ஆம் ஆண்டில் முதன் முதலாக நான் சென்னை மாவட்டக் காங்கிரசின் செயலாளனாகப் பதவி ஏற்றபோது, அப்போது தமிழ்நாடு காங்கிரசின் செயலாளராக இருந்த திரு.கு. காமராசருடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றேன். அந்நாளிலும் தமிழ்நாடு காங்கிரசிலே ‘கோஷ்டி அரசியல்’ சிறிதளவு இருந்து வந்தது, ஆம்; பொது மக்களின் கவனத்தைக் கவராத நிலையிலே! திரு. கு.கமாராசர், திரு.எஸ்.

சத்தியமூர்த்தி ஐயர் தலைமையில் இயங்கிய கோஷ்டியில் மிகுந்த செல்வாக்கு பெற்று விளங்கினார். சென்னை மாவட்ட அளவில் நானும் ஐயர் கோஷ்டியில்தான் கலந்திருந்தேன். கோஷ்டி அரசியல் காரணமாக நானும் காமராசரும் ஒரே தலைவரைப் பின்பற்றும் நண்பர்களானோம்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலிலே கோஷ்டி ரீதியில் போட்டி ஏற்பட்டது. ராஜாஜி அவர்கள் கோஷ்டி அரசியலுக்கு அப்பாற்பட்டவராக — அதாவது, இருவேறு கோஷ்டியினரும் விரும்பத்தக்கவராக இருந்தார் என்றாலும், தவிர்க்க முடியாத வகையில் 1940-இல் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தேர்தலிலே திரு. சத்தியமூர்த்தி ஐயருக்கு எதிரான கோஷ்டியை ஆதரிக்க வேண்டியவரானார். ராஜாஜியின் ஆதரவோடு கோவை சி.பி. சுப்பையாவும், திரு. எஸ்.சத்தியமூர்த்தி ஐயரவர்கள் ஆதரவோடு திரு. கு.காமராசரும் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டனர். தியாகராய நகரிலுள்ள இந்திப் பிரச்சார சபையிலே கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் உறுப்பினர் கூட்டத்திலே தலைவர் தேர்தல் நடைபெற்றது. காமராசருக்கு ஆதரவாக வேலை செய்த கோஷ்டியிலே நானும் கலந்திருந்தேன்.

தேர்தலுக்கு முன்னாள் இரவில் திரு.கி. சடகோபன் அவர்கள் தண்டையார்பேட்டையிலிருந்த எனது இல்லத்திற்கு வந்து, என்னுடைய நெருங்கிய உறவினர் ஒருவர் பெயர், செங்கற்பட்டு மாவட்டத்தின் தமிழ்நாடு காங்கிரஸ் உறுப்பினர் பட்டியலில் இடம் பெற்றிருப்பதாகவும், அந்த உறுப்பினர் திரு. காமராசருக்கு ஆதரவாக வாக்களிக்க நான் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் என்னிடம் கூறினார். அத்துடன் நாமக்கல் கவிஞருக்கும் எனக்குமுள்ள நெருங்கிய நட்பினை உணர்ந்தவராகி, கவிஞருடைய வாக்கையும் திரு. காமராசருக்கு ஆதரவாகத் திருப்ப வேண்டுமென்று என்னை வற்புறுத்தினார். நான் இயற்கையாகவே திரு. காமராசருக்கு ஆதரவாக வேலை செய்து கொண்டிருந்தேன் ஆதலால், என்னைத் தவிர வேறு யாராலும் திருப்ப முடியாதென்று திரு. சடகோபன் கருதிய உறுப்பினர் இருவருடைய ஆதரவைப் பெற பெரு முயற்சி

எடுத்துக் கொண்டேன். எனது உறவினருடைய ஆதரவைப் பெறுவது ஆரம்பத்தில் கொஞ்சம் சிரமமாகத்தான் இருந்தது. அவர் திரு. சத்தியமூர்த்தி கோஷ்டியின் எதிர் கோஷ்டித் தலைவரான திரு. முத்துராமலிங்க முதலியாரின் செல்வாக்கி லிருந்தார். திரு. முதலியாரவர்களாலேயே தமிழ்நாடு காங்கிரஸ் உறுப்பினராக்கப்பட்டவர். ஆயினும், உறவு முறையால் எனது வாக்கைத் தட்ட முடியாதவராகி, திரு. காமராசருக்கு வாக்களிப் பதாக உறுதி கூறினார்.

தலைவர் தேர்தல் நடைபெறுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்புதான் நாமக்கல் கவிஞரைச் சந்தித்தேன். அவர், ராஜாஜி பக்தர்களிலே ஒருவர். அந்த நாளிலும் நான் ராஜாஜி பக்தனாகத் தான் இருந்தேன். ஆயினும், கோவை சி.பி. சுப்பையாவைவிட, திரு. கு. காமராசரிடம் எனக்கு மிகுந்த நம்பிக்கையும் நெருங் கிய நட்புமிருந்ததால், ராஜாஜி பக்திக்குச் சிறிது ஓய்வு கொடுத் துவிட்டு, திரு. காமராசருக்காக வேலை செய்தேன். நாமக்கல் கவிஞரிடம் சிறிது நேரம் வாதாடிய பின்னர், அவர் என் விருப்பப்படி காமராசருக்கு வாக்களிக்க இசைந்தார். தேர்தல் களத்திலே மிகுந்த பரபரப்பு காணப்பட்டது. சி.பி. சுப்பையா வின் பெயரை ராஜாஜி அவர்கள் முன்மொழியச் செய்ய திரு. முத்துராமலிங்க முதலியாரும் அவருடைய கோஷ்டியினரும் முயன்றனர். ஆனால், ராஜாஜி அந்த அளவுக்குக் கோஷ்டி அரசியலிலே இரண்டறக் கலந்துவிட விரும்பாதவராகி, மறுத்து விட்டார். ஆயினும் திரு.சி.பி. சுப்பையாவுக்கு வாக்குகள் சேகரிப்பதிலே அதிக ஆர்வங்காட்டினார். இந்தத் தேர்தலிலே இரண்டு வாக்குகள் அதிகமாகப் பெற்று திரு. காமராசர் வெற்றி யடைந்தார். தேர்தல் முடிவு தெரிந்தபோது நாமக்கல் கவிஞர் என்னிடம் ஓடிவந்து, ''நான் ஒருவன் உங்களால் மனமாற்றம டைந்து காமராசருக்கு ஓட்டளித்ததால் தான் அவர் வெற்றி பெற்றார். இல்லாவிட்டால் ஓட்டுகள் சமமாகியிருக்கும்'' என் றார்.

என்னால் மனமாற்றமடைந்த மற்றொருவரான என் உறவி னரும் தமது மனமாற்றத்தால்தான் திரு. காமராசர் வெற்றி யடைந்தார் என்று என்னிடம் கூறிப் பெருமிதமடைந்தார்.

நானும் கடைசி நேரத்தில் எதிரியின் கோட்டையிலே இரண்டு வாக்காளர்களை மனமாற்றமடையச் செய்ததால்தான் காமராசர் வெற்றியடைந்தார் என்று எண்ணி மகிழ்ச்சியடைந்தேன். திரு. காமராசருடைய சகாக்களான திரு. சடகோபனும், திரு. நாகராசனும் தேர்தல் முடிவு தெரிந்ததும் என்னைப் பாராட்டினர். ஆனால், அன்று நான் செய்த ஒரு சிறிய காரியத்தால் பிற்காலத்தில் இந்தியாவின் அரசியலிலே நானே விரும்பாத பல மாறுதல்கள் ஏற்படப் போகிறதென்றோ, என்னால் ஆதரிக்கப்படுபவர் என்னுடைய வளர்ச்சிக்கு எதிரியாக இருக்கப் போகிறார் என்றோ நான் எண்ணிப் பார்க்கவில்லை.

1940-இல் முதன் முதலில் த.நா.கா. கமிட்டித் தலைவராக சந்தர்ப்ப நிர்ப்பந்தம் காரணமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. காமராசர், அதன்பின், தமது திறமையால் 1954 வரை — தொடர்ந்து 16 ஆண்டு காலம் — அந்தப் பதவியில் அழுத்தமாக அமர்ந்து கொண்டு விட்டார். அதன்பின் இன்று வரையிலும் கூட அந்தப் பதவி அவரது செல்வாக்கில்தான் சிக்கியிருக்கிறது. சுருங்கச் சொன்னால், நாட்டின் பொதுச் சொத்தான தமிழ்நாடு காங்கிரஸ் திரு. காமராசரின் சொந்தச் சொத்தாகி விட்டது! தமிழ்நாடு காங்கிரசுக்கு இப்படி ஒரு விபத்து ஏற்படுமென்று 1940-இல் காமராசரை ஆதரித்தவர்களில் ஒருவர்கூட எண்ணிப் பார்த்திருக்க முடியாதல்லவா!

திரு. கு.காமராசர் வெற்றி பெற்றதால், தமிழ்நாடு முழுவதிலுமிருந்த காங்கிரஸ் ஊழியர்களில் மிகப் பெரும்பாலோர் மகிழ்ச்சியடைந்தார்கள். திரு. சத்தியமூர்த்தி ஐயர் தவிர, காங்கிரசிலிருந்த முன்னணித் தலைவர்களெல்லாம் திரு. காமராசருக்கு எதிராகவே வாக்களித்தனர். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக அவர் வருவதனை அவர்கள் விரும்பவில்லை. தொண்டர்களின் பலத்தால்தான் திரு. காமராசர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரானார்.

திரு.கு.காமராசர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், உண்மையான தலைவராகச் செயல்பட்டவர் திரு. சத்தியமூர்த்தி ஐயர்தான். காங்கிரஸ் விதிப்படி

திரு.சத்தியமூர்த்தி ஐயரைத் தமிழ்நாடு காங்கிரஸ் செயலாளராக் நியமித்தார் திரு.கு. காமராசர். அதனால் செயலாளரான திரு. சத்தியமூர்த்தி ஐயரே தலைவருக்குரிய அதிகாரத்தையும் பயன்படுத்திச் செயல்பட்டார். திரு.கு. காமராசர் பெயரளவில் தான் தலைவராக இருந்தார். தலைவர் பதவிக்குத் தாம் போட்டி யிட்டால் வெற்றிபெற முடியாதென ஐயர் உணர்ந்ததாலேயே திரு. காமராசரை நிறுத்தி வைத்துத் தலைவர் பதவியைத் தனது செல்வாக்கின்கீழ்க் கொண்டு வந்தார். ஆனால், அவருடைய மரணத்திற்குப்பின் திரு. காமராசர், சுதந்தரமாகச் செயல்பட் டார். ஆம்; கொம்பைச் சுற்றிய கொடியாக இருந்த நிலை மாறி, கொடியே கொம்பாகிவிட்ட நிலைபோலச் செயல்பட்டார். 1940-இல் நான் எவ்வளவு ஆர்வத்தோடும் நம்பிக்கையோடும் திரு. காமராசர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராவதை விரும்பி னேனோ அதற்கு முற்றிலும் மாறான அனுபவத்தையே பிற்கா லத்தில் அடைந்தேன்! ஆயினும், அன்றைய நிலையில் திரு. காமராசரை ஆதரித்தது என் மனச்சாட்சிப்படி நான் நடந்து கொண்டதாகும். எந்த நாளிலுமே வலுத்தவர்களுக்கும் இளைத் தவர்களுக்குமிடையே போட்டி ஏற்பட்டால், நான் இளைத்தவர் பக்கமே இருந்து வந்திருக்கிறேன். திரு. காமராசர், பெருந்தலை வர்களால் நிறுத்தப்பட்ட கோவை திரு. சுப்பையாவை எதிர்த்து ஒரு சாதாரணத் தொண்டராக — தொண்டர் குழாத்தின் தோழரா கப் போட்டியிட்டாராதலால், நான் அவருடைய வெற்றிக்காக வேலை செய்தேன்.

திரு.கு.காமராசர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்ட பின்னர், சென்னை நகரிலே பல பொதுக் கூட்டங்களில் அவரைப் பேச வைக்க சென்னை ஜில்லா காங்கி ரஸ் செயலாளன் என்ற முறையில் நான் முயன்றேன். ஆம்; அவருக்குப் பெருமை தேட வேண்டுமென்பதற்காகவே! ஆனால், அதிலே நான் வெற்றி பெறவில்லை. அந்த நாளில் திரு.கு. காமராசர், மிகவும் அடக்கமானவர்; பெருமை விரும் பாதவர்; மேடைப் பேச்சை அடியோடு வெறுத்தவர். அவர் தலைவரானதும் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் இராயப்பேட்டை காங்கிரஸ் திடலில் ஒரு பொதுக்கூட்

டத்திற்கு ஏற்பாடு செய்தேன். அதற்குத் தலைமை தாங்க மிகவும் சிரமப்பட்டு திரு. காமராசருடைய இசைவைப் பெற்றேன். இராஜாஜியும், சத்தியமூர்த்தியும் அந்தக் கூட்டத்தில் பேசினார்கள். தலைமை வகித்த திரு. காமராசர் 'ராஜாஜி பேசுவார்', 'ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயர் பேசுவார்' என்று சொன்னதைத் தவிர, வேறொரு வார்த்தையும் சொல்லவில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் முதன் முதலாக அவர் தலைமை வகித்த மிகப் பெரிய பொதுக்கூட்டம் அது!

கூட்டங்களுக்கு வருவதாக இசைவு தந்து, வரத் தவறிவிடுவார். காரணம், பொதுக்கூட்டத்தில் பேச விரும்பாமைதான்! வந்து பேசினாலும், ''மகாத்மா காந்தி நம்மை எலாம் ஒத்துமையா இருக்கச் சொன்னார்; கதர் கட்டச் சொன்னார்'' என்பதற்கு அதிகமாகப் பேசமாட்டார். நானும் அவருடைய வேறு சகாக்கள் சிலரும், அவரை ஆற்றல் மிக்க பேச்சாளராகச் செய்துவிட வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை காட்டினோம். ஆனால், அப்போது நாங்கள் அதிலே வெற்றி பெறவில்லை. இப்போது உண்மையிலேயே திரு. காமராசர் மிகச் சிறந்த பேச்சாளராக விளங்குகிறார். அவருடைய பேச்சுத் தமிழிலே குறையிருக்கலாம். ஆனால், பேச்சு மேடையிலேயும் தாம் ஒரு சிறந்த ராஜதந்திரி என்பதை வெளிப்படுத்தி வருகிறார். அதில் எனக்கு மகிழ்ச்சிதான்!

துன்பமயமான காலம்!

1940 முதல் 1944 வரை உள்ள ஐந்தாண்டுக் காலத்தில் எனது சொந்த வாழ்க்கை துன்பமயமாக இருந்தது. பொதுவாழ்க்கையும் போராட்ட மயமாக அமைந்தது. எப்பொழுதுமே என் வாழ்க்கை இப்படிப்பட்டதுதான். அது இறைவன் தந்துவிட்ட 'வரம்!' ஆனால், மேலே சொன்ன காலகட்டத்திலே துன்ப சாகரத்தில் மூழ்கிக் கரையேற இயலாமல் கஷ்டப்பட்டேன் என்று சொல்ல வேண்டும். இதற்கு முன்னும் பின்னும் இந்த மாதிரியான துன்பச் சூழ்நிலை எனக்கு ஏற்பட்டதே இல்லை.

1937 மே மாதத்தில் எனக்குத் திருமணம் நடந்த பின்னர் எனது இல்வாழ்க்கையில் துன்ப இருள் சூழ்ந்தது. வருவாயில்லாத நிலையிலே திருமணம் செய்து கொண்டவனுக்கு வாழ்க்கை வேறு எப்படி இருக்கும்? திருமணத்திற்கு முன்பு என் மனைவி என் குடும்பத்தின் பொருளாதார நிலைபற்றி அறியாதவளாக இருந்தாள். அதனால், நான் சுகஜீவனம் நடத்துவதாக அவள் தவறாக மதிப்பிட்டு, தானே மனமார விரும்பி என்னை மணந்து கொண்டாள். அத்தை மகன் என்ற உறவு வேறு அவள் கண்களை மயக்கியிருக்க வேண்டும். ஆனால், திருமணமாகி வாழ்க்கை தொடங்கிய ஆரம்ப நாட்களிலேயே அடிக்கடி பசியையும் பட்டினியையும் அவள் சந்திக்கலானாள். தான் பிறந்த நாள்தொட்டு என்னை மணந்த நாள்வரை அவள் பசியை ருசி பார்த்தறியாதவள். செல்வச் செருக்கென்னும் 'பூங்கா'விலே விளையாடி வந்தவள். வைரப் பணிபூண்டு வளர்ந்தவள், அப்படிப்பட்டவள், தான் புகுந்த வீட்டிலே வறுமையின் கொடுமையை — புகுந்த ஆரம்ப நாட்களிலேயே அனுபவிக்க நேர்ந்ததென்றால், அதை அவளால் எப்படித் தாங்கிக் கொள்ள இயலும்?

இந்த நிலையில் அவளுக்கு மன அதிர்ச்சியைத் தரும் வேறொரு நிகழ்ச்சியும் நேர்ந்துவிட்டது. அவளுடைய

பாட்டியாரிடம் அவள் பெயரால் சுமார் 20,000 ரூபாய் சேர்க்கப் பட்டு இருந்தது என்று ஏற்கனவே கூறியிருக்கிறேன். அந்த ரூபாயையும் அவள் பங்குக்குச் சேர வேண்டிய நகைகள், பித்தளைப் பாத்திரங்கள், ஒரு வீடு (இப்போது நான் குடியிருப் பது) ஆகியவற்றையும் பெறுவதற்கு அவள் பெயரால் சட்ட ரீதியான வழியில் முயற்சிகளை மேற்கொண்டேன். அவளு டைய தாய் மாமன்மார் இருவரும், தமக்கையும், தமையனும் ஒன்று சேர்ந்து கொண்டு அவளுக்குச் சேரவேண்டியவற்றைக் கொடுக்க மறுத்துவிட்டனர். அவற்றைச் சட்ட ரீதியாகப் பெற வழியில்லை. ஆனால், வீட்டை மட்டும் நீதிமன்றத்தின் மூலமாக நான் கைப்பற்ற முடிந்தது. மற்றவற்றையெல்லாம் அவள் இழந் துவிட்டாள். இந்த நிகழ்ச்சி அவளுக்கு அதிர்ச்சியைத் தந்தது. அதன் விளைவாக, மனநோய் பிடித்தவளாகி, எதிர்பாராத வகையில் செவிப் புலனையும் இழந்தாள். அதற்காகத் தரப்பட்ட சிகிச்சையின் விளைவாக அவளுடைய உடல் முழுவதும் புண் மயமாகி விட்டது. கடுமையான இருமல் நோயும் ஏற்பட்டது. இவ்வளவும் திருமணமாகி ஒன்றரையாண்டுக் காலத்திற்குள்! இதனால், அவள் உலக வாழ்க்கையையே வெறுத்தவளாகி, அடிக்கடி தற்கொலை செய்து கொள்வதற்கும் முயன்றாள். இந்த நிலையிலே ஒரு பெண் குழந்தையையும் பெற்றுவிட்டாள். தலைக்குழந்தை ஆதலால், வறுமையையும் மறந்து குழந்தையை மிகுந்த அன்போடு வளர்த்தோம். குழவியின் முக விலாசத்திற் கேற்ப 'சந்திரகாந்தா' எனப் பெயர் சூட்டினேன். ஆனால், பத்தே மாதத்தில் என் தலைச் செல்வி — குலக்கொடி மறைந்து போனாள். இது என் மனைவியை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது. மனப் பிணியும், உடற்பிணியும் ஏககாலத்தில் ஒருவ ருக்கு ஏற்பட்டுவிடுமானால், அதன் கொடுமை எப்படிப்பட்டதா யிருக்குமென்பதை என் மனைவியின் வாயிலாக நான் அறிந் தேன். அவளுடைய நிலைக்கு மிகவும் இரங்கினேன். இந்த நிலையிலும் அவளும் நானும் மனமொத்த தம்பதிகளாகவே வாழ்ந்து வந்தோம்.

மரண பயம் பிடித்துக் கொண்டதால், நான் அவளைப் பிரிந்து ஓரிரு நாட்கள் வெளியூரிலிருப்பதைக்கூட அவள்

விரும்பாதவளானாள். இதனால் என் பொது வாழ்க்கையை நான் விரும்பியபடி நடத்த அவள் தடையாக இருந்தாள்.

என் தலைக் குழந்தையிடம் நான் காட்டிய அன்பு வருணிக்க முடியாதது. எப்பொழுதுமே குழந்தைகளிடம் — யார் பெற்றவையாயினும் — அன்பு காட்டும் இயல்பு எனக் குண்டு. எனக்குப் பிறந்த தலைமகளிடம் நான் அன்பு காட்டிய தில் வியப்பென்ன இருக்கிறது! என் மகளிடம் நான் காட்டி வந்த அன்பைக் கண்ணாரக் கண்டு வந்த என் அன்னையார் அவள் மறைந்தபோது தான் பாடிய ஒப்பாரிப் பாட்டிலே கீழ்வருமாறு வருணித்தார்:

கோடி திரும்பளவும்
உன் பெற்றார்க்குக்
குழந்தைமேல் சிந்தையாச்சே!
சந்து திரும்பளவும்
உன் பெற்றார்க்கு
செல்விமேல் சிந்தையாச்சே!

என் தலைமகளை நோயிலிருந்து மீட்க நான் எடுத்துக் கொண்ட முயற்சியையும், அது வெற்றி பெறாமல் முடிந்த அவலத்தையும் என் அன்னையார் வருணித்தவிதம் வருமாறு:

ஓச வைத்தியன்
ஒருநாளில் தீருமென்றான்
பாடி வைத்தியன்
பஸ்பத்தால் தீருமென்றான்
சூளை வைத்தியன்
சூரணத்தால் தீருமென்றான்
எடப்பாடி வைத்தியன்
எண்ணெயால் தீருமென்றான்
தேவிகோவில் பூசாரி
திருநீற்றால் தீருமென்றான்
மலையாளத்து மாந்திரிகன்
மந்திரத்தால் தீருமென்றான்
ஆகாச மாத்திரையை — நீ
அள்ளியுண்ண நீதியுண்டோ!

இப்படி, என் குடும்ப நிலை சோதனைக்குள்ளாகியிருந்த நேரத்திலேதான் காந்தியடிகள் தனிநபர் சத்தியாக்கிரகத்தைத் துவக்கினார். காங்கிரஸ்காரன் என்ற முறையில் அதில் நான் கலந்துகொள்ள வேண்டியிருந்ததோடு, சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளன் என்ற முறையிலே அந்தப் போராட்டத்தைச் சென்னை மாநகரில் நடத்தி வைக்கும் பொறுப்பையும் ஏற்க வேண்டியவனானேன். யுத்த ஏற்பாடுகளில் பிரிட்டிஷ் அரசோடு மக்கள் ஒத்துழைக்கக் கூடாது என்று பிரச்சாரம் செய்வதுதான் சத்தியாக்கிரகப் போர்முறையாக இருந்தது. அத்தகைய பிரச்சாரம் சிறைத் தண்டனைக்குரிய குற்றமாகவும் செய்யப்பட்டது. ஆம்; நாட்டில் ''அவசர நிலைமை'' பிரகடனம் செய்யப்பட்டிருந்ததால்!

என் குடும்பம் இருந்த அவல நிலையில் நான் சிறை செல்வதைப் பற்றி நினைத்துக்கூடப் பார்க்க முடியாதவனாக இருந்தேன். நான் பக்கத்திலேயிருப்பது என் மனைவிக்கு ஆறுதல் தருவதாக இருந்தது. அதனையும் அந்த துரதிருஷ்டசாலியிடமிருந்து பறித்துவிட என் மனம் துணியவில்லை. நல்ல வேளையாக, ''காங்கிரஸ் கமிட்டிகளின் நிர்வாகிகளாக இருப்பவர்கள் சிறை புகுவதற்கு அவசரப்படக் கூடாது; மற்றவர்களை அனுப்பி வைப்பதில்தான் அக்கறை காட்ட வேண்டும்'' என்று காந்தியடிகள் அறிவித்திருந்தார். அதனால் நான் சிறை புகுவது பற்றிய சிந்தனையின்றி, சத்தியாக்கிரகப் போரை நடத்தி வைப்பதில் கருத்து செலுத்தினேன்.

1940 அக்டோபர் 17-ஆம் நாளிலே தனிநபர் சத்தியாக்கிரகப் போர் ஆரம்பமானது. காந்தியடிகளின் ஆணைப்படி ஆச்சாரிய வினோபா பாவே முதல் நபராகச் சட்டத்தை மீறிச் சிறை சென்றார். இந்தப் போர் முறையை அப்போது காங்கிரசுக்கு வெளியே இருந்த நேதாஜி போன்றவர்கள் குறைகூறினர். திரு.எஸ். சீனிவாச ஐயங்கார் (காங்கிரஸ் மகாசபையின் முன்னாள் தலைவர்) தனிநபர் சத்தியாக்கிரகத்தை 'மாப்பிள்ளைச் சத்தியாக்கிரகம்' என்று நையாண்டி செய்தார். சத்தியாக்கிரகத்தில் ஈடுபடும் தனி நபருக்கு ஏராளமான மாலைகள் அணிவித்து, வாழ்த்துக்கூறி வழியனுப்புவது வழக்கமாக இருந்த

தால், ''மாப்பிள்ளைச் சத்தியாக்கிரகம்'' என்றார் ஐயங்கார். உண்மையில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர்களிலேயும் சிலர் விளம்பரத்தையே பெரிதாகக் கருதி அதற்கான ஏற்பாடுகளைத் தங்கள் செலவில் தாங்களே செய்து கொண்டனர். அவர்களை நினைத்துதான் ஐயங்கார் கேலி பேசினார். தமிழ்நாட்டிலே ராஜாஜி, நாவலர் சத்தியமூர்த்தி ஐயர் ஆகிய பெருந்தலைவர்கள் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறை புகுந்தனர்.

இரண்டாவது உலகப் பெரும் போர் ஆரம்பமான பின்னர் 'தடுப்புக் காவல் சட்டம்' என்ற ஒரு புதுமையான சட்டத்தை இந்திய அரசு பிறப்பித்திருந்தது. அதன்படி, யாரையும் — அவர் எவ்வளவு அந்தஸ்துடையவரானாலும் — தான் விரும்பும் காலம் வரை விசாரணையின்றிச் சிறையில் அடைத்து வைத்திருக்க இந்திய அரசு அதிகாரம் பெற்றிருந்தது. இந்திய சமஸ்தான மன்னர்களில் யாரேனும் தனக்கு எதிரியாக மாறி விடக் கூடும் என்ற அச்சத்தின் பேரில் அப்படிப்பட்டவர்களைக் காவலில் வைப்பதற்காகவே அரசு இச்சட்டத்தைப் பிறப்பித்த தாக அந்நாளில் சொல்லப்பட்டது. விந்தையென்னவென்றால், இந்தச் சட்டப்படி காவல் கைதியாகிவிட வேண்டுமென்ற ஆசை காங்கிரஸ் தலைவர்களுக்கு ஏற்பட்டதுதான். காவல் கைதியாக இருப்பது பெரும் கௌரவம் என்று கருதப்பட்டது. ஆனால், பிரிட்டிஷ் ஆட்சி காங்கிரஸ் பெருந்தலைவர்களில் யாரையும் விசாரணையின்றிக் காவலில் வைக்க முன்வரவில்லை. பண்டித ஜவகர்லால் நேருவைக்கூட நீதிமன்றத்தில் நிறுத்தி, விசாரணை நடத்தி நான்காண்டுக் காலத் தண்டனைக்கு உட்படுத்தியது.

''அரசுடன் ஒத்துழைக்காதீர்கள்; வேலையிலிருந்து விலகி விடுங்கள்'' என்பதாக உயர்தர அதிகாரிகளுக்குக் கடிதங்கள் எழுதியதற்காக ராஜாஜிக்கு ஓராண்டுக் காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. யுத்த நிதிக்குப் பணம் கொடுக்க வேண்டாமென்று மக்கள் மத்தியில் பேசியதற்காக திரு.எஸ். சத்தியமூர்த்தி ஐயரவர்கள் ஒரு வருட சிறைத் தண்டனை பெற்றார். ஆனால், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த திரு. காமராசர் மட்டும் பாதுகாப்புக் கைதியாகச் சிறைபிடிக்கப் பட்டார். இது தலைவர்கள் வட்டாரத்திலே பெருத்த வியப்பைத் தந்தது.

சத்தியாக்கிரகிகள் பெயர்ப் பட்டியலைக் காந்தியடிகளுக்கு அனுப்பி அவரது அனுமதியைப் பெற்ற பிறகே அந்தப் பட்டியலில் இடம் பெற்றவர்கள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர். இந்த முறைப்படி, சத்தியாக்கிரகிகள் பெயர்ப் பட்டியலைக் காந்தியடிகளிடம் காட்டி, அவரது அனுமதி பெற மாகாண காங்கிரஸ் தலைவர்கள் வார்தாவுக்குச் செல்வது வழக்கமாக இருந்தது. இப்படிச் செல்வது சட்ட விரோதமான செயலன்று. இதற்காக வேறு மாகாண காங்கிரஸ் நிர்வாகிகளில் எவரும் தடுப்புக் காவல் சட்டப்படி சிறையில் வைக்கப்பட வில்லை. இந்த நியதிக்கு மாறாக, சத்தியாக்கிரகிகள் பட்டியலை எடுத்துக் கொண்டு காந்தியடிகளைக் காண ரயிலில் சென்று கொண்டிருந்தபோது, வழியில் கூடூர் ரயில் நிலையத்தில் த.நா.கா. தலைவர் காமராசர் கைது செய்யப்பட்டு, பாதுகாப்புக் கைதியாக வேலூர் சிறையில் வைக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சியால் திரு. காமராசரின் மதிப்பு சாதாரண மக்கள் மத்தியில் உயர்ந்ததென்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த நிகழ்ச்சி பற்றி ''காமராஜ்'' என்னும் தமது நூலில் திரு.டி.எஸ். சொக்கலிங்கம் அவர்கள் கூறியிருப்பது வருமாறு:

> ''... *அச்சமயம் அவரைக் கைது செய்ததற்குக் காரணம் பின்னால்தான் வெளியாயிற்று. சென்னையில் ஹோப் என்பவர் கவர்னராயிருந்தார். யுத்த நிதிக்கு உதவி செய்வதற்காகத் தமிழ்நாட்டில் அவர் சுற்றுப்பயணம் செய்தார். அவருடைய சுற்றுப் பிரயாணத்திற்கு முன்பாக காமராஜ் எல்லா இடங்களுக்கும் சென்று யுத்த நிதிக்குப் பணம் கொடுக்கக் கூடாதென்று சொன்னார். அதன் பயனாக கவர்னர் ஹோப்பினால் யுத்த நிதிக்கு அதிகம் வசூல் செய்ய முடியவில்லை. கவர்னர் காரணத்தை விசாரித்தார். காரணம் தெரிந்ததும் மகா கோபங்கொண்டார். காமராசைக் காவலில் வைக்கும்படி உத்தரவிட்டார். இந்த ரகசியத்தை அக்காலத்தில் போலீஸ் அதிகாரியாக இருந்த ஸ்ரீ பாத்ரோ பின்னால் தெரிவித்தார்.*''

வேறு எந்தப் பெருந்தலைவருக்கும் கிடைக்காத புகழ்மிக்க வாய்ப்பை திரு. காமராசர் அடைந்தது பற்றி அந்நாளில் அரசியல் வட்டாரத்தில் பலவிதமாகப் பேசப்பட்டதால், அதற்கு ஏதேனும் ஒரு சமாதானம் சொல்லியாக வேண்டிய கட்டாயம் காமராசர் பக்தரான திரு.டி.எஸ். சொக்கலிங்கத்திற்கு ஏற்பட்டு விட்டது. அதனால், எதையோ சொல்லி வைத்திருக்கிறார்.

திரு. நாகராசன் என்பவர், திரு. காமராசரின் அரசியல் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்த அந்தரங்க நண்பர்களிலே ஒருவராவார். அவர் எல்லா வகையிலும் 'திறமை' பெற்றவர். திரு.காமராசர் தடுப்புக்காவல் சட்டப்படி கைதியான பெருமைக்கு திரு. நாகராசன் உரிமை கொண்டாடிக் கொண்டிருந்தார். காங்கிரஸ்காரரான அவருக்குக் காவல் துறை உயர்தர அதிகாரிகளிடத்திலும் அதிக செல்வாக்கிருந்தது. இதைப் பற்றி அதிகமாக விவரிக்க நான் விரும்பவில்லை.

சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்த நிலையில் திரு.எஸ். சத்தியமூர்த்தி ஐயரவர்கள் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு, ஓராண்டுக் காலச் சிறைத் தண்டனை பெற்றார். அவரைத் தண்டித்த பிரதம மாகாண மாஜிஸ்திரேட் திரு. அப்பாஸ் அலிகான் என்பவர் ஐயருடன் நெருங்கிப் பழகியவர். இவர்களிருவரும் சென்னை ''காஸ்மா பாலிடன் கிளப்'' நண்பர்கள். ஐயர் சிறைப்படுவதற்கு முன்னால் மாலையில் வழக்கம்போல அவர்களிருவரும் சென்னை காஸ்மாபாலிடன் கிளப்பில் சந்தித்தனர். திரு. அப்பாஸ் அலிகான் அந்தக் காலத்தில் தேசத் தலைவர்களிடம் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். தனி நபர் சத்தியாக்கிரகத்திலீடுபட்டு ராஜாஜி கைதியானபோது அவரது வழக்கை விசாரித்த அப்பாஸ் அலிகான், குருக்ஷேத்திர பூமியில் பகவத்கீதை உபதேசித்த கண்ண பெருமான் நிலையில் ராஜாஜியையும், கைசோர்ந்து, மெய் சோர்ந்து கிடந்த அர்ச்சுனன் நிலையில் தம்மையும் வருணித்து, ராஜாஜியைத் தண்டிக்க நேர்ந்ததற்கு வருத்தந் தெரிவித்துக் கொண்டார். ராஜாஜி தண்டிக்கப்பட்ட ஒரு வாரத்திற்குள் திரு. சத்தியமூர்த்தி திரு. அப்பாஸ் அலிகானிடம் தண்டனை பெற்றார்.

ஐயர் சத்தியாக்கிரகம் செய்வதற்கு முதல் நாளிரவில் தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்திலே காங்கிரஸ் கமிட்டி யின் சார்பில் நான் அவருக்குப் பிரிவுபசாரக் கூட்டம் நடத்தி னேன். அந்தக் கூட்டத்தில் பேசுவதற்கு நான் ஒலிபெருக்கி முன்பு நின்றபோது, மேடையிலிருந்த ஐயரவர்கள் என்னைப் பார்த்து,

''கிராமணி! இன்றைக்கு நான் கேட்கும் உன்னுடைய பேச்சு அடுத்த ஆறு மாத காலத்திற்கு என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும்''

என்று கூறினார். ஐயருக்கு என் பேச்சைக் கேட்பதிலே மிகுந்த விருப்பமுண்டு. அதிலும் அவரைப் புகழ்ந்து பேசுவதற்கென்றே ஒலிபெருக்கி முன் வந்து நின்றேனாதலால், நான் வழங்கும் புகழுரை ஆறுமாத காலத்திற்குத் தாங்க வேண்டுமென்று கூறி னார். இதனால் மறுநாள் பிரதம மாகாண மாஜிஸ்திரேட் தமக்கு விதிக்கப்போவது ஆறு மாதச் சிறைத் தண்டனைதான் என்ப தைத் தான் முன்கூட்டித் தெரிந்து கொண்டவர்போலக் காட்டிக் கொண்டார்.

ஐயர் வெளியிட்ட இந்தக் கருத்து காலைப் பத்திரிகைகளில் — அவர் சத்தியாக்கிரகம் செய்வதற்கு முன்பே — வெளியாகி விட்டது. ஐயர் எதிர்பார்த்ததற்கு மாறாக, பிரதம மாகாண மாஜிஸ்திரேட் அவருக்கு ஒரு வருடக் கடுங்காவல் தண்டனை விதித்துவிட்டார். ஐயரின் வழக்கு முடிந்து, அவரது வழக்கைக் கவனிக்கக் குழுமியிருந்த காங்கிரஸ்காரர்கள் கோர்ட்டிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தபோது, பிரதம மாகாண மாஜிஸ் திரேட் தமது ஆசனத்தருகே என்னை அழைத்து,

''இந்த துரதிருஷ்ட பிராமணர், நேற்று மாலைக் கூட்டத்தில், தனக்கு நான் விதிக்கப் போவது ஆறுமாத தண்டனைதான் என்பதனைச் சூசகமாகச் சொல்லவில்லை யானால், நான் ஆறு மாதந்தான் விதித்திருப்பேன். உளறிக் கொட்டி ஒரு வருட தண்டனையைப் பெற்றுவிட்டார்''

என்றார். திரு. அப்பாஸ் அலி அவர்கள், என் மாமனார்

எம்.ஆர். சிவகாளத்திப் பிள்ளைக்கு ஆருயிர்த் தோழர். இருவருடைய குடும்பங்களிடையேயும் நெருங்கிய நட்புண்டு. அதனால் அவர் என்னிடமும் நெருங்கிப் பேசுவதுண்டு.

சென்னை நகரில் தனி நபர் சத்தியாக்கிரகம் நாள்தோறும் (விடுமுறை நாட்கள் தவிர) ஏதேனும் ஒரு பகுதியில் நடந்த வண்ணமிருக்கும். சென்னை ஜில்லா காங்கிரஸ் செயலாளன் என்ற முறையில், சத்தியாக்கிரகம் செய்பவருக்கு மாலை அணி வித்து அவரை வழி அனுப்புவது எனது கடமையாக இருந்தது. சத்தியாக்கிரகம் முடிந்து, சத்தியாக்கிரகி கைதியானதுமே, சில மணி நேரங்களில் எழும்பூர் பிரதம மாகாண மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணை நடத்தப்பட்டு, அன்றே தண்டனையும் விதிக்கப்பட்டுவிடும். சத்தியாக்கிரகிகள் எதிர் வழக்காடாமல் குற்றத்தை ஒப்புக் கொள்ளும் வழக்கம் இருந்ததால், விசாரணை ஒரு மணி நேரத்திற்குமேல் நீடிப்பதில்லை. சத்தியாக்கிரகிகளின் வழக்குகளைக் கவனிப்பதற்காக நான் நாள்தோறும் எழும்பூர் பிரதம மாகாண மாஜிஸ்திரேட் கோர்ட்டுக்குச் செல்வதுண்டு.

ஊதியம் எதுவும் பெறாத முழு நேர ஊழியனாக அந்த நாட்களில் காங்கிரசுக்காக உழைத்தேன். ஊன்மறந்து, ஊண் மறந்து, உடல் மறந்து, குடும்ப நலத்தை மறந்து, தனி நபர் சத்தியாக்கிரகக் காலத்திலே காங்கிரசுக்காக நான் உழைத்ததை காங்கிரஸ்காரர்கள் மறந்து போயிருக்கலாம். ஆனால், என் மனம் மறக்காதல்லவா!

அகதிகள் வரவேற்பு!

தனி நபர் சத்தியக்கிரகம் நடந்த காலத்திலேயே பர்மா அகதிகள் தமிழ்நாட்டிற்கு வந்து கொண்டிருந்தனர். அவர்கள் எல்லோரும் அநேகமாக தமிழர்களாகவே இருந்தனர். ஜப்பான் பர்மா மீது படை எடுத்ததன் விளைவாகவே பர்மா வாழ் தமிழர்கள் அகதிகளாகித் தமிழகம் வந்தனர். அவர்களை வரவேற்று, அவர்களுக்குப் புனர்வாழ்வு தருவதற்கென்று அப் போது சென்னை மாநகராட்சி மேயராக இருந்த திரு வி. சக்கரை செட்டியார் தலைமையில் ஒரு குழு அமைக்கப் பெற்றிருந்தது.

நான் அந்தக் குழுவின் செயலாளர்களில் ஒருவன். பர்மா அகதிகள் அரக்கான் வழியாக, கால்கடுக்க நடந்து கல்கத்தாவை அடைந்து அங்கிருந்து நிவாரணக் கமிட்டியின் உதவியால் ரயில் மார்க்கமாகச் சென்னை சென்டிரல் ஸ்டேஷனை வந்தடைவார்கள். அங்கு ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் என் சக காங்கிரஸ்காரர்களுடன் காத்திருந்து, அவர்களை வரவேற்பேன். குற்றுயிரும் குலையுயிருமாக என் தமிழினத்து அகதிகள் கதறியழுத வண்ணம் ரயிலைவிட்டு இறங்கிய காட்சிகளைக் காணும் போதெல்லாம் யானும் கண் கலங்குவேன். இந்த அவலக் காட்சியை அன்றாடம் கண்டு கண்ணீர் உகுக்கும் கஷ்டத்தைப் பல மாதங்கள் அனுபவித்துக் கொண்டிருந்தேன். காலதேவனின் அடிச்சுவடுகளிலே மறைந்து போய்விட்ட அந்தக் கஷ்டங்களைத் திரும்பவும் நினைத்துப் பார்த்து இங்கே வருணிக்க நான் விரும்பவில்லை.

தனிநபர் சத்தியாக்கிரகம் சம்பந்தப்பட்ட பணி ஒருபுறமும், பர்மா அகதிகளை வரவேற்கும் பணி இன்னொருபுறமும் என்னை நிர்ப்பந்தித்துக் கொண்டிருக்கையிலே, ஊர்க்காவல் பணியிலும் பங்கு கொள்ளக் கடமைப்பட்டிருந்தேன். எந்த நேரத்திலும் ஜப்பான் விமானங்களோ, ஜெர்மன் விமானங்களோ சென்னை நகரைத் தாக்கக் கூடும் என்ற அச்சத்தால் இரண்டாவது உலகப் பெரும்போர் தொடங்கிய நாள்தொட்டே சென்னை நகர மக்கள் குடும்பம் குடும்பமாக நகரைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர். அவர்களெல்லாம் தத்தம் உடைமைகளை அப்படி அப்படியே போட்டுவிட்டு வீட்டைப் பூட்டிவிட்டு வெளியேறி விட்டனர். அப்படி வெளியேறியவர்களின் சொத்துகளைப் பாதுகாப்பதற்காக காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் 'ஊர்க்காவல் சங்கம்' நிறுவப்பட்டிருந்தது. அதிலேயும் நான் சென்னை நகரச் செயலாளனாக இருந்தேன்.

அரசின் போக்கு

தனி நபர் சத்தியாக்கிரகம் நாடு முழுவதிலும் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இடையில் அரசினுடைய போக்கில் ஒரு மாறுதல் ஏற்பட்டது — அதாவது, மாநிலங்களின் தலைநகரங்

களில் தவிர மற்ற ஊர்களில் சட்டத்தை மீறி சத்தியாக்கிரகம் செய்பவர்களைக் கைது செய்வதில்லை என்று அரசு முடிவெடுத் தது. பாவம்! தேசபக்தியுடைய சத்தியாக்கிரகிகள் தாங்கள் கைதியாகித் தண்டிக்கப்படுவதை எதிர்பார்த்து சத்தியாக்கிரகத் தில் ஈடுபட்டார்கள். கைது செய்யப்படாததனால், சத்தியாக்கிர கம் முடிந்ததும் அவர்கள் பழையபடி வீடு திரும்ப வேண்டி ஏற்பட்டது. இது, சத்தியாக்கிரகத்தைக் கேலிக் கூத்தாக்கிவிட் டது! பிரிட்டிஷ் அரசு சத்தியாக்கிரகிகளிடம் விளையாட ஆரம் பித்தது. காந்தியடிகள், இதுபற்றி நன்கு யோசித்து 'டில்லி சலோ' என்னும் புதிய கோஷத்தை எழுப்பினார். போலீசாரால் கைது செய்யப்படாத சத்தியாக்கிரகிகள் வீடு திரும்பக் கூடா தென்றும், சத்தியாக்கிரகம் செய்த இடத்திலிருந்தே டில்லியை நோக்கிக் கால்நடை யாத்திரை தொடங்க வேண்டுமென்றும் ஆணையிட்டார். ஆனால், வேறு மாநிலத்தவர் நிலை எதுவாயி னும், பாரதத்தின் தென் கோடியிலுள்ள கன்னியாகுமரி வரை வாழ்கின்ற தமிழ்நாட்டவருக்கு டில்லி நோக்கி நடந்து செல்வது சாத்தியமாக இல்லை.

முன்னணியிலிருந்த 'அரசியல் தலைவர்கள்' என்போர் விஷயத்தில் அரசு வேறுவிதமாக நடந்தது. அவர்களைச் சிறை பிடிக்க அது தவறவில்லை. ஏழைத் தொண்டர்கள்தான் அரசால் அலட்சியப்படுத்தப்பட்டனர். அவர்களிலே பலர், தங்களுக் குள்ள அப்பழுக்கற்ற தேசபக்தி காரணமாகத் தத்தம் ஊரிலி ருந்து டில்லி நோக்கி யாத்திரை புறப்பட்டனர். தெற்கு மாவட் டங்களிலுள்ளவர்கள் சென்னை நகரத்தின் வழியாகத்தான் டில்லிக்குச் செல்ல வேண்டும். ஆனால், சென்னை நகரம் வந்ததும் அதற்கு மேலே வடக்கு நோக்கி நடைபோடுவதிலுள்ள இன்னல்களை உணர்ந்தனர். அவர்கள் தமிழைத் தவிர வேறு மொழி எதையும் அறியாதவர்களாக இருந்தனர். அதனால் கால்நடையாக வேற்று மொழிப் பிரதேசங்களிலே யாத்திரை செய்து டில்லியை அடைவது அவர்களால் நினைத்துப் பார்க்கக் கூட முடியாததாக இருந்தது. அதனால், டில்லியை நினைத்துப் புறப்பட்டு, இடைவழியில் சென்னை நகரில் கால் வைத்ததோடு திருப்தி அடைந்து சொந்த ஊர்களுக்குத் திரும்பினர்.

தவறு செய்தேன்!

இந்த நேரத்தில் நான் ஒரு யுக்தி செய்து அரசினரின் முதுகுக்கு மண் காட்டினேன். அரசின் முடிவு வெளியூர்களி லிருந்து வந்து சென்னை நகரில் சத்தியாக்கிரகம் செய்பவர்க ளைக் கைது செய்வதில்லை என்பதுதான். மற்றப்படி, சத்தியாக் கிரகத்தில் ஈடுபடும் சென்னை நகர வாசிகளை — அவர்கள் சாதாரணத் தொண்டர்களாயினும் — போலீசார் கைது செய்து வழக்கு நடத்தித் தண்டனைக்குள்ளாக்கினர். அதனால், வெளி யூரிலிருந்து சென்னை நகர் வந்தடைந்த ''டில்லி யாத்திரை'' சத்தியாக்கிரகிகளை — அவர்கள் விருப்பத்தைப் பெற்று — ''சென்னை நகர வாசிகளா''கச் செய்து அவர்களைச் சத்தியாக்கி ரகத்தில் ஈடுபடுத்தினேன். ஒவ்வொரு சத்தியாக்கிரகியும் சென்னை நகரில் ஒவ்வொரு வீட்டு விலாசத்தைப் போலீசாரிடம் கூறும்படி செய்தேன். அதனால் அவர்களைச் சென்னை வாசிகள் என்றே நம்பி போலீசார் கைது செய்தனர். போலீஸ் கோர்ட்டிலே யும் அவர்கள் தண்டிக்கப்பட்டனர். இப்படிப் பல நூற்றுக்கணக் கான வெளியூர் சத்தியாக்கிரகிகள் சென்னை நகரச் சிறைச்சாலை யிலே அடைபட்டனர்.

என்னுடைய சூழ்ச்சித் திறனுக்காக வெளியூரிலிருந்து வந்த சத்தியாக்கிரகிகள் என்னை மிகவும் பாராட்டினர். ஆனால், என்னுடைய செயல் காந்திய நெறிக்குப் புறம்பானதென்பதனை அவர்கள் உணரவில்லை. அப்போது நானும் உணரவில்லை. அரசை ஏமாற்றியதிலே நாங்கள் எல்லோரும் மகிழ்ச்சி அடைந் தோம். ஆனால், காலப்போக்கில் காந்திய நெறிபற்றி அதிக அளவில் நான் புரிந்து கொள்ள நேர்ந்தபோது அதிலுள்ள தவறை உணர்ந்தேன். காந்திய நெறிப்படி எதிரியை ஏமாற்று வதுகூட சத்தியத்திற்கு மாறான செயல்தான்.

சிறைத்தண்டனை பெற்ற கைதிகள் — அவர்கள் வெளியூர் வாசிகளானால் — சிறையிலிருந்து விடுதலையாகும்போது சொந்த ஊருக்குச் செல்ல சிறையதிகாரிகள் இலவச ரயில் பயணத்திற்கு ''வாரண்ட்'' தருவார்கள். ஆனால், சென்னைச் சிறையில் தண்டனை அனுபவித்து விடுதலையான வெளியூர்

சத்தியாக்கிரகிகளுக்கு வாரண்ட் தர சிறையதிகாரிகள் மறுத்து விட்டனர். காரணம், அந்தச் சத்தியாக்கிரகிகள் சென்னை வாசிகளைப்போல நடித்துப் போலி விலாசங்களைத் தந்ததுதான். இதனால், அவர்கள் சொந்த ஊருக்குச் செல்ல ரயில் டிக்கெட் எடுத்துக் கொடுக்கும் பொறுப்பு என்மீது விழுந்ததால், இந்தப் போலி நாடகத்தை ஒரு கட்டத்திலே முடித்துவிட வேண்டியவனானேன்.

தவறினால் கிடைத்த பலன்

அன்று காந்திய நெறிக்கு மாறாகச் செய்த இந்த ஏற்பாட்டினால்தான் இன்று நூற்றுக்கணக்கானவர்கள் மத்திய - மாநில அரசுகளிடம் ''தியாகிகள்'' என்ற தகுதியால் தாமிரப் பத்திரமும், மாதாந்தர மானியத் தொகையும் பெறலாயினர்.

தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட தமிழ்ப் புலவர்களைத் தேர்ந்தெடுப்பதிலே நான் அதிக ஆர்வம் காட்டினேன். என்ன காரணத்தாலோ, நாட்டின் விடுதலைக்காக நடைபெற்ற உப்பு சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு, தனி நபர் சத்தியாக்கிரகம், ஆகஸ்டுக் கிளர்ச்சி ஆகிய போராட்டங்களிலே, தமிழ்ப் புலவர்கள் ஈடுபடவில்லை. தேசியப் பாசறை தமிழ்ப் பற்றுக்கு அப்பாற்பட்டதாக விளங்க நேர்ந்த விபத்துக்குப் புலவர்களும் காரணமாவார்கள். தமிழ்ப் பெரும்புலவரான திரு.வி. கலியாணசுந்தரனார், காங்கிரசிலே முன்னணித் தலைவராக இருந்தார் என்றாலும், விடுதலைப் போரிலே சிறைசெல்லும் பேற்றினை அவரும் பெறவில்லை.

புலவர்களும் சிறை புகுந்தனர்!

இந்தக் குறை அகல, தனி நபர் சத்தியாக்கிரகத்திலே தமிழ்ப் புலவர்களை ஈடுபடுத்தி, தமிழுக்கும் தேசியத்திற்கும் தொடர்புண்டாக்க முயன்றேன். அந்த வகையிலே பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், மறைமலையடிகளார் மகன் வித்துவான் மறை. திருநாவுக்கரசு ஆகிய இருபெரும் புலவர்கள் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட முன் வந்ததனைப் பயன்படுத்திக் கொண்டேன். தெ.பொ.மீ. அவர்கள்

சத்தியாக்கிரகம் செய்தபோது, அது மிகச் சிறந்த முறையில் நடைபெற விளம்பரம் செய்தேன். அவர் சத்தியாக்கிரகம் செய்த இடத்திற்கும், அவரது வழக்கு நடைபெற்ற போலீஸ் கோர்ட்டிற் கும் நான் சென்று அவரை வழியனுப்பி வைத்தேன்.

வழக்கறிஞர் த.செங்கல்வராயன் போன்ற — பிற்காலத்தில் பெருந்தலைவர்களாக வருவார்கள் என்று நான் நம்பிய — இளந்தலைவர்களைச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடுத்திச் சிறைக்க னுப்புவதிலே நான் மிகுந்த ஆர்வங் காட்டினேன். இவர்களெல் லாம் சிறையிலிருந்து விடுதலையாகுங்கால் சிறப்பான முறை யில் வரவேற்கவும் ஏற்பாடு செய்தேன். தமிழினம் வருங்காலத் தில் சிறந்து விளங்க வேண்டுமென்ற நன்னோக்கத்துடனேயே இதையெல்லாம் செய்தேன்.

வி.என்.குமாரசாமி தம்பதிகள்

தனிநபர் சத்தியாக்கிரகத்தை நான் நடத்தி வைத்துக் கொண் டிருந்த காலத்தில், எனக்குப் பல வகையிலும் உதவி புரிந்து என்னை உற்சாகப்படுத்தி வந்தவர்கள் திருமதி வி.கே. சீதாலட் சுமியும், அவர் கணவர் திரு.வி.என். குமாரசாமியுமாவர். இந்தத் தம்பதிகள், ஏதோ ஒரு நல்ல நாளிலே, என் வேண்டு கோளுக்கிணங்கி, சென்னைச் சிறையிலிருந்த நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகளுக்கு அறுசுவை விருந்தளித்தார்கள். வெளி யூர் சத்தியாக்கிரகிகள் பலரைப் பல நாட்களுக்குத் தங்கள் இல்லத்தில் வைத்து உணவளித்தார்கள். வடசென்னையில் இவர் கள் வீடு சத்தியாக்கிரக அலுவலகமாகப் பயன்பட்டதெனலாம். திருமதி சீதாலட்சுமியம்மாள், சத்தியாக்கிரகத்திலும் ஈடுபட்டுச் சிறைபுகுந்தார். இவ்வம்மையாரை என் உடன்பிறவாச் சகோதரி யாகவே நான் கருதி வருகிறேன்.

திருமதி நீலாவதி ராமசுப்பிரமணியம், பல்கலைக் கழகத்தி டம் பட்டம் பெற்ற பண்டிதையல்லவென்றாலும், தமிழிலே அழுத்தமான பற்றும் பயிற்சியுமுடையவர். ரசிகமணி டி.கே.சி. யின் பக்தையென்றால், கம்ப ராமாயணத்தில் புலமையுடையவ ரென்று வேறு சொல்ல வேண்டுமா! இந்த அம்மையாரும்

சென்னை நகரில் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றார். தாய் மொழிப் பற்றும் தமிழினப் பற்றுமுடைய இவ்வம்மையார் சிறை சென்றதிலே நான் மிகுந்த மகிழ்ச்சிய டைந்தேன். ஆம்; தமிழுக்கும் தேசியத்திற்கும் உறவு ஏற்பட இவரும் பயன்பட்டாரென்பதால்!

தனிநபர் சத்தியாக்கிரகக் காலம் நீடிக்கவே நான் அலுத்து விட்டேன். எனது உடல்நலத்தையும் குடும்ப நலத்தையும் மீறி உழைத்துழைத்துச் சலித்துப் போனேன். அதனால், கொஞ்ச காலம் ஓய்வு பெற வேண்டுமென்ற நோக்குடன் நானும் சத்தி யாக்கிரகத்தில் ஈடுபட முடிவெடுத்தேன். சத்தியாக்கிரகி ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைப்படி 15.5.41-இல் இராய புரம் இராகவலு நாயுடு அண்டு சன்ஸ் தேக்குமரத் தொட்டியின் எதிரே சட்டத்தை மீறி சத்தியாக்கிரகம் செய்யப் போவதாக அந்தத் தேதிக்கு ஒரு நாளைக்கு முன்னதாகச் சென்னை போலீஸ் கமிஷனருக்கு எழுத்து மூலம் அறிவித்தேன். சென்னை மாவட்ட காங்கிரசின் செயலாளனாக இருந்தேனாதலால் நான் சத்தியாக்கி ரகம் செய்யப் போகும் செய்தி நாளிதழ்களில் சிறந்த முறையில் முன்கூட்டியே பிரசுரமானது. என் குடும்பத்தார் பத்திரிகைகளில் வெளியான செய்தியின் மூலம்தான் நான் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடப் போவதை அறிந்தனர். ஏற்கனவே வறுமையில் வாடும் என் பெற்றோரிடமும், கடும் பிணியால் வருந்திக் கொண்டிருக் கும் என் மனைவியிடமும் நான் அவர்களை விட்டுப் பிரிந்து சிறைக்குப் போகும் செய்தியை நேரில் சொல்லும் துணிவு எனக்கு இருக்கவில்லை.

அன்னையின் வாழ்த்து

நான் சத்தியாக்கிரகம் செய்யவிருந்த தேதிக்கு ஒரு வாரத் திற்கு முன்னர்தான் என் தாய் மாமன் — என் மனைவியின் தந்தை — எம்.ஆர். சிவகாளத்திப் பிள்ளை காலமானார். தாயையிழந்து, எனக்காகத் தன் சகோதர சகோதரிகளைப் பகைத்துக் கொண்டு பிணியால் வருந்திக் கொண்டிருக்கும் என் மனைவி தந்தையையும் இழந்ததனால் பெருந்துயர் அடைந் தாள். இந்த நிலையில் நானும் சிறைபுகவிருப்பதறிந்து

வருந்தினாளென்றாலும், நான் சிறை புகுவதற்கு அவள் தடையாக இல்லை. என் பெற்றோரும் ஒருவாறு தங்கள் மனத்தைத் தேற்றிக் கொண்டு என்னை வழியனுப்பத் தயாராயினர்.

தனிநபர் சத்தியாக்கிரகக் காலத்தில் காங்கிரஸ் கமிட்டிகள் கலைக்கப்பட்டு ஒவ்வொரு கமிட்டிக்கும் ஒவ்வொரு 'சர்வாதிகாரி' செயல்பட்டு வந்தனர். நான் சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் சர்வாதிகாரியாக காந்தியடிகளால் நியமிக்கப்பட்டிருந்தேன். இப்போது நான் சிறைபுக வேண்டியிருந்ததால் நான் வெளியே இல்லாத காலத்தில் என் பொறுப்பிலிருந்து செயலாற்ற திரு.டி.எஸ். கோவிந்தசாமி என்பவரை 'சர்வாதிகாரி'யாக நியமித்து இதுபற்றிக் காந்தியடிகளுக்குத் தகவல் கொடுத்தேன்.

திரு. கோவிந்தசாமி, என்னுடைய நம்பிக்கைக்குரிய நல்ல நண்பர். ஒரு தாயின் வயிற்றிற் பிறந்த சகோதரர் போன்று நாங்கள் பழகி வந்தோம். எனது பொறுப்பை ஒப்புவிக்க அவரைத் தவிர வேறொருவரை நான் நினைத்துப் பார்த்திருக்கவும் முடியாது. (பிற்காலத்தில் இவர் தொடர்ந்து 16 ஆண்டுக் காலம் சென்னை மாநகராட்சியின் உறுப்பினராகப் பதவி வகித்ததுடன், துணை மேயராகவும் இருந்திருக்கிறார்).

திட்டமிட்டபடி 15.5.41-இல் நான் சத்தியாக்கிரகம் செய்தேன். அன்று நான் என் குடும்பத்திலுள்ளவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு களத்திற்குப் புறப்பட்ட காட்சியை என்னால் என்றுமே மறக்கமுடியாது. நான் எத்தனையோ போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிறேனென்றாலும், என் அன்னையார், எனக்கு அன்னமூட்டிய தன் மணிக்கரத்தால் எனது நெற்றியில் திலகமிட்டு, என்னை வாழ்த்தி வழியனுப்பியது இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போதுதான்! ''வெற்றியுடன் வீடு திரும்பு மகனே'' என்று அவர் வாய் கூறியதென்றாலும், அந்த மூதாட்டியின் கண்கள் மகனுடைய பிரிவைத் தாங்காமல் நீருகுத்தன. அந்தக் காட்சியைக் கண்ட காங்கிரஸ்காரர்களும், பொது மக்களும் மனமுருகிவிட்டனர்.

சத்தியாக்கிரகம் செய்வதற்கு நான் தேர்ந்தெடுத்திருந்த ராயபுரம் ராகவலு நாயுடு அண்டு சன்ஸ் தேக்குமரத் தொட்டி எதிரே — நான் செல்வதற்கு முன்பே — பல்லாயிரக்கணக்கில் மக்கள் குழுமியிருந்தனர். எனது வரவை எதிர்பார்த்துப் போலீசாரும் காத்திருந்தனர்.

இராகவலு நாயுடு தேக்குமரத் தொட்டி சரித்திரச் சிறப்பு வாய்ந்ததாகும். இதன் சொந்தக்காரர்களான திரு.பி.ஆர். கஜபதி நாயுடு, திரு.பி.ஆர். சீராமுலு நாயுடு சகோதரர்கள் என்பால் பேரன்பு கொண்டவர்கள். இந்த மரத்தொட்டியில்தான் வழக்கமாக காங்கிரஸ் பொதுக் கூட்டங்கள் நடைபெறும். வாணிப நிறுவனமாக மட்டுமல்லாமல், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாசறையாகவும் விளங்கிய பெருமை இந்த மரத் தொட்டிக்கு உண்டு.

சத்தியாக்கிரகம் செய்தேன்

நான் களத்திற்கு வந்ததுமே அங்குக் குழுமியிருந்த மக்கள் கூட்டத்தைக் கண்டு திகைத்துவிட்டேன். ஆம்; அவ்வளவு பெருங்கூட்டத்தை அந்தக் காலை நேரத்தில் நான் எதிர்பார்க்க வில்லை. வடசென்னைப் பொதுமக்கள் என்பால் கொண்டுள்ள அன்புக்கு அந்தக் கூட்டம் சான்றாக விளங்கியது. நான் பொது வாழ்க்கையில் ஈடுபட்ட நாள்தொட்டு இன்றுவரை சாதாரண பொதுமக்கள் மடியில்தான் வளர்ந்து வருகின்றேன். ஆம்; ஏழை எளியவர்களை நம்பித்தான் நான் அரசியல் நடத்தி வருகிறேன்; வளர்ந்துவிட்டவர்களை நம்பியல்ல! 48 ஆண்டுகாலப் பொது வாழ்வில் எனது போராட்டமெல்லாம் வளர்ந்து விட்டவர் களோடுதானே!

அன்பின் வடிவங்களான மக்கள் கூட்டத்தின் மத்தியில் எனக்கெனப் போடப்பட்டிருந்த மேஜையின் மேலேறி நின்று, ''வந்தே மாதரம்'' — ''மகாத்மா காந்திக்கு ஜே'' என்று கோஷித்த பின்னர், ''தமிழ் மக்களே! யுத்த நிதிக்குப் பணம் கொடுக்காதீர்கள்'', ''பிரிட்டிஷ் ஆட்சியுடன் ஒத்துழைக்காதீர் கள்'' என்ற யுத்த எதிர்ப்புக் கோஷங்களைக் கூறி முடிப்பதற்

குள்ளே போலீஸ் அதிகாரிகள் என்னைக் கைது செய்துவிட்டனர். நான் கைது செய்யப்பட்ட அடுத்த மணி நேரத்திலே எழும்பூர் பிரதம மாகாண மாஜிஸ்திரேட் கோர்ட்டில் போலீசார் என்னைக் கொண்டுபோய் நிறுத்தினர். நான் எதிர்வழக்காட வில்லை. சத்தியாக்கிரகிகள் நீதிமன்றத்தில் எதிர் வழக்காடாமல் குற்றத்தை ஒப்புக் கொண்டு, அதற்காக விதிக்கப்படும் தண்டனையை முகமலர்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது காந்தியடிகளின் கட்டளை. அதன்படி, நானும் குற்றத்தை ஒப்புக் கொண்டதால், விசாரணை பத்து நிமிடங்களுக்குள் முடிந்துவிட்டது. நீதிமன்றம் நிறைய நகர காங்கிரஸ் பிரமுகர்களும், ஊழியர்களும், பொதுமக்களும் குழுமியிருந்தனர். மாஜிஸ் திரேட் கூட 'இன்றைக்கென்ன, இவ்வளவு பெருங்கூட்டம்' என்று வியப்புடன் கேட்டார்.

பொய் சொல்ல மறுத்தேன்

தீர்ப்பு எழுதி முடிப்பதற்குள் ''உங்களுக்குச் சொத்து ஏதேனும் உண்டா?'' என்று என்னைப் பார்த்து மாஜிஸ்திரேட் கேட்டார். நான் ''இல்லை'' என்று பதில் கூறினேன். மாஜிஸ்தி ரேட் என்னிடம் சொத்து விவரம் அறிய முயன்றது சிறையில் என்னை வைக்க எனக்குத் தரவேண்டிய வகுப்பை நிச்சயிப்பதற் காகத்தான். அந்த நாளில், பெருந்தலைவர்களுக்கு 'ஏ' வகுப்பு தரப்பட்டது. அடுத்தபடி, பட்டதாரிகளாகவோ சொத்து படைத் தவர்களோகவோ உள்ளவர்களுக்கெல்லாம் 'பி' வகுப்பு தரப் பட்டது. எஞ்சிய ஏழைத் தொண்டர்களுக்கு — அவர்கள் தங்கள் தாய் மொழியில் எவ்வளவுதான் புலமை பெற்றிருப்பி னும் — 'சி' வகுப்பு தரப்பட்டது.

எனக்குச் சொத்து எதுவும் இல்லை என்று நான் கூறிய துமே, மாஜிஸ்திரேட் தமது முகத்தில் வியப்பை வெளிப்படுத்தி னார். எனது தாய் மாமன் பெரும் பணக்காரர் என்பதும், என் மனைவிக்குச் சொந்தத்தில் ஒரு வீடு இருப்பதும் எங்கள் குடும்பத்தை நன்கறிந்த அந்த மாஜிஸ்திரேட்டுக்குத் தெரியும். அதனால், சொத்து எதுவும் எனக்கில்லை என்று கூறியதற்கு அவர் வியந்தார். ஒரு சின்னஞ்சிறிய வீடு படைத்தவருக்கும்

சிறையில் 'பி' வகுப்பு வழங்கப் பெற்றது. சொத்தில்லாதவர்கள் கூட இருப்பதாகக் கோர்ட்டில் கூறிவிட்டு, 'பி' வகுப்பு பெற்றதும் உண்டு. நீதிமன்றத்தில் நின்று பொய் சொல்ல என் மனம் துணியவில்லை.

'அதிர்ஷ்டமில்லாதவர்'

கோர்ட்டில் எனது வழக்கைக் கவனிக்க வந்திருந்த சென்னை மாநகராட்சி காங்கிரஸ் உறுப்பினரும், பிரபல கிரிமினல் வழக்கறிஞருமான திருவல்லிக்கேணி திரு.டி.ஏ. சீனிவாசன் என்பவரைத் தம் அருகில் அழைத்து அவர் காதில் ஏதோ ஓதினார் மாஜிஸ்திரேட். அவர் என்னிடம் வந்து ''உங்கள் மனைவிக்கு ஒரு வீடு இருப்பதால், சொத்து இருக்கிறது என்று சொல்லுங்கள்'' என்பதாக என் காதில் ஓதினார். திரும்பவும் மாஜிஸ்திரேட், ''உங்களுக்குச் சொத்து இருக்கிறதா?'' என்று என்னைக் கேட்க, நான் பழையபடி 'இல்லை' என்று சுருக்கமாகப் பதிலளித்தேன். உடனே, 'அதிர்ஷ்டமில்லாதவர்' என்று சொல்லி முணுமுணுத்துக் கொண்டே, ''ஆறு வாரக் கடுங்காவல்; 'சி' வகுப்பு'' என்று மாஜிஸ்திரேட் தீர்ப்பளித்தார். ஆறு மாதமோ, ஒரு வருடமோ சிறைத் தண்டனைக் கிடைக்கக கூடுமென்று நான் எதிர்பார்த்தேன். ஆறு வார தண்டனை கிடைத்ததிலே எனக்கு ஏமாற்றந்தான். 'பி' வகுப்பு பெற இயலாததற்காக, 'துரதிருஷ்டசாலி' என்று மிகுந்த அனுதாபத்துடன் என்னை வருணித்த மாஜிஸ்திரேட், சிறைத் தண்டனை பெறுவதிலே என்னை 'அதிர்ஷ்டசாலி'யாக்கிவிட்டார் போலும்!

சிறைக்குள் உண்ணாவிரதம்

அரசியல் கைதிகளுக்கு வழங்கப்படும் வகுப்புகள்பற்றி இங்குச் சிறிது விளக்க வேண்டியது என் கடமையாகும். 1929-ஆம் ஆண்டுக்கு முன்புவரை அரசியல் கைதிகளும் மற்ற கிரிமினல் கைதிகளைப் போலவே சிறையில் நடத்தப்பட்டனர். சில நேரங்களில் கிரிமினல் கைதிகளைவிடவும் மோசமாகச் சிறை அதிகாரிகளால் பழிவாங்கப் பெற்றனர். காந்தியடிகள், லோகமான்ய திலகர், வ.உ.சிதம்பரனார், ராஜாஜி போன்ற

புகழ்மிக்க பெருந்தலைவர்கள் கூடச் சிறையில் சாதாரண கைதிக ளாகவே நடத்தப்பட்டனர். 1929-இல் காங்கிரசிலே கலந்தி ருந்த தீவிர புரட்சிவாதிகளான இளைஞர் பலர்மீது பிரிட்டிஷ் ஆதிக்கம் பலவகையான சதிக் குற்றங்களைச் சாட்டி, அவர்கள் மீது வழக்குகள் நடத்தியது. 'லாகூர் சதி வழக்கு' என்பது அவற்றுள் ஒன்றாகும். இந்த வழக்கிலே சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொண்ட கடுமையான உண்ணாவிரதத்தின் விளைவாகவே அரசியல் கைதிகளுக்கு விசேஷ வகுப்புகள் வழங்க பிரிட்டிஷ் அரசு இணங்கியது. தீவிரவாதிகளின் உண்ணாவிரதம் பற்றி அவர்களில் ஒருவரான அஜய்குமார் கோஷ் என்பவர் தரும் தகவல்கள் வருமாறு:

''சகல அரசியல் கைதிகளையும் மனிதர்களாக நடத்த வேண்டுமென்று கோரி பகவத் சிங்கும், பூதகேசுவர தத்தும் உண்ணாவிரதமிருந்து வந்தனர்... நாங்களும் சேர்ந்து உண்ணாவிரதமிருப்பதென்று முடிவு செய்தோம். சகல அரசியல் கைதிகளையும் ஒரே வகுப்பில் வைத்திருக்க வேண்டும்; நல்ல உணவு அளிக்க வேண்டும்; பத்திரிகை கள், புத்தகங்கள், எழுதுவதற்கு வேண்டிய சாதனங்கள், வசதிகள் முதலியன கொடுக்க வேண்டுமென் பதுதான் எங்களுடைய முக்கியமான கோரிக்கை.

''63 தினங்கள் வரையிலும் தொடர்ந்து நடந்த மகத் தான லாகூர் சதி வழக்குக் கைதிகள் உண்ணாவிரதம் இவ்வாறுதான் ஆரம்பமானது. இதன் விளைவாகத்தான் அணு அணுவாக உயிர்நீத்த ஜதீன்தாஸ் அமரரானார். தேசமெங்கும் பெருத்த கொந்தளிப்பு ஏற்பட்டது.

''எங்கெங்கு அரசியல் கைதிகள் இருந்தார்களோ அங்கெல்லாம் எங்களுக்கு அனுதாபம் காட்டும்பொருட்டு உண்ணாவிரதம் ஆரம்பமாயிற்று. எங்களுடைய கோரிக் கைகளை ஆதரித்துப் பலமான இயக்கம் நாளுக்கு நாள் வளர்ந்து வலிமை பெற்று வந்தது. தேசத்தில் ஒவ்வொரு பாகத்திலும் பிரம்மாண்டமான பொதுக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடந்தன.

''சில நாட்கள் கழித்து மீரத் சதிவழக்குக் கைதிகளும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்கள். இந்தச் செய்தி அயல்நாடுகளிலும் பிரசுரிக்கப்பட்டது. இது இங்கிலாந்தை ஒரு கலக்கு கலக்கிவிட்டது.

''நிலைமை முற்றி ஜதீன்தாஸ் மரணத்தின் எல்லைக்கு வந்துவிட்டார்.

'ஜெயில் சட்டங்களில் எது எதனை மாற்றி அமைப்பது என்பதனை ஆய்ந்து பரிந்துரை செய்ய அதிகாரிகள் அல்லாதவர்களைப் பெரும்பாலோராகக் கொண்ட ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. இந்தக் கமிட்டி சிறைக்கு வந்து எங்களைக் கண்டு பேசியது. எங்களுடைய கோரிக்கைகளில் பெரும்பாலானவைகளை ஒத்துக் கொள்வதாக கமிட்டியினர் வாக்குறுதி கொடுத்தார்கள். அவர்கள் கொடுத்த வாக்குறுதியின் அடிப்டையில் உண்ணாவிரதத்தை நிறுத்துவதென்று நாங்கள் முடிவு செய்தோம்.''

(அஜய்குமார் கோஷின் 'கட்டுரைகளும் சொற்பொழிவுகளும்' என்ற நூலிலிருந்து)

ஜதீன்தாசின் கோர முடிவு

அஜய்குமார், மாவீரன் ஜதீன்தாசின் கோர முடிவு பற்றி வருணித்துள்ளது வருமாறு:

''இப்பொழுது ஜதீன்தாஸ் பிழைப்பாரென்ற நம்பிக்கை இல்லாமற் போயிற்று. அவரால் பேசவும் முடியவில்லை. கேட்கவும் முடியவில்லை. இந்தச் சமயத்தில் வெற்றியைப் பெற்றுவிட்டதாகவே நினைத்தோம். ஆனால், அந்த வெற்றிக்கு எங்களில் யாரையும்விட அதிகமாகப் பங்காற்றிய வீரர் அதன் பலனை அனுபவிக்க உயிரோடு இருக்க மாட்டார் என்பதனையும் உணர்ந்தோம்.

''அதோ ஜதீன்தாஸ் படுத்திருக்கிறார்; நாங்கள் அவரைச் சுற்றி உட்கார்ந்திருக்கிறோம். துக்கம் என்

தொண்டையை அடைக்கிறது, அதோ ஆவி பிரிகிறது! தலையைத் தூக்கிப் பார்த்தேன்! கல் நெஞ்சு படைத்த ஜெயில் அதிகாரிகளின் கண்களிலும் கண்ணீர் ததும்பி யது. ஜெயிலுக்கு வெளியே கூடியிருந்த பிரம்மாண்ட மான ஜனத்திரளிடம் ஒப்படைக்க ஜதீன்தாஸ் சடலத்தை ஜெயில் வாயிலுக்கு வெளியே கொண்டு போனபோது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனது முழு பலத்தையும் பிரயோகித்து எந்த மனிதனை முறிய டிக்க முடியாமற் தோற்றுப் போயிற்றோ, அந்த மனி தன் முன்பு லாகூர் சூப்பிரண்ட் ஹாமில்டன் ஹார்டிங் தனது தலையிலிருந்த தொப்பியைக் கழற்றித் தலை வணங்கி மரியாதை செலுத்தினான்.''

லாகூர் சதி வழக்குக் கைதிகளின் வீரமிக்க உண்ணாவிரதத் தாலும், ஜதீன்தாசின் தீரமிக்க உயிர்த் தியாகத்தாலும் பிரிட்டிஷ் அரசின் மனம் மாறியது. அரசியல் கைதிகளில் செல்வாக்கும் செல்வமும் உயர் கல்வியும் உடைய 'கனவான்களுக்கு 'ஏ' அல்லது 'பி' வகுப்பு வழங்கப்படுமென்று அறிவித்தது.

தியாகி ஜதீன்தாசும், வீரர் பகவத் சிங்கும், அவர் தோழர் களும் கோரியது அரசியல் கைதிகள் அனைவரும் எத்தகைய வேற்றுமையின்றி விசேஷ வகுப்பில் வைக்கப்பட வேண்டும் என்பதாகும். பிரிட்டிஷ் அரசோ, அன்னிய மொழியில் கல்வி பயிலாதவர்களுக்கு — சொத்துரிமை இல்லாதவர்களுக்குச் சிறையில் உயர் வகுப்பு தர மறுத்துவிட்டது. இதன் எதிரொலி தான் எனக்குக் கிடைத்த 'சி' வகுப்பு.

சுதந்திர ஆட்சியிலும்...

அந்நாளில் காங்கிரஸ் தலைவர்கள் என்போர் அரசியல் கைதிகளை 'ஏ' — 'பி' — 'சி' என்று பாகுபாடு செய்து மூவேறு வகுப்புகளில் வைப்பதனை வெறுத்தனர். விடுதலைப் போராட் டம் முடியும் வரைகூட அரசியல் கைதிகள் அனைவரும் ஒரே வகுப்பில் — அதாவது, விசேஷ வகுப்பில் வைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இடைவிடாமல் வற்புறுத்தி

வந்தனர். நாடு சுதந்திரம் பெற்று, காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால் இந்த மாறுதலைத் தாங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப் போவதாகத் தலைவர்கள் கூறி வந்தனர். ஆனால், இன்றுவரை அப்படி எதுவும் நடைபெறவில்லை. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே ஏழைகளாகவுள்ள அரசியல் கைதிகள் ஏனைய கிரிமினல் கைதிகளோடு சேர்த்து 'சி' வகுப்பில் வைக்கப்பட்ட நிலை இன்னமும் நீடித்து வருகிறது.

மாஜிஸ்திரேட் எனக்கு 'சி' வகுப்பு தந்ததற்காக நான் கவலைப்படவில்லை. ஏற்கனவே, இரண்டு முறை சிறையில் 'சி' வகுப்பிலிருந்து பழக்கப்பட்டிருந்தேனாதலால், மாஜிஸ்தி ரேட்டின் தீர்ப்பை மனநிறைவுடன் ஏற்றுக் கொண்டு சிறை சென்றேன்.

தண்டனைக் காலம் முழுவதும் நான் சென்னை மத்திய சிறைச் சாலையில்தான் வைக்கப் பெற்றேன். முன்னர் இரு முறை சிறை சென்றிருக்கிறேன் என்றாலும், கொஞ்சம் அறிவு வளர்ச்சி யும், அரசியல் அந்தஸ்தும் ஏற்பட்டிருந்த நிலையில் இம்முறை சிறை புகுந்தேனாதலால், சிறையில் 'சி' வகுப்பிலிருப்பது மனதுக்கு வருத்தம் தருவதாகத்தான் இருந்ததென்பதனை ஒளிவு மறைவின்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பரம ஏழைக் குடும்பத்தில் பிறந்து, வாழ்ந்து வந்தேனென்றாலும், வயிறார உண்ணும் வேளைகளிலே உயர்தரமான உணவுகளைத் தான் உண்டு மகிழ்ந்தேன். பட்டினி இருந்து விடுவது சுலபம். ஆனால், தொடர்ந்து பல வார காலம் மோசமான உணவை வேளா வேளை உண்டு வாழ்நாளைக் கழிப்பதென்பது மகிழ்ச்சி தருவதல்ல.

நான் சிறைபுகுவதற்கு முன்பு என் காங்கிரஸ் சகாக்களில் நூற்றுக்கணக்கானவர்கள் சென்னைச் சிறையில் அடைபட்டிருந் தனர். அவர்களைப் பார்த்து மகிழவும், அவர்களோடு ஆறு வார காலம் கலந்து வாழவும் வாய்ப்பு கிடைத்ததிலே எனக்கேற் பட்ட பெரு மகிழ்ச்சியானது 'சி' வகுப்பு சிறைவாழ்க்கையில் உள்ள இன்னல்களைத் தாங்கிக் கொள்ளத் துணை புரிந்தது.

'சதி வழக்கு' சகாக்கள்!

இந்தமுறை நான் சென்னை மத்திய சிறையில் இருந்த போது திருவாளர்கள் பி.இராமமூர்த்தி, மோகன் குமாரமங்கலம், மற்றும் சிலர் 'சென்னை சதி வழக்கி'ல் ஈடுபடுத்தப்பட்டு, விசாரணைக் கைதிகளாகச் சிறையிலிருந்தனர். என்போன்ற சத்தியாக்கிரகக் கைதிகளோடு கலந்துவிடக் கூடாதென்பதற்காக அவர்களைத் தனியாக ஓரிடத்தில் அரசு அடைத்து வைத்தது. அப்படியிருந்தும், கிடைத்த துவாரங்களின் வழியாக அடுத்த பிளாக்கில் உள்ள அரசியல் கைதிகளோடு உரையாடவும், கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளவும் சென்னை சதி வழக்குக் கைதிகள் முயலுவார்கள். இவர்களிடம் அந்த நாளிலேயே எனக்குப் பெருமதிப்பு இருந்தது. திரு.பி. இராமமூர்த்தி அவர்களை அதற்கு முன்பே நன்கு அறிந்து வைத்திருந்தேனாதலால், அவரும் நானும் சிறையில் அடிக்கடி சந்திப்போம். சத்தியாக்கிரகிகளை அவர் சந்திக்க முடியாதபடி சிறையதிகாரிகள் கண்காணித்து வந்தனர் என்றாலும், எப்படியாவது அவர்களிடம் சலுகை பெற்று சத்தியாக்கிரகிகள் இருக்கும் பிளாக்குக்கு அடிக்கடி வந்து போவார்.

பிற்காலத்தில் கதர் வளர்ச்சித் தொண்டுக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டுவிட்ட திரு.ஏ.கே. சந்திரசேகர முதலியாரும் என்னுடன் சிறையிலிருந்தார். நான் மறக்க முடியாத மற்றொரு நண்பர் — என்னினும் வயதில் மூத்தவர் தேவகோட்டை மாணிக்கவாசகம் செட்டியாராவார். நாங்கள் இருவரும் உடன்பிறந்த சகோரர்கள் போலச் சிறை வாழ்க்கை நடத்தினோம். அவர் 'ஆணழகர்!'

சிறையில் அரசியல் கைதிகளுக்கு வேலை எதுவும் தரப்படவில்லையாதலால், பொழுதைப் போக்குவது கஷ்டமாக இருந்தது. 'ஏ' வகுப்பிலும் 'பி' வகுப்பிலும் இருந்த அரசியல் கைதிகளுக்கு வெளியிலிருந்து புத்தகங்களைத் தருவித்துப் படிப்பதற்கு வசதி வழங்கப்பட்டிருந்தது. 'சி' வகுப்பில் உள்ளவர்களுக்கு அந்த வசதி மறுக்கப்பட்டது. தினப் பத்திரிகைகளோ, வார — மாத ஏடுகளோ கூடத் தருவித்துப் படிக்க

உரிமை கிடையாது. இந்த நிலையில் பொழுதைப் போக்குவதற்காகப் பலர் வெட்டிப் பேச்சுகள் பேசுவார்கள். வேறு பல விளையாட்டுகளிலும் கவனம் செலுத்துவார்கள். நானும் வேறு சிலரும் அரசியல் சிந்தனையை வளர்த்துக் கொள்ளும் வகையில் பொழுதைப் போக்க முயன்றோம். அந்தக் காலத்திலே எனக்கு இலக்கியப் பயிற்சி கிடையாது. என்னுடன் இருந்தவர்கள் நிலையும் இதுதான். அதனால், சிறைக்குள்ளேயே 'பார்லிமெண்ட்' நடத்துவோம். சுதந்திரம் வந்துவிட்டதாகக் கற்பனை செய்து கொண்டு, ஆளுங் கட்சியினரும் எதிர்க்கட்சியினருமாக அணி பிரிந்து பார்லிமெண்ட் நடத்துவோம். அந்தப் போலி பாராளுமன்றத்தில் ஒருமுறை 'சபாநாயகரா'கவும், மற்றொரு முறை 'பிரதமராக'வும் நான் இருந்திருக்கிறேன்.

சிறை வாழ்க்கை

சிறையில் மாலை 6 மணிக்கே தனித்தனி அறைகளில் — தனி நபர்களாகவும், பிளாக்குகளில் குழு குழுவாகவும் கைதிகளை அடைத்து விடுவார்கள். பிளாக்குகளிலே பலருடைய தோழமை கிடைப்பதால், முன்னிரவைக் கழிப்பது சுலபமாக இருக்கும். தனித்தனி அறையிலே, தன்னந்தனியாக அடைபடும் போதுதான் முன்னிரவு கழிவது கஷ்டமாக இருக்கும்.

அரசியல் கைதிகள் அறைக்கொருவராக அடைபடும்போது ஒவ்வொரு கைதியும் தனக்குத் தெரிந்த பாடல்களை ஒன்றன் பின் ஒன்றாக இரவு 9 மணி வரை பாடி மகிழ்வதுண்டு. ஒருவர் பாரதியாரின் தேசியப் பாடல்களைப் பாடுவார். வேறொருவர், ''போலீஸ் புலிக்கூட்டம், நம்மேல் போட்டு வருகுது பார் கண்ணோட்டம்'' என்னும் பல்லவியைக் கொண்ட பாட்டைப் பாடுவார். தெலுங்கு பேசுபவர், ''மாக்கொத்து ஈதெல்ல தொரத்தனமு'' என்ற பாட்டைப் பாடுவார். எங்கோ ஒரு மூலையிலிருந்து கொண்டு கிரிமினல் கைதி ஒருவர், ''உன்னை நான் தொட்டதற்கும், உங்க அப்பன் சாட்சி சொன்னதற்கும் மதராசு நீல மெத்தை என் தங்கமே தில்லாலே, நான் மாடாய் உழைக்கிறேன்டி என் பொண்ணு தில்லாலே'' என்ற தெம்மாங்குப் பாடலை மனமுருகிப் பாடுவதும் காதில் விழும்.

இப்படி பலர் பலவிதமான பாடல்களை ஏக காலத்தில் தனித்தனி அறைகளில் அடைபட்ட வண்ணம் பாடியது இன்னும் என் மனத்துள் பசுமையாக இருக்கிறது. அதனை ஒரு அற்புத மான காட்சியென்றே சொல்ல வேண்டும். அந்தக் காலத்திலே திரைப்படப் பாடல்கள் இப்போதுபோல மக்களை அதிக அள வில் கவர்ந்திராமையால் சிறைச்சாலை அரசியல் கைதிகளிலே எவரும் அவற்றைப் பாடுவது வழக்கமில்லை. சில நேரங்களில் தமிழர் மத்தியில் உள்ள ஆந்திரர்கள், அந்நாளில் சினிமா ரசிகர்களைக் கவர்ந்திருந்த ''ஒச்சினாடே மா பாவ'' என்ற திரைப்படப் பாடலைப் பாடுவார்கள். திரும்பத் திரும்ப அதையே பாடுவதுமுண்டு. பாவம்! தெலுங்கர் மத்தியிலே ஒரு பாரதியார் பிறந்ததில்லையல்லவா!

சிறையில் எனக்கு மிகுந்த தொல்லையளித்தது ரிப்பன் கட்டிடக் கோபுரத்தின் உச்சியிலுள்ள கடிகாரந்தான்! அது கால் மணிக்கு ஒருமுறை மணி அடித்து ஒலியெழுப்பும். தூக்கம் வராத இரவுகளில் இந்த மணிச் சத்தம் மனதை என்னமோ பண்ணும்!

தனி நபர் சத்தியாக்கிரகத்திற்குப் பின், ஆகஸ்டுக் கிளர்ச்சி யின் போதும், நானே நடத்திய எல்லைக் கிளர்ச்சிகளின் போதும் பலமுறை சிறைப்பட்டேன் என்றாலும் 'சி' வகுப்பு சிறை வாழ்க்கை தனிநபர் சத்தியாக்கிரகத்தோடு என்னைப் பொறுத்தவரை முடிந்துவிட்டது. ஆம்; அரசியல் துறையில் நான் அடைந்த வளர்ச்சி காரணமாக, 'சி' வகுப்புச் சிறை வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற்றேன்.

சிறையில் 'சி' வகுப்புக் கைதிகளை அதிகாரிகள் மனிதர்க ளாகவே மதிப்பதில்லை. தனிப்பட்ட முறையில் சிறையதிகாரி கள் எவ்வளவுதான் நல்லவர்களாயினும், உலக வாழ்க்கையில் ஏழை எளியவர்களிடம் கருணை கொண்டவர்களாயினும் சிறைக்குள்ளே 'சி' வகுப்புக் கைதிகளை அவர்கள் மிகவும் அலட்சியமாகவே நடத்துகின்றனர். சர்க்கஸ் மிருகங்களைப் பழக்குவது போன்று சிறையிலுள்ள கிரிமினல் கைதிகளைப் பழக்குகின்றனர். இதனால் சந்தர்ப்ப நிர்ப்பந்தம் காரணமாக ஒருமுறை கிரிமினல் குற்றம் செய்து சிறைபுகுந்த ஒருவர்

சிறையிலிருந்து மீளுங்கால் மனிதப் பண்புகளை முற்றிலும் இழந்து விட்டவராகவே வெளியே வருகிறார். கிரிமினல் குற்ற வாளிகள் 'சமூக விரோதிகள்' என்று வருணிக்கப்படுவதை நான் எதிர்க்கவில்லை. ஆயினும், சமூக விரோதக் குற்றம் புரிந்தவர் பணக்காரராகவோ, பரங்கி மொழி பயின்று பட்டம் பெற்றவரா கவோ இருப்பின், அவருக்குச் சிறையிலே 'ஏ' வகுப்போ, 'பி' வகுப்போ தரப்படுகிறது. சிறை அதிகாரிகளாலும் அவர் மிகுந்த மரியாதையுடன் நடத்தப்படுகிறார். ஆம்; கிரிமினல் கைதிகளி லேயும் ஏழைகளுக்குத்தான் இன்னல்கள்!

சிறை வாழ்க்கையே கொடிது என்றாலும், அதிலேயும் 'ஏ' வகுப்பு, 'பி' வகுப்பு சொர்க்க வாழ்க்கை போலவும், 'சி' வகுப்பு நரக வாழ்க்கை போலவும் கைதிகளால் கருதப்படு கின்றன.

சிறையிலே சோற்றுப் படி பெறும் கைதிகள் வேறு; களிப் படி பெறும் கைதிகள் வேறு. 'களிப் படி' என்றால் காலையில் கேழ்வரகுக் கூழும், நடுப் பகலிலும் இரவிலும் கேழ்வரகுக் களியும் தரப்படும். 'சோற்றுப் படி' என்றால், காலையில் அரிசி நொய் கஞ்சியும், மற்ற வேளைகளில் அரிசிச் சோறும் தரப்ப டும். கேழ்வரகுக் கூழும் களியும் சத்துள்ள உணவுகளே என்றா லும், உண்டு பழக்கமில்லாதவர்களுக்கு அவை நோய் செய்யக் கூடும். குற்றவாளிகளுக்குத் தண்டனை அளிக்கும் மாஜிஸ்தி ரேட்டுகளே கைதிகளின் உணவுப் படியை நிர்ணயிக்கிறார்கள். கூழும் களியும் உண்டு பழக்கப்பட்டவர்களுக்குத்தான் களிப் படி போடுகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. அரிசிச் சோறு உண்டு பழக்கப்பட்டுவிட்ட நகரவாசிகளாக உள்ள கைதிகளுக் கும் களிப் படி போடுகிறார்கள். இது தண்டனைக்குமேல் தண்டனை விதிப்பது போலாகும். இந்தக் கொடுமை அகற்றப் பட வேண்டும்.

கண்ணப்பன் அன்பு

1931-இல் முதன் முதலாக நான் சிறைபுகுந்தபோது எனக் கும் களிப் படி போடப்பட்டது. நான் பிறவித் தரித்திரனாயினும், கூழ்குடித்தும் களி தின்றும் பழக்கமில்லாதவன். அதனால்

சிறையில் எனக்கு முதன் முதலாகக் களிப் படி தரப்பட்டபோது, அதை வாங்கிக் கையில் வைத்துக் கொண்டு கண் கலங்கி நின்றேன். அது கண்ட சக அரசியல் கைதி ஒருவர், என்பால் இரக்கம் காட்டி, தன்னுடைய சோற்றுப் படியை எனக்குத் தந்து, எனக்குத் தரப்பட்ட களிப் படியைத் தான் ஏற்றுக் கொண்டார். மண்ணடிவாசியான கண்ணப்பர் என்ற அந்த காங்கிரஸ்காரரை இன்னமும் நான் நன்றி உணர்வோடு நினைத்து வருகிறேன்.

சிறையிலே 'சி' வகுப்புக் கைதிகளுக்கு பீடி, சுருட்டு மூக்குப் பொடி முதலியவை சட்ட ரீதியாகக் கிடைக்க வழி யில்லை. அதனால் சட்ட விரோதமான வழிகளில் அவற்றைப் பெற முயல்கின்றனர் — பெறவும் முடிகின்றது. சிறைக்கு வெளியே திருடுவோருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்படு கிறது. வியப்பென்னவென்றால், சிறைக்குள்ளேயும் திருடு நடப் பதுதான்.

சிறையில் தவறு செய்ய விரும்பாத நல்ல உள்ளம் படைத்த கிரிமினல் கைதிகள், வேறு வழிகளில் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முயல்கிறார்கள். பெரும்பாலான சிறை களிலே அரச மரங்கள் உண்டு. அந்த அரச மரங்களிலிருந்து விழும் உலர்ந்த இலைகளை எடுத்து, உள்ளங்கையில் வைத்துத் தேய்த்து, மைபோன்று பொடியாக்கி, அதனை மூக்குப் பொடியா கப் பயன்படுத்துகிறார்கள். அந்தப் பொடியின் மேலே பச்சை இலையைச் சுற்றி, அதை பீடியாகப் பயன்படுத்துகிறார்கள். இதனைப் பார்க்க நேர்ந்தபோதெல்லாம் அவர்கள்பால் நான் பரிதாபப்பட்டிருக்கிறேன். சட்ட ரீதியான வழிகளில் பீடி, சுருட்டு, மூக்குப் பொடி போன்ற பொருள்கள் கிடைக்கும் வகையில் சிறைச்சாலைச் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

நாடு விடுதலை பெற்ற பின்னர், முன்னர் சிறையில் அடைபட்டு, 'சி' வகுப்பிலுமிருந்து அனுபவம் பெற்றவர்களே வழிவழி ஆளுவோராக வருகின்றனர். இவர்கள் தங்கள் சிறை அனுபவத்தை நினைவில் கொண்டேனும் சிறைச்சாலைச் சட்டத்தை — 'சி' வகுப்புக் கைதிகளுக்கு வசதிகள் வழங்கும் வகையில் திருத்த முயலாதது எனக்கு வியப்பைத் தருகின்றது.

சிறையில் நோய்ப்படாமல் இருந்தால்தான் பிழைத்தோம். நோய்ப்பட்டு விட்டால் முதல்தரமான சிகிச்சை பெறுவதற்கு அங்கு வாய்ப்பில்லை. சிறைச்சாலை மருத்துவர் 'சர்வரோக நிவாரணி' போல, எல்லா நோய்களுக்கும் இரண்டொரு 'மிக்சரை'யே திரும்பத் திரும்பக் கொடுப்பார். கடுமையான நோய்க்கிரையாகி விட்ட கைதிகளை உடனடியாகச் சிறைக்கு வெளியே உள்ள மருத்துவமனையில் சேர்ப்பதற்கு அதிகாரிகள் அக்கறையோ, அவசரமோ காட்டுவதில்லை.

'கிரிமினல் சாதி'

சிறையில் கிரிமினல் கைதிகளோடு பழகி அவர்களுடைய உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ள நான் முயன்றிருக்கிறேன். அவர்கள் சிறைக்குள் வந்த காரணங்களை அறிந்து கொள்வதி லேயும் ஆர்வம் காட்டியிருக்கிறேன். பாவம்! சிறைக்கு வெளியே இருக்க வேண்டிய பலர் சிறைக்குள்ளே அடைபட நேர்ந்த கொடுமையினை அவர்கள் மூலம் நான் அறிந்தபோது என் மனம் பதைத்தது. அப்போது சிறைக்குள்ளே அடைபட வேண்டிய பலர், 'கனவான்கள்' கோலத்தில் வெளியே பவனி வந்து கொண்டிருப்பதும் என் கவனத்துக்கு வந்தது.

மனிதர்களிலே யாருமே கிரிமினல் குற்றம் செய்ய மனமார விரும்புவதில்லை. வாழ்க்கைத் தேவைகளை நேரிய வழியில் — உழைப்பின் மூலம் பெற இயலாதபோதுதான் மனிதன் கிரிமினல் குற்றங்கள் செய்யத் துணிகிறான். ஒருமுறை சந்தர்ப்ப வசத்தால் கிரிமினல் குற்றம் செய்துவிட்ட ஒருவரை அவர் வாழ்நாள் வரை சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர் போலீசார். அதனால், அவர் கிரிமினல் பட்டியலிலேயே சேர்க் கப்பட்டு விடுகிறார். கொடிய வறுமையாலும், போலீசாரின் சந்தேகப் பார்வையாலும் 'கிரிமினல் சாதி' ஒன்றே இன்றைய சமுதாயத்தில் தோன்றிவிட்டது. இதனை என்னோடு சிறையிலி ருந்த கிரிமினல் குற்றவாளிகளிடம் பழகியதன் மூலம் அறிந்து கொண்டேன். நாடு சோசலிச மயமாகும் போதுதான் இந்தக் 'கிரிமினல் சாதி' மறையும் போலும்!

நான் சத்தியாக்கிரகக் கைதியாகச் சென்னைச் சிறையில் இருந்தபோது காங்கிரஸ் மகாசபையின் முன்னாள் தலைவர் மயிலை சீனிவாச ஐயங்கார் காலமான செய்தி கிடைத்தது. நான் அவரிடம் பெருமதிப்பு வைத்திருந்தேன். அவரது கடைசி காலத்தில் அதாவது அவர் மறைவதற்கு மூன்று வாரங்களுக்கு முன் நாங்கள் திருவொற்றியூர் விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலைத் தொழிலாளர் சங்க ஆண்டு விழா மேடையில், சந்தித்தோம். அன்று என்னுடைய பேச்சைப் பாராட்டியும், அதே நேரத்தில் காந்தியத்தில் எனக்கிருந்த பக்தியைக் குறைகூறியும் அவர் பேசக் கேட்டேன். தொண்டர்களைப் பேரன்போடும், பெருமதிப்போடும் நடத்திய பெருந்தலைவராக அவர் விளங்கினார். அவரிடமிருந்த இந்தப் பெருங்குணம் என்னைக் கவர்ந்தது. அதனால், அவரது மறைவு கேட்டு நான் பெரிதும் வருந்தினேன். சிறையிலிருந்த அரசியல் கைதிகளைக் கூட்டி வைத்து அனுதாபக் கூட்டம் நடத்தினேன். அவர்களிலே பலர் ஐயங்காரின் அரசியல் சரித்திரத்தை அறியாதவர்களாகி, ‘அவர் யார்?’ என்று என்னைக் கேட்டனர். ‘தேசபக்தர்’ என்னும் சிறப்புப் பெயருக்கே முதல்வராக — ஏகாதிபத்தியக் கப்பலுக்கு எதிர்க் கப்பலோட்டியவராக — விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே இன்னொருவரை இணை சொல்ல முடியாத வகையில் இரண்டு ஜென்ம தண்டனை பெற்றவராக விளங்கிய வ.உ.சிதம்பரனாரையே மறந்துவிட்டவர்கள் மயிலை சீனிவாச ஐயங்காரை மறந்ததில் வியப்பில்லை அல்லவா!

ஆறு வார சிறைத் தண்டனையை அனுபவித்த பின்னர் சூன் மாத இறுதியில் சென்னை மத்திய சிறையிலிருந்து விடுதலையானேன். சிறை மீண்டதும், பழையபடி சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் ‘சர்வாதிகாரி’யாகப் பொறுப்பேற்றுக் கொண்டேன். 1941 சூலை தொடங்கி 1942 சூன் மாதம் வரையுள்ள ஓராண்டுக் காலத்திலே நாட்டில் அடுத்தடுத்துப் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அப்போது நடந்து கொண்டிருந்த இரண்டாவது உலகப் போரும் போரில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளின் எதிரொலியாகவே இந்தியாவில் நேர்ந்த அரசியல் மாறுதல்கள் இருந்தன.

கிரிப்ஸ் தூது

1940 அக்டோபர் 17-இல் வினோபாஜியை முதல் சத்தி யாக்கிரகியாகக் கொண்டு நாடு முழுவதிலும் தொடங்கிய தனி நபர் சத்தியாக்கிரகம் 1941 டிசம்பர் முதல் வாரத்திலே முடிவுற்றது. பிரிட்டன் ஈடுபட்டிருந்த உலகப் பெரும்போர் இந்தியாவை நெருங்கிக் கொண்டிருந்ததால், இந்திய தேசிய காங்கிரசின் நல்லெண்ணத்தைப் பெற இந்திய வைஸ்ராய் முயன்றார். அந்த முயற்சியின் முதல் நிகழ்ச்சியாகச் சிறைகளிலிருந்த சத்தியாக்கிர கிகள் அனைவரையும் எவ்வித நிபந்தனையுமின்றி டிசம்பர் 2-இல் விடுதலை செய்து தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினார். சுமார் 14 மாத காலம் நடைபெற்ற தனிநபர் சத்தியாக்கிர கத்திலே நாடு முழுவதிலுமாக சுமார் 30,000 பேர் சிறைப்பட்ட னர். அவர்களில் எம்.எல்.ஏ.க்கள், எம்.எல்.சி.க்கள் 400 பேர்; மத்திய சட்டசபை உறுப்பினர் 30 பேர். காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினர் அனைவருமே சிறை புகுந்தனர்.

1941-ஆம் ஆண்டு டிசம்பர் 7-ஆம் தேதியன்று அமெரிக் காவிலுள்ள 'பெர்ல்' துறைமுகத்தின் மீது ஜப்பானிய விமானங் கள் குண்டுகளை வீசின. அதன் விளைவாக, அமெரிக்கப் பெருநாடு அச்சு நாடுகளுக்கு எதிராகப் போரில் நேரடியாகக் கலந்து கொண்டது. 1942 ஏப்ரல் 5-ஆம் தேதியன்று இலங்கை யின் தலைநகரான கொழும்பிலும், மறுநாள் விசாகப்பட்டினம், காக்கிநாடா ஆகிய இந்திய நகரங்களிலும் ஜப்பானிய விமானங் கள் குண்டுகளை வீசின.

1942 மார்ச் 23-இல் பிரிட்டிஷ் மந்திரி சபையின் சார்பாக சர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் என்பவர் இந்தியா வந்தார். ஏப்ரல் 12-ஆம் தேதிவரை இந்தியாவிலுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசினார். அவர் வெறுங் கையுடன் வரவில்லை. மத்தியிலே பொறுப்பாட்சி நிறுவ வழி செய்யும் திட்டத்துடன் வந்தார். ஆனால், அவருடைய திட்டத் தில் இந்திய தேசிய காங்கிரஸ் திருப்தி அடையாததால், அதனை நிராகரித்தது. மற்ற கட்சிகளும் வேறுவேறு காரணங்களைக்

கூறி, கிரிப்ஸ் திட்டத்தை ஏற்க மறுத்தன. மிகச் சிறந்த ராஜ தந்திரியான கிரிப்ஸ் தோல்வியுடன் தாயகம் திரும்பிச் சென்றார்.

பர்மா வீழ்ச்சியுற்றதாலும், இலங்கை — இந்திய நகரங்களின் மீது ஜப்பான் விமானங்கள் குண்டுகளை வீசியதாலும் யுத்தம் இந்தியாவை நெருங்கிவிட்டது என்ற பயம் மக்களிடையே ஏற்பட்டது. எந்த நேரத்திலும் பர்மா அல்லது இலங்கை வழியாக வந்து இந்தியாவை ஜப்பான் பிடித்துக் கொள்ளக் கூடும் என்ற பயம் இந்தியப் பொதுமக்களுக்கேயன்றி, அரசியல் நிலையை நிதானிக்கத் தெரிந்த பெருந்தலைவர்களுக்கும் ஏற்பட்டது. எந்தவித அபாயத்தையும் சமாளிப்பதற்குத் தயாராக இருக்குமாறு காங்கிரஸ் காரியக் கமிட்டி நாடு முழுவதிலுமுள்ள காங்கிரஸ்காரர்களுக்குக் கட்டளை பிறப்பித்தது.

காங்கிரஸ்காரர்கள் தாங்கள் வாழுமிடங்களிலிருந்து வெளியேறக் கூடாதென்றும், மக்களோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், எந்தப் படையெடுப்பையும் அகிம்சையின் மூலம் எதிர்த்துச் சமாளிக்கத் துணிவு பெற வேண்டுமென்றும் காந்தியடிகள் காங்கிரஸ்காரர்களுக்கு அறிவுரை கூறினார். சென்னை மாவட்ட காங்கிரசின் சர்வாதிகாரி என்ற முறையில் காங்கிரசினுடையவும், காந்தியடிகளினுடையவும் கட்டளைப்படி நான் நடந்துகொள்ள வேண்டியிருந்தது. இந்தக் கடமையை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டேன்.

யுத்த பயம் காரணமாகச் சென்னை நகர மக்களில் மிகப் பெரும்பாலோர் நகரை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர். அதனால், நகரின் பல பகுதிகள் வெறிச்சோடிப் போயிருந்தன. இன்றுள்ள இளைஞர்கள் அந்த அவலக் காட்சியைக் கண்டிருக்க மாட்டார்கள். கண்ட பெரியவர்களும் மறந்திருப்பார்கள். விமானப் படையெடுப்பு அபாயத்தை உணர்த்தும் சங்கொலி அடிக்கடி முழங்கும். ஆனால், சில நிமிஷங்களிலே அபாயம் நீங்கி விட்டதை அறிவிக்கும் சங்கொலியும் காதில் விழும்.

திரு. காமராசருடன் கூட்டுக் குடித்தனம்!

ஊர்க்காப்புப் படையின் பணி முன் எப்போதையும்விட இப்போதுதான் தீவிரப்படுத்தப்பட்டது. ஊர்க்காப்புச் சங்கத்தின் சென்னை மாவட்ட நிர்வாகியாக இருந்தேனாதலால், தினமும் நள்ளிரவு வரையிலும் அந்தப் பணியிலும் கவனம் செலுத்தினேன். இப்படி, தேசப் பணியில் முழு அளவில் கவனம் செலுத்த வேண்டிய சந்தர்ப்ப நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டுவிட்டதால் எனது குடும்பத்தைச் சென்னைக்கு 30 மைல் தொலைவிலுள்ள திருப்போரூர் கிராமத்தில் குடியேற்றினேன்.

என் மகன் ம.சி.திருநாவுக்கரசு 1941 அக்டோபர் 16-இல் பிறந்தான். அவன் மூன்று மாதக் குழந்தையாக இருந்தபோது பதியெழு அறியாப் பழங்குடியாகச் சென்னையில் வாழ்ந்து வந்த என் குடும்பம் பதி பெயர்ந்தது. அந்த நாளிலே என் மனம் பெரிதும் வேதனைப்பட்டது. குடும்பத்தை வெளியேற்றிய பின்னர் தேனாம்பேட்டை காங்கிரஸ் மாளிகையையே எனது நிரந்தர இருப்பிடமாகக் கொண்டேன்.

அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த திரு. கு. காமராசரும் தேனாம்பேட்டை காங்கிரஸ் மாளிகையிலேயே தங்கியிருந்தார். இந்தக் காலத்தில்தான் நாங்கள் இருவரும் அதிகமாக நெருங்கிப் பழகினோம். நாங்கள் இருவரும் சேர்ந்து 'கூட்டுக் குடித்தனம்' நடத்தினோம். ஆம்; அப்போது நகரில் நல்ல ஓட்டல்கள் குறைந்து விட்டமையால், எங்கள் இருவருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் அலுவலகத்திலேயே உணவு தயாரித்துத் தரப்பட்டது. அந்நாட்களில் திரு. காமராசர் என்னை மிகுதி அன்போடு நடத்தினார்.

ராஜாஜியிடம் கருத்துப் போர்!

கிரிப்ஸ் கொண்டு வந்த திட்டத்தைக் காங்கிரஸ் மகாசபை நிபந்தனையின்றி ஏற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்று ராஜாஜி நினைத்தார். அப்போது அவருக்குக் காங்கிரசிலே — தமிழ்நாட்டிலும் மேலிடத்திலும் — நல்ல செல்வாக்கிருந்தது. அதைப் பயன்படுத்தி கிரிப்ஸ் திட்டத்தை ஏற்று, மத்தியிலும் மாநிலங்களிலும் பொறுப்பாட்சிகளை அமைத்து உலகப் பெரும் போரில் இந்தியா பிரிட்டனுக்கு உதவி புரிய வேண்டுமென்று காங்கிரஸ் மேலிடத்தில் ராஜாஜி முயன்று பார்த்தார். அந்த முயற்சி வெற்றி பெறாமற் போகவே தமது தலைமையில் இயங்கிய அப்போதைய சென்னை மாநிலச் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியை 23.4.42-இல் சென்னை நகரில் கூட்டினார்.

அந்தக் கூட்டத்தில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. ஒன்று, முஸ்லிம் லீகின் பாகிஸ்தான் கோரிக்கையைக் காங்கிரஸ் மகாசபை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது. மற்றொன்று, சென்னை மாநிலத்தில் பொறுப்பாட்சி ஏற்படுத்த மாநிலச் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சிக்குக் காங்கிரஸ் மேலிடம் அனுமதி வழங்க வேண்டும் என்பது. இந்தத் தீர்மானங்களுக்கு — குறிப்பாக, பாகிஸ்தான் கோரிக்கையை ஏற்க வேண்டுமென்ற தீர்மானத்திற்குக் கூட்டத்தில் கடுமையான எதிர்ப்பிருந்தது. திரு.டி. பிரகாசம் தலைமையில் ஒரு சாரார் கடுமையாக எதிர்த்தனர். ஆயினும் தீர்மானங்கள் பெருவாரியான வாக்கு களால் நிறைவேற்றப்பட்டு விட்டன.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகவும் சட்டமன்ற உறுப்பின ராகவுமிருந்த திரு.கு. காமராசரும், த.நா.கா. கமிட்டிச் செயலா ளராகவும் மத்திய சட்டசபை உறுப்பினராகவுமிருந்த திரு.எஸ். சத்தியமூர்த்தியும் ராஜாஜியின் தீர்மானங்களுக்கு ஆதரவளித்த னர் என்பதனை நான் இங்குச் சொல்லியாக வேண்டும்.

ராஜாஜி வெளியேற்றம்!

ராஜாஜியின் போக்கு காரணமாக மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் ஏப்ரல் 30 முதல் மே 2-ஆம் தேதிவரை அ.இ.கா. கமிட்டி அலகாபாத்தில் கூடியது. அதிலே, சென்னை மாநிலச் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சி நிறைவேற்றிய பாகிஸ் தான் ஆதரவுத் தீர்மானத்தை ராஜாஜி பிரேரேபித்தார். அதன் மீது அவர் பேசுகையில், பாகிஸ்தானை அங்கீகரித்தா லொழிய பாரதம் சுதந்திரம் பெறுவது சாத்தியமில்லையென்று வாதித்தார். யுத்தத்தில் பிரிட்டிஷாருடன் காங்கிரஸ் ஒத்துழைக்க வேண்டிய தன் அவசியத்தையும் வற்புறுத்தினார். ஆனால், ராஜாஜியின் வாதம் எடுபடவில்லை. அவரது தீர்மானத்திற்கு அ.இ.கா. உறுப்பினர்களில் 15 பேரே ஆதரவளித்தனர். 200 பேர் எதிராக வாக்களித்தனர்.

இதன்பின் காங்கிரசிலிருந்து ராஜாஜி விலகிவிட்டார். தம் மைப் பின்பற்றுவோரெல்லாம் காங்கிரசிலிருந்து விலகிவிட வேண்டுமென்றும் ராஜாஜி அறிக்கை விட்டார். தமிழ்நாட்டில் மட்டும் — இங்கும் வெகு சிலரே அவரது அறிக்கைக்கு மதிப்பளித்து காங்கிரசிலிருந்து வெளியேறினர்.

திரு.காமராசரும், திரு. சத்தியமூர்த்தியும் ராஜாஜிக்கு ஆரம்பத்தில் ஆதரவளித்தனரென்றாலும், அவரைப் பின்பற்றி காங்கிரசிலிருந்து வெளியேற அவர்கள் தயாராக இல்லை. காங்கிரசுக்கு எதிராக ராஜாஜி போர்க்கோலம் கொண்டதையும் அவர்கள் விரும்பவில்லை. ஆகவே, அலகாபாத்தில் கூடிய அ.இ.கா. கமிட்டிக்குப் பின்னர், தமிழ்நாடு காங்கிரஸ் கடுமை யான ஒரு சோதனைக்கு உள்ளாகியது. ராஜாஜியின் போக்கு எனக்கும் பிடிக்கவில்லை. அவர் திடீரென முஸ்லிம் லீகின் பாகிஸ்தான் கோரிக்கைக்கு ஆதரவாக மாறியதால் அவர்பால் எனக்கிருந்த மதிப்பு குறையவில்லையென்றாலும், தேசபக்தி காரணமாக, மிகுந்த மனவேதனையுடன் ராஜாஜியின் பாகிஸ் தான் ஆதரவுப் பிரச்சாரத்தை எதிர்க்க வேண்டியவனானேன்.

ராஜாஜி அலகாபாத்திலிருந்து சென்னை திரும்பியதும் பாகிஸ்தான் ஆதரவுப் பிரச்சாரத்தில் தீவிரங்காட்டினார். அதற்கு எதிர்ப்பிரச்சாரஞ் செய்ய நானும் முற்பட்டேன். சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் சார்பில், நகரில் பெரிய பொதுக்கூட்டங்கள் நடத்தினேன். அவற்றில் எஸ்.சத்தி யமூர்த்தி ஐயரும் நானும் பாகிஸ்தான் கோரிக்கைக்கு எதிராகப் பேசியதுடன், ராஜாஜிக்கு எதிராக காங்கிரஸ் மேலிடத்தை ஆதரிப்பதிலும் நாங்கள் தீவிரங்காட்டினோம். தமிழ்நாடு காங்கி ரஸ் பலவீனப் படாமலிருக்க இதை நாங்கள் செய்தாக வேண்டி யிருந்தது.

பாகிஸ்தான் கோரிக்கையை லீக் எழுப்பியபோது அதை எதிர்ப்பதிலே ராஜாஜியைவிட தீவிரங்காட்டியவர் வேறு யாரு மிருக்க முடியாது. ''நாட்டைத் துண்டாடுவது குழந்தையைத் துண்டாடுவதுபோல'' என்று வருணித்தார். வட இந்தியாவி லுள்ள இந்துக்கள் பசு மாட்டிடம் பக்தி செலுத்துபவர்களாத லால், அவர்களுடைய மத உணர்வைத் தூண்டும் வகையில், ''நாட்டைத் துண்டாடுவது பசுவைத் துண்டாடுவதுபோல'' என்று உவமை கூறினார். ஆம்; பாகிஸ்தான் கோரிக்கையை எதிர்ப்பதிலே தம் அறிவுத்திறன் முழுவதையும் ராஜாஜி பயன் படுத்தினார்.

இதற்கு நேர்மாறாக, பாகிஸ்தானை ஆதரிக்கத் தொடங்கிய பின்னர், நாட்டைத் துண்டாடுவதிலுள்ள நியாயத்தை வாதிப்பதி லும் தமது அறிவுத் திறமையை முழு அளவில் வெளிப்படுத்தி னார். இதனை 'வக்கீல் வாதம்' எனலாம்.

காங்கிரசிலிருந்து வெளியேறிய ராஜாஜி, காங்கிரஸ்காரர் அல்லாத சென்னை ராஜ்ய சட்டமன்ற உறுப்பினரான திரு.டி.டி. கிருஷ்ணமாச்சாரியாரையும், வேறு சில பிரமுகர்களையும் கூட்டு சேர்த்துக் கொண்டு தமிழ்நாடு முழுவதிலும் சுற்றுலாச் செய்து காங்கிரசுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தார். அப்போது, காங்கிரசிலே கட்சிக்குள் கட்சியாக இயங்கிவந்த கம்யூனிஸ்டுக் கட்சியினரும் உள்ளும் புறமுமாக அவருக்கு உதவி புரிந்து வந்தனர்.

ராஜாஜி, தம் சுற்றுலாவின்போது ஈரோடு சென்றார். அங்கு பெரியார் ஈ.வெ.ரா.வை — அவருடைய இல்லத்திற்கு வலுவில் சென்று — சந்தித்துப் பேசினார். அன்று மாலை ஈரோடில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில், பெரியார் ஈ.வெ.ரா. கோரி வந்த 'திராவிடத் தனிநாட்டுக் கோரிக்கை'க்கும் சுற்றி வளைத்து ஆதரவு தெரிவித்தார். சுருங்கச் சொன்னால், காங்கிரசின் எதிரி களை எல்லாம் தன்னுடைய சகாக்களாக்கிக் கொண்டு காங்கி ரசை எதிர்க்கத் திட்டமிட்டு முயன்றார் ராஜாஜி. அவரது எதிர்ப்பால் காங்கிரஸ் மகாசபை பலவீனப்பட்டு விடவில்லை. ஆம்; காந்தியடிகளின் தலைமையிருந்த காரணத்தால்! ஆனால், அன்று ராஜாஜி காங்கிரசுக்கு ஒரு பெரும் ''பிரச்னை''யாக இருந்தார். அவர் நடத்திய பாகிஸ்தான் ஆதரவுக் கிளர்ச்சியைச் சமாளித்தாக வேண்டிய சங்கடம் காங்கிரஸ் மகாசபைக்கும், காந்தியடிகளுக்கும் ஏற்பட்டது. காந்திஜி முன்பு எப்போதோ சொன்ன கருத்துகளைத் தமக்கு ஆதரவாகச் சான்று காட்டி, பாகிஸ்தான் ஆதரவுப் பிரச்சாரம் செய்தார் ராஜாஜி. அதனைச் சமாளிக்க, ''ராஜாஜிக்கும் எனக்கும் உள்ள கருத்து வேற்றுமை சுண்ணாம்புக்கும் வெண்ணெய்க்கும் உள்ள வேற்றுமை போன்ற தாகும்'' என்று காந்தியடிகள் கூறவேண்டி ஏற்பட்டது.

பக்தி, பகையானது!

ராஜாஜிக்கும் எனக்கும் பழக்கமேற்பட்டது 1936-ஆம் ஆண்டிலாகும். சென்னை மாவட்டக் காங்கிரஸ் நிர்வாகி என்ற முறையிலே, நகரில் நடத்தப்படும் பெரிய பொதுக்கூட்டங்களுக் கும், மாநாடுகளுக்கும், விழாக்களுக்கும் அழைப்பதற்காக அடிக்கடி ராஜாஜியிடம் செல்வேன். அந்த மேடைகளில் ராஜாஜியை வரவேற்று அவரை உபசரிப்பேன். இந்த முறையில் தான் அவரோடு எனக்கு முதன் முதலாகத் தொடர்பு ஏற்பட்டது. 1940-41-ஆம் ஆண்டுகளிலே தனி நபர் சத்தியாக்கிரகத்தைச் சென்னை நகரில் நடத்தி வைப்பதற்காகவும் ராஜாஜியின் ஆலோசனையைக் கேட்க அவரிடம் நான் அடிக்கடி செல்வேன். ராஜாஜிக்கும் எனக்குமிடையே உருவான நட்பை வலுப்படுத்த வும் வளப்படுத்தவும் நாவலர் சத்தியமூர்த்தி ஐயர் உதவிகரமாக இருந்தார்.

அந்த நாளிலேயே தமிழ் மொழிப் பற்றும், 'தமிழன்' என்னும் இன உணர்வும் என் இதயத்தில் வளர்ந்து வந்தன. அதனால், தமிழரான ராஜாஜி, அகில இந்தியாவிலும் புகழ் பெற்றவராக, மனிதாத்மாக்களுக்கெல்லாம் மேம்பட்ட மகாத்மாவுக்கு அடுத்த தலைவராக விளங்கியது கண்டு நான் பெருமிதமடைந்தேன். அவரது தலைமை நீடிப்பதும் நிலைபெறுவதும் தமிழின் வளர்ச்சிக்கும் தமிழினத்தின் வாழ்வுக்கும் அவசியமென்று நம்பினேன்.

ராஜாஜி அப்போது தமிழிடத்தில் மிகுந்த பற்றும் பாசமும் கொண்டிருந்தார். 'டில்லி' என்பதனை, 'தில்லி' என்று தான் எழுதுவார். ஆம்; மொழிக்கு முதலில் 'ட'கரம் வரக்கூடாதென்பது தமிழ் இலக்கணம். இதனைப் பலர் கடைப்பிடிப்பதில்லை. வடமொழியிடத்துப் பற்றுடையவர்கள் தமிழின் தனித்தன்மையைக் காக்கும் இலக்கணத்தில் அக்கறை காட்டுவதில்லை. இவர்களிலிருந்து ராஜாஜி வேறுபட்டு விளங்கினார். 'இராசகோபாலாச்சாரி' என்றுதான் தமது பெயரை எழுதுவார். 'ராஜகோபாலாச்சாரி' என்று எழுதமாட்டார். 'சாக்ரடீஸ்' என்பவர் பற்றித் தாம் எழுதிய நூலுக்கு 'சோக்ரதர்' என்று தமிழ் வழியில் திருத்திப் பெயர் கொடுத்தார். பொதுக் கூட்டங்களிலே தமிழில் பேசுவதைக் கொள்கையாகக் கொண்டிருந்தார். ஆங்கிலத்தில் எவரேனும் பேசினால், அவரைக் கண்டிப்பார்.

ராஜாஜியிடத்தில் நான் மிகுந்த பற்றும் பக்தியும் கொள்ள முதற் காரணமாயிருந்தது தமிழ் வளர்ச்சியில் அப்போது அவர் காட்டி வந்த ஆர்வந்தான். ராஜாஜியின் ஒழுக்க வாழ்க்கையும் என்னைப் பெரிதும் கவர்ந்தது. எனக்கு வழிகாட்டியாக இருந்தவர் என்றும் நன்றியுணர்வுடன் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ராஜாஜியை நேசிக்கவும், காந்தியடிகளுக்கு அடுத்தபடியாக அவரை எனது வழிகாட்டியாகக் கொள்ளவும் இவ்வளவு காரணங்கள் இருப்பினும், சோதனைமிக்க ஒரு கட்டத்திலே அவர் காங்கிரசைப் பலவீனப்படுத்த முயற்சித்தது எனக்குப் பிடிக்கவில்லை. அதிலே அவருடன் ஒத்துழைக்க என்னுடைய தேசபக்தி என்னை அனுமதிக்கவில்லை — குறிப்பாக வடக்கே பாகிஸ்தான் அமையவும், தெற்கே திராவிடஸ்தான் கிளர்ச்சி

வலுக்கவும் அவர் ஆதரவு காட்டியது என் மனதுக்கு அதிர்ச்சியைத் தந்தது. நான் அப்போதும் ஒரு சாதாரணத் தொண்டன் தான் என்றாலும், இந்தியாவிலுள்ள பிரதான நகரங்களின் வரிசையிலே மூன்றாவதாகவும், சென்னை மாநிலத்துக்குத் தலைநகரமாகவும் இருந்த சென்னை நகர காங்கிரஸ் கமிட்டியின் செயலாளனாக இருந்தேனாதலால், காங்கிரசின் எதிரிகளை என் எதிரியாகக் கருதவேண்டிய அரசியல் ஒழுக்கத்தை நான் கடைப்பிடிக்க வேண்டியவனாயிருந்தேன். காங்கிரசிலிருந்த சிலர் ராஜாஜிக்கும் காங்கிரசுக்குமாக ஊசலாடினர். ஆனால், என் பொது வாழ்க்கையிலே இந்த ஊசலாட்டத்தை என்றுமே — எதிலுமே நான் கடைப்பிடித்ததில்லை. ஆகவே, ராஜாஜியிடம் அளவற்ற பற்றும் பக்தியும் எனக்கிருந்தும் காங்கிரசுக்கு நான் ஆற்றவேண்டிய கடமைக்காக அவருக்கு எதிர்ப் பிரச்சாரம் செய்யும் தரும சங்கடமான ஒரு பணியில் ஈடுபட்டேன்.

மதுரையில் வாதப் போர்!

நான் காங்கிரசிலிருந்த கடைசி மணி நேரம் வரை அந்தக் கட்சிக்கு விசுவாசமுடையவனாக இருந்தேன். அதற்கு அடிமைப்பட்ட ஊழியனாக இருந்து பணியாற்றினேன் என்றும் சொல்ல வேண்டும். இருபத்தெட்டு ஆண்டுக் காலம் காங்கிரசில் இருந்தேன். அந்தக் காலத்தில் ஒரு வினாடிகூட — ஒரே ஒரு நிகழ்ச்சியில்கூட நான் காங்கிரசுக்குத் துரோகம் செய்ய நெஞ்சாலும் நினைத்ததில்லை. இதனால் என்னை ஒரு அப்பாவித் தொண்டனாகவே அந்நாளில் ராஜாஜி நினைத்தார்.

காங்கிரசுக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டு ராஜாஜி தமிழ்நாட்டில் சுற்றுலாச் செய்து கொண்டு இருந்தபோது அவரும் நானும் மதுரையில் சந்திக்க நேர்ந்தது. தேசிய நாடார் சங்க இரண்டாவது மாநில மாநாட்டு மேடையிலே நாங்கள் சந்தித்தோம். ராஜாஜியின் அருகில் திரு.டி.டி.கிருஷ்ணமாச்சாரியார் இருந்தார். ராஜாஜிக்கு எதிர்ப்புறத்தே அமர்ந்திருந்த என்னை அவர் மிகுந்த அன்புடன் கைகாட்டி அழைத்துத் தன் அருகில்

அமர்த்திக் கொண்டார். மறுகணத்தில் திரு.டி.டி.கே. அவர்களுக்கு என்னைக் காட்டி, ''கிராமணியை உங்களுக்குத் தெரியுமோ?'' என்று கேட்டார். ''ஓ தெரியுமே!'' என்றார் டி.டி.கே. பின்னர் ''கிராமணி நன்றாகப் பேசுவார்; நம்மையும் ஏசுவார்!'' என்று சுவைமிக்க தமிழிலே சுடுசொல் பகர்ந்தார் ராஜாஜி.

நான், ''தங்களை எதிர்த்துப் பேசுகிறேன். ஆனால், ஏசிப் பேசவில்லை. அப்படிப் பேசவுமாட்டேன்'' என்று மிகுந்த பணிவுடன் கூறினேன். அவர், ''நீங்கள் ஏன் என்னை எதிர்த்துப் பேசுவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு, ''நான் தங்களை எதிர்க்கவில்லை. பாகிஸ்தான் கோரிக்கையைத்தான் எதிர்க்கிறேன்'' என்று பதிலளித்தேன்.

ராஜாஜி ''பாகிஸ்தானின் நன்மை தீமைகள் பற்றி உங்களுக்கென்ன தெரியும்?'' என்று கொஞ்சம் சினத்தோடு கேட்டார். நான் ''எனக்கொன்றும் தெரியாதுதான். ஆனால், 'நாட்டைத் துண்டாடுவது குழந்தையைத் துண்டாடுவதுபோல; பசுவைத் துண்டாடுவது போல' என்று தாங்களே முன்னர் கூறியிருக்கிறீர்கள். அதை நம்பித்தான் பாகிஸ்தான் கோரிக்கையை நான் எதிர்க்கிறேன்'' என்றேன்.

ராஜாஜி ''அப்படியா? இப்போது நானே சொல்கிறேன். பாகிஸ்தான் கொடுப்பதால் நாட்டுக்கு நன்மை என்று; என்மீது பக்தியிருந்தால் இதை நம்புங்களேன்'' என்றார். அப்போது கொஞ்ச நேரத்திற்கு முன்பு அவர் முகத்தில் நான் கண்ட சினத்திற்கு மாறாக, ஒரு தந்தைக்குரிய அன்புணர்வை அவரது முகத்திலும் குரலிலும் கண்டேன். அதனால், தந்தையிடம் மகன் காட்டும் பணிவை வெளிப்படுத்தி, ''தாங்கள் சொல்வதைக் காந்தியடிகள் ஏற்றுக் கொள்ளும்படி செய்யுங்கள்; நான் தங்களைப் பின்பற்றுகிறேன்'' என்றேன். பின்னர், ''நீங்கள் இன்று எனக்கு எதிராகச் செய்யக்கூடிய பிரச்சாரத்திற்காக நீங்களே வருந்தக்கூடிய நாள் வரும்'' என்று மிகவும் கண்டிப்பான குரலில் என்னை ராஜாஜி எச்சரித்தார். ''அந்த நாள் விரைவில்

வருவதையே நான் விரும்புகிறேன். தங்களைப் பிரிந்திருப்ப திலே எனக்கு மகிழ்ச்சியில்லை'' என்று பதிலளித்தேன்.

இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த — எங்கள் இருவரிடமும் மிகுந்த அன்புடைய — மதுரை ஏ. வைத்தியநாத ஐயர் எங்கள் பேச்சு முடிவுக்கு வருவதற்கு உதவி புரிந்தார்.

அன்றும் சரி, இன்றும் சரி; ராஜாஜியிடமிருந்து பிரிந்திருப் பதிலே, அவரோடு பிணங்கி அரசியல் நடத்துவதிலே எனக்கு மகிழ்ச்சியில்லை. ஆயினும், 'மனச்சாட்சி' என்று ஒன்றிருக்கிற தல்லவா! அதற்குத் துரோகம் செய்யத் துணிவில்லாமல் அன்று ராஜாஜியை எதிர்ப்பவனாக இருந்தேன். இன்றும் எனது நிலை அதுதான்! அன்று தாய்நாட்டைவிட தனி மனிதர் — அவர் எவ்வளவுதான் மேதையாயினும் — பெரியவரல்ல என்று நினைத்து நாட்டுக்குத் தொண்டு புரிந்தேன். இன்றோ, தாய் மொழியைவிடவும் தனி நபர் — அவர் தந்தையே ஆனாலும் — பெரியவரல்ல என்று நினைத்துத் தமிழுக்குத் தொண்டாற்றி வருகிறேன். இருந்தாலும், வணக்கத்திற்குரியவர்களைப் பகைத் துக் கொள்வதைவிட மனத்துக்குத் துன்பந்தரும் செயல் வேறிருக்க முடியாதென்பதனை நான் உணர்கிறேன்.

ஆகஸ்டுப் புரட்சி!

இரண்டாவது உலகப் பெரும் போர் இந்தியாவின் தலைவாயிலை நெருங்கிக் கொண்டிருந்தது என்று ஏற்கனவே கூறினேன். அந்தப் போரில் பிரிட்டனும் அதனோடு இணைந்து நின்ற நேச நாடுகளும் தோற்பது உறுதி என்ற எண்ணம் காந்தியடிகளுக்கு எப்படியோ ஏற்பட்டுவிட்டது. பழைய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் போய் புதிய ஜப்பான் ஏகாதிபத்தியமோ, ஜெர்மன் ஏகாதிபத்தியமோ இந்திய சமுதாயத்தின் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடும் என்ற அச்சம் அடிகளுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். அவர் உண்மையான சத்தியாக்கிரகி. அதனால் எசமானர் மாறுவதை அவர் விரும்பவில்லை. நேத்தாஜி உள்ளிட்ட பெருந்தலைவர்களிலே சிலர், ஜெர்மனும் ஜப்பானும் இணைந்த அச்சு நாடுகளின் ஆதரவோடு பிரிட்டனை வெளியேற்றி விட வேண்டும் என்று துடித்தனர். அதற்காகவே, இந்தியாவிலிருந்து தப்பி ஓடி, ஜப்பானியரின் உதவி பெற்று இந்திய தேசியச் சேனை ஒன்றைத் தூரக்கிழக்கு நாடுகளில் நேத்தாஜி நிறுவினார்.

ஜப்பானோ, ஜெர்மனியோ பிரிட்டனை வெளியேற்றுவதில் நமக்கு உதவி புரியலாம். அதன் பின், ஜப்பான் அல்லது ஜெர்மன் ஏகாதிபத்தியத்திற்கு இந்தியா அடிமைப்பட வேண்டியிருக்கும் என்று காந்தியடிகள் அஞ்சினார். அந்த அச்சம் உண்மையானது. உத்தமமான சத்தியாக்கிரகிக்குத்தான் இந்த உண்மை புலப்படும். இந்தியாவில் அப்போது இருந்து கொண்டிருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வெளியேற்றவும், இந்தியாவின் தலைவாசலை நெருங்கிக் கொண்டிருந்த ஜப்பான் ஏகாதிபத்தியம் நம் தாயகத்துக்குள்ளே நுழைந்து விடுவதைத் தவிர்க்கவும், ஒரு சாத்வீகப் புரட்சியைத் தோற்றுவிக்க காந்தியடிகள் விரும்பினார். ஆனால், பிரிட்டிஷ் அரசும், அதற்கு ஆதரவாக இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் விசுவாசிகளும் காந்தியடிகளின்

போக்கு நேச நாடுகளின் தோல்வியைத் துரிதப்படுத்தும் உள் நோக்கமுடையதென்று கருதினர். நேச நாடுகளின் அணியிலே சோவியத் ருஷ்யா இருந்த காரணத்தால், காங்கிரசுக்குள்ளேயிருந்த கம்யூனிஸ்டுகளும் இந்தியா விடுதலைப் புரட்சியில் ஈடுபடுவதை விரும்பாதவர்களாயினர். அதனால், முற்போக்கு நாடான சோவியத் ருஷ்யாவும் பாதிக்கப்பட்டு விடுமென்று அவர்கள் கருதினர்.

சோசலிசத்தில் உள்ள பற்று காரணமாக சோவியத் ருஷ்யாவின் வெற்றியை விரும்பிய நேருஜியும் காந்தியடிகளின் உத்தேசப் போராட்டத்தை உற்சாகத்துடன் வரவேற்கக் கூடிய நிலையில் இல்லை. ஆனால், காங்கிரசாரிடையிலும் நாட்டிலுள்ள சாதாரண மக்களிடமும் தமக்கிருந்த செல்வாக்கின் காரணமாக சாத்விகப் புரட்சிப் பாதையிலே நாட்டை இழுத்து விடுவது காந்தியடிகளால் முடிவதாக இருந்தது.

காந்தியடிகள் ''குவிட் இந்தியா'' என்றுதான் ஆங்கிலத்தில் கோஷித்தார். இதனை, ''இந்தியாவிலிருந்து வெளியேறு'' என்று மட்டுமே தமிழில் மொழி பெயர்க்க வேண்டும். ஆனால், தமிழ்நாட்டுப் பத்திரிகைகளும் காங்கிரஸ்காரர்களும் ''வெள்ளையனே வெளியேறு'' என்று மொழிபெயர்த்துக் கோஷித்தனர். இது காந்தியநெறிக்கே எதிரான மொழி பெயர்ப்பாகும். காந்தியடிகள் ''நான் பிரிட்டிஷ் ஆதிக்கத்தையே வெறுக்கிறேன். பிரிட்டிஷ் சாதியை வெறுக்கவில்லை'' என்பதாக அடிக்கடி கூறி வந்தார். ஆனால், அடிகளின் இந்த விளக்கத்திற்கு விரோதமானது ''வெள்ளையனே...'' என்று ஒரு நிறத்தவரை விளித்துத் தமிழில் கோஷித்தது. ஆனால், அன்றிருந்த விடுதலை ஆவேசத்திலே இந்த நுணுக்கமான ஆராய்ச்சிக்கு இடமேது?

நானுந்தான் ''வெள்ளையனே வெளியேறு'' என்று அப்போது கோஷித்தேன். இப்போதுதான் புரிகிறது அந்த மொழி பெயர்ப்பு காந்திய நெறிக்கும் மூல கோஷத்திற்கும் பொருந்தாததென்று.

காந்தியடிகள் திட்டமிட்ட விடுதலைக் கிளர்ச்சியைத் தொடங்குவதற்கு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் ஆதர வைப் பெற அந்தக் கமிட்டி 9.8.42-இல் பம்பாயில் கூட இருந்தது. ஆனால், அதற்கு முன்பே விடுதலைப் புரட்சியை நடத்துவதற்கான வேலைத் திட்டம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பெயரால் மாநில, மாவட்ட காங்கிரஸ் கமிட்டி களுக்கு அனுப்பப்பட்டுவிட்டது. அந்தத் திட்டம்பற்றிய சுற்றறிக்கை இரகசிய தஸ்தாவேஜாகவே கருதப்பட்டது.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. காமராசர் அவர்களிட மிருந்து சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி செயலாளன் என்ற முறையில் எனக்கும் அந்த வேலைத் திட்டம் கிடைத்தது. பொதுமக்களுக்கு உயிர்ச் சேதம் ஏற்படுவதற்கு இடமளிக்காத வகையில் ரெயில் தண்டவாளத்தைப் பெயர்க்கும் அம்சமும் அந்த வேலைத் திட்டத்தில் இருந்தது. அதனைப் பார்த்தபோது நான் வியப்பும் திகைப்பும் அடைந்தேன். அகிம்சையின் வடிவ மான காந்தியடிகள் பலாத்காரத்துக்கு வழிவிடும் இந்த வேலைத் திட்டத்தைத் தயாரித்திருப்பாரா என்ற ஐயம் என் மனத்துள் எழுந்தது. ஆயினும், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரிடமிருந்து கிடைத்த வேலைத்திட்ட மாதலால், 'ஏன்?' என்றும் 'எதற்கு?' என்றும் கேட்காமல் ஏற்றுக் கொண்டேன்.

திரு. காமராசர் வேறொரு பணியையும் என்னிடம் ஒப்பு வித்தார். ஆம்; அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பெயரால் தமக்கு அனுப்பப்பட்ட இரகசியச் சுற்றறிக்கையை வடாற்காடு, சேலம், மதுரை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வரும் வேலையை என்னி டம் ஒப்புவித்தார். நானும் ஏற்றுக் கொண்டேன்.

என்னிடம் தரப்பட்ட இரகசியச் சுற்றறிக்கை ஆங்கிலத்தில் தான் இருந்தது. அதனைப் படித்துப் புரிந்துகொள்ள என்னால் முடிந்தது. ஆனால், அறிக்கையின் பின் விளைவு எதுவாக இருக்குமென்று தெரிந்து கொள்ளும் அளவுக்கு நான் மனப்பக்கு வம் பெற்றிருக்கவில்லை என்பதை இங்கு ஒளிவுமறைவின்றிச் சொல்லியாக வேண்டும். அதனாற்றான், காங்கிரஸ்காரர்களை

வன்முறையில் ஈடுபடுத்தும் ஒரு இரகசியச் சுற்றறிக்கையை மூன்று மாவட்டங்களின் செயலாளர்களுக்குக் கொடுத்துவிட்டு வர நான் இசைந்தேன்.

காமராசரின் தூதுவன்!

9.8.42 அன்று மதுரை மாவட்டத்தில் மீனாட்சிபுரம் என்னும் ஊரில் நடைபெறும் மாவட்ட காங்கிரஸ் மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தேன். அந்த மாநாட்டில் கலந்து கொள்ளவும், வடாற்காடு, சேலம், மதுரை மாவட்டங்களின் காங்கிரஸ் செயலாளர்களுக்கும் இரகசியச் சுற்றறிக்கையின் பிரதிகளை வழங்கவும் நான் 7.8.42 அன்று இரவு சென்னையை விட்டுப் புறப்பட்டேன். ஆம்; தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு.காமராசரின் அந்தரங்கத் தூதுவனாக!

ஆகஸ்டு 8-ஆம் நாள் இந்திய வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கத் தக்க புனித நாளாகும். அன்றுதான் ''இந்தியாவை விட்டு வெளியேறு'' (''குவிட் இந்தியா'') என்ற தீர்மானத்தை பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் ஒருமனத்துடன் நிறைவேற்றியது. தேசம் முழுவதுமே அன்று புத்துயிர் பெற்றது. ஏற்கனவே கனன்று கொண்டிருந்த ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சித் தீயானது அன்று கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. ''துறவிக்கு வேந்தன் துரும்பு'' என்பது பழமொழி. அதுபோல, பற்றற்ற வாழ்க்கை நடத்திய காந்தியடிகள், சர்வ வல்லமை படைத்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைத் துச்சமெனக் கருதி, காங்கிரஸ் பொதுக்குழுக் கூட்டத்திலே, ''இந்தியாவிலிருந்து வெளியேறு'' என்று தமது புனித வாயால் கோஷித்தார். அங்குக் கூடியிருந்த தேசபக்த மாவீரர்கள் அனைவருமே அவரைப் பின்பற்றி ''ஏகாதிபத்தியமே! இந்தியாவிலிருந்து வெளியேறு'' என்று குரல் கொடுத்தனர். அந்த நாளிலே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், ஜெர்மன் உள்ளிட்ட அச்சு நாடுகளுக்கு எதிராக பயங்கரமான ஒரு போரிலே ஈடுபட்டிருந்ததால், ஆகஸ்டுத் தீர்மானம் அதற்கு வேம்பெனக் கசந்தது. அதனோடு கூட்டு சேர்ந்திருந்த அமெரிக்கா, பிரான்ஸ், சோவியத் ருஷ்யா போன்ற நாடுகளுக்கும் ஆகஸ்டு தீர்மானம் திருப்தி அளிக்கவில்லை.

இந்தியாவிலே, நாடு முழுவதிலும் பரவியிருந்த — காங்கிரசி லேயும் கலந்திருந்த — கம்யூனிஸ்டுகளும் ஆகஸ்டுத் தீர்மா னத்தை வெறுத்தனர் — எதிர்த்தனர். ஆயினும் அசாத்தியமான துணிச்சல் காட்டி அகில இந்திய காங்கிரஸ் ஆகஸ்டுத் தீர்மா னத்தை நிறைவேற்றியது.

ஆகஸ்டு தீர்மானத்தையொட்டி நாடு முழுவதும் ஏகாதிபத் தியத்திற்கு எதிராகப் போர் நடத்த காந்தியடிகள் கருதியிருந்தா ரென்றாலும், அதற்கான தேதியை அவர் உறுதி செய்யவில்லை. வைசிராயைக் கண்டு பேசிய பின்னர் தேதி நிச்சயிப்பதாக இருந்தனர். ஆனால், அ.இ.கா.க.வில் ஆகஸ்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுமே பிரிட்டிஷ் ஆதிக்கம் காங்கிரஸ் மீது வலுவில் போர் தொடுத்துவிட்டது.

அந்தத் தீர்மானம் எழுதப்பட்ட மை உலர்வதற்கு முன்பே ஆகஸ்டு 9-ஆம் தேதியன்று அதிகாலையில் காந்தியடிகள் பம்பாயில் கைது செய்யப்பட்டார். காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினர்கள் அவ்வளவு பேரும் சிறைப்பட்டனர். தேசத்தின் எட்டுத் திக்கிலும் வெறிபிடித்த ஏகாதிபத்தியம் தேச பக்தர்களை வேட்டையாடியது. காங்கிரஸ் மகாசபையைச் ''சட்ட விரோத மான அமைப்பு'' என்று அறிவித்தது. பம்பாயிலிருந்த அகில இந்திய காங்கிரஸ் அலுவலகம் உள்ளிட்டு நாடு முழுவதிலும் காங்கிரஸ் அலுவலகங்கள் போலீசாரால் கைப்பற்றப்பட்டன.

பிரிட்டிஷாரின் வெறியாட்டம்!

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பேரால் இரகசியச் சுற்றறிக்கை ஒன்று மாகாண காங்கிரஸ் கமிட்டிகளுக்கு ஆகஸ் டுத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பே அனுப்பப்பட்ட தென்று ஏற்கனவே கூறினேன் அல்லவா! அந்த இரகசியச் சுற்றறிக்கை சென்னை ஜில்லா ஆந்திரா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் மூலமாக சென்னை போலீசாருக்குக் கிடைத்து விட்டது. இந்திய அரசின் மூலம் அந்த இரகசியத் தஸ்தாவேசு இங்கிலாந்திலிருந்து இந்தியா மந்திரிக்கு அனுப்பப் பெற்றது. ஆம்; ''மதறாஸ் மனதே'' என்று தமிழருக்கு எதிராகக் கூச்சலிடு

வதற்காகச் சென்னையில் அமைக்கப்பெற்ற ஆந்திர ஜில்லா காங்கிரஸ் கமிட்டி, காங்கிரசையும் தேசத்தையும் காட்டிக் கொடுத்துவிட்டது.

இந்தத் தகவலை — அதாவது, சென்னை ஆந்திர காங்கிரஸ் கமிட்டிச் செயலாளர் மூலம் இரகசியச் சுற்றறிக்கையின் நகல் கிடைத்ததை — லண்டனில் இந்தியா மந்திரியே வெளியிட்டார். ஆகஸ்டுத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்குச் சில நாட்களுக்கு முன்பே இரகசியச் சுற்றறிக்கை பிரிட்டிஷ் அரசுக்குக் கிடைத்துவிட்டதால், அடக்குமுறைக்கான ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்வது, அதற்குச் சாத்தியமானது. காங்கிரசை வேரும் வேரடி மண்ணுமில்லாமல் ஒழித்துக் கட்டிவிட விரதமெடுத்ததுபோல அன்னிய ஆட்சி வெறிபிடித்துச் செயல்பட்டது!

''இரகசியச் சுற்றிக்கையின் பிரதி யாரிடமிருப்பினும், அவர் மரண தண்டனைக்கு உள்ளாகக்கூடும்!'' என்று இந்தியா மந்திரியும் பயமுறுத்தியிருந்தார்.

நாடெங்கும் புரட்சி!

காந்தியடிகள் உள்ளிட்டு ஆகஸ்டு 9-இல் கைது செய்யப்பட்ட காங்கிரஸ் தலைவர்கள் எங்குச் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை அரசு வெளியிடவில்லை. இதனால், அவர்கள் நாடு கடத்தப்பட்டிருக்கக் கூடுமென்று மக்களிலே பலர் நம்பினர். அவர்களை எல்லாம் அரசு விரைவில் கொன்றுவிடப் போவதாகக் கூட வதந்தி உலவியது. தலைவர்கள் வேட்டையாடப்பட்டதுமே தேசபக்த சமுதாயம் வீறுகொண்டெழுந்து விட்டது. நாட்டில் எங்கெங்கும் வேலை நிறுத்தங்களும், கடை அடைப்புகளும், தடையை மீறிய மாபெரும் ஊர்வலங் களும் நடைபெற்றன. இன்னொருபுறம் வன்முறைச் செயல்களும் ஆங்காங்கே தாண்டவமாடின. சில இடங்களில் ரெயில்கள் கவிழ்க்கப்பட்டன. வேறு சில இடங்களில் ரெயில்களும், காவல் நிலையங்களும் எரிக்கப்பட்டன.

இந்தப் புரட்சிகரமான சூழ்நிலை உருவாகிய ஆகஸ்டு 9-ஆம் தேதியன்று நான் மதுரை மாவட்டத்திலிருந்தேன். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு.கு. காமராசரின் விருப்பப் படி, அவர் தந்த இரகசியச் சுற்றறிக்கைப் பிரதிகளை வடாற் காடு, சேலம் மாவட்டங்களின் காங்கிரஸ் கமிட்டிச் செயலாளர் களுக்குக் கொடுத்துவிட்டு, ஆகஸ்டு 9-இல் மதுரை போய்ச் சேர்ந்தேன். மதுரை மாவட்டச் செயலாளருக்கும் ஒரு பிரதி கொடுத்தேன்.

அன்று காலை மதுரை நகருக்குச் சற்றுத் தொலைவிலுள்ள மீனாட்சிபுரத்தில் நடந்த மதுரை மாவட்டக் காங்கிரஸ் மாநாட் டில் பேசிவிட்டு, மாலை 4 மணிக்குத் திருமங்கலம் நகருக்குத் திரும்பினேன். அன்று மாலை அங்கு நான் காங்கிரஸ் கூட்டத் தில் பேசுவதாக இருந்தது. திருமங்கலத்துக்கு வந்து கொண்டி ருந்த போதுதான் நாடெங்கும் தலைவர்கள் கைது செய்யப்பட்டு வரும் செய்தி எனக்குக் கிடைத்தது. மோட்டாரில் திருமங்கலத் துக்குள் நுழைந்ததுமே, என் காதுக்குத் தண்டோரா ஒலி கேட் டது. ஆம்; நகரில் 144 தடையுத்தரவு போடப்பட்டிருப்பதாகத் தண்டோரா மூலம் அறிவிக்கப் பெற்றது. அப்போது மதுரை மாவட்ட காங்கிரஸ் செயலாளராக இருந்த திரு. புலி மீனாட்சி சுந்தரம் என்பவர்தான் என்னைத் திருமங்கலம் நகருக்கு அழைத் துச் சென்றார். உண்மையிலேயே அவர் 'புலி'தான். என்னைக் கைது செய்வதற்குச் சென்னையிலிருந்து மதுரை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டெண்டுக்கு ஆணை வந்திருப்பதைத் திருமங்கலம் பேருந்து நிலையத்தில் சந்தித்த போலீசார் மூலம் 'புலி'யார் அறிந்து கொண்டு விட்டார்.

தலைமறைவானேன்!

காங்கிரஸ் கமிட்டிகளுக்கு அனுப்பப்பட்ட ரகசியச் சுற்றறிக்கையிலே, காங்கிரஸ்காரர்கள் — குறிப்பாக, காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகள் தாங்களாகவே சிறைப்பட்டு விடக்கூடா தென்றும், தலைமறைவாக இருந்து செயல்பட வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டிருந்தது. அதனால், புலி மீனாட்சிசுந்தரம், என்னை எப்பாடுபட்டேனும் பத்திரமாகச் சென்னைக்கு

அனுப்பி விடுவதிலே மிகுந்த அக்கறை காட்டினார். திருமங்கலம் ரெயில் நிலையத்தில் திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் என்னை ஏற்றிவிட்டு, 'மதுரை மாவட்டத்தில் ஆகஸ்டுப் புரட்சி அபாரமாக நடக்கும்' என்று எனக்கு உறுதி கூறிவிட்டு, என்னிடம் விடைபெற்றுச் சென்றார்.

ரெயில் மதுரை சந்திப்பை அடைந்தபோது பிளாட்பாரத்தில் வெள்ளம் போல் மக்கள் குழுமியிருந்தனர். காரணம், மதுரை ஏ.வைத்தியநாதய்யர், சிதம்பர பாரதி ஆகிய மதுரை மாவட்டத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு நானிருந்த ரயிலிலே ஏற்றப்பட்டதுதான். நான் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்தேன். அப்போது வெளி மாவட்டங்களின் பொது மக்களிலே அதிகம் பேர் என்னை அறிந்து வைத்திருக்கவில்லை. அநேகமாக, இரகசியப் போலீசார் நிலையும் இதுதான். அதனால், நான் பாதுகாப்பாகச் சென்னைக்கு வரமுடிந்தது. மறுநாள் அதிகாலையில் தாம்பரம் ரயில்வே நிலையத்தில் செய்திப் பத்திரிகை ஒன்றை வாங்கிப் படித்தேன். அதிலே, தேனாம்பேட்டை காங்கிரஸ் மாளிகையைப் போலீஸ் கைப்பற்றிக் கொண்டு விட்டதாகவும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியும், சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியும் சட்டவிரோதமான அமைப்புகள் என அறிவிக்கப்பட்டிருப்பதாகவும், என்னைக் கைது செய்ய வாரண்டு பிறப்பிக்கப்பட்டு மதுரைக்கு அனுப்பப் பட்டிருப்பதாகவும், அநேகமாக அங்கு நான் கைது செய்யப் படலாமென்றும் செய்தி வெளியாகியிருந்தது.

அன்னை தரும் சோற்றுக்கு...

இதைப் படித்ததும், எந்த நேரத்திலும் நான் கைது செய்யப் படலாமென்பதை அறிந்தேன். அதற்கு முன் திருப்போரூரில் குடியமர்த்தப்பட்டிருந்த என் குடும்பத்தாரை ஒருமுறை பார்த்து விட விரும்பி, தாம்பரத்தில் ரயிலை விட்டிறங்கி, பஸ்ஸில் நேரே திருப்போரூருக்குச் சென்றேன். எனக்கு என்ன ஏற்பட்டு விட்டதோ என்று ஏங்கிக் கொண்டிருந்த என் பெற்றோரும், மனைவியும் என்னைப் பார்த்ததும் ஆறுதலடைந்தனர். ஆயினும், எந்த நேரத்திலும் நான் கைதியாகிவிடக் கூடுமென்று அச்சமுற்றனர்.

திருப்போரூர் சென்ற மூன்று மணி நேரத்திற்குள் என்னைக் கைது செய்ய சென்னைப் போலீசார் திருப்போரூர் காவல் நிலையத்திற்கு வந்திருப்பதாகத் தகவல் கிடைத்தது.

இனி, பயங்கரமான துன்பங்களை — ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைக் கொடுமைகளைச் சந்திக்க வேண்டியவனாக இருந்ததால், கடைசி முறையாக என் அன்னையாரின் கையால் சோறு வாங்கி உண்ண ஆசைப்பட்டேன். ஆம்; என் அன்னையார் தன் கையால் போடும் சோற்றை உண்ணுவதிலே எனக்குத் தனி மகிழ்ச்சி. ஆனால், வீட்டில் சமையல் முடிவதற்குள் போலீசார் என்னை வேட்டையாட வந்துவிடக் கூடுமாகையால் உணவு உட்கொள்ளாமலே திருப்போரூரை விட்டுப் புறப்பட்டேன். என் பெற்றோரும் மனைவியும் கண் கலக்கத்துடன் என்னை வழியனுப்பி வைத்தனர்.

சென்னையிலே காங்கிரஸ் மாளிகையைப் போலீசார் வசப் படுத்திக் கொண்டு விட்டதால், நான் தங்குவதற்கு வேறு இடந்தேட வேண்டியதாயிற்று. அந்த நாளிலே என்னைப் போன்ற காங்கிரஸ் நிர்வாகிகளுக்குத் தங்க இடங்கிடைப்பது அரிது. இடந்தருவோர் சிறைக் கம்பிகளை எண்ண வேண்டி ஏற்பட்டுவிடும். அந்தப் பயங்கர நிலையிலும் இராயபுரம் திரு.பி.ஆர். கஜபதி நாயுடு, திரு.பி.ஆர். சீராமுலு நாயுடு சகோதரர்கள், தேசபக்தி காரணமாக, போலீசாரால் தேடப்பட்டு வரும் எனக்கு அடைக்கலம் தந்தனர். எனக்கு மட்டுமா? விடுதலைப் போர் நடந்த காலத்திலெல்லாம் — தலைமறைவாக இருந்து செயல்பட்ட தேசபக்தர்கள் தங்குமிடமாக நாயுடு சகோதரர்களின் வீடு பயன்பட்டது.

கைதியானேன்!

மூன்று நாட்கள்வரை சென்னை நகரில் காங்கிரஸ் பிரமுகர்கள் பலரைக் கண்டு விடுதலைப் போரை நடத்துவதற்கு அவர்களுடைய ஒத்துழைப்பையும் உதவியையும் நாடினேன், ஆம்; தலைமறைவாகத் திரிந்துதான். ஆனால், நான் வியப்பும் வேதனையும் அடையும் வகையில் பல தலைவர்கள் என்னிடம்

பேசவும் அஞ்சி, என்னை விரட்டிவிடுவதற்கு அவசரப்பட்ட னர், ஆம்; போலீசார் என்னைப் பின்பற்றி வரக்கூடுமென்ற அச்சத்தால்! தலைமறைவாக இருந்து ஏகாதிபத்தியத்தையே சாய்த்துவிடலாம் என்று கற்பனை செய்து கொண்டிருந்த எனக்கு இவர்களுடைய போக்கு சோர்வைத் தந்தது. வெளியிலிருந்து எதையும் சாதிக்க முடியாதென்ற தோல்வி மனப்பான்மையை அடைந்தேன். தலைமறைவாக இருந்து புரட்சி நடத்தும் திறமை எனக்கில்லை என்பதையும் மூன்று நாட்களில் நான் பெற்ற அனுபவம் எனக்கு விளக்கியது. இப்படியெல்லாம் குழப்ப மடைந்த மனத்துடன் இருந்தபோது ஆகஸ்டு 13-ஆம் தேதி அன்று காலை பிடிவாரண்டுடன் போலீஸ் அதிகாரிகள் நான் இருந்த வீட்டிற்குள் நுழைந்தனர். ஒரு வகையில் அவர்கள் வருகை எனக்கு மகிழ்ச்சியையே தந்தது.

நாயுடு சகோதரர்களிடமும், அவர்கள் வீட்டிலிருந்த தாய் மார்களிடமும் விடைபெற்று, போலீசார் கொண்டு வந்த காரி லேறி, அவர்கள் அழைத்துப்போன வழியில் சென்றேன். எப் பொழுதுமே நான் கஷ்டப்படக் கண்டால் கண்கலங்கும் நாயுடு சகோதரர்கள், அன்று என்னை வழியனுப்பிய காட்சி என் மனத்தை உருக்கிவிட்டது. நல்லவேளையாக, தலைமறைவாக இருந்த எனக்கு இடமளித்ததற்காக போலீசார் அவர்களைத் துன்புறுத்தாதது எனக்கு ஆறுதலைத் தந்தது.

ஆகஸ்டு 13-ஆம் தேதி பிற்பகல் வேலூர் மத்திய சிறைச் சாலை என்னை வரவேற்றது. அதற்கு முன்பு மும்முறை நான் சிறை சென்றிருக்கிறேன் என்றாலும், அப்போதெல்லாம் சென்னை மத்திய சிறைச்சாலையில்தான் அடைக்கப்பட்டேன். வேலூர் சிறையை அணுகுவது இதுதான் முதன் முறையாதலால், இந்த இடமாறுதல் எனக்கு இன்பந் தருவதாகவே இருந்தது. வேலூர் சிறைச்சாலையில் பெண் கைதிகளுக்கென ஒதுக்கப்பட் டிருந்த பகுதியைக் காலி செய்து ஆகஸ்டுக் கிளர்ச்சியில் கைதியாகும் தலைவர்களுக்கென அதனை ஒதுக்கி வைத்திருந்த னர் சிறையதிகாரிகள். அந்தப் பகுதியில்தான் நான் சேர்க்கப்பட் டேன் எனக்கு முன்பே வடசென்னையில் என்னுடன் தோளோடு தோள் சேர்ந்து தேசப் பணி புரிந்து வந்த சர்தார்

பு.ம.ஆதிகேசவலு நாயகர் அங்கிருந்தார். என்னைச் செயலாள னாகக் கொண்ட சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் நாவலர் சத்தியமூர்த்தி ஐயர் இன்முகங் காட்டி, ''வாப்பா கிராமணி; என்ன மூன்று நாள் தாமதம்'' என்று கூறி என்னை வரவேற்றார். திரு.கு. காமராசர், ஆந்திரகேசரி டி.பிரகாசம் உட்படத் தென்னகத்தின் முன்னணித் தலைவர்கள் பலரை அங்கு நான் கண்டேன். இவர்களோடெல்லாம் சேர்ந்து சிறை வாழ்க்கை நடத்துவதற்கான பேற்றைத் தந்த பிரிட்டிஷ் பேரரசுக்கு மனத் துக்குள்ளேயே நன்றி செலுத்தினேன்.

நாங்கள் எல்லோரும் காவல் கைதிகளாகத்தான் சிறையி லடைக்கப் பட்டோம். இந்த வாழ்வைப் பெற பெருந்தலைவர் கள் பலர் ஆசைப்பட்ட செய்தியைத் தனி நபர் சத்தியாக்கிரகம் பற்றி விளக்கியபோதே கூறியிருக்கிறேன். அப்படி ஆசைப்ப டாத எளிய தொண்டனாகிய என்னையும் பாதுகாப்புக் கைதியா கச் சிறையில் வைத்தது சாம்ராஜ்யம். 'ஏ' வகுப்புக்கும் மேற் பட்ட விசேஷ வகுப்புக் கைதிகளாக நாங்கள் நடத்தப்பட்டோம். எங்களுடைய சுதந்திரத்தைப் பறித்ததைத் தவிர — எங்களு டைய குடும்பங்களிடமிருந்து எங்களைப் பிரித்ததைத் தவிர, மற்றத் தேவைகள் அனைத்தையும் எங்களுக்கு வழங்கியது அரசு.

பாரதியார் பாடல்!

ஆகஸ்டுக் கிளர்ச்சி தொடங்கிய பத்து நாட்களுக்குள் நான் இருந்த வார்டில் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை என்னை யும் சேர்த்து 41 ஆகிவிட்டது. வேலூர் சிறையிலே முதுபெருங் கிழவர்களான தேசபக்த கொண்டா வெங்கடப்பையா, ஆந்திர கேசரி பிரகாசம் ஆகிய ஆந்திரத் தலைவர்களுக்கு — அவர்கள் விருப்பப்படி — பாரதியார் பாடல்களைத் தெலுங்கில் மொழி பெயர்த்துச் சொல்லும் பணியை மேற்கொண்டேன். எனக்கு தெலுங்கில் எழுதப் படிக்கத் தெரியாது. ஆயினும் சுமாராகப் பேசுவேன். பிறர் பேசினால் புரிந்து கொள்வேன். இந்த அளவுக் கேனும் நான் தெரிந்து வைத்திருந்தது 'சென்னைத் தெலுங்கு' தான். ஆந்திர நாட்டில் வழங்கும் 'அச்சத் தெலுங்கு' அல்ல!

சென்னை நகரில் தெலுங்கை வீட்டு மொழியாகக் கொண்ட தேவாங்க வகுப்பாரின் வீடுகளிலே நெசவு வேலை செய்தபோது தெலுங்கில் பேசுவதற்குச் சிறிதளவு பயிற்சி பெற்றேன். அந்த அரைகுறை ஞானத்தைக் கொண்டு ஆந்திரத் தலைவர்களுக்குப் பாரதியாரின் பாடல்களை மொழிபெயர்த்துச் சொன்னேன். பாரதி கவிதையிலுள்ள ஆவேசத்தை ஆழமான பொருளை ஆந்திரத் தலைவர்கள் நன்கு அனுபவித்தனர். தங்கள் தெலுங்கு மொழியிலே இப்படி ஒரு மகாகவி தோன்றாததற்காக அவர்கள் வருந்தினர். தெலுங்கில் மட்டுமல்லாமல், இந்திய மொழிகளில் வேறு எந்த மொழியிலுமே பாரதியைப் போன்ற ஒரு போர்க் களப் புலவன் விடுதலைப் போராட்டக் காலத்தில் தோன்றவில்லை என்பதை எடுத்துக்கூறி, அவர்கள் ஆறுதலடையச் செய்தேன்.

வெளியேறுவதா? உள்ளிருப்பதா?

வேலூர் சிறைச்சாலையில் அடைபட்ட பின், ஆரம்ப நாட்களிலே, நாட்டில் நடைபெறும் வன்முறைச் செயல்கள் பற்றிய செய்திகளைச் சிறை வார்டர்கள் மூலமாக அறிந்து வந்தோம். எங்களுக்குப் பத்திரிகைகள் தரப்படவில்லை. எங்கள் குடும்பத்தார் உள்பட வெளியிலுள்ள எவரோடும் கடிதப் போக்கு நடத்த சிறையதிகாரிகள் எங்களை அனுமதிக்கவில்லை. அதனால், வார்டர்களின் மூலம் கிடைக்கும் செய்திகளைக் கொண்டுதான் நாட்டின் நடைமுறையை அறிந்தோம். பல இடங்களிலே சிறைச்சாலைகள் மக்களால் உடைக்கப்பட்டு அரசியல் கைதிகளும் பிற கிரிமினல் கைதிகளுங்கூட விடுதலை செய்யப்பட்டார்கள் என்பதனை அறிந்தோம். வேலூர் சிறையை நோக்கியும் மக்கள் வரக்கூடுமென்று எங்களிலே சிலர் கற்பனை செய்துகொண்டு அப்படி வந்துவிட்டால், புரட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டு சிறையிலிருந்து வெளியேறுவதா? இல்லையேல், புரட்சியாளர்களுக்கு அகிம்சையைப் போதித்து அனுப்பி விட்டு, நாம் சிறையிலேயே இருப்பதா? — என்றெல்லாம் எங்களிடையே விவாதம் நிகழும். நாவலர் சத்தியமூர்த்தி ஐயர் இந்த விவாதத்திலே பிரதான பங்கெடுப்பார்.

ஆகஸ்டு மாதம் 30-ஆம் தேதி பிற்பகல் 3 மணிக்குத் திடீரென்று சிறையதிகாரி ஒருவர் எங்களை அணுகி, எங்களில் 30 பேர்களுடைய பெயர்களைப் படித்து, ''இவர்களெல்லாம் மாலை 5 மணிக்குள் சிறையிலிருந்து வெளியேறத் தயாராக வேண்டும்'' என்று கூறினார். இதற்கு அதிகமாக அவர் எதுவும் கூற மறுத்துவிட்டார். அவர் படித்த பட்டியலிலே என் பெயரு மிருந்தது.

சிறையிலிருந்த தலைவர்கள்!

சிறை அதிகாரி படித்த 30 பெயர்களில் மொழிவாரி மாநிலத்தவர் விவரம் வருமாறு:

தமிழ்நாடு: கு. காமராசர், எஸ்.சத்தியமூர்த்தி, சி.என்.முத்துரங்க முதலியார், எம். பக்தவத்சலனார், கள்ளிடைக்குறிச்சி யக்ஞேஸ்வர சர்மா, திருவண்ணாமலை என்.அண்ணாமலைப் பிள்ளை, வேலூர் அ.குப்புசாமி முதலியார், மதுரை சிதம்பர பாரதி, காரைக்குடி ராம. சொக்கலிங்கம் செட்டியார், கே.ராஜாராம் நாயுடு, ம.பொ.சிவஞானம். ஆக மொத்தம் 11 பேர்.

ஆந்திரம்: டி. பிரகாசம், வி.வி.கிரி, காளேசுவர ராவ், காளா வெங்கடராவ், கல்லூரி சுப்பாராவ், என். பாபிநீடு, என் சஞ்சீவரெட்டி, கோடிரெட்டி பல்லமராசு, தென்னேட்டி விசுவநாதம், சித்தூர் எம். அனந்தசயனம் ஐயங்கார், சிட்டிபாபு மற்றும் இருவர். ஆக மொத்தம் 14 பேர்.

கேரளம்: மாதவ மேனன், குருவாயூர் கேளப்பன், என். ராகவ மேனன், கேசவ மேனன்.

கன்னடம்: கே.ஆர். கரந்த்

வெளியேறுவதற்குத் தயாராகச் சொன்னது, விடுதலை செய்வதற்காகவா? வேறு சிறைச்சாலைக்குக் கொண்டு போகவா? — என்பது எங்களுக்கு விளங்கவில்லை. மாலை 5 மணிக்கு மேற்சொன்ன 30 பேரும் சிறைக்கு வெளியேயிருந்த போலீஸ் வான்களில் ஏற்றப்பட்டு காட்பாடி ரெயில்வே சந்திப்

புக்குக் கொண்டு செல்லப்பட்டோம். அங்கிருந்து ரெயில் மூல மாக இரவு 7 மணிக்குச் சென்னைக்குக் கொண்டு வரப்பட் டோம். சென்னை சென்டிரல் ஸ்டேஷனுக்கு வடக்கே இரண்டு பர்லாங் தூரத்தில் நாங்கள் இருந்த ரெயில் பெட்டிகள் நிறுத்தப் பட்டன. இரவு முழுவதையும் அந்தப் பெட்டிகளிலேயே கழித்த பின்னர், மறுநாள் சென்னை மத்திய சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டோம். ஆகஸ்டு 31-ஆம் தேதி பகலும் இரவும், அங்கு வைக்கப்பட்டு மறுநாள் (செப்டம்பர் 1-ஆம் தேதி) காலை கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரசில் ஏற்றப்பட்டு, வடக்கு நோக்கி அழைத்துச் செல்லப்பட்டோம். நாங்கள் எங்குக் கொண்டு செல்லப்படுகிறோம் என்பது எங்களில் யாருக்கும் தெரியாது. எங்களுடன் காவலுக்கு வந்த உயர்தர போலீஸ் அதிகாரிகள் நாங்கள் கொண்டு போகப்படும் இடம் தங்களுக்கும் தெரியா தென்று கூறினர்.

சென்னை சென்டிரல் ஸ்டேஷனில் சிறிது நேரம் பிளாட்பா ரத்தில் பொழுதைப் போக்கியபோது எங்களுடைய உறவினர்க ளிலே சிலர் எங்களை வந்து பார்த்தார்கள். முன்னாள் இரவு எங்களில் சென்னை நகர வாசிகளாக இருந்தவர்கள் நகரிலுள்ள தங்கள் குடும்பங்களுக்கு — மறுநாள் சென்டிரல் ஸ்டேஷனில் வந்து சந்திக்குமாறு — சிறை வார்டர்கள் மூலம் தகவல் அனுப்பியிருந்தனர்.

ஆள் மாறாட்டம்!

சென்னை சென்டிரல் ஸ்டேஷனில் என்னை வழியனுப்ப என் தம்பி ம.பொ. பரசுராமன் வந்திருந்தார். ரெயில் புறப்படு முன் சிறிது நேரம் பிளாட்பாரத்தில் நின்ற வண்ணம் சகோதர அரசியல் கைதிகள் சிலருடன் உரையாடிக் கொண்டிருந்தேன். ரெயில் புறப்பட மணியடித்ததும், எனக்கு இடம் ஒதுக்கப்பட்டி ருந்த பெட்டிக்குள் சென்றபோது நான் வியப்படைந்தேன். என் தம்பியை நான் என்று தவறாக நினைத்து, போலீஸ் அதிகாரிகள் அவரை ரெயில் பெட்டியில் ஏற்றிவிட்டனர். என் தம்பியின் முகச் சாயல் என்னைப் போலவே இருக்கும். அதனால் கலக்க மடைந்த அதிகாரிகள், என்னை பிளாட்பாரத்தில் விட்டுவிட்டு,

அவரை ரெயில் பெட்டியில் ஏற்றிவிட்டனர். அவரும் மனக் குழப்பமடைந்து தடை சொல்லாமல் ஏறிவிட்டார். இந்த நிகழ்ச்சி வேதனைமிக்க சூழ்நிலையிலே நான் சிறிது சிரிப்பதற் கும் வாய்ப்பு தந்தது. எங்குக் கொண்டு போகப்படுகிறோம் என்று தெரியாத நிலையில் நானும், மற்றும் 29 தேசபக்தர்களும் ரயில் பெட்டிகளில் அமர்ந்திருக்க, கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் கம்பீரமாகப் புறப்பட்டது. அந்த ரெயிலுக்குத் தெரியும், தான் போய்ச் சேர வேண்டிய இடம் டில்லிதான் என்று. ஆனால், எங்கள் நிலை அப்படியில்லை.

ரெயில் சென்று கொண்டிருந்தபோது விசயவாடாவுக்கு அருகே சுவையான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. மாலையில் ரெயில் விசயவாடாவை அடைந்தபோது அங்கு எங்கள் அனை வருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது. அதனை உண்ட பின்னர் திரு. சத்தியமூர்த்தி ஐயர், தமக்குச் சோடா வேண்டு மென்று கேட்டார். அவருக்குக் காவலாக நியமிக்கப்பட்ட அதிகாரி சோடா தருவதாகச் சொல்லி ரெயில் புறப்படும்வரை தராமலே ஏமாற்றிவிட்டார். ஐயருக்குக் கடுங்கோபம் ஏற்பட் டது. ஸ்டேஷனிலிருந்து ரெயில் புறப்பட்டு ஒரு பர்லாங்கு தூரம் சென்று கொண்டிருந்தபோது, செயினைப் பிடித்து இழுத்துவிட் டார். அதைக்கூட சரியாக இழுக்க அவர் கையில் வலிமை இல்லை. அதனால், அவருடன் இருந்த திரு. கே. ராசாராம் நாயுடு ரயிலை நிறுத்துவதிலே அவருக்குத் துணை புரிந்தார். ரயில் நின்ற பின்னர், ரயில் அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிக ளும் ஐயர் இருந்த பெட்டியை அணுகியபோது, 'சோடா புட்டி தராதவரை ரெயிலை மேலே செல்ல விடமாட்டேன்' என்று கோபத்துடன் கூறினார். அவர்கள் சிரித்துவிட்டு, ரயிலைத் திரும்பவும் பிளாட்பாரத்துக்குக் கொண்டு சென்று, ஐயருக்கு சோடா கொடுத்தனர்.

மறுநாள் முற்பகலில் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் நாகபுரி ஜங்ஷனை அடைந்தது. அங்கு பிளாட்பாரத்தில் மத்திய மாகாண போலீஸ் அதிகாரிகளும், ஏராளமான காவலர்களும் காத்திருந்து சுதந்திரத்தை இழந்த கைதிகளாகிய எங்களை 'வரவேற்றனர்' அத்துடன், நாகபுரிக்கு 98 மைல் தொலைவி

லுள்ள அமராவதி (அம்ரோத்தி)ச் சிறைச்சாலைக்கு எங்களை அழைத்துச் செல்லப் போவதாக அறிவித்தனர். அதைக் கேட்டு நாங்கள் எல்லோருமே ஆறுதலடைந்தோம். அயல் மாநிலத்தில் உள்ள அமராவதிச் சிறையில் அடைபடுவதிலே எங்களில் யாருக்குமே மகிழ்ச்சியில்லை என்றாலும், எங்கே அழைத்துச் செல்லப்படுகிறோம் என்பது தெரியாமலே சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்த எங்கள் மனங்களுக்குக் கொண்டு செல்லப்படும் இடம் தெரிந்து விட்டதனால் ஆறுதலேற்படுவது இயற்கை தானே!

சென்னை மாநிலத்தவராகிய எங்கள் முப்பது பேரை சென்னைக்கு ஆயிரம் மைல் தொலைவிலுள்ள மத்திய மாநிலச் சிறையிலே அடைத்து வைக்க அன்றைய இந்திய அரசு முடிவெடுத்ததற்குக் காரணமுண்டு. அதனை இங்கு விளக்குவது அவசியமாகும்.

ஆகஸ்டுக் கிளர்ச்சி வன்முறையில் நடைபெறுமென்ற தகவல் பிரிட்டிஷ் அரசுக்கு முன்கூட்டியே கிடைத்துவிட்டதால், அரசு அதிகப்படியாகப் பயந்துவிட்டது. காங்கிரஸ் தலைவர்களும், தொண்டர்களும் சிறையிலிருந்த வண்ணமே அரசைக் கவிழ்ப்பதற்கான சதிச் செயல்களில் ஈடுபடக் கூடுமென்று அரசு தவறாக அனுமானித்து விட்டது. 1937 முதல் 1939-ஆம் ஆண்டுவரை பல மாநிலங்களிலே காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றதால், திரும்பவும் விரைவில் ஒருநாள் காங்கிரஸ் அதிகாரத்திற்கு வருவது உறுதி என்ற எண்ணம் அதிகார வர்க்கத்திற்கு ஏற்பட்டிருந்தது. அதனால், சிறை அதிகாரிகளும், சிறையிலுள்ள காங்கிரஸ் கைதிகளின் சதிச் செயல்களுக்குத் துணை புரியக் கூடுமென்று பிரிட்டிஷ் அரசுக்கு ஐயமேற்பட்டது. ஆகவே, காங்கிரஸ் ஆட்சி புரிந்த மாநிலங்களின் செல்வாக்கு மிக்க காங்கிரஸ் தலைவர்களை அவர்கள் சொந்த மாநிலங்களிலே சிறை வைப்பதில்லை என்று முடிவெடுத்தது. ஒரு மாநிலத்தின் தலைவர்களை மற்றொரு மாநிலத்தின் சிறையில் அடைத்து வைக்கவும் தீர்மானித்திருந்தது. அப்படிப்பட்ட அரசியல் தலைவர்களின் பட்டியலொன்றை அகில இந்திய ரீதியில் அரசு தயாரித்தது. அந்தப் பட்டியலிலுள்ளவர்களைச் சிறைப்

பிடிக்க வைசிராயின் அனுமதி பேரில் வாரண்டு பிறப்பிக்கப்பட்டதாக அப்போது சொல்லப்பட்டது. ஒரு ராஜ்யத் தலைவரை இன்னொரு ராஜ்யச் சிறையில் வைப்பதானால், அதற்கு மத்திய அரசின் உத்தரவு தேவை. சென்னை ராஜ்யத்தில் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்ட காவற் கைதிகள் 41 பேரும் வைசிராய் ஆணையின் பேரில்தான் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். இதனை மிகுந்த பெருமையாகவே கருதினர் எங்களில் சிலர். என்ன காரணத்தாலோ, வைசிராயின் ஆணைப்படி சிறைபபிடிக்கப்பட்ட 41 பேரில் 11 பேரை வேலூர் சிறைச்சாலையிலேயே நிறுத்தி விட்டார்கள். அவர்கள் அதிருஷ்டசாலிகளா, துரதிருஷ்டசாலிகளா? என்பதை அப்போது எங்களால் நிர்ணயிக்க முடியவில்லை.

கைதிகள் பரிமாற்றம்!

சென்னை மாநிலத்திலிருந்து மத்திய மாநிலச் சிறைக்கு அனுப்பப்பட்ட எங்கள் முப்பது பேருக்கு ஈடாக மத்திய மாநில அரசியல் கைதிகள் 30 பேர் வேலூர் சிறைக்கு அனுப்பப்பட்டனர். அவர்களில் ஆச்சாரிய வினோபா பாவே, மத்திய மாநில முன்னாள் முதலமைச்சர் திரு. சுக்லா ஆகியோர் முக்கியமானவர்களாவர். மூன்று போலீஸ் வேன்களில் எங்கள் முப்பது பேரையும் ஏற்றி, பலத்த பந்தோபஸ்துடன் அமராவதிக்குக் கொண்டு சென்றனர். அந்த நேரத்தில் அடைமழை பெய்து கொண்டிருந்தது. வழியில் நான், எஸ். சத்தியமூர்த்தி, மற்றும் சிலர் அமர்ந்திருந்த வேன் வண்டியின் டயர் வெடித்து விட்டது. அதைச் சரி செய்வதற்காக வேனிலிருந்த அனைவரையும் அதிகாரிகள் கீழே இறக்கிவிட்டனர். கொட்டுகிற மழையில் நனைந்தவண்ணம் சாலையின் ஓரத்தில் சுமார் இருபது நிமிட நேரம் நின்று கொண்டிருந்தோம். தன் உடம்புக்கு என்ன வந்துவிடுமோ என்று திரு. சத்தியமூர்த்தி அய்யர் மிகவும் பயந்துவிட்டார். எங்கள் படுக்கைகளெல்லாம் போலீஸ் வேனின் மேல்பரப்பில் போடப்பட்டிருந்தமையால், அவை அனைத்தும் மழையில் 'சுகமாக' நனைந்து கொண்டிருந்தன.

டயர் மாற்றுவதற்கு வேன் நிறுத்தப்பட்ட நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு எங்களில் ஒருவரான திரு.கே. மாதவ மேனன், ஒரு அருமையான காரியத்தைச் செய்தார். நாங்கள் அமராவதிக்குக் கொண்டு செல்லப்படும் செய்தியை ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதி அந்த வழியே சென்று கொண்டிருந்த ஒரு லாரி டிரைவரிடம் கொடுத்து நாகபுரியிலுள்ள நாளிதழ்களில் ஒன்றான 'நாகபுரி டைம்ஸுக்குக்' கொடுத்து விடும்படி செய்தார். நாகபுரிப் பத்திரிகைகளில் வெளி வந்துவிட்டால் சென்னைக்கும் செய்தி தெரிந்து விடுந்தானே!

அமராவதிச் சிறைச்சாலை

இரவு 9 மணிக்கு நாங்கள் அமராவதிச் சிறை வாயிலுக்குக் கொண்டு போகப்பட்டோம். அந்தச் சிறைச்சாலை அமராவதி நகருக்கு ஏழு மைல் தொலைவில் மக்கள் நடமாட்டமில்லாத ஒரு காட்டில் இருக்கிறது. சிறைச்சாலை முழுவதும் பயங்கர மான இருளில் மூழ்கிக் கிடந்தது. அதன் தலைவாசலிலே அரிக்கன் விளக்கு ஒன்று மின்மினி போல மின்னிக் கொண்டிருந் தது. சிறையின் வெளித்தோற்றத்தைப் பார்த்ததுமே உட்பக்கத் தின் நிலைமை எப்படியிருக்குமென்பதனை எங்களால் அனுமா னிக்க முடிந்தது. மின்சார வசதியில்லாத சிறைச்சாலை என்ற துமே எங்களில் சுகஜீவிகளாக வாழ்ந்தவர்கள் திடுக்கிட்டு விட்டனர். ஆனானப்பட்ட வைசிராயின் ஆணை மீது காவற் கைதிகளாகச் சிறைப் பிடிக்கப்பட்ட அகில இந்தியப் புகழ்பெற்ற பெருந்தலைவர்களை இவ்வளவு மோசமான ஒரு சிறைக்கு பிரிட்டிஷ் அரசு அனுப்பி வைக்குமென்று என்னுடனிருந்தவர் களில் யாருமே எதிர்பார்க்கவில்லை. சிறை சூப்பிரண்டென்டும், ஜெயிலரும் எங்கள் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த னர். பாவம்! அந்த அதிகாரிகள் அளவிறந்த மரியாதை காட்டித் தான் எங்களை வரவேற்றனர். அதிலொன்றும் குறைவில்லை. நாங்கள் அன்று பகல் நாகபுரியில் தரப்பட்ட உணவிற்குப் பின்னர் ஒரு கப் காப்பிக்குக் கூட வழியின்றி இருந்தோம். இந்நாளிலே, பன்னிரண்டுமணி நேர உண்ணாவிரதப் போராட் டம் நடத்தப்படுவதைப் பார்க்கிறோம். அதன்படி பார்த்தால் நாங்களும் பத்து மணி நேர உண்ணாவிரதமிருந்தோம் — இல்லை; எங்கள் விருப்பத்துக்கு மாறாக உண்ணாவிரதம் கடைப்பிடிக்கக் கட்டாயப்படுத்தப் பட்டோம்.

ஐயரின் ஆவேசம்!

நாவலர் எஸ். சத்தியமூர்த்தி ஐயர், சோதனைமிக்க இந்த நேரத்தில் மிகுந்த துணிச்சலுடன் நடந்து கொண்டார். சிறைச்

சாலையின் சூழ்நிலையைப் பார்த்ததுமே உண்மையில் அவர் பயந்து போய்விட்டார். ஆனால், அந்தப் பயத்திலும் துணிவு காட்டி, எங்களுடைய தேவைகளை ஒரு பட்டியல் தயாரித்து, அதைச் சிறையதிகாரியிடம் கொடுத்தார். ''இந்த வசதிகளை எல்லாம் தாமதமின்றி வழங்குவதாக உறுதி கொடுத்தலொழிய நாங்கள் சிறைக்குள் நுழைய மாட்டோம். முடியுமானால் எங்க ளில் ஒவ்வொருவரையும் குண்டுக்கட்டாகத் தூக்கிக் கொண்டு போய், உள்ளே போடுங்கள்'' என்று மிகுந்த கோபத்துடன் கூறினார். பிரிட்டிஷ் ஆட்சியை வாயார வசைபாடினார். எங்க ளிடம் நாகரிகக் குறைவாக நடந்து கொள்வதாகவும் அரசு மீது குற்றம் சாட்டினார். அய்யரின் கோபத்தைக் கண்டு அஞ்சிய சிறையதிகாரி பட்டியலிலுள்ள வசதிகள் அனைத்தையும் செய்து தருவதாக உறுதி கூறினார்.

சிறையதிகாரிகள், எங்களுக்குத் தேவைப்படும் இரவு உண வைத் தயாராக வைத்திருக்கவில்லை. இரவு உணவு கொடுத்தாக வேண்டுமென்று எங்கள் சார்பில் ஐயர் பிடிவாதமாக வற்புறுத்தி னார். நேரமாகி விட்டதால் எங்களிலே சிலர் இரவு உணவை விரும்பவில்லை. ஆயினும் கட்டுப்பாட்டைக் கருதி, இரவு உணவு தேவை என்ற கோரிக்கையை நாங்கள் எல்லோரும் ஒருமுகமாகத் தெரிவித்தோம். சிறையதிகாரிகள் அரும்பாடு பட்டு, சிறையிலேயே கோதுமை ரொட்டியும், அரிசிச் சோறும் தயாரித்து சிறிது சாம்பார் — கறியுடன் இரவு 1 மணிக்கு அளித்தனர். நான் போலீஸ் வேனில் நீண்டதூரம் பயணம் செய்த அலுப்பால் பட்டினியோடு உறங்கிவிட்டேன்.

காலையில் விழித்தெழுந்து பார்த்ததும் சிறைச்சாலையின் தோற்றம் கவலையளிப்பதாக இருந்தது. சிறைச்சாலை என்பது சுகஜீவனத்துக்கான மாளிகையாக இருக்க முடியாதென்பதை நாங்கள் அறிவோம். எங்களில் ஒவ்வொருவரும் சிறை சென்று பழக்கப்பட்டவர்களே. ஆயினும், முன்னர் எப்போதும் அனுப வித்தறியாத இன்னல்களை அமராவதிச் சிறைச்சாலையில் அனு பவிக்க வேண்டியிருக்கும் என்பதனை அறிந்தபோதுதான் நாங் கள் கவலைப்பட்டோம். எங்களிலே சிலர் இரத்தக் கொதிப்பு, ஆஸ்துமா, நீரிழிவு, பைல்ஸ் போன்ற கடுமையான நோய்களை

உடையவர்களாக இருந்தனர். அமராவதிச் சிறைச்சாலையில் முதல்தரமான சிகிச்சைக்கு வசதியில்லை. மத்திய மாநிலத்தி லேயே முதல்தரமான மருத்துவரும், மருத்துவச் சாதனங்களும் இல்லை என்று கேள்விப்பட்டோம்.

சிறைச்சாலையில் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் மேல் கூரை துத்தநாகத் தகடுகளால் வேயப்பட்டிருந்தது. கோடைக்காலத்தில் 120 டிகிரி அளவில் வெயில் காயக்கூடிய பிரதேசத்திலே மின்சார விசிறி கூட இல்லாமல் துத்தநாகத் தகடு வேயப்பட்ட இடத்தில் வாழ்க்கை நடத்துவதென்பது கஷ்டம் தானே!

நாங்கள் குடியமர்த்தப்பட்ட கட்டிடத்தில் குளிர் காலத்தில் உதவக்கூடிய அடைப்பு எதுவுமில்லை! அறைக்குக் கம்பிக் கதவுகளே இருந்தன. சிறைச்சாலைதானே! குளிப்பதற்குக்கூட இடவசதி இல்லை. என்னைப் பொறுத்தவரையில் நான் இதைப் பற்றி எல்லாம் கவலைப்படவில்லை. ஏனெனில், ஒரு சுகஜீவி விரும்பக்கூடிய வாழ்க்கை வசதி எதையும் நான் அனுபவித்தறி யாதவனாக இருந்தேன். அதனால் மின்சார வசதி இல்லாத இடத்தில் வாழ்க்கை நடத்துவதுபற்றி நான் கவலைப்பட வில்லை. ஆனால், கோடைக் காலத்தில் 120 டிகிரி வெயிலின் கொடுமையை அனுபவிக்க வேண்டுமென்பதைக் கேள்விப் பட்டபோது எனக்கும் கொஞ்சம் பயமாகத்தானிருந்தது.

அமராவதிச் சிறைச்சாலை மத்திய மாகாணத்திலே மூன் றாந்தரமானது. இந்தச் சிறையிலே ஆண்டுதோறும் கபால சுரத்தால் ஏராளமானவர்கள் மரணமடைவது வழக்கம் என்றெல் லாம் சிறை வார்டர்கள் — கிரிமினல் கைதிகள் வாயிலாக அறிந்தோம். 'மனிதக் குரங்குகள்' சிறைச்சாலைக்குள்ளே சதா நடமாடிக் கொண்டிருந்தன. அவற்றை விரட்டுவதற்கென்றே சில வார்டர்கள் விசேஷமாக நியமிக்கப்பட்டிருந்தனர். இதை எல்லாம் கண்டும் கேட்டும் கவலையுற்ற திரு.எஸ். சத்திய மூர்த்தி அமராவதிச் சிறையை அடைந்த மறுநாள் முற்பகலில் எங்கள் முப்பது பேரையும் ஒரு இடத்தில் கூட்டி வைத்து கவலை தோய்ந்த முகத்துடன் சிறு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

அதிலே, உடனடியாக எங்களைச் சென்னை மாநிலச் சிறைக்கு மாற்ற வேண்டுமென்று அரசுக்கு நாங்கள் அனைவரும் ஒருமனத்துடன் கோரிக்கை அனுப்ப வேண்டுமென்று வற்புறுத்தினார்.

குடும்பத்தாருடன் கடிதப் போக்குவரத்து நடத்தவும் அனுமதி வழங்குமாறு அரசினரைக் கேட்க வேண்டுமென்றும் கூறினார்.

எங்களிலே ஆந்திரர்கள், ஐயரின் கோரிக்கைகளை ஆதரிக்கவில்லை. கோடைக்காலத்தில் ஆந்திர நாட்டிலே 118 டிகிரி வெயில் காயும் பிரதேசங்கள் உண்டு. மற்றும் அமராவதிச் சிறை ஆந்திர நாட்டின் எல்லைக்கு அதிக தொலைவிலில்லை. இந்தக் காரணங்களைக் காட்டி, சிறைச்சாலைத் துன்பங்களைச் சகித்துக் கொள்ள வேண்டியது காந்தியவாதிகளின் கடமையென்று கூறி, ஐயரின் சிறைமாற்றக் கோரிக்கையை ஆந்திரர்கள் ஆதரிக்கவில்லை. இதனால், அமராவதிச் சிறையில் புகுந்த நாளிலேயே ஆந்திரருக்கும் தமிழருக்குமிடையே சிறிது மனத்தாங்கல் ஏற்பட்டுவிட்டது. ஆந்திரகேசரி திரு.டி. பிரகாசம் சிறை வாழ்க்கையிலே வசதிகள் கோருவதைக் கடுமையாக எதிர்த்தார். பின்னர், எப்படியோ ஒருவிதமாக அத்தியாவசியத் தேவைகளை மட்டும் வற்புறுத்தி அரசுக்கு மனு செய்வதென்று முடிவானது. அதன் பின் மனு அனுப்பப்பட்டது.

நாளடைவில் ஒன்றன்பின் ஒன்றாகப் பல வசதிகள் சிறையதிகாரிகளால் எங்களுக்கு வழங்கப்பட்டன. எங்களில் ஆந்திரர்களான திரு. கல்லூரி சுப்பாராவ், சித்தூர் எம். அனந்தசயனம் ஐயங்கார் ஆகிய இருவரும் சமையல் பொறுப்பை மேற்பார்வையிட நியமிக்கப்பட்டனர். திரு.வி.வி. கிரி, எங்கள் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். திரு.எம். பக்தவத்சலம் அவர்கள், எங்களுக்காக அரசு வழங்கும் படிப் பணம் முழுவதும் செலவழிக்கப்படுகிறதா என்பதனைப் பார்க்கும் பொறுப்பில் நியமிக்கப்பட்டார்.

அந்த நாளில் ''சென்னை ராஜ்யம்'' பன்மொழிப் பிரதேசமாக இருந்ததால், விடுதலைப் போராட்டக் காலத்திலே, தமிழர்

— ஆந்திரர் — கேரளர் — கன்னடர் ஆகிய நால்வேறு இனத்துத் தேச பக்தர்கள் ஒரே சிறையில் அடைபடுவது தவிர்க்க முடியாததாக இருந்தது. ஆனால், தமிழரும் ஆந்திரரும் மன மொத்து வாழ முடிவதில்லை. தமிழரிடமிருந்து தங்களைப் பிரித்துப் பார்ப்பது ஆந்திரர்களுக்கு வழக்கமாக இருந்தது.

ஏதேனும் சிறு வசதி தமிழர்களுக்குக் கிடைத்துவிட்டால் அதற்கு எதிராக ஆந்திர தேசபக்தர்கள் ஒரு பெரிய கிளர்ச்சி யையே நடத்தி விடுவார்கள். தாழ் மட்டத்திலுள்ள தொண்டர் களிலிருந்து உயர்மட்டத்தில் உள்ள தலைவர்கள் வரை ஆந்திரர் எல்லோரிடமும் இந்தக் குறைபாட்டினைக் கண்டிருக்கிறேன். அமராவதிச் சிறையிலும் சிறைபுகுந்த ஆரம்ப நாளிலேயே தமிழருடன் ''ஒத்துழையாமை'' நடத்தத் தொடங்கினர் ஆந்திரத் தலைவர்கள்.

வைசிராய் வாரண்டின் மீது கைது செய்யப்பட்டு, மாநிலம் கடத்தப்பட்ட எங்களது நிலை, அன்றொரு நாள் லோகமான்ய பால கங்காதர திலகர் பர்மாவிலுள்ள மாண்டலே சிறையில் வைக்கப்பட்டதற்கு ஒத்ததாக இருந்தது. திலகர் மாண்டலே சிறையில் வைக்கப்பட்டபோது பர்மா அன்றைய இந்தியாவின் ஒரு மாநிலமாகவே, இருந்ததென்பதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். திலகரின் மாண்டலே சிறைவாசத்தை நாடு கடத்தப்பட்ட வாழ்க்கையாகவே வருணிக்கின்றனர் வரலாற் றாசிரியர்கள். அதனுடன் நோக்குமிடத்து, வேற்று மாநிலத்தி லுள்ள அமராவதிச் சிறையில் அடைக்கப்பட்ட தென்னிந்திய தேசபக்தர் 30 பேரும்கூட நாடு கடத்தப்பட்டவர்களேயாவர். அவசரமாகச் சில பல வசதிகளைப் பெற்ற பின்னர் அமராவதிச் சிறை வாழ்க்கைக்கு எங்களை நாங்கள் தயாராக்கிக் கொண்டு விட்டோம். சிறை மாற்றம் பற்றி நாங்கள் சிந்திக்கவேயில்லை.

அமராவதிச் சிறைச்சாலையில் புகுந்த ஆரம்பத்திலே நாங் கள் 'சி' வகுப்புக் கைதிகளுக்கென்றே அமைக்கப்பட்ட ஒரு கட்டிடத்தில் வைக்கப்பட்டோம். எங்களில் திரு.எஸ். சத்திய மூர்த்தி ஐயர் மட்டும் — அவரே கேட்டுக் கொண்டதன் பேரில் — வசதியான ஒரு தனிக் கட்டிடத்தில் வைக்கப்பட்டார்.

அவருக்கு உதவியாகத் திரு.கே. ராசாராம் நாயுடு அவருடன் வைக்கப்பட்டார். ஒரு மாதத்திற்குள் ஆந்திரரும் தமிழரும் பிரிக்கப்பட்டனர். பிரிக்க வேண்டிய கட்டாயத்தைச் சிறை அதிகாரிகளுக்கு ஏற்படுத்திவிட்டனர் ஆந்திரத் தலைவர்கள். தமிழர் 11 பேரும், கேரளர் மூவருமாக 14 பேர் தனி வார்டில் வைக்கப்பட்டோம்.

அறைக்கு இருவராகத் தனித்தனி அறைகளில் நாங்கள் வைக்கப்பட்டோம். என்னுடைய அறையில் காரைக்குடி அரு.ராம. சொக்கலிங்கஞ் செட்டியார் என்னோடு சேர்த்து வைக்கப்பட்டார்.

எங்களில் கன்னடரான திரு.கே.ஆர். கரந்த், ஆந்திரர் களுடன் இணைந்துவிட்டார். இப்படியாக, அமராவதிச் சிறையி லும் 'மொழிவாரி பிளாக்' ஏற்படுத்தப்பட்டு, ஆந்திரரும் கன்ன டரும் ஒரு பிளாக்கிலும், தமிழரும் கேரளரும் ஒரு பிளாக்கிலு மாகக் குடியமர்த்தப்பட்டனர். ஆனால், சமையல் ஏற்பாடு எல்லோருக்கும் பொதுவாக இருந்தது. அதைப் பிரிப்பதில் சங்கடமிருந்தது. விடுதலை பெறும் நாள் தெரியாத நிலையில் அமராவதிச் சிறையில் வாழ்க்கை நடத்தி வந்தோம். நாங்கள் காவல் கைதிகளாதலால், எங்கள் விடுதலை இரண்டாவது உலகப் பெரும் போரின் முடிவைப் பொறுத்திருப்பதாகவே எங்களுக்குத் தோன்றியது. ஆனால், உண்மையில் எங்களில் யாருமே விடுதலை பற்றிக் கவலைப்படவில்லை. தேசம் முழுவ தையுமே பிரிட்டிஷ் ஆட்சி சிறைச்சாலை ஆக்கிவிட்டது போன்ற ஒரு உணர்ச்சி எங்களுக்கு ஏற்பட்டது. காந்தியடி களும், தேசம் முழுவதிலுமுள்ள எங்கள் காங்கிரஸ் சகாக்களும் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தனர். வெளியிலுள்ள தீவிர காங்கிரஸ்காரர்களும் தேசபக்தியுள்ள பொதுமக்களும் பிரிட் டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்த னர். இந்த நிலையிலே, எங்கள் விடுதலையைப் பற்றி நாங்கள் எப்படிக் கவலைப்பட முடியும்? ஆகவே, அமராவதிச் சிறை யிலே ஆண்டுக் கணக்கில் 'தவம்' கிடக்க எங்களில் ஒவ்வொரு வரும் தங்களைத் தயார்படுத்திக் கொண்டுவிட்டனர்.

குளிரின் கொடுமை!

நாங்கள் அமராவதிச் சிறைக்குச் சென்ற இரண்டு மாதங்க ளுக்குள் குளிர்காலம் தொடங்கிவிட்டது. வட இந்திய குளிரைப் பற்றி அனுபவமுள்ள தமிழர்கள் நன்கு அறிவார்கள். அதிலும், மத்திய மாகாணத்திலே வேறு எந்த மாநிலத்தை விடவும் குளிர் அதிகமாகும். ஆனால், அங்குள்ளவர்கள் அதனை ஒரு கொடு மையாகக் கருதவில்லை. ஆம்; கோடை வெயிலின் கொடுமை குளிர் காலத்தை நல்லதாக்கி விட்டது! குளிர்காலம் வருகிறதென் றாலே மிகவும் மகிழ்ச்சியோடு எதிர்நோக்குகிறார்கள் சிறையதி காரிகள். தென்னாட்டினராகிய எங்களைப் பார்த்து, ''குளிர் காலம் வரப்போகிறது; ஆனந்தமாக இருக்கும்'' என்று சொன் னார்கள். இதிலும் ஆந்திரர் மனப்பான்மை தமிழரிடமிருந்து வேறுபட்டதுதான். ஆனால், தமிழ்நாட்டார் — திரு. காமராசர் தவிர — அனைவருமே குளிர்காலம் கஷ்டமாகத்தான் இருக்கு மென்று அஞ்சினர். திரு. காமராசர் ''சுடுதலும் குளிரும் உயிருக் கில்லை'' என்ற 'மெய்ஞ்ஞான'த் தத்துவப்படி அங்கு வாழ்ந் தார். கடுமையான குளிரிலும் உடம்பிற் சட்டையின்றி உலாவு வார். இரவு நேரத்தில்கூட குளிர்ந்த தண்ணீரிலே குளிப்பார்.

என்னைப் பொறுத்தவரையில் வடநாட்டுக் குளிருக்கு நான் புதியவன். அமராவதிச் சிறையில் அடைபடுவதற்கு முன்பு விசயவாடாவுக்கு வடக்கே நான் சென்றதில்லை. அதனால், குளிர் காலம் வருவது குறித்து நான் பெரிதும் அஞ்சினேன். எனது அச்சத்திற்கு மற்றொரு காரணமும் உண்டு. நான் கைது செய்யப்படும்போது கட்டிய துணியோடு போலீசாரைப் பின் பற்றி விட்டேன். அதே நிலையில்தான் அமராவதிச் சிறைக்குள் ளும் நுழைந்தேன். தமிழ்நாட்டிலே குளிர் காலத்துக்கென்று கம்பளி உடைகளைச் சேகரித்து வைத்துக் கொள்வது ஏழைக ளுக்குச் சாத்தியமில்லை. என்னுடைய — என் குடும்பத்தினு டைய நிலையும் இதுதானே! அமராவதிச் சிறையிலிருந்த தேச பக்தர்கள் அவ்வளவு பேரும் குளிர் காலத்திற்குத் தேவையான கம்பளிச் சாதனங்களுடன் சிறைச்சாலைக்கு வந்தனர். அவர்கள் அனைவருமே வட இந்தியாவில் கூடும் அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபைக் கூட்டங்களுக்கு அடிக்கடி சென்று வரும்

வழக்கமுடையவர்களாதலால், வட இந்தியக் குளிரைத் தாங்கு வதற்கான கம்பளிச் சாதனங்கள் அவர்களிடம் இருந்தன. அவற்றை வாங்குவதற்கான வசதியும் அவர்களுக்கிருந்தது. நான் வறுமையில் குசேலரின் வாரிசானதால், கட்டிய ஆடை யோடு சிறை புகுந்தேன்.

வட இந்தியக் குளிரைத் தாங்குவதற்கு 'ரஸாய்' என்ற விசேஷ போர்வை ஒன்று உண்டு. அது இல்லாமல் வட இந்தியக் குளிரைத் தாங்கிக் கொள்ள முடியாது. குளிர் ஆரம்பித்த சில வாரங்களில் அமராவதிச் சிறையில் நான் அடைந்த இன்னல் வருணிக்க இயலாதது. கொசுத் தொல்லை வேறு. என்னிடம் கொசு வலையும் இல்லை. கொசுத் தொல்லையும் குளிர் தொல் லையுமாகச் சேர்ந்து இரவு நேரத்தில் தூங்க விடாமல் என்னைத் துன்புறுத்தின. என்பால் மனமிரங்கி, திரு. காமராசர், தன் சொந்தப் பணத்தில் சிறையதிகாரி மூலம் எனக்குக் கொசு வலை வாங்கிக் கொடுத்தார். சிறையில் உயர் வகுப்புக் கைதிகள் தங்கள் கணக்கில் பணம் வைத்துக் கொள்ளலாம்.

அரசு தந்த சன்மானம்!

நல்ல வேளையாக, நாங்கள் காவற் கைதிகளாதலால் எங்களுக்குத் தேவைப்படும் உடைகளை அரசாங்கமே தன் செலவில் வாங்கித் தரவேண்டுமென்பது சட்டம். அதைப் பயன் படுத்தி அமராவதிச் சிறையிலிருந்த அனைவருக்குமே கதரா டைகளும், கம்பளி உடைகளும் வாங்கித் தர வேண்டுமென்று சிறை சூப்பிரண்டெண்டு மூலம் சென்னை மாநில அரசுக்குக் கோரிக்கை அனுப்பினோம். அதன்படி, தேவைப்படாதவர்க ளுக்கும் கிடைத்தாற்போல, தேவைப்பட்ட எனக்கும் கதராடை களும் கம்பளி உடையும் அரசின் செலவில் கிடைத்தன. அவற்றைப் பெற்றதிலே எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

எனக்கு இரண்டு முறை திருமணமாகியிருந்தும் ஒருமுறை கூட மாமியார் வீட்டார் எனக்குப் புத்தாடை — தலை தீபாவளிக் குக்கூட — கொடுத்ததில்லை. அதனால், சிறைச்சாலையிலே ஒரு ஆண்டுக்குத் தேவைப்படும் அளவுக்குக் கதர்

ஆடைகளும், கம்பளி உடைகளும் எனக்குக் கொடுத்தபோது, அதனை மாமியார் வீட்டு சன்மானமாகக் கருதி மகிழ்ச்சியடைந் தேன்.

கதராடைகளையும், கம்பளி உடைகளையும் பெறுவதற்கு முன்னரே, கடுங்குளிரைத் தாங்காமல் என் உடல்நலம் பாதிக்கப் பட்டுவிட்டது. பசியின்மை என்னும் ஒரு நோய் என்னைப் பிடித்துவிட்டது. சிறை டாக்டர் திறமையில் மூன்றாம் தரமான பேர்வழி. ஆனால், மனிதர் நல்லவர். என்ன செய்வது? நல்ல வர்களெல்லாம் வல்லவர்களாக இருப்பதில்லை. வல்லவர்க ளெல்லாம் நல்லவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்வதற் கில்லை. இது, மனித சமுதாயத்திற்கேற்பட்டு விட்ட சாபக்கேடு போலாகிவிட்டது.

சிறை டாக்டர் என் மலத்தைப் பரிசோதித்துவிட்டு, என் குடலில் கொக்கிப் புழுக்கள் இருக்கின்றன என்று கூறினார். அந்தப் புழுக்களை வெளிப்படுத்த 2 மாதம் ஞாயிறுதோறும் பேதி மருந்து கொடுத்தார். ஏற்கனவே சிறைக்கு வெளியிலிருந்த போது சீதபேதி கண்டு, அதற்குக் காலாகாலத்தில் சரியானபடி சிகிச்சை செய்து கொள்ளாததால், 'அமீபியா' என்னும் ஒருவ கைக் குடல் நோய் எனக்கு இருந்து வந்தது. வாரந்தோறும் பேதி மருந்து உட்கொண்டதால் அந்த நோய் மேலும் கடுமை யாகி விட்டது. எல்லாமாகச் சேர்ந்து என்னை நோயாளியாக்கி, வேளா வேளைக்கு மனநிறைவுடன் உணவு கொள்ள முடியாத படி செய்துவிட்டன.

கம்ப ராமாயண வகுப்பு

அமராவதிச் சிறையிலே திரு. எஸ். சத்தியமூர்த்தி ஐயர் அவர்களின் வற்புறுத்தலுக்கிணங்க மாலை நேரத்தில் கம்பராமா யணச் செய்யுள்களைப் படித்துப் பொருளுரைக்கும் பணியை மேற்கொண்டேன். ஐயரவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கேட்டு வந்தார். அவர் சமஸ்கிருத மொழியிலே மிகுந்த புலமையுடைய வர். அதனால், வால்மீகி இயற்றிய வடமொழி ராமாயணத்தில் ஆழ்ந்த பயிற்சி பெற்றிருந்தார். சென்னை சுகுண விலாச சபையிலே சேர்ந்து சமஸ்கிருத நாடகங்களிலே பாத்திரமேற்று

நடித்த பெருமையும் ஐயருக்கு உண்டு. ஏதேனும் ஒரு மொழியில் நல்ல இலக்கியப் புலமை பெற்ற எவரும் பிற மொழிகளிலுள்ள இலக்கியங்களைச் சுவைக்க விரும்புவது இயற்கை. இப்படித்தான் ஆங்கில — சமஸ்கிருதப் புலவரான சத்திய மூர்த்தி ஐயர் தென்மொழியிலுள்ள கம்பராமாயணத்தை என் மூலம் சுவைக்க விரும்பினார். அவர் தமிழரானதால் இயற்கையாகவே தமிழிடத்து ஆழ்ந்த பற்றுதலும் கொண்டிருந்தார். அவர் கல்வி பயின்ற காலத்திலே தமிழ்மொழி கட்டாயப் பாடமாக இல்லை. ஆங்கிலம் கட்டாய முதன் மொழியாகப் பயிற்றுவிக்கப் பெற்றது. இரண்டாவது மொழியாக ஏதேனும் ஒரு இந்திய மொழியை எடுத்துப் படிக்க வாய்ப்பளிக்கப் பெற்றது. இரண்டாவது மொழியாகக் கூடத் தமிழ்நாட்டு மாணவர்கள் தமிழைப் படித்தாக வேண்டுமென்ற கட்டாயம் ஆங்கில ஆட்சியிலே இல்லை. அதனால், பிராமணர்களில் பெரும்பாலோர் — தாங்கள் தமிழர்களாக இருந்தும் — நடுத்தரக் கல்விக் கட்டத்திலே தமிழ் பயிலாமல் சமஸ்கிருதம் பயின்றனர். மகாகனம் வி.எஸ்.சீனிவாச சாஸ்திரி, டாக்டர் சி.பி. இராமசாமி ஐயர், எஸ். சத்தியமூர்த்தி ஐயர் போன்றவர்கள் தமிழினத்தார் பெருமைப் படத்தக்க வகையில் மாமேதைகளாக வாழ்ந்தும், தமிழ் மொழியை ஆழ்ந்து பயிலாத குறை அவர்களிடமிருந்தது. இப்பொழுதுகூட நடுத்தரப் பள்ளியிலே தமிழைக் கைவிட்டு சமஸ்கிருத மொழியைப் படிக்க வாய்ப்பளிக்க வேண்டுமென்ற கோரிக்கை இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால், அதற்கு அரசு அனுமதியளிக்க உறுதியாக மறுத்து வருகிறது.

சமஸ்கிருத மொழி பயில்வதை நான் விரும்புகிறேன். ஆனால், தமிழைக் கைவிட்டு சமஸ்கிருதம் பயில விரும்புவதை என்னால் புரிந்து கொள்ளக்கூட முடியவில்லை. இந்தப் போக்குடையவர்கள்தான் நடுத்தரப் பள்ளிகளிலேயே ஆங்கிலத்தைப் போதனா மொழியாக எடுக்கின்றனர். கல்லூரிகளிலும் ஆங்கிலமே போதனா மொழியாக நீடிக்க வேண்டுமென்கின்றனர். அது கிடக்கட்டும்; விஷயத்திற்கு வருவோம். தமிழரே தலைமுறை தலைமுறையாகத் தமிழுக்கு எதிராகச் செயல்பட்டுவரும் நிலையை நினைத்துக் கொண்ட வேதனையில் விஷயத்தை விட்டு எங்கோ சென்றுவிட்டேன்.

கம்பனைப் பழித்தார் ஐயர் — வால்மீகியிலென்ன வாழ்கிறதோ?

சத்தியமூர்த்தி ஐயர் கம்ப ராமாயணச் செய்யுட்களை நன்கு ரசித்தார். அந்நாளில் தமிழ் இலக்கியங்களிலே நான் அதிகப் பயிற்சி பெற்றிருக்கவில்லை என்றாலும், திரு.வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் உரையோடு கூடிய கம்ப ராமாயண நூலைத்தான் நான் ஐயருக்குப் படித்துக் காட்டினேன். வேறு சிலரும் அவருடன் இருந்து கேட்டனர். ஒருநாள் பால காண்டத்தில் உள்ள எழுச்சிப் படலச் செய்யுட்களைப் படித்துப் பொருள் சொல்லி வந்தபோது, ஒன்றிரண்டு செய்யுட்களை ஐயர் ரசிக்கவில்லை அவற்றிலே கம்பன் கையாண்டுள்ள கற்பனைத் திறத்தை அவர் வெறுத்தார். அத்துடன் நில்லாமல், வான்மீகியின் கற்பனையிலே இப்படிப்பட்ட 'ஆபாசங்கள்' இல்லையென்றும் கொஞ்சம் பெருமிதத்தோடு கூறினார். ஐயரின் தாக்குதலை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் கம்பனை மட்டுமின்றி, கன்னித் தமிழையும் பழித்துவிட்டார் என்று கருதினேன். வான்மீகியில் ஒரு கற்பனையை (அது ஆபாசமாதலால் இங்கு எடுத்துக்காட்ட நான் விரும்பவில்லை) ஐயருக்கு நினைப்பூட்டி, 'இது ஆபாசக் கற்பனையல்லவா?' என்று நானும் சிறிது சினத்துடன் அவரைக் கேட்டேன். நாங்கள் இருவரும் பல ஆண்டுகளாகச் சென்னை ஜில்லா காங்கிரசிலே தலைவரும் செயலாளருமாகவும், தனிப்பட்ட முறையிலே நண்பர்களாகவும் பழகி வந்திருக்கிறோம். ஆனால், அன்று நான் ஐயரிடம் கோபித்துக் கொண்டதுபோல, அதற்கு முன் வேறு எப்போதும் கோபித்ததில்லை. தமிழின் மீது எனக்குள்ள அழுத்தமான பற்றானது என் தலைவரிடம் அவ்வளவு கடுமையாக நடக்கத் தூண்டியது. இந்த நிகழ்ச்சிகளுக்குப் பின் நான் ஐயர் முன்பு கம்பராமாமயணம் படிப்பதை நிறுத்தியதோடு, மாலை நேரத்தில் அவருடன் உலாவப் போவதையும் விட்டுவிட்டேன்.

ஐயர் ஒரு வார்டிலும் நான் வேறொரு வார்டிலுமாக இருந்தோம். ஆனால், நாங்கள் நினைத்தபோது அவர் எனது வார்டுக்கும், நான் அவரது வார்டுக்கும் செல்ல அதிகாரிகள் வாய்ப்பளித்திருந்தனர். மாலை நேரத்தில் அமராவதிச் சிறையி

லிருந்த தென்னிந்திய அரசியல் கைதிகள் அனைவருமே சிறைக் குள்ளேயே — உள் மதிலுக்கும் புற மதிலுக்கும் நடுவிலுள்ள திறந்த வெளியில் — உலாவுவோம். அநேகமாகச் சிறையை வலம் வருவதாகவே அந்த உலா அமையும். இப்படி உலாவப் போவதிலேயும் கோஷ்டி கோஷ்டியாகச் செல்வோம். திருவாளர்கள் கு.காமராசர், பக்தவத்சலனார், கே.மாதவ மேனன், என். சஞ்சீவி ரெட்டி ஆகிய நால்வரும் தனிக் கோஷ்டியாக உலாவுவார்கள். அவர்களுடன் ஐந்தாவது ஒரு நபர் சேர்ந்ததை நான் பார்த்ததே இல்லை. அவர்களிலே ஒரு நபர் குறைந்திருக்கவும் நான் பார்த்ததில்லை. அவர்கள் நான்கு பேரும் ஒரே அச்சு போல இருந்தார்கள். நானும் ஐயரும் சேர்ந்தாற்போலச் சிறையிலே உலாவப் போவோம். அந்த நேரத்திலே அநேகமாக இலக்கிய விமர்சனத்தில் ஈடுபடுவோம். வடமொழி இலக்கியங்களிலுள்ள நயங்களை அவர் மூலம் அறிந்து கொள்வதிலே நான் அதிக ஆர்வங் காட்டி வந்தேன். ஐயர் வேகமாக உலாவ இயலாமல் மெல்ல நடை போடுவார். நான் அவரினும் வயதில் குறைந்த இளைஞன் என்றாலும், நோயுற்று விட்டதன் காரணமாகத் தளர்நடை போட வேண்டியவனாக இருந்தேன். இந்த நடை காரணமாகவே பலவீனர்களான நாங்கள் இருவரும் உலாவுவதில் கூட்டு சேர்ந்தோம். காமராசர், பக்தவத்சலம், சஞ்சீவி ரெட்டி, மாதவ மேனன் கூட்டுக்கு அவர்கள் நடை காரணமாக இருக்கவில்லை; கோஷ்டி அரசியல் காரணமாக இருந்தது.

'நானும் தமிழன்தானப்பா!'

கம்ப ராமாயணத்தில் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் ஐயருடன் மாலை நேரத்தில் உலாவப் போவதையும் விட்டு, எனது அறையையே சிறையாக்கிக் கொண்டேன். இப்படி நான்கு நாட்கள் கழித்த பின்னர், ஒருநாள் மாலை உலாவும் நேரத்தில் ஐயர் நான் இருந்த பிளாக்குக்கு வந்தார். வந்தவர், எதிர்ப்பட்ட திருவண்ணாமலை திரு. என். அண்ணாமலைப் பிள்ளையைப் பார்த்து, ''என்னப்பா அண்ணாமலை! கிராமணி இருக்கிறாரா? இல்லை, இந்த வடமொழிப் புலவனின் முகத்திலேயே விழிப்பதில்லையென்று ஊருக்குப் போய்விட்டாரா?'' என்று நகைச் சுவையாகக் கேட்டுக்கொண்டே எனது அறைக்கு வந்தார். நான்

அவருக்கு வணக்கம் தெரிவித்து இன்முகங் காட்டி வரவேற்றேன்.

அவர் ''என்னப்பா கிராமணி! கம்பன் உனக்குத்தானா சொந்தம்? எனக்குச் சொந்தமில்லையா? நானும் தமிழன்தானப்பா! தமிழைப் பற்றி விமர்சித்தால்கூடக் கோவிச்சுக்கிறீயே; அந்தக் கோபத்திலே, உலாவக்கூட என்னோடு வரமாட்டேன் என்கிறாயே'' என்று மிகுந்த அன்போடு கூறினார். உண்மையில் ஐயர் வலுவில் நானிருக்குமிடம் தேடி வந்து, எனக்குச் சமாதானம் கூறியது, அவர்மீது எனக்கிருந்த கோபத்தைத் தணித்தது. அவரது பெருந்தன்மை என்னைக் கவர்ந்துவிட்டது. நான் ''நடந்ததை மறந்து விடுவோம்! உலாவப் போவோம், வாருங்கள்'' என்றேன்.

உலாவிக் கொண்டிருக்கையில், ''கிராமணி! வான்மீகி ராமாயணத்தில் நீ சொன்ன இடத்தை இன்று காலைதான் பார்த்தேன். உண்மையில் வான்மீகியின் கற்பனை அந்த இடத்தில் ஆபாசந்தான்!கம்பனாக இருந்தாலென்ன; வான்மீகியாக இருந்தாலென்ன? ஆபாசங் கூடாதுதானே!'' என்றார் ஐயர். ஆனால், இதன் பின்னரும் கம்ப ராமாயணம் படிப்பதை நான் தொடரவில்லை. நிறுத்தியது நிறுத்தியதாகவே போய்விட்டது.

அமராவதிச் சிறைவாழ்வு என் வரலாற்றிலே எத்தனையோ திருப்பங்களுக்குக் காரணமாக அமைந்தது — குறிப்பாக, தென்னிந்தியப் பெருந்தலைவர்களோடு ஓராண்டுக் காலம் நெருங்கிப் பழகும் பெரு வாய்ப்பினைப் பெற்றதனால், பிற்காலத்தில் எனது அரசியல் வாழ்க்கை மறுமலர்ச்சி பெற்றதென்று நான் உறுதியாகக் கூறுவேன்.

அமராவதிச் சிறையிலே இன்று குடியரசுத் தலைவராக உள்ள வி.வி.கிரி அவர்களும் எங்களோடு இருந்தார் என்பதை முன்பே கூறியிருக்கிறேன். அவர் யாரோடும் கோஷ்டி சேருவதில்லை. தனித்திருப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆங்கில நூல்களை நிறையப் படித்துக் கொண்டிருந்தார். மாலை நேரத்தில் மற்றவர்களெல்லாம் நடந்து உலாவுவோம். திரு. வி.வி.கிரி ஓட்டமும் நடையுமாக உலாவுவார். நாள் தவறாமல்

விடிந்தெழுந்ததும் உடற்பயிற்சி செய்வார். நாங்கள் இருவரும் தொழிற்சங்க இயக்கத் தோழர்களாதலால், அடிக்கடி நானிருந்த பகுதிக்கு வந்து எனது உடல்நலத்தை விசாரிப்பார். எனக்குத் தேவைப்படும் சிகிச்சைக்கும் சிறை சூப்பிரன்டெண்டின் மூலம் ஏற்பாடு செய்வார்.

வான்மீகி ராமாயண வகுப்பு

சித்தூர் வழக்கறிஞரான எம். அனந்தசயனம் ஐயங்கார், சிறையிலே வடமொழி வான்மீகி ராமாயணம் படித்துப் பொருளுரைத்து வந்தார். வியாச பாரதத்தையும் முடித்துப் பொருள் சொன்னார். இதில் வேடிக்கை என்னவென்றால், தமிழர்கள் மத்தியில் வான்மீகி ராமாயணத்தையும், ஆந்திரர் மத்தியில் வியாச பாரதத்தையும் அவர் படித்ததுதான். முதலில் வான்மீகி இராமாயணந்தான் படிக்கத் தொடங்கினார். பின்னர் ஆந்திரர் களைத் திருப்திப்படுத்த அவர்கள் மத்தியில் வியாச பாரதம் படிக்கத் தொடங்கினார். இன்னும் பல விஷயங்களிலே ஐயங் கார் ஆந்திரருக்கும் தமிழருக்குமிடையே ஊசலாடி வந்தார்.

ஒரு சமயம் திரு. சத்தியமூர்த்தி ஐயர், அனந்தசயனம் ஐயங்காரைப் பார்த்து, ''நீர் தமிழரா, ஆந்திரரா?'' — என்று கேட்டார். அதற்கு ஐயங்கார், ''நான் எல்லைப் பிரதேசத்தில் வாழ்பவன். அதனால், நான் பொதுவானவன்'' என்று பதிலளித் தார். திரு. ஐயங்கார், தமிழிலே நல்ல ஞானமுடையவர். வைதிக வைணவராதலால், தமிழிலுள்ள நாலாயிரப் பிரபந்தங்களைப் பொருளுணர்ந்து படித்திருக்கிறார். வடமொழியிலும் வல்லவர். இந்தி மொழியில் உயர்தரக் கல்வி கற்றிருக்கிறார். தெலுங்கிலும் நல்ல பயிற்சி பெற்றிருக்கிறார். தமிழகத்திலிருந்து பிரித்தெடுக் கப்பட்ட சித்தூர் மாவட்டம் நீண்ட காலமாக ஆந்திரத்திலிருந்து வருவதால் அரசியலில் ஐயங்கார் ஆந்திர மாகாண காங்கிரசு டன் சேர்ந்திருக்கிறார். தமிழர் மத்தியிலே தமிழராகவே நடந்து கொள்வார். ஐயங்கார் வான்மீகி ராமாயணம் படித்தபோது நாள் தவறாமல் கேட்டு வந்தேன். வடமொழியில் வான்மீகி ராமாய ணந்தான் ஆதிகாவியம் என்று சொல்லப்படுகின்றது. வான்மீகி யின் காப்பியம் இந்தியர் ஒவ்வொருவரும் பயிலத் தக்கதாகும்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு மாபெரும் காப்பி யத்தை வடமொழியில் படைத்துத் தந்த அந்த மாமுனியின் புலமையிலே யான் மிகுந்த கவர்ச்சியடைந்தேன். ஐயங்கார் ராமாயண சுலோகங்களை வடமொழிக்குரிய கம்பீரம் குறையா மல் இசைத்தார். வான்மீகி ராமாயணத்தைப் பொருளோடு புரிந்து கொண்டது அமராவதிச் சிறையிலே நான் பெற்ற நற்பயன்களில் ஒன்றாகும்.

முத்துரங்க முதலியாரின் வைதிகம்!

சிறையில் எங்களோடிருந்த திரு.சி.என். முத்துரங்க முதலி யார், தமிழிலுள்ள பாகவத நூலைப் படிப்பதிலே மிகுந்த ஆர்வங் காட்டினார். பள்ளிக்கூடப் பிள்ளை போன்று உரத்த குரலில் வாய்விட்டுப் படிப்பார். வைதிக வைணவராதலால் அடிக்கடி நாலாயிரப் பிரபந்த பாக்களைப் படிப்பார். ஆம்; பாடினார் எனச் சொல்வதற்கில்லை. இவரிடமிருந்த ‘தீட்டு’ மனப்பான்மை கண்டு நான் வியப்புற்றேன். இதற்குக் காரணம், உயர்சாதி மனப்பான்மையா, வைதிகத் தன்மையா? — என்ப தைப் புரிந்து கொள்வது கஷ்டமாக இருந்தது. இரண்டில் எதுவாக இருந்தாலும், அது தேசியமாகாது. தண்ணீர் கூசா வொன்றைத் தமக்கெனத் தனியாக வைத்திருந்தார். அதிலே தாம் நிறைத்து வைத்திடும் தண்ணீரைத் தமக்காகவே பயன்படுத் துவார். அதனைப் பிறர் தீண்டவும் விடமாட்டார். பிறர் தீண்டிய தண்ணீரைக் குடிக்கவும் மாட்டார். அந்தணர்கள் மட்டும் இதற்கு விலக்காவர். வேடிக்கை என்னவென்றால், தண்ணீரில் காட்டும் வைதிகத்தைச் சாப்பாட்டில் காட்டமாட்டார். எல்லோருக்கு மாகச் சமைக்கும் உணவையே அவரும் எல்லோருடன் பந்தி யில் அமர்ந்து உண்பார். பொதுவாக, மிகவும் நல்லவர். கள்ளங்கபடமற்றவர். கொஞ்சம் முன்கோபி.

முதலியாரின் மருமகப் பிள்ளையான திரு.மீ. பக்தவத்சல னார் எப்போதும் எதையேனும் படித்துக்கொண்டே இருப்பார். அநேகமாகச் சமய நூல்களைத்தான் படிப்பார். சிறையிலே ஆங்கில தினசரிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டமையால், தம்முடனிருந்த தமிழ் மட்டுமே தெரிந்த தோழர்களுக்கு

அவற்றைப் படித்துத் தமிழில் விளக்குவார். சிறைச்சாலையில் நோய்ப்படாத — டாக்டரிடம் சிகிச்சை பெறாத இருவர் உண் டென்றால், அவர்கள் திரு.மீ. பக்தவத்சலனாரும், திரு. கு. காமராசருமாவர்.

திரு.கு. காமராசர், ஆங்கில 'என்சைகிளோபீடியா' வால்யூம்களையும், திரு.வெ.ப சுப்பிரமணிய முதலியார் உரை யுடன் வெளியாகியுள்ள ''கம்பராமாயண சாரம்'' என்ற நூலை யும் — பல பாகங்கள் — தம்முடன் சிறைக்குக் கொண்டு வந்திருந்தார். இந்த நூற்களை இவர் அடிக்கடி படிக்க நான் பார்த்திருக் கிறேன்.

வேதம் படித்தேன்!

சென்னை திருவொற்றியூர் தியாகேசுவரர் கோயிலிலுள்ள ஒற்றீசுவரர் கோயிலை நிர்மாணித்த திரு.த.ப. இராமசாமிப் பிள்ளை என்பவர், வடமொழியிலுள்ள சாம வேதத்தைத் தமி ழில் மொழிபெயர்க்கச் செய்து வெளியிட்டுள்ளார். அதனைத் தருவித்து, வாய்ப்பு நேர்ந்தபோதெல்லாம் சிறையில் படித்து வந்தேன். என்னிடம் சாமவேதம் இருப்பதை அறிந்த திரு.டி. பிரகாசம், தாமும் அதனைப் படிக்க விரும்பினார். அவருக்கு சம்ஸ்கிருத மொழியில் ஓரளவு ஞானம் இருந்தது. அதனால் சம்ஸ்கிருத சுலோகங்களை அப்படியே போட்டு, அவற்றிற்குச் சொல்லுக்குச் சொல் தமிழிலே பொருள் எழுதியி ருந்த எனது நூலை அவரே எடுத்துக் கொள்ள விரும்பினார். மறுக்க இயலாமல் நானும் கொடுத்துவிட்டேன். சாம வேதத்தின் தமிழ் மொழி பெயர்ப்பை நான் அவருக்குச் சொல்லி, அவர் கேட்டு வந்தார். சம்ஸ்கிருத சுலோகங்களின் பொருள் நுணுக்கங் களை அவர் எனக்குக் கூறினார். திரு. காளேஸ்வர ராவ் அவர்களும் எங்களுடன் சாம வேதம் படிப்பதில் கலந்து கொண்டார். இந்த முதுபெரும் வேதியர்களோடு சேர்ந்து சாம வேதம் படிப்பதிலே எனக்குத் தனி மகிழ்ச்சி இருந்தது.

சிறையில் என்னுடனிருந்த தலைவர்களிலே எவரும் நூல் எதுவும் எழுதவில்லை. திலகர், நேரு, வ.உ.சி., ராஜாஜி, சிவா

ஆகிய தலைவர்கள் சிறைவாசத்தைப் பயன்படுத்தி அரிய நூல்கள் பலவற்றை இயற்றியுள்ளனர். என்னுடனிருந்த தலைவர்களில் யாரும் அப்படிச் செய்ததாகத் தெரியவில்லை. நான் உயர் கல்வியாளன் என்ற தகுதியோடு சிறை புகவில்லையாதலால், என்னைப் பொறுத்தவரை அந்தப் பிரச்னை எழவில்லை. ஆயினும், தமிழ் இலக்கியங்களைப் பயில்வதிலே சிறைவாசத்தில் கிடைத்த ஓய்வு முழுவதையும் பயன்படுத்தினேன். நான் சிறை புகுவதற்கு முன்பே, ''கப்பலோட்டிய தமிழன்'' என்னும் நூலை எழுதி அச்சிட்டு, அச்சுப் பிரதிகளை அட்டை இல்லாத நிலையில் — நண்பர் திரு.டி.எஸ். கோவிந்தசாமி என்பவரிடம் கொடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துவிட்டுப் போனேன். இந்த நூலை நான் எழுதியது தமிழில் பெற்றிருந்த புலமையால் அல்ல. வ.உ.சி.யிடம் எனக்கிருந்த பக்தியால்தான். கப்பலோட்டிய தமிழன் என்ற நூல்தான் எனது கன்னிப் படைப்பு!

'கப்பலோட்டிய தமிழன்' பறிமுதல்!

சிறையிலிருந்த திரு.சி.என். முத்துரங்க முதலியாரிடம் மதிப்புரை எழுதி வாங்கவேண்டுமென்பதற்காக அந்த நூலின் அச்சுப் பிரதியொன்றை எனக்கு அனுப்பி வைக்குமாறு என் தம்பிக்கு எழுதியிருந்தேன். தம்பியும் அனுப்பி வைத்தார். பைண்டாகாமல் அச்சுப் பிரதியாக மட்டுமே இருந்த அந்தப் புத்தகம் 'சென்சார்' அதிகாரிக்கு அனுப்பப்பட்டது. அரசியல் நூல் என்னும் காரணத்தால் சிறையிலுள்ள என்னிடம் அதைத் தரக்கூடாதென்று சென்னை மாநில அரசு ஆணை பிறப்பித்துவிட்டது. அத்துடன், கப்பலோட்டிய தமிழன் நூல் பிரதிகளைப் பறிமுதல் செய்துவிட்டதாகவும் அரசு அறிவித்தது. இதுபற்றிச் சிறையிலிருந்த எனக்கும் தகவல் தந்தது. எனது கன்னிப் படைப்பே ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைக்கு இரையானதில் யான் பெரு மகிழ்ச்சி அடைந்தேன்.

சிறையிலே ஆங்கிலத்தில் உள்ள அரசியல் நூல்கள் தாராளமாக அனுமதிக்கப்பட்டன. ஆனால், தாய் மொழியில் வெளிவரும் அரசியல் நூல்களில் எதுவும் அனுமதிக்கப்படுவதில்லை

எங்களோடிருந்த திரு. தென்னேட்டி விசுவநாதம் ருஷ்யாவில் வெளியான அரசியல் நூல்களைக்கூடத் தருவித்துப் படித்து வந்தார். ஆம்; புரட்சிகரமான சோசலிச இலக்கியங்கள் ஆங்கிலத்திலே இருந்ததால் அவை அனுமதிப்பட்டன. ஆனால், தாய் மொழியிலே தேசத் தலைவர்களின் சரித்திரங்கள் கூட அனுமதிக்கப்படுவதில்லை. ஆங்கில ஞானம் உடையவர்கள் புரட்சிகரமான போதனைகளைப் படித்தாலும் புரட்சியிலீடுபட மாட்டார்கள்; தாய்மொழி மட்டுமே படித்தவர்கள் எளிதில் உணர்ச்சி வயப்படக்கூடிய தொண்டர்களாதலால், அவர்கள் அரசியல் ஞானம் பெறுவது அபாயமென்று ஆங்கில அரசு கருதியது போலும். இது, ஓரளவு உண்மைதான்.

சிறையிலே ஆங்கில நாளேடுகள் அனுமதிக்கப்பட்டும், பிரதேச மொழி நாளேடுகள் அனுமதிக்கப்படாததற்கும் இதே காரணந்தான். பரங்கி மொழி படித்தவர்களுடைய புரட்சி மனப்பான்மையிலே ஆங்கில ஆட்சிக்குச் சந்தேகமிருந்தது. ஆனால், இதற்கு விலக்கான பட்டதாரிகள் அன்றும் இருந்தனர்; இன்றும் இருக்கின்றனர்.

சிறையில், 'கல்கி', 'ஆனந்தவிகடன்' போன்ற தமிழ் வாரப் பத்திரிகைகள் மட்டும் அனுமதிக்கப்பட்டன. காரணம், இவை செய்தி இதழ்களாக அல்லாமல் கருத்திதழ்களாக வெளிவருவது தான்.

அமராவதிச் சிறைக்குச் சென்ற பின்பு நாங்கள் எங்கள் குடும்பங்களுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டோம். சிறை விதிகளின்படி வாரத்திற்கொரு முறை அரசாங்கச் செலவிலே எங்கள் குடும்பங்களுக்கு நாங்கள் கடிதம் எழுதலாம். அவர்களிடமிருந்தும் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம். குடும்பத்தோடு கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்வது சிறையில் அடைப்பட்ட கைதிக்கு மிகுந்த இன்பந்தருவதாகும். அதுவும் நெடுந்தொலைவிலுள்ள சிறையில் அடைப்பட்டுள்ள — குடும்பத்தினரைப் பேட்டி காண இயலாத — குறிப்பாக, விடுதலையாகும் தேதி தெரியாத காவற் கைதிகளுக்குக் கடிதப் போக்குவரத்து ஒரு வரப்பிரசாதமாகும்.

கடிதம் கிடைக்கும், பிரிக்கப் பயப்படுவேன்!

அமராவதி சென்ற ஆரம்ப வாரங்களிலே என் குடும்பத்தினரிடமிருந்து எனக்குக் கிடைத்த கடிதங்கள் மிக்க மகிழ்ச்சியைத் தந்தன. ஆனால், நாளடைவில் நிலைமை மாறிவிட்டது. குடும்பத்திடமிருந்து வரும் கடிதங்களைப் பெறுவதற்குச் சிறையிலுள்ள கைதிகள் தவம் கிடப்பார்கள். சில நாட்கள் கடிதம் வரவில்லையானால் ஏங்கிப் போவார்கள். எனது நிலையும் இதுதான். ஆனால், கடிதம் கைக்குக் கிடைத்துவிட்டால், அதனைப் பிரித்துப் பார்க்கப் பயப்படுவேன். கடிதத்தைப் பெறும் போது மனத்துள் பொங்கி எழும் இன்ப உணர்ச்சி அதைப் பிரித்துப் படிக்கும்போது துன்பமாக மாறுவதுண்டு. கடிதத்திற்குள் மனத்திற்கு வேதனை தரும் செய்தி ஏதேனும் இருந்துவிடுமோ என்ற அச்சத்துடன்தான் கடிதத்தைப் பிரிப்பேன். நான் சிறைப்பட்ட பின்னர் என் குடும்பம் துடுப்பிழந்த படகுபோலாகிவிட்டது. நான் இருந்தபோதே வருவாயற்ற குடும்பம். இப்படிப்பட்ட சூழ்நிலையிலுள்ள ஒரு குடும்பத்திடமிருந்து கிடைக்கும் கடிதம் எனக்கு இன்பத்தைத் தருவது எங்ஙனம்? சிறையிலுள்ளவர்களுக்குக் கடிதம் எழுத வெளியிலுள்ளவர்களுக்குப் போதிய மனப்பக்குவம் வேண்டும். கல்வி அற்றவர்களைக் கொண்ட என் குடும்பத்தினரிடமிருந்து அப்படிப்பட்ட மனப்பக்குவத்தை எப்படி நான் எதிர்பார்க்க முடியும்?

நண்பர்களிடமிருந்து கடிதங்கள் கிடைத்திருக்குமானால், அவை மனதுக்கு ஆறுதல் தருவனவாக இருந்திருக்கலாம். அமராவதிச் சிறையிலிருந்த 'ராஜத் துரோகிகளா'கிய நாங்கள் சிறைக்கு வெளியிலோ, சிறைகளிலோ உள்ள எங்கள் நண்பர்களோடு கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளக் கடைசிவரை அனுமதிக்கப்படவில்லை. இது, எங்களுக்கு விதிக்கப்பட்ட கடுந்தண்டனை!

பிரதமர் நேரு, செல்வமும் செல்வாக்கும் உயர்தரக் கல்வியறிவும் நிறைந்த குடும்பத்தைச் சார்ந்தவர். அப்படியிருந்தும், அவரும் என்னைப் போன்ற அனுபவத்தைத்தான் பெற்றார் என்பதை அவரது சுயசரிதத்தில் நான் படித்திருக்கிறேன். அது வருமாறு:

''வீட்டிலிருந்தோ, அல்லது வேறு சிறைகளிலிருந்தோ (அப்போது என் இரண்டு சகோதரிகளும் சிறையில் இருந்தார்கள்) பதினைந்து நாள் தவணையில் வரும் கடிதங்கள் மிகவும் தேவையாகி விட்டன. அவைகளுக்காக நான் ஆவலுடன் காத்துக் கொண்டிருப்பேன். குறிப்பிட்ட நாளில் கடிதம் வராவிட்டால் நான் மிகவும் சள்ளைப்பட்டுப் போவேன். ஆனால், கடிதம் வந்தால் அவற்றைத் திறக்காமல் வைத்துக் கொண்டிருப்பேன். நிச்சயமாகக் கிடைத்த மகிழ்ச்சியுடன் ஒருவன் விளையாடுவது போல் நானும் அந்தக் கடிதத்துடன் விளையாடுவேன். இவ்வளவுக்கும் பின்னால் துளி பயமும் என் மனதில் துள்ளி ஓடும். அந்தக் கடிதத்தில் எனக்கு ஆத்திரமூட்டும்படி ஏதேனும் இருந்துவிட்டால்! சிறையில் கடிதம் எழுதுவதும் கடிதம் பெறுவதும் அமைதியுடன் போய்க் கொண்டிருக்கும் வாழ்க்கையைக் கலக்கும் ஆக்கிரமிப்புகளாக இருந்தன. அவைகளினால் மித மிஞ்சிய உணர்ச்சிப் பெருக்கு உண்டாகியிருக்கின்றது. இரண்டொரு நாள் முழுவதும் மனது எங்கோ திரிந்து அலைகின்றது.''

நேருவின் நிலையே இதுவானால், என்னைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது! அமராவதிச் சிறையில் வெளியிலிருந்து வரும் கடிதங்களை மாலை நேரத்தில்தான் எங்களுக்குக் கொடுப்பார்கள். அதைப் படித்து — ஏதேனும் கவலை தரும் விஷயம் அதிலே இருந்துவிட்டால் இரவு முழுவதும் 'சிவராத்திரி' தான்! — ஆம், கவலை தரும் எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக — அலை அலையாக எழுந்து ஒன்றோடொன்று மோதி மன அமைதியைக் கெடுக்கும். அதனால் இரவில் உறக்கம் கெடும். சில சந்தர்ப்பங்களில் மாலையில் வரும் கடிதங்களை மறுநாள் காலையில்தான் பிரித்துப் பார்ப்பேன். கையில் கிடைத்துவிட்ட கடிதத்தைப் பிரித்துப் பார்க்காமல் வைத்திருப்பதாலும் மனக் குழப்பம்தான். ஆனால், படித்த பிறகு ஏற்படும் வேதனையைவிட, படிக்காமல் வைத்திருப்பதால் ஏற்படும் குழப்பம் குறைவானதுதான் என்பது என் அனுபவம்.

அமராவதிச் சிறையிலிருந்த நாங்கள் எங்கள் குடும்பத்தாரைப் பேட்டி காண அனுமதிக்கப்படாததால், நான் எழுதும் கடிதத்தின் மூலம்தான் என் குடும்பத்தினர் தங்கள் அகக் கண்களால் என்னைக் காண முடிந்தது. அப்படியே அவர்கள் எழுதும் கடிதங்கள் மூலம்தான் அவர்களை எல்லாம் என் அகக் கண்களால் நான் காண முடிந்தது. ஆம்; மானசீகமான பேட்டி!

ஆங்கிலேயர் — ஐயர் வாக்குவாதம்!

அமராவதிச் சிறையில் நாள் ஆக ஆக எங்களில் ஒருவர் பின் ஒருவராக சிலர் கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்டோம். திரு.எஸ். சத்தியமூர்த்தி ஐயர், வேலூர் குப்புசாமி முதலியார், நான் ஆகிய மூவரும்தான் கவலைப்படத்தக்க அளவில் நோய்வாய்ப்பட்டோம். சிறையில் மூன்றாந்தரமான மருத்துவ வசதிகூட இல்லை. சிறைக்கு வெளியிலிருந்து வசதிகளைக் கொண்டு வரவும் சிறையதிகாரிகள் அக்கறை காட்டவில்லை. கடுமையாகப் புகார் செய்தபின் எங்களுடைய தேவைகளைக் கவனிப்பதற்கென்று மாவட்டக் கமிஷனரும், மருத்துவ அதிகாரியும் சிறைக்கு வந்தனர். இருவருமே ஆங்கிலேயர்கள். அவர்களுடன் வேறு சில அதிகாரிகளும் வந்தனர். எல்லோரும் ஒரு கோஷ்டியாகச் சிறைக்குள் வந்து எங்களைக் கண்டனர். எங்கள் சார்பில் திரு. சத்தியமூர்த்தி, வந்த அதிகாரிகளுடன் உரையாடினார். அவர் சிறையிலுள்ள குறைபாடுகளை எல்லாம் பட்டியல் தொகுத்துக் கூறினார். மருத்துவ அதிகாரியைப் பற்றி மாவட்டக் கமிஷனரிடம் ஐயர் புகார் கூறினார்.

> *''இந்தச் சிறையின் மெடிகல் ஆபீசர் ஒரு விசித்திரமான பேர்வழியாக இருக்கிறார். அவர் எங்களில் நோயாளிகளைச் சரியாகக் கவனிப்பதில்லை. எங்களை அவர் மனிதர்களாகவே மதிப்பதில்லை. ஒருகால் நாங்கள் காங்கிரஸ்காரர்கள் ஆதலால் எங்கள்மீது அவருக்குத் துவேஷம் போலும்! அப்படியானால் அவரை நாங்கள் எப்படி நம்புவது?''*

இப்படி ஐயர் கூறியதற்கு ஆங்கிலேயரான கமிஷனர் அளித்த பதில் வருமாறு:

''மெடிகல் ஆபீசர் மிகவும் நல்ல மனிதராயிற்றே! கொஞ்சம் வெட்கமுள்ளவர் — அவ்வளவுதான்! அதனாற் றான், நீங்கள் அவரைச் சந்தேகிக்கிறீர்கள். இந்த மாகாணத் திலேயே அவர்தான் சிறந்த மருத்துவ அதிகாரி. காங்கிரஸ் காரர்கள் என்பதற்காக அவருக்கு உங்கள் மீது கொஞ்சங் கூடத் துவேஷமிருக்காது என்று நான் உறுதியாகக் கூறு வேன். பொதுவாக, நாங்கள் (வெள்ளையர்கள்) காங்கிரஸ் காரர்கள் என்பதற்காக யாரையும் வெறுப்பதே கிடையாது. உங்கள் மக்கள்தான் வெள்ளையர்களாகிய எங்களை வெறுக்கிறார்கள். இதோ பாருங்கள் (தன் பக்கத்திலிருந்த ஜில்லா மாஜிஸ்திரேட்டான வெள்ளையரைச் சுட்டிக் காட்டி); இந்த மனிதரை ஆகஸ்டுக் கலவரத்தின்போது துரத்தித் துரத்தி அடித்தார்கள் உங்கள் மக்கள். கலகக் கூட்டத்திடமிருந்து உயிர் பிழைப்பதற்காக ஒரு மைல் தூரம் ஓட வேண்டியதாயிற்று. இவர் முதுகைப் பாருங்கள். (சட்டையைக் கழற்றி முதுகைக் காட்டி) கலகக்காரர்களால் தாக்கப்பட்ட வடுக்கள் இவை.''

கமிஷனர் இப்படிக் கூறியதும் ஐயருக்கு ஆவேசமே வந்து விட்டது. ஆவேசத்தை அடக்கிக் கொண்டு அவர் கூறியதாவது:

''இதோ பாருங்கள்; நான் ஒரு கைதி. நீங்கள் உயர்தர அதிகாரி. உங்களிடம் அரசியல் சர்ச்சையிலீடுபடுவது முறையாகாது. மருத்துவ அதிகாரியிடம் எங்களுக்குள்ள குறையை மட்டும் கூறி, அதனை நீக்குமாறு வேண்டினேன். நீங்களோ அரசியல் விவாதத்தை ஆரம்பித்து விட்டீர்கள். ஆகவே, நான் சொல்வதையும் கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள். பொதுமக்களின் பலாத்காரச் செயலை நான் ஒருபோதும் ஆதரித்ததில்லை. அதை அடியோடு வெறுக்கி றேன். என்றாலும், நீங்கள் சொல்லும் வியாக்யானத்தை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. எங்கள் தமிழில் ஒரு பழமொழி உண்டு. 'என் பெண் பொல்லாதது; உன் பிள்ளையை அடக்கி வை' என்பது அந்தப் பழமொழி. அதுபோல நீர், ''எங்கள் சாம்ராஜ்யம் கட்டி ஆள்வதை விடாது; உங்கள் ஜனங்களை அடக்கி வையுங்கள்'' என்று சொல்கிறீர் — அப்படித்தானே! இதற்குப் பதிலாக நீங்கள்

உங்கள் தாய்நாடாகிய பிரிட்டனுக்கு உண்மையாகச் சேவை செய்ய விரும்பினால், இந்தியா மந்திரியாக இருக்கும் உங்கள் அமெரி துரைக்கு, 'ஐயா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குச் சேவை செய்ய வந்ததன் பலனாக நாங்கள் உயிர் பிழைப்பதற்கு மைல் கணக்கில் ஓடவேண்டியிருக்கிறது. தாமதமின்றி இந்திய மக்களுக்கு விடுதலையளிப்பதன் மூலம் எங்கள் சங்கடத்தைத் தீருங்கள்' — என்று எழுதுங்கள்.''

ஐயர் மிகுந்த உணர்ச்சியோடு சொன்னதைக் கேட்ட வெள்ளையர்கள் சிரித்துக் கொண்டே எங்களிடம் விடைபெற்றுக் கொண்டு சிறையை விட்டு வெளியேறினர். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் மாவட்ட மருத்துவ அதிகாரியின் போக்கில் நல்ல விதமான மாறுதல்கள் ஏற்பட்டன.

அமராவதிச் சிறையில் குளிர்காலம் போய் கோடைக்காலம் வந்தது. இதுவும் எனக்கு மிகுந்த கெட்டகாலமாக இருந்தது. 'கோடைக்காலம்' எப்படியிருக்குமென்று வடபாரதம் சென்று அனுபவமில்லாத தமிழர்கள் அறிந்துகொள்ள முடியாது. நம் நாட்டில் கோடைக் காலத்தில் என்றோ ஒரு நாளைக்கு 106 அல்லது 108 டிகிரி வெயில் காயும். அந்த நாளிலும் சென்னை நகரில் பிற்பகல் மூன்று மணிக்கே கடற்காற்று வீசத் தொடங்கி கோடை வெயிலின் வெப்பத்தைத் தணிக்கும். அமராவதியிலோ, அதிகப்படி உஷ்ணம் 120 டிகிரி. நாங்கள் குடியிருந்த அறையின் கூரை துத்தநாகத் தகடு வேய்ந்ததாகும். கூரை மிகவும் தாழ்வாகவும் இருந்தது. மின்சார விசிறி கிடையாது. சிறை, காட்டுப் பிரதேசத்தில் இருந்தது. கோடையின் கொடுமையானது முழு அளவில் எங்களைத் தாக்கியது. எங்களில் ஆந்திரர்கள் எப்படியோ சமாளித்துக் கொண்டார்கள். தமிழர்களில் அதிக உடல் பருமனுடைய திரு.சி.என். முத்துரங்க முதலியார் அதிகம் கஷ்டப்பட்டார். புதிய அனுபவமானதாலும், ஏற்கனவே குடல் புண் காரணமாக நோயுற்று விட்டதாலும் கோடையின் கொடுமையைத் தாங்கிக் கொள்வது எனக்கும் கஷ்டமாகத்தான் இருந்தது. கோடையிலே எங்களுக்குக் கிடைத்த நல்ல பண்டங்கள் ஆரஞ்சு, முசம்பி பழங்களாகும். முசம்பி, தமிழ்நாட்டுச் சாத்துக்குடி போன்றது.

அமராவதிச் சிறையில் கோடை நாட்களில் அனுபவித்த இன்னலை நான் என்றுமே மறக்க முடியாது. தமிழ்நாட்டில் வெயில் காலத்தில் உடம்பில் வியர்வை ஏற்படும். ஆனால், வடநாட்டிலே வெயில் எவ்வளவு கொடுமையாக இருப்பினும் உடம்பில் வியர்வை தோன்றாது. அதனால் நோயும் ஏற்படுவ தில்லை என்று சொல்லப்படுகின்றது. கோடைக்காலம் வருவ தற்கு முன்பே திரு.சத்தியமூர்த்தி ஐயர் கடுமையாக நோயுற்று விட்டதால், சிறைக்கு வெளியிலுள்ள அரசாங்க மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டு விட்டார். திரு. இராசாராம் நாயுடு ஐயருடன் துணைக்குச் சென்றார். ஐயருடைய மகளும் மனைவி யும் அவருடன் மருத்துவமனையில் தங்கி இருக்க அனுமதிக்கப் பட்டனர்.

சத்தியமூர்த்தி ஐயர் சிறையில் அடைபட்டிருந்தபோதும் அரசியலிலேயே சிந்தை செலுத்தினார். சிறையிலிருந்த சகாக்க ளிடம் அடிக்கடி அரசியல் பற்றியே அதிகம் பேசுவார். ஒருநாள் நடுப்பகல் நேரம். கடுமையான வெயில். ஐயர் தலையில் முக்காடிட்டுக் கொண்டு இடது கையில் டைம்ஸ் ஆஃப் இந்தியா என்ற ஆங்கிலப் பத்திரிகையைப் பிடித்துக் கொண்டு தாம் தங்கியுள்ள விடுதியிலிருந்து நான் இருந்த விடுதிக்கு நடந்து வந்தார். அப்போது திரு. பக்தவத்சலம் அவர்கள் ஆங்கிலப் பத்திரிகையை எல்லோரும் கேட்கும்படியாகப் படித்துக் கொண் டிருந்தார். அவரைப் பார்த்து ''என்ன பக்தவத்சலம்! மாக்ஸ் வெல் டில்லி அசெம்பிளியில் பேசியதைப் படித்தாயா?'' என்று கேட்டார் ஐயர். 'அதைத்தான் படித்துக் கொண்டிருக்கிறேன் — என்றார் பக்தவத்சலம். மீண்டும் ஐயர் சொன்னார்:

> *''என்ன அகம்பாவமாகப் பேசியிருக்கிறான் பார்த் தாயா? மகாத்மா காந்தி முதலாளிகளின் கையாளாம். காங்கிரஸ் முதலாளிகளால் நடத்தப்படுகிறதாம். இன்னும் என்னவெல்லாமோ நாக்கில் நரம்பில்லாமல் உளறிக் கொட்டியிருக்கிறான். அதைக் கேட்டுக் கொண்டிருந்த அங்கத்தினர்களில் எவனாவது குறுக்கிட்டு, 'நீ பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கையாள்' என்று ஒரு சூடு கொடுத்து மாக்ஸ்வெல்லை மடக்கினானா? நான் அங்கிருந்திருந்தால் இப்படி விட்டிருப்பேனா? சொன்னால் கேட்டால் தானே!''*

ஐயருக்கு ஆவேசம் அடங்க கெடு நேரமாகிவிட்டது.

தேச மக்கள் கடுமையான ஒரு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது — காந்தியடிகள், மேலிடத் தலைவர்கள் உள்ளிட்ட தம் தேச பக்தர்கள் எல்லாம் சிறைச்சாலையில் அடைப்பட்டிருந்தபோது — சிறைச்சாலைக்கு வெளியேயிருந்த ராஜாஜி அவர்கள் ஆகஸ்டுக் கிளர்ச்சிக்கு எதிராகப் பிரச்சாரம் செய்துகொண்டிருந்தார்.

கல்கத்தாவில் நடைபெற்ற ஐரோப்பிய வர்த்தகசங்க விழாவிலே காங்கிரஸ் பெருந்தலைவர்களைக் கடுமையாகக் கண்டித்துப் பேசினார். மொத்தத்தில் ராஜாஜியின் தேசபக்தியற்ற போக்கு அமராவதிச் சிறையிலிருந்த எங்களுக்கு மிகுந்த வேதனையைத் தந்தது — குறிப்பாக, நாட்டை அடிமைப்படுத்தி, நாட்டு மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தி வந்த வெள்ளையர்கள் நடத்திய விழாவொன்றிலே விடுதலைப் போருக்கு எதிராக அவர் பேசியதை எங்களால் தாங்கிக்கொள்ள இயலவில்லை. அவரது பேச்சைப் பத்திரிகைகளில் படித்தபோது நாங்கள் மிகுந்த ஆத்திரமடைந்தோமென்று சொல்ல வேண்டும்.

தனிப்பட்ட முறையில் ராஜாஜியிடம் நான் மிகுந்த மதிப்பு வைத்திருப்பவன் என்றாலும், அவரது கல்கத்தா சொற்பொழிவு நானும் அவர்பால் வெறுப்பு கொள்ளச் செய்தது. ராஜாஜி ஆகஸ்டுக் கிளர்ச்சிக்கு எதிராக அடிக்கடி பேசி வருவதை — அறிக்கை விடுவதைப் பத்திரிகைகளில் படிக்கும்போதெல்லாம் அமராவதிச் சிறையிலிருந்த என் சகாக்கள் ஒரு குட்டி மாநாடே நடத்தி விடுவார்கள். இதை நடத்துவதற்கு முதல் முயற்சி எடுப்பவர்கள் தமிழர்களாகத்தான் இருப்பார்கள். ஆந்திர — கேரள — கன்னட அரசியல் கைதிகளும் கலந்து கொள்வார்கள். எல்லோருமாகச் சேர்ந்து ராஜாஜி பற்றிக் கடுமையாக விமர்சிப்பார்கள். இயற்கையாகவே சுடுசொல் வழங்கும் இயல்புடையவர்கள் ராஜாஜியை வசைபாடுவார்கள். இந்தப் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. அதனால், அந்த விமர்சன ''செமினார்''களில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருப்பேன்.

இருதலைக் கொள்ளியிடை....

ராஜாஜியின் போக்கு எனக்கும் பிடிக்காததால், தமிழ்நாட்டுத் தேசபக்தர்கள் அவரைப் பற்றிக் கடுமையாக விமர்சிப்பதைச் சகித்துக் கொள்வதில் எனக்கொன்றும் சங்கடமிருக்கவில்லை. அப்படிப்பட்ட ஒரு விமர்சனத்தை அன்றைய சூழ்நிலையில் நான் விரும்பினேன் என்றும் சொல்ல வேண்டும். ஆனால், ஆந்திர — கன்னட — கேரள அரசியல் கைதிகளையும் கூட்டி வைத்துக் கொண்டு தமிழ்நாட்டுத் தலைவர் ஒருவர் பற்றித் தமிழர்களே குறைகூறிப் பேசியதைத்தான் என்னால் சகித்துக் கொள்ள இயலவில்லை. எனக்குள்ள இன உணர்ச்சி அதனை வெறுத்தது. அதனாலேதான் ஒதுங்கியிருந்தேன். என்னைத் தவறாகப் புரிந்துகொண்ட என் சகாக்கள் ராஜாஜியின் காங்கிரஸ் எதிர்ப்புப் பிரச்சாரத்தை நான் ஆதரிப்பதாகக் கருதினர். அதனாற்றான், அவர்கள் நடத்தும் குட்டி மாநாடுகளில் கலந்து கொள்ளாமல் நான் ஒதுங்கியிருக்கிறேன் என்றும் எண்ணி விட்டார்கள். சில நேரங்களில் ராஜாஜியின் இடத்தில் என்னை வைத்துப் பார்த்து என்மீது காழ்ப்பு காட்டுவார்கள். ஆம்; நான் இருதலைக் கொள்ளியிடை அகப்பட்ட எறும்பு போலானேன்.

1946-இல் தமிழகம் வந்த காந்தியடிகள், இங்குச் சுற்றுலாவை முடித்துக் கொண்டு வார்தா சென்றதும், ஒரு அறிக்கை விட்டார். அதிலே ''சென்னையிலிருந்து விசயவாடா வரை 'கிளிக் கோஷ்டி' ஒன்று உருவாகியிருப்பதை என்னால் காண முடிந்தது'' என்று கூறியிருந்தார். அடிகள் கூறியது முற்றிலும் உண்மை. இந்தக் கிளிக் கோஷ்டி உருவானது அமராவதிச் சிறையில்தான். அந்தச் சிறைக்கு வெளியேயிருந்த தேச பக்தர்களில் யாருக்குமே இது தெரியாது. சிறைக்குள்ளிருந்தவர்களிலும் பலர் இதனைக் கவனித்ததில்லை. ஆனால், இந்தக் கோஷ்டி சிறையில் உருவாகி வந்தபோதே நான் அதனை நன்றாக உணர்ந்து கொள்ள முடிந்தது.

என்பால் மிகுந்த அன்புடைய — சிறை வாழ்க்கையில் என்னுடன் நெருங்கிப் பழகிவந்த திரு. சத்தியமூர்த்தி ஐயர்கூட,

''கிராமணி, ராஜாஜியின் கையாள்'' என்று ஒரு சமயம் துடுக்காகக் கூறியது என் காதில் விழுந்தது. அமராவதிச் சிறையில் மட்டுமல்ல; அந்தச் சிறைவாச காலத்திற்கு முன்னும் பின்னும் கூட ராஜாஜிக்காக எத்தனையோ பேருடைய வசைமொழிகளை நான் ஏற்று வந்திருக்கிறேன். என் வளர்ச்சிக்கான நல்ல வாய்ப்புகள் பலவற்றையும் நான் இழந்து வந்திருக்கிறேன். ராஜாஜி அடைந்த நன்மைகளிலே எனக்குப் பங்கு கிடைத்ததில்லை. ஆனால், அவருக்கு ஏற்பட்ட எதிர்ப்புகளிலே, அவருக்குக் கிடைத்த ஏச்சுகளிலே பெரும்பங்கை நான் ஏற்று வந்திருக்கிறேன். தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடும் அகில இந்தியத் தலைவராக ராஜாஜி இருந்து வந்ததால், அவரது செல்வாக்கு குறைவதை நான் விரும்பாதவனானேன். அவரது செல்வாக்கைக் குறைக்க யார் முயன்றாலும், அவர்களை எதிர்த்துப் போராடுவதை எனது கடமையாக நான் கொண்டிருந்தேன். 'தமிழன்' என்ற இன உணர்வைத் தவிர வேறு எந்த உணர்வாலும் நான் இந்த 'பாவ'த்தைச் செய்யவில்லை. என் கொள்கைகளில் எதையும் — எந்தக் காலத்திலும் ராஜாஜிக்காக நான் விட்டுக் கொடுத்ததே இல்லை.

கிளிக் கோஷ்டி பிறந்தது!

சிறையிலே காமராசர், பக்தவத்சலனார், மாதவ மேனன், சஞ்சீவி ரெட்டி ஆகிய நால்வரும் மாலை நேரங்களில் ஒரு கோஷ்டியாகச் சிறைக்குள்ளே உலாவுவார்கள் என்று ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன். இவர்களிடமிருந்துதான் 'கிளிக் கோஷ்டி' பிறந்தது. இவர்கள்தான் அந்தக் கோஷ்டியின் முதல் வடிவம்.

ராஜாஜி அவர்கள் — மீண்டும் அவர் காங்கிரசுக்குத் திரும்ப முடியும் என்று நம்ப முடியாத வகையில் — காங்கிரஸ்காரர்களைப் பகைத்துக் கொண்டு விட்டார். காங்கிரஸ்காரர்களும் அவரைப் பகைத்தனர். அதனால், காங்கிரசிலே ராஜாஜியின் தலைமைச் சகாப்தம் முடிந்து போய் விட்டது என்று 'நால்வர் கோஷ்டி' கருதியிருக்க வேண்டும். அமராவதிச் சிறைக்கு வெளியே மருத்துவமனையில் அநேகமாகப் பிழைப்

பது அரிது எனும் நிலையிலே மரணப் படுக்கையிலிருந்தார் சத்தியமூர்த்தி என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே, தமிழ் நாட்டின் தலைமைப் பீடத்திற்கு வேறு நபர் தேவைப்படுகிறார் என்ற எண்ணம் நால்வர் குழுவுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். சந்தர்ப்பச் சூழ்நிலை காரணமாக திரு. காமராசர் அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்தார். பழைய சென்னை ராஜ்ய அரசியலிலே ஆந்திர மாகாண காங்கிரசை விடவும் தமிழ் மாகாண காங்கிரசுக்கே அதிக செல்வாக்கிருந்தது. பத்திரிகைகளெல்லாம் தமிழர்களால் நடத்தப்பட்டன. தமிழகத்தின் தலையிடமான சென்னையே ராஜ்யத்தின் தலைநகராயிருந்தது. இத்தியாதி காரணங்களால், 'தென்னிந்தியா' அல்லது 'சென்னை ராஜ்யம்' என்றாலே தமிழ்நாடுதான் என்ற நிலை இருந்தது. காங்கிரஸ் மேலிடத்துத் தலைவர்களே இப்படித்தான் எண்ணினர். அதனால், ராஜாஜியும் சத்தியமூர்த்தியும் இல்லாத தமிழ்நாடு காங்கிரசைக் கற்பனை செய்து பார்க்கும் யாரும் அந்த இரு பெருந்தலைவர்களுக்கு அடுத்தபடியாக திரு. காமராசரைத்தான் நினைவில் கொள்ள வேண்டியிருந்தது, ஆம்; அவர் வகித்த பதவி காரணமாக!

இந்த உண்மையை உணர்ந்ததாலேயே ஆந்திர சஞ்சீவி ரெட்டியும், கேரள மாதவ மேனனும் சிறையில் திரு.கு. காமராசரின் நேசத்தைப் பெற முயன்றனர். இயற்கையாகவே சூழ்ச்சித் திறனுடைய திரு.மீ. பக்தவத்சலனார், இந்த மூவருடனும் நான்காவது நபராகச் சேர்ந்து கொண்டார். இவர்களுடைய அந்தரங்க ஆலோசனை மாலை நேரத்தில் இவர்கள் தனிக் கோஷ்டியாக உலாவும்போதுதான் நடக்கும். உலாவிக் கொண்டே சென்னை ராஜ்யத்தின் வருங்காலம்பற்றி விவாதிப்பார்கள்.

திரு.காமராசர், அந்நாளில், பிற்காலத்தில் தாம் சென்னை ராஜ்யத்தின் செல்வாக்குமிக்க தலைவராகவோ, அகில இந்தியப் பெருந்தலைவராகவோ வந்துவிடப் போவதாகக் கனவு கண்டு வந்தாரென்றோ, அப்படி வந்துவிடத் திட்டமிட்டிருந்தாரென்றோ நான் நினைக்கவில்லை. அப்படி நினைத்ததற்கான அறிகுறி எதையும் நான் அவரிடம் காணவில்லை. அடக்கமிக்க

ஒரு காந்தியத் தொண்டராகவே சிறை வாழ்விலும் அவர் நடந்து கொண்டார். சுயநலத்திற்கும் சூழ்ச்சிக்கும் அப்பாற்பட்ட ஒருவராகத்தான் அவர் என் பார்வையில் பட்டார். ஆனால், அவரைச் சூழ்ந்து கொண்டவர்கள் தாங்கள் விரும்பிய நிலைக்கு அவரை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். ராஜாஜியும் சத்திய மூர்த்தியும் இருந்த இடத்திலே திரு. காமராசரை வைக்க வேண்டுமானால், அதற்காகத் தயாரிப்பு தேவைப்படுகிறது என்று கருதி, அந்தத் தயாரிப்பிலேயும் ஈடுபட்டனர், திரு. காமராசரின் சகாக்கள்!

பீடிக்குப் பதில் சிகரெட்!

பெருந்தலைவர் ஆகிவிட வேண்டுமென்ற ஆசையைக் காமராசர் உள்ளத்தில் உருவாக்கவும், ஆகிவிட முடியுமென்ற நம்பிக்கையை அவருக்கு ஏற்படுத்தவும் அவர்கள் முயன்று கொண்டிருந்தார்கள். அமராவதிச் சிறைக்குள் புகும்வரை காமராசர் சேட்பீடி பிடிப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆனால், அவரைப் பெருந்தலைவராக்கிவிட முயன்றவர்களில் ஒருவரான மாதவ மேனன், பீடி மோகத்திலிருந்து அவரை விடுவித்து சிசர் சிகரெட் பிடிக்குமாறு செய்தார். முதல் சிகரெட்டைப் பற்ற வைத்து, அதை திரு. காமராசரின் வாயில் வைத்த ஆரம்ப விழாவையே நான் கண்டிருக்கிறேன். சுதேசிப் பீடி பிடிப்பதைவிட, விதேசி சிகரெட் பிடிப்பதுதான் தேசத் தலைவராவதற்கான தகுதியைத் தருவதாக எண்ணியவர்கள் சுதேசி விரதங்கொண்ட காங்கிரசில் இருக்க முடிந்தது.

அந்த நாளிலே, மாதவ மேனன், மலபார் ஜில்லா காங்கிரசில் ஓரளவு செல்வாக்குடையவராக இருந்தார். திருவிதாங்கூர் - கொச்சி பிரதேசங்கள் தனித்தனி சமஸ்தானங்களாக இருந்து வந்தன. ஆம்; அப்போது இன்றுள்ள ஐக்கிய கேரளம் உருவாகவில்லை. அமராவதிச் சிறையிலிருந்த மலபார் தலைவர்கள் நால்வரிலே குருவாயூர் கேளப்பனும், ராகவ மேனனும் மலபார் ஜில்லா காங்கிரசின் முன்னணித் தலைவர்களாகத் திகழ்ந்த காலமது. அவர்களுக்கு அடுத்த நிலையில்தான் மாதவமேனன் இருந்தார். அவரது மனைவி திருமதி குட்டிமாலு அம்மாள் தன்

கணவரை விடவும் அதிக செல்வாக்கு பெற்றிருந்தார். என். சஞ்சீவி ரெட்டியார் அந்த நாளில் 'தலைவர்' என்று சொல்லத் தக்க நிலையில் இருக்கவில்லை

தமிழக அரசியலில் திரு.சி.என். முத்துரங்க முதலியார் முன்னணித் தலைவராக இருந்தாராதலால், திரு.மீ. பக்தவத்சல னார் தன் மாமனாரை விடவும் தமிழர் மத்தியிலே அதிக செல்வாக்கு பெற்றிருக்கவில்லை. இப்படி, தமிழக — ஆந்திர — கேரள மாநிலங்களிலே இரண்டாவது அல்லது மூன்றாவது வரிசையிலிருந்தவர்களில் மூவர் திரு. காமராசரின் தலைமை யில் ஒரு கோஷ்டியை உருவாக்க அமராவதிச் சிறையில் முயன்றனர். இதனைக் கூர்ந்து கவனித்து வந்த நான் இதனால் தமிழ்நாட்டுக்கு நன்மை ஏற்படாதென்று உறுதியாக நம்பினேன். இராஜாஜி காங்கிரசிலிருந்து விலகியதைப் பயன்படுத்திக் கொண்டு, சென்னை ராஜ்ய அரசியலில் ஆந்திரர்கள் செல்வாக்கு பெற முயல்வதாகவே எனக்குப் பட்டது. சிறையில் உருவாகும் 'கிளிக் கோஷ்டி'யால் பிரகாசம், பட்டாபி சீதாரா மய்யா, புலுசு சாம்பமூர்த்தி போன்ற ஆந்திரத் தலைவர்கள் கை வலுத்துவிடக் கூடுமென்றும் நான் அஞ்சினேன். அந்த அபாயத்தை நேரிய முறையில் தவிர்க்கும் ஆற்றல் திரு. காமராசருக்கு இருப்பதாக நான் அப்போது நினைக்க வில்லை.

திரு. காமராசரிடத்தில் தனிப்பட்ட முறையில் அன்புடைய வனாக இருந்தேன். அவருடைய தலைமையிலும் அப்போது நம்பிக்கை வைத்திருந்தேன். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக அவர் வந்ததிலே எனக்கும் பங்குண்டு என்று முன்பே கூறியிருக் கிறேன். இவ்வளவிருந்தும், பிற மாநிலத்தவரின் சூழ்ச்சிக்கு திரு. காமராசர் வெற்றி தந்துவிடக் கூடுமென்ற அச்சம் எனக் கிருந்தது.

திரு. காமராசரை முதல்வராகக் கொண்டு ஒரு கோஷ்டியை உருவாக்கிவிட முயன்றவர்கள் அந்தக் கோஷ்டியின் மீது அவரை விடவும் அதிக அளவு தாங்கள் செல்வாக்கு செலுத்த முடியுமென்ற நம்பிக்கையுடையவர்களாக இருந்திருக்க வேண் டும். ஏனெனில், அவர்கள் பட்டதாரிகள். திரு. காமராசர்

'படிக்காதவர்' என்று அவர்களால் கருதப்பட்டார். சென்னை ராஜ்ய அரசியலிலே திரு. காமராசரின் முதுகுக்குப் பின்னால் மறைந்து அதிகார வேட்டையாட வேண்டுமென்ற உள்நோக்கம் அவர்களுக்கிருந்தது. 'கிளிக் கோஷ்டி' பற்றி இதற்கு அதிகமாக இங்கே சொல்லத் தேவையில்லை. உரிய இடத்திலே சொல்லு கிறேன்.

'கேரம்' விளையாடினேன்!

சிறை வாழ்க்கையிலே ஆழ்ந்து சிந்திக்க எனக்குப் போதிய அவகாசமிருந்தது. வெட்டிப் பேச்சுகளில் கலந்து கொள்வதிலே எனக்கு ஆர்வமிருக்கவில்லை. மிக எளிய தொண்டனாக, தங்களுடன் சேர்ந்து உயர் வகுப்பில் இருந்து சிறை வாழ்க்கை நடத்தத் தகுதியற்றவனாக என்னைக் கருதினர். 'தலைவர்' அந்தஸ்திலிருந்தவர்கள். அதனால், என்னிடம் அதிகமாக நெருங்கிப் பழகமாட்டார்கள். அதாவது, நாட்டு அரசியல்பற்றி என்னுடன் மனம்விட்டு விவாதிக்க மாட்டார்கள். அவர்களு டைய இந்த உயர்வு மனப்பான்மை எனக்குப் பிடிக்கவில்லை என்றாலும், அவர்கள் என்னை ஒதுக்க முயன்றதால், படிப்பதற் கும் ஆழ்ந்து சிந்திப்பதற்கும் எனக்கு நிறைய அவகாசம் கிடைத்தது. இயற்கையாகவே நானும் என்னைவிட மேல் நிலை யில் உள்ளவர்களிடம் நெருங்கிப் பழக விரும்பாத சுபாவமுடை யவன்தான். இதனாலும், ஒதுங்கி வாழ்பவனாகவே இருந்து வந்தேன். எப்போதாவது சில நாட்களில் 'கேரம்' விளையாட் டிலே பங்கு கொள்வேன். அநேகமாக திருவண்ணாமலை என். அண்ணாமலைப் பிள்ளை, மதுரை சிதம்பர பாரதி, வேலூர் குப்புசாமி முதலியார் ஆகியோருடன் சேர்ந்து விளையாடு வேன். திரு. காமராசர் எங்களுடன் இருந்து வேடிக்கை பார்ப் பார். ஆட்டத்தில் அவர் கலந்து கொண்டதாக எனக்கு நினை வில்லை. 'கேரம்' ஆடுவதிலே எனக்குத் திறமை கிடையாது. அதனால், எப்போதோ ஒரு சமயம்தான் அந்த விளையாட்டில் கலந்து வந்தேன்.

தமிழ்ப் புலவனாகிவிட முயற்சி

அமராவதிச் சிறையில் புகும்வரை குறிப்பிட்ட எந்த ஒரு இலக்கிய நூலையும் நான் ஆழ்ந்து பயின்றதில்லை. தேவாரம், திருவாசகம், திருவருட்பா, திருப்புகழ் ஆகிய தோத்திர நூல்களிலே ஏராளமான பாடல்களை மனனம் செய்து வைத்திருந்தேன். இது என் தாய் தந்த செல்வமல்லவா! இந்தப் பக்திப் பாடல்களையும் பண்ணோடும் தாளத்தோடும் சேர்ந்து பாடும் இசைஞானம் எனக்கு அன்றுமில்லை; இன்றுமில்லை. ஆனால், மனமுருகப் பாடுவேன். பல நேரங்களில் பக்திப் பாடல்களைப் பாடும்போது என்னை நான் மறந்து விடுவதுண்டு. இதை மூலதனமாக வைத்துக் கொண்டு அமராவதிச் சிறையில் இலக்கியம் பயில முயன்றேன். என்னுடனிருந்த 'படித்தவர்கள்' காட்டிய உயர்வு மனப்பான்மை காரணமாக நானும் 'படித்தவன்' என்று பெயரெடுக்க வேண்டும் என்னும் ஆசை என் மனத்துள் பிறந்தது. ஆங்கில மொழியில் புலமை பெறுவதற்கான பருவம் கடந்து விட்டது. பருவம் கடந்தும் பயிலலாமென்றாலும், அதற்கான சூழ்நிலை சிறையில் எனக்கிருக்கவில்லை. உயர்வு மனப்பான்மையுடையவர்களில் ஒருவரை அணுகி, அவரிடம் ஆங்கிலம் பயில எனக்கு விருப்பமிருப்பினும், தன்மான உணர்வு அதற்குத் தடையாக இருந்தது. ஆகவே, 'படித்தவன்' என்னும் பெயரெடுப்பதற்கு என் முன்னிருந்த ஒரே வழி, என் தாய் மொழியிலுள்ள இலக்கண — இலக்கியங்களைப் படிப்பது தான். அமராவதிச் சிறையிலே என்னுடன் இருந்த தமிழர்களிலே எவருக்கும் தமிழ் இலக்கண — இலக்கியங்களிலே ஆழ்ந்த புலமை இருக்கவில்லை. ஆகவே, இறைவனையே மானசீகமான ஆசனாகக் கொண்டு, எனக்கு நானே இலக்கியம் பயிற்றுவிக்கத் தொடங்கினேன். ஆம்; ஏகலைவன் வில்வித்தை பயின்றது போல!

அந்த நாள்!

சிறையிலே தினமும் நாட்குறிப்பு எழுதி வந்தேன். ஒருநாள் எழுதிய குறிப்பு வருமாறு:

''பிரிட்டிஷ் அரசு, பெருந்தலைவர்களோடு சேர்த்து சிறையில் வைத்து என்னைப் பெருமைப்படுத்தி விட்டது. ஆனால், என்ன பயன்? ஜெயிலிலிருந்து விடுதலையான பின் எனது நிலை என்ன? பிழைப்புக்குத் திரும்பவும் அச்சுக் கோக்கும் தொழிலுக்குத்தானே போகவேண்டும்? போகா விட்டால், குடும்பத்தின் கதி என்ன ஆவது? இதற்கு ஒரு வழி கண்டுபிடித்து விட்டேன்.

''நாளை முதல் இலக்கியங்களைப் படிக்க இன்று விரதம் எடுத்துக் கொள்ளுகிறேன். என் தாய் மொழியிலே னும் 'படித்தவன்' என்று பெயர் எடுக்க வேண்டும். ஜெயிலிலிருந்து விடுதலை பெற்றபின், 'வித்துவான்' பரீட் சைக்குப் படித்துப் பட்டம் பெற்றால், தமிழ் வாத்தியார் வேலையேனும் கிடைக்குமல்லவா!''

என்னுடனிருந்தவர்கள், தங்கள் வருங்காலம் பற்றி எப்படி எப்படி எல்லாமோ மனக் கோட்டைகள் கட்டிக் கொண்டிருந்தார் கள். அதற்காகக் கோஷ்டி சேர்ந்தும் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்கள் உயர் அதிகாரப் பதவிகளை அடைவதிலே ஆர்வங் கொண்டிருக்கலாம். நானோ அப்படிப் பட்ட மனக்கோட்டைகளைக் கட்ட ஆற்றலற்றவனாக இருந் தேன். இரண்டாவது வகுப்போடு பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டுவிட்ட துரதிருஷ்டசாலியான நான், செய்திப் பத்திரி கைகள் படிப்பதற்கு அதிகமாக மொழி அறிவைப் பெற்றிருக்க வில்லை. பல நூறு பக்திப் பாடல்களை மனனம் செய்து வைத்திருந்தேன் என்றாலும், ஒரு பாட்டிற்குக் கூட சந்தி பிரித்துப் பொருளறியும் புலமை எனக்கிருக்கவில்லை. பொருள றியாமலே பக்திப் பாடல்களைப் பாடி வருவதுதானே நமது மரபு — மதம். நான் மட்டும் அதற்கு விலக்காக எப்படியிருக்க முடியும்? இந்த அளவுக்குக் 'கல்வியின்மை' எனும் படுகுழியில்

விழுந்து கிடந்த நான், பெரும் புலவனாகிவிட வேண்டுமென்று திடங்கொண்டு, அதற்காகத் திட்டமிட்டு முயலலானேன். கட்டிய துணியோடு சிறை புகுந்தேனாதலால் என் கைவசத்தில் இலக்கிய நூல் எதுவும் இருக்கவில்லை. என் வீட்டிலும் அந்நாளில் இலக்கிய நூல்களை நான் சேகரித்து வைத்திருக்கவில்லை. நல்ல வேளையாக, எனது அறையில் என்னோடு தோழமை கொண்டு சிறை வாழ்க்கை நடத்தி வந்த காரைக்குடி அரு.ராம. சொக்கலிங்கம் செட்டியார் என்பவர் என்பால் மிகுந்த நல்லெண்ணமுடையவராக இருந்தார். அவரும் பட்டதாரியல்ல என்றாலும், பெரும் பணக்காரர்.

புத்தகப் பார்சல்!

எனக்குத் தேவைப்படும் நூல்களின் பெயர்களை என்னைக் கேட்டறிந்து பட்டியல் தயாரித்து ஒரு மாத காலத்திற்குள் அவற்றைச் சிறைக்குள் கொண்டு வந்துவிட்டார். ஆம்; ஒரு பெரிய பார்சலே அமராவதிச் சிறைக்குக் காரைக்குடியிலிருந்து அனுப்பப்பட்டது, அவருடைய மகன் இராமையாவால்! அந்தப் புத்தகங்களை முதன் முதலாகப் பார்த்தபோது எனக்கேற்பட்ட இன்பம் எழுத்தில் வருணிக்க முடியாதது. நான் புலவனாகி விட்டதாகவே கர்வப்பட்டேன். உள்ளூர ஒரு புறத்தில் நமது ஆசையானது முடவன் கொம்புத் தேனை அடைய விரும்புவது போன்றதுதானோ? — என்ற ஐயமும் எனக்குத் தோன்றியது. ஆயினும், ''படித்தவன்'' ஆகிவிட வேண்டுமென்று எடுத்த முடிவிலிருந்து நான் பின்வாங்கவில்லை.

சைவ — வைணவத் தோத்திர நூல்கள், உரைநடையில் எழுதப்பட்ட இலக்கிய நூல்கள், திருக்குறள் ஆகியவற்றைத் திரு.செட்டியார் தருவித்துக் கொடுத்தார். சிறையில் எனது அறையிலிருந்த மேசைமீது அந்த நூல்களை இரண்டு மூன்று வரிசையாக அடுக்கிப் பார்த்தபோது, கல்லூரியிலே தமிழ் எம்.ஏ. வகுப்பில் படிக்கும் மாணவனாகவே என்னை நான் எண்ணிக் கொண்டேன். உயர்வு மனப்பான்மை தவறானதுதான். அதை விடவும் தவறானது தாழ்வு மனப்பான்மை. தாழ்ந்தவராக பிறர் நம்மை எண்ணுவதனாலேயே நாம் தாழ்ந்து விடுவ

தில்லை. நமக்கும் தாழ்வு மனப்பான்மை ஏற்படும்போதுதான் நாம் தாழ்ந்து விடுகிறோம். நம்மைவிட உயர்ந்தவர் என்று ஒருவர் தம்மை எண்ணிக் கொள்வதனாலேயே அவர் உயர்ந்தவ ராகி விடுவதில்லை. நாமும் அவரை உயர்ந்தவராகவே எண் ணும் போதுதான் அவருக்கு அந்தப் போலி அந்தஸ்து நிலைத்து விடுகிறது. 'ஒழுக்கத்து வேண்டும் உயர்வு' என்பது வள்ளுவர் வாக்கு. அதன்படி, தாழ்வு மனப்பான்மையிலிருந்து என்னை நான் விடுவித்துக் கொண்டுவிட்டேன்.

சிறைச்சாலையே கல்லூரி; இறைவனே ஆசிரியர்!

எனது இலக்கியப் பயிற்சிக்கு நானே பாடத் திட்டம் வகுத்துக் கொண்டேன். விடிந்து படுக்கையிலிருந்து எழுந்ததும், தேவாரத்தில் பத்துப் பாடல்களைப் பாராயணம் செய்வேன். உரையோடு கூடிய தேவார நூல்கள் என்னிடம் இருந்தன.

காலைச் சிற்றுண்டிக்குப் பின்னர், பத்திரிகைச் செய்திகளை அறிந்து கொள்வதற்கு முயல்வேன். அதன் பின்னர் திருக்குறள் படித்து பத்துக் குறட்பாக்களைப் பொருளோடு அறிந்து கொள்ள முயல்வேன். சில நாட்களில் குறள் படிப்பது பிற்பகல் நேரத்தில் அமையும். இரவில் படுக்கைக்குப் போகுமுன் திருவாசகம் அல்லது திருவருட்பாப் பாடல்கள் சிலவற்றைப் படித்துப் பொரு ளுணர்வேன். அதுவே படுக்கையில் செல்லுமுன் யான் செய்யும் இறைவழிபாடாகவும் அமையும்.

எனது பாடத் திட்டத்திலே நாளடைவில் சங்க இலக்கிய மான புறநானூறும், ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரமும் சேர்ந்து கொண்டன. 'கண்டதைக் கற்கப் பண்டிதனாவான்' என்றொரு பழமொழியுண்டு. அதுபோல, சிறையில் எனக்குக் கிடைத்தவற்றையெல்லாம் படித்தேன். படிப் பதில் பயித்தியமாகி விட்டேன். சிறையில் நான் உடல் நலத்தை இழந்ததற்குப் படிப்பதில் நான் காட்டிய அளவுக்கு மீறிய ஆர்வம்தான் என்று நண்பர்கள் கருதினர். நாமே படித்துக் கொள்வதைவிடப் பிறர் கேட்கப் படிப்பதிலே அதிக ஞானம் கிடைக்கிறது. ஆம்; வாய்விட்டுச் சத்தம் போட்டுப் படிப்பதிலே

யும் இத்தகைய பலனுண்டு. பருவங் கடந்து சுயமுயற்சியால் படித்தவர்கள் நான் சொல்லுவதிலுள்ள உண்மையை உணர்வார் கள். நான் படிப்பதை அரு. ராம. சொக்கலிங்கம் செட்டியார் என் அருகிலிருந்து கேட்பார். பொருளுரைக்கச் சொல்லியும் கேட்டு மகிழ்வார். ஆகவே, மாணாக்கன் நிலையில் இருந்த நான் அவர் விஷயத்தில் ஆசிரியனாகவும் இருந்தேன்.

சிறையில் யான் திட்டமிட்டபடி எனது இலக்கியப் பயிற்சி முறையாக நடந்து கொண்டிருந்தது. ஆம்; அமராவதிச் சிறையி லிருந்த காலம் முழுவதிலும், தொடக்கத்தில் சமய இலக்கியங்க ளிலேயே என் மனம் மிகுதியாகச் சென்றது. ஆனால், இலக்கி யப் பயிற்சி தொடங்கிய இரண்டு மாதங்களுக்குள் திசை மாறியது. சங்க இலக்கியங்களைப் பயில வேண்டுமென்ற விருப்பம் ஏற்பட்டது. சங்க இலக்கியங்களை ஆசிரியர் மூலமா கவன்றி தானாகவே பயில்வது சாத்தியமாகாதென்ற ஒரு தவ றான எண்ணம் முதலில் எனக்கு ஏற்பட்டது. ஆனால், அந்த எண்ணத்தைப் பின்னுக்குத் தள்ளி, சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றைப் பயில முயன்றேன், ஆம்; உரையின் துணையோடு. அதன்பின், சமய இலக்கியங்களைவிட, சங்க இலக்கியங்களே சுயமாகப் பயில்வதற்கு எளிதானவை என் பதை உணர்ந்தேன்.

இப்போதும் சமய இலக்கியங்களைவிடச் சங்க இலக்கியங் களையே அடிக்கடி ஆழ்ந்து பயின்று ஆராய்ச்சி செய்வதில் நான் அதிகமாக ஈடுபட்டு வருகிறேன். சமய இலக்கியங்களிலே வாழ்க்கையோடு பொருந்தாத கற்பனைகள் மிகுதியாக உள் ளன. அந்தக் கற்பனை தமிழினத்தின் பாரம்பரியத்திற்கும், பண்பாட்டிற்கும் பொருந்தாதவை எனலாம். அரசியல் — பொருளாதாரத் துறைகளிலே முற்போக்கான கொள்கை உடைய எவரும், சமயக் கற்பனைகளைச் சுவைப்பது இயலாததாகும். அத்தகைய இலக்கியங்களில் புலமை நயத்தைச் சுவைக்கலாம் — அவ்வளவுதான்!

'தமிழன்' ஆனேன்!

சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் வரலாற்றைத் தழுவி யவை. அதுவும் தமிழினத்தின் வரலாற்றுச் செய்திகளைத் தாங்கி யிருப்பவை. தமிழர் வாழ்வாங்கு வாழ்ந்த காலத்தின் சிறப்பு மிக்க செய்திகள் எலாம் சங்க இலக்கியங்களிலே குவிந்து கிடக்கின்றன — குறிப்பாக, புறநானூறு எனப்படும் பேரிலக்கி யம் தமிழினத்தின் பெருமைக்குச் சான்றாகும். அதனால் புறநா னூற்றுச் செய்யுள்களனைத்தையும் ஒரு பார்வை பார்த்து முடித்த தும் என் மனத்துள் ஏதோ ஒரு வகையான புத்துணர்ச்சி ஏற்பட்டது. நான் புதிய மனிதனாகி விட்டேன் என்பதனை உணர்ந்தேன். புறக்கண்கள் புறநானூற்றுப் பாடல்களைப் பார்க் குந்தோறும், என் அகக் கண்கள் சங்க காலத் தமிழகத்தைக் கண்டு களித்தன. 'தமிழன்' என்னும் இன உணர்வை நான் முதன் முதலாகப் பெற்றது புறநானூற்றைப் படித்தபோதுதான். அதற்கு முன்பும் நான் தமிழன் என்பது எனக்குத் தெரிந்திருந் தது. ஆனால், தமிழ் பேசும் மக்கள் தனித்த வரலாறும், தனியான பழக்க வழக்கங்களும், தனிச் சிறப்புடைய அரசியல் மரபும் படைத்த தனித் தேசிய இனத்தவர் என்ற உண்மை புறநானூற்றைப் படித்தபோதுதான் புலனாகியது. அந்தத் தமிழ் இனத்தவர் தங்களுக்கெனத் தனியாக ஒரு தாயகத்தையும் பெற்றிருக்கின்றனர் — அதன் பெயர் 'தமிழ்நாடு' என்பதனை யும் உணர்ந்தேன். அந்தத் தமிழ்நாட்டிலே ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தமிழரே ஆட்சி புரிந்து வந்தனர். வடக்கே தோன்றிய ஏகாதிபத்தியம் எதுவும் சங்க காலத் தமிழகத்தை அடிமைப்படுத்தி, தமிழர் மீது ஆதிக்கம் செலுத்தியதில்லை என்பது என் பார்வையிலே பளிச்சென்று பட்டது. சங்க காலத் திலே ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்ந்த வரலாற்று உண்மையை அறிந்தபோது என் உள்ளம் பூரித்தது. பாலொழுகும் சிறுகுதலை மகனை வேலொழுகும் போர்க்களத் துக்கு அனுப்பிய தாயரின் வீரத்தைக் கூறும் செய்யுள்களைப் படித்தபோது என்னை நான் மறந்தேன். இத்தகு பெருமை மிக்க தமிழகத்திலே பிறக்கும் பேற்றினை எனக்களித்த இறைவனுக்கு என் மனத்துள்ளே நன்றி செலுத்தினேன்.

புறநானூறு தந்த புத்துணர்ச்சி

புறநானூற்றைப் படிக்கும் எல்லோருமே என்போன்ற உணர்ச்சியைப் பெற முடிகிறதா என்பதை நானறியேன். பெறவில்லையானால், அதற்குக் காரணமுண்டு. ஆம்; தமிழை மட்டுமே படிக்கும் சூழ்நிலை அல்லது தமிழ் மொழிக்கு மட்டுமே முதன்மை தரும் பாடத் திட்டம் இன்றைய பள்ளிகளிலோ, கல்லூரிகளிலோ இருக்கவில்லை அல்லவா! நானோ, பிறமொழி எதற்கும் அடிமைப்படாத பேற்றினைப் பெற்றுவிட்டேன். நடுத்தர வயதை அடைந்த நிலையிலே எனக்கு நானே ஆசிரியனாக இருந்து கொண்டு சுதந்தரமாக இலக்கியம் பயின்றேன். ஏகாதிபத்தியம் அமைத்த சிறைச்சாலையில் அடைப்பட்டிருந்த நிலையிலே இலக்கியம் பயின்றேன். தாய்மொழிப் புலமையினால் மட்டுமே அறிஞனாகிவிட முடியுமென்ற நம்பிக்கையோடு புறநானூற்றைப் படித்தேன். அதனால், நான் ‘தமிழன்’ ஆனேன்!

புறநானூற்றைப் படித்துக் கொண்டிருந்த நாட்களிலேயே சிலப்பதிகாரத்தையும் பயிலத் தொடங்கினேன். முற்பகலில் புறநானூற்றைப் படிப்பேன். பிற்பகலில் சிலப்பதிகாரம் பயில்வேன். சிலப்பதிகாரத்தில் ஆரம்பப் பயிற்சிகூடப் பெறாத நிலையிலே அந்தப் பெருங் காப்பியத்தைப் பிறருக்கு எடுத்துச் சொல்லும் ஆசிரியனாகவும் இருக்கும் பேறு பெற்றேன். சிறையிலிருந்த சக அரசியல் கைதிகளில் சிலர் என்னிடம் சிலப்பதிகாரத்தையும் திருக்குறளையும் பாடங்கேட்டனர்.

உரைகளைக் கண்டு பயந்தேன்!

நான் சிலப்பதிகாரம் பயிலத் தொடங்கிய முதல் நாளிலே, ‘பதிக’த்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதியுள்ள உரைப் பாயிரத்தைப் படித்து அதிர்ச்சி அடைந்தேன். ஆம்; இளங்கோவடிகள் இயற்றியுள்ள மூலச் செய்யுளைவிட, பதிகத்திற்கு அடியார்க்கு நல்லார் எழுதியுள்ள உரைப்பாயிரம் புரிந்து கொள்ள இயலாததாக இருந்தது. இந்தப் பிறவியிலே ஆசிரியர் துணையின்றி நானாக சிலப்பதிகாரம் பயின்று புலவனாவது சாத்தியமில்லை என்று நினைத்தேன். அதனால், சிலப்பதிகாரப் பயிற்சியைச் சில

நாட்களுக்கு நிறுத்தி வைத்தேன். முதலில் சிலப்பதிகாரக் கதையையும், செய்யுள் நயங்களையும் உரைநடையில் படித்து அறிந்துவிட்டால், அதற்கப்புறம் இளங்கோ இயற்றியுள்ள மூலத்தைப் படிப்பது எளிதாக இருக்கும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. இந்த எண்ணத்திலே ஊன்றி நின்று டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளையின் ''சிலப்பதிகார நூல் நயம்'', ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் ''கண்ணகியின் கற்பு மாண்பு'', யோகி சுத்தானந்த பாரதியாரின் ''சிலம்புச் செல்வம்'' ஆகிய உரைநடை நூல்களைக் கருத்தூன்றிப் படித்தேன். இவற்றைப் படித்த பின்னர் சிலப்பதிகார மூலத்தைப் படித்தே ஆகவேண்டுமென்ற உறுதியும், படித்துப் பொருளறிய முடியுமென்ற நம்பிக்கையும் எனக்கேற்பட்டன.

நான் சிலப்பதிகாரம் பயிலத் தொடங்கியபோது டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் பதிப்பிலுள்ள அரும்பத உரையும், அடியார்க்கு நல்லார் உரையும் தவிர, வேறு தெளிவுரை எதுவும் வெளிவந்திருக்கவில்லை.

இலக்கியங்களைப் படிக்கும்போது அவற்றில் என் சிந்தையைக் கவர்ந்த செய்திகளையும், என் மனத்துள் ஏற்பட்ட எதிரொலிகளையும் தனி நோட் புத்தகங்களில் குறித்து வைத்துக் கொள்வேன். அதற்காக என் சொந்தச் செலவில் சிறையதிகாரிகளின் மூலம் தேவைப்படும் நோட் புத்தகங்களைத் தருவித்துக் கொண்டேன். அந்தக் குறிப்புக்களை விலை மதிப்பற்ற சொத்துக்களாக என் மனம் கருதியது. இலக்கியப் புலமையுடைய யாருக்குமே இப்படிப்பட்ட எண்ணம் தோன்றுவது இயற்கை.

புறமும் சிலம்பும் பயின்று கொண்டிருந்தபோது, இந்த இரு பெரும் இலக்கியங்களில் வரும் தமிழ்ப் பெண்களின் வீரச் செயல்களைத் தற்காலத் தமிழ்ப் பெண்களுக்கு எடுத்துக் கூறி, அவர்களை எல்லாம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் ஈடுபடுத்த வேண்டுமென்று திட்டமிட்டேன்; ஈடுபடுத்திவிட முடியுமென்றும் உறுதியாக நம்பினேன்.

வினைவயத்தால் கோவலனைக் கொன்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் கொடுங்கோ லரசை வீழ்த்திய வீரக்

கண்ணகியானவள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய வீராங்கனை ஜான்சி ராணியாகவும், பிரெஞ்சு வீராங் கனை ஆர்க்ஜோன் அம்மையாகவும் எனக்குத் தோன்றினாள். அன்றைய ஏகாதிபத்திய எதிர்ப்பாளன் பார்வையிலே மறக் கற்பினளான கண்ணகி இப்படித்தானே காட்சியளிக்க முடியும்? சிலப்பதிகார நாயகியைப் பத்தினிக் கண்ணகி என்பதைவிட, 'வீரக் கண்ணகி' என்றழைப்பதையே நான் விரும்பினேன். சிறை மீண்ட பின்னர், இலக்கியச் சான்றுகளை மேடைதோறும் வாரி வழங்கி, ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரச்சாரத்தில் முன்னை விடவும் திறமையாக ஈடுபட முடியுமென்பதனை நினைத்து நினைத்து மகிழ்ச்சியடைந்தேன்.

'புதிய தமிழகம்' பற்றிய கனவு

தமிழகத்தைத் தமிழரே ஆண்ட காலத்தில் பிறந்த புற நானூற்றிலும், சிலப்பதிகாரத்திலும் தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கட மலையாகவும், தெற்கெல்லை குமரி முனையாகவும் கூறப்படுவதனைப் படித்தபோது எனது நெஞ்சம் இறும்பூதெய்தி யது. மலையும் கடலும் ஒரு நாட்டின் இயற்கை எல்லைகளாக அமைவதென்பது அந்த நாட்டின் தவப்பயனாகும். தமிழகத்தின் எல்லைகள் கடலும் மலையுமாக அமைந்ததோடன்றி, அந்த எல்லைகளைப் பெண் தெய்வமும் ஆண் தெய்வமும் காவல் புரிந்து வருகின்றன என்ற செய்தியைச் சிலம்பின் மூலம்தான் முதன் முதலாக அறிந்தேன். அந்தத் தெய்வீக எல்லைகளை அன்றைய தமிழகம் இழந்துவிட்டது என்பதனை நினைந்து என் நெஞ்சம் வருந்தியது. அவற்றை மீட்கவேண்டுமென்ற ஆர்வ மும் என் நெஞ்சகத்தில் அரும்பெடுத்தது.

தமிழகத்தைத் தமிழினத்தவரே ஆளவும், தமிழகத்தின் எல்லைகளை மீட்கவும், தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழ் மொழியே முதலிடம் பெறவும் பாடுபடுவதற்கென ஓர் பேரியக்கம் தேவைப்படுவதனை யான் பெற்ற இலக்கிய அறிவு எனக்கு உணர்த்தியது. சுருங்கச் சொன்னால், புதிய தமிழகம் காண என் மனம் விழைந்தது. ஆயினும், பிரிட்டிஷ் பேரரசின் பிடியிலிருந்து பாரதப் பெருநாடு விடுபட்டாலன்றி, 'புதிய

தமிழகம் காண்பது சாத்தியமில்லை' என்ற தெளிவும் எனக்கு ஏற்பட்டது.

புலவனாகிவிட வேண்டும்; அச்சு கோக்கும் தொழிலி லிருந்து விடுபட்டு ஆசிரியத் தொழிலுக்குப் போய்விட வேண் டும் என்னும் சுயநல ஆசைகளால் உந்தப்பட்டு நான் இலக்கியம் பயிலத் தொடங்கினேன். என்றாலும், இலக்கியம் பயிலப் பயிலச் சுயநல ஆசைகளை விடுத்து, இலட்சியவாதியானேன். ‘இலக்கியம்’ என்பதற்கே ‘இலட்சியம்’ என்று பொருள் சொல் லப்படுகிறதல்லவா!

தத்துவம் படித்தேன்!

அமராவதிச் சிறையில் தமிழ் இலக்கியங்களைப் பயின்று கொண்டிருந்த நேரத்திலே சுவாமி விவேகானந்தர் இலக்கியங் களையும் வாய்ப்பு நேர்ந்தபோதெல்லாம் ஆழ்ந்து பயின்று தத்துவ நுணுக்கங்களை அறிந்து வந்தேன். அவற்றுள் குறிப்பி டத்தக்கவை கர்மயோகம், ராஜயோகம், ஞானயோகம் ஆகிய நூல்களாகும். இந்த அருஞ் செல்வங்களை — சுவாமி விவேகா னந்தர் ஆங்கிலத்தில் தந்த இலக்கியங்களைத் தமிழில் சுவை குன்றாமல் மொழி பெயர்த்து என் போன்றவர்கள் தத்துவ விசாரணையில் ஈடுபடுவதற்குத் துணை புரிந்த இராமகிருஷ்ண மடத்தாருக்கு நான் நன்றி சொல்ல வேண்டும்.

(அரசியல்வாதி ஒவ்வொருவரும் தத்துவ ஞானம் பெற்றி ருக்க வேண்டுமென்று டாக்டர் சி.பி.இராமசாமி ஐயர் உதகை யில் நிகழ்த்திய சொற்பொழிவொன்றில் கூறினார். அவரது கருத்தை யான் பொன்னேபோல் போற்றி வருகின்றேன். தத்துவ ஞானமில்லாத அரசியல்வாதி தவறுகள் செய்ய அஞ்சமாட்டார். தத்துவஞானமானது அரசியல்வாதியினுடைய ஆசைகளை ஒரு வரம்புக்குள் கட்டுப்படுத்துகின்றது. ஆசாபங்கம் ஏற்படுகின்ற போது அதனைத் தாங்கிக் கொண்டு தரும நெறியில் ஊன்றி நிற்கின்ற ஆற்றலைத் தருகின்றது. இதனை எனது வாழ்க்கை அனுபவத்திலே நான் கண்டு வருகின்றேன்.)

அமராவதிச் சிறையில் புகுந்த இரண்டு மாதங்களுக்குப் பின்னர் கடுமையான நோய்வாய்ப்பட்டேன் என்று ஏற்கனவே கூறினேனல்லவா? அந்த நோயுடன் போராடிக் கொண்டுதான் நான் தமிழ் இலக்கியங்களையும் வேதாந்த நூல்களையும் பயின்று வந்தேன். இது எப்படி முடிந்தது என்று இன்று நினைத்துப் பார்த்தாலும் எனக்கு வியப்பு ஏற்படுகின்றது. ஆம்; எப்படியோ முடிந்திருக்கின்றது! ''பசியின்மை'' என்னும் கொடு நோய் என் குடலைப் பற்றிக் கொண்டது. அமராவதிச் சிறைக்கு வெளியேயிருந்தபோது பசி என்னும் பிணி என்னைப் பிடித்தி ருந்தது. பசித்த நேரத்திலே புசிப்பதற்கு உணவு கிடைக்காமல் தவித்த நாட்கள் பலப்பல. அமராவதிச் சறையிலே வேளா வேளைக்கு அறுசுவையோடு எனக்கு உணவு கிடைக்க பிரிட்டிஷ் அரசு வழி செய்தும், உண்டு மகிழ இயலாதவனாக இருந்தேன். என் துரதிருஷ்டத்தை என்னென்பது?

சிறையிலே ஞாயிற்றுக்கிழமைதோறும் அரசியல் கைதிக ளின் உடல் நிறையைக் கணக்கெடுப்பது வழக்கம். எனது உடல் வாரத்திற்கு இரண்டு பவுண்டாகக் குறைந்து கொண்டே வந்தது. இன்னொரு வகையில் சொன்னால் எனது உடல் நாளுக்கு நாள் கரைந்து கொண்டே வந்தது. சிறை மருத்துவர் பசிப்பதற்காக எனக்குக் கொடுத்த மருந்துகள் எல்லாம் ஏற்கனவே குடலில் ஏற்பட்டிருந்த புண்ணை — அதாவது, 'அமீபியா' என்னும் ஒரு வகை நோயை அதிகப்படுத்தி வந்தன. சாப்பிடுகின்ற நேரம் வந்தால் என்னுடைய சகாக்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு உணவுச் சாலைக்குச் செல்வார்கள். நானோ மிகுந்த கவலையு டன் செல்வேன். அவர்களுடன் வரிசையிலமர்ந்து உண்பது போலப் பாசாங்கு செய்து இரண்டொரு கவளங்களை உண்டு, அத்துடன் ஆறுதலடைவேன். பான வகைகள் கூட ஏற்க முடியாத நிலை இருந்து வந்தது. 'அன்னத் துவேஷம்' என்பார் களே அது போன்ற ஒரு நிலை.

என் வாயில் மூன்று பற்கள் சொத்தை விழுந்திருந்தன. அந்தச் சொத்தைப் பற்றகள்தான் குடற்பிணிக்குக் காரணமென்று மருத்துவர் கூறினார். அவரது கருத்துப்படி அந்த மூன்று பற்களையும் அகற்றிவிட இசைந்தேன். அகற்றவும் பட்டன.

ஆனால், மூன்றாவது பல் அகற்றப்பட்டதன் விளைவாக உடல் நிலை மோசமாகியது. உடல் முழுவதுமே இரத்தமின்மையால் வெளுத்துப் போய்விட்டது. வட இந்தியக் குளிர் காரணமாக உடல் நிறம் வெளுத்ததா? இல்லை; இரத்தக் குறைவு காரண மாகச் சோகையால் உடல் வெளுத்ததா? — என்று சகாக்கள் விவாதிப்பார்கள்.

1943 ஜூன் திங்களிலே நான் மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்தேன். ஆம்; நடமாட்டம் குறைந்து படுக்கையில் விழுந்துவிட்டேன். பழச்சாறு, கஞ்சிகூட உட்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுவிட்டது. அநேகமாக, பிழைப்பதிலே நம்பிக்கை இழந்துவிட்டேன் என்றே சொல்ல வேண்டும். ஆயினும், தெய் வத்தின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு மன அமைதியுடனிருந் தேன். எனது உடல் இவ்வளவு மோசமான நிலையை அடைந்த பின்னரும் சிறைக்கு வெளியேயுள்ள மருத்துவமனையில் வைத்து முதல் தரமான சிகிச்சை தர அரசு மறுத்துவிட்டது. மத்திய மாநிலம் முழுவதிலுமே முதல்தரமான மருத்துவர் கிடையாதென்று சொல்லப்பட்டது. அங்கிருந்த இரண்டாந்தரமா னவரிடம் சிகிச்சை பெறும் வாய்ப்பையும் பெறாதவனானேன்.

இந்த நிலையில், ஒரு நாள் அமராவதிச் சிறையிலிருந்த தென்னிந்திய அரசியல் கைதிகள் அனைவர் சார்பிலும் திரு.வி.வி. கிரியவர்கள், என்னைச் சிறைக்கு வெளியிலுள்ள மருத்துவமனைக்கு மாற்றி, மரண அபாயத்திலிருந்து மீட்க வேண்டுமென்று மத்திய மாநில அரசின் தலைமைச் செயலாள ருக்கு அவசரத் தந்தி ஒன்று கொடுத்தார். இதனைச் செய்ய அரசு தவறினால், தாங்கள் கடுமையான நடவடிக்கை மேற் கொள்ள வேண்டி ஏற்படுமென்றும் அரசை எச்சரித்தார்.

இதன் பின்னர், அப்போது மத்திய மாநிலத்தின் தலை நகராக விளங்கிய நாகபுரியிலிருந்து ஐரோப்பிய டாக்டர் ஒரு வர் அமராவதிச் சிறைக்கு அனுப்பப்பட்டார். அவர் வந்தது மாலை நேரத்தில்! வந்தவர் வயதில் இளைஞர். அவர், சுமார் அரைமணி நேரம் என் உடலைப் பரிசோதனை செய்த பின்னர், தமது உதட்டைப் பிதுக்கி அபாய அறிவிப்பு செய்தார். நான்கு

நாட்களாக அறவே தூக்கமில்லாதிருப்பதால், ''இன்று தூங்கினாலன்றி, இவர் பிழைப்பதரிது'' என்றார் மருத்துவர். அதை ஆங்கிலத்தில் சொன்னார்.

எனக்கும் டாக்டருக்குமிடையே திரு.மீ. பக்தவத்சலனார் மொழி பெயர்ப்பாளராக இருந்தார். அதனால் எனக்கு ஆங்கிலம் அறவே தெரியாதென்று நினைத்தோ, என்னவோ, என் காதுகளில் அபாய அறிவிப்பு கொடுத்தார் அந்த ஐரோப்பிய டாக்டர். இரவு தூங்குவதற்கு மயக்க மருந்து கொடுக்கவோ, ஊசி போடவோ அவர் மறுத்துவிட்டார். நான் அரசியல் கைதியாதலாலும், அவர் ஐரோப்பியராதலாலும் மயக்க மருந்தின் மூலம் தூங்க வைக்கத் தாம் பொறுப்பேற்க முடியாதென்றும், வேண்டுமானால், சிறையிலுள்ள இந்திய டாக்டரைக் கொண்டு செய்து கொள்ளலாமென்றும் அவர் கண்டிப்பாகக் கூறிப் போய்விட்டார்!

ஐரோப்பிய மருத்துவரின் அபாய அறிவிப்பு எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. என் மனது ஆறுதல் பெறக்கூடிய வகையில் நல்ல வார்த்தை எதையும் டாக்டர் சொல்லாததோடு, சடங்குக்காகக் கூட மருந்து எதையும் தராமல் போய்விட்டார். ஆம்; ஆகஸ்டுக் கிளர்ச்சியின்போது சிறையில் அடைப்பட்ட அரசியல் கைதிகள் — அவர்கள் உயர் வகுப்புக் கைதிகளாக இருப்பினும் — மிகுந்த கேவலமாக நடத்தப்பட்டனர். பழி வாங்கும்போக்கில் நடத்தப்பட்டனர் என்றும் சொல்ல வேண்டும். அதற்கு நானே சான்று.

ஐரோப்பிய மருத்துவர் சென்ற பின்னர், என்னைச் சுற்றிலும் தலைவர்கள் சூழ்ந்துகொண்டு விட்டனர். ஆம்; அவர்களுக்கு என்மீது அனுதாபம் ஏற்பட்டுவிட்டது! ஆந்திரகேசரி பிரகாசம் அவர்கள், என் படுக்கையின் அருகில் இருந்துகொண்டு, எனக்கு ஆறுதலும், தேறுதலும் கூறினார். அவர் நடத்திய 'சுயராஜ்யா' என்ற தமிழ் நாளிதழில் நான் கம்பாசிடராக சில மாதங்கள் வேலை பார்த்த நாளிலிருந்து என்னை அவருக்கு நன்கு தெரியும். அச்சுத் தொழிலாளியாகிய நான்,

உயர் வகுப்பு அரசியல் கைதியாகத் தன்னோடு சேர்ந்து சிறையி லிருக்குமளவுக்கு அரசியலில் வளர்ந்ததன் காரணமாக, அவர் என்மீது தனி அன்பு காட்டினார்.

முப்பத்தொன்பது வயதில் 'அகால மரணத்'தை நெருங்கிக் கொண்டிருந்தேன். என்னைத் தன் வயிறாரச் சுமந்து, பெற்ற தாயை, வளர்த்த தந்தையை, உடன்பிறந்த தம்பியை, தங்கையை, வாழ்வரசியான மனைவியை, ஒரே மைந்தனைப் பிரிந்து, சுதந்திரமிழந்த கைதியாக ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள சிறைச்சாலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த என்னைச் சுற்றியிருந்த காங்கிரஸ்காரர்களையே என்னுடைய தாயாகவும், தந்தையாகவும், தம்பியாகவும் கருத வேண்டியவனாக இருந்தேன்; அப்படியே கருதினேன். என் சகாக்களில் ஒவ்வொருவரும் தத்தம் குடும்பத்தைச் சார்ந்தவ னாகவே என்னைக் கருதினார். எப்படியும் என்னை எமன் அணுகாமல் காத்துவிட வேண்டுமென்ற உறுதியுடன் செயல் புரிந்தனர்.

டாக்டர், 'இன்றிரவு தூங்கினாலன்றி, நோயாளி பிழைக்க மாட்டார்' என்று சொன்னாரென்றாலும், நான் அதனை, ''இன்றி ரவு தூங்கினால் நோயாளி பிழைத்து விடுவார்'' என்று சொன்ன தாகக் கொண்டு, தூங்க முயன்றேன். சிறைத் தோழர்களிலொரு வரான மதுரை சிதம்பர பாரதி, நன்றாகப் பாடுவார். அவர், தியாகி சுப்பிரமணிய சிவாவின் சீடர். சிவாவுடன் சேர்ந்து, தேசியப் பாடல்களைப பாடிப் பஜனை செய்து, நாட்டில் தேசபக்தியை வளர்த்தவர். அவரை அழைத்து, எனது அறை யில் மேஜை மீதிருந்த திருவருட்பா நூலைக் காட்டி, அதிலுள்ள 'மகாதேவ மாலை'யைப் பாடும்படி கேட்டுக் கொண்டேன். 'மகாதேவ மாலை'யிலுள்ள 100 பாடல்களையும் பாடுங்கள்; அதற்குள் நான் தூங்க முயலுகிறேன். தூங்காவிட்டால், அத்து டன் முடித்துவிட்டு நீங்கள் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்'. என்றேன்.

மகாதேவமாலை கேட்டு உறங்கினேன்!

அன்பர் சிதம்பர பாரதி தேசபக்தியோடு தெய்வ பக்தியு முடையவர். என்னிடம் மிகுந்த அன்புடையவர். அதனால் நான் பிழைக்க வேண்டுமென்று இதயபூர்வமாக இறைவனைப் பிரார்த் தித்து ''மகாதேவ மாலை''யைப் பாடத் தொடங்கினார். பாட் டைக் கேட்டுக் கொண்டே நான் தூங்க முயன்றேன். ஆம்; தூங்கி விழிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு, தூங்க முயன்றேன்; தூங்கிவிட்டேன். மறுநாள் காலை 7 மணிக்குக் கண் விழித்தேன். காலைக் கதிரவன் அடிவானத்திலிருந்து எழுந்து கொண்டிருந்த நேரம். சாவு தள்ளிப் போய்விட்டதாக நினைத்தேன். ஒரு வார காலம் தூக்கமின்மையால் ஏற்பட்டிருந்த களைப்பு நீங்கி, உடலில் ஒரு புதிய தெம்பு ஏற்பட்டது. செய்தியறிந்த என் சகாக்கள்; என்னைச் சூழ்ந்து கொண்டு, தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

முற்பகல் 11 மணிக்குச் சிறை சூப்பரின்டெண்ட் என்னை யணுகி, ''தங்களைச் சிறைக்கு வெளியிலுள்ள அரசினர் மருத்து வமனையில் வைத்துச் சிகிச்சை தர மத்திய மாநில அரசு தந்தி மூலம் அனுமதி வழங்கியிருக்கிறது'' என்றார். அதைக் கேட்ட தும், இறையருளுக்கு நன்றி செலுத்தினேன்.

திருவண்ணாமலை திரு.என். அண்ணாமலைப் பிள்ளை யவர்கள் மருத்துவமனையில் என்னுடன் இருக்க சிறை அதிகாரி அனுமதித்தார். திரு.எஸ். சத்தியமூர்த்தி ஐயர் நோய்ப்பட்ட போது, அவரது மனைவியும் மகளும் மருத்துவமனையில் அவருடனிருக்க அனுமதிக்கப்பட்டனர். அதுபோல, என் மனைவி மட்டும் என்னுடன் இருக்க அனுமதிப்பதாகச் சிறை அதிகாரி கூறினார். என் துரதிர்ஷ்டத்தால், அவளும் சென்னை யில் கடுமையாக நோயுற்றுப் படுக்கையிலிருந்தாள். அதனால், அரசு வலுவில் வழங்கிய இந்தச் சலுகையைப் பயன்படுத்தி மகிழ இயலாதவனானேன்.

சிறைத் தோழர்கள் மருத்துவமனைக்கு என்னை அனுப்பிய காட்சி என் மனத்தை உருக்கியது. திருவாளர்கள் கு.காமராசர்,

டி.பிரகாசம், வி.வி.கிரி ஆகியோர் சிறை வாயில்வரை வந்து வழியனுப்பினர். திரு. பிரகாசம் அவர்கள் மட்டும் சிறை சூப்பிரண்டிடம் அனுமதி பெற்று, கைதிகள் வரக்கூடாத வாயில் கடந்து வந்து, ''மருத்துவமனையிலிருந்தபடி, சென்னை அரசுக் குக் கடிதம் எழுதி, எப்படியாவது சென்னைச் சிறைச்சாலைக்கு மாற்றிக் கொள்ள முயலுங்கள்'' என்று அன்பு தோய்ந்த குரலில் என் காதோடு வாய் வைத்துக் கூறினார்.

அமராவதி மருத்துவமனையில் ஒரு தனிக் கட்டிடத்தில் நான் வைக்கப்பட்டேன். திரு. அண்ணாமலைப் பிள்ளை என்னு டனிருந்து தாதி போன்று எனக்கு உதவி புரிந்து வந்தார். அவரது கனிந்த மனம் என்னைப் பெரிதும் கவர்ந்தது. நான் சிறையிலிருந்து மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதனைச் சிறை அதிகாரிகள் சென்னையிலுள்ள என் குடும்பத்தினருக்குத் தந்தி மூலம் அறிவித்தனர்.

எனது முதற் கவிதை

சிறையில் நான் அபாய நிலையிலிருந்தபோது, பத்து மாதப் பருவத்தில் நான் விட்டுவிட்டு வந்த என் மகன் திருநாவுக்கர சைப் பார்க்க என் மனம் துடித்தது. அவனை அமராவதி நகருக்குக் கொண்டு வருமாறு செய்வதற்கு வறுமை தடையாக இருந்தது. அதனால் குழந்தையைப் பேட்டிக்கு அழைப்பது போலக் கற்பனை செய்து ஒரு 'கவிதை' எழுதினேன். அப் போது நான் யாப்பு பயின்றிருக்கவில்லையென்றாலும், பிள் ளைப் பாசமும் மரணபயமும் இலக்கணப் பிழை நிறைந்த ஒரு கவிதையை எழுதும் ஆற்றலை, எனக்குத் தந்தன. நான் எழுதிய கவிதை வருமாறு:

ஓடிவாடா! கண்ணே! ஓடிவாடா!
உள்ளம் குளிரச் சிரித்தோடி வாடா!
கற்கொண்ட மதிலுள்ளே வாடும் என்னை
கண்டபின் திரும்புவதாய்ச் சொல்லி வாடா!
மற்கொண்ட திண்புயத்தார் மாநில மன்னர் அவர்க்கு
மனுப்போட் டனுமதியும் வாங்கி விடடா!

விற்கொண்டு போர்புரியும் வேந்தன் சிறையில்
விதிதீரு முன்னே வந்து விண்டு போடா!
சொற்கொண்ட நாவரசே! சோதி மதியே!
சுந்தரனே வந்துமுத்தந் தந்து போடா!

(விற்கொண்டு போர் புரியும் வேந்தன் - விதர்ப்ப நாட்டரசன். அமராவதி - விதர்ப்ப நாடு)

இந்தக் கவிதையை என் மனைவிக்கு எழுதிய கடிதத்திலே சேர்த்திருந்தேன். ஆனால், அமராவதிச் சிறையிலிருந்தவர்கள் தங்கள் குடும்பங்களுக்கு எழுதும் தமிழ்க் கடிதங்களைத் தணிக்கை செய்யும் சென்னை மாநில அதிகாரிகள் என் கவிதையில் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துகளை நான் சிலேடையில் சொல்லியிருக்கக் கூடுமென்று பயந்து, கடிதத்திலிருந்த கவிதைப் பகுதியை மட்டும் மை பூசி மறைத்துவிட்டனர். இதனை அறிந்தபோது, என் மனம் பூரித்தது. ஆம்; நான் எழுதிய முதற் கவிதையே ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறையைச் சந்தித்துவிட்டதிலே எனக்கு மகிழ்ச்சி!

அமராவதி மருத்துவமனையில் ஒரு மாதகாலம் தங்கிச் சிகிச்சை பெற்றேன். உடம்பு கொஞ்சம் கொஞ்சமாகத் தேறியது. வழக்கமான உணவைப் பகல் வேளையில் மட்டும் உண்ணுமளவுக்கு வயிறு அபிவிருத்தியடைந்தது. உடல் நிறையும் சிறிது சிறிதாகக் கூடி வந்தது. திருவருட்பா மகாதேவ மாலை மரணத்திலிருந்து என்னைக் காத்தது. மரணமிலாப் பெருவாழ்வு பெற்ற வள்ளலார் பாட்டல்லவா!

அமராவதிச் சிறைக்கு வெளியே மருத்துவமனையில் எனது உடல் அபிவிருத்தி பெற்று வந்ததென்றாலும், மருத்துவமனை வாழ்க்கை என் மனத்துக்குப் பிடிக்கவில்லை. நானிருந்த அறைக்கு வெளியே நடமாடக்கூட எனக்குக் காவல் இருந்த போலீசார் என்னை அனுமதிக்கவில்லை. சிறையிலே குற்றம் செய்தவர்களைத் தனிக் கொட்டடியில் சில நாட்கள் அடைத்து வைப்பதுண்டு. அது சிறை அதிகாரிகளுக்குரிய அதிகாரப்படி வழங்கும் கொடுமைமிக்க தண்டனையாகும். அதுபோலத்தான் இருந்தது மருத்துவமனையில் எனது வாழ்க்கை. சிறையிலிருந்

தால் மாலை நேரத்தில் சுமார் மூன்று பர்லாங்கு சுற்றளவுள்ள பகுதியிலே உலாவுவதற்கு உரிமையிருந்தது. மற்றும், நன்கு அறிமுகமான — பரஸ்பரம் பேசிப் பழகுவதற்கான இருபத் தெட்டு பேர்கள் சிறையில் என் நண்பர்களாக இருந்தனர். மருத்துவமனையிலோ, திரு.என். அண்ணாமலைப் பிள்ளை யைத் தவிர நான் பேசிப் பழகுவதற்கு வேறு யாரும் எனக்குக் கிடைக்கவில்லை. இதனால், மருத்துவமனை வாழ்வு எனக்குச் சலித்துவிட்டது. மருத்துவமனையிலிருந்து சிறைச்சாலைக்குச் செல்வதற்கு அனுமதிக்குமாறு மருத்துவ அதிகாரிகளை நானா கவே வலுவில் கேட்டுக் கொண்டேன். மேலும் ஒரு மாத காலம் மருத்துவமனையிலிருந்து சிகிச்சை பெற்றால், எனது உடல் பூரண குணமடைந்துவிடுமென்று மருத்துவர்கள் கூறினர். நான் சிறைக்குத் திரும்புவதிலே பிடிவாதம் காட்டியதால், அவர்க ளும் என் கருத்துக்கு இசைந்தனர்.

பரோலில் விடுதலை!

சிறைக்குத் திரும்பிய இரண்டாவது நாளன்று என் தந்தை யாரிடமிருந்து எனக்கு ஒரு தந்தி கிடைத்தது. அதில் மனைவி யின் உடல்நிலை அபாய கட்டத்தை அடைந்துவிட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. மனைவிக்காகக் கடவுளைப் பிரார்த் திப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய வழியற்றவனாக நான் இருந்தேன். இந்த மாதிரி நேரங்களில்தான் தெய்வ நம்பிக்கை யும், பிரார்த்தனையும் மனத்துக்கு ஆறுதல் அளிக்கின்றன. அந்த நம்பிக்கையும் வழிபாடும் இல்லையானால் மனிதன் தற்கொலையை நாடுவதைத் தவிர வேறு வழியில்லையல்லவா? என் வாழ்க்கையிலே ஆபத்துகளையும் அவமானங்களையும் நான் சந்திக்க நேர்ந்தபோதெல்லாம் மனம் உடைந்துபோகும் விபத்துக்கு நான் ஆளானதில்லை. கொள்கையையும், ஒழுக்க நெறிகளையும் கைவிடும் தடம்புரண்ட வாழ்க்கையை நான் மேற்கொண்டதில்லை. இதனை நான் உறுதியாகச் சொல்ல முடியும். இறை நம்பிக்கை எனக்கிருந்தில்லையானால், எனது வாழ்க்கை இன்று எந்த நிலையில் இருந்திருக்குமோ நானறி யேன். அதனைக் கற்பனை செய்து பார்க்கக்கூட நான் விரும்புவ தில்லை.

எனது மனைவியின் உடல்நிலை பற்றி என் தந்தை கொடுத்திருந்த தந்தி கிடைத்த 24 மணி நேரத்திற்குள் மற்றொரு தந்தியைச் சிறை சூப்பரின்டெண்ட் என்னிடம் கொண்டு வந்து காட்டினார். அதில் எனது மனைவி மரண அபாயத்திலிருப்பதை முன்னிட்டு அவளது அருகில் நான் இருப்பதற்காக 15 நாட்கள் பரோலில் செல்ல அரசு எனக்கு அனுமதி தந்திருந்தது.

சிறையிலிலுள்ள அரசியல் கைதிகள் குறிப்பிட்ட ஒருகால கட்டத்திற்குப் பரோலில் விடுதலை பெறுவது அப்போது வழக்கமாகத்தான் இருந்தது. மாவீரர் ஜவகர்லால் நேருகூட, பலமுறை பரோலில் விடுதலையாகி, பரோல் முடிந்ததும் மீண்டும் சிறைவாசத்திற்குத் திரும்பியிருக்கிறார். எனக்கு முன்னே நேரு போன்ற தலைவர்கள் ஏற்படுத்தியிருந்த மரபையொட்டி நானும் பரோல் விடுதலையை ஏற்றுக் கொண்டேன். என்னுடைய மனைவியைக் காணப் போகிறேன் என்ற மகிழ்ச்சியோடு கண்டு பேசி மகிழமுடியுமென்ற நம்பிக்கையோடு நான் பரோல் விடுதலையை ஏற்றுக் கொண்டேன்.

வழியனுப்பினர்

அந்த நாளில் பரோல் விடுதலை என்பது அவ்வளவு எளிதில் கிடைத்துவிடக் கூடியதன்று. பழிவாங்கும் நோக்குடன் மாகாணத்துக்கு வெளியே குறைந்தபட்ச வசதிகள் கூட இல்லாத கொடுஞ்சிறையிலே அடைக்கப்பட்டவர்களில் ஒருவனான எனக்குப் பரோல் விடுதலை கிடைப்பதென்பது அன்றைய சூழ்நிலையில் நினைத்துக்கூடப் பார்க்க முடியாததாகும். இந்த அற்பச் சலுகையைத் தேடித் தருவதற்காக அரசிடம் செல்வாக்கு செலுத்தும் அளவுக்கு என் குடும்பத்தாரிலோ, சுற்றத்தாரிலோ 'பெரிய மனிதர்' யாரும் இருக்கவில்லை.

போலீஸ் உயர்தர அதிகாரிகள் பலர் அடுத்தடுத்துப் பல முறை என் மனைவியை நேரில் பார்த்த பின்னரே — அரசாங்க மருத்துவர் ஒருவர் என் மனைவியின் உடல்நிலையைப் பரிசீலித்த பின்னரே எனக்கு பரோல் விடுதலை தரப்பட்டதென் பதனை நான் வீடு திரும்பியபின் அறிந்தேன். இரக்கமற்ற

ஏகாதிபத்திய அதிகாரிகளும் என் மனைவியிடம் இரக்கம் காட்டி 15 நாட்கள் சிறைக்கு வெளியேயிருக்க எனக்குச் சலுகை தந்தனராதலால், அதைக் கொண்டே எனது மனைவியின் உடல் நிலை மிகுந்த அபாயத்திலிருக்கிறதென்பதனை உறுதி செய்து கொள்ள என்னால் முடிந்தது. எனக்குத் தற்காலிக விடுதலை கிடைத்திருக்கிறதென்பதனை அறிந்தபோது சிறையில் என்னுடன் இருந்தவர்கள் பூரிப்படைந்தனர். இந்த வாய்ப்பைப் பயன் படுத்தி, தமிழ்நாட்டுச் சிறைக்கு மாற்றும்படி அரசாங்கத்திற்கு விண்ணப்பிக்குமாறு அவர்கள் எனக்கு ஆலோசனை கூறினர்.

எதிர்பாராத வகையில் பத்தரை மாதங்களுக்குப் பின்னர் அமராவதிச் சிறையிலிருந்து விடுதலை பெற்றேன். திரு.டி. பிரகாசம் அவர்கள் சூப்பிரண்டெண்ட் அலுவலகம் வரை என்னுடன் வந்து சிறை மாற்றத்துக்கு நான் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று என்னை வற்புறுத்திவிட்டு, விடை கொடுத்தனுப்பினார். அன்று அவர் காட்டிய அன்புணர்ச்சியை இன்றும் என் அகக் கண்களால் காண முடிகின்றது. வீரமும் அன்பும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை. இந்த உண்மையைச் சிறையில் எனக்குத் துன்பம் நேர்ந்தபோதெல்லாம் ஆந்திரச் சிங்கம் டி.பிரகாசம் என்னிடம் காட்டிய அன்புணர்ச்சியின் மூலம் நான் அறிந்து கொண்டேன். வாழ்க அந்தப் பெருமகனார் புகழ்!

விடுதலை பெற்றதும் விபத்தைக் கண்டேன்!

சிறையிலிருந்து விடுதலை பெற்றேனென்றாலும், ஒரு பர்லாங்கு தூரம் நடப்பதற்கும் உடலில் சக்தியற்ற நிலையிலிருந்தேன். நெடுந்தூரம் ரயிலில் பிரயாணம் செய்வதை நினைத்துப் பார்க்கவும் பயந்தேன். அமராவதியிலிருந்து கல்கத்தா மெயில் மூலம் வார்தா அடைந்து, அங்கு கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரசை பிடித்துச் சென்னைக்கு வரவேண்டும். இப்படி, நெடுந்தூரம் பயணம் செய்வதற்கு உதவி புரியக்கூடிய வகையில் எனது உடல்நிலை இல்லையென்றாலும், பரோலில் விடுதலை அடைந்ததால் என் மனத்துள் தோன்றிய மகிழ்ச்சியால் எனது உடலும் ஓரளவு வலிமை பெற்றதெனலாம்.

வார்தா வருவதற்குக் கல்கத்தா மெயிலை எதிர்பார்த்து அமராவதி ரயில் நிலையத்தில் காத்துக் கொண்டிருந்தபோது என்னைத் திடுக்கிட வைக்கும் செய்தி ஒன்று கிடைத்தது. ஆம்; அமராவதிக்கு மூன்று கல் தொலைவிலே கல்கத்தா மெயிலுக்கு விபத்து ஏற்பட்டு விட்டதென்பதே அந்தச் செய்தி. இந்தியாவில் ஏற்பட்ட மிகப் பெரிய ரயில் விபத்துகளில் இதுவும் ஒன்றாகும்.

செய்தி கிடைத்த ஒரு மணி நேரத்திற்குப்பின் விபத்தில் மாண்டவர்களுடைய பிணங்களையும், படுகாயமடைந்தவர்க ளையும் விசேஷ ரயில்களில் கொண்டு வந்த கோரக் காட்சியை நான் கண்டேன். அமராவதிக்கு வருவதற்கு முன்பு கவிழ்ந்த கல்கத்தா மெயிலானது என்னையும் ஏற்றிக் கொண்டு அமரா வதி ஸ்டேஷனை விட்டுக் கிளம்பியபின் கவிழ்ந்திருந்தால் என் கதி என்ன ஆகியிருக்கும் என்று என் மனம் கற்பனை செய்தது. துன்பச் சூழ்நிலையிலேயே வாழ்ந்து பழக்கப்பட்டவர்களின் மனம் எப்போதும் துன்பத்தையே கற்பனை செய்து பார்க்கும் போலும்! பரோல் விடுதலையால் ஏற்பட்ட மகிழ்ச்சியானது இந்தக் கோரக் காட்சிகளைக் கண்டதால் மறைந்தே போய் விட்டது.

பத்து மாதங்களுக்குப் பின்னர் சிறைக்கு வெளியே வந்த தும் முதன் முதலாக இப்படி ஒரு கோரக் காட்சியைக் காண நேர்ந்ததால், அடுத்துவரும் நிகழ்ச்சிகளும் இப்படித்தான் இருக் குமோ என்ற மூடநம்பிக்கையும் என்னைப் பிடித்துக் கொண் டது. பலமணி நேரம் என் மனத்துள் குழப்பம் ஒன்றே குடி கொண்டிருந்தது.

கல்கத்தா மெயில் கவிழ்ந்து போனதால் என் பயணம் எதிர்பாராத வகையில் மேலும் ஒரு நாள் நீண்டு விட்டது. வேறு ஒரு பாசஞ்சரில் ஏறி வார்தா சேர்ந்தேன். அன்று இரவு முழுதும் சரியான உறக்கமின்றி வார்தா ஸ்டேஷனில் கழிந்தது நினைவி ருக்கின்றது. மறுநாள் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரசில் ஏறி, சென்னை நோக்கிப் பயணமானேன். வழியில் பெஜவாடாவை (இப்போது விசயவாடா) அடைந்தபோது காலை 8 மணி இருக்கும். ரெயில்வே உணவுச் சாலையில இரண்டு இட்லியும்

ஒருவடையும் வாங்கித் தின்றேன். இந்தப் பண்டங்கள் சுடச்சுடத் தரப்பட்டன. சூட்டுக்கே ஒரு சுவையுண்டல்லவா! 11 மாதங்க ளுக்குப் பிறகு இட்டலியையும் வடையையும் சுடச்சுடச் சுவை பார்த்தபோது நரகத்திலிருந்து சொர்க்கத்துக்கு வந்துவிட்டாற் போன்ற உணர்ச்சியை அடைந்தேன். பெஜவாடா ஆந்திரப் பிரதேசந்தான் என்றாலும், அங்கு நான் தின்ற இட்டலியும் வடையும் நான் தமிழ்நாட்டிற்கே வந்துவிட்டது போன்ற ஒரு இன்ப உணர்ச்சியை எனக்கு அளித்தன.

அடையாளமறியாத காதலர்கள்!

கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் சென்டிரல் ஸ்டேஷனை அடைந்ததும் அங்கு என்னை வரவேற்க என் தம்பி ம.பொ.பரசு ராமன் வந்திருந்தார். ஆனால், அவர் என்னை அடையாளம் தெரிந்து கொள்ளவில்லை. என்னை நானே அவருக்கு அறிமுகப் படுத்திக் கொண்டேன். அடையாளம் காண முடியாதபடி என் உடல் இளைத்திருக்கக் கண்டு தம்பி கண்ணீர் சொரிந்தார். அங்கிருந்து வீட்டிற்கு வந்ததும் மற்றொரு பரிதாபகரமான சந்திப்பு நிகழ்ந்தது.

நோயுற்றுப் படுக்கையிலிருந்த ஒரு பெண்ணின் அருகில் நான் உட்காருவதற்கு என் தம்பி பழம்பாய் ஒன்றை விரித்தார், வீட்டில் நாற்காலியில்லாத காரணத்தால்! நோயுற்றிருந்த அப் பெண்ணை என் சிற்றன்னையின் மகளாகக் கருதினேன். அத னால் 'ராஜி (ராஜேஸ்வரி என்பதன் சுருக்கம்) எங்கே?' என்று கேட்டேன். என் தங்கை பற்றி விசாரிப்பதைக் கூடப் புறக்க ணித்து, என் மனைவியைத் தேடினேன். முன் எப்போதும் காணாத கோலத்தில் என்னைக் கண்டதாலே வேதனைப் பட்டுக் கொண்டிருந்த என் தாய், ''உன் அருகிலிருப்பது ராஜிதான்'' என்று சொன்னார். அந்த அளவுக்கு எலும்புக் கூடாக என் மனைவி இளைத்திருந்தாள். எனது பிரிவுதான் அவள் இந்த கொடுமைக்கு ஆளாகக் காரணம் என்பதை உணர்ந்தபோது என் மனம் மிகுந்த வேதனை அடைந்தது. அவளருகில் நான் உட்கார்ந்தபோதே அவள் என்னைப் பார்த்தாளென்றாலும், என்னுடன் பேசவில்லை. காரணம், என்னை அவள் அடையா

ளம் கண்டு கொள்ளாததுதான். என் அன்னையார் என்னை அவளுக்கு அறிமுகப்படுத்தியபோது, அவள் உயிருக்கு என்னா குமோ என்று நான் அஞ்சும் வகையில் அவள் விம்மி விம்மி அழுதாள். எப்படியோ பிரிந்தவர் கூடினோம். ஆம்; ஒருவரை யொருவர் அடையாளம் தெரிந்துகொள்ள முடியாத துர்பாக்கிய நிலையிலே!

(பத்துமாதக் குழவிப் பருவத்தில் நான் விட்டுப்போன என் மகன் திருநாவுக்கரசு மட்டும் — மேலும் பத்து மாதம் கடந்த பின் வந்திருந்தும் — நான் கூப்பிட்டவுடனே என்னை அடையா ளம் தெரிந்து கொண்டு என்னிடம் வந்துவிட்டான். பசுக்கள் கூட்டத்தின் மத்தியில் தன் தாய்ப் பசு இருப்பினும், குழவிக் கன்றானது அடையாளம் கண்டு கொள்ளும் என்று 'நாலடியார்' கூறுகிறது. அதுபோல, என் அன்னையும், தம்பியும், அருமை மனைவியும் அடையாம் தெரிந்து கொள்ள முடியாத நிலையி லிருந்த என்னை என் குழந்தை அடையாளம் கண்டுகொண்டு விட்டான். இந்த அற்புதத்தை என்னென்று சொல்வது!)

நான் வீடு திரும்பிய பின் என் மனைவியின் உடல்நிலை கொஞ்சம் கொஞ்சமாகத் தேறி வந்தது. நானும் உடல் நலம் பெற்று வந்தேன் என்று சொல்ல வேண்டும்.

நான் பரோலிலிருந்தபோது சென்னை மாநில அரசின் தலைமைச் செயலாளருக்கு ஒரு மனு அனுப்பினேன். அதில், நான் திரும்பவும் அமராவதிச் சிறைச்சாலைக்குச் செல்ல விரும் பவில்லை என்றும், சென்னை மாகாண சிறைச்சாலைகளில் ஏதேனும் ஒன்றுக்குச் செல்ல என்னை அனுமதிக்க வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டிருந்தேன். கடிதம் எழுதியபின், நேரில் கண்டு பேசினேன். உடலின் கோலத்தை நேரில் பார்த்த தால் பரிதாபப்பட்டுச் சிறை மாற்றத்திற்கு இசைந்து விடுவார் என்று நம்பியே நான் அவரைப் பேட்டி கண்டேன். நான் நினைத்தது போலவே என்னைப் பார்த்ததும் அவர் என்பால் இரக்கம் காட்டினார். எப்படியும் சிறை மாற்றத்திற்கு ஆணை அனுப்புவதாக அவர் எனக்கு உறுதி கூறினார். நான் கேட்கா மலே மற்றொரு உறுதி மொழியையும் அவர் தந்தார். எனது

பரோலை மேலும் பத்து நாட்களுக்கு நீட்டித்துத் தரவும் உறுதி கூறினார். எனக்கென்னவோ பரோலை நீட்டித்துக் கொள்வதில் விருப்பமில்லை. மரணத்தைவிடத் துன்பந்தருவது எதுவென் றால், மரணம் நெருங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டே உயிர் வாழ்வதுதான். அதுபோல கைதி என்ற நிலையிலேயே அன்னிய ஆட்சி கொடுத்த சலுகையால் சிறைக்கு வெளியே நடமாடிக் கொண்டிருக்க எனக்கு விருப்ப மில்லை. ஆகவே, பரோலை நீட்டித்துக் கொள்ள நானாக முயற்சி எடுக்கவில்லை. ஆனால், தலைமைச் செயலாளர் உறுதி தந்தபடி எனது பரோல் நீட்டிக்கப்படவில்லை. அப்போது ஆகஸ்டு 9-ஆம் தேதி ஆகஸ்டுக் கிளர்ச்சி தொடங்கிய நாள் நெருங்கிக் கொண்டிருந்ததாலும், அந்த நாளைக் கொண்டாடத் தலைமறைவாக இருந்த காங்கிரஸ்காரர்கள் திட்டமிடுவதாகத் தகவல் கிடைத்திருந்ததாலும் எனது பரோலை நீட்டிப்பதைக் காவல்துறை உயர்தர அதிகாரிகள் விரும்பவில்லையாம்.

அருணாவைச் சந்தித்தேன்

நான் பரோலில் இருந்தபோது தலைமறைவிலிருந்த ஒரு வீராங்கனையைச் சந்திக்க நேர்ந்தது. அந்த வீராங்கனை திருமதி அருணா ஆசப் அலியாவார். தலைமறைவிலிருந்து கொண்டு திட்டமிட்டு நாசவேலைகள் நடத்திக் கொண்டிருந்த திரு. செயப்பிரகாஷ் நாராயணரும், திருமதி அருணா ஆசப் அலியும் (இருவரும் காங்கிரஸ் சோசலிஸ்டுகள்) சென்னைக்கு வந்திருப்பதாகவும், என்னைச் சந்தித்துப் பேச அவர்கள் விரும் புவதாகவும் காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் என்னிடம் கூறினார். அவர்களை நான் இரகசியமாகச் சந்திப்பதற்கான நேரத்தையும் இடத்தையும் கூட அவர் குறிப்பிட்டார். அந்த நண்பர் என்னு டன் சிறிது நேரம் பேசியதிலிருந்து புரட்சி வீரர்கள் என்னை எதற்காக அழைக்கிறார்கள் என்பதனை நான் புரிந்துகொள்ள முடிந்தது. நானும் தலைமறைவாகி நாச வேலைகளை நடத்துவ திலே ஈடுபட வேண்டுமென்று எனக்கு ஆலோசனை கூறத்தான் அவர்கள் என்னை அழைக்கிறார்கள் என்று நான் யூகித்துக் கொண்டேன். அன்றைய சூழ்நிலை அப்படித்தான் இருந்தது. காந்தியத்தில் எனக்கிருந்த பற்றுதல் காரணமாக நாசவேலை

களை நான் விரும்பாதவனானேன். நான் காங்கிரஸ் சோசலிஸ்டுக் குழுவைச் சார்ந்தவனுமல்லன். ஆகவே, தலைமறைவிலிருக்கும் தலைவர்களைச் சந்திக்க என் மனம் விரும்பவில்லை. என்றாலும், அவர்களிடம் எனக்கிருந்த மரியாதை காரணமாக அவர்களை நான் சந்திப்பதாக என்னை அழைக்க வந்த நண்பரிடம் கூறினேன். அப்படியே, குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றேன். திரு. செயப்பிரகாசர் அங்கு இல்லை. திருமதி அருணா அவர்கள்தான் எனக்குப் பேட்டி தந்தார். சுமார் பத்து நிமிட நேரம் நாங்கள் உரையாடினோம். நாட்டில் நடக்கும் நாச வேலைகளை நான் விரும்பாதவன் என்பதனை எனது உரையாடலின் மூலமே தெரிந்து கொண்ட அம்மையார் மேலும் எனக்கு ஆலோசனை எதுவும் கூறவில்லை. எனது உடல் நிலையைப் பார்த்ததும் என்பால் அவருக்கு இரக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். அதனாலும், மேலும் எந்தத் தொல்லையிலும் என்னை ஈடுபடுத்த விரும்பாதவராகி, ''உடல்நலத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள்'' என்ற அறிவுரையோடு விடைகொடுத்தனுப்பினார். இந்தச் சந்திப்பு இன்னும் என் மனதில் பசுமையாக இருந்து வருகிறது.

எனது பரோல் முடியவிருந்த நாளுக்கு முதல் நாள் மாலை சென்னை மாநில அரசின் தலைமைச் செயலாளரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், நான் அமராவதிச் சிறைக்குச் செல்ல வேண்டியதில்லை என்றும், வேலூர் மத்திய சிறைக்குச் சென்று சரணடைய வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த ஆணை பிறப்பிப்பதற்கு முன்பு இரண்டு முறை என்னைப் பெரிய மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று என் உடலைப் பரிசோதிக்கச் செய்தனர் போலிஸ் அதிகாரிகள். ஆங்கிலேயரான டாக்டர் மெக்ராபர்ட்ஸ் என்ற மருத்துவ அதிகாரிதான் என் உடலைப் பரிசோதனை செய்தார். ஆம்; இந்திய மருத்துவர் என்னைப் பரிசோதித்தால் என்னிடம் அனுதாபத்துடன் நடந்து கொள்வார் என்று அரசு கருதியது.

சிறை மாற்றம்

அமராவதிச் சிறை வாழ்க்கை முடிவடைந்ததிலே எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. மாவீரரான லாலா லஜபதிராய்கூட

''எத்தனை ஜென்மங்கள் இருட்சிறையிலிட்டாலும் தத்துபுனல் பாஞ்சாலம் தன்னில் வைத்தால் வாடுகிலேன்'' என்று கூறியதாகப் பாரதியார் பாடியிருக்கிறார். வெளிநாட்டிலே தனித்திருப்பதை விரும்பாமல், 'என் சொந்த மாநிலமான பாஞ்சால நாட்டுச் சிறையிலே ஆயுள் முழுவதும் வைத்தாலும் வாடமாட்டேன்' என்றார் லஜபதி. அகில இந்தியப் பெருந்தலைவரான அவரே சொந்த மாநிலச் சிறையை விரும்பினாரென்றால், தமிழ்நாட்டுக்கு வெளியே தொடர்பு ஏதுமற்ற யான் எனது மாநிலச் சிறையை விரும்பியதில் தவறிருக்க முடியாதல்லவா!

நான் திரும்பவும் சிறைபுகவிருந்த நாளுக்கு முதல் நாளிலே, எனது பிள்ளைப் பருவ முதலே செல்லமாக வளர்த்து என்னை ஆளாக்கிவிட்ட என் பாட்டியார் மங்கைத் தாயாரம்மாள் (என் அன்னையை ஈன்றவர்) காலமானார். மறுநாள் காலை அவரது இறுதிச் சடங்கை — ஈமச் சடங்கை முடித்துவிட்டு, அவரது பிரேதம் எரிந்து முடிவதற்கு முன்பு, நடுப்பகலே நான் வேலூர் சிறை நோக்கிப் பயணமானேன். மனைவியை வழியனுப்ப சிறை மீண்டு வந்த நான், அதற்கு மாறாக, என் பாட்டியை வழியனுப்பிவிட்டு, வேலூர் சிறைக்குச் சென்றேன்! எனது வரவால் மரணத்தை வென்ற என் மனைவி, தன் கண்களிலே நீர்பெருக்கி, என்னை வழியனுப்பி வைத்தாள்! என் வாழ்வு முழுவதும் துன்பமயந்தானே! அந்தத் துன்பியல் காப்பியத்திலே, இது ஒரு காதை!

பேரன்பு செய்தாரில் யாவரே
பெருந்துயரம் பிழைத்து நின்றார்?
ஆரன்பு நாரணன்பால் இரணியன்சேய்
செய்ததினால் அவனுக் குற்ற
கோரங்கள் சொலத்தகுமோ? பாரதநாட்
டில்பக்தி குலவி வாழும்
வீரங்கொள் மனமுடையார் கொடுந்துயரம்
பலஅடைதல் வியத்தற் கொன்றோ?

— **பாரதியார்**

வேலூர் சிறை வாழ்க்கை

வேலூர் தொறப்பாடியிலுள்ள மத்திய சிறைச்சாலைக்குச் சென்று சிறை சூப்பிரன்டெண்டிடம் என்னை நான் ஒப்படைத்துக் கொண்டேன். நான் வேலூர் சிறைக்கு மாற்றப்பட்ட தகவலை அதிகாரபூர்வமாகச் சென்னை மாநில அரசின் தலைமைச் செயலர் முன் கூட்டியே அவருக்கு அறிவித்திருந்தாராதலால், அவரும் என்னை ஏற்றுக் கொண்டார். வெளிப்புற விடுதி (அவுட் குவாரண்டைன்)யிலே நான் சேர்த்துக் கொள்ளப்பட்டேன். அங்கு ஒரு நூற்றுக்கு மேற்பட்ட தேசபக்தர்கள் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களிலே என்னை அன்புடன் நேசிக்கக் கூடிய தலைவர்களும், தோழர்களும் இருந்தனர். விடுதிக்குள் நுழைந்ததுமே — என் வருகையை முன்கூட்டியே அறிந்திருந்தனராதலால் — அவர்கள் என்னை உற்சாகத்துடன் வரவேற்றனர்.

வேலூர் மத்திய சிறையில் எல்லா வசதிகளும் நிறைந்திருந்தன. வானொலிப் பெட்டி வைக்கப்பட்டிருந்தது. எனக்கென கட்டில், மேஜை, நாற்காலி ஆகியவற்றுடன் ஒரு தனி அறை தரப்பட்டது. அமராவதிச் சிறையிலிருந்து வேலூர் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டதானது பாலையிலிருந்து சோலைக்கு வந்த ஒரு உணர்ச்சியை என் மனத்துள் உண்டாக்கியது.

சிறையிலே பல்வேறு வகுப்புகள் நடத்தப்பெற்றன. திரு. ஆர். வெங்கட்ராமன் (இவர் பிற்காலத்தில் தமிழக அமைச்சராக இருந்தார்) பொருளாதார வகுப்பு நடத்தினார். இவருக்கு அப்போது கம்யூனிஸ்டுகளோடு நெருங்கிய தொடர்பிருந்ததால், மார்க்ஸீயத் தத்துவப்படி அந்தப் பொருளாதார வகுப்பினை நடத்தி வந்தார். திரு.டி.எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் பகவத் கீதை வகுப்பு நடத்தி வந்தார். திரு.கே.எம். வல்லத்தரசு, கார்ல் மார்க்ஸ் எழுதிய 'காபிடல்' என்னும் அரிய விஞ்ஞான ரீதியிலான கம்யூனிசத் தத்துவ நூலைப் படித்துப் பொருளுரைத்து வந்தார்.

சி.சுப்பிரமணியம் எனது அறைக்கு அடுத்த அறையில் இருந்தாராதலால், அவர் என்னுடன் மிகவும் நெருங்கிப் பழகி வந்தார். வேலூர் சிறையில்தான் நாங்கள் முதன் முதலாகச் சந்தித்தோம். அவர் அப்போது கோவைக்கு வெளியே அறிமுக மாயிருக்கவில்லை.

பொதுமொழிப் பிரச்சினை

சிறையில் நடத்தப்பெற்ற பல்வேறு வகுப்புகளிலே இந்தி மொழிப் பயிற்சி வகுப்பும் ஒன்றாகும். எந்த ஒரு வகுப்பிற்கும் நான் முறையாகச் சென்று வந்தேன் என்று சொல்வதற்கில்லை. விருப்பம் ஏற்பட்டபோது, விட்டுவிட்டு அந்த வகுப்புகளில் கலந்துகொண்டு செவி விருந்து பெற்றேன். இந்தி வகுப்பில் மட்டும் மாணவனாக இருந்து பயின்றது நினைவிருக்கிறது. சிறைக்கு வெளியே தண்டையார்பேட்டையில் திரு.வி.என். குமாரசாமி ஐயர் தம்பதிகள் தங்கள் இல்லத்தில் நடத்தி வந்த இந்தி மொழிப் பயிற்சி வகுப்பிலும் கலந்து கொண்டிருக்கிறேன். ஆனால், இந்தி மொழியிலே சொற்கள் பயிலக்கூட என்னால் முடியவில்லை. இந்தி மொழிப் பயிற்சியின் தேவையை நான் என்றுமே உணர்ந்து வந்திருக்கிறேன். அம்மொழி மத்தியில் ஆட்சி மொழியாக வருவது வேறு விஷயம். இந்தியாவின் பொது மொழியாக அதனை ஏற்பது வேறு விஷயம். இந்திய தேசிய ஒருமைப்பாட்டை உண்மையிலேயே விரும்பும் தமிழர் எவரும் இந்தி மொழியில் ஞானம் பெற வேண்டியதன் அவசி யத்தை மறுப்பதற்கில்லை. மொழி வேறுபாடுடைய பல்வேறு மாநிலங்களின் மக்கள் பரஸ்பரம் கலந்து பழகி ஒருமைப்பாடு எய்துவதற்கு இந்தி ஒன்றுதான் சிறந்த மொழி என்பதனை என்றுமே நான் மறுத்ததில்லை. என்போன்ற அரசியல்வாதிகள் தமிழ்நாட்டுக்கு வெளியேயுள்ள குறிப்பாக, வடபுலத்தில் உள்ள சாதாரண மக்களுடன் தொடர்புகொண்டு, நாட்டுக்குத் தொண் டாற்ற வேண்டுமானால், இந்தி மொழியிலே ஓரளவேனும் ஞானம் தேவைப்படுகின்றது. ஆனால், உண்மை என்னவென் றால், இந்தி மொழிக்காக வக்காலத்து வாங்கிப் பேசும் தென்னிந் திய காங்கிரஸ் தலைவர்களிலே இந்தி மொழியில் பயிற்சி பெற்றவர்கள் விரல்விட்டு எண்ணிவிடக் கூடிய அளவில்தான்

இருக்கின்றனர் என்பதாகும். சமஸ்கிருத மொழியில் பெரும ளவு பெற்றிருந்த திரு. எஸ். சத்தியமூர்த்தி ஐயர் போன்ற பெருந்தலைவர்கள் கூட இந்தி மொழியிலே பயிற்சி பெற்றிருக்க வில்லை.

(நம் தமிழ்நாட்டத் தலைவர்கள், வட இந்தியாவுடன் தொடர்புகொள்ள ஆங்கில மொழியென்றே போதுமென்ற முடி வுக்கு வந்துவிடுகின்றனர். அது ஓரளவுதான் உண்மை. ஆனால், இந்த ஆங்கில மொழி அறிவு காரணமாக வடக்கிலும் தெற்கிலும் உள்ள உயர்தரக் கல்வி கற்ற பட்டதாரிகளிடையே தான் பரஸ்பரம் தொடர்பு ஏற்பட முடிகிறது. தென்னிந்தியத் தலைவர்கள் வட இந்தியாவிலுள்ள சாதாரண மக்களிடம் நெருங்கித் தொடர்பு கொள்ள இதுவரை முடிந்ததில்லை. இனி யும் முடியப் போவதில்லை.)

ஆங்கிலத்தின் மூலம் ஏற்பட்டுள்ள ஒருமைப்பாட்டினை 'தேசிய ஒருமைப்பாடு' என்றோ, 'உணர்ச்சிபூர்வமான ஒரு மைப்பாடு' என்றோ யாரும் சொல்வதற்கில்லை. 'பட்டதாரிகள் ஒருமைப்பாடு' என்றுதான் சொல்ல வேண்டும். இந்தப் போலி ஒருமைப்பாடு என்றேனும் ஒருநாளைக்கு சுக்கு நூறாக உடைந்து போகுமாயின், அதற்காக யாரும் வியப்படைவதற் கில்லை.

உலகப் பொது மொழியாகப் பயன்பட்டு வரும் ஆங்கில மொழியையே இந்தியாவின் பொது மொழியாகப் பயன்படுத்த முடியும் என்று ஒரு வாதம் சொல்லப்படுகிறது. ஆங்கில ஆதிக்கத்திற்கு ஆதரவு காட்டுவோர் இந்த வாதத்தை வரவேற்க லாம். ஆனால், நடைமுறை ஞானம் இதனை வரவேற்க அனு மதிக்கவில்லை.

ஆங்கிலம் பொது மொழியா?

இந்தியாவிற்கு வெளியேயுள்ள நாடுகளோடு தொடர்பு கொள்வோர் சில ஆயிரக்கணக்கில்தான் இருப்பார்கள். அவர் கள் அனைவரும் உயர்தரக் கல்வி கற்றவர்களாக இருத்தல் இயற்கை. ஆகவே, உலகத் தொடர்புக்கு ஆங்கிலம் பயன்படுத்

தப்படுவது சாத்தியமே. அந்த அளவில் பயன்படுத்த இன்னொரு மொழி இல்லை. ஆனால், இந்தியாவுக்குள்ளே மொழி வேறுபாடுடைய மாநிலங்களிடையே தொடர்பு மொழியாக ஆங்கிலம் பயன்படுவது சாத்தியமில்லை. ஏற்கனவே சொல்லியபடி உயர்தரக் கல்வி கற்ற உத்தயோகஸ்தர்களிடையே அது தொடர்பு மொழியாக இருக்கலாம். இருந்தும் வருகின்றது. ஆனால், ரயில்கள் மூலமாகவும், மோட்டார்கள் மூலமாகவும், வேறு வாகனங்கள் மூலமாகவும், கால்நடையாகவும் ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்திற்குச் செல்வோர் இலட்சக்கணக்கினர் என்பதனை மறந்துவிடக் கூடாது. அவர்களில் உயர்தரக் கல்வி கற்றோரை விரல்விட்டு எண்ணிவிடலாம்; ஐம்பத்து மூன்று கோடி மக்கள் தொகையுடைய ஒரு பெரிய ஜன சமுதாயத்திலே ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருக்க அனுமதிப்பது தேசபக்தியற்ற செயலென்பதோடு, தேச வளர்ச்சியைத் தடுக்கின்ற தவறுமாகும். 'பொது மொழி' என்றால், அதில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களும் அதைப் பேச்சு மொழியாகக் கொள்வது சாத்தியமாகவேண்டும். தமிழகத்தில் உள்ள குஜராத்தியருக்குத் தமிழ் அப்படித்தான் பயன்படுகிறது. ஐதராபாத்திலுள்ள தமிழர்களுக்குத் தெலுங்கு அல்லது உருதுமொழி அப்படித்தான் பயன்பட்டு வருகிறது. வடபுலத்தில் வாழும் தென்னிந்தியர்களுக்கு இந்தி மொழி பயன்படுவதும் இதே முறையில்தான். ஆனால், ஆங்கிலத்தில் உயர்தரக் கல்வி கற்றாலொழிய அதனைப் பேச்சு மொழியாகப் பயன்படுத்துவது. சாத்தியமில்லை. இந்த உண்மையை விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்து பார்த்தால், இந்தியப் பெருநாடு தன் மொழிகளிலே ஒன்றைத்தான் பொது மொழியாக வைத்துக் கொள்ள முடியுமென்பது நன்கு புலனாகும்.

இவ்வளவு தூரம் நான் வாதாடினாலும், சிறைக்கு வெளியேயும் சரி; சிறைக்கு உள்ளேயும் சரி; இந்தி மொழியைப் பயில மேற்கொண்ட முயற்சியிலே நான் வெற்றி பெறவில்லை. தாய் மொழி அல்லாத ஒரு மொழியை வயது கடந்தபின் பயில்வதென்பது அவ்வளவு சுலபமல்ல.

திரு.க. திரவியத்தின் நட்பு

வேலூர் சிறைக்கு மாறிய பின்னரும் முன்னர் அமராவதிச் சிறையில் தொடங்கிய இலக்கியப் பயிற்சியைத் தொடர்ந்தேன். ஆனால், அமராவதியில் எந்த அளவுக்கு ஆர்வத்துடன் இலக்கிய நூல்களைப் படித்தேனோ அந்த ஆர்வத்தில் வேலூரில் பயில இயலவில்லை. அமராவதியிலே பத்துப் பேருடன் மட்டுமே கூடி சிறை வாழ்க்கை நடத்தினேன். அவர்களிலும் சிலர் உயர்வு மனப்பான்மை காரணமாக என்னுடன் நெருங்கிப் பழகுவதைத் தவிர்த்து வந்ததனால் நான் ஒதுங்கி வாழ நேர்ந்தது. அதையே ஒரு வாய்ப்பாகக் கொண்டு கிடைத்த ஓய்வு முழுவதையும் இலக்கியம் பயில்வதிலேயே செலவழித்தேன். வேலூர் அவுட்குவாரண்டைனிலே அந்தச் சூழ்நிலையிருக்கவில்லை. நூற்றுக்கு மேற்பட்ட தேசபக்தர் மத்தியிலே வாழ்க்கை நடத்த வேண்டியிருந்ததால், வெட்டிப் பேச்சிலும், விதண்டா வாதங்களிலும் காலங் கழிவதை என்னால் தவிர்க்க இயலாமல் இருந்தது. வேலூர் சிறையிலே இளைஞர்கள் ஏராளமாக இருந்தனர். அவர்களிலே சிலர் எந்த நேரத்திலும் என்னை முற்றுகையிட்டு அரசியல் பேச்சிலே ஈடுபடுத்தினர். இவ்வளவிருந்தும், இலக்கியப் பயிற்சியை நான் அடியோடு விட்டுவிடவில்லை. சிலப்பதிகாரக் காப்பியத்தில் நான் மிகுதியாக கருத்து செலுத்தியது வேலூர் சிறையில்தான்.

வேலூர் சிறையில் புதிதாக எனக்கு அறிமுகமான தேசபக்த இளைஞர்களிலே இன்று தமிழக அரசின் உயர்தர அதிகாரியாகவுள்ள திரு.க. திரவியம் ஐ.ஏ.எஸ். அவர்களும் ஒருவராவார். தமது இளமைத் துடிப்பினாலும், புரட்சிகரமான தத்துவங்களைப் போதிக்கும் நூல்களைப் படித்ததனாலும், அவர் சோசலிஸ்டாக விளங்கினார். சிறையில் நடக்கும் கூட்டங்களிலே அவர் அடிக்கடி பேசுவார். பெருந் தலைவர்களையும் கவரும் வகையில் வாதத் திறமையுடன் பேசுவார். இயற்கையாகவே அவரது மெல்லிய குரல் கேட்போரைக் கவர்ந்தது. எதிர்காலத்தில் செல்வாக்கு மிக்க அகில இந்தியத் தலைவராக அவர் வரக்கூடுமென்று அப்போது நான் எதிர்பார்த்தேன். அரசாங்க உயர்தர அதிகாரியாக வந்து கட்டுப்பாடுகளுக்குள் தன்னைச் சிறைப்படுத்திக் கொள்வாரென்று அப்போது நான் கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை.

மத்திய அரசில் துணை அமைச்சராக இருந்த திரு.கே.எஸ். இராமசாமி அவர்களின் தந்தையார் திரு.கே.கே. சுப்பண்ணக் கவுண்டர் என்னுடன் மிகவும் நெருங்கிப் பழகினார். அந்த நட்பு இன்றளவும் எங்களிடையே நீடித்து வருகிறது. என்னையே தங்கள் வழிகாட்டியாகக் கொண்டு எண்ணற்ற இளைஞர்கள் என்னோடு பழகினர்.

வேலூர் சிறை வாழ்க்கையிலே எனக்கு ஒரு குறையுமிருக்க வில்லை. அப்படியிருந்தும், எப்படியோ எனது உடல் திரும்ப வும் நோய்ப்பட்டு விட்டது. அமராவதிச் சிறைச்சாலையில் ஏற்பட்ட குடற்பிணி மீண்டும் வேலூர் சிறைச்சாலையிலும் தலைகாட்டியது. வேலூர் சிறையிலே போதிய மருத்துவ வசதி கள் கிடைத்தன. சிறைக்கு வெளியேயிருந்து திறமைமிக்க மருத்துவர் ஒருவர் அடிக்கடி வந்து எனக்கு சிகிச்சை தந்து கொண்டிருந்தார். அப்படியிருந்தும், வேலூர் சிறையுள் புகுந்த இரண்டு மாதங்களுக்குப் பின் நோய் கடுமையாகி, சிறையி லுள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். ''இரத்த சோகை'' அதிகரித்துவிட்டது. மனத்தில் உற்சாகமென்பதே எந்த நேரத்தி லும் இல்லாமலிருந்தது. சுருங்கச் சொன்னால், உயிரைச் சுமந்து கொண்டு படுக்கையில் கிடந்தேன். சிறைச்சாலை மருத்துவம னையில் நான் படுத்துக் கிடந்த நாட்களிலே என்னிடம் மிகுந்த அன்பு காட்டி அடிக்கடி மருத்துவமனைக்கு வந்து என் உடல் நலத்தை விசாரித்துச் சென்றவர்களிலே கோவை டி.எஸ். அவி னாசலிங்கம் செட்டியாரும், மதுரை ஏ. வைத்தியநாத ஐயரும் முக்கியமானவர்களாவர். சிறையிலே தங்கள் குடும்பத்தினரைப் பேட்டி காண அரசியல் கைதிகளுக்கு அரசு அனுமதி வழங்கியி ருந்தது. ஆயினும், என் குடும்பத்தினரில் யாரையும் பேட்டி காண நான் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை.

சிறை மாற்றம்

இந்த நிலையில் திடீரென ஒரு நாள் வேலூர் சிறையிலி ருந்த முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்புக் காவல் கைதிகள் அனைவரும் தஞ்சையிலுள்ள இளங்குற்றவாளிகள் சிறைச் சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அவுட் குவாரண்டை

னிலிருந்த அரசியல் கைதிகள் மட்டுமின்றி, வேலூர் மத்திய சிறையில் பிற பகுதிகளிலிருந்த அரசியல் கைதிகளையும் சேர்த்து சுமார் ஆயிரம் பேர் தஞ்சை சிறைச்சாலைக்கு மாற்றப் பட்டோம். தஞ்சைச் சிறைச்சாலை மனத்துக்கு மகிழ்ச்சி தருவ தாக இருந்தது. கைதியாக அடைக்கப்பட்டிருக்கிறோம் என்ற நினைப்பை மாற்றி, புதியதொரு குடியிருப்பில் வாழ்க்கை நடத்துகிறோம் என்ற நினைப்பைத் தருவதாக இருந்தது. ஆம்; அரசியல் கைதிகள் அவ்வளவு பேரும் எந்த நேரத்திலும் சந்திப்பதற்கான நிலையில் ஒரு காலனியில் வைக்கப்பட்டிருந் தோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

நான் முதல் வகுப்புக் கைதியாதலால், தஞ்சையிலும் எனக் குத் தனி அறை ஒதுக்கப்பட்டு சகல வசதிகளும் தரப்பட்டன. சிறை வாழ்க்கையிலே ஒன்றும் குறைபாடில்லை. ஆயினும், நாளுக்கு நாள் உடல்நிறை வேகமாகக் குறைந்து வந்தது. சிறைச்சாலை மருத்துவர் என்னை சென்னை பெரிய மருத்துவம னையில் வைத்து மிகுந்த கவனத்துடன் சிகிச்சை அளிக்க வேண்டியது அவசியமென்று சிறை சூப்பிரண்டிடம் கூறினார். இதனைத் தனது பரிந்துரையாக சென்னை மாநில அரசுக்கு அறிவிக்கும் படியும் அந்த மருத்துவர் வற்புறுத்தினார். ஆனால், சிறை சூப்பிரண்டெண்ட் மருத்துவரின் ஆலோசனைப்படி நடந்து கொள்ளவில்லை.

உணர்வையிழந்தேன்!

திடீரென்று ஒருநாள் — நடுப்பகல் 12 மணியிருக்கும் — சிறையிலுள்ள தலைவர்களில் சிலரும் மற்றுமுள்ள தோழர்களில் பலரும் மிகுந்த கவலையோடு என்னைச் சூழ்ந்திருக்கும் நிலையை நான் கண் விழித்துப் பார்த்தேன். என்மீது கம்பளி சமக்காளங்கள் பல போர்த்தப்பட்டிருந்தன. முகத்திற்குக் கீழே உடம்பு முழுவதும் நன்றாக மூடப்பட்டிருந்தது. என் அருகி ருந்த தலைவர்களில் ஓ.பி.ராமசாமி ரெட்டியார், வைத்தியநாத ஐயர், என்.எம்.ஆர். சுப்பராமன் ஆகியோர் முக்கியமானவர் களாவர். கண் விழித்தபோது நான் கண்ட காட்சி எனக்கு மிகுந்த வியப்பைத் தந்தது. என் உணர்வு முழு அளவில் இருந்ததென்று நான் சொல்வதற்கில்லை. அந்த நிலையை இன்று நினைத்தால் ஏதோ கனவு கண்டது போலத்தான் இருக்கிறது.

அன்று காலை திடீரென மயக்கமடைந்து மருத்துவமனையில் கக்கூசில் நான் விழுந்து விட்டதாகவும், அதன்பின் சிறைக்கு வெளியிலிருந்து பெரிய டாக்டர் ஒருவர் அவசரமாகத் தருவிக்கப்பட்டு எனக்கு முதல் தரமான சிகிச்சை தரப்படுவதாகவும் என் அருகிலிருந்த தலைவர்கள் கூறினர். 'ஒடுகலோன்' என்ற உடம்பை உஷ்ணப்படுத்தும் ஒருவகை மருந்து புட்டி புட்டியாக என் உடம்பின் மீது கொட்டப்பட்டிருந்தது.

மருத்துவமனை நுழைவாயிலிலே போலீஸ் காவல் போடப்பட்டிருந்தது. ஆம்; சகோதரக் கைதிகள் உள்ளே நுழைந்து விடாமல் தடுப்பதற்காக! அவர்கள் எல்லோரும் மருத்துவமனைக்கு வெளியே கூட்டமாகக் கூடி, ஏதோ முடிவை எதிர்பார்த்துக் கவலையோடு காத்திருந்தனர்.

சிறைக்குள் ஆர்ப்பாட்டம்

அமராவதிச் சிறையைப் போல் அல்லாமல் வேலூர் சிறைச்சாலையிலே போராட்ட உணர்ச்சியுள்ள இளம் தேச பக்தர்கள் நூற்றுக்கணக்கில் இருந்தனராதலால், நான் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமென்று சிறைக்குள்ளே கோஷங்கள் எழுப்பினர். சிறை சூப்பிரண்டெண்ட் அலுவலகத்தின் முன் திரண்டு என்னை விடுதலை செய்யுமாறு அவரை வற்புறுத்தினர். நான் சுயநினைவைப் பெறுவதற்கு முன்பே சிறை மருத்துவரும் சூப்பிரண்டெண்டும் சென்னை மாநில அரசின் தலைமைச் செயலாளருக்கு எனது அபாய நிலையை அறிவித்து என்னை விடுதலை செய்ய ஆணை அனுப்புமாறு தந்தி கொடுத்தனர். எனது விடுதலைக்கான உத்தரவு தந்தி மூலமே கிடைக்கக் கூடுமென்று நம்பி, சிறை சூப்பிரண்டெண்டும் பிறரும் வினாடிக்கு வினாடி எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

அநேகமாக சிறைக் கைதிகள் எல்லோரும் சிறைச் சூப்பிரின்டெண்ட் அலுவலகத்தின் முன்னே முகாம் போட்டிருந்தனர். சரியாக மாலை 4 மணிக்குத் தலைமைச் செயலாளரிடமிருந்து நான் விடுதலை செய்யப்பட்டிருப்பதாகத் தந்தி மூலம் தகவல் கிடைத்தது. சூப்பிரின்டெண்டின் அலுவலகத்தருகே கூடியிருந்தவர்கள், அந்தக் கால முறைப்படி, ''போலோ மகாத்மா காந்திக்கி

ஜே'', ''போலோ பாரத் மாதாகி ஜே'' என்று வானதிரக் கோஷித்தனர். சிறைச்சாலையின் தலைவாயிலிலே எழுந்த அந் தக் கோஷம் உள்ளே எங்கோ ஒரு மூலையிலிருந்த மருத்துவ மனை வரை எதிரொலித்தது. அந்த ஒலியைக் கேட்டு எனக்கு விடுதலை கிடைத்துவிட்டதாக என்னைச் சுற்றியிருந்த தேச பக்தர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு எனக்கு அறிவித்தனர்.

அதுவரை கண்கலங்காதிருந்த நான் விடுதலைச் செய்தி யைக் கேட்டபோது கண்கலங்கி விம்மியழுதேன். நாட்டின் விடுதலை கோரிச் சிறை புகுந்தேன். அந்த விடுதலை கிடைப்ப தற்கு முன்பு என் சகோதர தேச பக்தர்களெல்லாம் சிறையில் அடைபட்டிருக்கும் நிலையிலே நான் மட்டும் விடுதலை பெறுவ தற்காக வருந்தியழுதேன். என் விம்முதலுக்குக் காரணம் கேட்ட ஓமந்தூர் ரெட்டியாரிடம் இதனைக் கூறினேன். அவர் அன்பு ததும்பும் முகத்துடன் எனக்கு ஆறுதல் கூறினார். மீண்டும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் ஈடுபடும் பொருட்டு நான் உயிர்வாழ வேண்டியது அவசியமென்றும், அதற்காகவேனும் மரணத்திலிருந்து பிழைப்பதற்காக அரசு தந்த விடுதலையை மகிழ்ச்சியோடு ஏற்க வேண்டுமென்றும் திரு. ரெட்டியார் என்னி டம் கூறினார். மதுரை வைத்தியநாத ஐயர், சிறைக்கு வெளியே என்னை அனுப்புவதற்கான ஏற்பாடுகளில் கருத்து செலுத்தினார்.

31 பவுண்டு சதை கரைந்தது

சிறையில் எனக்களிக்கப்பட்ட சிகிச்சைபற்றிய வரலாற்றை ஒரு அறிக்கையாகத் தயாரித்துத் தரவேண்டுமென்று ஐயர் சிறை மருத்துவ அதிகாரியை வற்புறுத்தினார். சிறைக்கு வெளியே மேலும் நான் சிகிச்சை பெறுவதற்கு அந்த அறிக்கை பயன்படு மென்று அவர் நம்பினார்.

1942 ஆகஸ்டு 13-இல் நான் வேலூர் சிறையில் புகும் போது எனது உடல்நிறை 119 பவுண்டு. 1944 ஜனவரி 4-இல் நான் தஞ்சை இளங்குற்றவாளிகள் சிறையிலிருந்து விடுதலை பெற்றபோது எனது உடல்நிறை 88 பவுண்டு. சரியாக 31 பவுண்டு சதை ஏகாதிபத்தியக் கழுகுக்கு இரையாகிவிட்டது.

சிபிச் சக்கரவர்த்தி ஒரு புறாவின் உயிரைக் காக்கும் பொருட்டு அதைத் துரத்தி வந்த வேடனுக்குப் புறாவின் எடை அளவுக்குத் தனது சதையை அறுத்தெடுத்துக் கொடுத்தான். நானோ 31 பவுண்டு சதையை ஏகாதிபத்தியம் வைத்த சிறையில் இழந்து மரணப் படுக்கையில் விழுந்துவிட்டேன்.

சிறையிலே என்னுடனிருந்த தலைவர்களுக்கு என் குடும்பத்தின் வறுமை நிலை தெரியும். சிறை மீண்டதும் அடுத்த சில மணிகளுக்கேனும் என் தேவைகளுக்காக நான் கஷ்டப்படக் கூடாதென்று கருதி ஒரு சிறு தொகையைச் சேகரித்து அதனை எனது மேல் துண்டின் ஒரு முனையில் கட்டி வைத்து அதை எனக்கும் தெரிவித்தனர். தொகை எவ்வளவு என்பது நினைவில்லை. நூறு ரூபாய்க்கு உட்பட்ட தொகை என்பது மட்டும் நினைவிருக்கிறது. இன்னொரு கடிதத்தையும் எழுதி எனது சட்டைப் பையில் வைத்தார் திரு.ஏ. வைத்தியநாத ஐயர். அதில் எழுதப்பட்டிருந்ததன் சாரம் வருமாறு:

> *''ஸ்ரீ சிவஞான கிராமணியார், வேலூர் சிறையிலும், தஞ்சை இளங்குற்றவாளிகள் சிறையிலும் இருந்த காலம் முழுவதும் நோயுற்றுத்தான் இருந்தார். அவரைச் சிறைக்கு வெளியேயுள்ள மருத்துவமனையில் சேர்த்து அவருக்கு சிகிச்சை தருமாறு பலமுறை நாங்கள் வற்புறுத்தியும், சிறைக்கு வரும் மருத்துவர் சிபார்சு செய்திருந்தும் சிறை அதிகாரிகள் அலட்சியம் செய்து வந்தனர். அதன் விளைவாக மரணத்தை அணுகிவிட்ட நிலையில் இன்று நாங்கள் ஸ்ரீ கிராமணியாரை வழியனுப்பும் துர்பாக்கிய நிலை எங்களுக்கு ஏற்பட்டுவிட்டது. ஸ்ரீ கிராமணியாரின் உயிருக்கு ஏதேனும் கேடு நேருமானால், அதற்கு அரசாங்கம் தான் பொறுப்பேற்க வேண்டும்.''*

இந்தக் கடிதத்தின் கீழ் சிறையிலிருந்த முக்கிய தலைவர்களில் பலர் கையொப்பமிட்டிருந்தனர். அவர்களில் ஓமந்தூர் ரெட்டியார், வைத்தியநாத ஐயர் ஆகிய இருவர் பெயர்களே எனது நினைவிலிருக்கின்றன. கடிதத்தின் வாசகத்தை எனது நினைவிலுள்ளபடி மேலே தந்திருக்கிறேன். இன்னும் கொஞ்சம்

காரசாரமாக எழுதப்பட்டிருந்ததாகவும் நினைவிருக்கிறது. நான் வீடு சேர்வதற்கு முன்னர் இறந்து விடுவேனோ என்ற ஐயத்தின் பேரிதான் இந்தக் கடிதம் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

சிறைக்குள்ளே ஊர்வலம்

சிறைக்கு வெளியே என்னைக் கொண்டு செல்வதற்கு முன்பு என் முகத்தைப் பார்த்துவிட வேண்டுமென்று சக அரசியல் கைதிகள் என் படுக்கையைச் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் ஆயிரம் பேராதலால், அவர்கள் காட்டிய அன்பு எனக்குப் பெருந்தொல்லை தருவதாக இருந்தது. அதனால் அரசியல் கைதி ஒவ்வொருவரும் அவரவர் அறையினருகே நிற்க வேண்டுமென்றும், நான் சிறையின் ஒவ்வொரு பகுதிக்கும் கொண்டு வரப் படுவேன் என்றும் தலைவர்கள் அறிவித்தனர். அதன்படி மருத்துவமனை ஸ்ரெட்சரில் என்னைப் படுக்க வைத்து சிறைக்குள்ளே ஒரு ஊர்வலமே நடத்திவிட்டனர். அந்தக் காட்சியை இன்றும் என் அகக் கண்களால் காண முடிகின்றது.

சிறைக்கு வெளியே தஞ்சாவூரிலுள்ள காங்கிரஸ் பிரமுகர்களுக்கு என் விடுதலை பற்றித் தகவல் தரவேண்டுமென்றும், சென்னையில் உள்ள குடும்பத்திற்கும் தந்தி மூலம் அறிவிக்க வேண்டுமென்றும் சிறை அதிகாரிகளிடம் என் சக தேசபக்தர்கள் கேட்டுக் கொண்டனர். அத்துடன், விடுதலைக்குப் பின்னர், தஞ்சை மருத்துவமனையில் சேர்த்துச் சிகிச்சை தரவேண்டுமென்றும் இல்லையேல், டாக்டர் துணையுடன் என்னைச் சென்னைக்கு அனுப்ப வேண்டுமென்றும் விண்ணப்பித்துக் கொண்டனர். இவை அனைத்தையும் செய்து தருவதாகச் சிறை அதிகாரி கூறியது எனது நினைவிலிருக்கிறது.

நன்றி!

உண்மையிலேயே சிறைக்கு வெளியே நான் கொண்டு வரப்பட்டபோது என் மனத்துக்கு ஏற்பட்ட வேதனையை எழுத்தால் வருணிக்க முடியாது. அந்நாளைய அப்பாவித் தொண்டர்களின் தேசபக்த வெறிக்கு நான் சரியான பிரதிநிதியாக இருந்தேன். சிறைச்சாலை வாழ்க்கை விரும்பத் தக்கதல்ல

வென்றாலும், தொடர்ந்து 17 மாதங்கள் அந்த வாழ்க்கையை நடத்தி விட்டதால், அதிலிருந்து விடுதலை பெறுவது வருத்தத்தைத் தருவதாகத்தான் இருந்தது. சிறையிலிருந்த தேசபக்தர்கள் அன்று காட்டிய எல்லையற்ற அன்புக்காக அவர்களில் ஒவ்வொருவருக்கும் என்றென்றும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் ஒவ்வொருவருடைய பெயரும் இப்போது சரியாக எனது நினைவிலில்லை. ஆயினும், அவர்கள் அவ்வளவு பேருக்கும் எனது நன்றியைச் செலுத்துகின்றேன்.

சிறைக்கு வெளியே கொண்டு வரப்பட்டதும் நான் பெரிதும் ஏமாற்றமடைந்தேன். என்னை ஏற்றுக்கொள்ள நகர காங்கிரஸ் காரர் எவரும் சிறைவாயிலில் காணப்படவில்லை. காரணம் சிறையிலிருந்த தலைவர்களுக்கு உறுதி கூறியபடி சிறை சூப்பிரண்டெண்ட் எனது விடுதலைபற்றி அவர்களுக்குத் தகவல் தராததுதான். அத்துடன், தஞ்சை மருத்துவமனையில் என்னைச் சேர்ப்பதற்கும் சிறை அதிகாரிகள் ஏற்பாடு செய்யவில்லை. உடனடியாகச் சென்னைக்கே அனுப்பிவிட ஏற்பாடுகள் செய்து வைத்திருந்தனர். ஆம்; மருத்துவர் துணையும் இல்லாமல்! சிறைக்குள்ளே மருத்துவர் தந்த மருந்துகள் மட்டும் என் படுக்கையில் வைக்கப்பட்டிருந்தன.

'திக்கற்ற பிணம் போகிறது!'

(நான் சிறைக்கு வெளியே கொண்டு வரப்பட்டதும் சாதாரண உடையுடன் நான்கு போலீசார் என்னை ஏற்றுக் கொண்டு ரெயில்வே ஸ்டேஷனுக்கு எடுத்துச் சென்றனர். இந்த நால்வரும் தங்கள் கைகளைத் தொங்கவிட்ட வண்ணம் ஸ்ட்ரெச்சரை எடுத்துச் சென்றனர். இப்படி எடுத்துச் சென்றதால் என் உடல் அசைந்தசைந்து அதிர்ச்சியுற்றது. அதனால் ஸ்ட்ரச்சரைத் தோளில் சுமந்து செல்லுமாறு நானே அவர்களைக் கேட்டுக் கொண்டேன். சிறையிலிருந்து ரயில்வே நிலையத்திற்கு அதிக ஜன நடமாட்டமற்ற ஒரு சாலை வழியே நான் எடுத்துச் செல்லப்பட்டேன். அப்போது அந்த வழியே சென்ற யாரோ இருவர் கூறிய ஒரு வாசகம் என் காதில் விழுந்தது. எப்படியோ பிழைத்துவிட்டேனாதலால், இப்போது அந்த வாசகத்தைச்

சொல்வதிலே எனக்கொன்றும் வேதனையில்லை. ஸ்ட்ரெச்சரில் நான்குபேர் என்னைச் சுமந்து செல்வதைப் பார்த்து அவர்கள், ''பாவம்! ஏதோ திக்கற்ற பிணம் போகிறது'' என்று பேசிக் கொண்டு சென்றனர். இந்த வாசகம் அன்று எனக்கு வேதனையா கத்தான் இருந்தது. வசதிகள் ஏதுமற்ற ஒரு ஏழைத் தொண்டன் விடுதலைப் போரில் ஈடுபட்டால் எவ்வளவு இன்னல்களை ஏற்க வேண்டியிருக்கிறது! நான் அவல வாழ்வின் சிகரத்திற்கே சென்ற நாள் அது.)

என் அதிருஷ்டவசமாக, அப்போது சென்னை ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினராக இருந்த மாம்பலம் காங்கி ரஸ்காரர் ஒருவர் தஞ்சை ரெயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத் தில் ஸ்ட்ரெச்சரில் நான் படுத்துக் கிடந்தபோது நான் எதிர்பா ராத வண்ணம் என்னை அணுகி ஆறுதல் மொழிகள் கூறினார். அந்த ரெயிலில் தாம் சென்னை வருவதாகவும், எனக்கு எல்லா வகையிலும் துணையிருப்பதாகவும் உறுதி கூறினார். நான் ஏறி வந்த ரெயில் மறுநாள் சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தை அடைந்தபோது, எனது தம்பியும், தந்தையும் பிளாட்பாரத்தில் காத்திருந்து ஊசலாடிக் கொண்டிருந்த உயிரோடு கூடிய எனது உடம்பை ஏற்றுக் கொண்டனர்.

அதன் பின்னர் எழும்பூர் ரெயில்வே ஸ்டேஷன் பிளாட்பா ரத்தில் இருக்க நேருகின்ற ஒவ்வொரு நேரத்திலும் அந்த அவலக் காட்சி எனது நினைவுக்கு வருவதுண்டு.

''எத்தனை கோடி இன்பங்கள் வைத்தாய இறைவா?'' என்று பாடினார் பாரதியார். இதற்கு மாறாக, ''இந்த ஏழைக்கு எத்தனை கோடித் துன்பங்கள் வைத்தாய் இறைவா'' என்று நான் நொந்து கொள்ள வேண்டிய அளவுக்குப் பொது வாழ்க்கையில் துன்பங்களுடன் நான் போராடி வந்திருக்கிறேன். இன்னமும் போராடிக் கொண்டுதானிருக்கிறேன். இந்தப் போராட்டத்திற்கு முடிவே இருக்காது போலும்!

சிறைக்கு வெளியே அல்லல்!

சிறைக் கொடுமைகளிலிருந்து முற்றிலும் விடுதலை பெற்று விட்டேன் என்றாலும், மரணாபத்திலிருந்து விடுதலை பெறாத நிலையில்தான் வீடு வந்து சேர்ந்தேன். வீட்டின் நுழை வாயிலிலே என்னை வரவேற்றது கொடுமைமிக்க வறுமைதான். சிறையிலே, தேசபக்தர் சிலர் கொடுத்தனுப்பிய சொற்பப் பணத்தை வைத்துக் கொண்டு, புனர்வாழ்வு நடத்தத் தொடங்கி னேன். ஆம்; மரணத்தின் நிழலில் நடமாடிக் கொண்டு!

பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள், சிறைவாசத்தின் போது தமது உடல்நிலையில் 6 பவுண்டு குறைந்துவிட்டதற்காக மிகுந்த சலிப்புடன் தமது சுய சரிதத்தில் எழுதியிருப்பது வருமாறு:

''1932-ல் சிறையில் பல மாதங்கள் அன்றாடம் எனக்குச் சிறிது காய்ச்சல் அடித்து வந்தது கண்டு ஆத்திரம டைந்தேன். நல்ல உடல்நிலையுடையவன் என்ற பெரு மைக்குப் பங்கம் ஏற்பட்டதே என்ற ஆத்திரம்தான். என் றுமே ஆரோக்கியத்துடன் வாழ்பவன் என்று எண்ணி வந்த எனக்கு உடல் சிறிது சிறிதாகத் தேய்ந்துவிடும் என்ற பயங்கர எண்ணம் ஏற்பட்டுக் கலங்கச் செய்தது. மரணத் திற்காக நான் பயப்படவில்லை. ஆனால், உடலும் உள்ள மும் சிறிது சிறிதாகத் தேய்ந்து போவது வேறு விஷயம்.''

தன் உடல் நிறையில் 6 பவுண்டு குறைந்ததால் நேருவுக்கு மரணபயம் ஏற்பட்டிருக்குமானால், 31 பவுண்டு எடையை இழந்துவிட்ட நிலையில் என் மனம் என்ன பாடுபட்டிருக்கும்! நேரு கூறியதுபோல, சாவதுகூடச் சுலபம்தான். ஆனால், அணு அணுவாகச் செத்துக் கொண்டிருப்பது கொடுந்துன்பமாகும்.

ஆகஸ்டுக் கிளர்ச்சி தொடங்கியபோது அமராவதிச் சிறைச் சாலைக்கு அனுப்பப்பட்ட 11 தமிழர்களிலே, திரு.எஸ். சத்திய

மூர்த்தி ஐயர், எனக்கு முன்னர் விடுதலையாகி, விடுதலையான ஒரு வாரத்திற்குள் காலமாகி விட்டார். திரு.சி.என். முத்துரங்க முதலியார், மருத்துவ காரணத்திற்காக எனக்கு முன்பே விடுதலை பெற்றுவிட்டார். மூன்றாவது நபராக நான் விடுதலை பெற்று வீடு வந்து சேர்ந்தேன். எஞ்சிய 8 பேர் அமராவதிச் சிறையிலே அடைப்பட்டுக் கிடந்தனர்.

போலீசார் கண்காணித்தனர்

நான் சிறை மீண்ட பின்னர், சிறைக்கு வெளியேயிருந்த சென்னை நகர காங்கிரஸ்காரர் எவரும் என்னைப் பார்த்து எனக்கு ஆறுதலும் தேறுதலும் கூற முன்வரவில்லை. ஆம்; சிறைவாசத்திற்கும் அடக்குமுறைத் துன்பங்களுக்கும் அஞ்சக் கூடிய ''தேச பக்தர்கள்''தான் நான் விடுதலை பெற்ற நாளிலே சிறைக்கு வெளியேயிருந்தனர். அதனால், ஆகஸ்டுக் கிளர்ச்சியில் சம்பந்தப்பட்ட அரசாங்க விரோதியான என்னைப் பார்ப்பதால் தங்களுக்கு ஏதேனும் கேடு நேர்ந்துவிடக் கூடுமென்று அவர்கள் அஞ்சியிருக்க வேண்டும். சிறை மீண்ட பின்னரும், இரகசியப் போலீசார் என்னைக் கண்காணித்து வந்தனர். அப்போது எனது குடும்பம் திருவொற்றியூருக்கு அடுத்தாற்போலுள்ள காலடிப்பேட்டையில் குடியிருந்தது. அந்தப் பேட்டையின் காவல் நிலையத்தாரும் என்னைக் கண்காணிப்பதற்குப் பொறுப்பேற்றனர்.

நகரில் அரசியல் நடவடிக்கை எதுவுமே இல்லாதபடி காங்கிரஸ்காரர்கள் செயலற்றுக் கிடந்தனர். குடும்பத் தொல்லை, போலீசாரின் கண்காணிப்பு, நகரில் அரசியல் வாழ்வே அஸ்தமித்துப் போன நிலைமை ஆகிய அனைத்தும் சேர்ந்து என் மனத்துக்கு வேதனை அளித்தன. இந்தச் சூழ்நிலையில் சிறைக்கு வெளியே இருப்பதைவிட, சட்டத்தை மீறி மீண்டும் சிறைக்குச் சென்றுவிடுவதே சிறந்தது என்ற எண்ணம் எனக்கு அடிக்கடி தோன்றியது.

விடுதலை பெற்றபின் இரண்டு மாதங்கள் வரை நடமாடவும் திறனற்றுப் படுக்கையிலேயே இருந்தேன். எனது வறுமைக்

குப் பரிகாரமாக, சிறை புகுமுன் அச்சடித்து வைக்கப்பட்டிருந்த 'கப்பலோட்டிய தமிழன்' என்னும் நூலின் அச்சுப் பிரதிகளைத் 'தமிழ்ப் பண்ணை'யாரிடம் கொடுத்து சிறிதளவு பணம் பெற்றேன்.

அல்லலுற்ற மனத்துக்கு ஆறுதல் தேட வேண்டி இலக்கியப் படிப்பைத் தொடர்ந்தேன். சிறையில் பயன்படுத்திய காரைக்குடி அரு.ராம. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களின் நூல்களை அவரிடமே கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். அதனால், இலக்கியப் பயிற்சியைத் தொடர்வதற்கு அத்தியாவசியமான சில நூல்களைப் பணம் கொடுத்து வாங்க வேண்டியிருந்தது. நண்பர்கள் சிலரிடம் பொருளுதவி பெற்று இலக்கிய நூல்களை வாங்கினேன்.

கண்ணீரால் எழுதிய கவிதை

சிறையில் குருட்டுப் போக்கில் என் மகன்மீது ஒரு கவிதை இயற்றுவதற்கு முன்பு தமிழ்ப் பண்டிதனாகிவிட வேண்டும் என்று மட்டுமே ஆவல் கொண்டிருந்தேன். என் மகன்மீது கவிதை எழுதிய பின்னர், கவிஞன் ஆகிவிட வேண்டும் என்ற ஆசையும் ஏற்பட்டது. ஆவது சுலபம் என்ற நம்பிக்கையும் பிறந்தது. முறையாக யாப்பிலக்கணம் பயின்று கவிஞனாவதையே நான் விரும்பினேன். அதனால், தண்டையார்பேட்டையில் மரபுவழிக் கவிஞராக விளங்கிய ஏகை. சிவராஜ பிள்ளையிடம் யாப்பு பயிலத் தொடங்கினேன். இந்தப் பயிற்சி ஆரம்பமான ஒரு வாரத்திற்குப் பின் திருமதி கஸ்தூரிபாய் காந்தி ஆகாகான் மாளிகையில் காலமானார் என்ற செய்தி கிடைத்தது. காந்தியடிகளிடம் எனக்கிருந்த பக்தி காரணமாக, அவருடைய கற்பரசியிடமும் பக்தி கொண்டிருந்தேன். அன்னையின் மறைவு கேட்டு என் மனம் உருகியது. அப்போது, எனது கண்ணீரால் யான் வரைந்த மூன்று வெண்பாக்களிலே ஒன்று வருமாறு:

ஏதிலார் வைத்தசிறை ஈமச் சுடுகாடோ?
நாதியற்றுப் போனாயோ நல்லுலகில் — கோதிலா
ஆகாகான் மாளிகையோ அந்தோ! உனைவிழுங்கும்
மாகாலன் மாளிகையோ மற்று.

அன்னையாருக்கு ஆகாகான் மாளிகையைச் சிறைச்சாலை யாக்கிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். மாகாலனோ அந்த மாளி கையைச் சுடுகாடாக்கி விட்டான்! இது வெண்பாவின் பொருள்.

இந்த வெண்பாவை நான் யாப்பு பயின்ற ஆசிரியரிடம் காட்டியபோது, அவர் மகிழ்ச்சி வெறிபிடித்தாடினார்! 'ஏதிலார் வைத்த சிறை ஈமச் சுடுகாடோ?' என்ற தொடக்கம் அவரைப் பெரிதும் கவர்ந்து விட்டது. ''இது அல்லவா கவிதை!'' என்று கூறி, என்னைப் பாராட்டினார். நான் ''மகாகவியாகி'' விடக் கூடுமென்றும் நம்பிக்கை தெரிவித்தார். ஆனால், இதுவரை அந்தப் பேறு எனக்குக் கிடைக்கவில்லை. இனி எப்படியோ?

யாப்பிலக்கணம் பயின்று கொண்டிருந்த காலத்திலே மணிக்கொரு கவிதை எழுதிவிட வேண்டுமென்று என் மனம் துடித்தது. வெண்பா இயற்றுவதுதான் கஷ்டமென்று சொல்வார் கள். ஆனால், என்னளவில் அதுதான் எளிதாக இருந்தது. துரதிர்ஷ்டவசமாக, பன்னிரண்டு நாட்களிலேயே எனது யாப்பிலக்கணப் பயிற்சி முடிந்துவிட்டது — இல்லை முறிந்து போய் விட்டது! ஆம்; அதற்கு மேலே படிக்க சூழ்நிலை என்னை அனுமதிக்கவில்லை.

யாப்பு பயில்வதை விட்டாலும், கவிதை புனைவதை விட்டேனில்லை. தொடர்ந்து வெண்பா, விருத்தப்பா, அகவற் பாக்கள் பல இயற்றினேன். தமிழ்நாட்டின் பண்டைப் பெருமை களை வருணிக்கும் தொடர்நிலைச் செய்யுட்களும் படைத்தேன். கவிஞனாகிவிட வேண்டுமென்ற ஆர்வம் சொற்பக் காலமே இருந்து பின்னர் மறைந்து போய்விட்டது! அதற்கப்புறம் கவிதை புனையும் முயற்சியில் நான் ஈடுபடவே இல்லை. எழுதி வைத்திருந்த செய்யுட்களையும் பாதுகாக்கத் தவறியதால், இழந்து விட்டேன்.

நான் சிறையில் இருந்தபோது குடும்பப் பொறுப்பு எனக் கில்லாமல் இருந்தது. நான் இல்லந் திரும்பி விட்டதால் அந்தப் பெரும் பொறுப்பு என் தலைமீது விழுந்துவிட்டது. ஏதேனும் தொழில் செய்தாலன்றி, குடும்பத்தைக் காப்பது இயலாதென்ற நிலை ஏற்பட்டது. காங்கிரஸ் வட்டாரத்திலே எனக்குப்

பொருளுதவி புரிபவர் ஒருவருமில்லை. இந்த நிலையிலே என்ன வேலை செய்வது? திரும்பவும் அச்சு கோக்கும் தொழிலுக்குப் போக என் மனம் விரும்பவில்லை. அறிவுத் துறையில் வளர்ச்சியடைவதற்கு அத்தொழில் தடையாக இருக்குமென்று அஞ்சினேன்.

வேலை தேடிப் பட்டபாடு

இப்போது ஓரளவு இலக்கியப் பயிற்சி ஏற்பட்டுவிட்டதால் செய்திப் பத்திரிகை அலுவலகத்திலே பிழை திருத்தம் (புரூப் ரீடர்) வேலைக்குப் போகலாமென்ற துணிவு பிறந்தது. அப்போது தமது சொந்தப் பொறுப்பில் திரு.டி.எஸ். சொக்கலிங்கம் பிள்ளை 'தினசரி' என்ற பெயரில் பத்திரிகை நடத்திக் கொண்டிருந்தார். டாக்டர் வரதராசுலு நாயுடு அவர்களின் 'தமிழ்நாடு' பத்திரிகை அலுவலகத்தில் திரு.டி.எஸ். சொக்கலிங்கம் ஆசிரியராயிருந்தபோது நான் அங்கு அச்சு கோக்கும் தொழிலாளியாக இருந்தேன். அப்போதுதான் அவருக்கும் எனக்கும் அறிமுகம் ஏற்பட்டது. அதை வைத்துக் கொண்டு ஆசிரியர் சொக்கலிங்கத்தை அணுகி, தினசரி அலுவலகத்தில் பிழை திருத்தும் வேலை தரும்படி வேண்டிக் கேட்டேன். அவர் அச்சுக் கோக்கும் (கம்பாசிடர்) வேலை தருவதாகக் கூறினார். ஆம், அதைவிட உயர்வாக எனது திறமையை மதிப்பிட அவர் தயாராக இல்லை. தாழ்ந்த நிலையில் உள்ள ஒரு தொழிலாளி சுயமுயற்சியால் உயர்ந்து வளர்ந்தாலும், அவனது உயர்வை ஒப்புக்கொள்ள வளர்ந்துவிட்ட 'கனவான்கள்' தயாராக இல்லை. பிழை திருத்தும் வேலைக்கு நான் தகுதியற்றவன் என்பதை எசமான பாஷையிலே எனக்கு உணர்த்தினார் ஆசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம்.

அப்போது ''சுதேசமித்திரன்'' ஆசிரியராக இருந்த திரு. சி.ஆர். சீனிவாசன், என்னிடம் மிகுந்த அன்பும் மதிப்பும் வைத்திருந்தார். அவரை அணுகி, 'சுதேசமித்திர'னில் 'புரூப் ரீடர் வேலை கேட்டேன். அவர்,

''நீங்கள் பொதுக் கூட்டத்தில் நன்றாகப் பேசி நான் கேட்டிருக்கிறேன். அந்த விஷயத்தில் நான் உங்கள் பேன் (விசிறி). ஆனால், மேடையிலே பேசுவது வேறு; சப் எடிட்டராக (புரூப் ரீடராக) வேலை பார்ப்பது வேறு. பேச்சாளர் எழுத்தாளராவதில்லை; எழுத்தாளர் பேச்சாள ராவதில்லை.''

என்று கூறி, தத்துவோபதேசம் செய்தார். அவரும் என்பால் 'கருணை' காட்டி, கம்பாசிடர் வேலை தர இசைந்தார்.

நான் அச்சு கோக்கும் தொழில் புரிந்தது எல்லோருக்கும் தெரிந்திருந்ததால், அதற்கு அதிகமாக என் தகுதி வளர்ந்திருப் பதை நம்ப மறுத்துவிட்டனர். ஒருவன் கையுழைத்துப் பிழைக் கும் தொழிலாளியாக இருப்பதனை இறைவன் அவனுக்குத் தந்துவிட்ட ஆயுள் தண்டனையாகக் கருதுகின்றது படித்த வர்க்கம். எழுத்து கோக்கும் தொழிலாளியும் முயன்றால் எழுத் தாளனாக மலரமுடியும் என்பதனை வளர்ந்துவிட்ட வட்டாரம் நம்ப மறுக்கின்றது. நான் புரூப் ரீடர் வேலை கேட்ட செய்திப் பத்திரிகாசிரியர்களிடத்திலே, என்னால் எழுதப்பட்ட என்னா லேயே அச்சுக் கோக்கப்பட்டு 'தமிழ்ப் பண்ணை'யின் பெயரால் வெளிவந்திருந்த 'கப்பலோட்டிய தமிழன்' என்ற நூலைக் காட்டி, எனக்குள்ள எழுத்தாற்றலை நம்புமாறு வேண்டினேன். ஒருவரும் நம்பவில்லை. தொழிலாளியும் அறிவுத் துறையில் வளர முடியும் என்பதனை வளர்ந்துவிட்ட வட்டாரம் நம்ப மறுக்கிறது என்பதோடு, அந்த மாதிரியான அற்புதம் நிகழக் கூடாதென்றும் விரும்புகின்றது என்பதனை அப்போதுதான் நான் உணர்ந்தேன். ஒரு தொழிலாளி தன் சுயமுயற்சியால் அறிவாளியானாலும், அவனைத் தங்கள் வர்க்கத்தில் சேர்த்துக் கொள்ள அறிவுப் பாரம்பர்யத்தினர் விரும்புவதில்லை. ஆம்; அவர்கள் பார்வையிலே அவன் 'தேரோட்டி மகன்'தான்! ஒரு நேரத்திலே வறுமையின் கொடுமையால் நான் பழையபடி அச்சுக் கோக்கும் தொழிலுக்கே செல்லவும் துணிந்தேன். ஆனால், எனது உடல்நிலை கருதி நான் அந்த வேலைக்குச் செல்லாது என பெற்றோர் தடுத்துவிட்டனர்.

ஜார்ஜ் டவுன் அங்கப்ப நாயக்கன் தெருவிலுள்ள அப்துல் அக்கீம் இந்து - முஸ்லிம் உயர்நிலைப் பள்ளியில் என்பால் அன்பு கொண்ட திரு.டி.எஸ். உமாபதி, எம்.ஏ.பி.டி. அவர்கள் தலைமையாசிரியராக இருந்தார். அதே பள்ளியில் எனது மெய்க்காவலர் போன்று விளங்கிவந்த வித்துவான் மாசிலாமணி கிராமணியாரவர்கள் தமிழாசிரியராயிருந்து வந்தார். இந்த இருவரும் நான் வித்வான் தேர்வுக்குப் படிக்கத் தொடங்கி நுழைவு (என்ட்ரன்ஸ்)த் தேர்விலே வெற்றி பெற்றுவிட்டால், தங்கள் பள்ளியில் தமிழாசிரியர் வேலை கொடுக்க முடியு மென்று கூறினார்கள். ஆம்; அப்போதைய கல்வித் துறை விதிமுறைப்படி அதற்கு வாய்ப்பிருந்தது. நானும் வித்வானுக் குப் படிக்கத் திட்டமிட்டு நுழைவுத் தேர்வுக்கான நூல்களை வாங்கிப் படிக்கவும் தொடங்கினேன். ஆனால், வறுமை — பிணி — அரசியல் உணர்வு ஆகிய மும்முனையிலும் போராடி வந்த என்னால் படிப்பைத் தொடர முடியவில்லை. இடையிலே விட்டுவிட்டேன், அதனால், தமிழாசிரியர் வேலை கிடைப்பதற் கிருந்த வாய்ப்பையும் இழந்தேன்.

"இவரா கிராமணி?"

இந்த நிலையில் எதிர்பாராத வகையில் ராஜாஜி அவர்க ளைச் சந்திக்க நேர்ந்தது. ராயபுரம் ராஜாஜி அரசன சேவா சங்கத்தின் ஆண்டு விழா ராஜாஜியின் தலைமையிலே நடை பெற்றது. அதிலே பேசுவதற்கு நான் அழைக்கப்பட்டிருந்தேன். விழாவன்று நானும் ராஜாஜியும் மேடையில் சந்தித்தோம். அவரைக் கண்டதுமே கைகூப்பி வணங்கினேன். அவர் தன்னு டைய பழைய நண்பனாக என்னைக் கருதாமல் அலட்சியமாக இருந்து விட்டார். அவரது போக்கு எனக்கு வெட்கத்தையும், வேதனையையும் தந்தது. பாகிஸ்தான் கோரிக்கைக்கு ஆதரவாக ராஜாஜி பிரசாரம் தொடங்கியபோது, மதுரையில் தேசிய நாடார் மாநாட்டிலே அவருக்கும் எனக்கும் வாக்குவாதம் ஏற்பட்ட தனை முன்னரே கூறியிருக்கிறேன். அந்த நிகழ்ச்சிக்குப்பின் — சற்றேறக்குறைய இரண்டாண்டுகளுக்குப் பின்பு — இப்போது தான் நாங்கள் முதன் முதலாகச் சந்தித்தோம். அதனால் பழைய கோபம் காரணமாக அவர் என்னை அலட்சியப்படுத்தியிருக்க

லாம் என்று நினைத்து அமைதி கொண்டு விட்டேன். தலைமை வகித்த ராஜாஜி, பேச்சாளர்களை ஒருவர்பின் ஒருவராக அழைத்துப் பேசவைத்த பின்னர், எனது முறை வந்தபோது, சங்கச் செயலாளரைப் பார்த்து, ''கிராமணியார் இன்னும் வர வில்லையா?'' என்று கேட்டார். நான் அவரது அருகில்தான் நாற்காலியில் அமர்ந்திருந்தேன். சங்கச் செயலாளர் என்னைக் காட்டி, ''கிராமணியார் இதோ இருக்கிறாரே'' என்றார்.

அப்போதுதான் அவர் என்னைக் காட்டி, 'இவரா கிராமணி?' என்று வியப்புடன் கேட்டார். பின்னர் என்னைப் பார்த்து ''ஏன் இப்படி ஆனீர்கள்? உடம்புக்கு என்ன நேர்ந்தது? '' என்று நாத்தழுதழுக்கத் துக்கம் தோய்ந்த குரலில் என்னைக் கேட்டார். சிறையில் நோயுற்று, அதன் விளைவாக 31 பவுண்டு சதையை இழந்த எனது பரிதாபகரமான வரலாற்றை அரசியலில் யான் எனது தந்தையாகக் கருதிவரும் ராஜாஜியிடம் மிகுந்த ஆற்றாமையோடு கூறினேன். அவர் எனக்கு ஆறுதல் மொழிகள் கூறினார். இந்தச் சந்திப்புக்குப் பின்னர் ராஜாஜி எனது உடல் நலத்தில் அக்கறை செலுத்தினார். தம்முடைய நண்பர் டாக்டர் சீனிவாசன் அவர்களிடம் சொல்லி பெரிய மருத்துவமனையில் என்னைச் சேர்த்து, அங்கு எனக்குச் சிகிச்சை அளிக்கச் செய் தார். தொடர்ந்து பத்து நாட்கள் நான் சென்னை பெரிய மருத்துவமனையில் பொது வார்டில் தங்கிச் சிகிச்சை பெற்றேன்.

தென் சென்னையில் குடியேறினேன்!

எனது உடல் தேறி, நான் உயிர் வாழ வேண்டுமானால் குடும்பப் பொறுப்பிலிருந்து என்னை விடுவிக்க வேண்டியது அவசியமென்பதனை என் பெற்றோர் உணர்ந்தனர். நான், என் மனைவியோடும், 3 வயது மகனோடும் மட்டும் தனிக் குடித்த னம் நடத்த என்னைத் தூண்டினர். எனக்குப் புத்தி தெரிந்த கால முதல் நான் என் பெற்றோரைப் பிரிந்து வாழ்ந்தறியேன். சுதந்திரமிழந்து சிறையில் கைதியாக வாழ்ந்த காலம் மட்டுமே இதற்கு விலக்கு. ஆனால், உயிர் வாழ வேண்டுமென்ற விருப் பத்தால், பெற்றோரின் கருத்துப்படி, பெரிய குடும்பத்தை நடத் தும் பொறுப்பிலிருந்து விடுபட்டு, என் மனைவியும் மகனும்

மட்டுமே கொண்ட சிறிய குடும்பத்துடன் வடசென்னையை விட்டு தென் சென்னையில் — என் மனைவிக்குச் சீதனச் சொத்தாக வந்த வீட்டில் குடியேறினேன். இந்தக் குடிபெயர்ப்பு, எனது குடும்ப வாழ்வில் மட்டுமின்றி, பொது வாழ்க்கையிலும் பல நல்ல திருப்பங்களுக்கு முன்னோடியாக அமைந்ததென லாம். நான் பிறந்தது தென் சென்னையில் தானென்றாலும், 1927 முதல் 1944 வரை — 18 ஆண்டுகாலம் — வடசென்னையில் தான் வாழ்ந்தேன். எனது அரசியல் வாழ்க்கை பூவாகி, காயாகி யது வடசென்னையில்தான். அந்தக் காயும் கனியாவதற்குத் தென் சென்னை வாழ்க்கை பெரிதும் பயன்பட்டது.

"இருசப்ப கிராமணி தெரு எலும்புக் கூடு"

வடசென்னை மக்களில் மிகப் பெரும்பாலோர் கையுழைத் துப் பிழைக்கும் வர்க்கத்தினர். அதனால் அவர்கள் உழைப்புக் கும் உண்மைக்கும் மதிப்பளிக்கும் பண்பினைப் பெற்றிருக்கின்ற னர். பிறப்பாலும், பெற்ற செல்வத்தாலும், கற்ற கல்வியாலும் உயர்வு மனப்பான்மையுடையவர்கள் வடசென்னையில் மிகுதி யாக இல்லாமையால், என்போன்று எளிய குடியில் பிறந்த சாமான்யர்கள் முன்னேறுவதற்கு அங்குத் தடைகள் இருக்க வில்லை. நான் வடசென்னையில் வாழ்ந்தபோது, அங்குள்ள பேட்டைக்குப் பேட்டை, வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு நன்கு அறிமுகமானவனாக இருந்தேன். வடசென்னை மக்களும் தேச பக்தர்களும் என்னை அன்போடு வளர்த்தனர். அதற்காக, வடசென்னைக்கு என்றென்றும் நன்றியுடையவனாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வளவிருப்பினும், அரசியல்வாதி எவரும் ஒரு கட்டத் திற்குமேல் வளர்வதற்கான வாய்ப்போ, வசதியோ வடசென் னையில் இருக்கவில்லை. தென் சென்னையில்தான் அத்தகைய வாய்ப்புகளும் வசதிகளும் இருக்கின்றன. ஆனால், இங்கு உயர்வு மனப்பான்மையுடையோருடன் போராடித்தான் வளர வேண்டியிருக்கிறது. நான் தென் சென்னைக்கு வந்த பின்னர் தான் சமூகக் கொடுமைகளை நேருக்குநேர் சந்திக்கலானேன். இங்குதான், என் வாழ்க்கைப் போராட்டம் கூடுதலானது.

ஆனால், உயர்வு மனப்பான்மை படைத்தவர்களோடு போட்டி யிடுவதிலும், அவர்களுடைய கொடுமைகளை எதிர்த்துப் போராடுவதிலும் ஒரு தனி இன்பத்தைக் காண்கின்றேன்.

நான் தென் சென்னையில் குடியேறிய பின்னர் என்னைப் போலவே எனது இளைத்த உடலும் அதிக அளவில் விளம்பரம் பெற்றது. ஒரு சமயம் ராஜாஜி அவர்கள், ''கிராமணியாருக்கு முன்பு உடம்பிலே மீசை மறைந்திருந்தது. இப்போது மீசையிலே உடம்பு மறைந்திருக்கிறது'' என்று மிகுந்த அனுதாபத்துடன் வருணித்தார். அனுதாபமில்லாதவர்கள், ''இருசப்ப கிராமணித் தெரு எலும்புக் கூடு'' என்று கேலியாக வருணித்தனர்.

பலசாலிகள் மாநாட்டிற்கு அழைப்பு!

ஒருநாள் ஈரோடுவாசி ஒருவர் என் வீட்டிற்கு வந்து, என்னைப் பார்த்து ''சிவஞான கிராமணியார் இருக்கிறாரா?'' என்று கேட்டார். நான் ''அவரை ஏன் தேடுகிறீர்கள்?'' என் றேன். அதற்கவர், ''ஈரோடிலே தமிழ்நாடு பலசாலிகள் மாநாடு நடக்க இருக்கிறது. அதற்குத் தலைமை தாங்க கிராமணியாரை அழைக்க வந்திருக்கிறேன்'' என்றார். இதைக் கேட்டதும் நான் சிரித்துவிட்டேன். பின்னர், ''நான்தான் சிவஞான கிராமணி! என்னைப் பார்த்த பின்னரும் பலசாலிகள் மாநாட்டிற்கு அழைக் கலாமென்று உங்களுக்குத் தோன்றினால், நான் வருவதற்குத் தடையில்லை'' என்றேன்.

அவர் ''நான்தான் சிவஞான கிராமணி'' என்று நான் சொல்லக் கேட்டதும், அதிர்ச்சியடைந்தவராகி, வாய் பேசாமல் வியப்படைந்து நின்றார். பின்னர், மரியாதைக்காக ''தாங்கள் தான் தலைமை வகிக்க வேண்டும். நான் ஈரோடு சென்றதும் தங்களுக்குக் கடிதம் எழுதுகிறேன்'' என்று கூறிவிட்டுப் போனார். இன்றுவரை அவரிடமிருந்து கடிதம் வரவில்லை.

எனது மரணத்திற்குப் பொறுப்பேற்க அஞ்சி அரசு எனக்கு விடுதலை தந்த செய்தி பத்திரிகைகளில் ஐந்தாறு வரிகள் அளவில்தான் வெளியாயின. அதனால், நான் உயிர் வாழ்வதற் குப் போராடிக் கொண்டிருந்ததனைச் சென்னைக்கு வெளியே

யுள்ள மக்கள் அறிந்திருக்கவில்லை. ஈரோடு பலசாலிகள் சங்கத்தார் என்னைத் தங்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்க அழைத்ததற்கு இந்த 'இருட்டடிப்பு'தான் காரணம்.

மற்றும் அந்நாளில் 'கிராமணி' என்றாலே, ஆஜானுபாகு வான முரட்டு மனிதனாகத்தான் இருக்க வேண்டுமென்று பெரிய மனிதர்களிலேயுஞ் சிலர் கற்பனை செய்து கொண்டனர். நான் தென் சென்னையில் குடியமர்ந்த பின்னர் எனது உடல் வெகு வேகமாகத் தேறி வந்தது. குடற்புண் தொல்லை இருந்ததென்றா லும், உணவு கொள்வதில் அபிவிருத்தி ஏற்பட்டது. உடல் நிறையும் கொஞ்சங் கொஞ்சமாக அதிகரித்து வந்தது. ஆகவே, முன்போல பொதுப் பணிகளில் ஈடுபடத் தொடங்கினேன்.

ஏதேனும் செய்ய வேண்டுமென்று மனம் துடித்தது. ஆயி னும் எனது உடல்நிலை காரணமாக, திரும்பவும் அரசு என் னைச் சிறையில் தள்ளிவிடக் கூடிய வகையில் எதையுஞ் செய்ய நான் விரும்பவில்லை. ஆனால், அந்த அபாயத்திற்கு ஆளாகா மல் ஆக்க வழியில் பணிபுரிய நிறைய வாய்ப்பிருப்பதாக நான் கருதினேன். அந்த வகையில் சென்னையிலும் தமிழ்நாட்டிலும் உள்ள காங்கிரஸ்காரர்களையும் செயல்புரிய வைக்க வேண்டு மென்று விரும்பினேன். சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி சட்டவிரோதமாக்கப் பட்டிருப்பினும், அதன் செயலாளன் என்ற முறையிலேயே ஆக்கவழிப் பணிகளில் ஈடுபட முடிவு செய் தேன். இதற்கே அந்நாளில் அதிக அளவு துணிவு தேவைப்பட் டது.

சிறையிலிருந்து நான் விடுதலையானபோது, நாட்டின் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இல்லை. ஆகஸ்டுக் கிளர்ச்சி என்னும் பெரும் புயல் முற்றிலும் ஓய்ந்து விட்டது என்றாலும், அரசியல் வானம் வெளுத்திருக்கவில்லை. நம்பிக்கை என்னும் கதிரவன் ஒளி வீசவில்லை; வானம் கறுத்துதான் இருந்தது. ஆகஸ்டுப் புயலும் அடக்குமுறைக் கொடுமையும் சேர்ந்து விளைவித்த சேதங்களை என்னால் காண முடிந்தது. புயல் நின்று விட்டதென்றாலும், புயலுக்குப் பயந்து ஒதுங்கியிருந்த காங்கிரஸ்காரர்கள் அச்சம் நீங்கி ஆக்க வழிப் பணியில் ஈடுபட

ஆர்வமில்லாத நிலையிலிருந்தார்கள். பாரதம் முழுவதன் நிலைமை இதுவென்றால், தமிழ்நாட்டின் சூழ்நிலை இதைவிட வும் மோசமாக இருந்தது. தமிழர் வாழ்விலே 'தேசியம்' மணக்கவில்லை.

காந்தியடிகள் பிறந்த நாள் விழா, பாரதியார் நினைவு விழா போன்ற சான்றோர்கள் விழாக்களை நடத்தக்கூட சிறைக்கு வெளியேயிருந்த காங்கிரஸ்காரர்கள் துணிவு பெறாமலிருந்த னர். சுருங்கச் சொன்னால், 'அச்சம்' என்னும் காரிருள் அங்கிங் கெணாதபடி எங்கெங்கும் படர்ந்திருந்தது.

தமிழ்நாடு காங்கிரஸ் செயலாளர் என்னும் பெயரிலே உண்மையில் தலைவராகப் பணியாற்றி வந்த நாவலர் எஸ்.சத்தி யமூர்த்தி ஐயர் காலமாகிவிட்டாராதலால், தமிழ்நாடு காங்கிர சின் தலைமைப் பீடம் சூன்யமாக இருந்தது. தமிழ்நாடு காங்கி ரஸ் தலைவர் என்ற பெயரைச் சுமந்துகொண்டு உண்மையில் செயலாளாராகப் பணிபுரிந்து வந்த திரு. காமராசர் வடக்கே அமராவதிச் சிறையில் அடைபட்டுக் கிடந்தார். தமிழ்நாடு காங்கிரசின் துணைத் தலைவராக இருந்த ருக்மணி லட்சுமிபதி அம்மையார் ஆகஸ்டுக் கிளர்ச்சியில் கலந்து கொள்ளாததோடு, குடும்பச் சூழ்நிலை காரணமாக அரசியல் வாழ்விலிருந்தே தாம் ஒதுங்கிக் கொண்டு விட்டதாகக் கூறிக் கொண்டிருந்தார்.

அதிகாரப் பொறுப்பு எதையும் பெற்றிராவிட்டாலும், செல் வம் — கல்வி — முதுமை காரணமாக தமிழ்நாடு காங்கிரஸ் வட்டாரத்திலே மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த திரு.சி.என். முத்துரங்க முதலியார் சிறைக்கு வெளியேயிருந்தாரென்றாலும் ஆக்கவழிப் பணிகளில் ஈடுபடுவதற்கும் ஆர்வமில்லாதவராக இருந்தார்.

தமிழ்நாட்டின் நிலைமை இதுவென்றால், தலைநகரான சென்னை இதைவிட மோசமாக இருந்தது. சென்னை நகரிலே தமிழ்நாடு காங்கிரசிற்கும் அடுத்த அந்தஸ்திலிருந்தது சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியாகும். அதன் தலைவராக இருந்த திரு.எஸ். சத்தியமூர்த்தி ஐயர் காலமாகி விட்டதால், செயலாள னாக இருந்த என் மீதுதான் பாரம் முழுவதும் விழுந்திருந்தது!

சந்தர்ப்பம் என்மீது சுமத்திவிட்ட மகத்தான பொறுப்பை நான் மிக மிகத் தெளிவாக உணர்ந்தேன்.

நான் சிறை மீண்ட பின்னர், என்னை அணுகி, என்னோடு நெருக்கமாகத் தொடர்பு கொண்டனர் கம்யூனிஸ்டு நண்பர்கள். அவர்கள் அந்நாளில் காங்கிரசுக்குள்ளேதான் இருந்தனர். ஆயினும் காங்கிரஸ்காரர்களில் மிகப் பெரும்பாலோரின் வெறுப்புக்கு உரியவர்களாக இருந்தனர். காங்கிரஸ் மகாசபை நிறைவேற்றிய ஆகஸ்டு தீர்மானப்படி, இரண்டாவது உலகப் பெரும் போர் ஏகாதிபத்திய யுத்தமாக காங்கிரஸ்காரர்களால் வருணிக்கப்பட்டது. இதற்கு மாறாக, சோவியத் ருஷ்யா ஜெர்மனிக்கு எதிராக பிரிட்டனுடன் கூட்டு சேர்ந்த விட்டதென்ற ஒரே காரணத்துக்காக இரண்டாவது உலகப் பெரும் போரை ''மக்கள் போர்'' என்று வருணித்தனர் கம்யூனிஸ்டுகள். அப்படிச் சொன்னதோடு நிற்காமல், உலகப் பெரும் போரில் பிரிட்டிஷ் பேரரசும் கலந்த நேச நாடுகளின் வெற்றியை விரும்பியும் வேலை செய்தனர். காங்கிரஸ் தொடங்கிய ஆகஸ்டுக் கிளர்ச்சிக்கு எதிராகவும் பிரசாரம் செய்தனர். இதனால் காங்கிரஸ்காரர்களால் ''தேசத் துரோகிகள்'' என்றுகூட கம்யூனிஸ்டுகள் வருணிக்கப்பட்டனர். இந்தப் பழியைச் சுமந்து கொண்டிருந்த நிலையிலேதான் கம்யூனிஸ்டுத் தோழர்கள் சென்னை ஜில்லா காங்கிரசின் செயலாளனும் ஆகஸ்டுக் கிளர்ச்சியில் கலந்து கொண்டவனுமாகிய என்னோடு தொடர்பு கொண்டனர்.

ஆகஸ்டுக் கிளர்ச்சி பற்றிக் கம்யூனிஸ்டுகள் கொண்டிருந்த கொள்கை எனக்கு உடன்பாடன்று. உலகப் பெரும் போரில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்டுகள் உதவியாக இருந்ததும் எனக்குப் பிடிக்கவில்லை. ஆயினும், நீண்ட காலமாக சோஷலிசக் கொள்கையிலே எனக்குப் பிடிப்புண்டு. அது காரணமாக, காங்கிரசின் ஒரு அங்கமாக விளங்கிய காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சியிடம் எனக்கு நல்லெண்ணமிருந்தது. ஆனால், காந்திய நெறியின்பால் எனக்கிருந்த அழுத்தமான நம்பிக்கையின் காரணமாக நான் காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சியில் சேராமலிருந்தேன். அந்நாளில், சோஷலிசத்திற்கும் கம்யூனிசத்திற்குமுள்ள நடைமுறை வேற்றுமையை மட்டும் நான்

தெளிவாக உணர்ந்திருந்தேன். இந்த உணர்ச்சிதான் காங்கிரஸ் சோஷலிஸ்டுகளிடமிருந்து — குறிப்பாக, காங்கிரசிலே கலந்திருந்த கம்யூனிஸ்டுகளிடமிருந்து என்னைப் பிரித்து வைத்தது.

சென்னை நகர அளவிலேனும் காங்கிரஸ்காரர்களை ஆக்க வழிப் பணியில் ஈடுபடுத்த பொறுப்பேற்க விரும்பினேன். ஆதலால், கம்யூனிஸ்டுகளின் நட்பையும் பெற்று, அவர்களுடைய ஒத்துழைப்போடும் செயல்படத் தொடங்கினேன். இது வைதிக காங்கிரஸ்காரர்களுக்குப் பிடிக்காதென்பது எனக்குத் தெரிந்திருந்தும், செயலாற்ற வேண்டுமென்ற ஒரே ஆர்வத்தால் கம்யூனிஸ்டுகளின் தோழமையைப் பெற்றேன்.

முதலில், 1944 செப்டம்பரில் தேசிய மகாகவி பாரதியாரின் நினைவுநாளைக் கொண்டாடத் திட்டமிட்டேன். சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளன் என்ற பொறுப்பிலேயே சென்னை நகர காங்கிரஸ் பிரமுகர்களுக்கும், தேசிய மனப்பான்மை கொண்ட தமிழறிஞர்களுக்கும் அழைப்பு விடுத்து சென்னை மகாஜன சபையில் ஒரு கூட்டம் நடத்தினேன். அந்தக் கூட்டத்திலே பாரதி விழாவை நடத்துவதற்கெனத் தனியாக ஒரு குழு அமைத்தேன். அதற்கு, திரு.வ.ரா. தலைவர். நானும், கம்யூனிஸ்டுப் பிரமுகர் திரு. பி.இராமமூர்த்தியும் செயலாளர்கள். செப்டம்பர் 11-ஆம் தேதி தொடங்கி, ஒரு வாரம் முழுவதும் சென்னை நகரத்தின் பல திக்குகளிலும் கூட்டங்கள் போட்டு, பாரதி விழாவைச் சிறப்பாக நடத்தினோம். அதனால் உறங்கிக் கிடந்த நகர காங்கிரஸ்காரர்களிடையே விழிப்பு ஏற்படக் கண்டேன்.

அமராவதியிலிருந்து ஆணை பிறந்தது!

பாரதி விழாவை அடுத்து, அக்டோபர் 2-இல் காந்தியடிகள் விழாவையும் நானும் நண்பர் பி.ராமமூர்த்தியுமே முன்நின்று கொண்டாடினோம். இந்த விழாவிலே வைதிக காங்கிரஸ் வட்டாரத்தைச் சேர்ந்த இளைஞர் சிலர் சலசலப்புக் காட்டினர். அதனைச் சமாளித்துவிட என்னால் முடிந்தது. சென்னை நகரில் நடைபெற்ற பாரதி விழாவிலும், காந்தியடிகள் விழாவிலும்

தமிழ்ப் பெரியார் திரு.வி.க., தொழிற்சங்கத் தலைவர் திரு.வி. சக்கரை செட்டியார் ஆகியோரையும் கலந்து கொள்ளச் செய்தேன். இந்த இரு விழாக்களைக் கொண்டாடியதால் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி உயிர் பெற்றுவிட்டது.

சென்னை நகரைப் பின்பற்றி வெளி மாவட்டங்களிலேயும் காங்கிரஸ்காரர்களால் காந்தியடிகள் விழா கொண்டாடப் பெற்றது. எனது முயற்சியால் தமிழ்நாட்டிலே திரும்பவும் ஆக்க ரீதியில் ஒரு எழுச்சி ஏற்பட்டது கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். காங்கிரஸ்காரர்களிலே பலரும், தேசிய மனப்பான்மை படைத்த தமிழ்ப் பெரியார் திரு.வி.க. போன்றவர்களும் எனது சாதனையைப் பாராட்டினார்கள்.

சென்னையில் எனது முயற்சியால் காங்கிரஸ்காரர்களும், தேசிய மனப்பான்மையுடையவர்களும் ஒன்றுபட்டுச் செயலாற்றத் தொடங்கியது வடக்கே அமராவதிச் சிறைவரை எதிரொலித்தது. அங்குள்ளவர்கள் எனது நடவடிக்கையைச் செய்தித் தாள்களின் மூலம் அறிந்துகொண்டு, அதன் பின்விளைவுகள் பற்றி ஆலோசிக்கலாயினர் என்று அறிந்தேன். அங்கு என்ன நடந்ததென்று விபரமாக எனக்குத் தெரியாது.

திரு.சி.என். முத்துரங்க முதலியார் எனது முயற்சிக்கு எதிராகச் செயல்படத் தொடங்கினார். இதற்கு அவர் இரண்டு விதமான காரணங்கள் கூறினார். ஒன்று, காங்கிரசுக்குப் பகைவராகி விட்ட ராஜாஜியால் தூண்டப்பட்டுத்தான் சட்ட விரோதமாக்கப்பட்டுள்ள சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் பெயரால் நான் செயல்படுகிறேனென்பது, மற்றொன்று, எல்லா வகையிலும் காங்கிரசுக்கு எதிரிகளாகச் செயல்பட்டுவரும் கம்யூனிஸ்டுகளுடன் தொடர்பு கொண்டு விட்டேனென்பது. காங்கிரஸ் ஸ்தாபனத்தின்பால் எனக்குள்ள பற்றுதலை திரு. முதலியார் சந்தேகிக்கும் வகையிலே சிலர் எனக்கு எதிராக அவரது நெஞ்சிலே நஞ்சைத் தடவிவிட்டனர்.

சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளன் என்ற முறையிலே பாரதி விழாவையும், காந்தியடிகள் விழாவையும் கொண்டாடியதற்கு முதலியார் எனக்கு உள்நோக்கம் கற்பித்

தது எனக்கு வேதனையைத் தந்தது. காங்கிரசிலே ராஜாஜிக்கு ஆதரவாக ஒரு கோஷ்டியை நான் உருவாக்க முயல்வதாகக்கூட திரு. முதலியார் சந்தேகித்தார். இந்தச் சந்தேகம் முதலில் அமராவதிச் சிறையிலுள்ளவர்களுக்குத்தான் எழுந்திருக்க வேண்டும். ஏனெனில், திரு. முத்துரங்க முதலியார் கள்ளங் கபடமற்றவர். சூழ்ச்சி அறியாதவர். மற்றும் சிறையிலும், சிறைக்கு வெளியிலும் அவரும் நானும் பல ஆண்டுகள் சேர்ந்து பழகி வந்திருக்கிறோமாதலால், எனது அப்பாவித் தனத்தை அவர் நன்றாக அறிவார். அவரது அப்பாவித்தனத்தை நானும் அறிவேன். உண்மையில் சூழ்ச்சி அறியாத அரசியல்வாதி களான நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தேகிக்க நியாயமில்லை. ஆனால், திரு. முதலியார் என்னைச் சந்தேகிக் கும்படி அமராவதிச் சிறைச்சாலை அவரைத் தூண்டிவிட்டது.

காந்திஜி — ராஜாஜி சந்திப்பு

1944-இல் நான் காந்தி விழாக் கொண்டாடும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அடிகள் உடல்நிலைக் குறைவு காரணமாக நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார். விடு தலைக்குப்பின் பம்பாய் நகருக்கு அருகிலுள்ள 'பர்ணகுடி'யில் தங்கியிருந்த அடிகளைச் சந்தித்துப் பேசினார் ராஜாஜி. இந்தச் சந்திப்பின் விளைவாகத் தலைவர் ராஜாஜியின் பாகிஸ்தான் ஆதரவுத் திட்டத்தைக் காந்தியடிகள் ஏற்றுக் கொண்டார். இதனை முதன் முதலாகப் பத்திரிகைகளில் படித்தபோது எனக்கு வியப்பு ஏற்பட்டது. ஆம்; நாட்டைப் பிளவுபடுத்தும் பாகிஸ் தான் திட்டத்தை காந்தியடிகளே ஏற்றுக் கொண்டு விட்டார் என்பது என்னால் நம்பக்கூடியதாயில்லை. ஆனால், நம்ப வேண்டிய நிலை இருந்தது. ராஜாஜியின் திட்டமானது முஸ்லிம் லீகின் பாகிஸ்தான் கோரிக்கையிலிருந்து சிறிது மாறுபட்டதா கும். பாகிஸ்தான் கோரிக்கையை அது நிபந்தனையின்றி ஏற்றுக் கொள்ளவில்லை. சுருக்கமாகச் சொல்வதானால், மாநில சுயாட்சி அடிப்படையில் லீகைத் திருப்தி செய்ய முயன்றது ராஜாஜித் திட்டம்.

சிறையிலேயே மாநிலச் சுயாட்சிக் கோரிக்கை எனது மனத்தில் உருவாகியிருந்ததால், அந்தக் கோரிக்கையின் அடிப் படையில் பாகிஸ்தான் கொள்கையை அணுகும் ராஜாஜியின் திட்டத்தை காந்தியடிகள் ஏற்றுக் கொண்டது எனக்குப் பிடித்தி ருந்தது. இந்த சமாதானம்கூடத் தேவையில்லாமலே காந்தியடி கள் ஏற்கும் எந்தத் திட்டத்தையும் ஏற்றுக் கொள்ளும் பக்தி மனப்பான்மை எனக்கிருந்தது. அதனாலும், ராஜாஜி — காந் திஜி சந்திப்பும், அதன் விளைவாக அவர்களிடையே ஏற்பட்ட கொள்கை உடன்பாடும் எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தன.

ராஜாஜியின் திட்டத்தை காந்தியடிகள் ஏற்றுக் கொண்ட தனை முதன் முதலில் வரவேற்று அறிக்கை விட்டவன் நான் தான். அந்த இரு பெரியார்களின் கருத்துடன்பாடு பற்றிய செய்தி பத்திரிகைகளில் வெளியான நாளிலே பெரம்பூரில் தென்னிந்திய ரெயில்வே தொழிலாளர் சங்கத்தின் ஆண்டு விழாவைத் தொடங்கி வைத்துப் பேசினேன். அந்தப் பேச்சிலே ராஜாஜியின் திட்டத்தை காந்திஜி ஏற்றுக் கொண்டதை நான் ஆதரிப்பதாகக் கூறினேன். எனது பேச்சு சென்னை நாளிதழ் களிலே பிரமாதமாகப் பிரசுரிக்கப்பட்டது.

ராஜாஜியை அழைத்தேன்!

ராஜாஜி பம்பாயில் காந்தியடிகளைச் சந்தித்துவிட்டு சென்னை திரும்பினார். சென்னை சென்டிரல் ஸ்டேஷனில் சந்தித்து மாலை அணிவித்து ராஜாஜியை வரவேற்றேன். கையில் மாலையுடன் நான் அவர் எதிரே நிற்கக் கண்டதும், ''யார் கிராமணியா? நீங்களா எனக்கு மாலை போட வந்தீர்கள்? நான் காங்கிரஸ்காரன் அல்லவே'' என்று குத்தலாகக் கூறினார். அதனைப் பொறுத்துக் கொண்டு, ''ஆம்; கிராமணிதான். உங்க ளுக்கு மாலை அணிவிக்கிறேன். காந்தியடிகள் உங்கள் திட் டத்தை ஏற்றுக் கொண்டாராதலால், நானும் ஏற்கிறேன். மதுரை யில் தேசிய நாடார் மாநாட்டு மேடையில் நமக்குள் விவாதம் ஏற்பட்டபோது, ''பாகிஸ்தான் திட்டத்தை முதலில் காந்தியடி கள் ஏற்கும்படி செய்யுங்கள்; அப்புறம் நானும் ஏற்கிறேன்'' என்று நான் கூறியதைத் தங்களுக்கு இப்போது நினைவூட்டு

கிறேன்'' என்று மிகுந்த பணிவுடன் கூறினேன். ராஜாஜி சிரித்து விட்டு என் முதுகில் தட்டிக் கொடுத்து, தன் கரங்களால் என்னை அணைத்துக் கொண்டார்.

பின்னர், ''நாளை மாலை தியாகராய நகர் இந்திப் பிரசார சபையில் நடைபெறவிருக்கும் காந்தியடிகள் விழாவில் தாங்களும் கலந்து கொண்டு பேசவேண்டும்'' என்று அவரை அழைத்தேன்.

''நான் காங்கிரஸ்காரன் அல்ல; காங்கிரஸ்காரர்கள் நடத்தும் கூட்டத்திற்கு என்னை ஏன் அழைக்கிறீர்கள்?'' என்று சற்று வெறுப்புடன் கூறினார். நான் மேலும் வற்புறுத்தி அழைத்ததன் பேரில் ஏற்றுக் கொண்டார்.

ராஜாஜியை நான் காந்தி விழாக் கூட்டத்தில் பேச அழைத்ததற்கு உள்நோக்கம் எதுவும் கிடையாது. அந்தக் கூட்டம் காங்கிரஸ் கமிட்டியின் பெயரால் அல்லாமல் தனியாக அமைக்கப்பட்ட ஒரு குழுவின் பெயராலேயே நடத்தப்பட்டது.

இந்திப் பிரச்சார சபைக் கூட்டத்தில் ராஜாஜி பேச ஆரம்பித்ததுமே, ''கிராமணி அழைத்துத்தான் நான் இந்தக் கூட்டத்தில் பேசுகிறேன். காந்திஜி என்னை ஏற்றுக் கொண்டு விட்டதால் இங்குள்ள நம் கிராமணியாரும் என்னை ஏற்றுக் கொண்டிருக்கிறார்'' என்று கொஞ்சம் வருத்தம் தோய்ந்த குரலில் கூறினார். ராஜாஜியின் இந்த வாசகம் எல்லாச் செய்தி இதழ்களிலும் சிறப்பாகப் பிரசுரிக்கப்பட்டது.

இப்படி, நான் நடத்திய காந்தி விழாவில் ராஜாஜி கலந்து கொண்டது தற்செயலாக நிகழ்ந்ததுதான். ஆனால், வைதிக காங்கிரஸ் வட்டாரத்தார், நானும் ராஜாஜியும் கூடிப் பேசித் திட்டமிட்டு, கம்யூனிஸ்டுகளின் ஆதரவோடு செயல்படுவதாகக் கருதினர். அப்போது கம்யூனிஸ்டுகளுக்கும் ராஜாஜிக்கும் கொள்கை ரீதியான தோழமை இருந்து வந்ததும் அவர்கள் ஐயத்திற்குக் காரணமாகும். இதன்பின் சென்னை நகர காங்கிரஸ்காரர்களைப் பிளவுபடுத்தி, எனக்கு எதிராக ஒரு அணி அமைக்க ராஜாஜி விரோதிகள் திட்டமிட்டனர்.

கலகத்திற்குக் கால்கோள் விழா

திரு.சி.என். முத்துரங்க முதலியார், 21.10.44 அன்று சென்னை காங்கிரஸ்காரர்களிலே தமக்குப் பிடித்தமானவர்களை அழைத்து ஒரு கூட்டத்தை நடத்தினார். இந்தக் கூட்டத்திற்கு வருமாறு அவர் எனக்கும் அழைப்பு அனுப்பியிருந்தார். ஏன், இந்தக் கூட்டத்தைக் கூட்டுவதுபற்றி முன்கூட்டியே என்னிடம் கலந்து ஆலோசித்தார். நான் முதலியார் புதிதாக ஒரு சங்கம் அமைப்பதனை ஆதரிக்கவில்லை. சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கே ''காங்கிரஸ் சங்கம்'' என்று பெயர் வைத்துவிட லாம் என்று ஆலோசனை கூறினேன். எனது யோசனையை அவர் ஏற்கவில்லை. கம்யூனிஸ்டுகள், ராயிஸ்டுகள் (எம்.என். ராயைப் பின்பற்றியவர்கள்) ராஜாஜி ஆதரவாளர்கள் ஆகியவர் களுக்குப் புதிதாக அமைக்கப்படும் காங்கிரஸ் சங்கத்தில் இடந் தர முடியாது என்று என்னிடம் உறுதியாகக் கூறினார். அரசியல் வேலைகளுக்காகவன்றி, கதர் வளர்ச்சி, தீண்டாமை விலக்கு போன்ற ஆக்கவழிப் பணிகளுக்காகத்தான் காங்கிரஸ் சங்கம் தேவைப்படுவதால், கோஷ்டி வேற்றுமை பாராட்ட வேண்டா மென்று அந்தப் பெரியவரை நான் வேண்டிக் கொண்டேன். அவர் தமது போக்கில் பிடிவாதம் காட்டினார். அதனால், அக்டோபர் 21-ல் அவர் நடத்திய கூட்டத்திலே நான் கலந்து கொள்ளவில்லை. திரு. முதலியார் கூட்டிய கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானத்திலே, அவருக்கிருந்த கோஷ்டி மனப் பான்மை எதிரொலித்தது. அக்கூட்டத்தில் அமைக்கப்பட்ட காங்கிரஸ் சங்கத்திலே கம்யூனிஸ்டுகளாகவும் ராயிஸ்டுகளாகவு மிருந்த காங்கிரஸ்காரர்கள் மட்டுமின்றி, ஆகஸ்டுக் கிளர்ச்சி யில் கலந்துகொண்டு தியாகம் புரிந்தவர்கள்கூட இடம் பெற வில்லை. சென்னை ஜில்லா காங்கிரஸ் சங்க நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களின் பட்டியலைப் பத்திரிகைகளில் படித்தபோது நான் மிகுந்த வேதனை அடைந்தேன். முதலியாரோடு கடிதப் போக்குவரத்து செய்தும், அவரை நேரில் சந்தித்துப் பேசியும் அவரது போக்கில் மாறுதல் ஏற்படுத்த முயன்றேன். அந்த முயற்சியிலே நான் தோல்வியுற்றேன். அதன் பின்னர்தான் அமராவதிச் சிறையிலிருந்த கிளிக் கோஷ்டியினரின் பிடியில் திரு. முதலியார் சிக்கியிருந்தது எனக்குத் தெரிந்தது.

எனது கடிதம்

திரு. முதலியாரவர்களுக்கு 24.10.44-இல் நான் எழுதிய நீண்ட கடிதத்தின் முக்கிய பகுதிகள் வருமாறு:

''ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் ஸ்தானத்தில் மற்றோர் சங்கத்தை நியமிக்கத் தாங்கள் நடத்திய கூட்டத்தில் அந்தக் கமிட்டியின் அங்கத்தினர்களில் பாதிப் பேருக்கு மேல் அழைக்கப்படவில்லை என்று அறிந்தேன். அவர்கள் அனைவருமே கம்யூனிஸ்டுகள் அல்லர். நிற்க, நானும் அக்கூட்டத்தில் கலந்துகொள்ள இயலாத சூழ்நிலையைத் தாங்கள் ஏற்படுத்திவிட்டீர்கள்.

''தாங்கள் நடத்திய கூட்டத்தில் புதிதாக நியமிக்கப் பட்டுள்ள கமிட்டியிலும் ஆகஸ்டுத் தியாகிகளான ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் அங்கத்தினர்கள் இடம் பெறவில்லை. புதிய கமிட்டியினரிடம் எனக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு. ஆயினும், என்னைச் செயலாளனாகக் கொண்ட ஜில்லா காங்கிரஸ் கமிட்டி அசட்டை செய்யப்படுவதை நான் அனுமதிப்பதற்கில்லை.

''சர்க்கார், சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியைத் தடைதான் செய்தது. ஆனால், 21.10.44-இல் தங்கள் தலைமையில் கூடியவர்கள் அக்கமிட்டியை அடியோடு புதைத்தே விட்டனர். பொதுவுடைமை எதிர்ப்புணர்ச்சியிலோ நடவடிக்கையிலோ நான் கவனம் செலுத்த இஷ்டப்படவில்லை.

''உண்மையில் காங்கிரஸ் நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றுவதுதான் அன்று கூடியவர்களின் நோக்கமென்றால், இந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்பவர்களிலும் வேண்டியவர், வேண்டாதவர் என்ற வேற்றுமை மனப்பான்மை எதற்காக?

''இரண்டாண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் ஸ்தாபன ரீதியில் ஒன்றுகூடி ஆக்கவேலையில் ஈடுபட

முயல்கிறோம். அதற்குள்ளாகவே, நம்மிடையே சச்சரவு ஏற்பட இடந்தருவது நல்லதல்ல. இதை எல்லாம் பொறுப்பு வாய்ந்த தங்களுக்கு நான் நினைவூட்டத் தேவையில்லை.

''என் வேண்டுகோள் இதுதான்: (1) சென்னை நகரில் ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்குப் பதிலாக ஒரு சங்கம் அமைக்கும் வேலை பூர்த்தியாகி விட்டதாக நினையாது, மீண்டும் அவ்வேலையை முதலிலிருந்து துவக்குங்கள். (2) ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் பிரதம நிர்வாகி மூலம் அக்கமிட்டி அங்கத்தினர்களையும் ஏனைய காங்கிரஸ் காரர்களையும் ஒன்றுகூட்டி, விரிந்த நோக்குடன் புதிய கமிட்டி நியமிக்க வேண்டும்.''

முதலியாரின் பதில் கடிதம்

24.10.44-இல் நான் எழுதிய கடிதத்திற்கு 27.10.44-இல் திரு முதலியார் பதில் எழுதினார். அதன் சில பகுதிகள் வருமாறு:

''ஸ்ரீ ம.பொ.சிவஞான கிராமணியார் அவர்களுக்கு,

''அன்புள்ள ஐயா! ஜில்லாக் கமிட்டி அங்கத்தினர்கள் தங்களைப் போலவே கம்யூனிஸ்டு அல்லாதவர்களும் ஆகஸ்டுத் தீர்மானத்தை ஆதரிப்பவர்களுமாக இருந்தும் அவர்களுக்கு அழைப்பு அனுப்பவில்லையென்றும், தங்களுக்கு அழைப்பு அனுப்பி இருந்தும் தாங்கள் வரக் கூடாத சூழ்நிலையை உண்டு பண்ணி விட்டேனென்றும் குறை கூறுவது வருந்தத்தக்கதே.

''செய்த வேலையை அழித்துவிட நான் முன்வர முடியாது. இந்தத் தற்காலிகக் கமிட்டி அதன் யோசனை பேரில் அங்கத்தினர்கள் சேர்த்து அவர்கள் மூலமாக ஒரு நிரந்தரக் கமிட்டியைத் தேர்ந்தெடுக்கும். காங்கிரஸ் கமிட்டிகள் தடை நீங்கி வேலை செய்ய முன்வரும்போது இக்கமிட்டி அவைகளில் இரண்டறக் கலந்து மறைந்து விடும். இந்த நிலைமை தங்களுக்குப் பிடிக்கவில்லை என்றாலும்,

தாங்களே தங்களுக்கு இஷ்டமானவர்களையெல்லாம் கூட்டி வைத்துப் பரந்த நோக்குடன் எவ்விதமான சேவையும் செய்து கொள்ளலாம். அதற்கு நான் எவ்வித பொறுப்பும் ஏற்றுக் கொள்ள முடியாது. அப்படி ஒரு கமிட்டி நீங்கள் நிறுவினால், இப்பொழுது ஏற்படுத்தி இருக்கும் இக்கமிட்டி இதர ராஜிய கட்சிகளைப் போல் ஒன்றாக இருக்கும். அதுவும் காங்கிரஸ் தடை நீங்கி வெளிவரும் வரையில்தான். ஆகவே, இக்கமிட்டியைப் பற்றிக் கவலை கொள்வதற்கு இடமுமில்லை. தங்கள் கடிதத்திற்குப் பதில் எழுத நான்கு நாள் தாமதப்பட்டதற்கு மன்னிக்கவும். தாங்கள் எழுதிய நீண்ட கடிதத்திற்குச் சிறிது யோசித்தே எழுத வேண்டியிருந்தது.''

தமிழ்நாட்டிலே ஏற்பட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கோஷ்டிச் சண்டைக்கு இந்த நிகழ்ச்சிதான் அடிப்படையாக அமைந்தது. ஒரு வகையில் நான்தான் அந்தக் கோஷ்டிச் சண்டையின் மூலகர்த்தாவாகவும் அமைந்துவிட்டேன். ஆனால், எனது விருப்பத்தின் பேரில் இந்த நிலையை நான் அடையவில்லை. கோஷ்டி பிரிந்து சண்டையிடுவதிலே பெருந் தலைவர்களுக்கு இலாபமிருக்கலாம். அந்நாளில் என் தாய் மொழியான தமிழில்கூட போதிய புலமை பெறாதிருந்த எளிய தொண்டனான நான் கோஷ்டிச் சண்டைக்கு ஏன் துணை புரிய வேண்டும்?

காங்கிரஸ்காரன் என்ற முறையில் நான் நடத்திய காந்தி விழா மேடைக்கு ராஜாஜியை அழைத்து பேசச் செய்தது காந்தியடிகளும் அவரும் ஒத்துப்போய் விட்டார்கள் என்பதால் தான். திரு. முத்துரங்க முதலியார் போன்ற உண்மைக் காங்கிரஸ் காரர்கள், ராஜாஜியும் காந்திஜியும் ஒன்றுபட்டதனை மனமார வரவேற்பார்கள் என்று நான் அப்பாவித்தனமாக நம்பினேன். என்னைப் போலவே காங்கிரஸ்காரர்கள் அவ்வளவு பேரும் — அவர்கள் தலைவர்களாயினும் தொண்டர்களாயினும் — காந்தி வழியில் நடப்பவர்கள் என்று நம்பினேன். இந்த அப்பாவித்தனமான நம்பிக்கைதான் கோஷ்டிச் சண்டையின் மூலகர்த்தாவாக என்னைச் செய்துவிட்டது.

திரு. முத்துரங்க முதலியார் தமிழ்நாட்டிலே செல்வாக்கு மிக்க காங்கிரஸ் தலைவரானதால், அவர் தொடங்கிய காங்கிரஸ் சங்கத்தின் நடவடிக்கைகளுக்குச் செய்திப் பத்திரிகைகள் அதிக அளவில் விளம்பரம் தந்தன.

வடசென்னையில் மாநாடு

சென்னை ஜில்லா காங்கிரஸ் சங்கத்திற்கு எதிராக சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் பெயரால் செயல்பட எனக்கு உரிமையிருந்தது. அக்கமிட்டியின் அங்கத்தினர்களில் சிறைச்சாலைக்கு வெளியேயிருந்தவர்களில் மிகப் பெரும்பாலோர் என் சார்பில் இருந்தனர். ஆயினும், சர்க்காரால் தடை செய்யப்பட்டுள்ள ஒரு கமிட்டியின் பெயரைப் பயன்படுத்தி நான் அரசியல் நடத்த இயலாதல்லவா! வேறு ஏதேனும் ஒரு பெயரால் திரு. முதலியாரின் காங்கிரஸ் சங்கத்திற்குப் போட்டிச் சங்கம் ஏற்படுத்த நான் முயன்றிருக்கலாம். அது என்னால் முடியக் கூடியதே. ஆனால், இரண்டாண்டுக் காலம் செயலற்றுக் கிடந்து அப்போதுதான் என் தூண்டுதலால் செயல்படத் தொடங்கிய காங்கிரஸ்காரர்களைக் கோஷ்டி பிரித்து அவர்களிடையே பகையை வளர்க்க நான் விரும்பவில்லை. அதனால், திரு.முதலியார் தொடங்கிய காங்கிரஸ் சங்கத்தின் கிளையாக முதல் சர்க்கிள் (வடசென்னை) காங்கிரஸ் சங்கம் ஒன்றை அமைத்தேன்.

நான் தென் சென்னைக்குக் குடிபெயர்ந்திருந்தாலும், வட சென்னை காங்கிரஸ்காரர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டிருந்தேன். என்னை ஒதுக்கி வைத்துவிட்டு, வட சென்னையில் யாரும் எதையும் செய்துவிட முடியாத நிலை இருந்தது. அதனால், காங்கிரஸ்காரர்களிடையே பகைமை வளர்வதைத் தடுப்பதற்காகச் சென்னை மாவட்ட அளவில் செயல்படுவதை விடுத்து, வடசென்னையில் மட்டும் காங்கிரஸ் சங்கம் அமைத்துச் செயலாற்றத் துணிந்தேன். வடசென்னை காங்கிரஸ் சங்கத்தைச் சென்னை மாவட்ட காங்கிரஸ் சங்கத்தின் கிளையாக அங்கீகரித்துக் கொள்ளும்படி திரு. முத்துரங்க முதலியாருக்கு எழுதினேன். அவர் எனது விருப்பத்துக்கு இணங்க மறுத்துவிட்டார்.

ராஜாஜி காங்கிரஸ் பிரவேசம்!

சென்னை ஜில்லா காங்கிரஸ் சங்கத்திற்கும் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கும் இடையே பூசலும் போராட்டமும் வளர்ந்தன. சென்னை ஜில்லா காங்கிரஸ் சங்கத்தின் அங்கீகாரத்தைப் பெறாத — அதன் கிளைபோல் என்னால் அமைக்கப்பட்ட — முதல் சர்க்கிள் காங்கிரஸ் சங்கத்தின் சார்பில், தண்டையார்பேட்டையில் நான் ஒரு மாபெரும் மாநாட்டை நடத்தினேன். அந்த மாநாட்டிற்கு வரும்படி திரு. முத்துரங்க முதலியாருக்கும் கடித மூலம் அழைப்பு விடுத்தேன். அன்று தனக்கு வேறொரு நிகழ்ச்சியிருப்பதாகக் கூறி, வர மறுத்துக் கடிதம் எழுதினார்.

மாநாடு 1945 ஏப்ரலில் நடைபெற்றது. மாநாட்டின் தலைவன் நான்தான். ஆம்; மாநாட்டில் குழப்பம் செய்வதற்கான முயற்சிகள் திரைமறைவில் நடைபெறக் கூடுமென்று அனுமானித்து மாநாட்டுத் தலைமையை நானே ஏற்றுக் கொண்டேன். அப்போது சட்ட விரோதமாக்கப்பட்டிருந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் திரு.என். அண்ணாமலைப் பிள்ளையவர்கள் மாநாட்டில் தேசியக் கொடியை ஏற்றிவைக்க இசைந்திருந்தார்.

டாக்டர் ப.சுப்பராயன், திருமதி. இராதாபாய் சுப்பராயன், திரு.கே. வெங்கடசாமி நாயுடு, திரு.த. செங்கல்வராயன், திரு.பு.ம. ஆதிகேசவலு நாயகர் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். மாநாடு எதிர்பார்த்ததை விடவும் வெற்றிகரமாக நடைபெற்றது. சங்கத்துக்கும் கமிட்டிக்கும் இடையிலான போராட்டச் சூழ்நிலையில் இம்மாநாடு நடைபெற்றதால், அரசியல் ஆர்வமிக்க பொது மக்கள் மிகவும் பரபரப்படைந்தவர்களாகப் பல்லாயிரக் கணக்கில் வந்து குழுமினர். காங்கிரஸ் சங்கத்தின் குழப்பப் படையினராக விளங்கிய இளைஞர் சிலரும் மாநாட்டில் குழுமிய மக்கள் மத்தியிலே திட்டுத் திட்டாக — பயிரில் கலந்த களைபோல — கலந்திருந்தனர்.

குழப்பத்தை எதிர்பார்த்து நானும் எதையும் சமாளிக்கக் கூடிய வகையில் பலமான ஏற்பாடுகள் செய்திருந்தேன். உடல் நலமின்மை காரணமாக திரு.என். அண்ணாமலைப் பிள்ளை மாநாட்டிற்கு வரவில்லை. இருப்பினும் தனது உரையை எழுதித் தன் மகன் திரு.காசிலிங்கம் கையில் கொடுத்தனுப்பி, அதனை மாநாட்டில் படிக்கச் செய்தார்.

காங்கிரசிற்கு விரோதியாகிவிட்ட ராஜாஜியவர்கள் எனது அழைப்பின்பேரில் காங்கிரஸ் சார்பில் நடத்தப்பட்ட இந்த மாநாட்டிலே முதன் முதலாகப் பேசினார். அவரது பேச்சு மிகவும் அடக்க உணர்ச்சியும், அன்புணர்ச்சியும் கொண்டதாக இருந்தது. காங்கிரஸ்காரர்கள் தன்பால் கொண்ட வெறுப்புணர்ச் சியைவிட்டு, அவர்களும் தன்பால் அன்புகாட்டும் வகையில் பேசினார். சுருங்கச் சொன்னால், தண்டையார்பேட்டை மாநாட்டை ஒரு வாய்ப்பாகக் கொண்டு திரும்பவும் காங்கிரசிற் குள் பிரவேசிப்பதற்குத் தமக்குள்ள விருப்பத்தை வெளிப்படை யாகவே தெரிவித்தார்.

குருக்ஷேத்திர பூமியிலே...

மாநாட்டு மேடையைக் குருக்ஷேத்திர பூமியில் நிற்கும் தேர் போலவும், அதில் அமர்ந்திருக்கும் மாநாட்டுத் தலைவனாகிய என்னை கண்ணன் போலவும் கற்பனை செய்து, கண்ணனிடம் உபதேசம் பெறும் பார்த்தனாகத் தம்மை வருணித்து, எனது தூண்டுதலால்தான் தமக்கு காங்கிரசுக்குத் திரும்புவதற்குத் துணி வேற்பட்டதாகக் கூறி, என்னைப் பெருமைப்படுத்தினார்.

ராஜாஜியின் பேச்சு முடியும் தருவாயில் — குழப்பம் செய்வதற்கென்றே திட்டமிட்டு வந்திருந்த — காங்கிரஸ் சங்கத் தைச் சார்ந்த இளைஞர்கள் அவருக்கு எதிராகக் கோஷங்கள் எழுப்பினர். அது இரண்டு நிமிடங்களுக்கு மேல் நீடிக்க வில்லை. குழப்பத்தை நாங்கள் வெற்றிகரமாகச் சமாளித்தோம்.

இந்த மாநாட்டிற்கு ராஜாஜி அழைக்கப்பட்டதைக் கண் டித்து சென்னை ஜில்லா காங்கிரஸ் சங்கத்தின் சார்பில் நகரின் பல பகுதிகளிலும் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

திரு. சி.என். முத்துரங்க முதலியார் அந்தக் கூட்டங்களை நடத்துவதற்குப் பொறுப்பேற்றார். அவர்தானே சென்னை ஜில்லா காங்கிரஸ் சங்கத்தின் தலைவர். அதன் விளைவாக, ராஜாஜியும் திரு. முதலியாரும் பரஸ்பரம் பத்திரிகை வாயிலாக அறிக்கைப் போர் நடத்தினர். ராஜாஜி காங்கிரசுக்குத் திரும்புவது நாட்டிற்கு ஏற்பட்டுள்ள ஒரு பேரபாயமாக திரு. முதலியார் கருதினார். அதை வெளிப்படையாகவும் கூறினார்.

சென்னையிலுள்ள ஆங்கில - தமிழ் தினசரிப் பத்திரிகைகளும் 'கல்கி' தவிர மற்ற வார இதழ்களும் இந்தப் போராட்டத்தின் ஆரம்பத்தில் எந்தப் பக்கமும் சாராமல் நடுநிலைமை வகித்தன. 'கல்கி' மட்டும் ராஜாஜி காங்கிரசுக்குத் திரும்புவதை மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் விதித்த தடையைத் தகர்த்து, காங்கிரசின் ஆக்க வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் நான் சென்னை ஜில்லா காங்கிரஸ் செயலாளன் என்ற முறையில் செயல்படத் தொடங்கினேன் என்பதனை ஏற்கனவே கூறியிருக்கிறேன். ஆனால், நான் எதிர்பாராத வகையில் காங்கிரஸ்காரர்களுக்குள் பூசலும் போராட்டமும் உருவாகிவிட்டதறிந்து உள்ளூர வருந்தினேன். ஆயினும், காங்கிரஸ் சங்கத்தினரின் கோஷ்டி மனப்பான்மை நாட்டுக்கு நன்மை தரக்கூடிய தல்லவென்று நான் கருதியதால், அவர்களின் முயற்சிகளை முறியடிப்பதிலே முழு மூச்சுடன் ஈடுபட்டேன்.

சங்கத்திற்கு எதிரான பிரச்சாரக் கூட்டங்களை வட சென்னை அளவிலேயே நான் நிறுத்திக் கொண்டேன். வட சென்னை காங்கிரஸ்காரர்களிலே ஒன்றிருவரைத் தவிர வி.என். குமாரசாமித் தம்பதிகளுள்பட எல்லோருமே எனது முயற்சிக்கு ஆதரவாக இருந்தனர். அவர்கள் வீட்டிலேயே வடசென்னைக் காங்கிரஸ்காரர்கள் கூட்டமொன்றை நடத்தி அதில் ராஜாஜியும் கலந்து கொள்ளும்படி செய்தேன்.

திரு.சி.என். முத்துரங்க முதலியார், தம்மால் துவக்கப் பட்ட காங்கிரஸ் சங்கத்தின் கிளைகள் தமிழ்நாடு முழுவதிலும் பரவச் செய்ய முனைந்தார். சென்னை ஜில்லா காங்கிரஸ் சங்கம்

அமைத்த நிலையிலிருந்து முன்னேறித் ''தமிழ்நாடு காங்கிரஸ் சங்கம்'' ஒன்றை அமைத்தார். பல்வேறு மாவட்டங்களிலும் கிளைச் சங்கங்களைத் தோற்றுவித்தார்.

''சங்கமா, கமிட்டியா?'' என்ற நூல்கூட திரு.ஏ.கே. சந்திர சேகர முதலியாரால் எழுதப்பட்டு வெளிவந்தது. இந்த நூல் சங்கத்திற்கு ஆதரவானதுதான்.

அரியலூர் மாநாடு

தமிழ்நாடு காங்கிரஸ் சங்கத்தின் மாநாடொன்றைத் திருச்சி மாவட்டத்தில் உள்ள அரியலூரிலே நடத்தினர் சங்கக் கோஷ்டியினர். திரு.எஸ்.கே. பட்டீல், அந்த மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். அந்த மாநாட்டில் கலந்துகொள்ள எனக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. நானும் கலந்து கொண்டேன்.

அரியலூர் மாநாட்டிலே நான் ஒரு தீர்மானம் கொண்டு சென்றேன். காங்கிரஸ் மகாசபையின் ஆதரவைக் கொண்டு இந்தி மொழியை வளர்க்கவும், இந்தி வழங்காத பிரதேசத்தில் அம்மொழியைப் பரப்பவும் ''இந்திப் பிரச்சார சபை'' இருந்து வருவதுபோல, தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பாடுபடுவதற் கெனத் ''தமிழ் வளர்ச்சிக் கழகம்'' என்ற அமைப்பொன்றைத் தமிழ்நாடு காங்கிரசின் சார்பில் நிறுவ வேண்டுமென்று எனது தீர்மானம் கோரியது. தீர்மானத்தைத் தமிழில் தயாரித்து, அரியலூர் மாநாட்டுத் தலைவர் திரு.எஸ்.கே. பட்டீல் அவர் களிடம் கொடுத்தேன். அவருக்குத் தமிழ் தெரியாததால் தம் அருகிலிருந்த தமிழ்நாடு காங்கிரஸ் சங்கத் தலைவர் திரு. முத்துரங்க முதலியாரிடம் கொடுத்தார். திரு. முதலியார், அந்தத் தீர்மானத்தைப் படித்துவிட்டு மிகுந்த கோபத்துடன் என்னைப் பார்த்து, ''நீங்கள் காங்கிரசைத் திராவிடர் கழகமாக்கி விடப் பார்க்கிறீர்களா? அதற்கு நான் ஒருபோதும் இடந்தர மாட்டேன்'' என்று மிகுந்த படபடப்புடன் கூறினார்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவது காங்கிர சின் கடமை அல்லவென்றும், அது திராவிடர் கழகத்திற்கே உரிய கடமை என்றும் அந்நாளில் காங்கிரஸ்காரர்கள் நம்பினர்.

அந்த நம்பிக்கையைத்தான் பிரதிபலித்தார் திரு. முத்துரங்க முதலியார். காந்தியடிகள் தந்த ஆக்கப் பணிகள் பதினான்கில் தாய் மொழி வளர்ச்சிக்குப் பாடுபடுவதும் ஒன்றாகும். இதனை மறந்தே போயினர் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள். தமிழ் நாடு காங்கிரசின் இந்தத் தமிழ் விரோதப் போக்கு இன்றளவும் மாறாத நிலையைத்தான் பார்க்கிறோம்.

தேச விடுதலைப் போரில் ஈடுபட்டு, எண்ணற்ற இடுக்கண் களை அனுபவித்தபோதுகூடத் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்ட புனித வரலாறு காங்கிரஸ்காரர்களுக்கு உண்டு. தமிழ் வளர்த்த தேசியவாதிகளின் பாரம்பரியத்திலிருந்து வந்தவர்கள் தமிழ் நாடு காங்கிரஸ்காரர்கள். அரியலூர் மாநாட்டில் யான் கொடுத்த மொழித் தீர்மானத்தை விவாதத்திற்கு விடக்கூட மறுத்துவிட் டார் திரு. முத்துரங்க முதலியார். அவரது போக்கு எனக்கு மிகுந்த வேதனையைத் தந்தது. நான் விரும்பியிருந்தால் அரிய லூர் மாநாட்டைப் போர்க்களமாக மாற்றியிருக்க முடியும். அதற்கு எனக்கு ஆதரவு தரக்கூடியவர்களும் மாநாட்டில் கணிச மான எண்ணிக்கையிலிருந்தனர். ஆயினும் சோதனை மிக்க ஒரு சூழ்நிலையில் அந்த மாநாடு நடைபெற்றதால், அதன் சிறப்பைக் குறைக்க விரும்பாமல் அமைதியைக் கடைப்பிடித்தேன்.

தலைவர்கள் விடுதலை

அரியலூர் மாநாடு முடிந்து சென்னை திரும்பியதும் அம் மாநாட்டில் நான் கொடுத்த தீர்மானத்தை விவாதத்திற்குக்கூட எடுத்துக்கொள்ள மறுத்த திரு. முத்துரங்க முதலியாரின் எதேச் சாதிகாரத்தைக் கண்டித்துச் செய்தித் தாள்களில் அறிக்கை விடுத்தேன். ‘இந்து’, ‘சுதேசமித்திரன்’ பத்திரிகைகள் எனது அறிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தன. அரிய லூர் மாநாட்டிற்குப் பின்னரேனும் தமிழ் வளர்க்கும் பணியில் தமிழ்நாடு காங்கிரஸ்காரர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று எனது அறிக்கையில் கேட்டுக் கொண்டிருந்தேன்.

இந்த நிலையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மனமாற்றம் காரணமாக நாடு முழுவதிலும் காங்கிரஸ் பெருந்தலைவர்கள்

உள்ளிட்ட அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப் பட்டனர். தமிழ்நாட்டிலும் த.நா.கா. தலைவர் திரு.கு. காமராசர் உட்பட அரசியல் கைதிகள் அனைவரும் ஏககாலத்தில் விடு தலை பெற்றனர்.

தாம் விடுதலையான ஆரம்ப காலத்தில் சங்கம் — கமிட் டிப் பூசலிலே கலந்து கொள்ளாமல் காமராசர் ஒதுங்கியிருந்தார். பூசல் வளரவிடாமல் தடுக்கவும் அவர் முயலவில்லை. அவ ருக்கே உள்ள வழக்கத்தை ஒட்டி நிலைமையை முற்றவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

திரு.கு. காமராசர், தம்முடைய மெய்யன்பர்களான திரு.கே. சடகோபன், திரு.என். அண்ணாமலைப் பிள்ளை ஆகியவர்களுடன் தினமும் கலந்து உரையாடுவார். அந்த நேரங்களில் நானும் உடனிருப்பது வழக்கம். அவருடைய மெய்யன்பர்கள் சங்கத்தாருக்கு எதிராகத்தான் இருந்தனர். எங் களுடன் உரையாடும்போது, சங்கத்திற்கு எதிராகத்தான் இருக்கி றார் என்று நாங்கள் நம்பும் வகையில் திரு. காமராசர் நடந்து கொண்டார். அந்த நாட்களிலே திரு.சி.என். முத்துரங்க முதலி யார், திரு. மீ.பக்தவத்சல முதலியார் ஆகியோரையும் காமராசர் அடிக்கடி சந்தித்து வந்தார். அவர்களும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரின் ஆதரவு தங்களுக்குத்தான் இருக்கிறதென்று கூறிக் கொண்டனர்.

காங்கிரஸ் தலைவர்கள் விடுதலையான சில நாட்களுக்குப் பின்னர், காங்கிரஸ் மகாசபை மீதிருந்த தடையும் அகற்றப்பட் டது. இதனால், எதிர்பாராத வகையில் ''சங்கமா, கமிட்டியா?'' என்ற சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி விழுந்தது. காங்கிரஸ் கமிட்டி கள் வேலை செய்யத் தொடங்கிவிட்டன அல்லவா! இதனால், சென்னை ஜில்லாவைப் பொறுத்தவரை எனது கை வலுப்பெற் றது. திரு. முத்துரங்க முதலியாரால் தொடங்கப்பட்ட காங்கிரஸ் சங்கம் 'இயற்கை'யெய்தியது. என்னைச் செயலாளனாகக் கொண்டியங்கிய சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் மூலம் நான் முன்னைவிடவும் தீவிரமாகச் செயல்படத் தொடங் கினேன். திரு. சத்தியமூர்த்தியின் மறைவால் தலைவர் பதவி

காலியாக இருந்ததால் நானே தலைவனாகவும் செயல்பட வேண்டியவனானேன்.

காமராசரும் எதிரியானார்!

திரு. காமராசர் மதில்மேல் பூனையாக இருந்து கொண்டிருந்த நேரத்திலே அவருக்கு அதிர்ச்சி தரும் செய்தி ஒன்று பத்திரிகைகளில் வெளியானது. ராஜாஜி அவர்களைக் காங்கிரஸ் மகாசபையின் அங்கத்தினராகத் தாம் சேர்த்துக் கொண்டு விட்டதாக அப்போது காங்கிரஸ் மகாசபையின் தலைவராக இருந்த மவுலானா அபுல்கலாம் ஆசாத் ஒரு அறிவிப்பு கொடுத்திருந்தார். இந்த அறிவிப்பைக் கண்ட பின்னரும் மதில்மேல் பூனையாக இருக்க திரு. காமராசரால் முடியவில்லை. ஆகவே, ''ராஜாஜி புறக்கடை வழியாகக் காங்கிரசில் பிரவேசிக்கிறார்'' என்று கண்டனமும் கேலியும் கலந்த வகையில் பத்திரிகை நிருபர்களிடம் கருத்து தெரிவித்தார். இதனால், ஏற்கனவே ராஜாஜி காங்கிரசுக்குள் பிரவேசிப்பது பற்றித் தோன்றியிருந்த சர்ச்சையிலே ஒரு திருப்பம் ஏற்பட்டது. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ராஜாஜிக்கு ஆதரவாக இல்லை என்பது வெளிப்பட்டது.

திரு. காமராசர், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகிய தம்மைப் புறக்கணித்து, அகில இந்தியத் தலைவர் மூலமாக ராஜாஜி காங்கிரசிலே பிரவேசித்தது தம்மை அவமதித்ததாகுமென்று கூறினார். ஆனால், திரு. காமராசரின் சீற்றத்திற்கு இதுமட்டுமே காரணமன்று. ராஜாஜி காங்கிரசில் பிரவேசிப்பதை உண்மையிலேயே திரு. காமராசர் விரும்பவில்லை. அமராவதிச் சிறைச்சாலையிலேயே கிளிக் கோஷ்டி ஒன்று முன்கூட்டியே உருவாகியிருந்ததல்லவா! அந்தக் கோஷ்டியின் திட்டத்தை நிறைவேற்றித் தரும் பொறுப்பு முழுவதும் திரு.காமராசர் மீதே சுமந்திருந்தது. அதனாலும் ராஜாஜியின் பிரவேசத்தை வரவேற்கக் கூடிய நிலையில் திரு. காமராசர் இல்லை. ''சங்கமா கமிட்டியா?'' என்னும் வினா மறைந்து ''ராஜாஜி வேண்டுமா, வேண்டாமா?'' என்ற வினா பிறந்தது. ''வேண்டும்'' என்ற கோஷ்டிக்கு நான்தான் தளபதியாக்கப்பட்டேன். ''வேண்டாம்'' என்ற கோஷ்டிக்கு திரு. காமராசர் தளபதியாகிவிட்டார்.

அந்நாளில் ராஜாஜிக்கு 'ஆகஸ்டுத் துரோகி' என்று பட்டம் சூட்டப் பெற்றது. அவர் காங்கிரசுக்குத் திரும்புவதை எதிர்ப்ப தற்கு அதுவே காரணமாக்கப்பட்டது. ராஜாஜி காங்கிரசில் பிரவேசித்தது குறித்து காங்கிரஸ்காரர்களிடையே எழுந்த கருத் துப்போர் மிகவும் கடுமையானதாக இருந்தது. ஒரு கட்டத்திலே தமிழ்நாட்டுப் பத்திரிகைகளெல்லாம் ராஜாஜிக்கு எதிரான கோஷ்டிக்கு ஆதரவளிக்கத் தொடங்கின.

பாகிஸ்தான் திட்டத்திற்கு ராஜாஜி ஆதரவு காட்டியதும், ஆகஸ்டுக் கிளர்ச்சியைக் கண்டித்து அவ்வப்போது அறிக்கை விட்டதும் அவரை எதிர்ப்போருக்குப் பயன்படும் கருவிகளாகி விட்டன. திரு. ரா. கிருஷ்ணமூர்த்தியை ஆசிரியராகக் கொண்ட 'கல்கி' பத்திரிகை ஒன்றுதான் ராஜாஜிக்கு ஆதரவாக முழங்கி யது.

நான் ராஜாஜியை ஆதரிக்கும் கோஷ்டியில் முதலிடம் பெற்றேன் என்றாலும் எனது நிலைமை தரும சங்கடமானதாக இருந்தது. ராஜாஜியை ஆதரிப்போரிலே பெரும்பாலோர் மேட்டுக்குடி மக்களாக இருந்தனர். அவர்களில் காங்கிரஸ்காரர் களாக இருந்தோர், ஆகஸ்டுக் கிளர்ச்சியில் கலந்து கொள்ளாத வர்கள் என்ற பழியைச் சுமந்து கொண்டிருந்தனர். எனது நிலைமை இவர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும்.

நான் மிகவும் சாதாரணக் குடியைச் சேர்ந்தவன். தொண்டர் களுள் தொண்டனாக இருந்து தொண்டாற்றி வந்தவன். ஆகவே, மேட்டுக் குடியினரின் ஆதிக்கத்திற்கு ஆதரவு காட்ட வேண்டிய கடமை எனக்கில்லை. அதனால், சொந்தத்தில் எனக்கெவ்வித பயனுமில்லை. அத்துடன் ஆகஸ்டுக் கிளர்ச்சியில் சிறை புகுந்து எமபுரியின் நுழைவாயிலுக்கே சென்று, அதிர்ஷ்டவசத்தால் திரும்பியவன். ஆகவே, ஆகஸ்டுக் கிளர்ச்சிக்கு எதிராகவோ, அதற்குப் புறம்பாகவோ இருந்தவர்களின் அணியிலே நான் சேர்ந்திருக்கக் கொஞ்சங்கூட நியாயமில்லை. ஆயினும், நான் வேறொரு கோணத்தில் நின்று நிலைமையை ஆராய்ந்து பார்த்து ராஜாஜியின் ஆதரவாளனானேன்.

ராஜாஜியின் காங்கிரஸ் பிரவேசத்தால் சாதி ரீதியில் ஏற்ப டக்கூடிய லாப நஷ்டங்களை நான் சிந்தித்துப் பார்க்கவில்லை. தமிழ்நாட்டின் மொத்த நலன்களையும் பாரதப் பெருநாட்டின் வருங்கால நன்மைகளையும் நினைவில் கொண்டே ராஜாஜியை ஆதரிப்பதென்ற முடிவுக்கு நான் வந்தேன்.

சிறை வாழ்க்கையிலே புதிய தமிழகம் காண வேண்டு மென்ற பேராவல் ஏற்பட்டிருந்ததனை முன்னரே கூறியிருக் கிறேன். அந்தக் குறிக்கோளுக்கு வெற்றி தேடத் தமிழ் நாட்டிற் குத் திறமைமிக்க ராஜாஜியின் தலைமை தேவை என்று நான் உண்மையாகவே நம்பினேன். எனது நம்பிக்கையிலே பிழையி ருக்கலாம். ஆனால், நான் ராஜாஜியை ஆதரித்ததற்கு எனக் குள்ள 'தமிழன்' என்னும் இன உணர்ச்சிதான் காரணம்.

அந்நாளில், காங்கிரசுக்கு உள்ளேயும் சரி; வெளியேயும் சரி; இன உணர்ச்சியும் மாநில உணர்ச்சியுமுடைய ஆந்திரர்கள் தமிழினத்தின் தலைமைக்கு ஒரு அறைகூவலாக இருந்தனர். ஜஸ்டிஸ் கட்சியிலேயும் ஆந்திரரே ஆதிக்கம் செலுத்தினர். அந்தக் கட்சியின் செல்வாக்கிலிருந்த அமைச்சரவையிலேயும் வழிவழி ஆந்திரர்களே முதல்வர்களாக வந்து கொண்டிருந்த னர். ஆம்; பனகல் அரசர், முனுசாமி நாயுடு, பொப்பிலி அரசர், சர்.கே.வி. ரெட்டி, நாயுடு ஆகியோரே அடுத்தடுத்து முதன் மந்திரியாக வந்தனர்.

ஜஸ்டிஸ் கட்சியிலே அறிவும் ஆற்றலும் செல்வமும், செல்வாக்குமுடைய டாக்டர் ஆர்.கே. சண்முகம், பன்னீர்செல் வம், செட்டிநாட்டரசர் முத்தையா செட்டியார் ஆகிய தமிழர்கள் இருந்தும் அவர்கள் அக்கட்சியின் தலைவர்களாக வர முடிய வில்லை. முதல்வர்களாக வரவும் முடிந்ததில்லை.

ஜஸ்டிஸ் கட்சி வீழ்ச்சியுற்று 1937-இல் காங்கிரஸ் கட்சி மகத்தான வெற்றி அடைந்தபோதும் ஆந்திரரின் செல்வாக்கு சென்னை மாநிலச் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சிக்குள்ளே வலுத் திருந்தது. ஆந்திரர்கள் மொழிவழி இன உணர்ச்சியுடையவர் கள். அதனால் தலைமைப் போட்டியிலே தமிழ்நாட்டவருக்கு எதிராக ஆந்திர நாட்டவரையே ஆதரிக்கும் கட்டுப்பாடு

அவர்களுக்கு இருந்தது. தமிழ்நாட்டவரை அப்படிச் சொல்வதற் கில்லை. சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியிலுள்ள தமிழ்நாட்டு உறுப்பினர்களிலே 'இரு மொழியாளர்' மிகுந்திருந்தனர். தமிழையே தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கும் 'தமிழன்' என்ற இன உணர்ச்சி இல்லாமலிருந்தது. இதனால் 1937-இல் காங்கிரஸ் கட்சி அதிகாரத்திற்கு வர இருந்தபோது, முதன் மந்திரி பதவிக்கு ஆந்திரருக்கும் தமிழருக்குமிடையே கடுமை யான போட்டி உருவாகி இருந்தது. நல்ல வேளையாக, ராஜாஜி அவர்கள் திடீரென பார்லிமெண்டரி அரங்கில் பிரவேசித்ததால், தமிழர் கை வலுத்தது. அன்று அவருக்கிருந்த அகில இந்தியச் செல்வாக்கு காரணமாக, சட்டமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவ ராக அவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஆந்திரர் களும் ஒத்துழைத்தனர். ஆயினும், ராஜாஜி முதலமைச்சரான பின்னர், ஆந்திர இனவெறி அவருக்கு எதிராக வேலை செய் தது. 'அரவ ராஜாஜி சாவால, ஆந்திர ராஜ்யம் காவால' என்றுகூட ஆந்திர நாட்டிலே ஒரு சாரார் கோஷித்தனர். ஆந்திர ரின் கட்டுப்பாடான உட்பகையைத் தாங்கிக் கொண்டுதான் ராஜாஜி முதலமைச்சர் பதவியில் காலந்தள்ள வேண்டியிருந்தது.

இந்த அனுபவங்களை எல்லாம் நினைவில் கொண்டு தமிழ்நாட்டின் நலன்களைக் கருதி நான் ராஜாஜியின் காங்கிரஸ் பிரவேசத்தை ஆதரித்தேன். திரு. காமராசருக்கு எதிராக அல்ல. ஆம்; ராஜாஜியை நான் ஆதரித்தது கோஷ்டி மனப்பான்மையா லல்ல; தமிழ் இன உணர்ச்சியால் என்பதனை மீண்டுமொரு முறை வலியுறுத்திக் கூறுகிறேன்.

தமிழ்நாடு காங்கிரஸ் திரு. காமராசர் தலைமையில் இயங் குவதிலே எனக்கொன்றும் நஷ்டமில்லை. ஆனால், ஆந்திரரும் கேரளரும் திரு.காமராசரின் தலைமையைப் பலவீனமானதாகக் கருதி, அவரை மையமாக வைத்து, தமிழ்நாடு உள்ளிட்ட பழைய சென்னை மாநிலம் முழுவதும் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்ற உள்நோக்குடன்தான் அமராவதிச் சிறையிலே கிளிக் கோஷ்டியை உருவாக்கினர். அதனை உடனிருந்தே நான் அறிந்தேனாதலால், ராஜாஜியைத் திரும்பவும் காங்கிரசுக்குள்

கொண்டு வருவதன் மூலம் தமிழ்நாட்டின் தனி நலன்களைக் காக்க முயன்றேன்.

ஆந்திர — கேரள ஆதிக்கத்திலிருந்து தமிழ்நாட்டின் தனி நலன்களைக் காக்கக் கூடிய திறன் திரு. காமராசருக்கு இருக்கிற தென்று அப்போது நான் நம்பவில்லை. அது அவரால் இயலாத காரியமென்றும் நான் உறுதியாக நம்பினேன். தமிழ்நாட்டின் தலைமையை அவர் ஏகபோகமாக எடுத்துக் கொள்ள முயல்வது அவர் தன்னைப்பற்றி அதிகமாக நினைத்துக் கொண்டதன் விளைவென்றும் நான் கருதினேன்.

'கல்கி'யில் வெளியான கட்டுரை

ராஜாஜியின் காங்கிரஸ் பிரவேசத்தை நான் ஆதரிப்பதற் கான காரணங்களை விளக்கி, 'கல்கி' 14.10.45 இதழிலே ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அதனைக் கூட்டல் குறைத்தலின்றி இங்கு அப்படியே தருகின்றேன்:

''தமிழ்நாட்டின் தனிப்பெருந் தலைவரான ஸ்ரீ ச.இராச கோபாலாச்சாரியார் மீண்டும் காங்கிரசில் சேர்ந்து விட் டார். இதை ஆத்திரங்கொண்டு எதிர்க்கின்றனர் சிலர்; ஆனந்தத்துடன் வரவேற்கின்றனர் பலர். நான் வரவேற்கும் கோஷ்டியைச் சேர்ந்தவன்.

''தலைமை தாங்கும் தகுதியானது கடையில் வாங்கும் சரக்கல்ல; பிறர் கொடுத்துப் பெறுவதுமன்று. ஒழுக்கம், அறிவு, ஆற்றல், ஆண்மை, தியாக உணர்வு ஆகிய அனைத்தும் ஒருங்கே பெற்றவர்களே தலைமைப் பதவிக் குத் தகுதியுடையவர்கள்.

''தமிழ்நாட்டில் மேற்சொன்ன தகுதி வாய்ந்த ஒருவர் உண்டென்றால், அவர் ராஜாஜிதான். அவரைப் போன்ற தலைவர்களை நாம் நினைத்த மாத்திரத்தில் சிருஷ்டித்து விட முடியாது. பல தலைமுறைகளுக்கு ஒரு தடவைதான் அத்தகையவர்கள் தோன்றுகின்றனர். காலம் அவர்களை நமக்குத் தருகின்றது.

''எனவே, ராஜாஜி நம் தமிழகத்தில் தோன்றி, நம்மிடையே வாழ்வது, இந்தத் தலைமுறையினரான நமது புண்ணிய வசமேயாகும். மீண்டும் பெறுதற்கரிய அத்தகைய தலைவரை நாம் மனமார வரவேற்று அவரது சேவையை நாட்டின் நன்மைக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமேயொழிய, பாழாக்கக் கூடாது. அப்படிச் செய்வது மனித சமுதாயத்துக்குத் தீங்கு செய்வதாகும். அன்று ராஜாஜி காங்கிரசை விட்டு விலகி நின்றதற்குக் காரணமென்ன?

''ஹிந்து — முஸ்லிம் ஒற்றுமையை முன்னிட்டு மாகாணங்களின் சுயநிர்ணய உரிமையைக் காங்கிரஸ் அங்கீகரிக்க வேண்டும்'' என்று ராஜாஜி கூறினார்.

''அதை அப்போது காங்கிரஸ் நிராகரித்தது. தமது கொள்கையைப் பிரசாரம் செய்யும் உரிமைக்காக ராஜாஜி காங்கிரசை விட்டு விலகினார்.

''இன்று சுயநிர்ணயக் கோரிக்கையைக் காந்தியடிகள் ஏற்றுக் கொண்டதோடு, ''ராஜாஜி இந்தக் கொள்கையிலிருந்து மாறிவிட்டாலும் நான் மாறப் போவதில்லை'' என்று கூறிவிட்டார்.

''பம்பாய் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலும் மேற்படி சுயநிர்ணயக் கொள்கை ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது.

''இந்நிலையில் காங்கிரசுக்கும் நமது தலைவர் ராஜாஜிக்கும் இருந்து வந்த வேற்றுமை நீங்கி ஒற்றுமை ஏற்பட்டு விட்டது. அதனால்தான் அவர் மீண்டும் காங்கிரசில் சேர்ந்து கொண்டார்.

''ராஜாஜி காங்கிரசுக்குப் புதியவரல்ல. அவர் கட்டி வைத்த மாளிகைதான் தமிழ்நாட்டுக் காங்கிரஸ். அதில் அவர் பிரவேசிப்பதைத் தடுப்பது நீதியற்ற செயல்; மன்னிக்க முடியாத குற்றம்.

''இன்று நாம் காணும் ராஜாஜி குற்றவாளியல்ல; தீர்க்கதரிசி. இந்நிலையில் நாம் அவரை நிராகரித்தால் அது அவரது தீர்க்க தரிசனத்திற்கு விதித்த தண்டனையாகும்.

''இதெல்லாம் ஒருபுறமிருக்க, எதிர்காலத்தில் நம் முன்னர் மகத்தான பிரச்சினைகள் நிற்கின்றன. ராஜாஜியின் றித் தேர்தலை நடத்தி விடலாம். புதிதாக மந்திரி சபையும் அமைத்துவிடலாம். அந்த மந்திரி சபை பின்கண்ட காரியங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறதென்பதனை நாம் மறக்கக் கூடாது.

''யுத்த சேவையிலிருந்து திரும்பும் ஐந்து லட்சம் சென்னை மாகாணவாசிகளுக்கு வேலை தருவது. யுத்தம் முடிந்ததன் விளைவாகப் பல்வேறு தொழிற்சாலைகளிலிருந்து தள்ளப்படும் லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு நிவாரணம் தேடுவது.

''யுத்தப் பிற்காலப் புனருத்தாரணத் திட்டத்தைத் திறம்பட நடத்தல்; நாட்டின் முக்கிய தொழில்களையெல்லாம் தேசிய மயமாக்குதல்.

''மேற்சொன்ன காரியங்கள் காலாகாலத்தில் திறமையுடன் ஊழலின்றி உறுதியுடன் நடைபெறாவிடில் நாட்டில் பஞ்சந்தோன்றி உள்நாட்டுக் குழப்பம் ஏற்படலாம்.

''இது தவிர, தமிழ்நாட்டின் தனிப் பிரச்சினைகள் பல உண்டு. விரைவில் மொழி வாரியாக மாகாணங்கள் பிரிக்கப்படும் அல்லவா? அப்போது தமிழ்நாட்டின் எல்லை வடவேங்கடம் முதல் தென்குமரி வரை என்று முடிவு செய்யப்பட வேண்டும். தமிழர் மீண்டும் பழைய புகழுடன் புது வாழ்வெய்தத் திட்டம் போட வேண்டும்.

''இத்தகைய பெரும் காரியங்களை ராஜாஜியைப் போல் திறம்பட நிறைவேற்ற வல்லவர் தற்சமயம் வேறு யாரும் இல்லையென்று துணிந்து கூறுவேன்.

''சோதனைக்குரிய இச்சந்தர்ப்பத்தில் அகில இந்திய புகழ் வாய்ந்த ஒரு தமிழ்நாட்டுத் தலைவரை நிராகரிக்க முயல்வது தவறு. தமிழர்களின் எதிர்காலத்தைப் பாழாக்கவோ அல்லது தமிழர்களின் எதிர்கால நலன்களைப் பிறரிடம் பலி கொடுக்கவோ எவருக்கும் உரிமை கிடையாது. அதைத் தமிழர்கள் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

''ராஜாஜியை காங்கிரஸ் தலைவர் வரவேற்கிறார். ''நீங்கள் பிரிந்திருந்த காலம் எங்களுக்கு வேதனையை அளித்தது. அதை மறந்து விடுவோம்'' என்று ராஜாஜிக்கு எழுதினார் ஆசாத்.

''அவரது பொன் மொழியைப் பின்பற்றுவோம். மற்றவர்களின் புன்மொழியைப் புறக்கணிப்போம்.''

இராஜாஜியை எதிர்க்கும் கோஷ்டியாருக்குத் 'தமிழ்நாடு' காங்கிரசின் ஆதரவு இருந்ததுபோல, அவரை ஆதரிக்கும் கோஷ்டியாருக்கு எனது செல்வாக்கிலிருந்த சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி பயன்பட்டது. ஆம்; இராஜாஜி — காமராஜ் தலைமைப் போட்டியானது சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குமான நேரடிப் போராட்டமாக உருவானது. மாகாணக் கமிட்டியின் பலத்துக்கு அதன் ஒரு கிளையான ஜில்லாக் கமிட்டி ஈடாகாதெனினும், எனது திறமைமிக்க உழைப்பின் காரணமாக, மாகாணக் கமிட்டிக்கு ஈடுகொடுக்க சென்னை ஜில்லா கமிட்டியால் ஓரளவு முடிந்தது. சென்னை நகரில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பிலும், அதற்குப் போட்டியாகச் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் சார்பிலும் ராஜாஜியை எதிர்த்தும் ஆதரித்தும் பெரிய பெரிய கூட்டங்கள் நடத்தப்பட்டன. ராஜாஜியை ஆதரிக்கும் கூட்டங்களிலே அவருக்கு அடுத்தபடியாக பிரச்சார பீரங்கி நானாகத்தான் இருந்தேன்.

ராஜாஜியுடன் சுற்றுலா

1945 ஜூன் 3-ஆம் தேதியன்று 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பெருமுயற்சி காரணமாக எட்டயபுரத்தில் பாரதியார் நினைவு மண்டப அடிக்கல் நாட்டு விழா மிகுந்த

சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது. ராஜாஜிதான் அடிக்கல் நாட்டினார். இந்த விழா முடிந்ததும் எட்டயபுரத்திலிருந்து புறப்பட்டு, திருநெல்வேலி மாவட்டத்தில் ராஜாஜியும், நானும் சுற்றுலாச் செயதோம். தூத்துக்குடி, ஆறுமுகநேரி, காயல்பட்டினம், ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, கல்லிடைக்குறிச்சி ஆகிய ஊர்களில் பொதுக்கூட்டங்களில் பேசினோம்.

கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவராகத் திகழ்ந்த அகில இந்தியப் பெருந்தலைவர் ராஜாஜிக்கு அன்றிருந்த சூழ்நிலையில் எனது கூட்டு இன்றியமையாது தேவைப்பட்டது. நான் ஒருவன் மட்டுமே தனித் துணைவனாகச் சுற்றுலா முழுவதிலும் அவருடன் இருந்தேன். பெருந்தலைவரான ராஜாஜியுடன் நான் சுற்றுலாச் செய்தது இதுதான் முதல் முறை. ஆனால், இதுவே கடைசி முறையாக இருந்து விடவில்லை என்பதனை நாடு அறியுமல்லவா!

இந்தச் சுற்றுலாவின் முடிவில் நாங்கள் திருக்குற்றாலம் சென்றோம். அங்கு ‘செட்டிநாடு மாளிகை’யில் முகாம் செய்தோம். ராஜாஜி திருக்குற்றாலத்தில் தங்கினாரென்றால், ரசிகமணி டி.கே.சி. அவர்களின் விருந்தினராக இருந்தார் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை அல்லவா! ராஜாஜியின் மதிப்புமிக்க தோழமையும், குற்றாலம் அருவிக் குளியலும், செவிக்கும் வயிற்றுக்கும் ரசிகமணி தந்த விருந்துகளும் யான் பெற்ற புதிய அனுபவங்களாகும். குற்றாலம் சாரலை அனுபவித்துக் கொண்டிருந்த தருணத்தில், ஸ்டாபோர்டு கிரிப்ஸ் என்பார் பிரிட்டிஷ் அரசின் தூதுவராக இந்தியா வந்தார். அவருடன் காங்கிரஸ் மேலிடத் தலைவர்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள ராஜாஜி புதுடில்லிக்கு அழைக்கப்பட்டார். அதனால், எங்களுடைய குற்றாலம் வாழ்க்கை ஒரு வாரத்திற்குமேல் நீடிக்கவில்லை. கிரிப்ஸ் தூது வெற்றி பெறவில்லை என்றாலும், அவருடன் நடந்த பேச்சு வார்த்தைகளில் காங்கிரஸ் மேலிடத் தலைவர்களின் விருப்பப்படி ராஜாஜி கலந்து கொண்டதால், அவருடைய கோஷ்டிக்கு தமிழ் மக்களிடையே மதிப்பு உயர்ந்தது.

அடுத்து நடந்த இன்னொரு நிகழ்ச்சியும் ராஜாஜி ஆதரவாளர்களின் செல்வாக்கை வளர்த்தது. காங்கிரசில் ராஜாஜி சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார் என்று காங்கிரஸ் தலைவர் மௌலானா ஆசாத் பத்திரிகை நிருபர்களுக்கு அறிவித்தது வெறும் சம்பிரதாய ரீதியில்தான்! காங்கிரஸ் அங்கத்தினர் சேர்க்கும் பணி காங்கிரஸ் விதிமுறைகளின்படி தொடங்கப் படாமலிருந்த நிலையில்தான் ஆசாத்தின் அறிக்கை வெளியானது. அதனால், ராஜாஜியை எதிர்ப்பவர்களின் செயல் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு விரோதமானதென்ற நிலை இருக்கவில்லை. இந்தச் சிக்கலைத் தவிர்ப்பதற்கு நான் முயற்சி எடுத்தேன். காங்கிரஸ் தலைவர் ஆசாத்துக்கு 27.9.45-இல் நான் ஒரு தந்தி கொடுத்தேன். அதில், ராஜாஜியைக் காங்கிரஸ் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ள அவரது அனுமதியைக் கோரியிருந்தேன். அவரும் பதில் தந்தியில் அனுமதி கொடுத்தார். இந்த நிகழ்ச்சியும் ராஜாஜி ஆதரவாளர்களுக்கு காங்கிரஸ் மனமுள்ள மக்களுடைய ஆதரவைப் பெருக்கியது.

திருச்செங்கோடு தேர்தலும் 'கல்கி' தலையங்கமும்

இந்த நேரத்தில்தான் திருச்செங்கோட்டிலிருந்து தமிழ் மாகாண காங்கிரஸ் பொதுக்குழு உறுப்பினராக ராஜாஜி தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்வினை நான்கூடச் செய்தி இதழ்களின் மூலமாகத்தான் முதன் முதலாக அறிந்தேன். இதற்கான ஏற்பாடுகள் திரைமறைவிலேதான் நடந்தன. கோஷ்டிப் பூசல் என்று வந்துவிட்டால், ஒளிந்து மறைந்து செயல்படுவதும் தேவைப்பட்டுவிடும் போலும்!

திருச்செங்கோட்டிலிருந்து தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டியின் பொதுக்குழு உறுப்பினராக ராஜாஜி தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தியைப் பத்திரிகைகளில் படித்து, திரு. காமராசர் அதிர்ச்சியடைந்து விட்டார்! ஆம்; த.நா.கா. தலைவருக்குத் தெரியாமலே — அவரது அனுமதியைப் பெறாமலே — காலியாக இருந்த மாகாண காங்கிரஸ் உறுப்பினர் பதவி பூர்த்தி செய்யப்பட்டுவிட்டது. ராஜாஜியின் நியமனப் பத்திரம் தாக்கல், அது பற்றிய பரிசீலனை நியமனப் பத்திரம் செல்லுபடியென அறிவித்

தல், போட்டியின்றித் தேர்வு பெற்றாரென பிரகடனம் செய்தல் ஆகிய எல்லாம் நடந்திருக்கின்றன என்ற விஷயம் அவ்வளவும் நடந்து முடிந்த பின்னர்தான் — அப்போதும் பத்திரிகைகள் வாயிலாகத்தான் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவருக்குத் தெரிந்த தென்றால், அவர் அதிர்ச்சி அடைந்தது இயற்கைதானே!

திரு. காமராசர், திருச்செங்கோடு தேர்தல் செல்லத்தக்க தல்லவென்று த.நா.கா.க. தலைவர் என்ற முறையிலே அதிகார பூர்வமாகப் பிரகடனம் செய்தார். அதன்பேரில், வாதப் பிரதிவா தங்கள் எழுந்தன. திருச்செங்கோடு தேர்தல் செல்லாதென்று சொல்ல த.நா.கா. தலைவருக்கு அதிகாரமில்லையென்றார், த.நா.கா. செயலாளரான திருவண்ணாமலை என். அண்ணாம லைப் பிள்ளை. ஆம்; தலைவர் ஒரு முகாமிலே; செயலாளர் ஒரு முகாமிலே!

திரு.ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், தமது 'கல்கி' வார இதழிலே ''பெரிய பதவியும் சின்ன புத்தியும்'' என்ற தலைப் பிட்டு, திரு. காமராசரின் ராஜாஜி எதிர்ப்பைக் கண்டித்துக் காரசாரமாக ஒரு தலையங்கம் எழுதியிருந்தார். அதனால் தமிழ்நாட்டின் பல ஊர்களிலே திரு. காமராஜ் கோஷ்டியினர் 'கல்கி' இதழ்களைப் பொது இடங்களில் தீயிட்டுக் கொளுத்தி னர்.

திருச்செங்கோடு தேர்தல், 'கல்கி'யில் வெளியான தலை யங்கம் இரண்டுமாகச் சேர்ந்து, காமராசர் கோஷ்டியைப் பலப்ப டுத்தி விட்டன. எதிர்பாராத வகையில் ராஜாஜியின் கோஷ்டிக் குச் சிறிது பலவீனம் ஏற்பட்டுவிட்டது.

திருச்செங்கோடு தேர்தலைத் திரைமறைவில் நடத்தியவர் தாலுகா காங்கிரஸ் செயலாளர் திரு. இராமதுரை ஆவார். அவர், சாதியால் அந்தணர். ராஜாஜியின் பரமபக்தர். இராஜாஜி திருச்செங்கோடு ஆசிரமத்திலிருந்தபோது, அவரது அணுக்கத் தொண்டராக இருந்து பணிபுரிந்தவர். இராமதுரை நடத்திய தேர்தலும், 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி எழுதிய தலையங்கமும் ராஜாஜியே எதிர்பார்த்திராத வகையில் அவர் சம்பந்தப்பட்ட பிரச்சினையை 'வகுப்புவாதத் திசைக்குத் திருப்பி விட்டன.

திரு. காமராசர் கோஷ்டியார் சிறிதளவேனும் வலுப் பெற்றார் களென்றால், அதற்கு வகுப்புவாத ரீதியிலான எழுச்சிதான் காரணம் எனலாம்.

'கூட்டுத் தலைமை!'

திருச்செங்கோடு தேர்தல் நடத்தப்பட்ட முறையும், 'கல்கி' தலையங்கத்திற்குத் தரப்பட்ட தலைப்பும் எனக்கும் பிடிக்கவில் லையென்றாலும், அதிருப்தியை நான் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. எப்போதும்போல ராஜாஜியை உறுதியாக ஆதரித்தேன். ஆம்; கொள்கை ரீதியான வேற்றுமை எழாத நேரத்தில், நடைமுறையிலேற்படும் சிறு குறைபாடுகளைக் கருதித் தடம் புரள்வது அரசியல் ஒழுக்கமாகாதென்பது அப் போதே எனக்குத் தெளிவாகத் தெரிந்திருந்தது. ஆகவே, மனக் குழப்பமின்றி எனது போக்கிலே செயல்பட்டு வந்தேன்.

திருச்செங்கோடு தேர்தல் 'கல்கி' தலையங்கம் ஆகியவை காரணமாக ஆத்திரமடைந்த திரு. காமராசரும், அவரது கோஷ் டியாரும் தமிழ் மாகாணக் கமிட்டியைக் கூட்டி, ராஜாஜிக்கு எதிராகத் தீர்மானம் போடத் தயாராயினர்.

திருப்பரங்குன்றம் பாசறை!

1945 அக்டோபர் இறுதியில் மதுரை நகரையடுத்துள்ள திருப்பரங்குன்றத்திலே தமிழ் மாகாண காங்கிரஸ் கூட்டம் நடைபெறுமென காமராசரால் அறிவிக்கப்பட்டது. அதற்கு முதல்நாளில் தமிழ்நாடு காங்கிரஸ் ஊழியர் மாநாட்டைத் திருப் பரங்குன்றத்திலேயே நடத்த திரு. காமராசர் கோஷ்டியின் தீவிரவாதிகள் ஏற்பாடு செய்தனர். அதுவரை ராஜாஜி — காமராசர் கோஷ்டிப் பூசல் பொதுமக்கள் கவனத்தைக் கவர வில்லை. ஆனால், திருச்செங்கோடு தேர்தல் — 'கல்கி' தலை யங்கத்திற்குப் பின்னர், பிரச்சினையில் சூடு பிடிக்கவே, பொது மக்களுடைய கவனம் காங்கிரஸ் கோஷ்டிச் சண்டை பக்கம் திரும்பியது.

கோஷ்டிகளின் சுற்றுலா

இரு சாராரும் திருப்பரங்குன்றம் கூட்டத்திற்கு முன்பே தமிழ்நாடு முழுவதிலும் சுற்றுலாச் செய்யப் புறப்பட்டாக வேண் டிய அளவுக்குச் சந்தர்ப்பம் நிர்ப்பந்தித்தது. தமிழ்நாடு காங்கி ரஸ் சார்பில் திரு. காமராசர், திரு.சி.என். முத்துரங்க முதலி யார், திரு.மீ. பக்தவத்சலனார், திருமதி ருக்மணி லட்சுமிபதி ஆகியோர் சுற்றுலாக் கிளம்பினர். திரு. ஓ.பி. இராமசாமி ரெட்டியாரும், திரு.டி.எஸ். அவினாசிலிங்கம் செட்டியாரும் இந்தச் சுற்றுலாவில் கலந்து கொண்டதாக நினைவிலிருக்கிறது. அவர்கள் திரு. காமராசர் கோஷ்டியில்தான் இருந்தனர்.

திரு.சி.என். முத்துரங்க முதலியார், ஓ.பி. இராமசாமி ரெட்டியார் போன்ற தலைவர்கள் அன்று திரு. காமராசரை முன்னே நிறுத்தி, அவரைப் பின்பற்றினார்களென்றால், அதற் குக் காரணம், தங்கள் தலைவராக அவரை ஏற்றுக் கொண்ட தன்று; அவர், தற்செயலாகத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்ததுதான். மற்றும் திரு. காமராசர் ''கூட்டுத் தலைமை''த் தத்துவத்தை வற்புறுத்தினார். அது அவர்களைக்

கவர்ந்தது. திரு. காமராசர் கூட்டுத் தலைமை தத்துவத்தை வற்புறுத்தியது, தமக்கிருந்த பலவீனத்தால். ராஜாஜியின் தலைமையை வீழ்த்துவதிலே வெற்றி கண்டுவிட்டால், அதற்கப்புறம் மற்றவர்களையும் புறக்கணித்து, தாமே தமிழகத்தின் தலைவராகிவிட முடியும் என்பதிலே அவருக்கு நம்பிக்கையிருந்தது. இந்த உள்நோக்குடன் அவர் வெளிக்குக் கூட்டுத் தலைமையை வற்புறுத்தியதோடு, தம்மினும் மூத்தவர்களைக் கூட்டு சேர்த்துக் கொண்டு தமிழ்நாட்டில் சுற்றுலாச் செய்தார்.

ராஜாஜியும் சுற்றுலாக் கிளம்பினார். நானும் துணைக்குச் சென்றேன். அக்டோபர் 2ஆம் தேதி சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி சார்பில் சென்னை நகரில் காந்தி பிறந்த நாளைக் கொண்டாடிவிட்டு, மறுநாள் இரவு சுற்றுலாப் புறப்பட்டோம். எங்களுக்கு முன்னே காமராஜ் குழுவினர் சென்றனர். அவர்களுக்குப் பின்னே — அவர்கள் சென்றவிடந்தோறும் — நாங்களிருவரும் சென்றோம். மாவட்டம் மாவட்டமாக — சிறிது இடைவெளி விட்டு — சுற்றுலாச் செய்தோம். திரு.சி.பி. சுப்பையா, திரு. என்.அண்ணாமலைப் பிள்ளை, திரு. சா.கணேசன், திரு.ஆரணி சீனிவாசராவ், திரு. பெருமாள்சாமி ரெட்டி ஆகியோர் தத்தம் மாவட்ட அளவில் நடந்த கூட்டங்களில் எங்களோடு கலந்து கொண்டனர். ஒவ்வொரு கூட்டத்திலும் மக்கள் வெள்ளம்போல் திரண்டார்கள். காங்கிரஸ் இளைஞர்களிலே பெரும்பாலோர் — குறிப்பாக, ஆகஸ்டுக் கிளர்ச்சியில் சிறை புகுந்தோரில் பெரும்பாலோர் ராஜாஜிக்கு எதிராக இருந்தனர். கொஞ்சம் வயது முதிர்ந்த காங்கிரஸ்காரர்களும், பொது மக்களில் கணிசமான ஒரு சாராரும் ராஜாஜிக்கு ஆதரவாக இருந்தனர். காங்கிரஸ் பிளவுபடுவதை அவர்கள் விரும்பவில்லை. திரு. காமராசரின் தலைமை முழுமையானது என்றும் அவர்கள் கருதவில்லை.

இந்தச் சுற்றுலா வெற்றிபெற அப்போது காங்கிரசிலிருந்த கம்யூனிஸ்டுகள் பெரிதும் உதவி புரிந்தனர். ராஜாஜிக்கும் கம்யூனிஸ்டுகளுக்குமிடையே தொடர்புண்டாக்கும் பாலமாக நான் பயன்பட்டேன். கம்யூனிஸ்டுகளான திரு.பி.இராமமூர்த்தி, திரு.கே. முத்தையா ஆகிய இருவரும் தந்த ஒத்துழைப்பை நான் என்றும் மறப்பதற்கில்லை.

இந்தச் சுற்றுலாவின் முடிவிலே இரு தரப்பினரும் திருப்ப ரங்குன்றத்தில் சந்திக்கலாயினர்.

என்னைக் கொல்ல முயற்சி!

திருப்பரங்குன்றம் காங்கிரஸ் ஊழியர் மாநாடு ராஜாஜிக்கு எதிரான இளைஞர்களின் பாசறையாக இருக்குமென்பது முன் கூட்டியே எங்களுக்குத் தெரிந்திருந்தது. ஆம்; அப்போது திரு. காமராசருக்கு ஆதரவாக — அவரது படையின் தளபதியாக — இருந்த பசும்பொன் முத்துராமலிங்க தேவர், பாண்டி நாட்டு மறவர்களிடையே தமக்குள்ள செல்வாக்கு முழுவதையும் ராஜாஜிக்கு எதிராகப் பயன்படுத்தி, திருப்பரங்குன்றத்தைக் குருக்ஷேத்திரப் பூமியாக்கிவிட முயன்றார். திரு. காமராசரிடம் அவருக்குப் பக்தியில்லை. ஆனால், ராஜாஜியிடம் பகை இருந் தது. ராஜாஜியைப் பிற்போக்காளராகக் கருதினாராதலால், அவ ரது தலைமையை எதிர்த்துப் போராடுவது முற்போக்காளர் கடமை என்று தேவர் எண்ணினார். அன்று திரு.உ. முத்துராம லிங்கத் தேவர் மட்டும் திரு. காமராசருக்கு ஆதரவாக இருந்தில் லையானால், திரு. காமராசர் கோஷ்டி வலுவிழந்திருக்கும்.

அக்டோபர் 30,31 தேதிகளில் திருப்பரங்குன்றத்தில் கூட விருந்த தமிழ்நாடு காங்கிரஸ் ஊழியர் மாநாட்டிலும், தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டியிலும் கலந்து கொள்ள இருதரப்புக் காங்கிரஸ்காரர்களும் ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்னதாகவே மதுரை மாநகரிலும், திருப்பரங்குன்றத்திலும் பாசறை அமைத்த னர்.

எனது வடசென்னைத் தொண்டர் குழாத்தோடு இரண்டு நாளைக்கு முன்னதாக மதுரை சேர்ந்தேன். மதுரையில் திரு.ஏ. வைத்தியநாதய்யர் வீடுதான் ராஜாஜியை ஆதரிப்போ ரின் முகாமாக இருந்தது. நானும் அங்குதான் தங்கினேன். ஆனால், நான் மதுரை சேர்ந்த 2 மணி நேரத்திற்குள் போலீஸ் டி.எஸ்.பி. திரு.வைத்தியநாத ஐயர் வீட்டில் என்னையும் ஐய ரையும் சந்தித்து, என் உயிருக்கு ஆபத்து ஏற்படலாமென்றும், நான் போலீசார் பாதுகாப்பில் இருப்பது நல்லதென்றும் காதோடு காது வைத்துக் கூறினார்.

போலீஸ் அதிகாரி, ஐயரின் இல்லத்தில் திரண்டுள்ள காங்கிரஸ்காரர்களிலேயே சந்தேகிக்கத் தக்கவர்கள் இருக்கக் கூடுமென்றும், ஆகவே, நான் அவர் வீட்டில் தங்குவது நல்லதல்லவென்றும் என்னிடம் கூறி, என்னை எச்சரித்தார். எனக்கு ஆட்சேபணை இல்லையானால், மதுரை நகரிலுள்ள ஒரு போலீஸ் ஸ்டேஷனில் என்னை வைத்திருந்து, நான் கலந்து கொள்ள வேண்டிய நிகழ்ச்சிகளுக்கு மட்டும் என்னைப் பந்தோபஸ்துடன் அனுப்பி வைப்பதாகவும் அதிகாரி என்னிடம் கூறினார்.

மதுரையில் ஏ.வைத்தியநாதய்யரின் இல்லத்தில் நான் தங்குவதால் எனது உயிருக்கு அபாயம் நேரிடலாமென்று போலீஸ் அதிகாரி அறிவித்ததைப் புறக்கணிக்க எனக்குத் துணிவில்லை. மற்றும், போலீசாரின் பாதுகாப்பில் என்னை வைத்துக் கொள்வது நல்லதென்று ஐயரவர்களும் ஆலோசனை கூறினார். ஆனால், ஐயர் வீட்டிலும் தங்காமல், போலீஸ் ஸ்டேஷனிலும் அடைக்கலம் புகாமல் மூன்றாவது இடத்தைத் தேர்ந்தெடுத்தேன். மதுரை திரு.கே.டி.கே. தங்கமணி அவர்கள் வீட்டில் தங்கியிருக்க முடிவு செய்தேன். இந்த ஏற்பாடு ஐயருக்கும் போலீஸ் அதிகாரிக்கும் தவிர வேறு யாருக்கும் தெரியாதபடி பாதுகாக்கப்பட்டது.

பொதுக்கூட்டத்தில் போக்கிரித்தனம்

அன்று மாலை நகரில் பொதுக்கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. அந்தக் கூட்டத்தில் நானும் பேசுவதாக விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. நான் பேசுவதற்காகவே அந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது எனலாம். நகரில் பெருத்த பரபரப்பிருந்ததால், பொதுக் கூட்டத்தில் பதினாயிரக்கணக்கில் மக்கள் திரண்டனர். சரியாக இரவு 7.30 மணிக்கு நான் வடசென்னை காங்கிரஸ் சகாக்கள் இருவர் பாதுகாப்புடன் பொதுக்கூட்ட மேடையை அடைந்தேன். என்னை அதிக நேரம் மேடையில் வைத்திருப்பதால் எனக்கு அபாயம் நேரலாமென்று கருதிய கூட்டத் தலைவர் ஏ.வைத்தியநாத ஐயர், நான் மேடையை அடைந்ததுமே என்னைப் பேச அனுமதித்து விட்டார். கூட்டத்

தில் அமைதி நிலவியது என்றாலும், போலீஸ் பந்தோபஸ்து பலமாக இருந்தது. நான் மேடையை அடைந்ததும் இரகசியப் போலீசார் என்னைச் சூழ்ந்ததை நான் கவனிக்க முடிந்தது.

நான் பேசத் தொடங்கிய ஐந்தே நிமிஷங்களுக்குள் கலவரத்திற்குத் திட்டமிட்டிருந்தவர்கள் செய்திருந்த ஏற்பாட்டின்படி ஒலிபெருக்கி வேலை செய்வது தடைப்பட்டது. அதைப் பற்றிக் கவலைப்படாமல் நான் உரத்த குரலில் தொடர்ந்து பேசினேன். திடீரென அந்தப் பெரிய கூட்டத்தின் ஒருபுறத்தில் சிலர் என்னையும் ராஜாஜியையும் இழிசொற்களால் கண்டிக்கும் கோஷங்களை எழுப்பிக் கொண்டு மேடையை நோக்கி வரலாயினர். அதனைத் தொடர்ந்து 'ஐயோ! கத்தி கத்தி' என்று கூட்டத்திலிருந்த பொதுமக்களில் சிலர் அலறினர். மேடையை நோக்கி வந்தவர்களின் கைகளில் தடி, கத்தி போன்ற ஆயுதங்கள் இருந்தன.

மேடையிலிருந்த மதுரை வைத்தியநாதய்யர், முனகால பட்டாபிராமய்யர், மட்டப்பாறை வெங்கடராமய்யர் ஆகியோர் அமைதி நிலவச் செய்ய எவ்வளவோ முயன்றும் கலவரம் அதிகரித்ததேயன்றி, அடங்கவில்லை. கலவரம் ஆரம்பித்ததும் பேச்சை ஒன்றிரு வினாடிகள் நிறுத்திவிட்டு மேடையில் நின்று கொண்டிருந்தேன். ஆயுதந் தாங்கிய போக்கிரிக் கூட்டம் மேடையை நெருங்கிக் கொண்டிருந்ததால், தற்காப்புணர்ச்சியுடன் உரத்த குரலெழுப்பி, மிகுந்த உணர்ச்சியோடு திரும்பவும் பேசத் தொடங்கினேன். அப்போது நான் கூறிய கருத்துகளில் எனது நினைவிலுள்ளவற்றை இங்குத் தருகிறேன்:

''என்னைக் கொல்ல விரும்பும் நண்பர்களுக்கு நான் செய்த தீமை ஒன்றுமில்லை. ராஜாஜியின் தலைமை நீடிக்க வேண்டுமென்று சொல்லுவது கொலை செய்யப்படுவதற்கான பாவமா?

''மதுரை மாநகர், மாவீரக் கண்ணகியான பெண்ணொருத்தி கொடுங்கோலரசை எதிர்த்துப் போராடிய புனிதப் பதியாகும். இந்த வீர மண்ணிலே, யாரோ சில காலிகள் மேடையை நோக்கி என்னைத் தாக்க வருவதுகண்டு பொது

மக்கள் அலறிக் கூச்சலிட்டு ஓடுவது குறித்து நான் வெட்கப் படுகிறேன். கூட்டத்தினராகிய நீங்கள் ஒன்று திரண்டு மேடையை நோக்கிவரும் போக்கிரிகளுக்குப் பாடம் கற் பிக்க முனைந்தால், அவர்கள் எம்மாத்திரம்? விரட்டுங்கள் போக்கிரிக் கூட்டத்தை!''

இப்படி, ஒன்றிரு வினாடி மக்களுக்கு உணர்ச்சியூட்டும் வகையில் நான் பேசியதுமே மேடையின் அருகிலிருந்த பொது மக்களில் ஒரு சாரார் நான் எதிர்பார்த்தபடி மேடையை நோக்கி வந்து கொண்டிருந்த காலிகளைத் தடுத்து நிறுத்தினர். அதனால், குழப்பம் அதிகரித்தது. கூட்டத்தை மேலும் நடத்துவது சாத்திய மில்லாமற் போயிற்று. ஆயினும், நான் அபாயத்திலிருந்து தப்பினேன். அத்துடன் கூட்டத்திலிருந்தும் வெளியேறிச் சென்று விட்டேன். கூட்டம் முடிந்து இரண்டு மணி நேரம் வரை என்னைக் காணாமல் நான் சார்ந்திருந்த கோஷ்டியினரும் நகரப் போலீஸ் அதிகாரிகளும் கவலையுற்றனர். அதற்குள் மதுரையில் தஞ்சை திரு. பூவராக ஐயங்காரின் உறவினர் ஒருவருடைய இல்லத்தில் நான் தங்கியிருப்பதை திரு.ஏ. வைத்தியநாதய்யருக் குத் தொலைபேசி மூலம் அறிவித்தேன்.

ராஜாஜியின் வருகை

பொதுக்கூட்டத்தில் ஆத்திரமடைந்த மக்களில் சிலர் என் னைத் தாக்க வந்தவர்களில் சிலரைக் காயப்படுத்தி விட்டதாக வும், அவர்கள் நகர ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்பதாக வும் மறுநாள் காலை, திரு.சி.பா. ஆதித்தனாரின் மதுரை ''தந்தி''ப் பத்திரிகையில் பிரதான தலைப்புகளுடன் செய்தி வெளியானது. அப்போது 'தந்தி'ப் பத்திரிகை ராஜாஜி கோஷ்டி யினருக்கு எதிராக இருந்தது.

எனது கூட்டத்தில் கலவரம் நடந்த மறுநாள் காலையில் ராஜாஜி அவர்கள் மதுரை வந்து சேர்ந்தார். அவரை வரவேற்ப தற்காக யாரிடமும் முன்கூட்டி அறிவிக்காமல் நான் ரயில்வரும் நேரத்திற்குச் சரியாக ஸ்டேஷனை அடைந்தேன். அங்கும் ஒரு கூட்டம் கறுப்புக் கொடிகளைக் காட்டி 'ராஜாஜி திரும்பிப் போ!'

என்று கூச்சலிட்டு அமளி செய்தது. என்னையும் வாயார வசைபாடியது. ராஜாஜியை அழைத்துக் கொண்டு திரு. ஏ. வைத்தியநாதய்யர் இல்லம் சென்றேன். டாக்டர் டி.எஸ். எஸ். ராசன், நாடிமுத்துப் பிள்ளை, திருச்சி ரத்தினவேலுத் தேவர், நாகப்பட்டினம் மொகிதீன் மரைக்காயர் ஆகிய எங்கள் கோஷ்டியின் பிரபலஸ்தர்களும் அன்றே மதுரை வந்து சேர்ந்தனர்.

முற்பகலில் ராஜாஜியின் முன்னிலையில் எல்லோரும் கூடி மேற்கொண்டு செய்ய வேண்டியதைப் பற்றி திரு. வைத்திய நாதய்யர் இல்லத்தில் ஆலோசனை நடத்தினோம். ராஜாஜி திருச்செங்கோட்டிலிருந்து மாகாணக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தும், திருப்பரங்குன்றம் கூட்டத்தில் கலந்து கொள்ள அவருக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. அழைப்பின்றியே மாகாணக் கமிட்டிக் கூட்டத்தில் ராஜாஜி கலந்து கொள்ளலாமென்று எங்களில் ஒரு சாரார் கருதினர். ராஜாஜிக்குக் கூட ஓரளவு அந்த எண்ணமிருந்தது. ஆனால், நான் அதன் பின் விளைவுகளைக் கருதி அதனை ஆதரிக்க மறுத்தேன். ராஜாஜி மதுரையிலேயே இருக்கக் கூடாதென்றும் நான் கூறினேன். என் கருத்துப்படி ராஜாஜி திருக்குற்றாலம் செல்ல வேண்டுமென்று எங்கள் கோஷ்டிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. நான், டி.எஸ்.எஸ். ராஜன், ஏ.வைத்தியநாதய்யர், ரத்தினவேல் தேவர், நாடிமுத்துப் பிள்ளை, டாக்டர் ப.சுப்பராயன், மொகிதீன் மரைக்காயர் ஆகிய எழுவரும் ஒரு குழுவாக இருந்து ஆலோசித்துச் செயல்பட வேண்டுமென்று ராஜாஜி கூறினார்.

அன்று மாலை நகரில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக் கூட்டத்திலே ராஜாஜியும் நானும் சொற்பொழிவாற்றினோம். முதல் நாள் கூட்டம் குழப்பத்தில் முடியவே, இரண்டாவது நாள் கூட்டம் நகர மக்களின் மனத்தில் முக்கியத்துவம் பெற்றுவிட்டது. மக்கள் வெள்ளம்போல் கூடியிருந்தனர். அன்று நானும் ராஜாஜியும் தவிர வேறு யாரும் பேசியதாக நினைவில்லை. நான் முதலில் பேசியபோது, முந்திய நாள் கூட்டத்தில் குழப்பம் செய்தவர்களைக் கடுமையாகக் கண்டித்தேன். ராஜாஜியை

ராமனாகவும், என்னை ராமனுடைய கைக் கோதண்டத்தின் அம்பாகவும் வருணித்துக் கூறி எதிரிகளை எச்சரித்தேன்.

'வீர அபிமன்யு' என்றார் ராஜாஜி

எனக்குப் பின் பேசிய ராஜாஜியும் முந்திய நாள் கூட்டத்தில் குழப்பம் செய்தவர்களைக் கண்டித்தார். அவர் பேசியதை எனது நினைவிலுள்ளபடி இங்குத் தருகிறேன்:

> *''என் தலைமையை எதிர்ப்பவர்கள் என்னைவிட அதிகமாக கிராமணியாரையே தாக்குகிறார்கள். அதற்குக் காரணமுண்டு. கிராமணியார் வீரஅபிமன்யு போன்றவர். என்னால் உடைக்க முடியாத எதிரிகளின் வியூகத்தை உடைத்து அவர் என்னை உள்ளே அழைத்துச் செல்கிறார். அதனால், என்னை எதிர்ப்பவர்கள் அவர்மீது அதிகமாக ஆத்திரப்படுகிறார்கள். என்னைத்தான், 'ஆகஸ்டு துரோகி' என்கிறார்கள். கிராமணியார் ஆகஸ்டு தியாகியாயிற்றே! அவரது உடம்பே சொல்லுமே அவர் 'ஆகஸ்டு தியாகி' என்று!''*

இப்படி என்னைப் பற்றியே நெடுநேரம் பேசினார். அந்த அளவுக்கு எதிரிகள் என்மீது காட்டிய வஞ்சினம் அவர் மனதை உருக்கிவிட்டது. ராஜாஜி மட்டுமல்லாமல் அவர் கோஷ்டியிலிருந்த அனைவருமே எதிர்கோஷ்டியினர் எந்த அளவுக்கு என்னை வெறுத்தார்களோ அந்த அளவுக்கும் அதிகமாக என் மீது அன்பு செலுத்தினார்கள். ஆம்; திருப்பரங்குன்றம் 'நாடகத்'தில் என்னை வில்லனாகக் கருதினார் திரு. காமராசர். ஆனால், அவருடைய கோஷ்டியாரோ என்னையே கதாநாயகனாக்கிவிட்டார்கள்! மதுரைப் பொதுக் கூட்டத்தில் பேசிய மறுநாள் காலை, ராஜாஜி திருக்குற்றாலம் சென்றுவிட்டார். செல்லுங்கால், ஏ. வைத்தியநாத ஐயரையும் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜனையும் பார்த்து, ''கிராமணியாரை நான் திரும்பவும் உயிரோடு சந்திக்கச் செய்யும் பொறுப்பு உங்கள் கையிலிருக்கிறது'' என்று மிகவும் உணர்ச்சிப் பெருக்கோடு சொல்லிவிட்டுப் போனார். அத்துடன், ''எதையும் செய்வதற்கு முன்பு அவரைக் கலந்து கொள்ளுங்கள்'' என்றும் கூறிப் போனார்.

கையெழுத்து வேட்டை

ராஜாஜி சென்ற பிறகு திடீரென்று எனக்கு ஒரு குறுக்கு வழி தோன்றியது. திருப்பரங்குன்றத்தில் மறுநாளைக்கு மாகாணக் காங்கிரஸ் கமிட்டி கூடும் வரையில் காத்திராமல் மதுரையில் திரண்டுள்ள மாகாணக் கமிட்டி அங்கத்தினர்களிலே ஒவ்வொருவரையும் தனித்தனியே அணுகி, திருச்செங்கோடு தேர்தலுக்கு ஆதரவாக அவர்களுடைய கையெழுத்துக்களைப் பெறுவதென்பதே எனது யோசனை. காங்கிரசுக்குள் தோன்றும் கோஷ்டிப் பூசலிலே கையெழுத்து வேட்டையாடும் 'திருப்பணி 'யை முதன் முதலில் தொடங்கி வைத்தவன் நான்தானோ என்னவோ!

இதன்படி, கையெழுத்து வேட்டையில் வேறு சில சகாக்களைச் சேர்த்துக் கொண்டு இறங்கினேன். வியப்பென்னவென்றால், மாகாணக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களில் சரிபாதிக்கும் மேற்பட்டவர்களுடைய கை எழுத்தைப் பெற முடிந்தது தான். இதனை நானே எதிர்பார்க்கவில்லை. எங்கள் கோஷ்டியிலிருந்த செல்வாக்குமிக்க பிரமுகர்கள் பலரும் இந்தக் கையெழுத்து வேட்டையில் என்னோடு ஈடுபட்டனர். அன்றிரவு எட்டு மணிக்குத் திருப்பரங்குன்றத்தில் முகாம் செய்திருந்த திரு. காமராசரை அணுகி, திருச்செங்கோட்டிலிருந்து ராஜாஜி தேர்ந்தெடுக்கப்பட்டதை ஆதரித்துக் கை எழுத்துப் பெற்றிருந்த கடிதத்தை அவரிடம் கொடுத்தேன்.

அதுவரையில் நான் கை எழுத்து வேட்டையில் ஈடுபட்டிருந்தது அவருக்குத் தெரியாதென்பதை அப்போதுதான் உணர்ந்தேன். நான் கொடுத்த கையெழுத்துப் பட்டியலைப் பார்த்தவுடன், அவர் என்மீது மிகுந்த சீற்றம் காட்டினார். கொஞ்சம் துடுக்காகவும் ஏசினார். 'கலகக்காரன்' என்றும் என்னை வருணித்தார். அவ்வளவையும் பொறுத்துக் கொண்டு, கையெழுத்துப் பட்டியலை அவர் பெற்றுக் கொண்டதற்கு ரசீது தரும்படி அவரிடம் கோரினேன். முதலில் மறுத்துவிட்டு, பின்னர் ரசீது கொடுத்தார்.

அன்றிரவு முழுவதும் எனக்குத் தூக்கம் வரவில்லை. ஆம்; திருச்செங்கோடு தேர்தலுக்கு ஆதரவாக மாகாண காங்கிரஸ் கமிட்டி உறுப்பினரில் பெரும்பாலோருடைய கை எழுத்தைப் பெற்றுவிட்ட மகிழ்ச்சிதான். மகிழ்ச்சி மிகுதியாகி விட்டாலும் தூக்கம் வராதல்லவா! ஆனால், என் மகிழ்ச்சி இருபத்து நாலு மணி நேரம் கூட நீடிக்கவில்லை.

சதியிலே பிறந்த சமரசம்

திருச்செங்கோடு தேர்தலுக்கு ஆதரவாக மாகாண காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களில் பெரும்பாலோர் கையொப்பமிட்டிருப்பதை அறிந்த காமராசர், அதன் விளைவுகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகத் திரைமறைவில் தந்திரங்களைக் கையாண்டார்.

அக்டோபர் 30-ஆம் தேதி காலை தமிழ் மாகாணக் காங்கிரஸ் காரியக் கமிட்டி திருப்பரங்குன்றத்தில் கூடி, சில தீர்மானங்களை நிறைவேற்றி, அவற்றைப் பத்திரிகைகளுக்கு அனுப்பாமல் மறைத்து வைத்திருந்தது. நிருபர்கள் கேட்டதற்கு, ''காரியக் கமிட்டி சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. அவை, மாலை கூடும் மாகாணக் கமிட்டி முன் வைக்கப்படும்'' என்று மட்டும் கூறினார் திரு. காமராசர்.

''திருச்செங்கோடு தேர்தல்பற்றி ஏதேனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா?'' என்று நிருபர்கள் கேட்டதற்கு, ''இன்று மாலைவரை பொறுத்திருந்து பாருங்கள்''? என்று கூறி மழுப்பி விட்டார்.

ராஜாஜி கோஷ்டியினரான கே.சடகோபன், தூத்துக்குடி கிட்டு ஆகிய இருவரையும் தனியே அழைத்துப்போய் அவர்களிடம் காமராசர் இரகசியம் பேசினார். அதன் பின்னர்,

> *''ராஜாஜி காங்கிரசில் சேர்ந்ததை என் இரு கைகளையும் நீட்டிப் பெரு மகிழ்வுடன் வரவேற்பதாக மாகாண காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தில் — கூட்ட ஆரம்பத்திலேயே — நான் கூறிவிடுகிறேன். அத்துடன், வரப்போகும்*

பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் ராஜாஜி கலந்துகொள்ளப் படுவார் என்று உறுதி கூறுகிறேன். இரண்டு தரப்பிலும் கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகப் பற்றற்ற தீர்மானங்கள் வாபஸ் பெறப் பட வேண்டும். சச்சரவுக்கு முடிவுகட்டி, இரு தரப்பினரும் சமரசமாகப் போக இதுதான் வழி.''

என்ற கருத்தடங்கிய கடிதமொன்றை அவர்கள் கையில் கொடுத்து, திருக்குற்றாலத்தில் தங்கியிருந்த ராஜாஜியிடம் அவர்களைத் தூதனுப்பினார் காமராசர். அவர்கள் மதுரைக்குத் திரும்பும் வரையில் மாகாணக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் சில மணி நேரம் ஒத்திப் போடப்பட்டது.

எங்கள் கோஷ்டியிலேயே இருவர் எதிர்கோஷ்டித் தலைவரால் தூண்டப்பெற்று திருக்குற்றாலத்துக்குத் தூது சென்றது அவர்கள் திரும்பும் வரையில் எனக்குத் தெரியாது. அப்படித் தெரியாமலே வைத்திருக்க வேண்டுமென்பது காமராசரின் ஏற்பாடு. ஆனால், எங்கள் கோஷ்டியினரிலே திரு. வைத்தியநாதய்யருக்கு மட்டும் இது முன்னதாகவே தெரியுமென்பதைப் பிறகுதான் நான் அறிந்தேன்.

தன்னிடம் தூது வந்தவர்களிடம் ''இது கிராமணியாருக்குத் தெரியுமா? அவர் இதற்கு இசைவு தெரிவித்தாரா?'' என்று ராஜாஜி கேட்டதாகப் பின்னர் எனக்குத் தெரிய வந்தது. ஆனால், எனக்குத் தெரியாமல் இந்த ஏற்பாடு திரைமறைவில் நடக்கிறது என்பதைத் தூதுவரிடமிருந்து தெரிந்துகொண்ட பின்னரும் காமராசர் எழுதியிருந்த சமரசத் திட்டத்தை ராஜாஜி ஏற்றுக் கொண்டார்.

திருக்குற்றாலத்துக்குத் தூது சென்றவர்கள் மதுரை திரும்பிய பின்னர்தான், திரு. காமராசரால் பிரரேபிக்கப்பட்டு, ராஜாஜியால் ஆமோதிக்கப்பட்ட சமரசத் திட்டம் அவர்களால் என்னிடம் காட்டப்பட்டது. அதைப் பார்த்தபோது நான் ஆத்திரமடைந்ததோடு, அவமானமுமடைந்தேன். யாருக்காக என் உயிரையும் பணயம் வைத்து காமராசர் கோஷ்டியாருடன் நான் போராடிக் கொண்டிருந்தேனோ, அவரும் அவருடைய அந்த

ரங்க சகாக்களும் என்னைப் புறக்கணித்துவிட்டு எதிரியோடு சமரசம் செய்து கொண்டது என்னை வெட்கத்தில் ஆழ்த்தியது. அந்த சமரசம் நிலைக்காது; அதை ஏற்றுக் கொண்ட ராஜாஜி ஏமாற்றப்படுவார் என்பதை உணர்ந்தபோது என் வேதனை அதிகரித்தது.

மாற்றார் வியூகத்திற்குள் நுழைந்தேன்!

திருச்சி இரத்தினவேலுத் தேவர், நாடிமுத்துப் பிள்ளை, டாக்டர் ப.சுப்பராயன் போன்ற எங்கள் கோஷ்டிப் பிரமுகர்களுக்கும் சதியிலிருந்து பிறந்த சமரச ஏற்பாடு பிடிக்கவில்லை. அந்த ஏற்பாட்டை முறியடிப்பதற்கு அவர்கள் முனைந்தனர். அவர்கள் அளவுக்கு நான் ஆத்திரப்படவில்லை. ராஜாஜிக்கும் காமராசருக்குமிடையில் உண்மையிலேயே சமரசம் ஏற்படுமானால் அதனை மகிழ்ச்சியோடு வரவேற்கும் மனப்பான்மை எனக்கிருந்தது. ஆனால், திரு. காமராசர், தனக்கு ஏற்படவிருந்த தோல்வியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே இந்த சமரச நாடகத்தை நடத்துகிறார் என்று நான் உறுதியாகக் கருதினேன். அதனால் சமரச ஏற்பாட்டுக்கு நான் எதிராகவே இருந்தேன்.

போலியான சமரச ஏற்பாடு பற்றிய செய்தி தெரிந்ததுமே ராஜாஜி கோஷ்டியிலே அரைவேக்காடுகளாக இருந்தவர்களெல்லாம் பூரிப்படைந்தனர். ஆனால், என்னைப்போன்று நினைத்தவர்களெல்லாம் சமரச ஏற்பாட்டை உடைக்க வேண்டுமென்பதிலே உறுதி காட்டினர். ஆயினும், எங்கள் கோஷ்டியினரிடையே பிளவு ஏற்படாதபடி அனைவரையும் ஒன்றுபடுத்தி அவர்களோடு நான் மதுரையிலிருந்து திருப்பரங்குன்றம் சென்றேன். ஆம்; மாற்றார் அமைத்திருந்த பயங்கர வியூகத்திற்குள் நுழைந்தேன். மாகாண கமிட்டி கூடவிருந்த கட்டிடத்துக்குச் சில பர்லாங்குகள் நடந்துதான் செல்ல வேண்டியிருந்தது. செல்லும் வழியில் இருபுறமும் தொண்டர்கள் என்னும் பெயரில் திரு. காமராசர் கோஷ்டியைச் சேர்ந்த எதற்கும் துணிந்த ஆட்கள் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தனர்.

நான் நடந்து வருவதைக் கண்டவுடன், அவர்கள் அடைந்த பரபரப்பும் ஆவேசமும் உண்மையிலேயே என்னை அச்சுறுத்துவதாக இருந்தன. எனக்குத் துணையாக அச்சமென்பதே அறியாதவர்களான மட்டப்பாறை வெங்கடராமய்யரும், திருச்சி ரத்தினவேல் தேவரும், வேறு சிலரும் வந்தனர்.

அவர்களெல்லாம் என்னைப் பாதுகாத்து வந்தும் வழி நெடுக மாற்றார் பொழிந்த வசைமாரியில் நனைந்துகொண்டே சென்றேன். பிராம்மணத் துவேஷத்தையே கொள்கையாகக் கொண்டு அப்போது வளர்ந்து வந்த சுயமரியாதைக்காகரர்கள் மத்தியிலே ஒரு வைதிகப் பிராம்மணர் சிக்கிக் கொண்டால் என்ன பாடுபடுவாரோ, அதைவிட மோசமான நிலையைக் காங்கிரஸ்காரர்கள் மத்தியில் நான் அடைந்தேன். அன்று என் காதில் விழுந்த இழிமொழிகளை இன்று நினைத்தாலும் என் மனம் வேதனைப்படுகிறது. இவ்வளவும் ராஜாஜிக்காகத்தான்!

உடலுக்கு எந்தக் கேடுமின்றி மாகாணக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும் கட்டிடத்திற்குள் சென்றுவிட்டேன். அப்போது மாகாணக் கமிட்டி கூடுவதற்கு அரைமணி நேர அவகாசம் இருந்தது. திரு. காமராசர் தம்முடைய ஆலோசகர்களோடு ‘தர்பாரி’ல் இருந்தார்.

காமராசரின் கோபம்!

நான் அவரையணுகி ராஜாஜிக்கும் அவருக்கும் ஏற்பட்ட சமரச உடன்படிக்கை பற்றிப் பேச வேண்டுமென்று கூறி, அவரைத் தனியே அழைத்தேன். முதலில் அவர் என்மீது சீறி விழுந்தார். பின்னர் என்னுடன் பேச இணங்கினார். காமராசர் — ராஜாஜி ஒப்பந்தத்திலுள்ள ‘‘இரு தரப்பிலும் தரப்பட்டுள்ள உத்தியோகப் பற்றற்ற தீர்மானங்கள் வாபஸ் பெறப்பட வேண்டும்’’ என்னும் பகுதியைச் சுட்டிக்காட்டி, அதனை ராஜாஜி கோஷ்டியினர் ஏற்க வேண்டுமானால், அன்று காலை தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி நிறைவேற்றிய உத்தியோகச் சார்புள்ள தீர்மானங்களிலே திருச்செங்கோடு தேர்தல் பற்றிய தீர்மானமும் உண்டா என்பது தெரிய வேண்டும் என்று கேட்டேன்..

அவ்வளவுதான்! திரும்பவும் என்மீது சீறி விழுந்து, ''நீ தான் கலகம் செய்கிறாய்!'' என்று என்மேல் குற்றம் சாட்டினார். அதையும் பொறுத்துக் கொண்டு எனது வினாவுக்கு விடையளிக் குமாறு அவரை மீண்டும் வற்புறுத்தினேன். என்னுடனிருந்த டாக்டர் ப.சுப்பராயன், காங்கிரஸ் காரியக் கமிட்டி நிறைவேற் றிய தீர்மானங்களிலே திருச்செங்கோடு தேர்தல் செல்லாது என்னும் தீர்மானம் இருக்குமானால், சமரச உடன்படிக்கையை நாங்கள் ஏற்கமாட்டோம் என்று உறுதியாகக் கூறினார்.

அதற்கு மேலும் மழுப்ப முடியாதவராகி, ''திருச்செங் கோடு தேர்தல் செல்லாது என்று காரியக் கமிட்டி தீர்மானித்து விட்டது. அந்தத் தீர்மானம், மாகாணக் கமிட்டியின் முன்பு வரும்'' என்று மிகுந்த அலட்சியத்துடன் கூறினார். இதற்குப் பின் மாகாணக் கமிட்டிக் கூட்டத்தைப் போர்க்களமாக்குவதற்கு நானும் ராஜாஜி கோஷ்டியினரும் தயாராகிவிட்டோம்!

பகைவர் போலச் சந்தித்தனர்!

தமிழ் மாகாணக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் உறுப்பின ரல்லாத பார்வையாளரும் அனுமதிக்கப்பட்டிருந்தனர். ராஜாஜி குழுவினரைப் பயமுறுத்துவதற்கென்றே திட்டமிட்டு இந்த ஏற் பாடு செய்யப்பட்டிருந்தது. ஆகஸ்டு கிளர்ச்சிக்குப் பின் தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டி இப்போதுதான் முதன் முதலாகக் கூடியது. அந்தக் கிளர்ச்சி காரணமாகக் கொடுந்துன்பங்களை அனுபவித்த தேச பக்தர்களே கூடினர். ஏகாதிபத்தியம் வெளி யேறுமென்ற நம்பிக்கை அப்போது உதயமாகவில்லை. ராஜாஜி யும் அவரது ஆதரவாளர்களிலே சிலரும் ஆகஸ்டு கிளர்ச்சியை எதிர்த்தனரென்றாலும், மற்றவர்களெல்லாம் ஆகஸ்டு தியாகி களே! ராஜாஜி ஆகஸ்டு தியாகியல்லவென்றாலும், தியாக வாழ்க்கைக்குப் புறம்பானவரல்ல!

உண்மை நிலை இதுவாக இருந்தும் மதுரையில் கூடிய மாகாணக் கமிட்டிக் கூட்டத்திலே குடும்பப் பாசம் வெளிப்பட வில்லை. கடுமையான துன்பங்களை அனுபவித்த தியாகிகள் முதன் முதலாக ஓரிடத்தில் கூடினால், பரஸ்பரம் பாராட்டி

மகிழ்வது இயற்கை நிகழ்ச்சியாக இருக்க வேண்டும். ஆனால், மதுரையில், அப்படி எதுவும் நிகழவில்லை. ஒருவரையொரு வர் நலம் விசாரித்துக் கொள்ளுமளவுக்கும் நல்லெண்ணமில் லாத பகைவர்கள் போலச் சந்தித்தனர். இந்த அவலக் காட்சி, காந்தியவாதிகள் மத்தியிலே! காந்தியடிகள் வாழ்ந்த காலத்திலே!

அப்போது சட்டமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருந் தில்லையானால், இந்த அளவுக்குக் கோஷ்டிச் சண்டை வலுத்து இருக்காதென்பதே எனது நம்பிக்கை. ஆம்; அதிகார பீடத்தி லேறிவிட வேண்டுமென்ற ஆசையாலேயே காங்கிரஸ்காரர்கள் கோஷ்டி பிரிந்து சண்டையிட்டார்கள். வியப்பென்னவென்றால், அந்த ஆசையில்லாத என்னைப் போன்ற சிலரும் இரு கோஷ்டி களிலும் இருந்தனர் என்பதுதான்!

கதையை வளர்ப்பானேன்; தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் பின்னால் விளையவிருக்கும் பெருங் கேடுகளுக்கு முன்னோடி நிகழ்ச்சியாக திருப்பரங்குன்றத்தில் மாகாணக் காங் கிரஸ் கமிட்டி கூடியது.

மாகாணக் கமிட்டியின் தலைவர் என்ற காரணத்தால் திரு.கு. காமராசரே தலைமை வகித்தார். அப்போதெல்லாம் முதலில் தேச பக்திப் பாடலொன்றைப் பாடச் செய்தபின்பே காங்கிரஸ் கூட்டத்தின் நடவடிக்கை தொடங்குவது வழக்கம். இந்நாளில் தமிழ் வாழ்த்தே இறை வாழ்த்தாக்கப் பட்டிருப்பது போல, அந்த நாளில் 'தேச வாழ்த்து'தான் இறைவாழ்த்து! தேசபக்திக்கு மாறான பதவி வெறி முடைநாற்றம் வீசிய மாகா ணக் கமிட்டிக் கூட்டத்திலேயும் தேசபக்திப் பாடல் வெறும் சம்பிரதாயமாகப் பாடப்பட்டது.

சாகசப் பேச்சு!

கூட்டத் தலைவர் திரு. காமராசர் முன்னுரையாக மூன்று நிமிட நேரம் பேசினார். ஆம்; அவர் மிகவும் சுருக்கமாகப் பேசிய காலம் அது! உருக்கமாகப் பேசுவதுபோன்ற பாவனை யிலே சுருக்கமாகப் பேசினார். தமது பேச்சிலே, ராஜாஜி

காங்கிரசுக்குத் திரும்பியதை மிகுந்த மகிழ்ச்சியோடு தாம் (தம்முடைய இரு கரங்களையும் நீட்டிக் காட்டி) வரவேற்பதா கக் கூறினார். அத்துடன் ''1946-இல் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதி லும் ராஜாஜியின் ஆலோசனை கோரப்படும்'' என்றும் உறுதி கூறினார்.

உருக்கமான பாவனையில் திரு. காராசர் பேசியதால் கூட்டத்தில் கைதட்டல் ஆரவாரம் எழுந்தது. கைதட்டலில் உறுப்பினர் எல்லோரும் கலந்து கொண்டார்கள் என்று சொல்வ தற்கில்லை. ராஜாஜி கோஷ்டியினரிலே ஒரு சாரார் மட்டுமே கைதட்டி மகிழ்ந்தனர். திரு. காமராஜ் குழுவினர் தங்கள் உணர்ச்சியை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் மௌனத்திலே மறைத்துக் கொண்டனர். அவர்களுக்குத் தெரிந்திருந்தது, காமராசரின் சமரசப் பேச்சு வெறும் சாகசந்தான் என்பது!

சமரசம் முறிந்தது!

தலைவரின் சாகசம் நிறைந்த முன்னுரைக்குப்பின், அன்று காலை காரியக் கமிட்டி நிறைவேற்றியிருந்த தீர்மானங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆகஸ்டு கிளர்ச்சி யில் கலந்துகொண்டு ஆவி நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துவது போன்ற கருத்து வேற்றுமைக்கு இடமில்லாத சம்பிரதாயமான தீர்மானங்கள் சில ஒன்றன்பின் ஒன்றாக ஒரு மனதுடன் நிறைவேற்றப்பட்டன. பின்னர், 'திருச்செங்கோடு தேர்தல் செல்லாது' என்ற தீர்மானம் மிகுந்த பரபரப்புக் கிடையே முன்மொழியப்பட்டது. திரு. எம்.பக்தவத்சலனார் தான் பகையுணர்ச்சிக்குத் தூபமிடும் அந்தத் தீர்மானத்தை முன் மொழிந்தார்.

ராஜாஜிக்கும் காமராசருக்கும் ஏற்பட்ட எழுதப்பட்ட ஒப் பந்தத்திலே, ''திருச்செங்கோடு தேர்தல் பற்றி இருதரப்பிலும் தரப்பட்டுள்ள உத்தியோகப் பற்றற்ற தீர்மானங்கள் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்'' என்ற வாசகம் இருந்ததால், திரு. பக்தவத்சலம் அவர்களால் முன்மொழியப்பட்ட

தீர்மானத்தை மாகாணக் கமிட்டி உறுப்பினர்களில் பலர் எதிர் பார்க்கவில்லை. அவர்கள் மிகுந்த ஏமாற்றமடைந்தனர். திருச் செங்கோடு தேர்தல் பற்றிய உத்தியோகப் பற்றற்ற தீர்மானங்கள் கைவிடப்பட வேண்டுமென்றால், உத்தியோக சார்பிலும் அது பற்றிய தீர்மானம் இருக்காதென்று ராஜாஜி குழுவிலிருந்த ஏமாளிகள் நம்பினர்.

ராஜாஜி - காமராசர் ஒப்பந்தத்திலே, ''உத்தியோகப் பற்றற்ற தீர்மானங்கள்'' என்றுள்ள வாசகத்தின் உட்பொருளை ''சமரசம் விரும்பிகள்'' தங்கள் பலவீனத்தின் விளைவாக உணரத் தவறிவிட்டனர். தலைசிறந்த ராஜதந்திரியான ராஜாஜியே உணரத் தவறினாரென்றால், மற்றவர்களைப் பற்றிச் சொல்வானேன்?

திருக்குறளில் ''சூழ்ச்சி''யை 'அரசியலி'ன் ஒரு அங்கமாக் கிய திருவள்ளுவரும், உள்ளத்தாலும் பொய்யா தொழுக வேண் டிய ஒழுக்கத்தையும் போதித்துள்ளார். ராஜாஜி எதிர்ப்பாளர்கள் வள்ளுவர் போதித்த ''பொய்யாமை''யைப் புறக்கணித்து விட்டு, ''சூழ்ச்சி''யை மட்டும் உரிமையாக்கிக் கொண்டு விட்ட னர்!

பிரதிவாதியே நீதிபதியானால்...?

திருச்செங்கோடு தேர்தல் பற்றிய தீர்மானம் முன்மொழியப் பட்டதும், மாகாணக் கமிட்டிக் கூட்டத்தில் அமைதி குலைந்தது. நானும் ஏ. வைத்தியநாதய்யரும் வேறு சிலரும் உணர்ச்சிவயப் பட்டவர்களாகி, தீர்மானத்தை எதிர்க்குமாறு எங்கள் கோஷ்டியி னரைத் தூண்டினோம்! இருதரப்பினரிடையேயும் வாதம் நிகழ்வ தற்குப் பதிலாக, வசை மொழிகள் வழங்கிக் கொள்ளப்பட்டன. எங்களிலே திரு.ஏ. வைத்தியநாதய்யர் சினத்தின் சிகரத்திற்கே சென்றுவிட்டார்!

கூச்சலுக்கும் குழப்பத்திற்குமிடையே தீர்மானத்தை ஆதரித் தும் எதிர்த்தும் இரு தரப்பிலும் சிலர் பேசினர். இறுதியில் கூட்டத் தலைவர் காமராசர் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தினார். ''தீர்மானத்தை ஆதரிப்போர் கைகளை உயர்த்துங்

கள்'' என்றார். சிலர் உயர்த்தினர். ''எதிர்ப்பவர்கள் கைகளை உயர்த்துங்கள்'' என்றார். பலர் உயர்த்தினர். தீர்மானத்தை ஆதரிப்பவர்களை விட, எதிரப்பவர்களே அதிகமென்பது தெரிந்த பின்னரும், ''பெருவாரியான வாக்குகளால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது'' என்று அடாவடித்தனமாக அறிவித்து விட்டு, அடுத்த நிகழ்ச்சிக்குச் சென்றார். அதற்குள், ''போல்'', ''போல்'' (உறுப்பினரில் ஒவ்வொருவரையும் பெயர் கூறி அழைத்து வாக்குகளை எண்ணும் முறை) என்று ராஜாஜி ஆதரவாளர்கள் குரல் கொடுத்தனர். எதிர்த்தும் கூக்குரல்கள் கிளம்பின. திரும்பவும் குழப்பம்!

''தீர்மானத்தை ஆதரிப்போர் அதிகமென்பது தெளிவாகத் தெரிந்துவிட்டதால், ''போல்'' தேவையில்லையென்று திரு. காராசர் கூறிவிட்டார். பிரதிவாதியே நீதிபதி ஆசனத்தில் அமர்ந்துவிட்டால், தீர்ப்பு வாதிக்குச் சாதகமாகவா இருக்கும்? கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் தமிழ்நாடு காங்கிரஸ் பார்லிமெண் டரி போர்டுக்கு உறுப்பினர் தேர்ந்தெடுக்கும் விஷயம் இருந் தும், 'போல்' எடுப்பதிலிருந்து தப்புவதற்காகக் கூட்டத்தை அத்துடன் முடித்துவிட்டார், காமராசர். அவரது கோஷ்டியினர் அவருடைய 'திறமை'யைப் பாராட்டினர்.

ராஜாஜி கோஷ்டியினரோ, கைக்குக் கிடைத்த வெற்றியைத் தங்கள் திறமையின்மையால் தோல்வியாக மாற்றிக் கொண்டு வெட்கமும் வேதனையும் அடைந்தனர்.

பாரதத்தின் திறமைமிக்க ராஜதந்திரியாகக் கருதப்படுகின்ற ராஜாஜி மீது திரு. காமராசர் அடைந்த முதல் 'வெற்றி' இது! பிற்காலத்தில் தொடர்ந்து ராஜாஜி மீது காமராசர் அடைந்த ராஜதந்திர வெற்றிகள் பலவற்றிற்குத் திருப்பரங்குன்றம் வெற் றியே முன்னோடியாக அமைந்ததென்பதைக் காலங்காட்டிவிட்ட தல்லவா!

மாகாண காங்கிரஸ் கமிட்டி கூடுவதற்கு முதல்நாள் திருப்ப ரங்குன்றத்தில் கூடிய காங்கிரஸ் ஊழியர் மாநாட்டைப் பற்றிக் கூற மறந்துவிட்டேனே!

அக்டோபர் 30-ஆம் தேதி காலை திருப்பரங்குன்றத்தில் கூடிய காங்கிரஸ் ஊழியர் மாநாடு, போருக்குப் புறப்படத் தயாராகிவிட்ட படை வீரர்களின் எழுச்சிபோலக் காணப்பட்ட தாம்! நான் அந்த மாநாட்டின் பக்கமே போகக் கூடாதென்பது நண்பர்களின் அறிவுரை! அதனால், முதியவர்களுக்கெதிராகப் போர்க்கோலங் கொண்ட அந்த 'இளைஞர் பாசறை'யை நான் பார்க்கவில்லை. நானும் அப்போது இளைஞன்தான்! ஆனால், முதியவர் கோஷ்டியில் சேர்ந்துவிட்டேனே!

'காங்கிரஸ் ஊழியர்' என்ற பெயரால் இளைஞர்களே மாநாட்டில் உணர்ச்சித் துடிப்போடு திரண்டனர். பாகிஸ்தான் கோரிக்கைக்கு ஆதரவாகவும், காங்கிரஸ் நடத்திய ஆகஸ்டுக் கிளர்ச்சிக்கு எதிராகவும் ராஜாஜி நடத்திய தீவிர பிரசாரம் அவரை காங்கிரஸ் ஊழியர்கள் பகைப்பதற்குக் காரணமாகி விட்டது. ஊழியர்களின் உணர்ச்சியை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. திருப்பரங்குன்றத்தில் திரண்ட ஊழியர்க ளிலே பலர், தஞ்சைச் சிறையில் நான் எமனுடன் போராடிக் கொண்டிருக்கையில் என்பால் அன்புகாட்டி, எனக்காக விம்மி யழுது வேதனைப்பட்டவர்களாவர். ஆயினும், ராஜாஜி எதிர்ப் புணர்ச்சி காரணமாகத் தமிழ்நாட்டைத் தவறான திசைக்கு இழுத்துச் செல்கின்றனரே என்பதுதான் அவர்கள்பால் எனக்கி ருந்த வருத்தம். விதி விளையாடியது — வேறென்ன சொல்வது?

''கிராமணியாரைத் திட்டாதே!''

திருப்பரங்குன்றம் மாநாட்டிலே, ''ராஜாஜியின் தலை மையை ஏற்பதில்லை'' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திரு. காமராசர் முன்னிலையிலே! இந்தத் தீர்மானம் நிறைவேற் றப்படுவதற்குச் சில மணி நேரத்திற்கு முன்புதான் ராஜாஜியின் தலைமையை வரவேற்று மறுநாள் கூடவிருக்கும் மாகாணக் கமிட்டிக் கூட்டத்தில் தாம் பேசுவதாகத் திரு. காமராசர் திருக் குற்றாலத்திலிருந்து ராஜாஜிக்கு எழுத்து மூலம் தகவல் அனுப்பி யிருந்தார். இதன் பெயர் ராஜதந்திரமாம்!

திருப்பரங்குன்றம் காங்கிரஸ் ஊழியர் மாநாட்டில் தலைமை வகித்த கல்லிடைக்குறிச்சி திரு. யக்ஞேசுவர சர்மா, தமது தலைமையுரையில் என்னைப்பற்றித் தரக்குறைவாக ஏதோ கூறியபோது, மாநாட்டில் குழுமியிருந்தவர்களில் ஒரு சாரார், ''கிராமணியாரைத் திட்டாதே'' என்று கூறி ஆரவாரம் செய்ததாக அம் மாநாட்டிற்குச் சென்று வந்த திருச்சி ரத்தினவே லுத் தேவர் என்னிடம் கூறினார். ஒன்றிரு பத்திரிகைகளிலும் இந்தச் செய்தி வெளியானது. ''எதிரியின் பாசறையிலும் உங்க ளுக்கு நண்பர்கள் இருக்கிறார்கள்'' என்றார் இரத்தினவேலுத் தேவர்.

திருப்பரங்குன்றம் மாநாடு முடிந்ததும் 10 நாட்கள் வரை தம்முடன் தங்கி ஓய்வு பெறுவதற்காகத் திருக்குற்றாலத்திற்கு வருமாறு ராஜாஜி என்னை அழைத்திருந்தார். நானும் இசைந்தி ருந்தேன். இதன்படி, நவம்பர் 1-இல் திருக்குற்றாலத்தில் ராஜாஜி என்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால், திருப்பரங்குன்றம் தோல்வி என் மனத்தைப் பெரிதும் பாதித்து விட்டதால், நான் சென்னை திரும்பி விடுவதென்ற முடிவுக்கு வந்தேன். அதனை, குற்றாலத்திலிருந்த ராஜாஜிக்கும் தந்தி வாயிலாக அறிவித்தேன்.

ஊடற் போர்!

திரு. காமராசரின் வஞ்சகமான சமரச முயற்சியை எனக் குத் தெரியாமல் சிலர் மறைத்ததும், அதற்கு ராஜாஜியும் உடந் தையாக இருந்தும் என் மனத்தைப் புண்படுத்திவிட்டன. யாருக் காக எனது உயிரையும் பணயம் வைத்து, பிரதிபலனை எதிர் பாராமல் நான் பாடுபட்டுக் கொண்டிருந்தேனோ, அவரே மனமறிந்து என்னைப் புறக்கணித்து, என் முயற்சிகளைப் பாழ்ப டுத்தும் வகையில் எதிரியோடு திரைமறைவில் சமரசம் செய்து கொண்டது எனக்கு வெட்கத்தையும வேதனையையும் தந்தது. இந்த நிலையில் குற்றாலம் சென்று ராஜாஜியுடன் அளவளாவு வது எங்ஙனம்?

எனது மனநிலையைப் படம்பிடித்துக் காட்டும் வகையில் ராஜாஜிக்கு ஒரு கடிதமும் எழுதினேன். அதில், கோஷ்டிப் பூசலிலிருந்து என்னை விடுவித்துக் கொள்ள நான் விரும்புவதாகவும் குறிப்பிட்டிருந்தேன். எனது கடிதம் கிடைத்ததும் ராஜாஜி குற்றாலத்தைவிட்டு சென்னைக்குப் புறப்பட்டு விட்டார். திரு. காமராசர் தன்னை வெகு எளிதில் ஏமாற்றிவிட்டதும் ராஜாஜிக்கும் வேதனை அளித்திருக்குமல்லவா! அத்துடன், எனது தொடர்பும் துண்டித்துப் போவதை அவர் எப்படித் தாங்கிக் கொள்ள இயலும்?

என்னுடைய தந்தியும் கடிதமும் கிடைத்தவுடனே அவசரம் அவசரமாக ராஜாஜி எனக்குப் பதில் தந்தி கொடுத்தார். அதன் நகல் வருமாறு:


O OD
Tenkasi 2 14/20 13
Sivagnanagramani
madras 5.
Thanks letter dont fail see me sunday morning
Rajagopalachari

ராஜாஜி குற்றாலத்திலிருந்து சென்னை வந்ததும் எழும்பூர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து நேராக கிருஷ்ணாம்பேட்டையிலுள்ள எனது வீட்டிற்கு வந்து தம்முடன் தியாகராய நகருக்கு வருமாறு என்னை அழைத்தார். ஊடல் காரணமாக, முதலில் மறுத்தேன் என்றாலும், பின்னர் அவருடன் சென்றேன். அன்று தீபாவளி நாளானதால் தமது இல்லத்தில் சுவையான காப்பி தந்து உபசரித்தார். திருப்பரங்குன்றத்தில் காமராசர் நடத்திய சமரச நாடகத்தின் முடிவு தமக்கும் அதிர்ச்சியைத் தந்ததாகவும்

அது விஷயத்தில் நான் புறக்கணிக்கப்பட்டது காலங் கடந்து தமக்குத் தெரிந்ததாகவும் சமாதானம் கூறினார். அவரது சமாதானம் எனக்கு மனநிறைவைத் தரவில்லையென்றாலும், ராஜாஜியைக் கைவிடுவதென்பது என்னால் சாத்தியமில்லாமலிருந்ததால், அவரது சமாதானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியவனானேன். தோழமை என்று ஏற்பட்டுவிட்டால், அதை எளிதில் துண்டித்துக் கொள்வது எப்படி? அதிலே நான் இராமாயணத்தில் வரும் குகன் போன்றவன்.

பழிவாங்கும் படலம்!

திருப்பரங்குன்றத்திற்குப் பிறகு என்னைத் தமது பக்கம் இழுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் திரு. காமராசருக்கு ஏற்பட்டது. திருப்பரங்குன்றத்தில் தமது கோஷ்டிக்கு வெற்றி கிடைத்தது, தரும வழியிலல்ல என்பது காமராசருக்குத் தெரியுந்தானே! மற்றும் திரு. காமராசர் மதிப்பிட்ட அளவுக்கு ராஜாஜி கோஷ்டி பலவீனமாக இல்லையென்பதையும் அதன் பலத்திற்கு எனது உழைப்பே முக்கிய காரணமென்பதையும் அவர் திருப்பரங்குன்றத்தில் கண்ணாரக் கண்டார். அதனால், என்னைப் பிரித்தெடுப்பதன் மூலம் ராஜாஜி கோஷ்டியைப் பலவீனப்படுத்திவிட முயன்றார்.

காமராசரைச் சந்தித்தேன்!

திரு.கே.டி. கோசல்ராம் அவர்களை என்னிடம் அனுப்பி என்னைத் தம்மிடம் அழைத்துவரப் பணித்தார். திரு. கோசல்ராம் என் வீட்டிற்கு வந்தபோது நான் வெளியே சென்றிருந்தேன். அதனால் அவர் எனக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுச் சென்றார். அதனை இங்கு அப்படியே தருகிறேன்:

''அன்புள்ள அண்ணா சிவஞானம் அவர்களுக்கு வணக்கம்.

''இன்று 4 மணிக்குத் தங்கள் வீட்டுக்கு வந்தேன். பிரஸிடெண்ட் அவர்கள் தங்களைக் கூப்பிட்டு வரும்படிச் சொன்னார். அவர் ''எவரெஸ்ட்'' ஓட்டலில் தங்கியிருக்கிறார். தாங்கள் காலையில் 10 மணிக்கு எவரெஸ்டுக்கு வாருங்கள். நானும் வந்துவிடுகிறேன். மற்றவை நேரில்.

தங்கள் அன்புள்ள
K.T. கோசல்ராம்
19.11.45

திரு. கோசல்ராம் கடிதப்படி நான் எவரெஸ்ட் ஓட்டலில் திரு. காமராசரைச் சந்தித்துப் பேசினேன். அப்போது ராஜாஜியைக் கைவிட்டுத் தம்முடன் சேர்ந்து கொள்ளும்படி திரு. காமராசர் மிகுந்த கனிவோடு அழைத்தார். ராஜாஜியிடம் ஒரு சமரசத்திற்கு வந்தாலொழிய நான் அவரைக் கைவிட முடியாதென்று கண்டிப்பாகக் கூறிவிட்டேன். இத்தருணத்தில் எனது எதிர்காலம் பற்றியும் ஆசை காட்டப்பட்டது.

திரு. காமராசரின் விருப்பப்படி நான் கோஷ்டி மாறியிருந்தால் என் எதிர்காலம் எப்படி இருந்திருக்கும் என்பதுபற்றி அன்று நான் கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை. காரணம், சுயநலத்திற்காகக் கோஷ்டி மாறுவதை ஒழுக்கக் கேடான காரியமாக நான் கருதியதுதான். மற்றும், ராஜாஜியை நான் ஆதரித்தது, தமிழினத்தின் வருங்கால நலனைக் கருதித்தானே! என்னை இழுத்துக் கொள்ள செய்த முயற்சியில் தோல்வி காணவே, என்னை அரசியலிலிருந்தே ஒதுக்கிவிடத் தனது செல்வாக்கை திரு.காமராசர் பயன்படுத்தினார்.

குற்றச்சாட்டுகள்

22.11.45-இல் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த வலிவலத்தில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டியிலே, நான் செயலாளனாக இருந்த சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியைக் கைப்பற்றவும், இயலாவிடில், அக்கமிட்டியையே கலைத்துவிடவும் முடிவெடுக்கப்பட்டது. இந்த இரண்டிலொன்று நிகழ்ந்துவிட்டால், எனது அரசியல் வாழ்வு கொம்பையிழந்த கொடியாகி விடுமென்று திரு. காமராசர் கற்பனை செய்து கொண்டார்.

வலிவலம் கூட்ட முடிவுப்படி 24.11.45-இல் த.நா.கா. கமிட்டி எனக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தது. அதில், இரண்டுக் குற்றச்சாட்டுகள் தரப்பட்டு, 15 நாட்களுக்குள் சமாதானம் கூறவேண்டுமென்று ஆணையிடப்பட்டிருந்தது. குற்றச்சாட்டுகள் வருமாறு:

● *திரு.எஸ். சத்தியமூர்த்தி ஐயர் மரணத்தால் காலியான ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் இடத்தை வேண்டுமென்றே பூர்த்தி செய்யாமல் விட்டு வைத்திருப்பது.*

● *ஜில்லா காங்கிரஸ் கமிட்டி அடிக்கடி கூடாமலும் சரிவர வேலை செய்யாமலும் இருப்பது.*

த.நா. காங்கிரஸ் கமிட்டி என்மீது பாணம் தொடுத்த மறுநாளிலேயே திரு. காமராசர் கோஷ்டியைச் சார்ந்த சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் அறுவர் ஜில்லா கமிட்டிச் செயலாளனாகிய என்மீது நம்பிக்கையின்மை தெரிவிக்கும் தீர்மானத்தை எனக்கு அனுப்பியிருந்தனர். அதுபற்றி விவாதிக்க ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் சிறப்புக் கூட்டத்தை உடனடியாகக் கூட்ட வேண்டுமென்றும் அதிலே கோரியிருந்தனர். இந்த மிரட்டல் காமராசரின் தூண்டுதலால் ஏற்பட்டதென்பதை என்னால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

வேதனைப்பட்டேன்!

சர்வ சக்தி படைத்த திரு. காமராசர் இப்படி எனக்கெதிராக நேரடியாகவே போர்க்கோலங் கொண்டுவிட்டார்! இங்கிருந்து தான் அவருக்கும் எனக்கும் நேரடிப் போராட்டம் ஆரம்பமானது. ஆகஸ்டு கிளர்ச்சியின்போது அன்னிய அரசு எனக்கிழைத்த கொடுமைகள் காரணமாக ஏற்பட்ட உடற்பிணியிலிருந்து நான் மீளாத நிலையிலே, என் தேச பக்த சகாக்களும் — குறிப்பாக, என்னைப் போன்று சாதாரண ஊழியராக இருந்து, மாநிலத் தலைவரான திரு. காமராசரும் எனக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கியது, மனதுக்கு வேதனையளித்தது. எல்லையற்ற ஆற்றல் படைத்த ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் போரிலே ஈடுபட்டு அமராவதி, வேலூர், தஞ்சைச் சிறை

களில் நான் உயிருக்குப் பேராடியபோதுகூட, என் மனத்துள் ஒருவிதமான மகிழ்ச்சியும் இருக்கத்தான் செய்தது. ஆம்; 'தேச நலனுக்காக உயிர் துறக்கப் போகிறோம்' என்பதே அந்த மகிழ்ச்சி. ஆனால், இப்போது என்மீது போர் தொடுத்தது என் மதிப்புக்குரிய தேச பக்த சகோதரர்களே! இந்த அவல நிலைக்கு வருந்தினேன் என்றாலும், பயந்துவிடவில்லை. நம்பிக்கையில் லாத் தீர்மானத்திற்கு அறிவிப்பு தரப்பட்ட மறுநாளே — அந்த அறைகூவலைச் சந்திக்க ஜில்லா காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திற் குத் தேதி நிர்ணயித்து விட்டேன். சென்னை ஜில்லா கமிட்டி நவம்பர் இறுதியில் மிகுந்த பரபரப்பான சூழ்நிலையில் அண்ணா சாலையிலுள்ள மகாஜன சபை மண்டபத்தில் கூடியது. கமிட்டி அங்கத்தினர்களை என்னிடமிருந்து பிரித்தெடுக்க திரு. காமராசர் திரைமறைவில் தம்மாலான அனைத்தையும் செய்தார். மகாஜனசபை மண்டபத்துக்கு வெளியே என்னை ஆதரிப்போர் பலரும் எதிர்ப்போர் சிலருமாகப் பல நூற்றுக்க ணக்கில் தொண்டர்கள் மிகுந்த ஆவேசத்துடன் குழுமியிருந்த னர். கூட்டத்தை நடத்தும் பொறுப்பு என்னிடமே இருந்ததால், பார்வையாளர் எவரும் மண்டபத்திற்குள் வராதபடி ஏற்பாடு செய்தேன்.

அன்றைய ஜில்லா கமிட்டிக் கட்டத்தின் நிகழ்ச்சி நிரலிலே கமிட்டித் தலைவர் தேர்தலும், செயலாளர் மீதான நம்பிக்கை யில்லாத் தீர்மானமும் இருந்தன. காமராசர் கோஷ்டிச் சார்பில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி துணைத் தலைவி திருமதி ருக் மணி லட்சுமிபதியும், ராஜாஜி கோஷ்டி சார்பில் திரு.கே. வேங்கடசாமி நாயுடுவும் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட னர். இருவர் சார்பிலும் ஜில்லாக் கமிட்டி உறுப்பினர்கள் வேட்டையாடப் பட்டனர்.

எதிரிகள் தோற்றனர்!

ஜில்லா கமிட்டியின் உறுப்பினர்கள் 30 பேரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். துணைத் தலைவர் திரு.பு.ம. ஆதிகேச வலு நாயகர் தலைமை வகித்தார். தலைவர் தேர்தலில் ராஜாஜி கோஷ்டி சார்பில் போட்டியிட்ட திரு. கே. வேங்கடசாமி நாயுடு 2 வாக்குகள் அதிகமாகப் பெற்று வெற்றியடைந்தார். காமராச ரின் வலதுகரமாக விளங்கிய திருமதி. ருக்மணி லட்சுமிபதி தோல்வியுற்றார். வெற்றி பெற்றவர் தோல்வியுற்றவர் இருவ ருமே ஆகஸ்டுத் தியாகிகளல்லர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த, என்மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது இரண்டு மணிநேரம் காரசாரமாக விவாதம் நடைபெற்றது. தலைவர் தேர்தலில் தோல்வியுற்ற ஆந்திர அம்மையார், ''தமிழ் வெறியன்'' என்று எனக்குப் பட்டம் சூட்டினார். என்னைப் பழிக்க வேண்டுமென்ற நோக்குடன் அவர் அப்படிக் கூறினாலும், அதனை நான் பாராட்டாகவே கருதினேன்! ஆம்; கூறியவர் ஆந்திரரானதால்!

30 உறுப்பினர் கலந்துகொண்ட கூட்டத்தில் நம்பிக்கையில் லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக 6 பேர்களே வாக்களித்தனர். தலைவர் தேர்தலில், காமராசர் கோஷ்டி வேட்பாளர் 14 வாக்குகளைப் பெற்றார். ஆனால், நம்பிக்கையில்லாத் தீர்மானத் தின் மீது வாக்கெடுத்தபோது, காமராசர் கோஷ்டியினரிலே 8 பேர் என் பக்கம் சார்ந்து வாக்களித்தனர்.

''எதிரியின் பாசறையிலும் உங்களுக்கு நண்பர்கள் இருக்கி றார்கள்'' என்று திருச்சி இரத்தினவேல் தேவர் மதுரையில் கூறினாரல்லவா! அதனை, சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி யிலும் கண்ணாரக் கண்டேன். சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ராஜாஜி கோஷ்டிக்குக் கிடைத்த வெற்றி கள், திருப்பரங்குன்றம் தீர்ப்பிற்கு வைத்த கரும் புள்ளிகளாக அமைந்தன.

சீர்காழிக் கூட்டம்

திருப்பரங்குன்றம் நிகழ்ச்சி முடிந்ததும் காங்கிரசில் நடந்த கோஷ்டிப் பூசலிலே ஒரு திருப்பம் ஏற்பட்டது. அதற்குக் காரணம் 1946 மார்ச்சு மாதத்தில் சென்னை மாகாண சட்டமன் றத்துக்குத் தேர்தல் நடத்தப்படுமென்று அரசு அறிவித்ததுதான். கோஷ்டிப் பூசல் தோன்றியதே அதை எதிர்பார்த்துத்தானே!

திருப்பரங்குன்றத்தில் தமிழ் மாகாணக் காங்கிரஸ் கமிட்டி கூடியபோது, தமிழ்நாடு காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அந்தத் தேர் தலை நடத்தினால் தங்களுக்குப் பெரும்பான்மை கிடைக்கு மென்ற நம்பிக்கை திரு. காமராசர் குழுவினருக்கு இருக்க வில்லை. பலப் பரீட்சையில் இறங்குவது அபாயமென்று கருதியோ என்னவோ பார்லிமெண்டரி போர்டு நியமிக்கும் பொறுப்பைத் தமிழ் மாகாண காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு விட்டுவிடுவதென்று தீர்மானம் கொண்டு வந்து ராஜாஜி குழு வின் ஆதரவோடு அதை நிறைவேற்றி வைத்தனர்.

பார்லிமெண்டரி போர்டை நியமிக்கும் பொறுப்பு தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு விடப்படுவதைத் திருப்பரங் குன்றத்தில் ராஜாஜி கோஷ்டி ஆதரித்ததென்றாலும், சமரசம் ஒழுங்காக நடைமுறைக்கு வராததால், பார்லிமெண்டரிப் போர்டை காங்கிரஸ் மேலிடமே நியமிக்க வேண்டுமென்று அக்கோஷ்டியினர் கோரினர். இந்தக் கோரிக்கையை எழுப்புவ தற்காக 29.11.45-இல் தம்மை ஆதரிக்கும் பிரமுகர்கள் கொண்ட ரகசியக் கூட்டமொன்றைச் சீர்காழியில் கூட்டினார் ராஜாஜி. இதனை 'சீர்காழிச் சதிக் கூட்டம்' என்று வருணித்தனர் எதிர் கோஷ்டியார். இதற்கான அழைப்பைத் தமது பெயரி லேயே ராஜாஜி அனுப்பினார்.

திருச்செங்கோடு தேர்தல்பற்றித் திருப்பரங்குன்றத்தில் ஏற்பட்ட முடிவு முற்றிலும் மோசடியானதென்றும், அதுபற்றி காங்கிரஸ் மேலிடம் விசாரணை நடத்த வேண்டுமென்றும் சீர்காழிக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது. அத்துடன், தமிழ்நாடு காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டை காங்கிரஸ் மேலிடமே நியமிக்க வேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றினோம்.

இந்தத் தீர்மானங்களை விளக்கிக் கூற அப்போது கல்கத்தாவில் கூடவிருந்த அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்துக்கு ஒரு தூதுக் குழுவை அனுப்பவும் முடிவெடுத்தோம். இந்தத் தூதுக் குழுவில் நானும் இருக்க வேண்டுமென்று ராஜாஜி என்னைக் கேட்டுக் கொண்டார். தூதுக் குழு செல்வதை — தவிர்க்க முடியாத காரணத்தால் — நான் ஏற்றுக்கொண்டேன் என்றாலும், அதில் அங்கம் வகிக்க நான் விரும்பவில்லை. காங்கிரஸ் மேலிடத் தலைவர்கள் எவ்வளவுதான் மதிப்புக்குரியவர்களானாலும், தமிழகத் தலைவர்கள் தங்களுக்குள்ளே பூசல் விளைவித்துக் கொண்டு வடபுலத்துத் தலைவர்களின் தீர்ப்பை நாடுவது எனக்குப் பிடிக்கவில்லை. தூதுக் குழுவில் இடம் பெற நான் மறுத்ததற்கு இதுதான் காரணம். இதனை ராஜாஜியிடம் வெளிப்படையாகவே கூறினேன். எனது உணர்ச்சியை மதித்து அவர் என்னை வற்புறுத்தவில்லை.

ஆஸப் அலி வருகை!

கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி சீர்காழிக் கூட்டத்தினரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு பண்டித நேருவைத் தமிழ்நாட்டுக்கு அனுப்ப முடிவு செய்தது. இங்குள்ள கோஷ்டிப் பூசலைப் பற்றி விரிவாக விசாரணை நடத்தி, தமது முடிவைக் காங்கிரஸ் தலைவருக்கு அறிவிக்க நேருவுக்கு அதிகாரமளிக்கப்பட்டது. இந்த முடிவை அறிந்ததும் ராஜாஜி குழுவி

னருக்கு மிகுந்த உற்சாகம் ஏற்பட்டது. காமராசர் கோஷ்டியி னரோ, மேலிடத்துத் தலைவர்கள் மீது எரிச்சல் கொண்டனர். அவர்கள் ஒருதலைபட்சமாக நடந்து கொள்வதாகக் கூடப் புகார் கூறினர்.

எதிர்பாராத விதத்தில் கடைசி நேரத்தில் பண்டித நேருவுக் குப் பதிலாக காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினரான ஜனாப் ஆசப் அலி அவர்கள் அனுப்பப்படுவாரென்று அறிவிக்கப்பட் டது. இது ராஜாஜிக்கு ஏமாற்றத்தைத் தந்தது. தமது பிரச்சினை குறித்து ஆசப் அலி மத்தியஸ்தராக வருவது தமது அந்தஸ்துக்கு இழுக்கு என்று ராஜாஜி கருதினார். அதனால் கோஷ்டிப் பூசல் பற்றி விசாரணை நடத்த ஜனாப் ஆசப் அலி வருவதைத் தாம் விரும்பவில்லை என்றும், தாம் பூசலிலிருந்து விலகிக் கொள்வ தாகவும் பத்திரிகைகளில் அறிக்கை விடுத்தார். இதனால் ஆசப் அலி வருவது தடைப்படும் போலிருந்தது.

இந்த அறிக்கையை விடுமுன்பு என்னையோ, தமது கோஷ் டியிலிருந்த வேறு பிரமுகர்களையோ ராஜாஜி கலந்து கொள்ள வில்லை. இப்படி நடப்பது அவருக்கு வழக்கம். ராஜாஜியின் முடிவு எனக்கு மிகுந்த வருத்தத்தைத் தந்தது. எங்கள் கோஷ்டி யிலுள்ள எல்லோருமே என்னைப் போலத்தான் வருத்தப்பட் டார்கள். எல்லோருமாகச் சேர்ந்து ராஜாஜியிடம் என்னைத் தூது அனுப்பினார்கள். நான் ராஜாஜியைச் சந்தித்து ஒரு மணி நேரம் உரையாடிய பின்னர், எனது வற்புறுத்தலின் பேரில் அவர் தமது முடிவைத் திருத்திக் கொண்டார். ஜனாப் ஆசப் அலியின் வருகையைத் தாம் எதிர்க்கவில்லையென்றும், தமது கோஷ்டியி னருக்கு நியாயம் கிடைக்கும்படி செய்வதற்காக அவர் வருவ தால் அதற்குத் தாம் தடையாக இருக்கப் போவதில்லையென்றும் ராஜாஜி அறிக்கை விட்டார்.

ஜனாப் ஆசப் அலி சென்னைக்கு வரும்போது அவருக்குச் சிறப்பாக வரவேற்பளிக்க சென்னை ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டி

யின் சார்பில் நான் ஏற்பாடு செய்தேன். அந்தப் பொறுப்பைத் தன்னிடம் விடவேண்டுமென்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்னிடம் வழக்காடியது. நான் உறுதியாக மறுத்துவிட்டேன். ஆயினும், ஆசப் அலியை சென்டிரல் ஸ்டேஷனில் வரவேற்கும் போது தங்கள் பலத்தைக் காட்டிக் கொள்ளும் வகையில் நடந்துகொள்ள காமராசர் கோஷ்டியினர் முழுமூச்சுடன் முயன்றனர். இரு கோஷ்டியினரும் தமிழ்நாடு முழுவதிலுமிருந்து காங்கிரஸ்காரர்களைச் சென்னைக்குத் தருவித்து சென்டிரல் ஸ்டேஷனை முற்றுகையிட்டனர்.

ஆசப் அலி அவர்களுக்குத் தமது வாழ்வில் அவர் முன் எப்போதும் கண்டிராத அளவில் இரு தரப்பினரும் போட்டியிட்டுக் கொண்டு ராஜோபசாரமாக வரவேற்பளித்தோம். தமிழர்களின் இந்தக் கோமாளித் தனத்தைக் கண்டு உள்ளூர என் மனம் வேதனைப்பட்டதென்றாலும், எனது கோஷ்டி வெற்றி பெறுவதற்காக நானும் அதிலே முக்கிய பங்கெடுக்க வேண்டியவனானேன், திரு. காமராசரும் அந்த வரவேற்பில் கலந்து கொண்டார்.

ஜில்லா காங்கிரஸ் தலைவர் வேங்கடசாமி நாயுடுவும் நானுமாகச் சேர்ந்து நாயுடுவின் காரில் ஜனாப் ஆசப் அலியை அழைத்துக் கொண்டு போய் கன்னிமாரா ஓட்டலில் சேர்த்தோம். எனது ஏற்பாட்டின்படி ஓட்டலில் ஏற்கனவே காத்திருந்த ராஜாஜி அவர்கள் ஆசப் அலியை வரவேற்றார். இருவரும் அரைமணி நேரம் ஓட்டல் அறையில் தனித்திருந்து உரையாடினர்.

ஜனாப் ஆசப் அலி ஒரு வார காலம் சென்னையில் தங்கி இரு கோஷ்டியினரையும் தனித்தனியே சந்தித்து விசாரணை நடத்தினார். மாவட்டம் மாவட்டமாக வந்த கோஷ்டியினருக்கு அவர் பேட்டியளித்து விசாரணை நடத்தினார். உண்மையில் அந்த விசாரணையில் அவர் களைத்துப் போகுமளவுக்குத்

தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் அவருக்கு வேலை கொடுத்த னர். விசாரணை முடிந்த கடைசி நாளன்று மாலை இராயப் பேட்டை காங்கிரஸ் திடலில் த.நா.கா. சார்பாக மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தைச் சென்னை ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டிதான் நடத்தியிருக்க வேண்டும். அந்தக் கமிட்டியின் தலைவராயிருந்த திரு.கே. வெங்கடசாமி நாயுடு, காமராசர் கேட்டுக் கொண்டதன் பேரில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு விட்டுக் கொடுத்துவிட்டார். ஆம்; செய லாளனான என்னைக் கலந்து கொள்ளாமலே! இராயப்பேட் டைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்த முறையிலே பொது மக்களிடையே தங்கள் கோஷ்டிக்குத்தான் அதிக செல்வாக்கிருப் பதாகக் காட்டிக் கொள்ள முயன்றனர்.

இராயப்பேட்டைக் கூட்டத்தை நடத்தும் பொறுப்பு தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியிடம் போனதிலே ராஜாஜிக்கு மிகுந்த வருத்தம். சென்னை ஜில்லாக் கமிட்டி பொறுப்பேற்றிருந்தால் எனக்கு மிகுந்த செல்வாக்கிருந்த ராயபுரத்தில்தான் அந்தக் கூட்டத்தை நடத்த எண்ணியிருந்தேன். ஆயினும், நான் சோர்ந் துவிடவில்லை. ''இராயப்பேட்டையை ராயபுரமாக மாற்றிக் காட்டுகிறேன்'' என்று ராஜாஜிக்கு ஆறுதல் கூறினேன். திரு.டி. பிரகாசம், ஜனாப் ஆசப் அலி இருவரும் இந்தக் கூட்டத்தில் பேசினர்.

ராயப்பேட்டையை ராயபுரமாக்கினேன்!

ஜனாப் ஆசப் அலிக்கு முன்பு ஆந்திரத் தலைவர் திரு. பிரகாசம் பேசினார். தமிழ்நாடு காங்கிரஸ் நடத்திய கூட்டத் திலே தமிழர் தலைவருக்கெதிராக ஆந்திரத் தலைவர் ஒருவ ரைப் பேச காமராசர் அனுமதித்தது எனக்கு ஆத்திரத்தை மூட்டியது. திரு. காமராசரும் மேடையில் இருந்தாரென்றாலும், அவர் பேசவில்லை. திரு. பிரகாசம் ஒருவர்தான் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பாகப் பேச அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர்

பேசுகையில், ''ராஜாஜி கோஷ்டியினர் வடக்கிலுள்ளவர்களிடம் காவடி தூக்கிச் செல்கின்றனர்'' என்று கேலியாகக் கூறினார். அதனால், அவரைப் பேசவிடாதபடி மக்களில் ஒரு சாரார் கோஷமிட்டனர். ஆந்திர கேசரியால் அதற்குமேல் பேச முடியவில்லை. கூட்டத்தினர் அமளி செய்ததற்கு ஆந்திர எதிர்ப்பு உணர்ச்சியும் காரணமாகும். குழப்பம் நெடுநேரம் நீடித்தது. இந்தக் குழப்பத்தை நான் விரும்பவில்லையென்றாலும், ''மதறாஸ் மனதே'' என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்த பிரகாசத்தின் வாயை அடக்க மக்கள் சினந்தெழுந்தது கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். திரு. காமராசர் என்மீது வெறுப்படைந்தார். அமளியை நான்தான் தூண்டிவிட்டதாக அவர் கருதினார். பிரகாசத்தை அமர்த்திவிட்டு ஜனாப் ஆசப் அலி பேசத் தொடங்கினார். அவர் தமது பேச்சிலே மக்களுடைய பேராதரவு ராஜாஜி பக்கம்தான் இருக்கிறதென்ற நம்பிக்கையைத் தெரிவித்தார். ''ராஜாஜி காங்கிரசுக்குத் தேவை. ஆனால், குழப்பம் செய்து அதைச் சாதிக்க முயலவேண்டாம்'' என்று மக்களைக் கேட்டுக் கொண்டார்.

ஆசப் அலியின் கூட்டம் முடிந்ததும் டாக்டர் சுப்பராயன் இல்லத்திலே ராஜாஜி குழுவினர் கூடினர். அப்போது ராஜாஜி, ''ராயப்பேட்டையை ராயபுரமாக்கி விட்டீர்களே!'' என்று கூறி என்னைப் பாராட்டினார். ஜனாப் ஆசப் அலி கொடுத்த அறிக்கையிலே திருச்செங்கோடு தேர்தல் பற்றித் தீர்ப்பளிக்கும் உரிமை தேர்தல் டிரிபியூனலுக்குத்தான் உண்டென்றும், அந்தத் தேர்தல் செல்லத் தக்கதல்ல என்று கூற மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கு அதிகாரமில்லையென்றும் குறிப்பிட்டிருந்தார். அத்துடன், தேர்தல் டிரிபியூனலின் தீர்ப்பு தெரியும்வரை திருச்செங்கோட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தபடி மாகாண காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் பொறுப்பில் ராஜாஜி இருந்து வருவார் என்று தீர்ப்பளித்தார். இதனால், திருப்பரங்குன்றத்தில் ஏற்பட்ட முடிவு செல்லாததாயிற்று.

திரும்பவும் 'திருப்பரங்குன்றம்!'

தமிழ்நாடு காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டை காங்கிரஸ் மேலிடமே நியமிக்க வேண்டுமென்றும் காங்கிரஸ் தலைவர் ஜனாப் மௌலானா ஆசாத்துக்கு ஆசப் அலி ஆலோசனை கூறியிருந்தார். ஆசப் அலியின் தீர்ப்பு திரு. காமராசருக்கு அதிர்ச்சியைத் தந்தது. அதனால், காமராசர் ராஜாஜியின் இல்லத்துக்குச் சென்று அவரைச் சந்தித்துப் பேசினார். அப்போது இருவருக்குமேற்பட்ட சமரசத்தின் பேரில் இரு கோஷ்டியினருக்கும் பிரதிநிதித்துவமிருக்கும் வகையில் தமிழ்நாடு காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு அமைக்கப்பட்டது. போர்டில் காமராசர் குழுவினருக்குத்தான் பெரும்பான்மை இருந்தது. உறுப்பினரல்லாத ஆலோசகராக ராஜாஜி போர்டு கூட்டத்திற்கு அழைக்கப்படுவாரென்று அறிவிக்கப்பட்டது. ஆம்; திரும்பவும் திருப்பரங்குன்றம் போக்கிலே காமராசர் ராஜாஜியுடன் 'சமரசம்' செய்து கொண்டார்.

ஜனாப் ஆசப் அலி நடத்திய விசாரணையின்போது மாவட்ட வாரியாக ராஜாஜி கோஷ்டியினர் அணி அணியாகச் சென்று அவரிடம் சாட்சியமளித்தபோது சென்னை மாவட்டத்தின் சார்பில் சாட்சியமளித்த கோஷ்டிக்கு நான்தான் தலைமை தாங்கிச் சென்றிருக்க வேண்டும். ஆயினும், கல்கத்தாவில் கூடிய காரியக் கமிட்டியைக் காணச் சென்ற தூதுக் குழுவில் இடம் பெற எந்தக் காரணத்திற்காக மறுத்தேனோ அதே காரணத்திற்காக ஆசப் அலியிடம் சாட்சியமளிக்கவும் மறுத்தேன். ஆம்; 'தமிழன்' என்னும் இன உணர்ச்சி படைத்த — தமிழினத்தின் ஒற்றுமையை விரும்பிய நான் இருதலைக் கொள்ளியிடை அகப்பட்ட எறும்பு போலானேன்.

சட்டமன்றத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த நேரத்திலே 21.1.46-இல் காந்தியடிகள் சென்னை நகருக்கு வருகை தந்தார். சென்னையிலுள்ள இந்திப் பிரச்சார சபையின் ஆண்டு விழா

வில் கலந்து கொள்ளத்தான் அவர் சென்னை வந்தார். விழா முடிந்ததும், தனி ரயிலில் பழனி வரையில் சுற்றுலாச் சென்று திரும்பினார். ராஜாஜியும் காமராசரும் காந்திஜியுடன் சென்றனர். எனது உடல் நலிவுற்றிருந்த காரணத்தால், ராஜாஜி தம்முடன் வருமாறு என்னை அழைத்தும் நான் செல்லவில்லை. ஆயினும், சென்னை நகரிலே காந்தியடிகள் தங்கியிருந்த இல்லத்துக்கு என்னை அழைத்துச் சென்று அவருக்கு என்னை அறிமுகப்படுத்தினார் ராஜாஜி. அதனை என் வாழ்நாளில் எனக்குக் கிடைத்த பெரும் பேறாகக் கருதுகிறேன்.

காந்திஜி கண்ட 'கிளிக் கோஷ்டி!'

தமிழ்நாட்டில் தமது சுற்றுலாவை முடித்துக் கொண்டு வார்தா சென்ற காந்திஜி, தமது தென்னக விசயத்தின்போது சென்னையிலிருந்து விசயவாடாவரை காங்கிரசுக்குள்ளே 'கிளிக்' கோஷ்டி உருவாகியிருப்பதைத் தாம் அறிய முடிந்தது என்று அறிக்கை வெளியிட்டார். இந்த அறிக்கையின் விளைவாகத் தங்கள் கோஷ்டி அரசியலுக்கு முடிவேற்பட்டு விடும் என்று அஞ்சியவர்கள், அடிகளின் அறிக்கையைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். மதுரையில் பெருத்த கலவரம் கூட நடைபெற்றது. திரு. காமராசரும் காந்தியடிகளின் அறிக்கையைக் கண்டிக்கும் வகையில், தமிழ்நாடு காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு தலைவர் பதவியிலிருந்து தாம் விலகிக் கொள்வதாக அறிக்கை விட்டார். பார்லிமெண்டரி போர்டில் தாம் இருந்தால் ராஜாஜியின் கோஷ்டியினரைக் கூடுதலான அளவில் வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுக்குமாறு காங்கிரஸ் மேலிடம் தம்மை வற்புறுத்தக் கூடுமென்ற அச்சம் அவருக்கிருந்தது. அதிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார் என்றுதான் ராஜாஜி கோஷ்டியிலிருந்த முன்னணித் தலைவர்கள் கருதினர். காமராசர் விலகிய பின்னரும் அவரது கோஷ்டிக்கு பார்லிமெண்டரி போர்டில் பெரும்பான்மை இருந்தது.

திரு. காமராசர் இல்லாமலே காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டு சென்னையில் கூடித் தமிழ்நாட்டுக்குரிய தொகுதிகளுக்குக் காங்கிரஸ் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்தது. ராஜாஜி, போர்டின் அங்கத்தினரல்ல. ஆயினும், காங்கிரஸ் மேலிடத்தின் வற்புறுத்தலுக்கிணங்கவும், திரு. காமராசர் முன் கூட்டி ஒப்புக் கொண்டிருந்தபடியும் போர்டு கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவரும், அப்பட்டமான ஆந்திரப் பெண்மணியுமான திருமதி. ருக்மணி லட்சுமிபதி போர்டு கூட்டங்களுக்குத் தலைமை வகித்தார். காமராசர் திரைமறைவிலிருந்து கொண்டு போர்டைத் தமது விருப்பப்படி ஆட்டிப் படைத்தார். பார்லிமெண்டரி போர்டில் திரு. காமராசரையும் சேர்த்து 6 பேர் அவருடைய கோஷ்டியினர். 3 பேர் ராஜாஜி கோஷ்டியினர். இதனால் பார்லிமெண்டரி போர்டு தயாரித்த வேட்பாளர் பட்டியலில் ராஜாஜியையும் சேர்த்து அவரது குழுவில் 27 பேர்தான் இடம் பெற முடிந்தது. ஆம்; மொத்தமுள்ள 195 தொகுதிகளில், 27 தொகுதிகள்!

வடசென்னைத் தொகுதிக்கு வேட்பாளனாக நிற்க விரும்பிப் பார்லிமெண்டரி போர்டுக்கு நான் மனுச் செய்திருந்தேன். போர்டில் சென்னை நகரத் தொகுதிகளுக்கு வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படவிருந்த நாளிலே போர்டு கூட்டத்திற்குச் செல்லுமுன்பு ராஜாஜியைச் சந்தித்தேன். அவர்,

> *''இன்று உங்கள் தொகுதிப் பிரச்சினை வருகிறது. எதிரிகள் உங்களுக்கெதிராக என்னிடம் கடுமையான போர் நடத்துவார்கள். உங்களை ஒப்புக்கொள்ளவில்லையானால் தேர்தலிலிருந்தே நாம் ஒதுங்கிவிட வேண்டும் — சரிதானே?''*

என்று என்னிடம் கேட்டார். நான், ''எனக்காகத் தேர்தலி

லிருந்தே நம்முடைய கோஷ்டி விலகிவிடுவதை நான் விரும்ப வில்லை. எனக்காக முயன்று பாருங்கள். முடியாவிட்டால் கவலைப்பட வேண்டாம்'' என்று கூறினேன்.

வஞ்சகமான 'ஆதரவு!'

அன்று போர்டு கூட்டம் முடிந்ததும் ராஜாஜியை நான் சந்தித்தேன். அவர் மிகுந்த வியப்புடன் என்னிடம் கூறியதாவது:

''என்ன ஆச்சரியம்! எதிர்க்கோஷ்டியார் என்னை ஏமாற்றிவிட்டார்களே! உங்கள் தொகுதி ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அவர்களை முந்திக் கொண்டு நான் உங்கள் பெயரைச் சொன்னேன். போட்டிக்கு வேறு பெயரைச் சொல்லாமல் உங்கள் பெயரை ஏற்றுக் கொண்டு விட்டார்கள். வடசென்னைத் தொகுதியில் உங்களை நிறுத்த போர்டு ஏகமனதாக முடிவெடுத்தது.''

இதைக் கேட்டதும் எனக்குச் சிரிப்பு வந்தது. ராஜாஜியைப் போல நான் வியப்படையவில்லை. ''எதிர்க் குழுவினர் என் பெயரை ஏகமனதாக ஒப்புக் கொண்டிருப்பது பின்னால் திரைமறைவில் சூழ்ச்சி செய்து கெடுப்பதற்காக இருக்கலாம். ஆகவே, அதற்குள் மகிழ்ச்சியடைந்து விடாதீர்கள்'' என்றேன்.

''நீங்கள் அவர்களை ரொம்பவும் சந்தேகிக்கிறீர்கள்! இதற்கும் திருக்குறளில் வள்ளுவர் ஏதாவது சொல்லியிருக்கிறாரா?'' என்று கேட்டார்.

''சொல்லியிருக்கிறாரே! தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார் அழுத கண்ணீரும் அனைத்து!' என்ற குறள் தான் இப்போது எனது நினைவுக்கு வருகிறது'' என்று கூறினேன். ராஜாஜி சிரித்துவிட்டு, ''அப்படியெல்லாம் ஒன்றும்

நடக்காது. நீங்கள் போய் தொகுதியில் வேலையைத் தொடங்குங்கள்'' என்றார். திரு. காமராசர் கோஷ்டியினர் என் பெயரை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொண்டது, எனக்கெதிராகச் சொல்ல ஏதுமில்லாததால்தான்!

வடசென்னைத் தொகுதி காங்கிரஸ வேட்பாளராக த.நா.கா. பார்லிமெண்டரி போர்டு என்னைத் தேர்ந்தெடுத்த செய்தி பத்திரிகைகளில் பிரதான தலைப்புகளுடன் வெளியானது. தனது முதல் நம்பர் விரோதியாக என்னைக் கருதிய திரு. காமராசர் காங்கிரஸ் வேட்பாளராக என்னை ஒப்புக் கொண்டது காங்கிரஸ் வட்டாரத்திலேயே பெருத்த வியப்பை ஏற்படுத்தியது.

வடசென்னை வாக்காளர் நிலை

வடசென்னைத் தொகுதி வாக்காளர்களும் காங்கிரஸ்காரர்களும், த.நா.கா. பார்லிமெண்டரி போர்டின் முடிவை மிகுந்த மிகழ்ச்சியுடன் வரவேற்றனர். வடசென்னைத் தொகுதியில் ஜஸ்டிஸ் கட்சிச் சார்பில் போட்டியிடப் போவதாக விளம்பரம் செய்திருந்த டாக்டர் ஏ.கிருஷ்ணசாமி (சர்.ஏ. இராமசாமி முதலியாரின் மகன்) அவர்களுக்கு நான் காங்கிரஸ் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது அதிர்ச்சியைத் தந்தது. அவர் இதனை எதிர்பார்க்கவில்லை. அந்நாளில் வடசென்னைப் பொதுமக்களிடையே எனக்கிருந்த செல்வாக்கு இன்னொருவரை இணை சொல்ல முடியாததாகும். வடசென்னை காங்கிரஸ்காரர்களிலே ஒவ்வொருவரும் தங்கள் உடன்பிறவாச் சகோதரனாகவே என்னைக் கருதினர். இந்த செல்வாக்கு என் பிறப்பு காரணமாக எனக்கு ஏற்பட்டதன்று. எனது உழைப்பாலும் தியாகத்தாலும் பிறரிடம் பழகும் பண்பாலும் யான் பெற்றதாகும்.

டாக்டர் கிருஷ்ணசாமி, தான் வடசென்னைத் தொகுதியில் போட்டியிடாமல் வடசென்னை மத்தியத் தொகுதிக்குச் சென்று விடுவதாக என்னிடம் கூறி, பெரும் பொருட்செலவில் தான் தயாரித்து வைத்திருந்த வாக்காளர் பட்டியல்களையும், எனக்குக் கொடுத்து உதுவினார். சுருங்கச் சொன்னால், வடசென்னைத் தொகுதியில் நான் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான சூழ்நிலை உருவாகியிருந்தது.

பழிவாங்கப்பட்டேன்!

தமிழ்நாடு பார்லிமெண்டரி போர்டு தயாரித்திருந்த பட்டியல் அகில இந்திய காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டின் தலைவராக இருந்த சர்தார் பட்டேலின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டது. திரு. காமராசர், திரு. பக்தவத்சலம், திருமதி ருக்மணி லட்சுமிபதி ஆகிய மூவரும் பட்டியலை எடுத்துக் கொண்டு பம்பாய் சென்றனர். அப்போது அகில இந்திய காங்கிரஸ் அலுவலகம் பம்பாயில் இருந்தது.

மேலிடத்துப் பரிசீலனைக்குப் பிறகு இறுதி செய்யப்பட்ட தமிழ்நாடு காங்கிரஸ் வேட்பாளர் பட்டியல் பத்திரிகைகளில் வெளியானது. அதிலே என் பெயர் இல்லை. எனக்குப் பதிலாக வடசென்னைத் தொகுதிக்கு அப்பட்டமான ஆந்திரரும், பிரபல வியாபாரியுமான குண்டூர் நரசிம்மராவ் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். தமிழில் பிழையின்றிப் பேசக்கூட அவரால் முடியாது. அவருக்கும் வடசென்னைக்கும் கொஞ்சங்கூடத் தொடர்பு கிடையாது. என்னைப் பழிவாங்க வேண்டுமென்பதற்காக இன உணர்ச்சியைக்கூடத் தியாகம் செய்துவிட்டார் காமராசர்!

மேலிடத்தின் எதிர்பாராத முடிவு எனக்கு வேதனையைத் தந்ததென்றாலும், வியப்பைத் தரவில்லை. இப்படி ஏற்படக் கூடுமென்று நான் எதிர்பார்த்துக் கொண்டுதானிருந்தேன்.

திரு. காமராசர், தன்னை எதிர்ப்பவரைத் தலையெடுக்க விடாமல் அடிப்பதிலே எல்லையற்ற துணிச்சல் படைத்தவர் என்பது எனக்குத் தெரிந்திருந்தது.

காங்கிரஸ் வேட்பாளர் பட்டியலிலிருந்து காமராசர் என்னை விலக்கியது சர்தார் பட்டேல் அவர்களைக் கொண்டு தான். அந்தப் பெருந்தலைவருக்குக் கம்யூனிஸ்டு என்றாலே பிடிக்காது. அந்நாளில், காங்கிரஸ் கட்சிக்குள்ளே மறைந்திருந்த கம்யூனிஸ்டுகளிலே நானும் ஒருவனென்று சர்தார் பட்டேலிடம் திரு. காமராசர் குழுவினர் அந்தரங்கத்தில் புகார் செய்திருந்தனர். காங்கிரஸ் பட்டியலிலிருந்து என்னை விலக்கிவிட வேண்டுமென்று நூற்றுக்கணக்கான தந்திகள் தமிழ்நாட்டிலிருந்து சர்தார் பட்டேலுக்கு சந்தடியற்ற முறையில் அனுப்பப்பட்டன. அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் அலுவலகத்தின் மானேஜராக இருந்த திரு.ஜி. ராஜகோபாலன் — திரு. காமராசரால் தூண்டப்பட்டு — இதனைத் திறம்படச் செய்தார்.

பொய்யான புகார்

அப்போது, 'நியூ ஏஜ்' என்னும் பெயரில் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் புது டில்லியிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த பத்திரிகையிலே என்னைப் பற்றி அடிக்கடி எழுதப்பட்டு வந்ததாம்! நான் 'காங்கிரஸ் முற்போக்காளன்' என்றும் வருணிக்கப்பட்டிருந்தேனாம்! உண்மையில் 'நியூ ஏஜ்' பத்திரிகையில் என்னைப் பற்றி எழுதப்பட்டவற்றை நான் பார்த்ததுமில்லை, படித்ததுமில்லை.

கம்யூனிஸ்டு வட்டாரம் முழுவதும் ராஜாஜி கோஷ்டிக்கு ஆதரவாக இருந்த காலம் அது. அதனாற்றான், ராஜாஜி கோஷ்டியைப் பற்றி விமர்சிக்கும்போது என்னைப் பற்றியும் 'நியூ ஏஜ்! எழுத்தாளர் நல்லெண்ணத்துடன் வருணிக்க நேர்ந்தது. 'ஜன சக்தி' வாரப் பத்திரிகையிலே இரண்டு முறை நான் எழுதிய

கட்டுரைகள் பிரசுரமாயின. கம்யூனிஸத்தை மறைமுகமாகவோ, நேர்முகமாகவோ ஆதரிக்கும் அரசியல் கட்டுரைகள் அல்ல; அப்பட்டமான தமிழ் இலக்கியக் கட்டுரைகளே!

இப்படி 'நியூ ஏஜ்'ஜில் என்னைப் பற்றி எழுதப்பட்டவற்றையும், 'ஜனசக்தி'யில் நான் எழுதியவற்றையும் தொகுத்து, அத்துடன் விஷமத்தனமான விமர்சனத்தையும் சேர்த்து சர்தார் பட்டேலுக்கு அனுப்பியது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சிப்பந்தி வர்க்கம். அதை வைத்துக் கொண்டுதான் சர்தார் பட்டேல் எனது பெயரை விலக்கிவிட்டார். ஆம்; என்னைப் பற்றிய புகார்மீது எனது கருத்தைக் கேளாமலே!

த.நா.கா. பார்லிமெண்டரி போர்டு தயாரித்த பட்டியலை காங்கிரஸ் மேலிடம் திருத்தக் கூடுமென்று ராஜாஜி எதிர்பார்த்தார். அதனால், காங்கிரஸ் வேட்பாளர் பட்டியலிலே தன் தலைமையை ஆதரிப்பவர்கள் கூடுதலாக இடம் பெறக்கூடுமென்றும் நம்பினார். ஆனால், திரு. காமராசர் கோஷ்டியாரின் பிடிவாதம் காரணமாக, சர்தார் பட்டேல், ராஜாஜி எதிர்பார்த்தபடி செய்ய இயலாதவரானார்.

ராஜாஜியின் விலகல்

காங்கிரஸ் மேலிடத்தின் இந்தப் பலவீனமானப் போக்கு ராஜாஜிக்கு மிகுந்த ஏமாற்றத்தையும் எரிச்சலையும் தந்தது. காங்கிரஸ் வேட்பாளர் பட்டியலின்படி தாம் சென்னை மாநில முதலமைச்சராக வருவதற்கு வாய்ப்பில்லை என்பதனை ராஜாஜி தெள்ளத் தெளிய உணர்ந்தார். ஆகவே, பார்லிமெண்டரி வேலைகளிலிருந்து தாம் விலகிக் கொள்வதாகக் காங்கிரஸ் மேலிடத்துக்கு எழுதிவிட்டு, பத்திரிகைகளிலும் அறிக்கை விட்டார். த.நா.கா. பார்லிமெண்டரி போர்டு தயாரித்த பட்டியலின்படி சென்னைப் பல்கலைக் கழகத் தொகுதியில் போட்டியிட ராஜாஜி தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தார் என்பது இங்கு நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

பத்திரிகைகளில் தாம் வெளியிட்ட அறிக்கையிலே தமக்கு விரோதமாகக் கிளம்பிய சூழ்நிலையைச் சமாளிக்க தம்மால் இயலவில்லை என்றும், அது ஆலகால விஷத்தைப்போல் கடுமையாக இருக்கிறதென்றும் ராஜாஜி மனம் நொந்து குறிப்பிட்டார். ராஜாஜி ஒதுங்கினாலும், காங்கிரஸ் வேட்பாளர்களாக நிற்க வாய்ப்புப் பெற்றிருந்த அவருடைய கோஷ்டியார் 1946 மார்ச்சு மாதத்தில் நடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டனர். ஆம்; ராஜாஜியின் அனுமதியோடு!

எனது நிலைமை தரும சங்கடமானதாக இருந்தது. தேர்தலில் நிற்பதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்பதற்காக நான் ஆத்திரமோ, ஆயாசமோ அடையவில்லை. காங்கிரசின் வெற்றிக்கு மனநிறைவோடு உழைப்பதற்கும் நான் தயாராக இருந்தேன். ஆனால், தேர்தல் பிரச்சாரத்திற்கு என்னைப் பயன்படுத்திக் கொள்ள தமிழ்நாடு காங்கிரஸ் விரும்பவில்லை. தேர்தல் வேலை முழுவதும் மாகாணக் கமிட்டியைச் சேர்ந்ததாதலால், என்னையும், நான் செயலாளனாக இருந்த சென்னை ஜில்லாக் காங்கிரசையும் புறக்கணித்தது. மாகாணக் கமிட்டி தேர்தல் பணிகளிலிருந்து ஒதுங்கி நிற்பது என்னால் இயலாததாக இருந்தது. ஒதுங்கி நிற்பது, என்னைச் செல்லாக் காசாக்கிவிட நினைக்கும் என் விரோதிகளுக்கு உதவி புரிவதாகுமென்றும் நான் நினைத்தேன்.

வடசென்னைத் தொகுதியானது காங்கிரசின்பால் எனக்குள்ள விசுவாசத்திற்குச் சோதனைக் களமாக அமைந்தது. காங்கிரஸ் ஊழியர்களிலே மிகப் பெரும்பாலோர் நான் சுயேச்சையாகப் போட்டியிட வேண்டுமென்று என்னை வற்புறுத்தினர். கட்சிக் கட்டுப்பாட்டைக் கருதி காங்கிரசுக்கு வேலை செய்யுமாறு என்னுடைய காங்கிரஸ் சகாக்களை நான் கேட்டுக் கொண்டேன். ஆயினும், அவர்கள் பிடிவாதமான போக்கில் காங்கிரசுக்கு எதிராகச் செல்லத் தயாராகிவிட்டனர். இந்த நிலையில் காங்கிரஸ் வேட்பாளரான ஆந்திரருக்கு ஆதரவாக மேடையே

றிப் பிரச்சாரம் செய்தால் வடசென்னை மக்களிடையே எனக்குள்ள செல்வாக்கு மங்கிவிடும் போலத் தெரிந்தது.

ராஜாஜி குழுவின் முன்னணித் தலைவர்கள் சிலரும் வடசென்னையில் காங்கிரஸ் வேட்பாளரை எதிர்த்துச் சுயேச்சையாக நான் போட்டியிட வேண்டுமென்று வற்புறுத்தினர். பொருளுதவி செய்வதாகவும் கூறினர். அந்நாளில் காங்கிரசிடம் எனக்கிருந்த தெய்வ பக்தியை விடவும் மேம்பட்டதாகும். நாடு விடுதலை பெறுவதற்கு முன்பு, விடுதலை வீரர்களின் பாசறையாகத் திகழ்ந்த காங்கிரசுக்கு எதிராகச் செல்வதென்பது என்னால் நினைத்துப் பார்க்கவும் முடியாததாக இருந்தது. கேவலம் ஐந்தாண்டுக் காலமே அனுபவிக்கத்தக்க ஒரு எம்.எல்.ஏ. பதவிக்காக, கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய பழி என் வாழ்க்கையை வரலாற்றில் சேர்த்துக்கொள்ள என் மனம் துணியவில்லை. ஆகவே, வடசென்னைத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்வதென்ற முடிவுக்கு வந்தேன். குண்டூர் நரசிம்மராவும் எனது ஆதரவைக் கோரினார்.

ஆதரவு தந்தேன்!

எனது உறுதி கண்டு காங்கிரஸ் ஊழியர்களிலேயும் பெரும்பாலோர் என் வழிக்குத் திரும்பினர். நானும் என்னுடைய காங்கிரஸ் சகாக்களும் முழு மூச்சுடன் உழைத்தோம். ஆயினும், காமராசர் கோஷ்டியார் என்னைக் காலைவாரி விட்டதனால் வடசென்னையில் உள்ள தேச பக்தியுடைய வாக்காளர்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியை அடியோடு போக்க என்னால் இயலவில்லை. சுமார் 900 வாக்குகள் வித்தியாசத்தில்தான் காங்கிரஸ் வேட்பாளருக்கு வெற்றி தேடித்தர என்னால் முடிந்தது. நான் வடசென்னைத் தொகுதிக்குச் செல்லாமல் கிருஷ்ணாம்பேட்டையிலுள்ள என் வீட்டிலேயே தங்கி ஓய்வு எடுத்திருந்தாலே போதும்; காங்கிரஸ் வேட்பாளர் படுதோல்வி அடைந்திருப்

பார். எனக்குச் செல்வாக்குள்ள ஒரு தொகுதியிலே அந்தச் செல்வாக்கை எனக்குத் தேடித்தந்த என் தாய்க்கட்சி தோற்பதை நான் எப்படி அனுமதிக்க முடியும்? அது நன்றி கொன்ற செயலல்லவா.

பாடுபட்டும், பழி சுமத்தினர்!

இவ்வளவு பண்பாட்டுடன் நான் நடந்திருந்தும், நான் வடசென்னையில் காங்கிரஸ் வேட்பாளருக்கு எதிராகப் பிரச்சாரம் செய்ததாக என் மீது குற்றம் சாட்டி, அதற்காக என்மீது ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக் கூடாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு தமிழ்நாடு காங்கிரஸ் எனக்கு நோட்டீஸ் கொடுத்தது. அது வருமாறு:

அன்புள்ள ஐயா, தாங்கள் நடந்த சென்னை மாகாண சட்டசபைத் தேர்தலில் தாங்கள் நடந்துகொண்ட விஷயத்தைப் பற்றிய கடிதங்களின் நகலை இத்துடன் அடக்கம் செய்துள்ளேன். அவைகளுக்குத் தங்களின் பதிலை ஒரு வாரத்திற்குள் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை — *தங்கள் அன்புள்ள*
2.4.46 — *காமராஜ்*

சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களில் இருவர் தனித்தனியே என்மீது புகார் கூறி, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவருக்குக் கடிதம் எழுதியிருந்தனர். அந்தப் புகாரிலே காங்கிரஸ் வேட்பாளர் திரு. குண்டூர் நரசிம்மராவுக்கு எதிராக காங்கிரஸ் பிரச்சாரக் கூட்டத்திலேயே நான் பேசியதாகக் குற்றஞ்சாட்டி என்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரை அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தனர். அந்தக் கடிதங்களைத்தான் தன்னுடைய கடிதத்தோடு இணைத்திருந்தார் திரு. காமராசர். என்னைப் பற்றிய புகார்க் கடிதங்கள் தமிழ்நாடு காங்கிரஸ் அலுவலகத்தின் தூண்டுதலால்

எழுதப்பட்டவையே. நல்ல வேளையாக, திரு. குண்டூர் நரசிம்ம ராவ் அவர்களே என் மீது சொல்லப்பட்ட புகார்களை மறுத்துத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவருக்கு கடிதம் எழுதினார். அது வருமாறு:

திரு.கு.காமராஜ்
தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ்
சென்னை.

ஐயா, திரு. சிவஞான கிராமணியார் மார்ச்சு 19-இல் செட்டித் தோட்டம் தேர்தல் கூட்டத்தில் நிகழ்த்திய சொற் பொழிவு பற்றிச் சொல்லப்பட்ட புகார்களை நான் பார்த்தேன். அவர்மீது சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் கொஞ்சங்கூட உண்மையல்ல.

கிராமணியார் எனது வெற்றிக்காக உண்மை உணர்ச்சியோடு முழு அளவில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வேலை செய்தார். எனது வெற்றிக்கு அவர் தந்த ஒத்துழைப்பே முக்கிய காரணமாகும்.

அப்படிப்பட்ட உத்தமர் மீது பொய்க் குற்றச்சாட்டு சொல்லப்பட்டது குறித்து நான் மிகவும் வருந்துகிறேன்.

தங்கள் உண்மையுள்ள
குண்டூர் நரசிம்மராவ்
11.4.46

இந்தக் கடிதத்தின் விளைவாக என்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து என்னைக் காங்கிரசிலிருந்து வெளியேற்றுவதற்கு திரு. காமராசரால் முடியாமல் போனது.

ஆந்திரருக்கு வெற்றி!

மாகாண சட்டமன்றத் தேர்தலிலே காங்கிரஸ் கட்சி மகத்தான அளவில் வெற்றி பெற்றது. காங்கிரசை எதிர்த்தவர்களிலே மிகப் பெரும்பாலோர் ஜாமீன் தொகைகளை இழந்தனர்.

இதற்குப்பின் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சிக்குத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பிரச்சினை எழுந்தது. காங்கிரசின் மேலிடத்தார் ராஜாஜியைத் தேர்ந்தெடுக்குமாறு ஆலோசனை கூறினர். காந்தியடிகளும் அதற்கு உதவியாக இருந்தார். காங்கிரஸ் காரியக் கமிட்டி ஒரு தீர்மானத்தின் மூலம் ராஜாஜியைத் தேர்ந்தெடுக்குமாறு சென்னை மாகாண சட்டமன்ற காங்கிரஸ் அங்கத்தினர்களைக் கேட்டுக் கொண்டது.

சட்டமன்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திலே காங்கிரஸ் மேலிடத்தின் ஆலோசனை நிராகரிக்கப்பட்டது. சுமார் 250-க்கு மேற்பட்ட (சட்டமன்றப் பேரவை, மேலவை) காங்கிரஸ் உறுப்பினர்களில் ராஜாஜிக் குழுவைச் சார்ந்த 33 பேர்தான் காங்கிரஸ் மேலிடத்தின் கட்டளையை ஆதரித்தனர். திரு. காமராசர் கோஷ்டியினர் ராஜாஜியின் தலைமையை நிராகரிப்பதிலே ஒன்றுபட்டனர். ஆனால், வேறு ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பதிலே அவர்களுக்குள் ஒற்றுமை இருக்கவில்லை. ஆந்திரர் — தமிழர் என்ற இனப் பூசலும் தலையெடுத்தது. தொடர்ந்து ஒன்பது நாட்கள் நாள்தோறும் பல மணி நேரம் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. காங்கிரஸ் மேலிடத்தார், ராஜாஜி பெயர் நிராகரிக்கப்பட்ட பின்னர், டாக்டர் பட்டாபி சீதாராமையா, புலுசு சாம்பமூர்த்தி, பிரகாசம், பந்துலு ஆகிய ஆந்திரத் தலைவர்களின் பெயர்களைச் சிபார்சு செய்தனர். ஆம்; ராஜாஜியின் பெயர் நிராகரிக்கப்பட்ட பின்னர் தமிழரிலே வேறொருவர் பெயரைச் சொல்வதற்கு நாதியில்லாம

லிருந்தது. கடைசியில் ராஜாஜிக்கு எதிரான கோஷ்டியினர் 'ஆந்திரர்' என்றும், 'தமிழர்' என்றும் பிளவுபட்டனர். ஆந்திரர் சார்பில் திரு. டி. பிரகாரசம் பெயர் பிரேரேபிக்கப்பட்டது. தமிழர் சார்பில் திரு.சி.என். முத்துரங்க முதலியார் பெயர் பிரேரேபிக்கப்பட்டது. போட்டியிடும் இருவரில் யாரை ஆதரிப்பதென்பதிலே ராஜாஜி கோஷ்டியினருக்குச் சங்கடமிருந்தது.

ஆந்திரர் மீதும் செல்வாக்குப் பெற்றிருந்த தமிழரான ராஜாஜியை நிராகரித்த பின்னர் ஆந்திர உறுப்பினர்களில் ஒருவருடைய வாக்கைக்கூடப் பெறக்கூடிய திறமை திரு. காமராசருக்கு இல்லை. ராஜாஜியின் தலைமையை வீழ்த்தி விட்டால், சென்னை மாகாணத்தின் தலைமை ஆந்திரருக்கே ஏகபோகமாகி விடும் என்று அமராவதிச் சிறையில் திரு. சஞ்சீவி ரெட்டியார் போன்ற ஆந்திரர்கள் போட்ட திட்டம் வெற்றிக் கட்டத்தை அடைந்தது.

கதையை வளர்ப்பானேன்; ஏழு வாக்குகள் அதிகப்படியாகப் பெற்று திரு.டி. பிரகாரசம் வெற்றி அடைந்தார். தமிழ்நாட்டு உறுப்பினர்களிலே இரு மெழியாளரான தெலுங்கர்கள் ஆந்திர கேசரிக்கே வாக்களித்தனர். அவர்களிலே அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் துணைத் தலைவியாக இருந்த திருமதி ருக்மணி லட்சுமிபதியும் ஒருவர் என்று பேசிக் கொள்ளப்பட்டது. ஆம், இனம் இனத்தோடுதானே சேரும்! எந்தக் கேடு தமிழ்நாடுக்கு நேராதபடி தவிர்க்க நான் ராஜாஜியை ஆதரித்தேனோ அந்தக் கேடு திரு. காமராசரின் தவறான போக்கால் தமிழ்நாட்டுக்கு ஏற்பட்டுவிட்டது.

ராஜாஜி குழுவினர் போக்கு

நாடு சுதந்திரத்தை எட்டிக் கொண்டிருந்த தருணத்திலே சென்னை மாகாண ஆட்சிப் பீடத்தை ஆந்திரர்கள் கைப்பற்றி

விட்டனர். அவர்களிலேயும் ''மதராஸ் மனதே'' என்னும் ஆக்கிரமிப்புக் கோஷத்தை 1936லேயே எழுப்பிய திரு.டி. பிரகாசம் முதலமைச்சராகி விட்டார்.

ஆந்திர மாநிலமும் கலந்திருந்த அன்றைய சென்னை மாகாணத்திலே முதலமைச்சர் பதவிக்கு வருவதற்கு ஆந்திரருக்கும் உரிமையிருந்ததனை நான் மறக்கவில்லை. பிற இனத்தாரின் உரிமையைப் பறிப்பதிலே எனக்கு ஆர்வமில்லை — குறிப்பாக, ஆந்திரகேசரி திரு. டி. பிரகாசம் அவர்களிடம் எனக்கு மிகுந்த பக்தி உண்டு. அமராவதிச் சிறையில் நான் எமனுடன் போராடிய காலத்திலே அவர் என்னிடம் காட்டிய பேரன்பை ஏற்கனவே நான் விவரித்துக் கூறியிருக்கிறேன். ஆயினும், மாற்றுத் தலைமையில்லாத நிலையிலே, வளர்ந்திருந்த தலைமையையும் பயன்படுத்திக் கொள்ளாமல், தமிழ்நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்த ஆந்திரருக்கு அழைப்புவிட்ட தமிழரின் ஏமாளித்தனத்தை நான் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

சென்னை மாகாண சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தலிலே, நான் சார்ந்திருந்த ராஜாஜி கோஷ்டியினர் நடந்து கொண்ட விதமும் எனக்கு மகிழ்ச்சி தரவில்லை. மிகுந்த வேதனையைத் தந்தது. அவர்களில் ஒருவர் தவிர மற்றவர் யாவரும் தமிழ்நாட்டவரே. தலைவர் தேர்தலிலே ''ஆந்திரர்'' — ''தமிழர்'' என்னும் இன வேற்றுமை அடிப்படையில் போட்டி உருவானதால், தமிழ்நாட்டினரான ராஜாஜி கோஷ்டியினர் திரு.சி.என். முத்துரங்க முதலியாருக்கே வாக்களிக்க வேண்டுமென்று நான் விரும்பினேன். அப்படித்தான் வாக்களிப்பார்களென்றும் ஆரம்பத்தில் நான் எதிர்பார்த்தேன். ராஜாஜியின் தலைமை நிலைபெறச் செய்தால், ஆந்திரர் ஆதிக்கத்திலிருந்து தமிழ்நாட்டைக் காப்பாற்றி விடலாமென்று நம்பிய நான், வேறு விதமாக எதிர்பார்க்க இயலாதல்லவா!

இது, முற்றிலும் பார்லிமெண்டரிப் பிரச்சினையாக இருந்த தால், ராஜாஜி ஆதரவாளர்களான சட்டமன்ற உறுப்பினர்கள் மீது எனக்குப் போதிய செல்வாக்கு இல்லை. அவர்கள் கூட்டத் திலே சட்டமன்ற உறுப்பினன் அல்லாத நான் கலந்துகொள்ள வும் வாய்ப்பிருக்கவில்லை. அதனால், அவர்களில் ஒவ்வொரு வரையும் தனித்தனியே பார்த்து திரு. முத்துரங்க முதலியாருக்கு வாக்களிக்குமாறு வற்புறுத்தினேன்.

சாகசத்தில் வல்லவரான திரு. காமராசரும் ராஜாஜி குழுவி னரின் ஆதரவைப் பெற எவ்வளவோ முயன்று பார்த்தார். அவரது முயற்சி பலிக்கவில்லை. கடைசி பட்சமாக நடுநிலை மையேனும் வகிக்குமாறு நான் டாக்டர் சுப்பராயன் போன்றவர் களை மிகவும் வேண்டிக் கொண்டேன். ஆனால், ராஜாஜி ஆதரவாளர்களில் பெரும்பாலோர் திரு. முத்துரங்க முதலியா ருக்கு எதிராக திரு. டி.பிரகாசத்தை ஆதரிப்பதற்குத் தயாராகி விட்டனர்.

நடுவு நிலைமை

இந்த நேரத்தில், ராஜாஜி டில்லி மாநகரில் தம்முடைய மகள் திருமதி. லட்சுமி தேவதாஸ் இல்லத்தில் தங்கியிருந்தார். அதனால், எனது கருத்தை அவருக்கு எடுத்துரைக்கவும் இயலா தவனாக இருந்தேன். ஆனால், எப்படியோ தனது கோஷ்டியி னர் நடுநிலைமை வகிப்பதே நல்லதென்ற எண்ணம் இயற்கையா கவே ராஜாஜிக்கும் தோன்றியது. இந்த நிலையே திரு. முத்து ரங்க முதலியாருக்கு வெற்றியளித்து விடுமென்று அவர் கருதி னாரோ என்னவோ!

ராஜாஜியையும் அவர் குழுவினரையும் திருப்பரங்குன்றத் தில் காமராஜ் கோஷ்டியினர் நடத்திய விதத்தை நினைவில் கொண்டால், திரு. முதலியாருக்கு வாக்களிக்க ராஜாஜி விரும்

பாதத்தில் நியாயமிருப்பதை உணர முடியும். ஆனால், ''தமிழன் '' என்னும் இன உணர்ச்சிக் கோணத்திலிருந்து பிரச்சினையைப் பார்த்த என்னால் நடுநிலைமையைக்கூட ஏற்றுக்கொள்ள இயல வில்லை. ஆனால், வேறு வழியின்றி ராஜாஜியின் முடிவில் ஆறுதலடைந்தேன்.

ராஜாஜி குழுவினரான 33 பேர் நடுநிலைமை வகித்தும் 7 வாக்குகள் அதிகமாகப் பெற்று ஆந்திரரான திரு. டி. பிரகாசம் சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகிவிட்டாரென்றால் ராஜாஜி குழுவினரும் அவருக்கு வாக்களித்திருந்தால் திரு. காமராஜ் குழுவினரின் 'சிறுபான்மை' படம் பிடித்துக் காட்டப்பட்டிருக்கும்! ஆம்; ராஜாஜியை வீழ்த்தும் கிளர்ச்சி யிலே திரு. காமராசர் ஆதரித்த திரு. சஞ்சீவி ரெட்டியார் போன்ற ஆந்திரர்கள் திரு. பிரகாசத்துக்கு எதிராகக் காமராசரு டன் சேர மறுத்து விட்டனர். அதுவன்றோ இனப்பற்று!

அப்போது நான் சட்டமன்ற உறுப்பினனாக இருந்திருந் தால், 'திருப்பரங்குன்றத்'தையும் மறந்து, கோஷ்டி மனப்பான் மையைத் துறந்து திரு. முத்துரங்க முதலியாருக்குத்தான் வாக்களித்திருப்பேன்.

சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவியை — அதாவது, சென்னை மாகாண முதலமைச்சர் பொறுப்பை ஆந்தி ரரிடம் பறிகொடுத்த தமிழகத் தலைவர்களான ராஜாஜி — காமராஜ் கோஷ்டியினர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலை வர் பதவியைக் கைப்பற்றுவதற்கான போராட்டத்தில் ஈடுபடத் தயாராயினர். 1946 ஏப்ரல், மே மாதங்களில் பாரதம் எங்கணும் காங்கிரஸ் கமிட்டிகளுக்குத் தேர்தல்கள் நடைபெற்றன. ஏப்ரல் இறுதியில் சென்னையில் நடைபெற்ற தமிழ் மாகாண காங்கிரஸ் உறுப்பினர் தேர்தலிலே மண்ணடித் தொகுதியில் நான் போட்டி யிட்டேன். எனக்கு எதிராகத் தொழிற்சங்க இயக்கத்தைச் சார்ந்த பட்டம்பெற்ற இளைஞரொருவரை திரு.கு. காமராஜ் கோஷ்டி

யினர் நிறுத்தி வைத்தனர். காங்கிரஸ் நான்கணா அங்கத்தினர் (1000 பேர்) மட்டுமே வாக்களிக்க வேண்டிய இந்தத் தேர்தல், சென்னை மாநகராட்சித் தேர்தல் போன்று ஆரவாரமாக நடைபெற்றது!

என்னை எதிர்த்த தோழர், தொகுதியில் நாள்தோறும் பொதுக்கூட்டம் நடத்தி எனக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தார். திரு. காமராசரைத் தவிர, அவரது கோஷ்டியைச் சார்ந்த பெரிய மனிதரெல்லாம் எனக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். தற்காப்புக்காக நானும் மேடை போட்டுப் பேச வேண்டிய ஏற்பட்டது. தேர்தல் முடிவில் வெற்றி எனக்குத்தான்!

இந்தத் தேர்தலில் நான் ஒரு புதுமுறையைக் கையாண்டேன். ஆம்; ''தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியைத் தமிழ்மொழியின் தமிழினத்தவரின் தனி நலன்ளைக் காக்கும் பணியில் ஈடுபடுத்துவதே எனது நோக்கம்'' என்று தேர்தல் பிரகடனம் வெளியிட்டிருந்தேன். அதிலே, ''புதிய தமிழகம்'' படைப்பதென்ற எனது கொள்கையை விவரித்திருந்தேன். இதை வைத்துக் கொண்டு காமராஜ் கோஷ்டியினர் கதர் சட்டைக்குள் மறைந்துள்ள கருப்புச் சட்டை என்று பிரச்சாரம் செய்து மண்ணடித் தொகுதி பிராம்மண வாக்காளர்களை எனக்கெதிராகத் திருப்ப முயன்றனர். ஆனால், மண்ணடி 'மயிலாப்பூர்' ஆகவில்லை. அது, அந்தக் காலம்!

மே மாதத்தில் சென்னை நகரில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவிக்குத் தேர்தல் நடைபெற்றது. மாகாணக் கமிட்டி உறுப்பினர்களில் திரு. காமராசரை ஆதரிப்பவரே மிகுதியாக இருந்தனர். இது, தலைவர் தேர்தலுக்கு முன்பே ராஜாஜிக்குத் தெளிவாகத் தெரிந்து விட்டது. ஆம்; திரு. காமராசரின் 'சாம்ராஜ்யத்'திலே 'வல்லான் வகுத்தது வாய்க்கால்' என்னும் போக்கிலேதான் அந்நாளில் காங்கிரஸ் கமிட்டித் தேர்தல்கள் நடைபெற்றன. அந்த நிலையில் ராஜாஜி குழுவினர் மாகாணக் கமிட்டியில் பெரும்பான்மை பெறுவது எங்ஙனம்?

தலைவர் தேர்தலில் திரு. காமராசரே திரும்பவும் போட்டியிடப் போகிறார் என்பது தெளிவானதும், அவரது கோஷ்டியிலிருந்தே ஒருவரைப் பிரித்தெடுத்து அவருக்கு ஆதரவளிக்கும் ராசதந்திர முயற்சியை ராஜாஜி மேற்கொண்டார். அந்த வகையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு வலைவீசப்பட்டது. அவர் திருப்பரங்குன்றத்துக்குப் பின் திரு. காமராசர் தலைமையில் நம்பிக்கை இழந்துவிட்டார். ஆயினும், காமராசரை எதிர்த்துப் போட்டியிட அவர் விரும்பவில்லை. விரும்பியிருந்தால், அவர் வெற்றியடைந்திருக்கவும் கூடும். தேவர், பதவிப் பொறுப்பு எதிலும் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் சுபாவம் இல்லாதவர். அவர் சுபாவத்திலேயே சுதந்திரப் பறவை!

கடைசியாக, இரு கோஷ்டியிலும் உறவாடி வந்த காரைக்குடி திரு. சா.கணேசன், கோஷ்டிச் சார்பின்றி திரு. காமராசரை எதிர்த்துப் போட்டியிட முன்வந்தார். அவருக்கு ஆதரவளித்தார் ராஜாஜி. அதற்கிடையில் இந்தப் போட்டியில் என்னை இழுத்துவிடவும் ராஜாஜி முயற்சி செய்தார். பலிக்கடாவாகப் பயன்பட நான் விரும்பவில்லை. அதனால், மறுத்துவிட்டேன். திரு. காமராசர் 152 வாக்குகளும், திரு. சா. கணேசன் 90 வாக்குகளும் பெற்றமையால் தமிழ்நாடு காங்கிரஸ் தலைமையை இரண்டாவது முறையாகவும் திரு. காமராசர் கைப்பற்றிவிட்டார்.

அன்றே — தலைவர் தேர்தல் முடிந்ததும், தமிழ்நாடு காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர் தேர்தல் நடைபெற்றது. மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். சென்னை மாவட்டத்திற்காக நான் போட்டியிட விரும்பினேன். ஆனால், தம்முடைய கோஷ்டியினரில் எவரும் காரியக் கமிட்டி உறுப்பினர் தேர்தலில் கலந்துகொள்ள வேண்டாமென்று ராஜாஜி ஆலோசனை கூறினார். கலந்து கொண்டிருந்தாலும் நான் ஒருவன்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பேன். என்னுடைய எதிரிக

ளின் பாசறையிலே என்னை விட்டு வைக்க ராஜதந்திரியான ராஜாஜி விரும்பவில்லை. ராஜாஜியின் ஆலோசனை எனக்குப் பிடிக்கவில்லையென்றாலும், அதற்குக் கட்டுப்பட்டுத் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கி விட்டேன். இம்மாதிரி ராஜாஜியின் ராச தந்திரத்தால் பல சந்தர்ப்பங்களில் எனது முன்னேற்றம் தடைப்பட்டதுண்டு.

மொழிவழி இன உணர்ச்சியற்ற போக்கை இரண்டு கோஷ்டியிடமும் நான் காண நேர்ந்ததால், கோஷ்டிப் பூசலிலிருந்தே விலகிக் கொள்ள என் மனம் விரும்பியது. காங்கிரசுக்கு உள்ளும் புறமுமாகத் தமிழர் இன இயக்கம் ஒன்றைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற எண்ணம் இந்த நேரத்தில்தான் என் உள்ளத்தில் உருவானது. ஆனால், அந்த முயற்சியில் ஈடுபட அப்போது சந்தர்ப்பமும் சூழ்நிலையும் சாதகமாக இல்லை. அதனால், ராஜாஜி கோஷ்டியுடன் ஒட்டியும் ஒட்டாமலும் இருந்து வந்தேன்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப் பதவியும் காரியக் கமிட்டியும் திரு. காமராசர் கோஷ்டிக்கு ஏகபோகமாகி விட்ட பின்னர், திரு. பிரகாசம் அமைச்சரவைக்கு எதிராகப் பிரச்சாரப் போர் தொடங்கினார் ராஜாஜி. தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலுமாக — சென்னை மாநிலத்தில் மொத்தம் 4 ஜில்லாக்களில் மட்டுமே மதுவிலக்குச் சட்டம் அப்போது அமுலில் இருந்து வந்தது. அதனை அனைத்து மாவட்டங்களிலும் உடனடியாக விரிவாக்க வேண்டுமென்று ராஜாஜி கோரினார். அதற்காக, போராட்ட ரீதியிலே பொதுக் கூட்டங்களும் மாநாடுகளும் நடத்திக் கிளர்ச்சி செய்தார்.

இயற்கையாகவே பரிபூரண மதுவிலக்கில் எனக்கு ஈடுபாடு உண்டு. ஆகையால், ராஜாஜி தொடங்கிய பூரண மதுவிலக்குக் கிளர்ச்சியில் இரண்டறக் கலந்தேன். திரு.டி.டி. கிருஷ்ணமாச்சாரியும் எங்களுடன் இணைந்து கொண்டார். கிளர்ச்சி

கடுமையாகத்தான் இருந்தது. ஆயினும் பிடிவாதக்காரர் திரு. பிரகாசம் அசைந்து கொடுக்கவில்லை. படிப்படியாக மதுவிலக்கை அமுல் நடத்துவதென்ற கொள்கையிலிருந்து தாம் மாறப் போவதில்லையென்று அறிவித்து விட்டார். 10 மாதங்களிலேயே பிரகாசம் மந்திரிசபை கவிழ்க்கப்பட்டு ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அமைச்சரவை தோன்றிய பின்னர் - 1948 அக்டோபர் 2-இல் பரிபூரண மதுவிலக்கு நடைமுறைக்கு வந்ததற்கு நாங்கள் நடத்திய கிளர்ச்சிதான் காரணமாயிருந்தது.

கோஷ்டிப் பூசல் ஓய்ந்தது!

இந்த நேரத்தில் பண்டித நேருவின் தலைமையில் அமைந்த இடைக்கால அமைச்சரவையில் ராஜாஜியும் சேர்த்துக் கொள்ளப் பட்டார். ஆம்; பிரிட்டிஷ் அமைச்சரவை வழங்கிய அரசியல் திட்டத்தின் விளைவாக மத்தியில் ராஜாஜி அமைச்சரானது திரு. காமராசர் கோஷ்டிக்கு ஆறுதல் தந்தது. இனி ராஜாஜியின் எதிர்ப்பு தங்களுக்கு இருக்காதென்றும், ராஜாஜி பெயரால் ஒரு கோஷ்டி இனி வாழாது என்றும் அவர்கள் நம்பினர். அப்படி வாழ்ந்தாலும், அதனை எளிதில் ஒடுக்கி விடலாமென்ற துணிவும் அவர்களுக்கு ஏற்பட்டது. மத்தியில் ராஜாஜி அமைச்சரான செய்தி அறிந்ததுமே திரு. காமராசரும் திரு. பக்தவத்சலனாரும் ராஜாஜியை அவரது இல்லத்திலேயே சந்தித்துத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். ராஜாஜியும், தமிழ்நாட்டில் தாம் இல்லாத நேரத்தில் கோஷ்டி வேறுபாடின்றிக் காரியங்களைச் செவ்வனே நடத்துமாறு அவர்களுக்கு அறிவுரை கூறினார்.

அமைச்சர் பொறுப்பை ஏற்க டெல்லிக்குப் புறப்பட்ட ராஜாஜிக்கு திரு.எஸ்.இராமசாமி நாயுடு (பின்னாளில் இவர் சென்னை மாநகராட்சி மேயர் ஆனார்) மிகப் பெரிய அளவில்

தேநீர் விருந்து நடத்தினார். அந்த விருந்திலும் திரு. காமராசர் தமது கோஷ்டியின் முன்னணித் தலைவர்களுடன் சென்று கலந்து கொண்டார்.

ராஜாஜி — காமராசர் கோஷ்டிப் பூசல் அதிகார மோகத்தின் விளைவுதான் என்பது ஆரம்ப முதலே எனக்குத் தெரிந்திருந்தது. அந்தப் பூசலுக்குக் கொள்கை எதுவும் அடிப்படையாக இருக்கவில்லை. ஆயினும், யாரேனும் ஒருவர் தமிழ்நாட்டுத் தலைமையை ஏற்றுத்தானே ஆகவேண்டும். அவர் வல்லவராக இருப்பது நல்லதென்று கருதித்தான் கோஷ்டிப் பூசலில் நானும் பங்கு கொண்டேன். மத்திய அரசிலே ராஜாஜி இடம் பெற்றுவிட்டதால், மாநில அரசிலே திரு. காமராசரும் அவரது கோஷ்டியும் செல்வாக்கு செலுத்துவதற்கு முழு அளவில் வாய்ப்பு ஏற்பட்டு விட்டதனால், இரு தரப்பினரும் 'சமரச'மாகப் போனது இயற்கைதானே! தமிழர் தலைவர்கள் ஒன்றுபட்டதிலே எனக்கும் மகிழ்ச்சிதான்!

தி.க.வினர் நிலை

ராஜாஜி — காமராசர் கோஷ்டிப் பூசலை இன்னும் நீட்டாமல் இந்த அளவோடு நிறுத்திக் கொள்ளவே விரும்புகிறேன். பூசல் முடியவில்லையென்றாலும், இதற்குமேல் அந்தப் பூசலில் ஒரு இடைக்கால அளவிலேனும் நான் சம்பந்தப்படவில்லையாதலால், இந்தக் கட்டத்தைத் தாண்டுவோமாக! தாண்டு முன் ராஜாஜி — காமராஜ் கோஷ்டிப் பூசலின்போது காங்கிரஸ் வட்டாரத்துக்கு வெளியே இருந்தவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதனைச் சுருக்கமாகவேனும் கூறியாக வேண்டும்.

பிராமணரல்லாதார் பாசறையாகத் தோன்றிய ஜஸ்டிஸ் கட்சியானது 1937-ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலிலே

அடைந்த தோல்வியோடு அஸ்தமித்துப் போய்விட்டது. ஆயினும், அது வளர்த்து வைத்த பிராமண எதிர்ப்புணர்ச்சி நீறுபூத்த நெருப்பு போல இருந்து கொண்டுதானிருந்தது. அது, அடியோடு அணைந்து விடவில்லை.

ராஜாஜி — காமராசர் கோஷ்டிப் பூசல் அந்த வகுப்புவாதத் தீயினை ஊதி வளர்த்துவிட்டது! ராஜாஜிக்கு எதிராகக் காமராச ருக்கு அனுதாபம் காட்டி எழுதியும் பேசியும் வந்தனர். சுயமரி யாதை இயக்கத்தினர். காமராசர் தலைமையில் இயங்கிய அன் றைய காங்கிரசுக்கும், பெரியார் ஈ.வெ.ரா. தலைமையில் இயங் கிய சுயமரியாதை இயக்கத்திற்கும், தொடர்பிருக்கவில்லை என்றாலும், பிராம்மணத் தலைமையை எதிர்க்கிறார் என்ற காரணத்திற்காகத் திரு. காமராசருக்கு ஆதரவு காட்டினார் சுயமரியாதை இயக்கத்தினர்.

உண்மையில் ராஜாஜி — காமராசர் கோஷ்டிப் பூசலுக்கு வகுப்புவாத அடிப்படை இருந்ததாக நான் அன்றும் நினைக்க வில்லை; பிற்காலத்தில் பெற்ற அனுபவத்தைக் கொண்டு இன் றும் நினைக்கவில்லை. ராஜாஜியின் கோஷ்டியிலும் பிராம்மண ரல்லாத கனவான்கள் இருந்தார்கள். காமராசர் கோஷ்டியிலும் பிராம்மண கனவான்கள் நிறைய இருந்தனர். பிராம்மணர் செல்வாக்குப் பெற்றுள்ள பத்திரிகைகளிலே பெரும்பாலனவை காமராசர் கோஷ்டியைத்தான் ஆதரித்தன.

''ஜெய் ஹிந்த்'' என்ற வடமொழிக் கோஷத்தை 'வெல்க இந்தியா!' எனத் தமிழில் சொல்லுங்கள்! என்று ராஜாஜி அப் போது ஒரு கூட்டத்தில் பேசினார். அதற்காக அவரைக் கண் டித்து 'தினமணி'யில் எழுதப்பட்ட ஒரு தலையங்கத்தில் ''அறி

வும் ஆணவமும் சேர்ந்து மனித வடிவம் பெற்றால், அது ராஜாஜியாகத்தான் இருக்க முடியும்'' என்று மிகவும் கடுமையாக விமர்சிக்கப்பட்டிருந்தது. அந்த அளவுக்குப் பத்திரிகைகள் ராஜாஜி மீது கோபங் கொண்டிருந்தன.

''இந்து'' பத்திரிகை ராஜாஜியின் பேச்சுகளைப் பிரசுரிப்பதிலே கூட நியாயமாக நடந்து கொள்ளவில்லை. இதுபற்றி எத்தனையோ முறை ராஜாஜியே என்னிடம் சொல்லி வருத்தப் பட்டதுண்டு. ஆனால், சுயமரியாதைக் கட்சியார் உண்மையாகவே 'பிராம்மணரல்லாதார்' என்ற உணர்ச்சியுள்ளவராகக் காமராசரை நம்பினர். திரு.காமராசர் கோஷ்டியை ஆதரித்துப் பேசுவதிலும் எழுதுவதிலும் அப்போது திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளராகவும் தளபதியாகவுமிருந்த திரு.சி.என். அண்ணாதுரை மிகுந்த தீவிரம் காட்டினார். திருப்பரங்குன்றத்தில் திரு. காமராசர் கோஷ்டி ''வெற்றி''யடைந்தபோது, தமது ''திராவிட நாடு'' இதழிலே ''குன்றம் உயர்ந்தது; கோடு தாழ்ந்தது'' என்று அண்ணா எழுதினார்.

முதல் பாகம் முடிந்தது!

ராஜாஜி சென்னை மாநிலத்தின் முதல்வராக வரவேண்டுமென்று நான் எடுத்துக் கொண்ட முயற்சி வெற்றி பெறவில்லை. அதனால், தமிழ்நாடு வல்லவரான ஒருவரின் தலைமையை இழந்தது. அதே நேரத்தில் மாநில அரசு ஆந்திரர் ஆதிக்கத்தில் சென்றது. ராஜாஜி — காமராசர் கோஷ்டிகளிலிருந்த சிலர் பிரகாசம் அமைச்சரவையில் பதவி பெற்றனர். இதனால், தமிழ்நாட்டின் எதிர்காலம் என்னாகுமோ என்ற ஏக்கம் எனக்கு ஏற்பட்டது.

பாரத நாடு சுதந்திரத்தை நெருங்கிக் கொண்டிருந்த இந்த நேரத்திலே, ஆந்திரர் 'விசால ஆந்திரம்' கோரும் கிளர்ச்சியைத் தீவிரப்படுத்தினர். அதனால், 'மதறாஸ் மனதே' என்ற கோஷம் வலுத்தது.

கேரளர்கள், கன்னியாகுமரி மாவட்டத்துடன் நெல்லை, கோவை, நீலகிரி மாவட்டங்களையும் சேர்த்து 'ஐக்கிய கேரளம்' அமைக்கக் கோரினர். தமிழர்களின் இன உணர்ச்சி உறங்கிக் கிடந்தது!

இந்த நேரத்தில்தான் எனது போராட்ட வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டது. ஆம்; சுதந்திர இந்தியா உதயமாகிக் கொண்டிருந்ததால், ''சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழரசு'' என்ற கோஷத்தை எழுப்பி, 'சுயாட்சித் தமிழகம்' படைக்கும் கிளர்ச்சியைத் தொடங்கினேன். இது, ''எனது போராட்டத்''தில் இரண்டாவது பாகத்தின் தொடக்கமாகும். ஆம்; முதல் பாகம் முடிந்தது!

சிலம்புச் செல்வரின்
முழக்கங்கள்

"தமிழினமே, ஒன்றுபடு!"
"எங்கும் தமிழ், எதிலும் தமிழ்!"

"மாநிலத்தில் சுயாட்சி; மத்தியிலே கூட்டாட்சி!"

"உறவுக்கு எல்லை இமயம்
நட்புக்கு எல்லை உலகம்!"

"உறவுக்குக் கை கொடுப்போம்
உரிமைக்குப் போராடுவோம்!"

அன்னை சிவகாமி
பதிப்பகம்